JL
Y15m211M99
MO
M99.10
161413

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol XVI. | Madras: January 1914 | No. 1

புத்தகம் கசு. | சென்னை: ஜனவரிமீ 1914 | இலக்கம். 1


## PRIMARY EDUCATION IN AMERICAN SCHOOLS.

## அமெரிக்கா ஸ்கூல்களில் ப்ரைமெரிப் படிப்பு.

அமெரிக்காவில் ஸ்கூல்களில் படிப்பு இலவசமாயும் கட்டாயமாயும் சொல்லிவைக்கப் படுகிறதென்பதை நம்மிற் பலர் அறியலாமென்று நம்புகிறேன். ஆனால் சொல்லிவைக்கப்படும் பாடங்கள் இவை யென்றும் அதன் நோக்கம் எதென்றும் நம்மிற் பலரறியார்கள். அறியவும் முகாந்தரமில்லை. ப்ரைமரிப் படிப்பைப் பற்றி "மாடர்ன் ரிவியூவில்" நான் பார்த்த சில விஷயங்களை மனோரஞ்சனியை வாசிப்போரின் நன்மைக்காக எழுதுகிறேன்.

அமெரிக்காவில் ப்ரைமெரி ஸ்கூல்கள் கிண்டர் கார்டனையே அடிப்படியாகக்கொண்டு ஆரம்பிக்கிறது. விளையாட்டுகளும், குழந்தைகளின் ஆட்டமும் பாட்டும் ஆரம்பப் பாடங்களாகின்றன. புஷ்பங்களும், இலைகளும், பச்சைப் புற்களும், பழவகைகளும், விளையாட்டுப் பூச்சியும், பறவைகளும் ஸ்கூல் வகுப்பிற்கு கொண்டுவரப் படுகின்றன. அல்லது குழந்தைகள் அவைகளிருக்கும் பாலை சோலைகளையும், நந்தவனங்களையும், புஷ்பத் தோட்டங்களையும் பார்க்கச் செல்லுகிறார்கள். மிருகங்களையும் நேரில் காண்கிறார்கள். பின்பு பார்த்தபொருள்களைப் பற்றி சம்பாஷணையும் பாட்டும் நடக்கின்றன.

இப்படி பழக்கப்பட்ட பின்பு குழந்தைகள் எலிமெண்டரி ஸ்டேட்டில் சேர்கிறார்கள். வாசித்தலும், எழுதுதலும், கணக்குப் போடுதலும் மட்டுமே திருப்திகரமான ப்ரைமரிப் படிப்பாகாது. கிண்டர் கார்டனைப் போல எலிமெண்டரி பள்ளிக்கூடம் உண்மையான வாழ்க்கையை விளக்க நிற்கிறது. குழந்தைக்கு அவசியமான தேவைகளை பூர்த்தி செய்கிறது. வார்த்தைகளை உச்சரித்தல், கணக்குப் பெருக்கல், எழுத்துக்கூட்டல்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

2 161413



போன்ற பழைய முறைகள்போய் குழந்தைகளுக்கு வேண்டிய பல விஷயங்களையும் சொல்லிக்கொடுப்பதால் உபாத்தியாயர்கள் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள்.

### சில உதாரணங்கள்.

நான் கூறியதை விளக்க சில உதாரணங்கள் வரைகிறேன். நாம் இந்தியாவில் பூகோளம் சொல்லிக் கொடுப்பதற்கும், அமெரிக்காவில் சொல்லிக்கொடுக்கும் புதுமாதிரிக்கும் வித்தியாசமென்ன? இந்தியாவில் மூலைகள், ஜலசந்தி, கண்டம், வியாபாரத் துறைகளென்று பூகோளம் ஆரம்பிக்கப் படுகிறது. ஆனால் அமெரிக்காவிலோ தான் குடியிருக்கும் கிராமத்தினின்றும் ஆரம்பிக்கிறது. அந்த கிராமம் அல்லது நகரத்தின்படம் வகுப்பறையில் அரையப்பட்டிருக்கும். அதில் தமக்குத்தெரிந்த கடைகள், வீடுகள், பொதுக்கட்டடங்கள் தெருக்களைக் குறித்து படத்தை நிரப்புகிறார்கள். கடைசி கிரேட்டில் பூகோளப் படிப்பு பள்ளிக்கூடமும் அதைச் சுற்றியிருக்கும் இடங்களைப்பற்றியதா யிருக்கும். பின்பு ஐரோப்பா, ஆசியாவைப்பற்றி அவர்கள் படிக்க நேரும்போது தாம் மைதானங்களையுந் தெருக்களையும், விளையாடும் இடங்களைப்பற்றித் தெரிந்துகொண்ட பூகோள ஞானத்தை அஸ்திவாரமாகக் கொள்கிறார்கள்.

அம்மாதிரியே கணக்கு விளையாட்டிலேயே கற்பிக்கப் படுகிறது. உபாத்தியாயர்கள் பந்தயம் ஏற்பாடுசெய்து அதில் சிலரை பந்தயத்திற்கு முன் வரச்செய்து மற்றும் சிலரை அவர்களின் ஓட்டத்தையும் ஆட்டத்தையும் கணக்கிடச் செய்கிறார். ஜெயிக்கவேண்டுமென்கிற அவாவினால் கூட்டலும் கழித்தலும் சீக்கிரம்பிடிப்படுகிறது. விருத்தியாகவே பிரயோஜனப் படத்தக்க கணக்குகள் சொல்லிவைக்கப்படும். தரையில் கம்பளம் விரிக்க அறையை அளக்கவும், ஸ்கூல் முகட்டை சித்தரிக்க அளவு பிடிக்கவும் பழக்கப்படுவார்கள்.

அம்மாதிரியே உயர்ந்த கிரேட் கணக்குகளும் சொல்லிவைக்கப் படுகின்றன. உணவுப் பொருள்களும் அவைகளின் விலைவிதங்களும் கொடுக்கப்பட்டு குழந்தைகள் உணவுப்பொருள்கள் வாங்குகிறார்கள். வீட்டிற்கு விளக்கு ஏற்றுகிறார்கள்: வீடு கட்டுகிறார்கள், கடைகளில் வரவு செலவு கணக்குகள் எழுதுகிறார்கள். இம்மாதிரியாக எல்லாக் கணக்குகளிலும் பழக்கப்படுகிறார்கள். இம்மாதிரி சிறுவயதிலேயே பழக்கப்பட்டு தசையும் நரம்பும்போல அறிவு தன்னுடையதேயாகி மறக்கப் படுவதில்லை.

தாய்பாஷையாகிய ஆங்கிலத்தை—நம் இந்தியாவில் கீழ்க்கடையாக தள்ளியிருப்பதைப்போ லல்லாமல்—முதற்படியில் வைத்து பூஜித்து வருகிறார்கள்.

Y15.m211.M99M0
N99.16



சில பொம்மைகளைக் கொடுத்து அவைகளை விஸ்தரித்து வியாசம் எழுதப்பழக்குகிறார்கள். ஓர் விளக்கு மாற்றின்மேல் ஓர் பிசாசிருந்து கொண்டு பக்கத்தில் ஓர் பூனையோடு சந்திரனை நோக்கிப் போவதுபோல ஓர் பொம்மையைக் கொடுத்து இதைப்பற்றி ஓர் கவிசெய்யச் சொல்வார்கள். "இந்நகரத்திலுள்ள பறவைகள்" என்பதைப்பற்றி ஓர் வியாசம் எழுதச்சொல்வார் எழுந்திருந்து சபையைநோக்கிப் பேசவும் பழக்கப் படுகிறார்கள். சுகாதாரம், பொருள்விளக்கம், ராஜநிர்வாகநூல், குடித்தனச் செட்டு, ஐக்கியம் போன்ற நவீனவிஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒரு மனிதனுக்குப் பொது வாழ்க்கைக்குமுள்ள சம்பந்தம் கற்பிக்கப் படுகிறது. பேப்பர்களும் சஞ்சிகைகளும் விசேஷமாய் படிக்கப்பட்டு வாதாடப் படுகின்றன. பின்னிட்டு வாழ்நாளுக்கு பிரயோஜனப் படும்படியான தொழில்களும் தனிப்பாடமாக கற்பிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையின் தேவையும் பரிபூரணமாகிறது. இந்தியாவில் இந்நவீன முறைகள் எக்காலம் அநுசரிக்கப் படுமோ?

K. V. சுப்பிரமணிய அய்யர் B. A.

---

## STEAM & BOILING.

## நீர் ஆவியும் ஜலம் பொங்குதலும்.

(254-வது பக்கத்தொடர்ச்சி.)

நீராவியின் தன்மையை இன்னும் சிறிது நன்றாய் ஆராய்வோம். காப்பிக் கெட்டிலில் ஜலத்தை பொங்க விடுங்கள். நன்றாய் மூடாவிட்டால் வாயின் அருகில் உள்ள துவாரத்தின் வழியாக "உஸ்" என்ற சத்தத்துடன் ஆவி வெளிப் புறப்படக் காணலாம். கெட்டிலை எடுத்துக் கீழேவைத்து அது குளிர்ந்த பின்னர் நன்றாய் அதன் வாயை மூடிவிட்டு ஒரு கயற்றாலும் கட்டிவிடுங்கள. அள்ளைப் புறத்திலுள்ள குழாயின் வாயில் விளக்கெண்ணெயில் தோய்த்த ஒருகார்க்கினால் நன்றாய் மூடிவிடுங்கள். கெட்டில் கிடைக்காவிட்டால் படத்தில் காட்டியுள்ள உருவமுடைய ஒரு தகர டப்பா எளிதாய்சம்பாதித்துக் கொள்ளலாம். அதில் அரை பாகம் தண்ணீர்விட்டு அதன்வாயை ஒரு கார்க்கினால் சுமாராய் மூடுங்கள். மூடியபின் அடுப்பின்மேல் வைத்துவிட்டு 4, 5, அடி தூரத்துக்கு அப்பால் போய் உட்கார்ந்துகொள்ளுங்கள். பக்கத்தில் யாதொரு காரணம்பற்றியும் போகவேகூடாது. 10, 20, நிமிஷம் கழிந்ததும் 'டபீர்' என்ற சத்தத்துடன் கார்க்கைப் பிடுங்கிக்கொண்டு ஆவி வெளிப் புறப்படும். கார்க் கூரையின்மீதுகூட போய் முட்டிக் கீழே விழும்.

நீராவி இவ்விதமாய்க் கார்க்கை முட்டித் தள்ளிக்கொண்டு வெளிப் புறப்படக் காரணமென்ன? பாத்திரத்தில் இடம் போதாமல் வெளிப்

புறப்படுகின்றது உண்மையே. ஆனால் ஜலம் பொங்கும் சமயத்தில் மட்டும் இவ்விதம் நிகழ்வானேன்? ஜலத்தைக் காட்டிலும் அதே எடையுள்ள நீராவிக்கு அதிக இடம் வேண்டுமென்பது தெளிவாகின்றதல்லவா? ஒரு பாத்திரத்தில் உள்ள ஜலம் நீர் ஆவியாக மாறும்போது சுமார் 1500 பங்குக்குமேல் தன் அளவில் அதிகமாகின்றது. அதாவது $\frac{1}{4}$ படி ஜலம் முற்றிலும் ஆவியாக மாறினால் ஆவிசுமார் 400 படிக்கு மேல் இருக்கும். ஆகையால் தான் பாத்திரத்தில் உள்ளஇடம் போதாமல் கார்க்கைத் தள்ளிக்கொண்டு வெளியே புறப்படுகின்றது. மறுபடியும் ஆவிகுளிரும்போது 400 படி ஆவிகுளிர்ந்தால் $\frac{1}{4}$ படி ஜலம் ஆகும்.

ஒரு பெரிய பாத்திரம் நிரம்ப ஆவியே இருக்குமானால் அதை முற்றிலும் குளிரச்செய்தால் ஆவியெல்லாம் நீராக மாறியபோது அப்பாத்திரத்தில் அதிகபாகம் காலியாய் நின்றுவிடும். இவ்விஷயத்தையும் எளிதாய்ப் பரிசைஷசெய்து அறிந்துகொள்ளலாம். கிரோஸின் எண்ணெய்விற்கும் டப்பா ஒன்றின் வாய்க்குத்தக்க மர ஆப்புச்சீவி கெட்டியாய்ப் போடும்படி செய்துகொள்ளவேண்டும். பிறகு ஆப்பை எடுத்துவிட்டு அதில் கால்பாகமாவது $\frac{1}{8}$பாகமாவது ஜலம்விட்டு நன்றாய்ப் பொங்க விடவேண்டும். ஜலம் பொங்கப்பொங்க ஆவியும் வேகமாய் வருவதால் உள்ளிருக்கும் காற்றையெல்லாம் வெளியே தள்ளிவிட டப்பா முழுவதும் ஆவியே நிரம்பி நிற்கும். வாயுவெல்லாம் போகும்வரையில் 15, 20 நிமிஷம் காத்துஇருந்து டப்பாவை அடுப்பினின்று கீழ் இறக்கின உடனே ஆப்பையால் அதன் வாயை நன்றாய் மூடிவிடவேண்டும். உடனே ஒருசொம்பு குளிர் ஜலத்தை எடுத்து டப்பாவின் மீது ஊற்றினால் டப, டப, வென்று டப்பா முழுவதும் ஒடுங்கிப் போவதைக்காணலாம். ஏன்? நீராவி வெகு வேகமாய்வந்தபோது வாயுவெல்லாம் வெளிக்கிளம்பி ஆவியே பாத்திரம் முழுவதையும் வியாபித்துக் கொண்டது. ஆப்பை நன்றாய் அடைத்து மூடவே நீர்ஆவி வெளிப்போவதற்கும் வாயுஉள்ளே நுழைவதற்கும் வழியில்லாமல் போகின்றது. குளிர்ந்த ஜலத்தை டப்பாவின்மேல் ஊற்றும்போதுடப்பாவின் உள்ளே இருக்கும் ஆவிமுழுதும் ஒரே அடியாய்க்குளிர்ந்து ஜலமாகமாறுவதால் டப்பாவின் உள்ளே வெகுபாகம் காலியாய்ப் போகின்றது. வெளியே உள்ள காற்றின் அழுத்தத்துக்குத் தக்கபடி உள்ளேயும் அழுத்தம் இல்லாமல் போகிறபடியால் வாயுநாலாபக்கத்திலும் அழுத்துவதால் டப்பா ஒடுங்கிப் போகின்றது. ஆகையால் ஜலத்தை ஆவியாக மாற்றும்போது அது அகாதமாய்த் தன் அளவில் அதிகமாவதும், ஆவிகுளிரும்போது அதுவெகு அதிகமாய்த் தன்னளவில் குறைந்து நீராக மாறுவதும் மேற்செய்த இரண்டு பரிசைஷகளாலும் விளங்குகின்றன வல்லவா?

நீராவி குளிரும்போது தன்னளவில் வெகுவாய்க் குறைவது மற்று



மன்றி தான் ஆவியாக மாறும்போது உட்கொண்ட ஏராளமான உஷ்ணத்தையும் கக்குகின்றது. அக்காரணத்தால் சிலவஸ்துக்களைச் சமைப்பதற்கு நாம் நீராவியை உபயோகிக்கின்றோம். இட்டலி, மோதகம், இவைசெய்யும்போது நீராவி மாவின் மேல்பட்டுக்குளிர்ந்து மாவுக்குத்தன் உஷ்ணத்தைக் கொடுத்து மாவை வேகவைக்கின்றது. ஜலம் அந்தமாவின் மேலேயே தங்குமானால் மாவுகெட்டுப்போகும். அவ்வாறுதங்கி நில்லாமல் உஷ்ணத்தைமட்டும் கொடுத்துவிட்டு ஜலம்வடிந்து போகும்படி அப்பாத்திரத்தில் சிறுதுவாரங்கள்விட்டிருப்பதையும் பார்த்துஇருக்கிறீர்கள் அல்லவா?

ஆர். கே. சுவாமி, பி. ஏ எல். டி.

---

# *ப்ரெடரிக் ப்ரோபெல் ஏற்படுத்திய கிண்டர் கார்ட்டன் தொழில்கள்.

இக்கிண்டர்கார்ட்டன் முறையைக்கண்டு பிடித்தவரும் ஸ்தாபித்தவருமாகிய ப்ரெடரிக் ப்ரோபெல் (Feredrick Froebel) என்பவர் சிறு குழந்தைகளின் மனோதத்துவங்களுக்கும் சுபாவ உணர்ச்சிகளுக்கும் ஏற்றவாறு பிரபஞ்சஞானத்தைப்போதிக்கத்தகுந்த சிலவிளையாட்டுகளை யேற்படுத்தியிருக்கிறார். அவ்விளையாட்டுகளில் உபயோகிக்கும் உபகரணங்களுக்குக் "கொடைகள்" என்று அவர் பெயரிட்டிருக்கிறார். இவ்விளையாட்டுகள் ஒன்றற்கொன்று சம்பந்தப்பட்டவையாயும் முந்திய விளையாட்டு பிந்திய விளையாட்டுக்குப் பீடிகையாயுமிருக்கும்படி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இதுவேயுமன்றி அவைகள் சுலபமானவற்றிலிருந்து கஷ்டமான வற்றை போதிக்கும் முறையையும் தெரிந்ததிலிருந்து தெரியாததைப் போதிக்கும் முறையையும் அநுசரித்த வையாயிருக்கின்றன. அவற்றைச்சற்று ஆராய்வோம். ப்ரொடரிக் ப்ரோபெல் பிள்ளைகளின் விளையாட்டுகளுக்காக பல கொடைகளை (சுமார் இருபது) ஏற்படுத்தியிருக்கிறார். அவையாவன:—

1 வது கொடை. வெவ்வேறு நிறமுள்ள ஆறுரப்பர் பந்துகள்.

2 வது கொடை. மரப்பந்து கனவடிவம் தூண் வடிவம். (Cylinder)

3 வது கொடை. எட்டு சிறு கனவடிவங்களடங்கிய ஒரு பெரிய கனவடிவம்.

4 வது கொடை. செங்கல் போன்ற (oblongs) துண்டுகள் எட்டு அடங்கிய ஒருபெரிய கனவடிவம்.

5 வது கொடை. 21 முழுகனவடிவங்கள் 6 அரைக்கனவடிவங்கள் (3 முழுகியூபுகள் 12 கால் கனவடிவங்கள் (3 முழு

* இம்மகானுடைய உருவப்படம் இப்பத்திரிகையில் முதல் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

கியூபுகள்) அடங்கிய ஒரு பெரிய கனவடிவம். இதில் 27 முழுகியூபுகள் அடங்கும்.

6 வது கொடை. 18 முழுசெங்கல் வடிவங்கள் 3 செங்கல் வடிவங்களை 6 ஆக நீளத்தில் அறுத்தது 6 செங்கல்களை 12. ஆக அகலத்தில் அறுத்தது. ஆகமொத்தம் 27 செங்கல் வடிவங்கள் (Oblongs) அடங்கிய ஒரு பெரிய கன வடிவம் (Cube)

7 வது கொடை. 1 அங்குல சதுர அட்டைகள் 64 மேற்படி சதுரங்களை மூலைக்கு மூலை வெட்டிய தாலுண்டான (Right angled Triangle) முக்கோணங்கள்——64, சம பக்க முக்கோணங்கள் 64 (Equilateral), இருசமபக்க முக்கோணங்கள். 64

8 வது கொடை பற்பல அளவுள்ள குச்சிகள் அல்லது கயிறுகள்.

9 வது கொடை. பற்பல அளவுள்ள வளையங்கள்.

10 வது கொடை. குத்தித்தைத்தல். (Perforation and Embroidery)

11 தது கொடை. சித்திரம் வரைதல்.

12 வது கொடை.. பாய் முடைதல் காகிதம் அல்லது ஓலையால்.

13 வது கொடை. களிமண் வேலை.

இவைகளே யன்றி காகிதம் கத்தரித்தல், காகிதம் மடித்தல், பிரம்பு பின்னுதல் பட்டாணி வேலை முதலிய அநேக தொழில்களும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

இத்தொழில்கள் ஒன்றற்கொன்று எப்படி சம்பந்தப்பட்டிருக்கின்றன வென்பதையும் இந்த வரிசையாக ஏற்படுத்தியதற்குக் காரணமென்ன வென்பதையும் சற்று கவனிப்போம்.

ஒன்று முதல் ஆறு கொடைகள் வரையில் பந்து கனவடிவம் cube தூண்வடிவம்(cylinder) செங்கல் வடிவம் (oblong) முதலிய கனப்பொருள்களும் solids அவற்றின் பின்னங்களுமே உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. இக்கனப் பொருள்களுக்கு நீளம் அகலம் (கனம்) உயரம் முதலிய அளவுகளுண்டு.

7 வது கொடையில்உபயோகிக்கப்பட்ட சதுரம்அல்லது முக்கோண அட்டைகள் மேற் பரப்பை (Space or surface) மாத்திரம் குறிக்கும்.

8, 9. கொடைகளில் உபயோகிக்கப்பட்ட குச்சிகள், கயிறுகள் வளையங்கள் கோடுகளை மாத்திரம் குறிக்கும்.

10 வது கொடையான குத்தித்தைத்தல் தொழில் ஒரு நேர்க்கோட்டை



யோ அல்லது வளைவு கோட்டையோ பல புள்ளிகளாகப் பிரித்து பிறகு அப்புள்ளிகளை நூலால் ஒன்று சேர்த்துத்தைக்க முன்போலவே நேர், அல்லது வளைவு கோடுகளாகும்; ஆதலால் இது புள்ளிகளைக் குறிக்கும்.

இங்ஙனம் முறையே கனப்பொருள்கள், அவற்றிற்குள்ள மேற்பரப்பு மேற்பரப்பிலுள்ள கோடுகள், அக்கோடுகளிலுள்ள புள்ளிகள் முதலிய தத்துவங்களைப்போதிக்க இவ்வாறு இத்தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது விபஜனமுறை (Analytical method) யாம்.

சம்யோகமுறை (Synthetical method) யாக புள்ளிகளிலிருந்து ஆக்கப்பட்ட கோடுகளைக் குறிக்க 11-வது கொடையாக சித்திரமும் கோடுகளாலாக்கப்பட்ட மேற்பரப்பைப் போதிக்க 12-வது கொடையாகிய ஓலையல்லது காகிதத்தால் பாய் முடைதலும் மேற்பரப்பையுடைய கனப்பொருள்களைச் செய்வதற்கு 13-வது கொடையாகிய களிமண் வேலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆதலால்தான் இத்தொழில்கள் ஒன்றற்கொன்றுபரஸ்பர சம்பந்தமுடையனவென்றும் முன் முன் தொழில்கள் பின் பின் தொழில்களுக்குப் பீடிகையாயிருக்கின்றன வென்றும் முன் கூறப்பட்டது. இனி மேற்கூறிய ஒவ்வொரு கொடையின் நோக்கம், உபயோகம், அவை எப்படி பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிகளுக்கிசைந்தவாறிருக்கின்றன வென்ற பல விஷயங்களை யாராய்வோம்.

## 1-வது கொடை

உபகரணங்கள்:—வெவ்வேறு நிறமுள்ள ஆறு ரப்பர் பந்துகள்.

உபயோகம் அல்லது நோக்கம்:—தனி வர்ணங்களையும் கலப்பு வர்ணங்களையும் போதிக்கவும், உருண்டை என்ற வடிவத்தைப் போதிக்கவும், மிருதுவு என்ற பரிசத்தைப் போதிக்கவும், இக்கொடை ஏற்படுத்தப்பட்டது. சிறு குழந்தைகளுக்கு கண்ணிந்திரியத்திற்கு விஷயமான நிறம் வடிவங்கள் தான் முதல் முதல் தோன்றுவதால் (என்றால் கண்ணிந்திரியத்தின் உணர்ச்சி தான் குழந்தைகளுக்கு முதலில் உண்டாவதாலும் அவ்வுணர்ச்சியிலும் நிற உணர்ச்சிதான் முதலில் உண்டாகிறதாலும்) முதல் முதல் நிறங்களைப் போதிக்க இந்த தொழிலை ப்ரோபல் ஏற்படுத்தியிருக்கிறார். குழந்தைகளுக்கு முதலில் நிற உணர்ச்சியுண்டாவது சிறுகுழந்தைகள் தங்கள் தொட்டில்களில் கட்டியிருக்கும் பல வர்ணக் கிளிகளைப் பார்த்து சந்தோஷிப்பதால் நன்கு புலப்படும்.

குறிப்பு:—ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு நிறமான பந்தைக் கொடுத்து அதே நிறமான வேறொரு பந்தையும் பெடுத்துச் சொல்லச் செய்தும் தன் பந்தின் நிறமான பந்துகளை வைத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளைக் காட்டச்செய்தும் அந்நிறமான வேறுபொருள்களைச் சொல்லச் செய்தும் நிறங்களைப் போதிக்கலாம்.

பந்தைத் தரையின்மேல் உருட்டி அது உருளுவதையும் அம்மாதிரி உருளும் பொருள்களையும் பிள்ளைகளால் கவனிக்கச் செய்துபந்து உருண்டையாயிருக்கிறதென்றும் போதிக்கலாம். பந்தைப் பிள்ளைகளால் தொடச் செய்து அது அமுங்குவதையும் பஞ்சு உருண்டைகளையும் தொடச்செய்து அதைப் போலவே பந்தும் இருக்கிறதென்று வரவழைத்து மிருதுவாயிருக்கிறதென்று போதிக்கலாம். இம்மாதிரியே வலம், இடம், கீழ், மேல், முதலியவற்றையும் போதிக்கலாம்.

விளையாட்டுகள்:—(1) ரப்பர் பந்துகளைத் தரையிலடித்து அவை எழும்புவதைக் கவனித்தல்.

(2) பந்துகளை ஒருவருக்கொருவர் மாற்றுவது.

(3) தூரத்தில் நிற்க வைத்த செங்கல்லைப் பந்துகளால் குறிப்பிட்டு அடிப்பது.

(4) கால் பந்தடித்தல்.

என். சுப்பிரமணியம்.

---

# பழிக்குப்பழி

## அங்கம் 1. களம் 1.

இடம்:—கோவில். காலம்:—சாயங்காலம்.

கோகர்ன தீக்ஷிதர்:—என்ன சாஸ்திரிகளே! விசேஷம் என்ன? கோவில்லே ஏன் இன்னும் சாயங்கால தீபாராதனையாகல்லே?

குப்பண்ணு சாஸ்திரிகள்:—அதெல்லாம் எனக்கு என்ன தெரியும். கோவில் பஞ்சாயத்துக் கிட்ட போய்ச் சொல்லு.

தீக்ஷிதர்:—இந்த சாயவேஷ்டியா! இது கோடியாத்து குப்பமுத்து தறி போட்டான். முதல் வேஷ்டி சாஸ்திரிகளுக்கு தானம்கொடுத்தான்.

சாஸ்திரிகள்:—என்ன ஒருகாது வலது காதா என்ன உமக்கு.

தீக்ஷி:—ஆமா! ஒரு காது இடது காது.

சாஸ்:—(கொஞ்சம் இறைந்து) அதெல்லா மிருக்கட்டும். நேற்று கோவிலடிக் கல்லியாணத்துக்கேன் என்னை அழைத்துப் போகவில்லை?

தீக்ஷி:—நானென்ன பண்ணட்டும் அவசரமாய்.—

சாஸ்:—எல்லாம் எனக்குத் தெரியுங்காணும். இவாளெல்லாம் என்னை இப்பமதிக்கிறதில்லே. நேற்றுக்கூட இந்தக் கழுதை சுயம்பாகி பட்டை நாதனை இரண்டு பட்டை பொங்கல் கேட்டேன். அவன் பலேகிருக்கு பண்ணிக்கொண்டு கிடையாதுண்டு அந்தத் தடியன்



தவுலடிக்கிற தாண்டவராயன் பெண்சாதிக்குத் திருட்டுத்தனமாய் கொடுத்தான்.

தீக்ஷி:—ஆமாம்! அவன் அன்னிக்கொருநாள் எனக்கும் கொடுக்கிறேன் னுட்டு அப்புறம் பட்டை நாமஞ்சாத்திட்டான் காணும் (அர்ச்சகர் பிரவேசித்துக் கொண்டே.)

'எங்காணும்! ஐயங்காராப் போயிட்டீரா! சிவன் கோவிலுக்குள்ளே வாரதே யிரும். நைவேத்யம் வைக்கணும். (பஞ்சாயத்தும், சிவ குருஸ்வாமிகளும், மற்ற வேலைக்காரர்களும் பிரவேசம்.)

பஞ்சா:—தீபாராதனை நடக்கட்டுமே. ரொம்ப நாழியாகி விட்டதே!

ஸ்வாமிகள்:—தீபாராதனை கிரமப்படி நடக்கட்டும்.

(அர்ச்சகர் நைவேத்யம் செய்கிறார்.)

பஞ்சா:—(மெதுவாக) என்ன தீக்ஷிதரே விசேஷம்!

தீக்ஷி:—(கோபத்துடன்) என்னையா சேஷமா! அடாடா!

சாஸ்:—(தீக்ஷிதர் காதோடு) ஸ்வாமிகள் நிற்கிறார், மெதுவாகப் பேசுங்காணும்.

பஞ்சா:—நாளன்றைக்கு திருவாதிரை யுத்ஸவத்திற்கு மட்டும் இருந்து விட்டு ஸ்வாமிகள் ராஜ ஸ்தலத்திற்குப் போகிறார். ஆகையால் நம்ம கோவில்லே திருவாதிரை பலே ஜோரா நடக்கணும். சுக்கு ராம சாஸ்திரிகள், அப்பைய கனபாடிகள், சக்கரை தீக்ஷிதர் எல்லாரும் வந்து ருத்திரம் ஜபிக்கணும் னுட்டு சொல்லியிருக்கிறேன்.

(இச்சமயத்தில்) தாரையும் சங்கத்வனியும் கேட்கிறது.

(கோவிலாள் அடிக்கையகவுண்டன் ஓடிவருகிறான்)

பஞ்சா:—என்னடா சேதி?

அடிக்:—சா—மி.

பஞ்சா:—சொல்ரா சேதியை!

அடிக்:—நம்ளக்கு பேதிவந்திடுச்சு. ஊ—ங்! ஊ—ங்!

சாஸ்:—ஏண்டா பேதிக்குச் சாப்பிட்ட மயக்கமாடா!

(இன்னொருவன் ஓடிவருகிறான்)

பஞ்சா:—இவனைக் கேட்போம்!

[illegible]—என்னடா! இவ்வளவு அவசரமா ஓடிவந்தே.

[illegible]—சா—மி.

சாஸ்:—ஊ—,

ஆள்:—ஒருபெரிய ராசா வாராங்க. இராயிரம் சிபாய்கள் கத்தி வைச்சிகிணு நம்ம வேதங்காட்டித் தோப்பிலே இருக்கிறாங்க

பஞ்சா:—அவுங்க எப்படி இருக்கிறாங்க, நம்ம சிபாய்களில்லையா?

ஆள்:—இல்லை. அவுக ஹ—சொல்றேன். இருங்க மறந்திடுச்சே—ஹா இஸ்லாம்னு சொல்றாங்க.

பஞ்சா:—இஸ்லாம் சிபாய்களா! இரண்டாயிரம் பேரா! ஐயோ! நம்ம கதி அதோகதிதான்! பேதி வந்தாப்போலேதான்.

அடிக்கைய கவுண்டன்:—நான்தான் அப்பொழுதே சொன்னேனுங்க.

பஞ்சா:—யேப்! ஓடிப்போய் நம்மகோவில் கணக்குப்பிள்ளையையும் பட்டாமணியத்தையும் அழைத்துக்கிணுவா. ஜல்தி. (ஓடுகிறான்.)

ஸ்வாமிகள்:—என்ன சங்கதி!

பஞ்சா:—இஸ்லாம் சிபாய்கள் இரண்டாயிரம் பேர் அந்தத் தோப்பிலே கூடாரம் போட்டிருக்கிறார்கள்.

சாஸ்:—இருந்தால் என்ன? அவாள் பாட்டிலே வந்துவிட்டு போறா. நம்மை என்ன பண்ணுவா?

ஸ்வாமிகள்:—உமக்குத் தெரியாது. அவர்கள் ஹிந்துமதத்திற்கு விரோதிகள். நமது கோவில்களையுடைத்து ஜனங்களைத் தம்மதத்தில் சேரும்படி நிர்பந்திப்பார்கள். இல்லாவிடில் கத்தியை மாட்டிவிடுவார்கள். அவர்கள் அதற்கே தேசத்தை விட்டு அதே விரதங்கொண்டு ஊரெல்லாமலைந்து திரிவார்கள்.

சாஸ்தி:—(திகில்கொண்டு) இப்பொழுது நாமென்ன செய்வது? ஓடிவிடுவோமா?

பஞ்சா:—இதோ அவர்கள் வருகிறார்கள், யோசிப்போம். (அடிக்கைய கவுண்டன் இரண்டு பேர்களுடன் வருகிறான்.)

கணக்குப்பிள்ளை:—சாமி கணக்கெல்லாம் சரியாயிருக்கிறது. அந்த சுப்பய்யனுக்கு கொடுக்கவேண்டிய—

பஞ்:—அதெல்லாம் இப்ப அவசரமில்லை. என்ன பட்டாமணியம்! இஸ்லாம் சிபாய்கள் இரண்டாயிரம்பேர் வந்திறங்கியிருக்கிறார்களாமே.

பட்டா:—ஆம். நான்கூட கேள்விப்பட்டேன். நம்மூரிலேயே நானூறு ஜனங்கள்தாமே மொத்தம்.

கணக்கு:—ஆம். அதில் ஐம்பதுபேர் குழந்தைகள். ஐம்பதுபேர் விருத்தர்கள். நூறுபேர் வைதிகபிராமணாள்.

பட்டா:—அவாள் என்ன! சண்டை போடுவாளா என்ன? தொப்பையை போட்டுண்டு வடை சாப்பிடுவார்கள்!

சாஸ்தி:—(தனக்குள்) ஆமா நிசந்தான்.

பஞ்சா:—சரி, இருநூறுபோர் இப்பொழுது யுதந்செய்யத்தயாராயிருக்கிறார்கள்.



சாஸ்தி:—நீங்கள் இவ்வளவு யோசிக்கிறீர்களே! அவர்கள் என்னத்துக்கு வந்திருக்கிறார்களோ. யுத்தம் செய்யாமலே ஒருகால்போயிட்டால்—

பஞ்சா:—இதான் சாஸ்திரி மட்டித்தனம். இஸ்லாம்காரர் விஷயம் உனக்குத்தெரியாது. சரி அப்புறம், என்ன பட்டாமணியம்!

பட்டா:—ஏது! இருநூறு பேரை வைத்துக்கொண்டு இரண்டாயிரம் ஜனங்களைத் துரத்த முடியாது.

கணக்கு:—நம்மவர்கள் ஈவெட்டிச்சிப்பாய்கள்.

சாஸ்தி:—நீருங்கூடத்தானே!

கணக்கு:—ஆமா, நெருப்புந்தான்.

பட்டா:—ஒரு தூதனையனுப்பி கேட்டு வரச்சொல்வோமா?

பஞ்சா:—என்னத்தை?

பட்டா:—அவர்கள் கருத்து என்ன என்பதையும், அவர்கள் சமாதானம் செய்வதானால் என்ன நிபந்தனைகள் என்பதையும்—

பஞ்சா:—அதான் தெரிஞ்சிருக்கே. இஸ்லாம் மதத்திலே சேர்ந்து அவனுக்குக் கப்பம் கட்டு, அல்லது கத்தியினால் குத்தப்பட்டு செத்துப்போ.

சாஸ்தி:—ஐயையோ! நான் என் வீட்டிற்குப் போகிறேன். (போகிறார்.)

கணக்கு:—வீடு என்ன கோட்டையோ?

ஸ்வாமிகள்:—இந்த இருநூறு பேர்களை வைத்துக்கொண்டு அந்த பல்முள்ளவர்களைத்துரத்த முடியாது.

பட்டா:—பின் என்ன பண்றது?

ஸவாமிகள்:—நான் அரசன் டபீர்தாஸிடம் சென்று அவனையும் எச்சரித்து உங்களுக்கு உதவி அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்.

பஞ்சா:—அது நல்லயுக்திதான்.

பட்டா:—என்ன, ஐயா. ஸ்வாமிகள்போய் அங்கே சேர்வதற்குள் நாமெல்லாம் இங்கே யமலோகம் போய்ச் சேர்ந்திருப்போம்.

ஸ்வாமிகள்:—எனக்குக் குதிரை சவாரி செய்யத்தெரியும்.

பட்டா:—என்னவென்றாலும் காலையில்தான் போய்ச்சேருவீர்கள் இங்கே—

கணக்கு:—அதுக்குள்ளே பயல்களெல்லாம் எங்களை வேலை முடித்திருப்பாங்க!

பஞ்சா:—என்ன இப்படி பயந்திருந்தால்—

பட்டா:—பயப்படறதென்ன? உள்ளதைச் சொன்னேன்.

ஸ்வாமிகள்:—சரி. நான் சீக்கிரம் புறப்படவேண்டும். நீங்கள் உதவி வரும்வரை பொறுத்திருங்கள் (போகிறார்.)

பஞ்சா:—அப்படியே.

பட்டா:—இருப்பது எங்கே? போவதுமெய்யே!

கணக்கு:—இருப்பதுபொய்.

பஞ்சா:—சரி. மெய்யாயிருந்தாலும் இப்படி வம்புபேசிக்கொண்டா சாகணும்.

பட்டா:—நான்தான் சொல்றேனே!

பஞ்சா:—என்ன!

பட்டா:—நமது மனிதர்களெல்லாரையும் அணிவகுத்து நிறுத்தி எந்த நிமிஷமேனும் தயாராயிருக்கவேணும்.

கணக்கு:—சரி.

பட்டா:—ஸ்திரீகளெல்லாம் மனிதர்களுக்கு வேண்டிய அன்ன ஹாரங்களை தயார்செய்து கோவிலுக்குள்ளே கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டியது.

பஞ்சா:—எவ்வளவு சாதம்!

பட்டா:—ஊரிலிருக்கிற அரிசி யெல்லாம், கோவிலுக்குள்ளே கொண்டுவந்து விடணும் மற்ற சாமான்கள், நகைகள், பணங்கள், எல்லாம் அவரவர்கள் வீட்டிலேயே போட்டுடணும்.

பஞ்சா:—(தனக்குள்) மட்டிப்பயல்! இவன் யோசனை நன்றாயிருக்கிறது!

கணக்கு:— இதுவே சிறந்த யோசனை.

பட்டா:—நமது கோவில் நாலு கோபுரவாயில்களை இருபது இருபது பேர் காவல் காத்திருக்கவேண்டும். கோவில் மதில்கள் மேலே சிலர் இருந்து அம்புகள் கொண்டு—

பஞ்சா;—ஐயா! நம்மாலே முடியாது அதெல்லாம். கோவிலுக்குள்ளே யிருந்து சாப்பாடு வியவஹாரங்களைக் கவனித்துக் கொள்கிறேன். நீர் யுத்தத்தைப் பார்த்துக் கொள்ளும்.

பட்டா:—ஆஹா தயார்! (தனக்குள்) என்ன சுத்தபேடி இவன்!

கணக்கு:—எசமான்! நான் பட்டாமணிய அய்யா பின்னோடு அவருக்கு ஒத்தாசையா யிருக்கிறேன்.

பஞ்சா:—அப்புறம் நமக்கு யாரு?

பட்டா:—உமக்கு என்னத்துக்கு ஐயா? உள்ளே யிருந்து வேலே பார்க்க வேறு ஒருவருமில்லையா?

பஞ்சா:—(தனக்குள்) இவனுக்கு என்ன கர்வம். (வெளியாக) சரி நான் யாரையாவது பார்த்துக் கொள்கிறேன்.

பட்டா:—ஐயா கணக்குப்பிள்ளை! நீர் போய் தண்டோரா காரனை ஊர்முழுவதும்நாம் செய்த ஏற்பாட்டை தெரிவிக்கச் செய்யும். நமது இருநூறு சிபாய்களையும் சேனாபதி ராஜசிம்ஹத்தையும் தயாராயிருக்கச்சொல். நான் இதோவருகிறேன்.

கணக்கு:—அப்படியே— (போகிறான்)

பஞ்சா:—இவ்விடம் கோகர்ணதீக்ஷிதர் இருந்தாரே. எங்கே?



பட்டா:—நான்பார்க்கல்லையே.

அடிக்கையை: சாமி! அவுரு அப்பமே சன்னதிமேல தூங்குறாரு.

பட்டா:—பாவம். தூங்கட்டும். சரி நான் வரட்டுமா?

பஞ்சா:—சரி நீங்கள் தான் காப்பாத்தணும்.

பட்டா:—நானென்னய்யா செஞ்சுவிடப்போறேன். (போகிறார்)

பஞ்சா:—என்ன கர்வம் இவனுக்கு. என்னமோ மகாதீரனாட்டமாய் வேலே செய்து பொட்டறவன்மாதிரி பேசறான்—ஆனாலும் இப்பேறபட்ட சமயத்துக்கெல்லாம் அவன் தான் கெட்டிக்காரன். யோசித்துக் காரியஞ் செய்வன். அதினால் நாமும் கொஞ்சம் அவன் சொல்படி நடப்போம். இந்த சமயத்திலே அந்த சில்லரைப் பகையெல்லாம் தூர கட்டிவைப்போம். பிறகு பார்த்துக்கொள்வோம்.—அதான் நல்லது. ஈஸ்வரா இந்த இஸ்லாம் ஜனங்களெல்லாம் அப்படியே கால்ராகண்டு ஓடிப்போய் விடணும். எல்லாத்துக்கும் கடவுள் பாத்துக்குவார்.— (போகிறார்)

---

## களம் 2.

இடம்:—ஒரு மைதானம். காலம்:—இரவு இரண்டாவது ஜாமம். [பிரவேசம்.]

பட்டாமணியகாரர்:—ஏது! எனக்கு நம்பிக்கையில்லை. நாம் நிச்சயம் இறக்கப்போகிறோம். இருந்தாலும் வீரர்களாக யுத்தம்செய்து இறப்பது தான் கீர்த்தி. அதற்காகவே— (கணக்குப்பிள்ளை ஓடி வருகிறான்)

என்ன! காரியமெல்லாம் முடிந்து விட்டதா?

கணக்கு:—ஐயா—நமது—கோடி வீட்டுக் குப்பமுத்து

பட்டா:—சீக்கிரஞ் சொல்.

கணக்கு:—அவன் இவ்வுலகமெல்லாஞ் சுத்தி வந்தவன். அவனுக்கு இஸ்லாம் பாஷைத்தெரியும். அவனைப்பார்த்தாக்கூட மகமதியன் மாதிரி இருப்பான்.

பட்டா:—சீக்கிரஞ் சொல்லேன்

கணக்கு:—அதான் சொல்ரேனே. சாயந்திரம் வேதங்காட்டித் தோப்பு வழியாப் போறபோது இஸ்லாம் சிப்பாய்கள் இறங்கியிருந்ததைப் பார்த்து விசாரித்தானாம். (ஓடுகிறான்

பட்டா:—அவனை இங்கே கூப்பிடு ஜல்தி.

பட்டா:—சரி இவனை விசாரிப்போம். அவர்களைப்பற்றி. (தூரத்தில் சிப்பாய்கள் நிற்பதைக்கண்டு, கையைத்தட்டி சமிக்ஞைசெய்ய, ஒருவன் வருகிறான்)

ராஜசிம்ஹன்:—சிப்பாய்கள் தயாராய் அணிவகுத்து நிற்கிறார்கள். குளிர் காலமாதலால்—

பட்டா:—சரி. கோவில் வடக்கு கோபுரத்தண்டையிருக்கும் பெரிய கொட்டகையினுள் அழைத்துச்செல். அதற்கு எதிராகத்தானே எதிரிகள் தங்கியிருக்கிறார்கள். கிழக்கு கோபுரத்தில் போட்டிருக்கும் வெளிச்சத்தை அணைக்கச்சொல்.

ராஜ. சரி. (போகிறான்.

(குப்பமுத்து வருகிறான்)

பட்டா:—என்ன, குப்பமுத்து. எதிரிகள் எப்படி? என்ன?

குப்பமுத்து:—என்ன ஐயா பண்றது. அந்தபசங்கள் சுமார் இரண்டாயிரத்தைந்நூறுபேர்கள். இதில் ஐந்நூறு பெயர்கள் வேலைக்காரர்களும் மூட்டை சுமப்போர்களும். சண்டை செய்யும் சிபாய்கள் இரண்டாயிரம் பேர்கள். அவங்கள் எல்லாரும் முரட்டுவீரர்கள். நான் முன்னேவியாபாரத்துக்கு போயிருந்த அரேபியாதேசத்தில் இந்த சேனாதிபதி காஸிமைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். அவன் இஸ்லாம் மதத்தை இந்தலோக முழுதும் பரவச் செய்யணும்னு விரதங் கொண்டு கிளம்பியிருக்கிறான். சாயந்திரம் நான் அந்தபக்கம் போனபோது என்னையும் இஸ்லாம் காரனென்று எண்ணி கூப்பிட்டாங்க. எனக்கும் அவுங்கபாஷை தெரியும். போய் மெதுவாக அவுங்கசமாசாரமெல்லாம் அறிஞ்சுகிட்டேன். இவுங்களுக்குப் பெரியராசா டாமஸ்கஸ் என்ற பட்டணத்திலே யிருக்கிறானாம். அவன் தான் இந்த காஸீமுக்கு உத்தரவு கொடுத்தானாம். அவுங்களுக்கு இங்கே நாம் இரண்டு மூன்று பசங்கதான் இருக்கும்னுட்டு தெரிஞ்சு கொண்டாங்க. நான் ஆனமட்டும் சொல்லிப்பார்த்தேன். ரொம்பபேர் இருக்கிறாங்க. நீங்க ஜாக்கிரதையாய் இருக்கணும்னுட்டு, என்னையே உதைக்க வந்துட்டாங்க, ஓடியாந்திட்டேன்.

பட்டா:—அவங்க இப்ப என்ன பண்ணணும்னு சொல்றாங்க.

குப்பமுத்து:—நம்மளெல்லாரையும் இஸ்லாமாகப்பண்ணி இந்த கோவிலை யிடிச்சுட்டு பணத்தை யெல்லாம் அடித்துகொண்டு போவாங்க. நம்ம இஸ்லாமாகப் போகாதபோனா கொன்றுபோடுவாங்க.

பட்டா:—சரி. நாமெல்லாம் இறக்க வேண்டியதே.

குப்பமுத்து:—நீங்கள் செய்த ஏற்பாடெல்லாம் நல்லதுதான். அவுங்கள் இந்த ஊரைக்கொள்ளை யடித்துவிட்டு அரியூரையும் தாக்கப்போகிறாங்க.



பட்டா:—ராஜா டபீர்தாஸ், சிபாய்கள் .... யமாருக்கிறார்கள்.

குப்ப:—ஏது எனக்குத் தோணவில்லை.

பட்டா:—நம்ம ஊரெப்படி யிருக்கிறது?

குப்ப:—ஊர் தெருக்களில் ஒருவருமேயில்லை. வீடுகளெல்லாம் திறந்தபடியே கிடக்கு. எல்லா ஜனங்களும் கோவிலுக்குள்ளே போயிட்டாங்க. அரிசி, கறிகாயெல்லாம் கோவில் மடப்பள்ளியில் சேர்த்தாய் விட்டது. கோவிலுக்கு வெளியே சிபாய்கள் இருநூறு பெயரும் ராஜசிம்ஹனும் வடக்கு கோபுரத்துக் கொட்டகை பண்டை இருக்காங்க. இங்கே நாம்ப இரண்டுபேர் மட்டிலே இருக்கிறோம்.

பட்டா:—சரிவா. ராஜசிம்ஹனண்டை செல்வோம். (கொஞ்சதூரம் செல்லு முன் ராஜசிம்ஹனும், கணக்குப் பிள்ளையும் வருகிறார்கள்)

பட்டா:— ராஜசிம் ஹா! என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?

குப்ப:—அவுங்க காலையிலே தான் யுத்தம் செய்யப் போவதாக சொல்றாங்க. நம்ம சிபாய்கள் தூங்கலாம்.

பட்டா:—உன்னிடம் ஏமாத்த சொல்லியிருப்பார்கள். திடீரென்று வந்து விட்டார்களானா எல்லாரையும் தூங்குகிற போது கழுத்தைத் திருகிப் போடுவார்கள்.

ராஜ.—ஆமா அந்தப் பயல்கள் அவ்விதம் செய்வார்கள். நாம் இரவு முழுதும் விழித்திருக்க வேண்டியதே.

குப்ப:—சரி. காலையிலே சண்டை போடறபோது தூங்கிவிழ வேண்டியதே.

பட்டா:—என்ன செய்கிறது! (கோவில் மணிசப்தம் கேட்கிறது) ராஜசிம்ஹா, நீ இவ்விடம் கவனித்துக்கொள். நான் கோவிலுக்குள் சென்று அவ்விடம் காரியங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன், கணக்குப் பிள்ளை நீரும் கூட வருகிறீரா.

கணக்கு:—அப்படியே

குப்ப:—வாரும் ராஜசிம்ஹரே, நாம் போவோம். (போகிறார்கள்.)

ராஜ:—சரி

(இன்னும் வரும்.)

V. N. ராஜ்.

## STORIES FROM THE HISTORY OF ROME

## அரசர்கள் மாட்சி

முன்னொரு சஞ்சிகையில் டார்குவின் என்பவன் ராஜ்யாதிகாரத்திற்கு வந்த விதத்தைப்பற்றிச் சொன்னோம். இந்த அரசன் வேறு குலத்தினன். ஆகவே ஜனங்களுக்கு இவனிடம் கொஞ்சம் வெறுப்பு உண்டு. ஆயி

னும் அரசன் மிகவும் கண்டிப்பாக ... விஷயங்களைக் கவனித்துக்
கொண்டு, ஜனங்களுக்கு உபயோகமான வேலைகளைச் செய்துவந்ததனால்
ஜனங்கள் அடங்கியிருந்தார்கள்.

டார்குவின் அநியாயமாய் அபகரித்த ராஜ்யம் அவனுக்கு நெடுநாள்
நிலைத்திருக்கவில்லை. சேர்வியஸ் துளியஸ் என்ற அவன் வேலைக்காரன்
அவனை நீக்கிவிட்டு அரசாளத் தொடங்கினான். பாவம்! இவ்வரசன்
அடைந்த துவிசனிக்கத்தக்கதே. இவனது மருமகனும் டார்குவின் மக
னுமான டார்குவினஸ் பிரிஸ்கஸ் என்பவன் தனது மனைவியுடன் சதிசெய்து,
ஜனங்களைக் கலகமூட்டி, அரசனைக் கொன்றுவிட்டான். செர்வியஸ்
பெண்ணும் டார்குவினஸ் மனைவியுமான தல்லியா என்பவள் அரண்மனைக்
குச் சவாரிபோய்க்கொண்டிருக்கையில் வழியில் தனது தகப்பனாரின் பிரே
தத்தைக்கண்டு அதன்மேல் ரதத்தைவிட்டுக்கொண்டு போயினள். ஆ
பிதாவாஞ்சை!

இந்த டார்குவினஸ் என்பவனே ரோமாபுரியில் கடைசியாக ஆண்ட
அரசன். இவன் கொடூரனாயினும் ராஜ்யாதி விஷயங்களைச் செவ்வனே
கவனித்து வந்தான். அவன் தலை தெரித்த கர்வமும் அகம்பாவமும் பிர
புக்களுக்குக் கொஞ்சமேனும் சரிப்படவில்லை. ஏழை ஜனங்களை நெருக்கி
அவர்களிடம் இருக்கும் சொத்துகளைப் பிடுங்குவதும் இன்னும் சகிக்
கமுடியாத கொடூரங்களும் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. இந்த அரசனை
அடித்துத்துரத்தியபிறகே மற்ற வேலை செய்வதெனத் தீர்மானித்தார்கள்.
அதற்கு ஒத்தசமயமும் கூடியசீக்கிரம் வந்தது.

இந்த டார்குவினஸுக்கு செக்ஸ்டியஸ் என்னும் ஒரு புதல்வன்
உண்டு. இவன் கூரையின்மேலிருந்து கொள்ளிக்கட்டை சுழற்றும்
சுபாவமுள்ளவன். வேலையற்ற நாடோடிகளோடு சேர்ந்து தத்தாரியான
பையன். இவனுக்கு அத்தானாகிய புரூடஸ என்பவன்மிகவும் யோக்கியன்.
பச்சாத்தாபமும், ஜீவ இரக்கமும் உடையோன். அக்காரணம் கொண்டே
அவனை செக்ஸ்டியஸும் மற்ற அவன் சகாக்களும் பைத்தியம் எனக்
கூப்பிடுவார்கள். புரூடஸும் அப்பெயரினால் தனக்கு யாதொரு ஹீன
மும் இல்லை என அறிந்து சும்மா இருந்தான். ஒரு சமயம் புரூடஸும்
செக்ஸ்டியஸும் டெல்பி நகரத்துப்பூசாரியிடம் தங்களது அதிர்ஷ்ட
த்தைப்பற்றி கேட்டபொழுது, "எவனொருவன் ரோமாபுரியை அடை
ந்தவுடன் முதல் முதல் தனது மாதாவை வணங்குகிறானோ அவனே
அரசனாவன்," என தேவவாக்கு எழுந்தது. திரும்பி ரோமாபுரி பட்ட
ணம் வந்து சேர்ந்தார்கள். அவ்வாக்கியத்தின் கருத்தை நன்றாக அறிந்த
புரூடஸ் பட்டணத்து எல்லையை மிதித்தவுடன் கல்தடுக்கி விழுந்தபாவனை



யாக, கீழேவிழுந்து பூமாதேவியை வணங்கினான். செக்ஸ்டியஸும் அவன்
சிநேகிதர்களும் "பைத்தியத்தை"ப் பார்த்து நகைத்தார்கள்.

இந்த செக்ஸ்டியஸ் அவனது தகப்பனார் நாசத்திற்குக் காரணமாயி
ருந்தான். இவனது தாயார் அவனது தகப்பனாரைச்சாகும்படி செய்தாள்.

இவனே தன் தகப்பனாரையும் கெடுத்து தன்னையும் கெடுத்துக்கொண்
டான். ஒரு நாள் மாலை செக்ஸ்டியஸின் பங்களாவில் ஒரு விருந்து நடந்
தது. அதற்கு அவனது சிநேகிதர்களும் இன்னும் பல பிரபுக்களின்
புத்திரர்களும் வந்திருந்தார்கள். உண்டி கழிந்தவுடன், தமாஷாகப்
பேசிக்கொண்டிருக்கையில், வாலியர்கள் தத்தம் மனைவியரைப் பற்றிப்
பேசத்தொடங்கினார்கள். ஒவ்வொருவரும் தனது மனைவியே கற்பிற்
கரசி என்றும் பலவிதமாகப் புகழத்தொடங்கினார்கள். செக்ஸ்டியஸும்
தன்னுடையவள் நல்லவளென்று பேசினான். ஆனால் கோலாட்டினஸ் என்னும்
வீரன் மிகவும் உண்மையான ஆக்ரஹத்துடன் பேச, செக்ஸ்டியஸ் உடனே
அவனை நோக்கி "இவ்வளவு பெருமை பேசுகிறாயே, இப்பொழுது உன்
மனைவி என்ன செய்து கொண்டிருக்கிறாள்? சொல் பார்ப்போம்!" என,
அவனும் தியங்காமல் "இப்பொழுது தனது வேலைக்காரிகளுடன் நூல்
நூற்றுக்கொண்டிருக்கிறாள்" என்றான். இவன் வார்த்தையை ரூபிப்பதாக
சொல்லிவிட்டு, செக்ஸ்டியஸ் முதலியோர் எழுந்து முதலில் செக்ஸ்டி
யஸ் மனைவியிருப்பிடம் சென்று அவளுக்குத் தெரியாமல் கவனித்தார்
கள். அவள் தன் சிநேகிதர்களுக்கு விருந்தளித்துக்கொண்டு மிகவும்
உல்லாசமாய் இருந்தாள். இதைப் பார்த்தவுடனே செக்ஸ்டியஸ் மிகவும்
வெட்கினான். ஆயினும் ரோஷத்துடன் "ஸ்திரீகள் குணமே இப்படித்
தான். கொலாடினஸ் மனைவி இதற்குமேல் உல்லாசமாயிருப்பாள்"
என்று சொல்லிக்கொண்டு, எல்லாரும் கொலாடினஸ் வீட்டிற்குச் சென்
றுபார்க்க, அவன் மனைவி லுக்ரீஷியா தன் தோழிகளுடன்
நூல் நூற்றுக்கொண்டு தன் கணவர் எப்பொழுது வருவார் என ஆவலு
டன் எதிர் பார்த்திருந்தாள்.

செக்ஸ்டியஸின் சாதாரணமான பொறாமை குணம் தீப்பிடித்து
எரிய ஆரம்பித்தது. லுக்ரீஷியாவின் அழகிய முகத்தைப் பார்த்தவுடன்
அவனை தீக்குணமும் சேர்ந்து எரிக்க ஆரம்பித்தது. ஆகவே கொடும்பா
வம் செய்யத் தீர்மானித்தான். அன்றிரவு தனியாகக் கிளம்பி, கொலாடி
னஸ் தன்னை அனுப்பியதாகச் சொல்லிக்கொண்டு, லுக்ரீஷியாவிடம் சென்
றான். அவளும் தன் கணவரிடமிருந்து வந்தவரை உபசரித்தாள். நயவஞ்
சகனான செக்ஸ்டியஸ் தன்கருத்தை வெளியிடவே கடுங்கோபங்கொண்டு
அவனை வெருட்டினாள். அவனோ செல்லா முரடன். தன் கருத்துக்கிணங்
காவிடில் அவளைக் கொன்று, குதிரைக்காசாரியுடனுடன் சேர்த்துக்கட்டி

ஊராருக்கு அவள் கெட்ட நடத்தையுடையவள் என அறிவிப்பதாகச் சொல்கிறான். ஐயோ! பாவம்! என் செய்வாள்! தானிறந்த பிறகு தனக்கு அவ்வாறு கெட்ட பெயர் வரக்கூடாதெனத் தீர்மானித்தாள். அதை தன் கணவரும் நம்பி, தன் மேலிருக்கும் அன்பு நீங்கி வெறுப்பாய் விடுமே என ஏங்கினாள்.

பொழுது புலர்ந்தது. சூரியனும் அதிக ஆவலுடன் இனி விஷயங்கள் எவ்வாறு முடியப் போகிறது என்றறிய, கிழக்கே உதயமாயினன். லுக்ரீஷியா தன் கணவனுக்கும் தன் தகப்பனாருக்கும் சொல்லியனுப்பினாள். அவ்விருவரும் வந்து சேர்ந்தார்கள். தன் கதையைச் சொன்னாள். என்ன ஸமாதானம் சொல்லியும் கேட்காமல் தன் கணவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி மார்பில்குத்திக்கொண்டிறந்தனள். கொலாடினஸ் கண்ணீர் சொரிந்தான். இப்பேற்பட்ட அரசனையும் அவன்மகனையும்தொலைத்து விடவேண்டுமெனக்கிளம்பினான். இருவரும் லுக்ரீஷியாவின் தேகத்தை பொதுசந்தை யிடத்திற்கு கொண்டுபோய் வைத்தார்கள். அந்த இரத்தந் தோய்ந்தகத்தியை உயரத்தூக்கினான். ஜனங்கள் பிரமித்து நின்றார்கள். இச்சமயம் புரூடஸ் வந்துகலந்து கொண்டான். விஷயங்களை அறிந்துகொண்டு ஜனங்களுக்கு விஸ்தரித்துரைக்க, சகலரும் இவ்வரசனைத் துரத்திவிடவேண்டியது என ஆரவாரித்தார்கள். அவ்வாறே பிரபுக்கள் தீர்மானிக்க, மறுநாள்காலை வேற்றூருக்குச் சென்றிருந்த அரசனும் அவன் மகனும் திரும்பிவரும் சமயம்கோட்டைக் கதவுசாத்தப்பட்டது. அரசன்திகைத்துத் திரும்பிச்சென்று பக்கத்து தேசத்து அரசனிடம் அடைக்கலம் புகுந்து அவன் உதவியை நாடினான்.

ரோமாபுரிப்பட்டணத்தில் அரசனைத் துரத்திய பிறகு ஜனங்கள் ஒன்று கூடி ராஜ்யாதிகாரத்தை எவ்வாறு நடத்துவது என ஆலோசித்தார்கள். வருஷாவருஷம் ஜனங்கள் இரண்டுபேர்களை அரச அதிகாரத்துடன் நியமிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அவர்களுக்கு கான்சல்கள் எனப்பெயர். ஒருகான்சல் பட்டணத்து விஷயங்களையும் மற்றொருவன் வெளி வியவகாரங்களையும் கவனிக்கவேண்டியது. அவ்வருஷத்திற்கு ஜனங்கள் புரூடஸ்ஸையும், கோலாடினஸ்ஸையும் பொறுக்கி யெடுத்து நியமித்தார்கள்.

டார்குவினிஸ் தான் ஆண்டுவந்த ராஜ்யத்தையடைய பல பிரயத்தனங்கள் செய்து பார்த்தான். பலிக்கவில்லை. பட்டணத்துக்குள்ளேயே அவன் பக்ஷம் சேறுவோர் மிகச்சிலரே. இருந்த சிலரும் ஜெயில் வாசம் செய்கிறார்கள். புரூடஸ், தன் மகன் என்பதையும் பாராமல் உண்மையான ரோமானிய குணத்துடன், ஒரு கொடும்பாவி கட்சியைச் சேர்ந்த தன் மகனைத் தூக்கில் போட்டுவிடும்படி உத்த



ரவு செய்தான். அந்நியதேசத்து அரசர்கள் டார்குவினஸ் பொருட்டு சண்டைக்கு வந்தபோதிலும் டார்க்குவினஸ் பக்கம் ஜெயம் கிடைக்கவில்லை. அவ்வாறு முக்கியமாய் சண்டைக்குவந்து ரோமாபுரிப் பட்டணத்தையே அழித்து விடுவதாகக் கிளம்பிய பார்சினாவைப் பற்றி இன்னொரு சமயம் பேசுவோம்.

V. N. ராஜ்.

---

## சன்மார்க்க போதினி

### மணம்: 1.

ஐரோப்பா கண்டத்தின் மெஸடோனிய என்னும் தேசத்தை ஆண்டு வந்த பிலிப் என்பவர் குதிரை வேண்டுமென்கிற ஆவலாய்சில குதிரைகள் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவ்வாறே ஒருநாட்காலை கொணர்ந்த குதிரைகளில் மிகவும் நேர்த்தியான மிருகம் என்று காவலாளிகள் ஒரு மிருகத்தை காட்டியவுடன் அரசன் வியாபாரியை நோக்கி "ஆகா! நல்லமிருகம், இதன் விலை என்ன?" என, "பதின்மூன்று டேலன்ட்ஸ்" என்று உடையோன் உரைத்தனன். (கிரீக் நாணயம் ஒரு டேலன்ட்ஸ் இக்காலத்து 192-பவுனுக்குச் சமம்) நல்ல மைதானத்தில் கொண்டுபோய் பரீக்ஷை பார்க்கலாமென்று எண்ணிக் குதிரையை நல்ல புற்றரைக்கு அழைத்துச் செல்லும்படி காவலன் கட்டளை யிட்டனன். சுற்றிலும் ஜனங்களால் சூழப்பட்ட மிருகம் சற்று நிலத்தை முன் கால்களால் பறித்தது. தன் மேல் ஏற எண்ணிய பாகன்களை ஏறவொட்டாமல்தடுத்து கனைப்பதும், உதைப்பதும் முன்னும்பின்னுமாக நகருவதுமாயிருந்ததே வொழிய ஒருவரையாவது தன் முதுகின் பேரில் உட்கார இடம் கொடுக்கவில்லை. இவ்வித செய்கைகளைக் கண்ட பாகன்களும் அண்டையில் நெருங்க அஞ்சினர். "சுத்த முரட்டு மிருகம் போல் தோன்றுகிறது; இதை நடத்திச் செல்லுங்கள்" என மொழிந்த மன்னன் கட்டளையைக் கேள்வியுற்ற இளவரசனான, அலக்ஸாண்டர் (Alexander) "ஆகா! என்ன காரியம் செய்கின்றனர். இவ்வளவு நேர்த்தியான மிருகத்தை அடக்கிப் பழக்கத்திறமையும் பொறுமையுமின்றி விட்டுவிடுகின்றார்களே." எனச் செப்பினன்.

இவ்வார்த்தைகளைச் செவியுற்ற காவலன் பொறுக்கவொணாது "அருமைக் கண்மணி! உன்னிலும் வயதிலும் பயிற்சியிலும், புத்தியிலும் மேன்மை பெற்ற பெரியோர்களால் அடக்க முடியாத மிருகத்தை வசப்படுத்தும் சமர்த்தன் போலல்லவோ பிறரை நிந்திக்கின்றனை.

திறமை உண்டெனின் உடனே காட்டு; பிறர்மேல் குற்றம் சாட்டுவது மிகவும் கொடியது," எனக்கழறவே, சிறுவன் "அதற்குத்தடையென்ன" எனவே, மன்னன் வெகுண்டு விளித்துக் கூறுவான், நீசொல்லியபடி செய்

யாவிடில் உனக்குத்தக்க தண்டனை கிடைப்பதுடன், குதிரையின் விலையையும் கொடுக்கநேரிடும்."

இளவரசு இதற்குச் சம்மதித்ததை நோக்கி ஜனங்கள் குலுங்க நகைக்க, சிறுவன் குதிரையை அணுகி அம்மிருகத்தை மேல் புறமிருந்து கீழ் புறம் நோக்கும்படிசெய்து மெள்ள அதன் முதுகைத் தட்டி சாந்தப்படுத்தி மேல்ஏறி சவாரி செய்யத் துடங்கினன். அதுவரை தன் நிழலையே நோக்கி வெறுண்டமிருகம் சூரியனை நோக்கியவுடன் தெளிவுற்று விரைவாகச் செல்லலுற்றது.

குடிகள் கண்குளிர ஆனந்தித்து வாலிபன் கண்ணிற்கு மறையும்வரை நோக்கினார்கள். சற்றுநேரத்துக்கெல்லாம் வாலிபன் கம்பீரமாய் அசுவத்தை நடத்திக் கொண்டு க்ஷேமமாய் வருவதைக் கண்டு ஆச்சரியமுற்றனர். பிலிப் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகத்தன் மகனைத் தழுவி முத்தமிட்டுக் கூறுவான். "கண்ணே! உன் சாமர்த்தியத்திற்கு மெச்சினேன். நம் தேசம் உனக்கு மிகவும் சிறியது, இதைவிட்டு வெளிச்சென்று வேறுநாடுகளை ஜெயித்துவா."

இவ்வாலிபன் தான் பிற்பாடு கிரீஸ் தேசமிருந்து இந்தியா வரையுள்ள நாடுகளை ஜெயித்து மகா அலெக்ஸாண்டர் என்ற பட்டம் பெற்றவன். மேற்கூறிய வரலாற்றில் அநேகரால் செய்ய முடியாத ஒரு செயலை அலெக்ஸாண்டர் எவ்வாறு முடித்தனர்? இளவரசு குதிரையை அடக்கி வசப்படுத்தினர். அது அவர் சுவாதீனத்திலிருந்து அவர் கட்டளைப்படி நடந்துகொண்டது—இவ்விதமே பலவித பிராணிகளை அடக்கி வசப்படுத்துவதை அநேகர் ஸர்கிஸ்களில் காண்கலாம்.

மிருகங்கள்தானோ? மற்று எவ்வித பிராணிகளையும் யந்திரங்களையும் அடக்கமுயற்சியுண்டெனில் எளிதில் பழக்கலாம். ஒரு வாலிபன் அற்பமான இருப்பு உருளையை வைத்து ஒருசிறு கழியால் அதை ஓடும்படி செய்து கீழே விழாமல் பார்த்துக் கொள்ளுகிறான். துவிச்சக்கரவண்டியில் (Bicycle) ஏறி மனம்போல் திரும்பவும் அதிவேகமாக நடத்தியும் பிற்பாடு சற்றுமெதுவாயும் செலுத்தி சவாரிசெய்யும் ஒருவனை சமர்த்தனென்கிறோம். அதில் தேர்ந்தவன் அவன்தான் என்கிறார்கள். அதுவன்றி, ஒருகுன்றின் செங்குத்தான சாறலில் தலைகத்திரிக்கும்படி சவாரிசெய்வோன் யந்திரத்தை அடக்க அசக்தனாகி விடுகின்றான். இவ்விதமே ஒவ்வொரு யந்திரத்தையும் சரிவர நடத்தத் திறமை வேண்டும். "நீராவிபோகும் போக்கில்விடாமல் யாவருக்கும் பயன்படும்படி திருப்புவதினால்தான் ரயில் வண்டியின் உபயோகம் காண்கிறோம்.

ஒரு மளிகையிற் செல்லலாம். அங்கு நடக்கும் செய்கைகளை நோக்குவோம். அதோ ஒரு வியாபாரி துணிகளை வரிசை வரிசையாக அடுக்கு



கிறான். சிலர் அவைகளை எடுத்து பாங்காக வைக்கிறார்கள். வேறு சிலர் துணிகளை விற்பனை செய்கிறார்கள். மற்றுசிலர் சாமான்களைக் கொண்டுபோய் பாதையில் நிற்கும் வண்டிகளில் வைக்கிறார்கள். இதன் மத்தியில் அநேகர் நேசவுச் சாலைகளிலிருந்து கைவண்டிகளில் கொணர்ந்த மூட்டைகளை இறக்குகிறார்கள்; அப்பொழுதுதான் வெவ்வேறிடங்களிலிருந்து சாமான்கள் தேவையென கடிதங்களும் தந்திகளும் வந்து சேருகின்றன. குமாஸ்தாக்கள் புஸ்தகங்களில் பதிவுசெய்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் இவ்விதம் செய்யும்படியும் இவர்கள் செய்வதைத் தணிக்கை செய்ய வரும் யார்? அதோபார், கண்ணிற்குக் கண்ணாடிபோட்டுக்கொண்டு இவைகளின் மத்தியில் நீண்ட சொக்காய் போடுவதினால் பருத்து உருண்டையான வயிற்றை மூடிக்கொண்டு கடிதங்களை சிலரிடம் கொடுப்பதும், கையெழுத்து சிலவற்றில் நாட்டுவதும், கட்டளை சிலருக்குக் கொடுப்பதுமாக இருக்கும் பெரியவரே எஜமானன். இக்காரியங்களை அடக்கி ஆளுபவர் அவர் ஒருவரே.

இதுநிற்க ஒரு சைந்நியத்தைக் கவனிப்போம். பெரிய மைதானத்தின் மத்தியில் நிற்கும் ஒருகோட்டையைச் சுற்றிலும் வளைந்து நிற்கும் வீரர்கள் என்ன செய்கிறார்கள்? சற்று ஓடுகிறார்கள்; திடீரென்று ஸ்தம்பம் போல் நிற்கிறார்கள்; பிற்பாடு துபாக்கிகளை எடுத்து வெடிக்கிறார்கள். பிறகு முதுகுகாட்டி ஓடுகிறார்கள்.

இவர்கள் செயல்களை உற்று நோக்குபவன்போல தன் கைகளைப் பின்புறமாக கட்டிவைத்து குனிந்து நோக்குகிறான் ஒருவன். அவனே தலைவன். அத்தளகர்த்தன் தான், இவர்களுக்கு கட்டளையிடுகிறான். அவன் வாக்கினின்று வரும் எவ்வித உத்திரவும் வேதவாக்கெனவே எண்ணி படைமுழுவதும் நடந்துகொள்ளவேண்டும்.

கடலோரம் சென்று துறைமுகங்களை பார்த்தவர்கள் கப்பல்களின் விவரம் நன்கு அறிவார்; கப்பல் யாத்திரையோ மிகவும் இன்பகரமாயும் நேர்த்தியாயுமிருக்கும். தரையில் புகைவண்டி ஓடுவது போலவே தண்ணீரில் புகை கப்பல் ஓடும். ஒரு மாலுமி கப்பலை துறைமுகத்தில் நிறுத்தி ஜனங்களையும் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு சமுத்திரத்தில் யாதொரு அபாயமுமின்றிச் செலுத்திச் சேரவேண்டிய இடம் கொண்டு போவதில் சமர்த்தன். இவ்விதம் பலவற்றை அடக்கி ஆளத்திறமை வேண்டும்.

ஆனால் ஒரு குடிகாரனோ, சாயங்காலவேளையில் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டு கடைசியில் சாலையோரம் ஒரு குழியில் விழுகிறான். ஆகா! என்ன அநீதை! அநேகர் அநேகவித யந்திரங்களையும், பிராணிகளையும் அடக்கி ஆளும் திறமை பெற்றிருந்தும் இக் குடிகாரன் தன்னைத்தான் ஆளும் திறமை பெறாமல் போனதென்னோ? மேற்கூறியவற்றில்

எது நல்லது?—ஒரு சைன்னியம் தன் சொற்படி நடத்துவதா, அல்லது. ஒருவன் தன்னைத்தான் அடக்கிக்கொள்வதா:—இரண்டாவதே மேன்மை.

சந்திரா, வி.

## மிருகமும் அழகியும்: 2.

279வது பக்கத்தொடர்ச்சி.

வியாபாரி தான் நாயையோ அல்லது பூனையையோ சந்திப்பானென் றும் அதைத்தான் அனுப்ப வேண்டி வருமென்றும் நினைத்துக் கொண்டு சம்மதித்தான். உடனே அந்த ம்ருகம் இவனுக்கு சில வெகுமதிகளைக் கொடுத்து இவனை அனுப்பிவிட்டது.

இவன் வீட்டுக்குப்போன பொழுது இவனைச் சந்திக்க அழகியைத் தவிர யார் குதித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் வருவார்கள்? அழகி வந்தவுடன் அந்த ஏழை வியாபாரியின் ஹிருதயம் படபடவென்று அடித் தது. விசனமுண்டானது. ஏனெனில் ம்ருகத்துக்கு இவன் செய்த வாக்கு றுதி இவன் நினைவுக்கு வந்தது. எனது ப்ரியமுள்ள குழந்தாய், உனக்கு வேண்டிய ரோஜா புஷ்பங்களிருக்கின்றன; ஆனால் அவைகள் உனது பரி தாபமான தகப்பனாரின் உயிருக்கு ஈடாக கிடைத்தன என்றான். பின்பு அந்த ம்ருகத்தைப் பற்றி முழு விவரத்தை அவர் அவர்களுக்குச் சொன் னார்.

இரண்டு தமக்கைகள் அழகியைப் பார்த்து கோபத்துடன் அது அவ ளது குற்றம்தான்: அவள்தான் தங்களது தகப்பனாரின் மரணத்திற்கு உரியவள், என்று சொன்னார்கள். ஏனெனில் மூன்று மாதத்திற்குள் அவர் அந்த ம்ருகத்தினிடத்திற்குத் திரும்பிப் போக இப்பொழுது நிச்சயம் செய்து விட்டார். ஆனால் அழகி 'இல்லை' நான் எனது தகப்பனாரை அவ் விதம்செய்ய விடேன். அவர்செய்த உறுதியை அவர்சொல்லியபடி நானே அந்த ம்ருகத்தினிடத்திற்குப்போகிறேன், என தைரியமாகச்சொன்னாள். அவளுடைய தகப்பனார் தன் அன்புள்ள புத்ரி சொன்னதைக் கேட்டு அவளைப் போகக்கூடாதென கேட்டுக் கொண்டார். ஆனால் அழகி மன உறுதியுடனிருந்தாள். என்ன சொல்லியும் அழகி கேட்கவில்லை. கடைசி யாக அவளை அந்த மிருகம் இருக்கும் இடத்திற்கு இட்டுக்கொண்டு போக ஒத்துக்கொண்டார். இப்படி. ஒத்துக்கொண்டது அவருக்கு இஷ்டமேயி ல்லை. மிகவும் விசனப்படுவதாக பாசாங்கு செய்த அந்த இரண்டு தமக்கை கள் தாங்கள் உண்மையாகவே எல்லாரையும் நம்பும்படி செய்ய தங்கள் கண்களில் வெங்காயத்தைப் பிழிந்துகொண்டு அழுதார்கள். வாஸ்தவத் தில் அவள் தொலைந்தால்போதும் என்று உள்ளுக்குள்ளே சந்தோஷமாயி ருந்தார்கள்.



மூன்று மாதங்கள் ஆவதற்கு முன் அழகியும் அவள் தகப்பனாரும் ம்ருகத்தினுடைய அரண் மனைக்குப் போனார்கள். அங்கு வர்த்தகன் தன் மகளுடன் போனதும் முன்போல ஒவ்வொருவஸ்துவு மிருப்பதைக்கண் டான். தாங்கள் ஏறிவந்த குதிரைகளை லாயங்களில் கட்டிவிட்டு போஜன சாலைக்குப் போனார்கள். அங்கு திவ்யமான ஆகாரம் முதலியவைகள் தயா ராயிருப்பதைக்கண்டு ஆநந்தித்தார்கள். உடனே இருவரும் உட்கார்ந்து சாப்பாடு சாப்பிட்டார்கள். அவர்கள்போஜனம் உண்டார்களோ இல்லையோ ஒரு பெருத்தசப்தத்தைக் கேட்டார்கள். ம்ருகம் உள்ளேமெதுவாக நடந் துவந்தது. அழகியை உற்றுப்பார்த்து 'அழகியே! நீ உன் இஷ்டப்படியே இங்கு வந்தாயா, வென்று கேட்டது.

அழகி "ஆம் அவ்விதமே வந்திருக்கிறேன்" என்றாள்.

பின்பு அந்த ம்ருகம் அவர்களுக்கு வந்தனம் அளித்து விட்டு 'வியா பாரியே, மறுநாள் காலையில் உன் ஊருக்குத்திரும்பிப்போ? பின்னிட்டு ஒருபோதும் திரும்பி இங்கு வராதே" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டுபோயிற்று.



ம்ருகம் சென்றவுடன் இவர்கள் படுத்துதூங்க அறைகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அப்பொழுது ஒரு அறையின் கதவில் இது அழகியினுடைய அறை என்று எழுதப்பட்டிருந்தது. இதைப்பார்த்து ஆச்சரியமடைந் தாள். அதனுள் சென்றாள். அதில் நேர்த்தியான சாமான்களிருந்தன.

மேலும் ஒரு நேர்த்தியான வீணையும் சிறந்த, புஸ்தகங்களு மிருந்தன. அழகி இந்த அறையில் படுத்து நித்திரை செய்தாள். வியாபாரி மற் றொரு அறையில் படுத்துக்கொண்டாரே தவிர, பயத்தால் தூங்கவில்லை.

ஆனால் அழகி ஒருகனவு கண்டாள். இவள் தூங்கும்பொழுது இவள் முன்ஒரு நல்லதேவதை தோன்றி' நான் உன்னைக்கண்டு அதிக சந்தோஷமடைந்தேன. நான் உன்னைக்காப்பாற்றுகிறேன், உனக்கு இந்த அரண்மனையில் யாதொரு தீங்கும் செய்யேன்' என்று சொன்னதாகக் கனவு கண்டாள்.

மறுநாள் காலையில் அழகி தன்தகப்பனை வழியனுப்பிவிட்டு தனது அறைக்கு விசனத்துடன் திரும்பிப்போனாள். அவற்றில் ஒருபெரிய கண்ணாடி மாட்டியிருப்பதைக் கண்டாள். அதுமாயா விநோதக்கண்ணாடி. அதைஅவள் பார்க்கும் பொழுதெல்லாம், அவள் பார்க்க விரும்புவதையெல்லாம் அதில்கண்டாள். இச்சங்கதி அவளுக்கு முன்தெரியாது. அதை இப்பொழுது பார்த்தாள். தன்தகப்பனர் குதிரைமேலேறி சவாரி செய்துகொண்டு வீட்டைநோக்கிப் போவதையும் அவரைச் சந்திக்க தனது இரு சகோதரிகளும் வெளியே வந்ததையும் கண்டாள்.



இப்படத்தில் அழகி கண்ணாடியைப் பார்ப்பதைப்பாருங்கள்.

அழகி பின்புபகல்போஜனம் பண்ண மெத்தையிலிருந்து கீழே இறங்கி வந்தாள். சாப்பிட உட்கார்ந்தாள். அறுசுவையோடு கூடிய பதார்த்தங்களிருந்தன. இவளுக்குத் தோன்றாத வாத்தியக்காரன் திவ்யமான வாத்யம் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டே புசித்தாள்.

'ஆ! ஆ!! அது எவ்வளவு நேர்த்தியான ம்ருகமாயிருக்க வேண்டும்!!' என்று தனக்குள் அழகி நினைத்துக்கொண்டாள்.

சாயங்காலத்தில் ஒரு பயங்கரமான சப்தம் இவள் காதில் விழுந்தது. உடனே அந்த ம்ருகம் உள்ளே வந்தது. அழகி பயத்தால் நடுங்கினாள்.



ஆனால் அந்த ம்ருகம் அவளைப்பார்த்து 'நீ பயப்படாதே, நீ உன்னிஷ்டப்படி உனக்கு வேண்டியதைச் செய்துகொள். மேலும் உன் மனம் போல் நட" என்றது.

மறுபடியும் "அழகியே, நான் அவலக்ஷணமாக இருக்கிறேன் என்று நினைக்கிறாயா" வென்று ம்ருகம் கேட்டது. அழகி எப்பொழுதும் உண்மை பேசுபவள். ஒருவருக்கும் பயப்படாமல் நிசத்தையே பேசுவாள்; ஆகையால் ம்ருகம் இப்படி இவளைக் கேட்டபொழுதுதான் பேசும் வார்த்தை அதற்கு மனவருத்த முண்டாகாமலிருக்க, அழகி அன்பாகவும் மெதுவாகவும் "ஆம், ம்ருகமே" மிகவும் புத்தியில்லாத ஜனங்கள் அதை அறிவதும் கஷ்டமென்று சொன்னாள்.

அந்த ம்ருகம் இவள் சொன்னதைக்கேட்டு மகிழ்ந்தது. பின்பு 'நீ மிகவும் பக்ஷமாயிருக்கிறாய், அழகியே நீ என்னை மணம் புரிவாயா' என்று மரியாதையாகக்கேட்டது. இப்படிக்கேட்டது இதனுடைய மூடத்தனத்தைக் காண்பிக்கின்றதல்லவா?



'ம்ருகமே, நான் உன்னை கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்' என்றாள். உடனே ம்ருகம் விசனமான பார்வையுடன் திரும்பிப் போய்விட்டது.

அழகி அநேக வாரங்கள் அந்த ம்ருகத்தினுடைய அரண்மனையில் வசித்து வந்தாள். ஒவ்வொரு ராத்திரியிலும் அந்த ம்ருகம் இவளைப் பார்க்கவரும். பார்த்தபின் திரும்பிப்போகுமுன் 'அழகியே, என்னை மணம் புரிவாயா'! வென்று கேட்கும். அழகி ம்ருகமே, நான் உன்னை விவாகம் செய்துகொள்ளமாட்டேன் என்று சொல்லுவாள்.



## ஜப்பானில் பூகம்பமும், எரிமலை குழப்பமும்

ககோஷிமாவில் எரிமலைசமாச்சாரம் தெரிந்தவுடன் இரண்டுகூட்டம்கப்பல்கள் அந்த இடத்துக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் அனுப்பிய கம்பியில்லாத் தந்தி சமாச்சாரத்திலிருந்து இந்த பூகம்பத்தால் உயிர்ச்சேதம் நேர்ந்திருப்பதுபோல் ஒருநாளும் இதற்குமுன் நேர்ந்ததில்லை எனத்தெரிகிறது. மூன்று கிராமங்களில் ஒரு ஜீவன்கூட தப்பவில்லை. எரிமலையிலிருந்து வெளிப்பட்டு கொதிக்கும் கற்கள் விழுந்துகொண்டே இருந்தன. ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு உதவப்போனவர்கள் எந்தகஷ்டத்தையும் பொருட்படுத்தாது பிரயாசைப்பட்டார்கள். பூமி அதிர்வது நின்றுபோய் விட்டது. ஆனால் உள்ளிருந்து சிலதினம் சத்தம் மாத்திரம் உண்டாய்க்கொண்டிருந்தது. இந்த சமயத்தில் புயல்காற்றும் அடித்தது. ககோஷிமா என்ற பட்டணத்தில் 15 அடி உயரத்துக்கு சாம்பல் பாவியிருக்கிறது. பந்தோபஸ்தான இடம் ஒன்றைப்போய் அடையும்பொருட்டு நீந்திக்கொண்டிருக்கையில் மூழ்கிப் போனவர்கள் கணக்கில்லாதவர்கள். இன்னும் அநேகர் எரிமலையிலிருந்து வெளிப்பட்ட விஷக்காற்றுகளால் திக்கு முக்காடி மாண்டு போயினர்,

கடல் இன்னொரு தடவை பொங்க ஆரம்பிக்கவே, பூமி அதிர்வதும் எரிமலை பொங்குவதும் முன்போல் மறுபடியும் உண்டாய் விட்டன. ஸகுராஷிமா தீவிலுள்ள எரிமலை நாலு பக்கத்திலும் நெருப்பைக் கக்கின வண்ணமாயிருந்தது. ரயில்வே கட்டடங்களும் ரோட்டுகளும் பாழாய்விட்டன. 70-ஆயிரம் ஜனங்கள் போனவிடம் தெரியவில்லை,

ஸகுராஷிமாவிலிருந்து தப்பி முதல் முதல் டோக்யோ வந்து சேர்ந்த மனிதன் சொல்லி முடியாத கஷ்டங்கள் அங்கு உண்டாய் முடிவாக எரிமலையும் பொங்க ஆரம்பித்ததாகச் சொன்னான். எரிமலையிலிருந்து வெளிப்பட்டு உயரச்சென்று நெருப்புமழை சொரிவது போல் ஜ்வொலிக்கும் பதார்த்தங்கள் கீழே விழுந்ததைப் பார்க்க பயமாயிருந்ததாம். ஜெப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேர்ந்த காலத்தில் போர்ட் ஆர்தர் என்ற துறை முகத்தை வளைத்துக்கொண்டு பீரங்கிகளைச்சுட்டது எவ்வளவு பயங்கரமா யிருந்ததோ, அதைக்காட்டிலும் அதிக பயங்கரமாக பூமிக்குள் அதிர்ச்சி உண்டான சத்த மிருந்தது.

ஸகுராஷிமாத்தீவில் இருந்தவர்களில் 70,00. ஜனங்கள் காணமற் போய்விட்



டார்களென்றும், லட்சம் ஜனங்கள் வீடற்றுப் போய்விட்டார்களென்றும் தெரிகிறது.

ஸகுராஷிமாவில் எரிமலையிலிருந்து வெளிப்பட்ட தணல்களின் சாம்பல் காற்றால் அடித்துக்கொண்டுவரப்பட்டு டோக்கியோ நகரில் வந்து விழுகின்றது. ஜெப்பான் முழுமையிலுமே எரிமலைகள் சுறுசுறுப்பா யிருக்கின்றன. ஆயினும் ஸகுராஷிமா எரிமலை வழியாகக் கொதிப்பெல்லாம் வெளிப்பட்டு விட்டபடியால், மற்ற எரிமலைகளி லிருந்து எரிகுழம்பு வெளிப்படாம லிருக்குமென்று தெரிகிறது.

---

## பத்திராதிபர் குறிப்பு.

சென்றமாசம் 18-உ சாயங்காலம் பம்பாய் கவர்னர் நமது தேசா
பிமானியாகிய தாதாபாய் நௌரோஜியைப் போய்ப் பார்த்தாராம். தாதாபா
யின் புத்திரியும், மருமகனும் கவர்னரை வரவேற்றார்கள். கவர்னர் அறை
மணி நேரம் நமது தாதாபாயினிடம் பேசிவிட்டு தமது மாளிகைக்குச் சென்
றாராம்.

லேடி ஹார்டிஞ்ச் பேஹாருக்குச் சென்றபோது அங்குள்ள ஜமீன்
தார்கள் பங்கிப்பூரில் லேடி ஹார்டிஞ்சு சிலை யொன்றை வைக்க எண்ணி
யிருப்பதாக தெரிவித்தார்களாம். அப்பொழுது லேடி ஹார்டிஞ்ச் அப்
படிச் செய்வதைவிட ஸதிரீகளுக்கு ஒரு ஆஸ்பத்திரியை கட்டிவைத்தால்
அது அதிக லாபகரமா யிருக்குமென்பது தமது விருப்பம் என்று தெரி
வித்தார்களாம். கல்கட்டா கார்பொரேஷனைச் சேர்ந்தவர்கள் விலையுயர்ந்த
ஆபரணங்களை வெகுமதியாக யளிக்க எண்ணியபோதும் சில முக்கிய தர்ம
கைங்கரியங்களுக்கு திரவியத்தை செலவிட்டால் அதிக உபயோகமாயிருக்
குமென்று சொன்னார்களாம். இவ்வித நற்குணமும், பரோபகார சிந்தை
யுமுள்ள லேடி ஹார்டிஞ்சை யார்தான் புகழமாட்டார்கள்?

ஐதராபாத்திலுள்ள ஜனானா ஹைஸ்கூலிலுள்ள மாணவிகளுக்கு
சென்றமீ கடைசியில் வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. அச்சமயம் அப்
பாடசாலையின் லேடிப்ரின்ஸ் பால் மிஸ் A. E. இவான்ஸ் ரிபோர்டை
வாசித்தார்கள். இப்பொழுது 122 பெண்மணிகள் அதில் படித்து வரு
கிறார்களாம். இரு பெண்மணிகள் ஸ்கூல் பைனல் பரிக்ஷைக்குச் சென்ற
தில் ஒருவள் அதிக மார்க்கு அடைந்திருக்கிறாளாம். அப்பெண்மணி
சென்னையில் காலேஜியில் படித்து வருகிறாளாம். இருவர் மிடில் ஸ்கூல்பரி
க்ஷைக்குச் சென்று அவர்களிருவரும் பரிக்ஷையில் தேறினார்களாம்.
இப்பாடசாலையில் கீழ்வகுப்பிலிருந்து படித்து ஸ்கூல்பைனல் 1911ம்
வருஷத்தில் தேறிய ஜப்ளி. பீகம் இவ்வருஷம் இப்பாடசாலைக்கு காரியதரிசி
யாகநியமிக்கப்பட்டிருக்கிறாளாம். அம்மாது தம்வேலையைத் திருப்திகரமாய்
செய்து வருவதும் சந்தோஷத்தையுண்டாக்குகிறது. ஹசேன் ஸக்கா

தோட்டத்திற்கு சமீபத்தில் இப்பாடசாலை விஸ்தாரமாய் கட்ட நைஸாம் அவர்கள் ரூ 39000 அளித்திருக்கிறார்களாம். சின்டரல்லா என்ற நாடகம் சில பெண்மணிகளால் நடிக்கப்பட்டன. மிஸஸ் பென்ஹி 50 வெகுமதிகளைக் கொடுத்தபின், கூட்டம் கலைந்தது.

கொச்சிதேசத்து ராஜா அவர்கள் தாம் அரசுபுரிவதை விட்டு விலகி தமது வாழ்நாளை கடவுளைத்துதி செய்வதில் செலவழிக்கப் போகிறாரென தெரிவருகிறது. இவர்சம்ஸ்கிருதத்தில் மிக்கபாண்டித்யமுள்ளவர். கண்ணியம், பெருந்தன்மை, திடமாய் பேசுதல், ஜனங்களின் நன்மையைக் கோரும் சுபாவம் முதலிய நற்குணம் வாய்ந்தவரென்று அங்குள்ளோருக்குத் தெரிந்த விஷயம். இவருக்கு இப்பொழுது வயது 60. இப்பொழுது இவர்குமாரர் பட்டத்துக்கு வருவாராம். இவருக்கு இங்கிலீஷும், சம்ஸ்க்ருதமும் நன்றாகத்தெரியும். ஆகையால் இவரும் இவர் தகப்பனாரைப்போல் ராஜ்யத்தை அரசு புரிந்து நற்பெயர் அடைவாரென்று நம்புகிறோம்.

காரச்சியில் சென்ற டிசம்பர்மாதக்சடைசியில் காங்கிரஸ் மகாசபை கூடிற்று. நமது சென்னையிலுள்ள நவாப் ஸையத மகமது ப்ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டது நமக்கு மிகுந்த சந்தோஷமும் கௌரவமுமல்லவா? அவர் தமது ப்ரஸங்கத்தில் முதல் தென்ஆப்ரிகா இந்தியர்கள் படும் கஷ்டங்கள், இலவசமான கட்டாயபடிப்பு, கௌன்ஸில் விஷயம், ஸ்தலஸ்வய ஆட்சிமுதலிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். சென்னையிலிருந்து கனம் டி. வி. சேஷகிரிஐயரவர்களும், கனம் எல். ஏ. கோவிந்தராகவஐயரவர்களும் மிஸ்டர் C. P. ராமசுவாமி ஐயரவர்களுமே சென்றிருந்தார்கள். கல்வித்திறமையும், பணமுமுள்ளகனவான்களில் அநேகர் அஸ்ரத்தையாயிருந்தது மிகவும் விசனிக்கத்தக்கதே. இந்த வருஷத்தில் காங்கிரஸ்கூடியதில் மகமதியர்களும் இந்துக்களும் மனமொத்துவெளிப்படையாக பேசியதே அநேகருக்கு ஆநந்தத்தை விளைவிக்கிறது. இவ்விதமே இருமதஸ்தரும் ஒத்து உழைப்பார்களென்று நம்புகிறோம்.

காரச்சியில் டிசம்பர் மீ 29உ ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸ் கூடிற்று. ராவ்பகதூர் திவான் கௌரவலால்சந்தன்லால் ப்ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். அதில், ஸ்திரீகளுக்குள் எலிமெண்டரி கல்வியும், உயர்தரக்கல்வியும் பரவச் செய்யவேண்டுமென்றும், விதவாவிவாகம் செய்யவேண்டியது அவஸ்யம என்றும், ஜாதிகள் ஒன்றோடொன்று சேரவேண்டுமென்ற தீர்மானங்கள் செய்யப்பட்டன.

தாழ்ந்தஜாதியாரை உயர்த்தவேண்டுமென்ற விஷயமாகவும் ஒரு கூட்டம் காரச்சியில் கூடிற்று. ஜஸ்டிஸ் சந்தாவர்க்கார், ரெவரெண்டு சண்டர்லாண்டு முதலியவர்கள் மனமுருக்கத்துடன் பேசினார்கள். தாழ்ந்த



ஜாதியாரை எத்தேசத்தில் உயர்த்தி நல்லஸ்திதியில் அவர்களை வைக்கிறார்களோ அத்தேசம்தான் நாகரிகமடைந்த தேசமென்றும், அமெரிக்காவில் நிக்ரோஜாதியாரை விருத்திக்குக் கொண்டு வர அமெரிக்கர்கள் முயன்று வருகிறார்களென்றும் ரெவரெண்ட்ஸன்டர்லெண்டு சொன்னார்கள்.

ஆக்ராவில் எல்லா இந்திய மகமதியகல்விகான்பரென்ஸ் கூடியபோது, ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷாடின் ப்ரெஸிடெண்டாயிருந்து மகமதிய யூனிவர் ஸிடி, கைத்தொழில் கல்வி, பெண்கல்வி முதலிய பலவிஷயங்களைப் பற்றி பேசினார். இதேயிடத்தில் எல்லா இந்திய முஸ்லீம் லீக் கூடிற்று. பம்பாயைச் சேர்ந்த ஆனரபில் ஸர் இப்ரகீம் ரஹீம் டோவா ப்ரெஸிடெண்டாக இருந்தார். கான்பூர்மசூதிக் கலகம், பால்கன் யுத்தம், தென்னாப்ரிக்கா இந்தியர்கள் படும் கஷ்டம், கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

வைத்ய விஷயத்தில் உதவிபுரிய ஸ்திரீகள்:—இந்தியாவில் பற்பலபாகங்களில் ஸ்திரீகளுக்கு வைத்தியவிஷயத்தில் உதவிபுரிய 24 ஸ்திரீகளை ட்ப்ரின் பண்டின் ப்ரசிடெண்ட் லேடி ஹார்டிஞ்ச் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். இத்தொகையில் 18 பேர் ஐரோப்பியர்கள், 6 பேர் இந்தியர்கள். ஸ்திரீகளுக்கு வைத்ய காலேஜ் ஒன்று கட்ட ப்ளான் முதலியவைகளைப் போட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடம் டெல்லியில் 57 ஏக்ரா விஸ்தீரணமுடையதாம். இதில் ஆஸ்பத்திரி, காலேஜ், சாப்பிடுமிடம், முதலியவைகளிருக்குமாம். மார்ச்சுமாதம் லேடி ஹார்டிஞ்சு அவர்கள் இதற்கு அஸ்திவாரக் கல்லை வைப்பார்களாம். இப்பண்டிக்கு யாவரும் பண உதவி செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

மைலாப்பூரிலுள்ள லேடீஸ் ரிக்ரியேஷன் க்ளப் பைச்சேர்ந்தவர்கள் வருஷோற்சவத்தைவெகு விமரிசையாக நடத்தினார்கள். அப்பொழுது லேடி பெண்ட்லாண்டு அக்ராசனம் வகித்தார். அநேக இந்தியமாதர்கள் வந்திருந்தார்கள். எல்லாருக்கும் சிற்றுண்டிகளும், தேயிலைத் தண்ணீரும் கொடுக்கப்பட்டன. மிஸ்தராபாய் என்றமாது சில கஸ்ரத்துகளையும், இன்னும் சில அபூர்வமான விஷயங்களையும் காண்பித்தான பிறகு அம்மாதுக்கு லேடிபெண்ட லண்ட் அவர்கள் ஒருபொன் பதக்கத்தையும் லேடி சங்கரநாயர் மற்றொரு பொன்பதக்கத்தையும் அளித்தார்கள். மிஸ்தராபாய் களைத்துப் போனமையால் பதில்பேசமுடியவில்லை. ஆனதுபற்றி அம்மாதின் ஒரு சகோதரி அம்மாது பதில் எழுதிவந்ததைப் படித்தார்கள். அதின் சுருக்கம் "தேகசௌக்கியமும், பலமுமின்றி கல்வியறிவுயிருந்து என்ன பிரயோஜனம்? நமது இந்தியஸ்திரீகள் பலமுள்ளவர்களாகவும் நோயற்றவர்களாகவுமிருப்பார்கள். அவர்களுடைய குழந்தைகளும் அவ்விதமேயிருக்கும். ஆகையால் நீங்கள் இந்தியஸ்திரீகள் தேகாப்பியாச விஷயத்தில் கவனித்து வரும்படி உற்சாகப்படுத்தும்படி தங்களை

வேண்டிக் கொள்ளுகிறேன். தங்களுக்கும் மற்றசகோதரிகளுக்கும் என்னை இவ்விதம் கௌரவப்படுத்தியதற்காக வந்தனம் அளிக்கின்றேன்."

மிஸ் தாராபாய் —மிஸ் தாராபாய் ராஜ புத்திரஸ்திரீ. சிறுவயது முதல் கரடி கஸ்ரத்து முதலியவைகளைச்செய்து இப்பொழுது தம் அபாரமான புஜ பலபராக்கிரமத்தையும் பலவிதமான செயல்களால் சென்னையில் சில நாளாக காட்டிவருகிறார்கள். தலை மயிரில் பெரிய கல்லைக்கட்டித் தூக்குவதும், வில்போல் வளைந்து நின்றுகொண்டு முழங்கால்களின் மேல் ஒரு பெரிய மரக்கட்டையை தூக்கி வைத்துவிட்டு தோள் பட்டைகளின் மேல் ஏறி நிற்கும் பலசாலியான ஒருமனிதனைச் சுமப்பதும், 4 அல்லது 5 ஆட்களேறி உட்கார்ந்து கொண்டிருக்கும் வண்டியை தலைமயிர் நுணியில் கட்டியிழுப்பதும், நடுமுதுகில் ஓர் ஈட்டியின் முனை படும்படியாகவும், தலையும் கால்களும் இரண்டுநாற்காலிகளின்மேல் தாங்கியிருக்கும்படியாகவும் படுத்துகொண்டு மிகப்பளுவான கல்லை மார்பின்மேல் தூக்கிவைத்து இரண்டுபேரை விட்டு அக்கல்லைச் செம்மட்டியால் அடிக்கச் சொல்லிப் பொறுத்துக்கொண்டிருப்பதும், ஆட்களேறிய வண்டியொன்று தன்மேல் ஏறிச்செல்லக் கீழேபடுத்திருப்பதும், ஆட்களேறிய பாரவண்டியை ஓர் ஈட்டியின் கூறிய முனையில் தன் தலையை வைத்துத் தள்ளுவதும், ஈட்டி முனைகளாலாகிய கட்டிலின் மேற்படுத்துக்கொண்டு தன்மார்பின்மேல் கல்லைத் தூக்கிவைத்து செம்மட்டி கொண்டதனை யுடைக்கவும் செய்து வருவது ஆச்சரியத்தை யுண்டாக்குகிறது.

காராச்சியில் ஸ்திரீகளின் கான்பரென்ஸ்.—டிஸம்பர் 30-ந் தேதியோடு" காராச்சியில் காங்கரஸை யொட்டி வழக்கமாய் நடை பெறும் கான்பரென்ஸ்கள் எல்லாம் நடை பெற்று முடிவடைந்தன. அன்றுகடைசியாய் நடந்த கான்பரன்ஸ் ஸ்திரீகளின் கான்பரன்ஸாகும், சுமார் 200 ஸ்திரீகள் சபையில் பிரசன்னமாயிருந்தார்கள். அவர்கள் பற்பல சமூகங்களைச்சேர்ந்தவர்கள். அக்கூட்டத்தில், மிஸஸ் ஹர்தேவபாய் அக்கிராஸனம் வகித்தார். சுமார் மூன்று மணி நேரம் பிரசங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நடை பெற்றன. தாய்மார்கள், எதிர்காலத்தில் தாய்மார்களாகப் போகும் தங்கள் குழந்தைகளுக்குக், கல்வி கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தும் பிரசங்கமொன்றும் அக்கூட்டத்தில் செய்யப்பட்டது. ஆசாரத்திருத்தப் பிரச்னை கஷ்டமின்றித் தீர்க்கப்படுவதற்கு இந்திய ஸ்திரீகளே தகுதியுள்ளவர்களாதலால், அவர்கள், ஆசாரத்திருத்தத்தில் அக்கரை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் பொருட்டும் பண உதவி செய்யவேண்டுமென்று சபையில் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டது. சபையிலிருந்த ஸ்திரீகள் தாராளமாய்ப் பண உதவி செய்தார்களென்றறிகிறோம்".



இன்னும் இதன் முழுவிவரம் நமக்கு எட்டவில்லை, எட்டியவுடன் அவைகளின் சாராம்சம் பிரசுரிக்கப்படும்.

சென்னையில் ஆகாய சஞ்சாரம்:—சென்னை கார்பொரேஷன் ஸ்பெஷல் என்ஜினீரான மிஸ்டர் மாட்லி இம்மாசம் 12உ இச்சென்னையில் ஆகாயவிமானத்தை நடத்திக் காண்பித்தார். முதலில் சைதாப்பேட்டையில், அவர் விமானத்தில் ஏறி ஆகாயத்தில் கிளம்பினர். வெகு சீக்கிரத்தில் சுமார் 700 அடி உயரத்தில் சென்று அங்கிருந்து பல திசைகளிலும் விமானத்தை நடத்தினர். பல விடங்களிலும் ஜனங்கள் கூட்டமாய் நின்று ஆகாய விமானம் பறந்து செல்வதைப்பார்த்தார்கள். சுமார் 30நிமிஷம் மிஸ்டர் மாட்லி ககன சஞ்சாரஞ் செய்தார். அதற்குள் அவர் யாத்திரை செய்திருக்கும் விஸ்தீரணம் 25மைல் எனக்கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவர் இவ்விதம் இன்னொரு சமயம் ஆகாய விமானத்தை விட்டுகாண்பிக்கப் போகிறாராம்.

மிஸ்டர் ரபீந்த்ரநாத் தாகூரின் நன் கோடை:—மிஸ்டர் ரபீந்தா நாத் தாகூர் ◦ தமக்குத் கிடைத்த நோபெல் வெகுமதியை, போல்பூர் ஸ்கூலுக்கு விநியோகஞ் செய்து விடுவதாகத் தீர்மானித்திருக்கிறார். போல் பூர் ஸ்கூல் 12 வருஷங்களுக்கு முந்தி மிஸ்டர் ரபீந்தர்நாத் தாகூரால் ஸ்தாபிக்கப்பட்டது. ரபீந்தர நாத் தாகூருக்கு சிறிய வயதில் ஸ்கூலுக் குப்போவ தென்றால் பயம். அங்கவ்வளவு வருத்தம் உண்டாகும். ஸ்கூலுக்குப் போகாமலிருப்பதற்காக அவர் தம் பூட்ஸுகளை ஜலத்தில் நனைத்து அதை உபயோகப்படுத்திக் கொண்டு ஜ்வரத்தை வலுவில் வரவழைத் துக் கொள்வது வழக்கமாயிருந்ததாம். போல் பூரிலுள்ள குழந்தைகளுக்குச் சகல விதத்திலும் சௌகரியமா யிருந்து, ஸ்கூலுக்குப் போவதில் அவர்களுக்குப் பிரியத்தை யுண்டு பண்ணி, அவர்களை படிப்பில் முன்னுக்குக்கொண்டு வருவதற்காகவே அவர் அந்த ஸ்கூலை ஸ்தாபித்திருக்கிறார்.

திருவாங்கூர் கவர்ன்மெண்டின் பட்சபாதமற்ற தீர்மானம்:—திருவாங்கூர் சமஸ்தானத்து மகாராஜா காலேஜில் ப்ரொபெஸர்களாக இருக்கும் இந்தியர்களின் சம்பள விஷயத்தில் அந்தக் கவர்ன்மெண்டார் பாரபட்சமில்லாத முடிவு அபிப்பிராயங்கொண்டிருப்பதைக்கேட்டு சந்தோஷப்படுகிறோம். மகாராஜா காலேஜில் 4-ஐரோப்பிய ஆபீஸர்களும் 3 இந்திய ஆபீஸர்களும் வேலைபார்த்து வருகிறார்கள். இங்கிலீஷ், பிஸிக்ஸ், அண்ட் கெமிஸ்ட்ரி, ப்ரொபஸர்கள் ஐரோப்பியர்கள். அவர்களின் சம்பளம் 400 ரூபாயிலிருந்து ஆரம்பித்து 700 ரூபா வரையில் உயர்கிறது.◦ வருஷாவருஷம் 50 ரூபாய் ப்ரொமோஷன் கொடுக்கப்படுகிறது. ஸமஸ்கிருதம், த்ராவிட பாஷைகள், கணிதசாஸ்திரம், சரித்திரம், ஆகிய இவைகளைப்போதிக்கும் ப்ரொபெஸர்கள் இந்தியஆபிஸர்கள். அவர்களின் சம்பளம் 350 ரூபா

யிலிருந்து ஆரம்பித்து, 450 ரூபாய் வரையில் உயர்கிறது. வருஷா வருஷம் 20 ரூபாய் ப்ரோமோஷன் கொடுக்கப்படுகிறது. சம்பள விஷயத்தில் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அடியோடுதொலைத்துவிட வேண்டுமென்று கவன்மெண்டார் யோசனைசெய்து அப்படியே அந்த வித்தியாசத்தைத் தொலைத்து விட்டார்கள். இந்திய ப்ரோபெஸர்களான மெஸ்ஸர்ஸ் A. R. ராஜா ராஜ வர்மா, R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் K. V. ரங்கசாமி அய்யங்கார் இம்மூவரும் ரூபா 400 சம்பளத்தில் ஆரம்பித்து 750 ரூபா வரையிலும் உயர்த்தப்படுவார்கள்.

உலகத்தைச்சுற்றி ஆகாய சஞ்சாரம்:—வெட்ரினெஸ் என்ற ஆகாய சஞ்சாரி உலகத்தைச் சுற்றி ஆகாயமார்க்கமாகவே செல்லத் தீர்மானித்து ஈஜிப்ட் தேசத்திலுள்ள கெய்ரோ நகருக்கு வந்து ஜனவரிமீ 1௳ சேர்ந்திருக்கிறார். கெய்ரோவிலிருந்து தென் ஆபிரிக்காவின் தெற்குக் கோடியாகிய நம்பிக்கை முனைக்கு ஆகாய மார்க்கமாக சஞ்சாரம் செய்யும்படி ஆகாய சஞ்சார சங்கம் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. நீல நதிப் பிரதேசம், உகாண்டா, மொம்பாஸா, ஸான்ஸிபார், முதலிய பல நாடுகளைக் கடந்து அவர் செல்லவேண்டியிருக்கும்.

ஜெருஸலத்தில் பிரமை:—(ஆசியாத்துரிக்கியிலுள்ள) ஜெருஸலம் என்றபட்டணத்துக்கு ஒரு ஆகாய சஞ்சாரி ஆகாய விமானத்தில் ஜனவரி 1௳ வந்துசேர இந்த அதிசயத்தை இதற்குமுன் ஜனங்கள் கண்டறியாதவர்களாகையால், கூட்டங்கூடி பிரமித்து நின்றார்கள்.

---

**E. LAKHRAJ & CO.,**

Bombay Merchants, Madras Fancy Embroiderers, Artistic Jewellers, Gold and Silver-smiths and direct Importers of Cashmere PUTTOO Cloth, RAMPORE CHADORS, Shawls, Indian, Chinese and Japanese, SILK, Cotton, Woollen Linen Piece Goods and Metal Wares, Persian and Indian Carpets and Curios of all Descriptions. We invite you to call and see the large up-to-date selection of Goods we have to offer you in all departments suitable for Christmas, Wedding and Birthday presents. Ladies and Gents are earnestly requested to patronize us by their esteemed visits to our Show Rooms.

JAPAN HALL, 181, MOUNT ROAD, MADRAS.

**Our Calismans: high Quality and Low Price.**

---

**JUST THE THING YOU WANT. ONE PACKET PRESS WITH THE FOLLOWING LETTER ATTACHE CASE**

**Most Strong**! **Most Useful** !! **Most Elegant** !!!

Made of solid ebonised highly polished case Mahagony color size 9 x6x4 containing



3 trays fcr the following 10 Presents. (1) Newly Indented ever ready pen, Positive Froof against leakage as clean as pencil In use can be refilled with any ink A nib. (2) I Well Sharpened bone Handled pen knife. (3) 1 Doz Parchment Letter-paper (4) 1 Doz. Post Card. (5) 1 Doz. Envelope (Both ivory Finish) (6) 1 Sheet Blotting. (7) 1 Packet Pin. (8) 1 Free saving guide. (9) 1 Complite Letterwriter. (10t 1 Packet press for Printing Letter Heading Price With all the Presente Rs. 2-8-0. on Post free.

*Apply to* **S. Seal & Co., 17. T. Z. Kapalee Tola,**

*Calcatta.*

REGISTRAR OF BOOKS. 2 MAR 1914 MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

| Vol XVI] புத்தகம் கசு. | Madras: February 1914. சென்னை: பிப்ரவரி 1914. | No. 2 இலக்கம். 2 |
|---|---|---|

## AFFECTION OF FATHER.
## பிதாவின் அன்பு.

பிதாவின் அன்பு பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தெரியும். பிதா
தன்புத்திரிபுத்திரன் முதலியவர்களை அன்புடன் காப்பாற்றி அவர்களுக்கு
கல்வியும் போதித்து வர ஏற்பாடும் செய்கிறார். சில தகப்பனார் தன் புத்
திரர்கள் மாத்திரம் கல்வியில்தேறினால்போதும், பெண்கள் விவாகம்
செய்துகொண்டு தங்கள் கணவன் வீட்டிற்குப்போகவேண்டியவர்களே
என்று எண்ணுவதுமுண்டு. ஆனால் தற்காலத்தில் செட்டாய் செலவு
செய்யும் தகப்பன் கூட தன் பெண் படிக்கவும், கணக்கு போடவும், பாசி
கோர்க்கவும், கழுத்துப்பட்டை, காலர் முதலியவைகளைப் பின்னவும் கற்
றுக்கொள்ளும்படி செய்விக்கிறான்.

பெண்ணை விவாகம் செய்துகொள்பவன் பெண்ணுக்கு மேற்கூறிய
வைகள் தெரிந்திருக்கிறதா என்று கேட்பதனால் இவ்விதம் தகப்பன் செய்
கிறான் என்று சிலர் சொல்லக்கூடும்.

சாதாரணமாக நமது தேசத்தில் அன்பு பெண்ணிடத்திலும் ஆண்
இடத்திலும் தகப்பனுக்கு உண்டு; ஆனால் தன் புத்திரி கல்வி பயில்வதில்
விசேஷ ஸ்ரத்தையில்லாம விருப்பதைப்பற்றியே தகப்பனுக்கு பெண்ணி
டத்தில் அன்பு இல்லை என்று சொல்லக்கூடாது. தகப்பனார் தன்பெண்ணை
விவாகம் செய்து கொடுப்பதற்காக படும் கஷ்டங்களும், விவாகம்செய்து
கொடுத்தபின் படும் துன்பங்களும் பல.

தன் பெண் என்ற அவாவினால் தனது மருமகனோ அல்லது அவனைச்
சேர்ந்தவர்களோ தன்னை கட்டாயப்படுத்தி தன்னிடத்திலிருந்து பெறும்
பணத்தைத் தாராளமாக கொடுத்துவருகிறான். இது ஒரு விஷயத்தினால்
தகப்பனுக்கு தன் பெண்ணிடத்திலிருக்கும் வாஞ்சை வெளிப்படையாக
தெரிகிறதல்லவா?

பெண்ணும் சிறிது கற்று தேர்ந்திருந்தால் தன் கணவனிடத்தில்
இதமான வார்த்தைகளைச் சொல்லி தன் தகப்பனை அவன் பந்துக்கள் அப்

படி இம்சிப்பது சரியல்லவென்று சொல்லுவாள். கணவனும் விவேகமுள்ளவனாயிருந்தால் தன் மனைவி சொல்வதைக்கேட்டு அதன்படி நடப்பான். இதனால் பெண்ணுக்கும் தன் தகப்பனிடத்தில் அன்பு உண்டு என்பதும் விளங்கும். ஆனால் கணவன் தன் மனைவி சொல்வதைக் கேட்காமல் முரட்டுத்தனமாயிருந்தால் இவள் என்ன செய்வாள் ? இவள் பாடும் கஷ்டம் தானே ! இவ்விதம் பல குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. சில குடும்பங்கள் சுகமாக இருக்கின்றன. ஆகையால் நமது பெண் மணிகளுக்கு தகப்பன்மார் பூராவாக கல்வி போதித்து வந்தால் மிகவும் நலமாயிருக்கும், அவர்கள் கல்வியறிவால் தங்கள் கணவர்களுடன் சுகித்து இவ்வித கஷ்டங்களுக்கு இடங்கொடுக்காமல் ஜீவித்துவருவார்கள். மேலும் தங்கள் புத்திரிகளை தங்கள் புத்திரர்களைப்போல் பாவித்து அவர்களுக்கு உயர்தரக் கல்வி புகட்டி வந்தபின் விவாகம் செய்யமுயன்றால் அதிக பணம் பிள்ளை வீட்டார் கேட்கும் துர் வழக்கமும் அடியோடே நின்றுவிடும். பெண்ணும், பிள்ளையும் யாதொரு மனத்தாங்கலின்றி ஒருமித்து சுகித்து வாழ்வார்கள். இவ்விதம் செய்வது முதலில் கஷ்டமாகத்தானிருக்கும். போகப் போக சரியாய்விடும். ஆகையால் அன்பு மிகுந்த மாதா பிதாக்கள் மேற்கூறியவைகளைக் கவனித்து அவர்கள் புத்திரிகளுக்கும் உயர்தரக்கல்வி புகட்டிவர தங்கள் எண்ணத்தை செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

---

## பர்டிடாவின் கதை.

வேஷம்பூண்டு வந்தவர்கள் ப்ளோரிஸலைப்பற்றி வயதுமுதிர்ந்த இடையனைப் பின்வருமாறு கேட்கிறார்கள்.

ராஜன் "எனது பழைய நண்பனே! உனது குமாரத்தியுடன் பேசிக்கொண்டிருக்கிற அழகான வாலிபன்யார் ?" என்று அந்த இடையனைக் கேட்டார்.

இடையன் "டோரிஸல்ஸ் என்று எல்லாரும் அவனை அழைக்கிறார்கள். அவன் என் அருமைக் குமாரத்தியை மணம்புரிய விரும்புகிறான். உண்மையாகவே அவன் அவளை விவாகம் செய்துகொண்டால் அவளிடத்திலுள்ள சிறிது ஆஸ்தியும் கிடைக்கும்" என்று பதிலுரைத்தான்.

ராஜன் : அதான், அவளும் ஆநந்தக்கூத்தாடுகிறாளோ ! பேஷ் !

அரசன் கேமிலோவைப் பார்த்து ஜாடையாக நாழிகை ஆய்விட்டதே! காரியமும் முதிர்ந்துவிட்டது. இவர்களை விட்டு போவோம் என்று சொல்லி ப்ளோரிசலிடத்திற்குப் போய், "இடையனே, சௌக்யமா அப்பா, சந்தோஷமாக விருந்து நடக்கையில் உனது மனது எங்கேயோ யிருப்பதுபோல் தோன்றுகிறதே. நான் உன்னைப்போல் வாலி



பனாயிருக்கையில் நான் விவாகம் செய்துகொள்ள விரும்பிய பெண்ணுக்கு என்னென்ன சாமான்கள் தேவையோ அவைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்தேன். நீயோ அந்த சில்லரை வியாபாரியிடம் ஒன்றும் வாங்காமல் அவனைப் போகும்படி சொல்லிவிட்டாய். ஒரு வேடிக்கையான சாமானைக்கூட நீ விரும்பும் பெண்மணிக்கு வாங்கி இனாமாகக் கொடுக்கவில்லையே !" என்றார்.

ப்ளோரிஸல் "ஐயா, வயது சென்ற பெரியவரே, இந்த அல்பமான சாமான்களொன்றும் அவளுக்குப் பிடிக்காது. அவள் கோரும் முக்கிய வெகுமதிகள் எனது ஹிருதயத்தில் வைத்து மூடி பூட்டு போட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அவளுக்கு முன்னமேயே கொடுத்துவிட்டேன். அவளும் அவைகளை மனப்பூர்வமாய் பெற்றுக்கொண்டாள்" என்று சொல்லி, பர்டிடாவைப் பார்த்து, "ஓபர்டிடா இந்தவயது முதிர்ந்தவருக்கு முன் உனதுமெதுவான கையைப் பிடித்துக்கொண்டு என் மனதில் இருப்பதை வெளியிடப் போகிறேன்." என்றான்.

(பாலிக்ஸ்னெஸ்) அரசன், அப்பா நீ எண்ணியிருப்பதை வெளியிடு. நான் அதைக் கேட்கட்டும்.

ப்ளோரிஸல் : தாங்கள் தயவு செய்து சாக்ஷியாக யிருக்கவேண்டும்.

அரசன் : அப்படியே என் சமீபத்திலிருப்பவரு மிருப்பார் என்றார்.

ப்ளோரிஸல் : அவர்மாத்திரமல்ல ; எல்லாமனிதர்களும், இந்த பூமியும், மோக்ஷமும் எல்லாரும் அறியவேண்டும் என்றான்.

இடையன், என்மகளே, நீ ஏதாவது சொல்லம்மா என்றான்.

பர்டிடா "அவ்வளவு நன்றாக சொல்ல எனக்கு நாக்கு எழவில்லை! அவ்வார்த்தைகள் அவ்வளவு இனிமையா யிருக்கின்றனவே! அவைகளுக்குப்பதிலாக நான் என்ன சொல்லப்போகிறேன்?" என்றாள்.

இடையன்: 'சரி இருவரும், கைகோர்த்துக்கொள்ளுங்கள், சிநேகிதர்களே! நீங்கள் இவ்விவாகத்திற்கு சாக்ஷி. நான் என் பெண்ணை அவனுக்கு மணம்புரிந்து வைக்கிறேன். அவளுக்கு இருக்கும் ஆஸ்தி அவனுடையதே" என்றான்.

ப்ளோரிஸல் "நீங்கள் சாக்ஷியாக யிருந்து இந்த விவாகத்தை நடத்தி வையுங்கள்" என்றான்.

உடனே அரசனுக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. அடக்க முடியாமல் ப்ளோரிஸலைப் பார்த்து சிறிது பொறு, உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உனக்கு தகப்பனார் இருக்கிறாரா ? என்றார்.

ப்ளோரிஸல், இருக்கிறார், அவரைப்பற்றி என்ன இப்பொழுது ?

பாலி :—அவருக்கு இச்சங்கதி தெரியுமா ?

ப்ளோரிஸல் : அவருக்குத் தெரியாது, தெரியவுங் கூடாது.

பாலி: தகப்பனுக்கு இந்த விஷயத்தைச் சொல்லாமல் நீ செய்து கொள்ளலாமா? இது உனக்குத் தகுமா? இதுதானா பெற்றோரிடத்தி லுள்ள விசுவாசம்? இவ்விவாகத்தைக் குறித்து அவர் தக்கவரிடம் யோசனை செய்யவேண்டாமா?

ப்ளோ: தாங்கள் சொன்னதெல்லாம் சரியே. நான் அவ்விதம் செய்யவேண்டியதே; ஆனால் சில காரணங்களினிமித்தம் அப்படி செய்ய வில்லை. அவைகளைத் தங்களுக்குச் சொல்வதும் தகுதியுமல்ல. அவர் இதை அறிவதும் சரியல்ல.

பாலி: அவருக்குத் தெரியட்டுமே.

ப்ளோ: தெரியவேண்டியதில்லை.

பாலி: உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவருக்குத் தெரியும்படி செய்.

ப்ளோ: இல்லை, அவருக்குத் தெரியவேண்டாம்.

கிழஇடையன்: என் குமாரனே, அவருக்குத் தெரியட்டுமே; நீ விரும்பியதை அவர் கேட்டால் தப்பென்ன? அவர் விசனப்பட காரணமிராது.

ப்ளோ: வாருங்கள், வாருங்கள், அவருக்குத் தெரியவேண்டியதில்லை. இவ்விவாகத்தை சீக்கிரம் நிறைவேற்றிவிடுங்கள்.

அரசன் கோபத்துடன் தன் வேஷத்தை கலைத்துவிடுகிறான்.

அரசன்: "நீ என்னுடைய பிள்ளை என்பதைச் சொல்ல நான் துணிய வில்லை; ஏனெனில் நீ இழிவானவனா யிருக்கிறாய் என்று யாவரும் சொல் வார்கள். நீயோ சிம்மாசனத்திற்குரியவன். நீ ஒரு இடையனுடைய பெண்ணை விவாகம் செய்துகொள்ள ஆவலா யிருக்கிறாயே! அது ஆடு பிடிக்கும் கொளுவியல்லவா? அவளை நீ விவாகம் செய்துகொள்ளக் கூடாது. அவளை நீ மனதிலும் இனி நினைக்கக்கூடாது." என்று கோபத் துடன் சொன்னார்.

இடையனைப்பார்த்து, "நீ என்பிள்ளையை இவ்விடத்திற்கு வரவழைத் தால் உன்னை சிரசாக்கினை செய்துவிடுவேன். உன் மகளும் என் பிள் ளையை வரவழைக்கக்கூடாது. அவனைப் பார்க்கவும் கூடாது. அப்படி செய்தால் அவள் கதி அதோகதிதான். இனியாவது ஜாக்கிரதையா யிருங்கள். இப்பொழுது உங்களை மன்னிக்கிறேன்" என்று மிகுந்த மனவருத்தத்துடன் சொல்லி ப்ளோரிஸலை கூட அழைத்து வரும்படி கேமிலோவுக்கு சொல்லிவிட்டு தமது இருப்பிடத்திற்குச் சென்றார்.

அரசன் திரும்பிப் போனவுடன் பர்டிடா இடையனுடைய வளர்ப்பு மகளாயிருந்தபோதிலும் ராஜ குலத்தில் உதித்தவளாகையால் தனக்குத் தெரியாமலே கம்பீரத்துடனும், வருத்தத்துடனும் பின்வருமாறு சொன் னாள்:—"நம்மைப்பற்றி இவ்விதம் அரசன் பேசினபோதிலும், நான்



பயப்படவில்லை. ஒருதடவை அல்லது இரண்டுதடவை பேசலாம் என்று வாயைத்திறக்கவும், தானாக உண்டான அரசன் மாளிகைமீது ப்ரகாசிக்கிற



சூரியன்நமது குடிசை மீதும் ப்ரகாசிக்காமல் மறைந்திருக்கிறதா? இல்லை யே! யாவருக்கும் சூரியன் தன் ஒளியைச்சமமாக அளிக்கிறது." என்று அவ் வரசனுக்குச் சொல்ல எண்ணினேன். "மறுபடியும் விசனத்துடன் இந்தக் கனவு நீங்கிற்று. கண்விழித்துக்கொண்டேன். இனி இதை நான்சகியேன். ஐயா நான் போய் என் வேலையைப்பார்க்கிறேன். பால் கறக்கவேண்டும், என் ஆடுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் கவனிக்கவேண்டும்" என்று சொன் னாள். உடனே தன் வழக்க ப்ரகாரம் வீட்டு வேலையைச் செய்யத் தன் வீட்டுக்குள் போய்விட்டாள்.

நல்ல ஹிருதயமுள்ள கேமிலோ பர்டிடா சொன்னதைக் கேட்டு
மகிழ்ந்து, ஐயோ பாவம்! இவ்வித நற்குணமுள்ள பர்டிடாவை எப்படி
யாவது அரச குமாரனுக்கு மணம் முடித்துவைக்க வேணுமென்று நினைத்
தான். இதற்கு எவ்விதம் ஏற்பாடு செய்யலாமென்றும் தீர்க்காலோ
சித்தான்.

ஸிஸிலிதேசத்து அரசன் லியான்டஸ் தன் மனைவியும், பெண் குழந்
தையும் இறந்ததைக் குறித்து மிக்க மனவருத்த மடைந்திருப்பதையும்,
பாலிக்ஸ்னஸுடன் சிநேகமாயிருப்பதையும் நினைத்துக்கொண்டு அவ்வி
டத்திற்கு ப்ளோரிஸலையும், பர்டிடாவையும் இட்டுக்கொண்டு போய் அவ்
வரசன் ஆதரவில் விட்டு விட்டு வந்தால் இவர்களுக்கு பிராணபயமொன்று
மிராதென்று யோசித்து, இவர்களிடத்தில் சொன்னான்.
பாலில் பழம் நழுவி விழுந்தாற் போல் இந்த யோசனையைக் கேட்டு
சந்தோஷத்துடன் இவர்கள் சம்மதித்தார்கள். அந்த வயது சென்ற கிழ
இடையனையும் இவர்களுடன் போகும் படியும் சொன்னான். கிழ இடை
யன் நல்ல வேளையாய் பர்டிடாவின் நகை உடுப்பு முதலியவைகளையும்,
அவள் குழந்தைப் பருவத்தில் அணிந்திருந்த உடுப்பு, கழுத்தில் தொங்க
விட்டிருந்த கடிதம் முதலியவைகளையும் எடுத்துச் சென்றான்.

## ஸிஸிலிக்குப் போதல்.

ப்ளோரிஸல், பர்டிடா, இடையன், கேமிலோவும் ஸிஸிலிக்குப்பிரயா
ணப்பட்டு சௌக்யமாக லியான்டஸ் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.
லியான்டஸ் தனது மனைவி ஹர்மியோன் இறந்து விட்டதையும், தனது
பெண்காணாமற் போனதையும் குறித்து சதா விசனமுற்றிருந்தான். ஆயி
னும் தனது நண்பனாகிய கேமிலோவையும், இராஜ புத்திரனாகிய ப்ளோரி
ஸலையும் அன்புடன் வரவேற்று க்ஷேம சமாசாரங்களை விசாரித்தான்.
ப்ளோரிஸல் தன் மனைவியாகிய பர்டிடாவை அரசனுக்கு அறிமுகம்செய்த
பொழுது அரசனது கவனம் இப்பெண்மணியின்மீது சென்றது. இப்பெண்
மணி தன் மனைவி சாயலை ஒத்திருப்பதைக் கண்டவுடன் ஒருவித உணர்ச்
சியும் விசனமும் இவன் மனதில் மறுபடியும் உதித்தது. தான் குரூரமாக
கொல்லாமலிருந்தால் தன் குமாரத்தியும்—இவ்வளவு அழகு பொருந்திய
பெண்மணி—தன் பெண்ணாக இருப்பாளே யென்று சொன்னான்.

## பர்டிடா அகபட்ட விதம்.

பர்டிடாவைப் பற்றி கூர்மையாக அரசன்கவனித்ததை இடையன்
கண்டு ஒருக்கால் இக்குழந்தை அரசன் புதல்வியாயிருக்குமோ என்னமோ
என்று எண்ணி, தான் பர்டிடாவைக் கண்டது முதல் இதுவரையிலும்
நடந்தவைகளை யெல்லாம் விவரமாய்ச் சொல்லி, அவளுடைய நகைகள்,
துணிமணிகள், கழுத்தில் தொங்கவிட்டிருந்த கடிதம்முதலியவைகளை எடு



த்து உடனே காண்பித்தான். அரசன் பாலினாவை வரவழைத்தான். அவ
ளும் இவைகளை யெல்லாம் கண்டு இப்பெண்மணி தங்கள் குழந்தை தான்.
இதோ தங்கள் மனைவி இக்குழந்தை கழுத்தில் அணிந்த நகை இது என்
ஞாபகத்திலிருக்கிறது. இதோ கடிதமிருக்கிறது. இதை எழுதினது என்
கணவன் தான். அவர் கையெழுத்து எனக்கு நன்றாய்த் தெரியும் என்றாள்.
பர்டிடா அரசனுடைய பெண்தான் என்று எல்லாரும் நிச்சயங்
கொண்டார்கள். அரசனுக்குண்டான சந்தோஷத்திற் களவில்லை. பாலி
னா படாத கஷ்டங்களை யெல்லாம் நன்மை புரிவதின் பொருட்டு பட்டு
தன் கணவனையும் துறந்து விசனப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் பர்
டிடா தென்பட்டதைக் கண்டு ஆநந்த சாகரத்தில் மூழ்கினாள். லியான்டஸ்
பர்டிடா தன் மகள் என்பதைக் கேட்டு அறிந்தபொழுது தனது மனைவி
ஹர்மியோன் தன் குழந்தையைப் பார்க்க கொடுத்து வைக்கவில்லையே
என்று துக்கப்பட்டு சிறிது நேரம் மௌனமாயிருந்து "உன் தாயார் உன்
தாயார்" என்று சொன்னான்.

## அரசனது சந்தோஷம்.

அரசனது காணாமற் போன பெண்மணி தென்பட்டாளென்ற சங்
கதி ஊரெல்லாம் பரவியது. ஜனங்கள் குதூகலமாய் தங்கள்சந்தோஷத்தை
ராஜாவுக்குத் தெரிவித்தார்கள். மந்திரி, பிரபுக்கள் முதலியோர் வந்து
பர்டிடாவையும் அரசனையும் கண்டு தங்கள் சந்தோஷத்தை தெரிவித்தார்
கள். வெகு காலமாக துக்க சாகரத்திலிருந்த லியான்டஸ் தனக்குண்
டான சந்தோஷத்தை அடக்க முடியவில்லை. உடனே ப்ளோரிஸலைப்
பார்த்து, "அய்யா, என் மகளை நேசித்ததற்காக நான் பதின் மடங்கு
சந்தோஷமடைகிறேன். ஓ பெரியவரே (இடையனைப்பார்த்து) தாங்கள்
என் குமாரத்தியைக் காப்பாற்றியதற்காக வந்தனமளிக்கின்றேன்." என்
றான். இவ்விதமே, நன்னடக்கையுள்ள கேமிலோவும், 'விசுவாசமுள்ள
பாலினாவும் சந்தோஷமாக இப்படி முடியும் வரையில் தாங்கள் ஜீவித்திருப்
பதைக் குறித்து மகிழ்ந்தார்கள்.

இவ்விதம் அகஸ்மாத்தாய் உண்டான சந்தோஷ காலத்தில் பாலிக்ஸ்
னஸ் அரசன் இங்கு வந்து சேர்ந்தான்.

## பர்டிடாவுக்கும் ப்ளோரிஸலுக்கும் விவாகம்.

இவ்விதம் இவர்களுக்கு சந்தோஷமுண்டானதைக் கேட்ட பாலிக்ஸ்
னஸ் இவர்கள் சொன்னவரலாறு முழுவதையும்கேட்டு மகிழ்ச்சி யடைந்
தான். இப்பொழுது பாலிக்ஸ்னஸ் தன் குமாரன் பர்டிடாவை விவாகம்
செய்து கொள்வதைத் தடுப்பானோ? இப்பொழுது பர்டிடா இடைச்சியா?
ஆனால் ஸிஸிலிக்கு அரசியன்றோ? எல்லாரும் மனமொத்து விவாகச் சடங்
கை கோயிலுக்குப் போய் செய்து வைத்தார்கள் விவாகமும் முடிந்தது
கதையும் முற்றிற்று.

## WHY DO WE GO TO SLEEP.

## நாம் என் நித்திரை செய்கிறோம்.

குழந்தைகள்:—தாதா! நமக்கு ஏன் தூக்கம் வருகிறது? தயவு செய்து சொல்லுங்கள்.

தாதா:—நாம் தூங்காமலிருக்கும்பொழுது நாம் ஏதாவது வேலை செய்கிறோம். இரத்தம் மூளைக்குச்சென்று நமக்கு நித்திரை வரும்படி செய்கிறது. எப்படி மருந்தை உட்கொண்டால் நித்திரைவருகிறதோ அவ்விதம்தான். நீங்கள் கேட்ட கேள்விக்கு இது முழுவிடை அல்ல. ஆயினும் இது சரியே. ஆனால் நித்திரை செய்வதால் நன்மை என்ன? என்று கேட்பின் நாம் இளைப்பாற நித்திரை செய்யப்போகிறோம் என்பேன். நாம் தூங்கும்பொழுது நமது சரீரம் முழுவதும் அசைவற்றிருக்கிறது, அதாவது இளைப்பாறுகிறது. மூளை, இருதயம், சுவாசாசயங்கள், சதை, வயிறு மற்றுமெல்லா அவயவங்களும் இளைப்பாறுகின்றன.

குழந்தைகளுக்கு அதிக நேரம் நித்திரை அவசியம் தேவை. ஏனெனில் குழந்தைகளின் வளர்ச்சி நித்திரையில் தானிருக்கிறது. நித்திரை செய்யும்பொழுது குழந்தைகளுக்கு வளர்ச்சி அதிக முண்டாகும். ஆகையால் அவர்கள் நித்திரை நன்றாக செய்யாவிட்டால் அவர்கள் நன்றாக வளரமாட்டார்கள். பெரியவர்களை விட குழந்தைகளுக்கு நித்திரை மிகவும் முக்யமானது. ஜனங்களில் அநேகர் குள்ளமாயும், பல ஹீனமாயும், புத்தியில்லாதவர்களாயும், மனக்குறைவுள்ளவர்களாயு மிருப்பதற்கு காரணம் அவர்கள் குழந்தைப்பருவத்தில் போதுமானவரையில் தூங்காமலிருந்ததாம். ஆகையால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் நன்றாக நித்திரை செய்யும்படி செய்து வாமுயலுவார்களென்று நம்புகிறோம். பிள்ளைகளே, தூங்கும்பொழுது நாம் காணும் கனவைப்பற்றி விவரித்துச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

---

## WHERE DO WE GO IN OUR SLEEP?

நாம் தூங்கும்பொழுது எங்கு போகிறோம்? என்று குழந்தைகள் தாதாவைக்கேட்டார்கள். தாதா: குழந்தைகளே, இக்கேள்வி சரியானதுதான். ஆனால் நாம் நித்திரை செய்யும்பொழுது நாம் எவ்விடத்திற்கும் போவதில்லை. எவ்விடத்தில் படுத்து தூங்குகிறோமோ அவ்விடத்திலேயே தான் நாமிருப்போம். ஆனால் நாம் கண்விழித்துக்கொண்டிருக்கமாட்டோம். நம்மைச்சுற்றியுள்ளவைகள் நமக்கு அப்பொழுது தெரியாது. அவைகள் அங்கேயேயிருக்கும். நாம் அயர்ந்து நித்திரைசெய்கையில் நாம் பல வேடிக்கையான கனவுகளையும், பயங்கரமான கனவுகளையும் காண்கிறோம்.



கனவு ஜனங்களுக்குப்பல கெடுதல்களைச்செய்கின்றன. அவர்கள் கனவு இன்னகாரணத்தினால் காண்கிறோமென்பதை அறிந்துகொண்டால் அவர்களுக்கு அது யாதொரு கெடுதலையும்செய்யாது. நாம் நித்திரைசெய்யும் பொழுது பாம்பு கடிக்கும் மாதிரியும், எருமை வரும்போலவும், கருப்பு மனிதன் வரும்போலவும் கனவு காண்கிறோம். இவைகளால் நமக்கு கெடுதியுண்டாகுமோ என சிலர் நினைந்து துன்பப்படுகிறார்கள். அப்படி எண்ணுவது மிகவும் தப்பு. சாதாரணமாக நமது வயிற்றில் ஏதாவது கோளார்களிருந்தால் அவையே காணும் கனவுகளுக்கு காரணமாகும். நாம் நித்திரை செய்யப்போகு முன் அதிகமாகப்புசித்தாலும் சரி, அல்லது நமது தேகத்திற்கு ஒத்துக்கொள்ளாததைப்புசித்தாலும் சரி, அவைகள் இராத்திரியில் நாம் தூங்கும்பொழுது நமது மூளையைத்தொந்திரவு செய்ய ஆரம்பிக்கின்றன. அப்பொழுது ஒரு பாகம் கண் விழித்தாற்போல் தோன்றுகிறது. நாம் பாராததையும், பார்த்ததையும், சந்தோஷமானதையும், பயங்கரமானதையும் கனவுகளாகக்காண்கிறோம். இவ்விதமே நித்திரை செய்யும்பொழுது சத்தம் திடீரென்று உண்டானால், நாம் திடுக்கிட்டு அலறி கனவுகாண்கிறோம். ஏனெனில் அவைகளும் மூளை—கதாக்கி தொந்திரவு செய்கிறது.

ஆகையால் நாம் நித்திரை செய்யப்போகு முன் மிதமான ஆகாரத்தைப் புசிக்கவேண்டும். கூச்சல் சந்தடியில்லாத இடத்தில் படுத்து தூங்கவேண்டும். அதிகநேரம் கண்விழிக்கக்கூடாது.

---

## ரோம் தேசத்து சரித்திரக் கதைகள்.

### iv குடியரசின் குழந்தைப்பருவம்.

(15-வது பக்கத் தொடர்ச்சி.)

ரோமாபுரியில் அ—ாகளைத் துரத்திவிட்டார்களெல்லவருத் சுமார் ளைத் துரத்திவிட்டு குடியரசை ஸ்தாபித்தார்கள். இ—
2224-வருஷங்களுக்குமுன். அதாவது கி. மு. —மகா கியாதிபெற்ற குளிச்

வெளியே துரத்தப்பட்ட அரசனான —ஸ்பவனைத் தனக்கு ஒத்தாசை சயம் என்ற ஊரின் அரசனாகிய பார்சி—தான். பார்சினா யுத்த முறைக புரியுமாறு வேண்ட— —சத்தியசந்தன். அரசாங நீதியில் நடுவுநிலைமை ளில கைமதுாந்த —ரன். —வன் சண்டைக்கு தவறாதவன். இவன் மிகவும் பலவானானபடியால், ரோமாபுரி —ங்களும், அந்த வருகிறான் என்பதைக் கேட்டதுமுதல் —ந்தார்கள். —ள் பயத்திற் வருடக் கான்ஸல்களும் பெருந்திகில் அடை—ரிற் —ரர்களைச் கேற்றவிதமே பார்சினாவும் தன்னாலியன்ற வரையி— யானைக— —டையா. சேகரித்தான். அக்காலங்களில் அப்பிரதேசங்களில் யானைக—

யானைப் படையுமில்லை. குதிரைவீரர்களையும் பார்த்தலரிது. ஆகவே தேர்ப்படையும் காலாட்படையும் சேர்ந்து சுமார் 20,000 வீரர்கள் பார்சினாவை படைந்தார்கள். நல்ல சகுனத்தில், சண்டைசெய்யக் குளிச்சயத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

நீக்கப்பட்ட அரசனின் கதியை கவனிப்போம். அவன் செய்த பாவங்களே யுருவாகி அவனை பேய்ப்போல் வதைத்தது. தான் தனது மாமனாரைக் கொன்று ராஜ்யபட்டத்தை யடைந்ததற்கு ஜனங்கள் தன்னைத் துரத்தியது நியாயமே என வருந்தினான். தனது மகனாகிய செக்ஸ்டியஸ்ஸை (அவனைப்பற்றி சென்ற சஞ்சிகையில் சொல்லப்பட்டிருக்கிறவைகளையும்) நினைத்து வருத்தப்பட்டான். ஐயோ! தகப்பனுக்குமேல் பிள்ளை துஷ்டனாயிருக்கிறானே என ஏங்கினான். ஆகவே அவன் ராஜ்யத்தைத் திரும்பியடைய பார்சினா செய்யும் வேலைகளை அவன் கவனிக்கவே யில்லை. செக்ஸ்டியஸ்ஸும் தகப்பனின் கவலையின்மையைக் கவனித்து அவனைப் புறக்கணித்துவிட்டு பார்சினாவிடம் சென்று சண்டைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் துவக்கினான். தனியே தீவித்த வியாதியினால் அவஸ்தைப்பட்டு, சீக்கிரத்தில் அரசனது ஆவியும் இவ்வுலகைவிட்டு நீங்கியது.

செக்ஸ்டியஸ்ஸுக்குச் சந்தோஷமே. கிழம் தொலைந்து, நாம் இனி சுயேச்சையாய் நமது இஷ்டப்படி சந்தோஷமாக வசிக்கலாம், என குதூகலித்தான். ஐயோ! நிஜமான சந்தோஷம் என்னவென்பதே யறியாத மூடனுக்கு எதுவும் சந்தோஷமே. இக்காலங்களிலும் அப்பேற்பட்ட பிள்ளைகளுமுளர். சிறு வயதிலேயே பிள்ளைகளின் மனதை நல் வழிகளில் பழக்கி, நற்போதனை புகட்டியிருப்பின், வயதுசென்ற பிறகு அவர்கள் துன்மார்க்கர்களாவரா? அவ்வாறு சிம்பிலே வளைக்கத் தவறி நல்ல மரமான பின், தாம்புக் கயிறுகொண்டு வளைக்கப்புகின் முடியுமா? சிறு வயதில், பிள்ளைகளிஷ்டப்படி விட்டு, செல்வமாக வளர்த்து, அவர்கள் [illegible]ப்பிள்ளைகளுடன் சேர்ந்து துன்மார்க்கராகும்வரை வாய் பேசாம[illegible] ஆகாய ம[illegible]. பிறகு ஐயோ! மகனே இது அடுக்குமா! தர்மமா! என அடித்துக்கொண்டூரார் கேட்கும்படி புலம்பி, தலையிலும் வயிற்றிலும் வைத்தாலன்றோ ஜாக்கிரதை[illegible]ன? வெள்ளம் வருமுன் அணை கட்டி யத் தவறினவர்களின் க[illegible]பரிதபிக்கலாம். ஐயோ! அவ்வாறு செய் புத்திபோதிக்கத் த[illegible]ய பாவியான பிதாவே! [illegible] பால்யத்தில் பிள்ளைக்கு நான் செய்யும் பாவங்க ளுக்கு நீரே கார[illegible], எனத் தத்தாரிப்பிள்ளை தர்மமோதுகிறான். தகப் பனும் தலையில் [illegible]த்துக்கொண்டு என் செய்வேனெனத் தவிக்கிறான். தகப் வுள் பிள்ளை[illegible] என் பிறப்பிக்கிறார்? தாய் தகப்பன்மார் அப்பிள்ளைகளை இளம் [illegible]லையே கடவுளை வழிபடச்செய்து, தர்ம நீதிகளைக் கற்பிக்க வேண் பிள்ளை வளர்ப்பைப் போன்ற கடினமான தொரு காரியம்



கிடைப்பதரிது. கடவுள்தான் சிருஷ்டித்த ஜனங்களைப் பரிக்ஷிப்பதற்கே அக்காரியத்தை யேற்படுத்தினார். அப்பரிக்ஷையில் ஜயமடைந்தவர்கள் கடவுள் கருணையை யடைந்தவராவர். இது நிற்க,

சண்டைக்குச் சென்ற செக்ஸ்டியஸையும் பார்சினாவையும் நாமும் தொடர்ந்து செல்வோம். வழியெல்லாம் கிராமங்களைச் சூரையாடி, பயிர்களைப் பாழாக்கி, உயிர்களை ஓட்டி, வீடுகளை யெரித்து, ஆடுமாடுகளை அடித்துத் துரத்தி தமது வீரப்பிரதாபங்களை வெளிக்காட்டிக்கொண்டே சென்றார்கள். ரோம ராஜ்யத்திற்கு கதவுபோன்ற ஜனிகுலம் என்னும் கோட்டையைச் சமீபித்தார்கள். ஜனிகுலம் கோட்டையைப் பிடித்துவிட்டால் ரோமாபுரியைப் பிடித்து விட்டதாகவே எண்ணலாம். அக்கோட்டையைப் பிடிக்குமாறு பார்சினாவைத் தூண்டினான் செக்ஸ்டியஸ். திடீரென்று சண்டைக்குப் புறப்பட்டதால் அக்கோட்டை சரியானபடி பாதுகாக்கப் படவில்லை. வீரர்கள் சிலரேயிருந்தனர். கோட்டை மதில்களும் மிகவும் பழையன. பார்சினா தனது பதினாயிர வீரர்களைக்கொண்டு வெகு சீக்கிரம் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். செக்ஸ்டியஸ்ஸின் சந்தோஷத்தைச் சொல்வதரிது. பார்சினாவோ துக்கப்பட்டான். இவ்வெலியைக் கொல்ல புலியையழைத்த புல்லறிவாளனை யென் செய்வது என நொந்தான். தனது வீரர்களின் ஆக்ரகத்தை எவ்வாறு தணிப்பது என ஏங்கினான். செக்ஸ்டியஸ்ஸோ இவற்றையறியாமல், கூடியசீக்கிரம் ரோமாபுரியைத் தாக்கினால் இக்கோட்டையைப் பிடித்தவிதமாகவே அப்பட்டணத்தையும் பிடிக்கலாம் எனப் பார்சினாவிடம் பகர்ந்து, வீரர்களனைவரையும் தூண்டிவிட்டான். எல்லாரும் ஓரே உக்ரகமாய்க் கிளம்பினார்கள்.

ஜனிகுலத்திற்கும் ரோமாபுரிக்கும் ஏழேமைல்தான். பார்சினா ஜனிக்குலத்தைப் பற்றிவிட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் ரோமன்கள்மிகப்பயந்தார்கள். என்செய்வது? நாமெல்லோரும்தொலைந்தோம் என நடுக்கங் கொண்டார்கள். அவ்வருஷத்தில் கான்சல்கள் என்செய்வது என்று யோசிக்க ஜனங்களை ஒன்றாகச்சபைசேர்த்தான். ஒருவன் பட்டணத்தை விட்டு விட்டு ஓடிவிடலாம் என்றான். அப்படியே அடித்து அவனைக் கீழே அமிழ்த்துவிட்டார்கள். ஜனங்கள் ரோமனா! நீ சேய்! வெட்கமில்லை! எனக்கூவினார்கள். பிறகு தைர்யமாய் எதிர்த்து மடிவது அல்லது ஜயிப்பதுதான் எனக்கடைசியாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குள் ஒரு காவற்காரன் மூச்சிழுக்க, முகம்வெயர்க்க, ஓட்டமாக ஓடிவந்தான். எதிரிகள் பாலத்திற்கரை மைலுக்கப்பாற் வருகிறார்கள். இன்னும் இரண்டு விநாடியில் மேற்கு கோபுரவாயில்வழியே நுழைந்துவிடுவார்கள் என உளறினான். கான்சல்கள் கலங்கி நின்றார்களேயொழிய என்செய்வதெனத்தெரியாமல் விழித்தார்கள். அச்சமயத்தில் கூட்டத்திலிருந்து ஒருவன் கூவினான். யாவரும் என்னவென்று கவனித்தார்கள். அவன், யாரேனும் மூவர் வீரர்கள் பெரிய பாலத்தைப் பாதுகாக்க

வேண்டுமென்றும், அவர்கள் அவ்வாறு அக்கரைப்டக்கத்தில் எதிரிகளை
எதிர்த்து நிற்கும் சமயம், அக்கரைப்பக்கத்தில் கான்சல்கள் ஆட்களைக்
கொண்டு மரத்தாலாகிய அப்பாலத்தைப் பெயர்த்துவிடவேண்டுமென்னும்
யுக்தி சொன்னான். அவ்வீரர்களில் தான் ஒருவனைப் போவதாகவும்
இன்னும் இருவர் கூட வருவார்களா என்று கேட்டான். அதுவே சரி!
ரோமன் இவனே என ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். பிரபுக்களின் புத்
திரர்கள் இருவர் தாங்களும் வருவதாகக் கூறி ஹுரேஷியஸ் என்னும்.
அந்த வீரனுடன் கூடி தத்தமக்குவேண்டிய கத்தி கேடயங்களை யெடுத்
துக் கொண்டு பாலத்தின் அக்கரையில் நின்றார்கள். ஹுரேஷியஸ் சத்
திய முள்ள சற்குண ரோமானிய வீரன். அவன் சொன்ன யுக்தியைத்
தவிர வேறுவழியில்லை. பட்டணத்திற்கும் எதிரிகளுக்கும் நடுவே கால்
மைல் அகலமுள்ள டைபர் நதி ஓடுகிறது. பட்டணத்திற்கு வர அப்
பாலத்தைக் கடந்தே வரவேண்டும். அப்பாலத்தைபிடித்து விட்டால்
நதியைச் சுற்றி வர நாலைந்து நாளாகும். நதி முழுப்பிரவாகத்தில் ஓடு
கிறது. அதைக்கடப்பதும் கஷ்டம். உயிர்ச்சேதம் அதிகம் ஆகும். பார்
சினா அவ்வாறு செய்யப்பட்டவனல்ல. ஹுரேஷியஸ் சொன்ன யுக்தி
யே பட்டணத்தைக் காபாற்றும். நாலைந்துநாளைக்குள் வெளியூர்களுக்குச்
சென்றிருக்கும் வீரர்கள் திரும்பி விடுவார்கள். ஆகவே கான்சல்கள்
விரைவாகப் பாலத்தைப்பெயர்க்கத் துவக்கினார்கள். பாலத்தினோத்தில்
மூன்று வீரர்கள் எதிரிகளை பாலத்தினுள்ளே போகாவண்ணம் பாதுகா
த்து நின்றனர்.

பார்சினாவும் அவன் வீரர்களும் ஜனிகுலத்திலிருந்து புறப்பட்டு ஒரு
ஜாமத்திற்குள் டைபர் நதியை யடைந்தார்கள். தங்களை எதிர்க்க யாதொ
ருபடையுமில்லாததைக் கண்ட பார்சினா திகைத்தான். சேனா வீரனாகிய
ஆங்கஸ் பாலத்தருகே நிற்கும் மூவரைக் காட்டி, பார்சினா அவர்களை
வென்ற பிறகே பாலத்தைக் கடக்க வேண்டும் என ஆக்யாபித்தான்.
செக்ஸ்டியஸ் ஆம், சேனைகளை அம்மூவர்களை நோக்கி நடத்தி எதிர்த்தால்
வெகு சீக்கிரம் வெற்றியடையலாம் எனக்கூற, பார்சினா அதற்கு ஒப்ப
வில்லை. ஒரு வீரன் ஒரு வீரனுடன் சண்டைபோடவேண்டுமே யொழிய
ஆயிரம் பேர் ஒருவனை தாக்குவது கூடாது என்று கடிந்து சொல்லி
அவ்வாறே கட்டளை பிறப்பித்தான்.

பார்சினாவின் சேனை ஓர் பெரிய சமுத்திரம் போல பாலத்தினருகே
நெடுந்தூரம் பரவியிருந்தது. வரிசைவரிசையாக ஒருவர் பின் ஒருவர் நின்
றிருக்கும் அச்சேனையின் அணிகள் அடுத்தடுத்து வரும் அலைகளைப்போ
ன்றிருந்தன; கீர்த்திபெற்ற வீரர்கள் ரதங்களிலூர்ந்து வந்தனர். பல
விடங்களில் கொடிகள் வெகு கம்பீரமாகப் பறந்தன. வீரர்கள் ஒருவருக்
கொருவர்வம்புபேசலாயினர். பாலத்தைத்தாக்கக்கூடாது என்ற உத்திரவு
அவர்களுக்கு ஒப்பவில்லை.பின்னிருப்பவர்கள் முன்னிருப்பவர்களை "முன்



நட நட" எனக்கூவ, அவர்கள் "பின் நகர்,பின்னாலே" எனக்கத்துவதும்,
பூலர் கத்தி கேடயங்களைக் கழற்றிவைக்கும் கலீர் சப்தமும், எங்கும் ஒரே
அமளியாயிருந்தது. "என்னே! அண்டங்களையும் தகர்த்தெரியும் புயல்
காற்றினெதிரே ஒரு புல்செடி என் செய்யும்" என்று வீரர்கள் பேசிக்
கொண்டிருந்தார்கள்.

அரசனாணைப்படி மூன்று வீரர்கள் பாலத்தைக் காத்து நிற்கும்
ஹுரேஷியஸ் முதலிய வீரர்களை எதிர்த்தனர். அவர்கள் கீர்த்தி
பெற்ற தீரர்கள். வெகு உக்ரகத்துடன் ஹுரோஷியஸ் முதலியவர்மேல்
கத்திக்கொண்டு பாய்ந்தார்கள். ஆனால் ரோமானிய வீரர்களோ சாமான்
யர்களல்ல. தங்கள்மேல் படும்படியிருந்த குறிகளைத்தடுத்து அவர்களை
வெகு சீக்கிரம் எமனுலகுக்கனுப்பினர். பார்சினாவும் அவன் வீரர்களும்
பார்த்து திகைத்து நின்றார்கள். இன்னும் மூன்று வீரர்கள் வந்து எதிர்
த்து அவ்வாறே மடிந்தனர். பாலத்தின்மேல் சம்மட்டிகளோசை வெகு
மும்மறமாயிருந்து, ஹுரேஷியஸ் சொல்லியவாறு பாலத்தை இடித்
தாய் விட்டது. ஒரு தட்டு தட்டினால் பாலம் அப்படியே இடிந்து கீழே
விழவேண்டியதே. அச்சமயம் நமது வீரர்கள் இன்னொருமூவருடன் சண்
டையிட்டுக்கொண்டிருந்தார்கள். "திரும்பிவந்து விடுங்கள்! ஹுரேஷி
யஸ்" எனக் கூவினார்கள். ஹுரேஷியஸ்ஸுடனிருந்த இரு வீரர்க
ளும் உடனே திரும்பி விட்டார்கள். ஹுரேஷியஸ் தன்னுடன் சமர்
புரிந்து கொண்டிருந்தவனை முடித்துத் திரும்புமுன் ஆ! அது என்ன சப்
தம்! பாலம் இடிந்து விழுந்து விட்டது.

கடும் பிரவாகத்தில் ஓடிக்கொண்டிருந்த அந்த நதியானது தன்
மேல் பல பெரும் பாறைகள் ஒருங்கு விழவே, தவித்துத் தத்தளித்தது.
விழுந்த வேகத்தினால் ஜலம் கொந்தளித்து நுரை வெகு உயரம் எழுந்
தது. ரோமாபுரிப் பட்டணத்தின் கோபுரங்கள் மேலெல்லாம் நீர்த்துளி
கள் தெரிந்தன. ஜனங்கள் வெகு சந்தோஷத்துடன் ஆரவாரித்தார்கள்.
ஆ! எப்பேற்பட்ட காட்சி! சுபேச்சியாயோடும் ஓருநாட்டுக் குதிரைக்குக்
கடிவாளம் போட்டால் போல் அந்நதியானது குதித்தது. கொதித்தெழு
ந்தது. கோபித்துச் சீரியது. என்செப்பேன். பிறகுசமாதானமாக வேண்
டியிருந்தது. எதிரிகள்பேச முடியாது. திகைத்து ஊமையர்போல் உட்கா
ர்ந்தனர். செக்ஸ்டியஸ்ஸுக்கோ வந்த கோபத்திற் களவில்லை. இங்கு
நின்றிருக்கும் ஒருவனைக் கொன்றுவிடவேண்டு மெனத்தீர் மானித்தான்.

ஆங்கஸ் என்னும் மகாபேர்போன வீரப்பிரதாபங்கள் பெற்ற சூரன்
ஹுரேஷியஸை எதிர்க்குமாறு முன்னடந்தான். பார்சினா வீரர்கள்
ஜெயம் ஜெயம் எனக் கூவினார்கள். ஆங்கஸ்ஸும் ஆக்ரகத்துடன் பாய்ந்
தான். ஹுரேஷியஸ் கேடயத்தால் தன்னைத்தாக்கிய கத்தியைத்தட்டியும்
அவன்தோளை உராய்ந்து சென்றது. சிறிது ரத்தம் அவன் தேகத்தினின்
றும் வெளிப்போந்தது. உடனே எதிரிகள் கரகோஷம் செய்தனர்.

ஹோரேஷியஸ் காயம்பட்ட புலிபோல் சீறிப் பாய்ந்து ஆங்கஸ்ஸைக் குத்தினான். மண்டையில் அடித்த கத்தியானது நெடுந்தூரம்பாய்ந்துவிட்டது. நடுக்காட்டில் ஆலமரம் விழுந்தாற்போல ஆஜானுபாகுவான ஆங்கஸ் அலறிக் கீழேவிழுந்தான். அவன்மார்புமேல் காலைவைத்து தனதுகத்தியைப் பிடுங்கினான் ஹோரேஷியஸ். வன்னெஞ்சகனும் பாதகனுமாகிய செக்ஸ்டியஸ் வெளியே எட்டிப்பார்ப்பதும் உள்ளே தலையை இழுத்துக்கொள்வதுமாக இருந்தான். ஒருசமயம் முன்வருவான். அவனைப்பார்த்த ஹோரேஷியஸ் வெறுப்புடனும் கோபத்துடனும் முகத்தை திருப்பிக்கொண்டான். பிறகு "ஏ வெட்கங்கெட்டவனே! ரோமா புரிக்கு வழி தெரியாமல் தவிக்கிறாயா! இதோவழி! உங்கள் நல்வரவுக்கு விருந்து வைத்திருக்கிறேன்! தயாராயிருக்கிறது" எனக்கூவி இரத்தம் தோய்ந்த தனது கத்தியையும் கீழேமடிந்திருப்பவர்களையும் காட்டவே செக்ஸ்டியஸ் நடுங்கி ஓடி விட்டான். ஹோரேஷியஸ்ஸும் தனக்கு இனிவேலையில்லையெனத்திரும்பி கைகுவித்து "வருணபகவானே! எனது உயிரையும், எங்கள் தேச கௌரத்தையையும் உன்னிடம் ஒப்புவித்தேன். காத்தருள்வாய்" எனப் பிரார்த்தித்துக் கொண்டே நதியின் பிரவாகத்தினடுவே குதித்தான். அவன் கண்ணுக்குத் தென்படவில்லை.

ஆ! என்ன நிச்சப்தமாயிருந்தது. ரோமர்கள் ஆவலுடன் உற்று நோக்கியிருந்தார்கள்.

பார்சினாவும் அவன் வீரர்களும் எதிரிகளாயிருப்பினும் ஹோரேஷியஸ்ஸின் வீரத்தனத்தைப் புகழ்ந்தார்கள். அதியாச்சரியத்துடன் அவனை எதிர்பார்த்தார்கள். பார்சினாவும் "ஆ என்னதீரம்! தேசபக்தி!" என அவனிடம் பச்சாத்தாப மடைந்தான்." தண்ணீர்க்குள் முழுகிய ஹோரேஷியஸ், வெளிக்கிளம்ப நெடுநேரஞ் சென்றது. யுத்தத்தில் களைப்புற்றதாலும், ரத்தங்கொட்டியதால் பலவீனமடைந்ததாலும், கவசம், கத்தி, கேடயங்களின் கனத்தினாலும், அவனுக்கு நீந்துவது வெகுகஷ்டமாயிருந்தது. ஆனால் வருணபகவான் கருணையுள்ளவராயிருந்தார். அவன்தலை வெளிக்கிளம்பியது. வெகுதூரத்திற் கப்பால் ரோமாபுரிக்குச்சமீபமாகவே அவன் தென்படும்பொழுதெல்லாம் ரோமர்கள் பேரிரைச்சல் புரிந்தார்கள். ஹோரேஷியஸ் கஷ்டத்துடன் நீந்தினான். தரை தட்டுப்படு முன்னே பலர்கைகள் அவன்மேல் விழுந்தன. பலர் ஜலத்திலே பாய்ந்து ஹோரேஷியஸைக் கட்டித்தூக்கிச் சென்றார்கள்.

"கடவுள் அவ்வீரனைக் காப்பாற்றினதற்கு வந்தனம் புரிகிறேன்" என்று பார்சினா சொல்ல, செக்ஸ்டியஸ் "பாவிபிழைத்து விட்டானே" எனப் பதைபதைத்தான். பார்சினாவுக்கு அப்பட்டணத்து ஜனங்களை

*ஆயுதங்களை எறிந்துவிடுவது மிகவும் அகௌரவமான காரியம் என வீரர்கள் கொள்கை.



எதிர்க்க மனமிசையவில்லை. சண்டைபோட மறுத்துவிட்டான். செக்ஸ்டியஸ்ஸும் இனிநமக்குக் கதியில்லை என்று சாவை எதிர்பார்த்திருந்தான்.

அன்று ரோமாபுரியில் ஜனங்கள் பெரியவிருந்து உத்ஸவம் கொண்டாடினார்கள். ஹோரோஷியஸைப் புகழாதவர்கள் இல்லை. தேசத்தைக் காப்பாற்றிய தீரனே! என ஆரவாரித்தார்கள். அவனுக்குப் பலவெகுமதிகளையளித்து கௌரவப் படுத்தினார்கள்.

இந்நாளைக்கும் ஹோரேஷியஸின் உருவச்சிலை சந்தை கூடுமிடத்தில் நின்றுகொண்டிருக்கிறது. பட்டணத்தைக் காத்தபலவான் என யாவரும் அறிவார்கள். இன்னும் ரோமாபுரித் தாய்மார்கள் ஆ! ஹோரேஷியஸ் போன்ற ஒருமகனைக் கொடுத்தருளுமாறு பகவானைப் பிரார்த்திக்கிறார்கள்.

(இன்னும்வரும்)

வி. என். ராஜ்.

## பயிர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றி.

எல்லாவித பயிர்களும் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடியவைகள். அப்பூச்சிகள் உருவத்தில் சிறியவைகளாகயிருந்தாலும் எண்ணிக்கையில் ஜாஸ்தியாயிருந்து பயிர்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. மழையின் ஒரு துளி சிறியதேயாயினும், அநேக மழைத்துளிகள் சேர்ந்து பூமியில் விழும்போது வெள்ளம் தோன்றி அதிக நஷ்டத்தையும் உண்டுபண்ணும். பூச்சிகள் தோன்றும்போது அதுபோலவே நேரிடுகிறது. ஒரு பூச்சியானது அதின் ஆயுள் முழுவதும் சில இலைகளைத்தான் தின்னும். ஆனால் ஒரு பயிரில் ஏராளமான பூச்சிகள் விழுமானால், பயிரின் ஒவ்வொரு இலையையும் தின்று மாசூலை நஷ்டமடையச் செய்யும். ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய பயிர் பூச்சிகளினால் பீடிக்கப்பட்டு தான் நஷ்டமடைந்து போவதை அறிந்திருப்பான். அவ்வித நஷ்டத்தை எவ்விதமாய் தடுப்பது என்பதை அறியவும் பலமுறை விரும்பியிருப்பான்.

பூச்சிகளில் எல்லாவிதங்களைப் பற்றியும், முக்கியமாய் பயிர்களுக்கு கெடுதலையுண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றியும், செவ்வையாய் ஆராய்ந்து பரிசோதனை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். எந்த நிலச்சுவான்கள் அல்லது குடியானவர்களுடைய பயிர்கள் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடிய நிலைமையில் அல்லது நஷ்டப்படுத்தப் பட்டாவது இருக்குமானால் அப்போது அவர்கள் இந்த ஆபீசுக்கு எழுதி அவருடைய ஆலோசனையைக் கோரவேண்டும். ஒவ்வொரு விதப் பூச்சியையும் நிவர்த்திக்க முறைகள் சொல்லுவது இப்போது சாத்

தியமில்லை யென்றாலும், பூச்சிகளில் அநேகத்தை நிவர்த்திக்க மார்க்கங்கள் சொல்லக்கூடும். பயிர் ஜாஸ்தியாய் பீடிக்கப்பட்டிருந்தால், அந்த சந்தர்ப்பத்தில் பயிரையும் சாகுபடி முதலியவற்றையும் நேரில் பார்வையிடவும், அதன் பிறகு பூச்சியின் பாதையை நிவர்த்திசெய்யும்பொருட்டு விஷயந்தெரிந்த ஒரு ஆபீசரை அனுப்பி உதவிசெய்யக்கூடும்.

நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளை நேரில் பார்வையிடாமல் பொதுவாய் ஆலோசனைசொல்லுவது அசாத்தியம். "என்னுடைய நெல்பயிர் பூச்சிகளால் சேதப்படுத்தப் பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை நிவர்த்திக்க முறைகள் தெரியப்படுத்தவேண்டும்" என்று எழுதுவது உபயோகமில்லை. ஏனெனில் நெல்பயிரை சேதப்படுத்தக்கூடிய பூச்சிகள் குறைந்தபட்சம் 12 தினுசுகள் இருப்பதாலும், அவைகளில் இன்னதுதான் இந்த சந்தர்ப்பத்தில் நஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்பது தெரியாது. பூச்சி யின்னதென்பதை அறியாமல் ஆலோசனை கூறுவதும் அசாத்தியம்.

நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற அல்லது உண்டு பண்ணுவதாகத் தோன்றுகிற பூச்சிகளில் சிலவற்றை அனுப்பவேண்டும். அப்போது எந்தப்பூச்சி நஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திப்பதற்கேற்ற முறைகள் சொல்லக்கூடும். அப்பூச்சிகளை உயிரோடிருக்கும்படி ஒரு தகரம் அல்லது மரப்பெட்டியில் கசக்கப்பட்ட காகிதம் அல்லது இலைச்சருகு முதலியவற்றோடும், ஆபீசரிடம் வந்து சேரும்வரையில் வழியில் ஆகாரமாக உபயோகப்படும்படி அது தின்னக்கூடிய பச்சைத்தட்டை அல்லது தழையையும் கொஞ்சம் போட்டு (unregistered) அன்ரிஜிஸ்டர்ட் தபால் பார்சல் மார்க்கம் அனுப்பவேண்டும். தகரப்பெட்டி கிடைக்காவிட்டால் ஒருபுறம் கணுவுள்ள மூங்கில் குழாய் ஒன்றை தக்கை அல்லது மரத்தால் செய்யப்பட்ட ஆப்பினால் மூடி பூச்சிகளை உயிரோடு அனுப்பலாம். ஆனால் மூடி பலமாகப் போடப்பட்டிருக்கவேண்டும். அவ்விதம் அனுப்பப்படும் [illegible] பார்சல்களில் அனுப்புகிறவர்களுடைய பேரும் முழுவிலாசமும் செவ்வையாய் எழுதப்பட்டிருப்பதுடன், எந்தப் பூச்சியைப்பற்றி ஆலோசனை கோரப்படுகிறதோ, அதைப்பற்றிய முழு விபரங்களடங்கிய ஒரு கடிதமும் இருக்கவேண்டும். அதாவது பீடிக்கப்பட்ட பயிர் நஷ்டத்தின் தன்மையையும் அளவையும், எப்போதும் முதல் தோன்றியதென்பதையும், முந்தின வருஷங்களில் அவ்விதமான பூச்சி தோன்றி யிருக்கிறதா என்பதைப் பற்றியும் எழுதவேண்டும்.

பூச்சிகளைப்பற்றிய எல்லா பார்சல்களும் கடிதங்களும் கீழே குறிக்கப் பட்டிருக்கிற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்:—

கவர்ன்மென்ட் எண்டமாலோஜிஸ்ட், விவசாயகாலேஜ், கோயம்புத்தூர்.

டி. பெயின்பிரிக்கி ப்ளேச்சர், கவர்ன்மென்ட் எண்டமாலோஜிஸ்ட்.



## மிருகமும் அழகியும்: 2.

25-வது பக்கத்தொடர்ச்சி.

அவளுக்கும் மிருகத்தினிடத்தில் ஸ்நேகம் ஆக ஆக அதிகப்பிரியமுண்டானது. தினம் சாயங்காலவேளையில் அது வருவதைச் சந்தோஷத்துடன் பார்த்துக்கொண்டிருப்பாள். அதுவும் இவளிடத்தில் மிகவும் பக்ஷமாயிருந்தது. அவளுடன்பேசுவதில் இதற்கு மிகுந்த ஆநந்தம். ஏனெனில் அவள் பொய் சொல்லாமல் தைரியமாக புத்திசாதுர்யத்துடன் பதில் சொல்வாள். ஆனால் அதற்கு தான் மனைவியாக இருக்க அவள் சிறிதும் விரும்பவில்லை.

இவ்விதம் நடந்து வருகையில் ஒருநாள் அழகி இந்த மாயாவினோதக் கண்ணாடியைப் பார்த்தாள். அப்பொழுது தன் தகப்பனார் படுக்கையில் அசௌக்கியமாய் படுத்திருப்பதைக் கண்டாள். தன் அருமைக்குமாரத்தியை இழந்ததற்காக மனவியாதிகொண்டு சாகுந்தருவாயிலிருந்தான். அந்த மிருகம் இவளைப் பார்க்க சாயங்காலத்தில் வந்தபொழுது இச் சங்கதியைச் சொல்லி தன்னை வீட்டுக்கு போய் தன் தகப்பனைப் பார்த்து வரும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அந்த மிருகம் 'நான் உன்னை அதிகமாக நேசிக்கிறேன். நீ இவ்விடத்தில் இல்லாமல் போய்விட்டால் நான் இறந்துவிடுவேன். ஆனால் நீ சந்துஷ்டியில்லாமலிருப்பதை விட நான் மரித்துப்போவது நலம். ஆகையால் மறுநாள் காலமே புறப்பட்டுப்போ,' என்றது.



அழகி மிக்க துக்கத்தடன் அழுது "நீ இறந்துபோகும்படி விட்டுவிட எனக்குச் சிறிதும் மனமில்லை. நான் ஒருவாரத்திற்குள் திரும்பி வருகிறேன்" என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் ம்ருகம் முகமலர்ச்சியுடன் தென்பட்டது. அது ஒரு மாயாசக்தியுள்ள மோதிரத்தை அழகியினிடத்தில் கொடுத்து "நீ இங்கே திரும்பிவர விரும்பும்பொழுது இந்த மோதிரத்தை மேஜையின்மீது வைத்து விட்டு, படுக்கப்போ" என்றது. இவளும் அவ்விதமே செய்தாள். மறுநாள் காலையில் அழகி தன் தகப்பன் வீட்டிலிருப்பதைக் கண்டாள்.

இவள் தகப்பனார் இவளைக் கண்டதும் வியாதி நீங்கினவன்போல் சந்தோஷமாயிருந்தான். இரண்டு மூன்று தினத்தில் வியாதி அவனை விட்டு நீங்க ஆரம்பித்தது. அழகி அந்த ம்ருகத்தைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லித் தான் ஒருவாரத்தில் திரும்பிவரும்படி சொல்லிவந்திருக்கிறேன் என்றாள். இவள் தன் தகப்பனிடத்திலேயேயிருந்து அவருக்கு வேண்டியவேலை செய்துவந்தாள். இப்படிச்செய்தமையால் காலங்கழிந்தது தெரியவில்லை. ம்ருகத்தைக் காணப்போகவேண்டுமென்று மனக்கலக்கத்துடனிருந்தாள். ஆனால் இவளது சகோதரிகள் இவளிடத்தில் அதிகபக்ஷமாயிருப்பதாக பாசாங்குசெய்து இவளை இங்கு இன்னொருவாரம் தங்கியிருக்கும்படி தேற்றினார்கள். இவள் அவ்விதமே இன்னொருவாரம் தங்கியிருக்க ஒத்துக்கொண்டாள்.

இவ்விதம் பத்துபனிரண்டு தினங்கள் சென்றன. பின்பு அழகி ஒரு இராத்திரி "அரண்மனை தோட்டத்தில் புல் நிறைந்த தரையில் மரணவஸ்தையில் படுத்திருப்பதையும், தன்மரணத்திற்கு இவள் தான் காரணமென்று இவளைக் குற்றஞ் சாற்றுவதையும் காணுவதாக" கனவுகண்டாள்.



அழகி உடனே கண்ணீர் தாரை தாரையாக விட்டழுதாள். படுக்கைவிட்டு எழுந்து, மோதிரத்தை மேஜையின்மேல் வைத்து மறுபடியும் நித்திரை செய்யப்போனாள். இவள் நித்திரை செய்து எழுந்தபொழுது ம்ருகத்தினு



டைய அரண்மனையில் தனது அறையில் இருந்தாள். எழுந்து வஸ்திரம் தரித்துக்கொண்டு நாள்முழுதும் காத்துக்கொண்டிருந்தாள். சாயங்காலம் வரையிலும் ம்ருகம் வரவேயில்லை. இன்று சாயங்காலம் ம்ருகம் வருமோ வாராதோ என்று நினைத்தாள். ம்ருகம் வரவேயில்லை. இன்று சாயங்காலம் ஆய்விட்டது. இராத்திரி ஒன்பதுமணியும் ஆனது. மிருகம்வரவில்லை. அழகி எல்லா அறைகளுக்குள்ளும் ஓடிப்போய் பார்த்தாள். ம்ருகம் தென்படவில்லை. இவள் முகத்தில் சந்தோஷம் என்பதே கிடையாது. மிக்க விசனத்துடன் "ஓ ம்ருகமே, பிரியமுள்ள ம்ருகமே, எங்கு இருக்கிறாய்?" என்று உரக்க கூவிக் கொண்டேபோனாள். கடைசியில்தான் கண்ட கனவு இவள்ஞாபகத்திற்கு வந்தது. இவள் உடனே தோட்டத்தில் புல் நிறைந்த இடத்திற்குஅவசரமாக ஓடிப்போனாள். அங்கு ஒரு அழகான ஊற்றுக்குச் சமீபத்தில் பூமியில் ம்ருகம் படுத்திருப்பதைக் கண்டாள். அது இறந்து கிடப்பதாகக் காணப்பட்டது. அந்தஊற்றிலிருந்து கொஞ்சம் ஜலம்கொண்டு வந்து, அந்த ம்ருகத்தினுடைய முகத்தில் தெளித்தாள். அது சுவாஸம் விட்டுக்கொண்டிருப்பதைக் கவனித்தாள். அதுவும் தன் கண்களைத்திறந்தது.



"அழகியே! நீ இல்லாமல் நான் உயிருடனிருக்க முடியவில்லை. ஆகையால்தான் நான் இவ்விதம்மரணம் அடைபவன்போல் இருந்தேன்" என்று ஈனகுரலுடன் சொல்லிற்று.

"எனது ப்ரியமுள்ள ம்ருகமே, அப்படிசெய்துகொள்ளக் கூடாது. நீ இறந்துபோகும்படி செய்துகொள்ளக்கூடாது. நானே நீ இல்லாமல் வசிக்க முடியாது. எனது ப்ரியமுள்ள ம்ருகமே, நான் உன்னை இப்பொழுது கலியாணம் செய்துகொள்கிறேன். ஏனெனில் எனது சகோதரிகளைப்போல

அழகாயும், பக்ஷமில்லாமலும் இருப்பதைவிட நற்குணமும், பக்ஷமும் நல்ல ஹிருதயமுமுள்ள ம்ருகம் எத்தனையோ மடங்கு மேலானது" என்று பதில் சொன்னாள்.

திடீரென்று ஒரு பிரகாசமான வெளிச்சம் அரண்மனையிலும் தோட்ட முழுவதும் ப்ரகாசித்தது. ம்ருகத்தினுடைய கண்கள் சந்தோஷத்துடன் மினுங்குதலை அழகி கண்டாள். ஒருக்ஷணத்தில் ம்ருகம் வெளியிற் போய்விட்டது. ம்ருகம் என் போனது என்று திகைத்தாள். உடனே கம்பீரமும் அழகும் உள்ள இராஜ குமாரன் தன்பக்கத்தில் நின்றான்.

"எனது பரிதாபமான ம்ருகமே! எனது ப்ரியமுள்ள ம்ருகம் எங்கே! எனக்கு அந்த ம்ருகம்தான் வேண்டும்" என்று அழகி துக்கத்துடன் அழுதாள்.

"நான்தான் அந்த ம்ருகம், ஒரு துஷ்ட தேவதை என்னை ம்ருகமாகச் செய்தது. அந்ததேவதைதான் என்னை மூடத்தனமாகவும், அவலக்ஷணமாகவும் செய்தது. ஒரு நல்ல பெண்மணி என்னைமணம் புரியதானே தன் இஷ்டசதுடன் வரும்வரையில் நான் ம்ருகமாக இருப்பேன்" என்று கட்டளையிட்டது.



"நாம் அரண்மனைக்குள் போய் சுகமாக வசிப்போம்" என்றான். இவர்கள் அரண்மனைக்குள் சென்றார்கள். இங்கு கல்லாய்க் கிடந்தவர்களெல்லாம் மனிதர்களாய் விட்டார்கள். பின்பு ஒரு நல்ல தேவதை அழகியினுடைய தகப்பனாரையும், சகோதரிகளையும் கண் திறந்து மூடுவதற்குள் கொண்டுவந்து சேர்த்தது. அந்த தேவதை பக்ஷமில்லா சகோதரிகளை அரண்மனை வாசற்படியில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒருவளை நிறுத்தி கல்லாகச் செய்தது.





அழகி அவர்களை அவ்விதம் செய்யாமல் விட்டு விடும்படி கெஞ்சிக்
கேட்டுக் கொண்டாள். "ஆனால், அது முடியாதகாரியம், ஏனெனில் குற்
றஞ் செய்த ஜனங்களை தாங்கள் செய்த குற்றத்தைக்குறித்து விசனப்படு
கிற வரையிலும் விடக்கூடாது. அவர்கள் செய்த குற்றத்திற்குச் சரியான
தண்டனையைப் பெறவேண்டும், உனது சகோதரிகள் விசனப்படுகிற
வரையில் இவ்விதம் கல்லாகத்தான் நின்று கொண்டிருக்கவேண்டும்; அவர்
கள் உண்மையாகவே தாங்கள்செய்த துற்காரியத்தைக் குறித்து விசனப்ப
டும்பொழுது அவர்களை நான் மனிதர்களாக மாற்றிவிடுகிறேன்" என்று
சொல்லிற்று.

காலக்கிரமத்தில் அவர்கள் துக்கப்பட்டார்கள். தேவதை அவர்களை மனிதர்களாக மாற்றிற்று. அழகி இராஜகுமாரனை மணம் புரிந்து சுகமாக வாழ்ந்துவந்தாள். தன் தகப்பனாரை தன் இடத்திலேயே வைத்துக்கொண்டு மிகவும் அன்புடன் அவரைக் காப்பாற்றி வந்தாள்.

இராஜ குமாரனும் அழகியும் சுகமாக இல்லறம் நடத்திக்கொண்டு வெகுகாலம் ஜீவித்தார்கள்.

(முற்றிற்று.)

---

# ஹாஸ்யத் துணுக்குகள்.

ஒருமாலுமி ஒரு கெடியாரக் கடைக்காரனிடஞ் சென்று "ஐயா இந்தக் கெடியாரத்தை சற்று பழுது பார்த்துக் கொடும்" என,

அவன்:—"ஐயா! கூலி ரொம்ப ஆகுமே!

மாலு:—"என்ன! அதன் விலைக்கு மேலேயா இருக்கப்போகிறது?

அவன்:—" இல்லை, நீங்கள் வாங்கின விலைக்கு பாதிலேயே நான் ரிபேர் பண்ணி விடுகிறேன் ஐயா !

மாலு:— ஆனால்சரி; வேலையை முடி.

அவன்:— என்ன விலைக்கு வாங்கினீர் ? ஐயா!

மாலு:— நானா ? வெகு சொற்பம்.

அவன்:— சொல்லுமே!

மாலு:— நான்—ன்—ன். அதை நான் ஒரு கப்பற் சண்டையிலே ஒத்தன் கிட்டேருந்து இரண்டு அறை கொடுத்து வாங்கினேன்.

அவன்:— ஐயோ !

மாலு :— சரி? உமக்கு ஒரு அறை கொடுக்கிறேன்; வேலையைப்பாரும்.

* * * *

வாத்தியார் பையனைப்பார்த்து "எய் நேற்று நீ எவ்வளவு அடி வாங்கினாய் ?

இன்னொருவன்: "ஸார் அவனுக்கு ஆறு கொடுத்தேளே !

வாத்:—இது விஷயத்தில் நீதிசாஸ்திரம் என்ன சொல்கிறது?

பையன்:—உடனே: " பிறரிடமிருந்து வாங்கிக் கொள்வதை விட அவருக்குக் கொடுப்பது மேன்மை.

வந்தவன்:—ஐயோ ! அப்படியிருந்துட்டா வாத்தியார்பாடு திண்டாட்டந் தான்.

* * * *

கனவான் ஒருவர் தன் வண்டிககாரன் மகனொருவனைச் சந்தித்துக் " பையா! நான்யார் என்று தெரியுமா?

பையன்:—" எனக்குத் தெரியாதா! எங்கப்பா வண்டிலே தினம் உக்கா ந்து கிட்டுப்போவீரே!

* * * *

ஒரு பெரியவர் சன்மார்க்க போதனைகள் செய்து கொண்டிருக்கையில் " செல்வம் " என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அவர் சொன்னது முக்கியமாய் செல்வம் பலரை ஸ்வாமியை நினைக்கவொண்ணாமற் செய்து விடுகிறது. செல்வம் மனிதனுக்கிருக்கும் ஸ்வாமி நினைவை மறைத்து விடுகிறது என்பதே. இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஒரு தனவான் " எனக்குத் தெரியல்லை " எப்படின்னு எனக்குத் தெரிய வேயில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார். இதைக் கேட்ட பெரியவர் உடனே ஒருகாகிதத்தில் " கடவுள் " என்று எழுதி அவரைவாசிச்சுச்சொல்ல அவர்வாசித்தார். உடனே அந்த எழுத்துகள் மேல் ஒரு தங்கத்துண்டை மூடி இப்பொழுது தெரிகிறதா ? என இப்பொழுது எழுத்துகள் தெரியவில்லையே என்று தனவான் சொன்னார்.

---

வி. என். ராஜ்.



# பொது சமாசாரக் குறிப்பு

இங்கிலாந்தில் மூன்று அழகான மசூதிகள் கட்டப்பட்டிருக்கின்றனவாம்.

இந்தியாவுக்கு வரும் சாமான்களில் 100-க்கு 60 ஜப்பான்தேசத்திலிருந்து வருகின்றனவாம்.

நடிப்பதில் பேர் பெற்ற மிஸ்மாட் ஆலன் கல்கத்தா முதலிய விடங்களில் நடனம் செய்தாளாம். இந்தியர்களும் ஐரோப்பிய கனவான்களும் திரளாகச்சென்று பார்த்தார்களாம்.

இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகள் 1913-ம் வருஷத்தில் செய்த பழியங்களால் அதிக பவுன் நஷ்டமாம்.

தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டார் அங்குள்ள இந்தியர்களுக்கு அமிதமாக எதாவது செய்ய எண்ணியிருக்கிறார்களாம். இதன் உண்மை செய்த பின் தான் தெரியும்.

ருஷிய கவர்ன்மெண்டார் மூன்று வருஷத்துக்குள் 1000 ஆகாய ரதங்களை தயார் செய்ய உத்தரவு செய்திருக்கிறார்களாம்.

இங்கிலாந்தில் காலஞ் சென்ற ஒஸ்டன் ப்ளேட்னட் என்ற சீமாட்டியின் விதம் விதமான 60 உடுப்புகளும் 110 டொப்பிகளும் 80, 000 பவுனுக்கு விலைக்கு கொடுக்கப்பட்டதாம்.

1914 ௵ பிப்ருவரி௴ 26௳ இந்தியாவிலிருந்து ஸிலோனுக்குப் போகும் இருப்புப்பாதை நமது கவர்னர் அவர்களால் திறக்கப்படும்.

நமது அரச சக்ரவர்த்தி அடுத்த மாசம் 2௳ பார்லிமெண்ட் திறக்கப்படுமென்று பைரங்க பத்திரத்தில் கையெழுத்து வைத்துவிட்டாராம்.

லேகாங்யூக்ஸ் என்பவர் ஆகாயரதத்தை 20, 295 அடி உயரம் செலுத்தினாராம். இப்படி இவர் செய்தது தான் முதற்தடவையாம்.

---

## தென் அமெரிக்காவில் பூகம்பமும் புயலும்.

இங்கு பூமி அதிர்ச்சி உண்டாய், கடல் பொங்கிற்று. ஆனால் சேதமில்லை.

குறிப்பு:—லிமா என்ற பட்டணம் தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்ற நாட்டிலிருக்கும் ஒரு துறை முகப்பட்டணம். பஸிபிக்மகா சமுத்திரத்தின் கீழ் கரையிலிருக்கிற ஜப்பானில் எந்த சமயத்தில் பூகம்பம் உண்டாய் கடல் பொங்கிற்றோ, அதே சமயத்தில் பஸிபிக் மகா சமுத்திரத்தின் மேற்குக் கரையில் ஜப்பானுக்கு நேர் மேற்கிலுள்ள பெரு என்ற நாட்டிலும் அதே உத்பாதங்கள் உண்டானது கவனிக்கத்தக்கது.

(சு. மீ.)

---

## நமது துண்டு பத்ரிகை.

வீட்டில் தூசி அதிகமிருந்தால் அதனால் பலவித தொத்து வியாதிகள் உண்டாகும் என டாக்டர்களின் அபிப்பிராயம். வீட்டிலுள்ள துணி தலையணை, படுக்கை

முதலியவைகளை அப்போதைக்கப்போது தூசி இல்லாமல் நன்றாக உதரிவைக்கவேண்டும். முகம் கை, கால்களை வெளியில் போய் வீட்டுக்குவரும்பொழுது நன்றாக ஜலத்தால்சுத்திசெய்து கொள்ள வேண்டும்.

சென்னையில் பால் விலையோ அதிகம். பால் கொடுப்போர்களெ மாந்தவனுக்கு தண்ணீர் அதிகமாகச் சேர்த்து கொடுப்பதில் சிறிதும் அஞ்சுவதில்லை. பாலைநல்ல அழுக்கில்லாத பாத்திரத்தில் வாங்கி நன்றாக காய்ச்சி குடிக்கவேண்டும். பாலில்கிருமிகள் சீக்கிரம் வந்து சேருமாம். ஆகையால் அதிகநேரம் திறந்தாவது, மூடியாவது வைத்திருக்க கூடாது.

சமையல் செய்பவர்கள் சிக்கனமாயிருக்க முயல்வது நலம். அதிகமாக அன்னாதிகளையும், காய்கறிகளையும் சமையல் செய்து மீறும்படி வைக்கக்கூடாது. அப்படி ஒருசமயம் ஏதாவது மீதியா யிருந்தால் எறிந்து விடவேண்டும். வைத்திருந்து மறுநாள் புசிக்கக்கூடாது.

நமது தேசத்தில் பத்திரிகைகளை வாங்கிப்படிப்பவர்கள் வெகுசிலர். மற்றவர்கள் வீணுகபணத்தைபற்பலவழிகளில் செலவுசெய்கிறார்கள். அறிவை விருத்திசெய்ய சிறிதேனும் முயலாமலிருப்பது விசனிக்கத்தகுந்ததே. நமக்கு உலகவிஷயம், ராஜாங்க விஷயம், கைத்தொழில், கோஆபரேஷன், வியாபாரம் முதலிய விஷயங்கள் அப்போதைக்கப்போது தெரிய வேண்டுமானால் பத்திரிகைகள் அவசியமானது. அவைகளை ஆதரிக்க நம்மவர் முன்வரவேண்டும்.

திருவனந்த புரத்தில் பெருநாட் எனும் ஜாதியார் பெண்மணிகளை சர்க்கார் லோயர் க்ரேட் எலிமெண்டரி ஸ்கூலில் சேர்த்துக் கொள்வதில்லை என மிஸ்டர் குமார ஆசான் கடிதத்தைக் கனம் டாரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டரக்ஷன் அப்பெண்மணிகளை சேர்த்துக் கொள்ளலாமென உத்தரவளித்திருக்கிறாராம்.

திருவநந்தபுறத்தில் "கிருஷிடயறக்டர் ஆபீஸில் சிற்றுயிர் சாஸ்திரம் கற்றவரான ஒரு அஸிஸ்டண்ட் நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர், பலவிதமான சிறு பூச்சிகளினின்றும் பயிருகளுக்குண்டாகக் கூடியநஷ்டங்களை தாம் தெரிந்து கொண்டு அவைகளை நிவாரணம்செய்வதற்குரிய மார்க்கங்களை யுற்றுப்பார்த்து கிருஷி செய்பவர்களுக்கு கற்றுக்கொடுப்பார், அவ்விஷயமாக சகாயத்தை விரும்புகிறவர்கள் அந்த ஆபீஸர்க்கு அந்தந்தகாலங்களில்யெழுதி தெரிவிப்பதுமன்னியில்தங்களுடைய தேசங்களில் முன் கூறின உபத்திரவங்களுண்டாகிற பொழுது அவைகளைப்பற்றி உடன்தானே தெரிவிக்கவும் வேண்டுமாம் என திருவனந்தபுரம் கெஜட் கூறுகிறது.

---

## வேடிக்கை சமாசாரக் குறிப்பு.

உலகத்தில்மிக நீண்ட வாராவதி:—சீனு தேசத்தைச்சார்ந்த சான்காங் (Sangang) என்னு மிடத்திலுள்ள லயன் வாராவதி (பாலம்) யே உலகத்தில் மிக நீண்டது. இது மஞ்சட்கடலின் மேல் ஐந்தரைமைல் நீளமுள்ளதாய் முன்னூறு பாரிய கற்றூண்களாற் சுமக்கப்பெற்றதாய்க் கட்டப் பட்டிருக்கின்றதாம்.

பாரத யுத்த காலநிர்ணயம:—ப்ரொபஸர் ஜகேச சந்த்ர ராய் என்னும் ஓர் பண்டிதர் மகா பாரதத்திற் கூறப்பட்டிருக்கும் கிரகங்களின் நிலைகளை ஆராய்ந்து பாரத யுத்தம் நடந்தகாலம் கிறீஸ்து பிறக்குமுன் உச லாவது



நூற்றாண்டில் அதாவது முன் 4600 வருஷங்களுக்கு முன் என்றும், பாரதக் கதையிற் பெரும்பாகம் 1200 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதென்றும் கூறுகின்றார்.

எலுமிச்சங்கன்று நடுதல்:—எலுமிச்சையானது பயிரிடும் முறைக்குத் தகுந்தபடி பலன் கொடுக்கக்கூடியது. எலுமிச்சை நடுவதற்கேற்ற நிலம் மேட்டுத் தரையா யிருத்தல் வேண்டும். அரைமுழ நீளம், அரைமுழ அகலம், அரைமுழ ஆழம் உள்ளதாய்க்குழி தோண்டி அதில் தொழுவத்தெரு, குப்பை கூளம் முதலியவைகளையும் சாம்பலையும் போட்டு ஆடுமாடு அடைக்கப்படும் இடங்களுள்ள பசளை மண்ணால் மூடி அதன்மேற் செம்மண் பாவி அதன்மேல் ஆட்டுப்புழுக்கை எரு மண் இவற்றைக்கலந்து கொட்டி மூடல்வேண்டும். எலுமிச்சங் கன்றைக் குழியின் நடுவில் நடல்வேண்டும். கன்று தழைக்கிற வரையிற் காலையும் மாலையும் கிரமமாய்த் தண்ணீர் ஊற்றல் வேண்டும். இப்படிச் செய்தால் கன்றுபடாமற் காய்த்துப் பூத்துப் பயன்றரும்.

பி—ழி

பாம்புகடிக்கு மருந்து:—

இந்திய கவர்ன்மெண்டார் சர்ப்பம் தீண்டியவர்களைப் பிழைக்கும்படி மருந்துகொடுத்து செய்பவனுக்கு வெகுமதி கொடுப்பார்களென்ற விஷயம் ஸிட்னியிலுள்ள ப்ரொபஸர் பாக்ஸ் என்பவர் கேள்வியுற்று சிலோனுக்கும் இந்தியாவுக்கும் ஜாவாவழியாக பிரயாணம் செய்து வருகிறாரென பாம்பே க்ரானிகல் எழுதுகிறது. இவரை ஸிட்னியிலுள்ளவர்கள் சர்ப்பராஜன் என்று கூப்பிடுகிறார்களாம். ஏனெனில் இவரிடத்தில் சர்ப்பத்தால் தீண்டியவனை பிழைப்பிக்கும் படியான ஒரு அற்புத ஔஷதமிருக்கிறதாம். இம்மருந்தில் நம்பிக்கையுள்ள அவ்வூரிலுள்ள சில தனவந்தர்கள் இவருக்கு பிரயாணம் செய்ய பணம் உதவி செய்திருக்கிறார்களாம். இவரும் தன் மருந்து நன்மையையுண்டாக்கு மென்றும், நாகப்பாம்பின் விஷம் டைகர் பாம்பின் விஷத்தைவிட மேலானதெனவும் அபிப்பிராயப் படுகிறாராம்.

ஸன்டாடோமிஸ்கோ கோயிலில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்பவருடைய அஸ்திகள் (எலும்புகள்) யனுமாபொருட்காட்சிக்குக் கொண்டுபோகப்படுமாம்.

லாகூர் முனிசிபாலிடியார் தெருக்களிலும், சந்துகளிலும், மேடு பள்ளமிராமல் சமமாகயிருக்க அகலமான, கற்களைப் போடுவதற்கு லக்ஷம் ரூ. செலவு செய்ய எண்ணியிருக்கிறார்களாம்.

எர்ல் ஆப் க்ராபோர்ட் சேர்த்து வைத்திருந்த பழைய ஸ்டாம்புகளை ஒரு இங்கிலீஷ்மாது 20,000 பவுன் கொடுத்து வாங்கிக் கொண்டாளாம்.

தென் ஆபிரிக்கா பண்டுக்கு இதுவரையிலும் சென்னையில் ரூ. 65,000 வரையில் தான் சேர்ந்திருக்கிறதாம்.

உலகத்தைச்சுற்றி ஆகாய சஞ்சாரம்:—வெட்ரினெஸ் என்ற ஆகாய சஞ்சாரி உலகத்தைச் சுற்றி ஆகாயமார்க்கமாகவே செல்லத் தீர்மானித்து

ஈஜிப்ட் தேசத்திலுள்ள கெய்ரோ நகருக்கு வந்து ஜனவரிமீ 1௳ சேர்ந்திருக்கிறார். கெய்ரோவிலிருந்து தென் ஆபிரிக்காவின் தெற்குக் கோடியாகிய நம்பிக்கை முனைக்கு ஆகாய மார்க்கமாக சஞ்சாரம் செய்யும்படி ஆகாய சஞ்சார சங்கம் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. நீல நதிப் பிரதேசம், உகாண்டா, மொம்பாஸா, ஸான்ஸிபார், முதலிய பல நாடுகளைக் கடந்து அவர் செல்லவேண்டியிருக்கும்.

ஜெருஸலத்தில் பிரமை (ஆசியாத்துரிக்கியிலுள்ள) ஜெருஸலம் என்றபட்டணத்துக்கு ஒரு ஆகாய சஞ்சாரி ஆகாய விமானத்தில் ஜனவரி 1௳ வந்துசேர, இந்த அதிசயத்தை இதற்குமுன் ஜனங்கள் கண்டறியாதவர்களாகையால், கூட்டங்கூடி பிரமித்து நின்றார்கள். சு. மி.

---

## ரஸிகை.

### ஓர் இனிய தமிழ் நாடகம்.

### அங்கம் 1.

### காட்சி 3.

[அரச புத்திரிகளது பூம்பொழிலின் தென்புற வெல்லையாகிய வேலிக்குச் சற்று தூரத்தில் ஓர் தடாகம். தடாகத்தின் மேற்குப்புறக் கரையருகே ஓர் சிங்காரஆலயம். அவ்வாலயத்துள் அமைக்கப்பெற்றிருந்த ஓர் பீடத்தின்மீது ஓர் ஸரஸ்வதி படம். படத்தின் முன்பு சில கனிவர்க்கங்களும் ஓர் பொற்பாத்திரத்தில் அமிர்தமும் சமர்ப்பிக்கப்பெற்றிருக்கின்றன. அருகே ஓர் தீபம் எரிகின்றது. ரஸிகை வசீகரியாகிய இரு சகோதரிகளும் அன்னையின் முன்பு முழந்தாளிலிருந்துகொண்டு கைகூப்பி உள்ளமுருகப் பாடுகின்றார்கள்.]

ரஸிகை.—* வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

வசீகரி.—† ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

ரஸிகை.—* வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாக வுண்டாக்கும் வண்ணம்

* ஒட்டக்கூத்தர் வாக்கு.
† கம்பர் வாக்கு.



கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

வசீகரி.—நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்தில்
கூடும் பசும் பொற் கொடியே
கனகக் குழையுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

ரஸிகை.—அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாபமயிலே
சகல கலாவல்லியே.

வசீகரி.—தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

ரஸிகை.—பஞ்சப்பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத்துவச முயர்த்தோன் செங்நாவு
மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

வசீகரி.—பண்ணும் பாதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகலகலாவல்லியே.

* இதுமுதல் பத்துச் செய்யுள்களும் குமாரகுரு சுவாமிகள் வாக்கு.

ரஸிகை.— பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனு மென்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங்கலைத் தமிழ்த்தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

வசீகரி.—சொல்விற் பனமு மவதான
முங் கல்வி செல்லவல்ல
நல் வித்தையும் தந்தடிமை கொள்
வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலா வல்லியே.

ரஸிகை.—சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

வசீகரி.—மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்டளவில் பணியச் செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே

சுப்பராயன்.

---

## துண்டுக் கடிதங்கள்.

நமது தேசத்தில் நம்மவர்கள் பற்பல விஷயங்களில் முன்னடைய முயன்று வருகிறார்கள். கல்வி விஷயத்திலோ பெண்கள் விஷயத்தில் மாத்திரம் அசிரத்தை காட்டி வருகிறார்கள். சிரத்தையுள்ள சிலரோ அசாத்தியமான விஷயங்களைக் கற்பிக்க வேண்டுமென அபிப்பிராயப்படுகிறார்கள். சிலர் பெண்கள் எழுதவும், படிக்கவும், வீட்டு கணக்கு, சமையல்வேலை, குடும்ப நிர்வாகமுதலிய விஷயங்களைச் செவ்வனே கற்றுக் கொண்டால் போதும் என்கிறார்கள். சிலர் இங்கிலீஷும் படித்து வருவது நலம் என்கிறார்கள். கல்வி விஷயத்தில் நாம் இந்த பாஷையைத்தான் படிக்க வேண்டும், அந்த பாஷையைப் படிக்கக் கூடாது என்று சொல்ல



வாவில்லை; ஆனால் எந்த பாஷையைக் கற்றுக் கொண்டால் அவர்கள் சுலபமாக எல்லாவிஷயங்களையும் அறிந்து கொள்ளலாமோ அப்பாஷை அல்லது அப்பாஷைகளைப் படித்து வருவது நலமென்போம்.

கிரகத்தில் சுத்தியின்மை வியாதிக்கு முதற்காரணம். ஆனதுபற்றி, ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிற்கு சுண்ணாம்பு அடிக்கடி பூசி வீட்டில் குப்பைகூளம், ஒட்டடை முதலியவைகளில்லாமல் பார்த்துவருவது தான் சுகாதாரத்திற்கேற்றதாகும்.

---

## சமாச்சாரக் குறிப்பு.

மதுரை சேதுபதி ஹைஸ்கூல்:—“கொண்டாட்ட சமயத்தில் தலைமை வகித்த டிஸ்டிரிக்டுஜட்ஜ் மிஸ்டர் பீ. ஸீ. ஸ்மித்து கடைசியில் தாம் செய்த பிரசங்கத்தில், ஸ்கூல் பிள்ளைகளுக்கு மூன்று விஷயங்களில் பழக்கமுண்டாவது அவசியமென்றார். முதலாவது, யோக்கியமான நடத்தை; இரண்டாவது, தம் ஜீவனோபாயத்தைத் தவிர வேறொரு வித்தையை ஒழிந்தநேரங்களில் பயிலுதல்; மூன்றாவது ஆட்டத்தில் விருப்பம்; இந்த மூன்றும் அவசியமென்றார்.

நம் ஸ்கூல் பிள்ளைகள் தற்காலம் ஆங்கிலபாஷையை நன்றாய் எழுதவும் பேசவும் தெரிந்தால் போதுமென்ற எண்ணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அன்னிய பாஷையை நன்றாய் எழுதப்பேசத் தெரிந்தாலும் தாய் பாஷையை எழுதப் பேசத்தெரிந்தாலும் அவைகள் படிப்புக்கு முக்கிய லக்ஷணமாகா. அவைகளைவிட முக்ய லக்ஷணம் யோக்கியதை, உண்மை உரைத்தல், பரோபகாரஞ் செய்தல், தயை, சாந்தம், முதலிய குணங்களடங்கிய யோக்கிதையே பிரதானம். இதைத் தவிர தேக சம்ரக்ஷணையின் பொருட்டு ஆட்டத்தில் பிரிய முள்ளவர்களாய், தினந்தோறும் ஒழிந்த நேரத்தை மூளைவேலையிலன்றி சரீரப்பயிற்சி உண்டாகும் படியாய் செலவு செய்ய வேண்டும். இப்படிச் செலவு செய்யத் தெரியாமலோ, அல்லது அதில் அசிரத்தை வைத்தோ தேகத்தைச் சிலகாலம் சிரமப்படுத்தாமல் நம்மவர் வியாதியையடைந்து, அகாலத்தில் மாண்டுபோகிறார்கள். நீர்ரோகம், பசியின்மை, க்ஷயரோகம். முதலிய ரோகங்கள், சுத்தமான காற்று உலாவுமிடங்களில் தேகப்பயிற்சி இல்லாமல் நேரிடுகின்றன. இதுவுமன்றி, முதுமைப் பருவத்தில் ஜீவனத்துக்காக உழைப்பது நின்றுபோய் தேகப்பயிற்சியும் சாத்தியமில்லாமலிருக்கும்போது, பொழுது போக்குக் கனுகூலமாய் ஒரு விசேஷ வித்தையைக் கற்றிருக்கவேண்டும். சங்கீதம், சித்திரம் எழுதல், தச்சுத்தொழில், புல் பூண்டு வகைகளின்சாஸ்திரம் இவைகளில் ஏதேனு மொன்றைக் கற்றிருக்கவேண்டும். இப்படிக் கற்றிராமலே நம்மவரில் பலர் முதுமைப்பருவத்தில் சந்தோஷமாய்ப் பொழுது போக்கத் தெரியாமல் அவஸ்தைப் படுகிறார்கள்.

எரிமலை உபத்திரவம். :—மெல் போர்ன், ஜனவரி 21—நியூஹெப்ரடீஸ் என்ற தீவுக்கூட்டத்தில் ஏற்பட்ட எரிமலை உபத்திரவத்தைப்பற்றி அங்கிருந்து வந்திருக்கிற ஒரு கப்பல் சொல்லத் தெரிகிறது. ஆம்ப்ரிம் என்ற தீவின்ரூபமே மாறிவிட்டதாம். பாதிரி ஹாஸ்பிடல் ஒன்று இருந்த விடம் இப்பொழுது 80-அடி ஆழத்தில் நீரில்மூழ்கிக் கிடக்கிறதாம். முன்

கடலாயிருந்த யிடத்தில் இப்பொழுது2-மைல் விஸ்தீரணத்துக்கு பூமி கிளம்பியிருக்கிறது. எரிமலை பொங்கிக்கொண்டிருந்த காலத்தில் அந்தத் தீவு முழுமையும் எரி குழம்பால் மூடப்பட்டிருந்ததாம். ஆமைகளும் மீன்களும் வெந்துபோய் நீரில் மிதந்தனவாம்.

வேறு இரண்டு தீவுகளிலும் புகை கிளம்பிக்கொண்டிருப்பதால், எரிமலைக் குழம்பு வெளிப்பட்டுவிடுமோ என்ற பயமுண்டாயிருக்கிறது.

"லேடி பெண்ட் லண்டு நடத்திய வீட்டுக் கச்சேரி:—போன சனிக்கிழமை மாலை விருந்து மண்டபத்தில் லேடிபெண்ட்லாண்டு ஒரு வீட்டுக் கச்சேரி நடத்தினர். இரவு 9-35-மணிக்கு கவர்னர் தம்பதிகள் விருந்து மண்டபத்திற்கு வந்துசேர்ந்தார்கள். பல ஐரோப்பிய இந்திய கனவான்கள் வந்திருந்தார்கள். H. E. கவர்னர் அச்சமயம், புதிய வருஷத்திய பட்டத்தைப் பெற்றவர் களுக்கு மெடல்களைக் கொடுத்தார். அவர்களைப் பற்றி புகழ்ச்சியாகச் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, பிறகு ஆல்பர்ட் மெடல் காப்டன் ராஸுக்கும் கெய்ஸரிஹிண்டு தங்கமெடல் டாக்டர் ஸ்டோக்ஸுக்கும் கெஸ்ஸிரிஹிண்டு வெள்ளி மெடல்களை லேடி அட்கின்ஸனுக்கும், மிஸ்ஸஸ் ஹெண்டர்ஸனுக்கும் மிஸ்டர் C. V. டெல்ரிம்புள்ஹேக்கும், மிஸ்டர் J. M. மெய்புனுக்கும், இம்பீரியல் ஸர்விஸ் ஆர்டர் என்ற பட்டத்தை ராவ்பகதூர் மிஸ்டர் A. C. ப்ரணதார்த்திஹர அய்யருக்கும் இன்னும் சில ஐரோப்பியர்களுக்கும் கொடுத்தார்."

## சக்கரவர்த்தி தம்பதிகளின் சுற்றுப் பிரயாணம்.

"சக்கரவர்த்தி தம்பதிகள், தொழில்கள் நடத்தப்படும் பல மத்திய
ஸ்தானங்களைப் பார்த்து விட்டுவர யோசித்திருக்கிறார்கள். ஹல் என்ற
விடத்தில் கப்பல் தங்குவதற்காகக் கட்டப்பட்டுவரும் ஸ்தலத்திற்கு ராஜ
சக்கரவர்த்தி சென்று அதைத் திறந்து வைப்பார். அந்தத்திறப்புமகோ
ற்சவம் 1914-வருஷம் மே மாதம் கடைசியிலாவது, ஜூன் மாதம் முதலி
லாவது கொண்டாடப்படும். அதைத்திறந்து வைத்து விட்டு, சக்கர
வர்த்தி தம்பதிகள் அன்றிரவே லண்டனுக்குத் திரும்பி வந்து விடுவார்
களோ, அல்லது லீட்ஸிலுள்ள பிரசித்திபெற்ற ஆட்டுரோமத் தொழிற்
சாலையைப் பார்ப்பதற்காக அங்குசென்று அதைப் பார்த்துவிட்டு, அங்
குள்ள எர்ல்ஆப்ஹேர்உட்டுடன் கொஞ்சம் நாள் தங்கி யிருப்பார்களோ
என்ற விஷயம் சில வாரங்களுக் கப்பால்தான் நிச்சயப்படும். சக்கரவர்த்
திதம்பதிகளின் இரண்டாவது சுற்றுப்பிரயாணம் ஜூலைமாதத்தில் நட
க்கு மென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்பொழுது டயன், டீஸ்
என்ற இரண்டு நதிகளின் கரையிலிருக்கும் கப்பல் கட்டப்படும் சாலைக
ளைக் போய்ப் பார்ப்பார்கள். அனேக இரும்புச்சாமான்கள் செய்யப்
படும் சாலைகள் அடங்கிய பிராந்தியங்களை 1915-ம் வருஷத்தில் சக்கரவர்
த்தி தம்பதிகள் பார்க்கப்போவார்கள். இரும்புச்சாமான்கள் செய்யப்படும்
சாலைகள் அடங்கிய பிராந்தியம் எப்பொழுதும் புகையால் மூடப்பட்டிருக
குமாதலால் அப்பிராந்தியத்திற்கு கறுப்பு நாடு (Black Country) என்று
பெயர்" —சுதேசமித்திரன்.

## லேடி ஹார்டிஞ்சின் நன்கொடை

பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட துருக்கிக் குடும்பங்களின் பஞ்சநிவர்த்தி பண்டுக்கு, லேடி ஹார்டிஞ்சு, லண்டனிலுள்ள ரயிட் ஆனரெபில் அமீர் அலிமூலமாய் 1000-ரூபாய் நன்கொடையாக அனுப்பியிருக்கிறார்."


# அமிருதாஞ்ஜனம்.

ஸகலமான வியாதிகளுக்கும் உபயோகமானது

நல்ல மணமாக இருக்கும்! இனிமையாக இருக்கும்!!

சீசா 1-க்கு ரூ. 0—8—0.




தலைநோவு, கால்நோவு, முட்டிகள் நோவு, வாயு, இரும்பல், க்ஷயம், சுளுக்கு, காயங்கள், பல்நோவு, தேள்கடி, உப்பசம், திமுறு, வீக்கம் முதலான நோய்கள் அதிகமாக பாதைபடுத்துகிறபடியால் இதற்கெல்லாம் அமிருதாஞ்ஜனம் என்கிற மருந்தை உபயோகித்ததில் சுகமாக இருக்கிறதென்று தெரிந்து கொண்டார்கள். இலக்ஷக்கணக்கான ஜனங்கள் இதை அனுபவிக்கிறார்கள்.

## மோகினி தைலம்.

5 தோலா எண்ணையுள்ள சீசா 1-க்கு ரூ. 1—0—0

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் உபயோகப்படுத்தத் தகுந்தது.

இவை வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு சுகமான நித்திரையையுண்டுபண்ணி ஸௌக்கியத்தைத்தருகிறது. சுந்தரமான லாவண்ணியமுள்ள மயிர்கள் இனிப்பாக வளரும். ஒருதடவை உபயோகித்துப் பார்த்தால் அதனுடைய உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

## படைக்குப்போடும் தைலம்.

இந்தத் தைலம் எல்லாவித அஸாத்தியமான படைகளையும் போக்கும். சர்மத்தில் உண்டாகும் எல்லாவித வியாதிகளுக்கும் கூட சிறந்த ஔஷதம். இரண்டுதடவை உபயோகித்தவுடன் படை போய்விடும். அப்படி குணம் தெரியாவிட்டால் ரூபாயைத் திருப்பிவிடுவோம். ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான பாட்டல்கள் செலவாகிறது. விலை புட்டி 1-க்கு 6. அணா.

## தந்த சூர்ணம்.

பல் துலக்க இது நல்ல தூள். அநேகரால் தினந்தோறும் உபயோகிக்கப் படுகிறது. இதன் விலை 0—2—0 மாத்திரமே.

எங்களுடைய கேட்லாக் தேவையானவர் இந்த அட்ரஸுக்கு எழுதினால் அனுப்பிக்கப்படும்.

அமிருதாஞ்ஜனம் டெப்போ,
9.ஜிஹாங்கீர் தெரு, ஜார்ஜ்டவுன்,
சென்னப்பட்டணம்.

**AMRUTANJAN DEPOT.**
*9. Jehanger Street,*
*George Town, Madras.*

## மாதர் மனோரஞ்சனி சந்தாதார்களுக்கு.

ஸ்திரீகளுக்கு மிகவும் அவசியமான ஹிந்துமத தத்துவ பாடல்களும் கும்மிகளும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வால்மீகிராமாயணப்பாட்டும் ஞான ராமாயணக்கப்பலும் ... | 0 | 3 | 0 | பஞ்சீகரணமகாவாக்கியமும் ஜீவநாடகம் ஒரு கட்டமுள்பட ... | 0 | 5 | ( |
| குசலவாக்கியம் ... | 0 | 2 | 6 | சாவித்ரிபாடம் ... | 0 | 1 | ( |
| அனந்தங்காடு ... | 0 | 1 | 6 | ஐந்து கும்மிகள் ... | 0 | 2 | 0 |
| பார்வதியம்மன் சோபனம் | 0 | 3 | 6 | | | | |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீலலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும் | 0 | 5 | 0 |
| குறிப்பு:—எல்லாப்புத்தகங்களும் சேர்த்து விலை ரூ | 1 | 6 | 0 |
| வி.பி. தாபாற்செலவு உள்பட ரூ. | 1 | 9 | 0 |

மாதர் மனோரஞ்சனி சந்தாதாரர்களுக்கு மட்டும் வி. பி. தபால் செலவும் உள்பட விலை ரூ. 1 6 0 தான். இப்பத்திரிகை சந்தாதாரர்களுக்கு லலிதாம்பாள் சோபனம் 4 அணுவுக்குக்கொடுக்கப்படும்.

இச்சமயத்தை இழக்காதீர்கள்! உடனே எழுதுங்கள். செலவாகி விடுமுன் எழுதுங்கள்.

V. N. ராஜ்.

31/38 ஹைரோட், எழும்பூர், சென்னை.

ஆர்டர் செய்யும்பொழுது இப்பத்திரிகையில் கண்டதாக எழுதவும்.

## E. LAKHRAJ & CO.,

Bombay Merchants, Madras Fancy Embroiderers, Artistic Jewellers, Gold and Silver-smiths and direct Importers of Cashmere PUTTOO Cloth, RAMPORE CHADORS. Shawls, Indian, Chinese and Japanese, SILK, Cotton, Woollen Linen Piece Goods and Metal Wares, Persian and Indian Carpets and Curis of all Descriptions. We invite yon to call and see the large up-to-date selection of Goods we have to offer you in all departments suitable for Christmas Wedding and Birth day presents. Ladies and Gents are earnestly requested to patronize us by their esteemed visits to our show Rooms.

JAPAN HALL, 181, MOUNT ROAD, MADRAS.

**Our Talismans: high Quality and Low Price.**

## JUST THE THING YOU WANT. ONE PACKET PRESS WITH THE FOLLOWING LETTER ATTACHE CASE

**Most Storing** **Most Useful** !! **Most Elegant** !!!

Made of solid ebonised highly polished case Mahagony color size 9x6x1 containing 3 trays for the following 10 Presents. (1) Newly Indented ever ready pen, Positive Proof against leakage as clean as pencil In use can be refilled with any ink. A nib. (2) 1 Well Sharpened bone Handled pen knife. (3) 1 Doz Parchment Letterpaper. (4) 1 Doz. Post Card. (5) 1 Doz. Envelope (Bothivory Finish) (6) 1 Sheet Blotting. (7) 1 Packet Pin. (8) 1 Free saving guide. (9) 1 Complete Letterwriter. (10) 1 Packet press for Printing Letter Heading. Price With all the Presents. Rs. 2—8—0 on Post free.




*Apply to*

**S. Seal & Co., 17. T. Z. Kapalee Tola,**
*Calcutta.*


OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 11.4.1914

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.


| | | |
|---|---|---|
| Vol XVI] | Madras March 1914. | No. 3 |
| புத்தகம் கசு. | சென்னை: மார்ச் மீ 1914 ௵. | இலக்கம். 3 |


## DOWRY SYSTEM.

## வரதக்ஷணை அல்லது வியாபார விவாகம்.

"பெங்காலில் ஸ்நேகலதாதேவி என்ற பெண்மணி தன்னை மணம் புரியவிரும்பினவன் அதிக தொகை கேட்டமையால் அவள் தகப்பன் தன் வீட்டை குதுவை வைத்து அதற்கு வேண்டியபணத்தை கடன் வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தாராம். அப்பொழுது இப்பெண்மணி தனக்காக தனது தகப்பனர் பணத்துக்கு படும் கஷ்டத்தைக்கண்டு மனம் சகியாமல் தற்கொலை செய்துகொண்ட சங்கதி எல்லாப்பத்திரிகைகளிலும் பிரசுரித்திருப்பது அநேகருக்குத்தெரியும். இத்துர்வழக்கம் பங்காலில் மாத்திரமில்லை. இந்தியாமுழுவது மிருக்கிறதென்கலாம். இத்துர்வழக்கம் சிறிது வருஷங்களாகத்தான் நமது இராஜதானியிலும் பரவி அநேக குடும்பங்களுக்கு பற்பல கஷ்டங்களையும், மனவருத்தத்தையும் கொடுத்து வருகிறது. முன்காலத்தில் பிள்ளைவீட்டார் பெண் வீட்டாருக்கு சொற்ப தொகை கொடுத்துவந்தார்கள். சிலர் அதுகூட பெறாமல் கன்னிகாதானம் செய்து வந்தார்கள். இக்காலத்திலோ பெண் வீட்டார் பிள்ளை வீட்டாருக்கு கலியாணம் முதல், பிள்ளை பிறக்கும் வரையில் அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிள்ளை வீட்டார் சாதாரண படிப்பு வாசனையில்லாதவர்களாயிருந்தால், அவர்களுக்குப்படிப்பு வாசனை இல்லை, பண ஆசைகொண்டு இவ்விதம் கேட்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் இப்படி கேட்பவர்கள் கல்வி அறிவுள்ளவர்கள்; நல்ல உத்தியோகத்திலிருப்பவர்கள் தான்.

பெண்களோ அதிகரிக்கிறார்கள். பிள்ளைகளோ சொற்பமாயிருக்கிறார்கள். பெண்களுக்கோ அவர்கள் ருதுவாகுமுன் விவாகம் செய்யவேண்டுமென்ற மூடக்கொள்கை அநேகர் மனதில் குடி கொண்டேயிருக்கிறது. மேலும் பிள்ளையோ தன் ஜாதி உட்பிரிவைச்சேர்ந்தவனாயிருக்கவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். எல்லாவயதிலும் பெண்களின் தொகை

ஆண்களின் தொகையைவிட சிறியதாகவேயிருக்கிறது. 10 அல்லது 12 வயதுக்குக்கீழ் பெண்களின் தொகை ஆண்களின் தொகையைவிட அதிகரித்திருக்கிறது. இதனால் பாலியவிவாகம் நடந்து வருகிறதென்னலாம். 10 வயதுக்குட்பட்ட விவாகமான ஆண்களின் தொகை பெண்களைவிட அதிக சொற்பமாயிருக்கிறது. மனிதன் எப்பொழுது வேண்டுமானாலும் தன் இஷ்டப்படி விவாகம் செய்துகொள்ளலாம். இப்படி செய்துகொள்வதைப்பற்றி தடுப்பாரொருவருமில்லை; மூடக்கொள்கை இவ்விஷயத்தில் ஒருவருக்கும் கிடையாது.

பிள்ளைகள் உயர்தரக்கல்வி படிப்பதால் விவாகம் செய்துகொள்ள அவசரப்படுகிறதில்லை. ஒருவேளை ஒருவன் தன் பெண்ணை விவாகம் செய்துவைப்பதாக அப்பிள்ளையின் பெற்றோரைக்கேட்டால் இது தான் சமயம் என்று எண்ணி அதிக தொகை கேட்கிறார்கள். பிள்ளைகளின் விவாக வயது உயருகிறது. இவ்விதம் வயது உயருவதால் பிள்ளைகிடைப்பதும் அருமையாயிருக்கிறது. அவ்விதம் கிடைத்தாலும் பணம் அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பெண்களின் விவாக வயதை உயர்த்திவைப்பதும், ருதுவாகுமுன் அவர்களுக்கு விவாகமாக வேண்டுமென்ற விதியை நீக்கிவிடுவதுமே இக்கொடியவழக்கத்தை நீக்க முதல்தரமான கைகண்ட ஔஷதம்.

மேலும் சாதாரணமாக பெண்ணும் பிள்ளையும் ஒரு ஜாதியின் ஒரே உட்பிரிவை சேர்ந்திருக்கவேண்டும். ஆனால் கோத்திரம் மாத்திரம் வேறாக யிருக்கவேண்டுமென்ற விதியுமிருக்கிறது. இவ்வித உட்பிரிவுகளில் சில உட்பிரிவுகளின் தொகை வெகுசொற்பம்; உட்பிரிவுகளை நீக்கி வடம பிராமணன் ப்ரஹசரண பெண்ணை விவாகம் செய்துகொள்ள முன் வந்தால இவ்வித துர்வழக்கமும நீங்கும்.

தவிர, இங்கிலீஷ்படிப்பும் இத்துர்வழக்கத்திற்கு காரணமென்கலாம்; பி.ஏ. பரிக்ஷை தேறினவன், அல்லது பீ ஏ க்குப்படிக்கிறவன், புத்திசாலியாக யிருந்தால் இவர்கள் பாடு கொண்டாட்டம் தான். இவர்கள் கேட்பதையெல்லாம் பெண்ணின் தகப்பன் கொடுக்க வேண்டியதே. தாழ்ந்த கல்வியறிவுடையவர்களுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரைக்கும் கிடைக்கும் என்பதற்கும் மோசமில்லை.

நமது தேசத்தில் பீ.ஏ. முதலிய பரிக்ஷைகளில் தேறுபவர்கள் வெகு சொற்பம். பிரதமகல்வி, ஸ்கூல் பைனல் முதலியவைகளின் தொகை அதிகம். இவர்களும் பி. ஏ வரைக்கும் படித்தால் இத்துர் வழக்கம் ஒழிந்தாலும் ஒழியும். அநேக தகப்பனார்கள் தங்கள் பிள்ளைகள் பீ ஏ பரிக்ஷையிற்றேறினால் தாங்கள் தங்கள் புத்திரர்களுக்கு படிப்பு விஷயத்தில் செலவழித்த பணத்தையும் அதற்கு வட்டியும், லாபமும் பெறலாமென்று எண்ணியே தங்கள் புத்திரர்களை பீ ஏ பரிக்ஷை வரைக்கும் படிக்கவைக்கிறார்கள். இப்படி செய்வது படிப்பு, விவாகம் இவ்விரண்டையும் இழிவாகச் செய்கிறது.



நமது யுனிவர்ஸிடிகளிலும், காலேஜிகளிலும் இவ்விதம் வியாபார விவாகம் செய்துகொள்பவர்களை சேர்த்துக்கொள்ளாமல் தடுக்கலாம். யுனிவர்ஸிடி படிப்பு முடிந்ததும் அவர்கள் இவ்விதம் செய்தால் நாம் என்ன செய்வது? அது அதிசயமுமல்ல.

ஒரு சிறுவன் தான் சம்பாதித்து ஜீவனம் செய்யும் வரையில் பிரம்மசாரியாக அதாவது விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால், பின்னிட்டு பணத்தை அபேக்ஷித்து விவாகம் செய்துகொள்ளமாட்டான். ஆனால் இவன் சம்பாதிக்காமல் தாய் தந்தையின் ஆதரவிலிருக்கும்பொழுது விவாகம் செய்துகொண்டால் பணம் கட்டாயம் கேட்பான். இன்னொரு முக்கியமான விஷயமுண்டு. அதாவது, பெண்வயதாகியாவது சிறுபெண்ணாகவாவது மனைவியாக மாத்திரம் இருந்து மற்றயோக்கியதைகளில்லாமலிருந்தால் போதாது. அப்பொழுதும் வியாபார விவாகம் இருந்து கொண்டேயிருக்கும். சிறு பெண்களை விவாகம் செய்து வைக்கவும் கூடாது. பெண்கள் பிள்ளைகளைப்போல் உயர்தரக் கல்வி கற்றுணரவேண்டும். அதாவது பி. ஏ. வரையில் ஆண்களைப்போல் படித்துவரவேண்டும். அப்பொழுதுதான் விவாகம் உண்மையானதாகும். வியாபார கலியாணம் ஒழிந்துவிடும்." என பம்பாயிலுள்ள "இந்தியன் சோஷல்ரிபார்மர்" என்ற பத்திரிகையின் அருமையான அபிப்பிராயம். இதை நாம் பூராவாக அங்கீகரிக்கிறோம். இவ்விஷயத்தைப்பற்றி நம்மவர்கள் தீர்க்காலோசனை செய்து ஒரு கமிட்டி ஏற்படுத்தி இத்துர்வழக்கத்தை நீக்க இதிலுள்ளதை நடவடிக்கையில் கொண்டுவர முயல்வார்களென்று நம்புகிறோம்.

---

# நல்ல குணமே மேலானது

நமது தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை நல்வழியில் பழக்கிவர சிற்சில விஷயங்களை இப்பத்திரிகையில் எழுதி வந்திருக்கிறோம். அவ்விதமே நமது தேசத்துக் குழந்தைகள் நல்ல குணத்தையே மேலானதாகக் கைக்கொள்ளவேண்டும் என்பதை இத்தடவை எழுதுகிறோம்.

குழந்தைகள் முக்கியமாக சொன்னதைச் சொல்லவும், நாம் செய்வதைச் செய்யவும் சுலபமாகக் கற்றுக்கொள்ளும். ஆகையால் தாய் தந்தையர்கள் எப்பொழுதும் கெட்டவார்த்தைகளை குழந்தைகளின் காதில் சிறிதும் படாமலிருக்கும்படி செய்து வரவேண்டும். கெட்ட பிள்ளைகளுடன் சகவாசம் செய்யாமலிருக்கும்படியும் திட்டம் செய்யவேண்டும்.

குழந்தைகள் சொல்லும் மழலைச் சொற்களைக் கேட்டு ஆநந்தம் கொள்வதைவிட மேலானதொன்றுமில்லை. ஆனால் அவர்கள் கெட்டவார்த்தைகளைக் சொல்லிவரும்படி அவர்களிஷ்டப்படி விட்டுவிடக்கூடாது. குழந்தைப்பருவத்தில் அவர்கள் மனதில் பதியும் விஷயங்கள் அவர்கள் வயதாக வயதாக அவர்கள் மனதில் வேரூன்றியிருக்குமே யொழிய அகலாது. ஆகையால் இவ்விஷயத்தில் பெற்றோர்கள் முக்கிய கவனத்தை செலுத்திவர முயல பின்னடையக்கூடாது.

சிலர் பொய் பேசுவதையும் தமாஷாக கேலியுப், துஷ்டத்தனமுள்ள வார்த்தைகளைச்சொல்வதையும் குழந்தைகள் கேட்டு தாங்கள் அவ்விதம் செய்யலாமென நினைத்து, செய்யவும் ஆரம்பிப்பார்கள். "இன் சொலினிதீன்றல் காண்டானெவன் கோலோ, வன்சொல் வழங்குவது"

அவ்விதமே நல்ல எண்ணம், தெய்வபக்தி, அன்பு, தயை, அநுதாபம், ராஜவிசுவாசம், தேசாபிமானம், முதலிய விஷயங்களைக் கதைகளாகக் குழந்தைகளுக்குப் போதித்துவந்தால், அவர்களும் அவைகளிலுள்ள விஷயங்களை நன்றாய் அறிந்துகொண்டு அவைகளைக் கைப்பற்றிக் கொள்வார்கள். இவைகள் அவர்கள் மனதில் செவ்வனே பதிந்துவிடும். இவர்களுக்கு வயதானபோதிலும் இவைகள் நீங்காது. நல்ல எண்ணமே ஒருவனுக்கு இருக்குமானால் அவன்தான் நல்லகுணமுடையவன். நல்லகுணமே மேலானது. நல்லகுணமுடையவர்கள் தங்கள் வாழ்நாளில் விருத்தியடைந்து சுகமாக வசித்து வருவார்கள்.

ஆனால் கெட்டகுணமுள்ளவர்கள் கெட்ட எண்ணமுடையவர்களாகயிருப்பார்கள். தங்கள் ஜீவியகாலத்தில் பலகஷ்டங்களுக்குட்பட்டு அவமானமடைந்து சுகங்கெட்டுதவிப்பார்கள்.

அற்பவிஷயங்களாயினும் சரி, பெருத்தவிஷயமாயினும் சரி, பொய் சொல்லவேகூடாது என்ற விரதம் ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருக்கவேண்டும். பொறாமை, அசூயை, கோள்சொல்லுதல், அகங்காரம் ஏழைகளிடத்தில் அன்புயின்மைமுதலிய தீயகுணங்களை அடியோடே விலக்க முயலவேண்டும். இவ்விதம் பெற்றோர்கள் செய்து வந்தால் இந்தியா க்ஷேமப்படும். இந்திய ஜாதியார் என்றாலே கௌரவமுண்டு. அதன்றி பிறர்கள் நம்மைப்பார்த்து நகைக்கும்படி செய்துகொள்ளக்கூடாது.

---

# ஆவியாகும்போது நிகழும் குளிர்ச்சி.

இதுவரையில் உபயோகித்துவந்த தெர்மாமீடரை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் கிண்ணத்தைச்சுற்றி ஒரு மெல்லிய மஸ்லின் துணியைக் கட்டுவோம். பிறகு அதை ஒரு ஆணியிலிருந்து தொங்கவிடலாம். கையில் ஒரு கடியாரத்தை வைத்துக்கொண்டு அரை ($\frac{1}{2}$) நிமிஷத்துக்கு



ஒரு முறை டெம்பரேசரைப் பார்ப்போம். என்ன விசேஷம்? சொல்லுங்கள். டெம்பரேசர் ஒரே நிலையாகவே நிற்கின்றது. மஸ்லின்மேல் 4, 5 பொட்டு ஜலத்தையாவது விளக்கெரியவிடும் சாராயத்தையாவது ஊற்றுவோம். இப்பொழுது மறுபடி $\frac{1}{2}$ நிமிஷத்திற்கு ஒரு முறை டெம்பரேசரைப் பார்ப்போம். முன்பார்த்ததற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா? ஆம். ஆக்ஷேபணையென்ன! இப்பொழுது டெம்பரேசர் குறைந்துகொண்டே போகின்றது. ஒரு விசிறி கொண்டுவந்து விசிறுங்கள். (பலமாய் விசிறினால் சுவற்றின்மேல் தாக்கி தெர்மாமீடர் உடைந்துபோம்) இப்பொழுது முன்னிலும் விரைவாய் டெம்பரேசர் குறைகின்றது.

ஜலமும் சாராயமும் இரண்டும் உபயோகிக்கக்கூடுமாயின் இரண்டாவதில் உண்டாகும் டெம்பரேசரின் குறைவு ஜலத்தினதைவிட அதிகமாகவே இருக்கும். இதற்குக் காரணம் என்ன? மஸ்லின்மீது ஊற்றிய ஜலம் சில நிமிஷங்களில் ஆவியாகப் போய்விடுகின்றது. அப்பொழுது மஸ்லின் உலரும்போது மறுபடி டெம்பரேசர் அதிகமாகின்றது. ஆகவே நீர் ஆவியாய்ப் போவதற்கும் டெம்பரேசர் குறைவதற்கும் சம்மந்தம் எளிதாய் விளங்குகின்றதல்லவா? ஜலம் எச்சமயத்திலும் ஆவியாக மாற வேண்டுமானால் அதிக உஷ்ணம் வேண்டியிருக்கின்றது. அவ்வுஷ்ணம் வேறுவழியாயும் கிடைக்காவிடில் ஜலம் தன்னிடத்தினின்றும் தன்னைச் சுற்றியிருக்கும் வாயு, மஸ்லின், தெர்மாமீடர் இவற்றினின்றும் எடுத்துக்கொள்வதால் அவ்வஸ்துக்கள் குளிர்ந்துபோகின்றன.

ஜலத்துக்குப் பதிலாய் சாராயத்தை உபயோகிப்போமானால், ஜலத்தைவிட அவ்வஸ்து சீக்கிரமாய் ஆவியாய்ப் போவதுபற்றி டெம்பரேசர் மிகக் குறைவாகின்றது. விளக்கெரியும் சாராயத்தைக் கொஞ்சம் கையில் ஊற்றிக்கொண்டு சிறிதுநேரம் வைத்துக்கொண்டிருந்தால் கை ஜில்லென்று குளிர்ந்துபோவது தெரியும். அப்பொழுது கையின்மேல் மெதுவாய் ஊதினால் இன்னும் அதிகமாய்க் குளிருவது தெளிவாய் விளங்கும்.

ஈதர் (Ether) என்று ஒரு திரவப்பொருள் இருக்கின்றது. அது வெகு விரைவாய் ஆவியாகக்கூடியது. அதை மஸ்லின்மேலூற்றி அம்மஸ்லினை தெர்மாமீடருக்குச் சுற்றுவோமானால் அப்பொழுது உண்டாகும் டெம்பரேசரின் குறைவு பனிக்கட்டியின் டெம்பரேசரைவிட குறைவாய் இருக்கும் என்பதற்கு ஆக்ஷேபணையே யில்லை.

மேஜையின்மேல் ஒரு மரக்கட்டையை வைத்து அக்கட்டையின் மீது கொஞ்சம் ஜலம் ஊற்றுங்கள். இல்லாவிட்டால் அக்கட்டையின்மேல் ஒரு பிளாடிங்கு பேபரை மடித்துவைத்து அதை நன்றாய் ஜலத்தில் நனைத்துவிடுங்கள். பிறகு ஒரு கண்ணாடி டம்ளரில் சிறிது ஈதரை ஊற்றி கட்டைமேல் நிற்கும் ஜலமத்தியில் வைக்கவேண்டும். டம்ளரில் உள்ள

ஈதர் சீக்கிரம் ஆவியாய்ப்போகும்படி ஒரு கண்ணாடிக் குழாய்வழியாய் ஈதருக்குள் காற்றைச் செலுத்தவேண்டும் ஒரு துருத்தி இருப்பின் மிக அனுகூலம். அதிவிரைவாய் காற்றுப்போகிற காரணம்பற்றி ஈதர் ஆவியாக மாறவே ஈதர், டம்லர், இவைகள் மிகக் குளிர்ச்சியாய்விடுகின்றன. இன்னும் பலமாகத் துருத்தியால் காற்றைச் செலுத்திக்கொண்டு டம்லரின் கீழிருக்கும் ஜலத்தை கவனித்துக்கொண்டேயிருந்தால் ஜலம் பனிக்கட்டியாய் மாறிப்போவதைக் காணலாம். அப்பொழுது டம்லரை நாம் நகர்த்த முடியாது. ஏனெனில் பனிக்கட்டியாய் மாறின ஜலம் டம்லரையும் கட்டையையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகின்றது. இனி துருத்தியை ஊதாமல் நிறுத்திவிடுவோமானால் 4, 5 நிமிஷத்தில் சூடு கிரமமாய் ஏறுவதால் பனிக்கட்டி உருகி ஜலமாகும். அப்பொழுது டம்லரை இலேசாய் எடுக்கக்கூடும். இவ்வித பரீக்ஷையால் பனிக்கட்டிகூட நாமே செய்யலாம் என்று உங்களுக்கு விளங்குகின்றதல்லவா?

வெயிற்காலத்தில் குடிப்பதற்கு குளிர்ந்தஜலம் வேண்டுமானால் என்னசெய்கிறோம்? ஒரு மண் கூஜாவை எடுத்து நன்றாய்க் கழுவி அது நிரம்பத் தண்ணீரை ஊற்றி காற்று ஓட்டமாய் இருக்கும் இடம்பார்த்து வைத்துவிடுகிறோம். 2, 3 மணி நேரத்திற்குள் ஜலம் ஜில்லென்று குளிர்ச்சியாகின்றதல்லவா? இதற்குக் காரணம் நீங்கள் எளிதில் அறிந்துகொள்ளக்கூடியதே. மண்கூஜாவின் மேற்புறத்தைக் கவனியுங்கள். என்ன காண்கின்றீர். ஜலம் உள்ளிருந்து கொஞ்சம்கொஞ்சமாய்ப் பொசிகின்றது. பொசிந்த ஜலமெல்லாம் எங்கே போகின்றது? ஆவியாக மாறும். காற்றோட்டமுள்ள இடத்தில் வைப்பதினால் என்ன இலாபம்? விரைவாய் ஜலம் ஆவியாய்விடுகின்றது. ஆகவே நிகழும் குளிர்ச்சியும் அதிகமே.

சந்தனம் பூசிக்கொண்டு ஒரு விசிறியால் விசிறிக்கொள்ளும்போதும் நிகழ்கின்ற குளிர்ச்சிக்கு இதுவே காரணம். பெரிய பட்டணங்களில் துரைமார்கள் உலாவப்போகும் ரோட்டுகளுக்கு ஜலம் போடுவதன் கருத்தும் குளிர்ச்சி உண்டாகும்பொருட்டே. பாதை நன்றாய்க் குளிர்ச்சியடைவதோடு புழுதியும் அடங்குகின்றது. பாதையும் விரைவில் கெட்டுப்போவதில்லை.

ஆர். கே. சுவாமி, பி. ஏ., எல். டி.

---

# சன்மார்க்க போதினி,

## மனம்.

(22-வது பக்கத்தொடர்ச்சி)

பண்டைக் காலமுதல் கடவுளைத் தியானித்து தபஸ் செய்துவரம்பெற்று முக்தியடைந்தும் உள்ளமகான்கள் எங்குமுளர். ஆயினும் அவ்விதமகான்கள் நிறைந்துள்ள தேசம் இந்தியாவே. இத்தபோதனர்களில் அநேகர் தங்கள் தங்கள் அவயவங்களை இஷ்டப்படிபழக்கி வசப்படுத்துவதில் சமர்த்தரெனக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்களின் செய்கைகளை நோக்குவோம். அதோ ஒருவர்கால்களை மேலேதூக்கித் தலைகீழாகயிருக்கும்படி நிறுத்தி தபஸ் செய்கிறார். மற்றவர் ஊசிகளை அடுக்காய் வைத்து அதன்பேரில் நின்று தபஸ்செய்கிறார். இவர்களுடைய அவயவங்கள் பிரயோசனமற்ற கட்டைகள்போல் இருக்கின்றன. வழிப்போக்கர்கள் இவர்களை வியந்து கூறி மகான்கள் என்கிறார்கள். அவர்கள் கேட்காமலே வேண்டியவற்றை அவர்களுக்கு பணம்காசு போடுகிறார்கள். உண்மையில் இவர்கள் பெரியவர்கள் தானோ? இவ்வித சாதனங்களில் என்னபயன்? தங்கட்குத்தான் என்ன; தரித்திரனுக்கு என்ன, தனவானுக்கும் என்ன பயன்? ஸ்தம்பத்தின் மேல்நின்று தபஸ்செய்ததால் 'ஸ்தம்பத் தபஸ் சிமியன்' என்று பெயர்பெற்ற சிமியன் என்போன் அவயவங்களை அடக்கி பெருந்தபஸ் செய்தனன். யாரென்ன நன்மையடைந்தனர்? ஒன்றும் புலப்படவில்லையே.



சீனதேசத்தில் யாவரும் ஆச்சரியப்படத் தக்க ஒருவழக்கம் காணலாம். ஒரு பெரிய சபாமண்டபத்துட் சென்றால் பிரசங்கம் ஒன்றுமில்லாவிடினும் அவ்விடமிருக்கும் ஜனங்கள் யாவரும் சப்தமின்றி உட்கார்ந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு மூச்சுப்பேச்சுக்கூட இல்லாமல் அண்டையிலிருக்கும் அரும்பெரும் ஸ்தம்பங்கள்போல் இருப்பதின்காரணம் என்னவென்று எவ்வித பிராணியும்கூட வினவுவன் அன்றோ? அவர்கள் அவ்வாறு செய்வதேன்?

பௌத்த மதம் பரவியிருக்கும் பர்மா, சீனா, ஜப்பான் முதலிய தேசங்களில் ஜனங்கள் தங்கள், தங்கள் மத குருக்களிடம் அமைதியாயிருந்து உபதேசம் பெற முன்னடியே கற்றுக்கொள்ளுகின்றார்களாம். முன்கூறிய செய்கைகளைப்போல் இது முற்றிலும் பிரயோசனமற்றதல்ல. இவ்வாறேதான் மதிலின்வாயிலில் கார்க்கும் சேவகன்தொழிலும். நாட்டில் சண்டை சச்சரவு ஒன்றுமில்லாமல் குடிகள் சமாதானமாயும் சுகமாயும் இருக்கும் காலத்துங்கூட இவன் மதிலை இவ்வாறு கார்ப்பானேன்? எதிரிபடைபெடுத்துவந்தால் கோட்டையைக் காப்பாற்றுபவன்போல் எண்ணி அதிக ஜாக்கிரதையாககாவல்கார்க்கிறான். உன்னதமான ஓரிடத்தில்நின்றுகொண்டு சுற்றிலும் பார்க்கிறான். உள்செல்லுபவராவது வெளிக்கிளம்புவராவது ஒருவரும் இல்லை. இதினால் இவனுக்கு உண்டாகிய நன்மை என்ன? இவ்வாறு பழகுவதினால் அபாயம் நேரிடும் காலத்தும் தன் வேலையைச் சரிவர செய்வதில் சமர்த்தனாகின்றான். ஐரோப்பாவில் சுவிட்ஜர்லாந்து என்றொரு தேசம் உண்டு. அவ்விடத்தில் ஆல்ப்ஸ்(Alps) மலைகள் இருக்கின்றன. அம்மலைகளில் ஏறுவதற்கும் சுற்றுப்பார்த்து வழிகாட்டி அழைத்துச் செல்லுவதற்கும் அந்நாட்டாரைப்போல் பழக்கமுற்றவர்கள் ஒருவருட்கிடையாது.

தங்கள் அவயவங்களை சாதனைப்படுத்தியிருப்பதினால் காலடி தவறாமல் பனிக்கட்டிகள் மேறிலும் ஒடுக்கமும் செங்குத்தான பாறைகளின்

மேலும் செல்லுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு தேகத்தை சுவாதீனப்படுத்திபிருப்பது அவர்களுக்கு மட்டிலோ பயன்படுகின்றது? உலகோர்க்கும் உதவுகின்றதல்லவா.

ஒரு பாடசாலையில் தேகப்பயிர்ச்சி கற்றுக்கொடுக்கும் ஒரு உபாத்தியாயர் எவ்விதம் தன் மாணாக்கர்களைப் பழக்குகிறார்பார். சிறுவர்கள் சற்று ஓடுகிறார்கள். உடனே திரும்புகிறார்கள்; நிறுத்திய ஸ்தம்பங்கள் போல் நிற்கிறார்கள். பின்பு வலதுகை, இடதுகை மாற்றிமாற்றி உயர எடுக்கிறார்கள். செய்தபின் இருகைகளால் பாதங்களைத்தொட முயற்சி செய்து குனிகிறார்கள். இவை முடிந்தவுடன் தங்கள் பழைய நிலைமையை அடைகிறார்கள். உபாத்தியாயர் தன் மாணாக்கர்கள் தங்கள் தங்கள் அவயவங்கள் நீட்டவும் மடக்கவும் ஒரே நிலையில் நிறுத்தவும் செய்ய பழக்கி வைக்கிறார்.

இது காறும் அவயவங்களை வெல்லும்திறமை பேசினோம். இனி மனத்தை அடக்குவதைக் கவனிப்போம். தாரா ஒரு நாட் காலையில் பூங்காவனத்தில் உலாவித்திரிகையில் ஓரிடத்தில் இளைப்பாற உட்கார்ந்தாள். அப்பொழுது அவள் அங்கியின் பேரில் ஒருதேனீ உட்கார்ந்தது. அவளுக்கு உண்டான அச்சத்திற்கு அளவில்லை. கத்திக்கதறி தன்கையால் அதைத் தள்ளிவிட எண்ணங்கொண்டாள். ஆயினும் அவ்வாறு செய்ய எண்ணிய எண்ணத்தை அடக்கிக்கொண்டாள். ஒரு சமயம் அப்பூச்சியைக் கண்டு பயந்து தன்னைக் கொட்டிவிடுமோ என்ற பயம் மேலிட்டவளாய் நின்றனள்.

அச்சிறுபிராணி அவ்விடம் தனக்கு வேண்டியவை ஒன்றும் இல்லாமைகண்டு தோட்டத்திற்குட் பறந்துபோயிற்று. தாரா தன் மனதை அடக்கி வீண் எண்ணங்களுக்கு இடம் கொடாமல் தடுத்தாள். ஏறக்குறைய ஐம்பதுவருஷங்கட்கு முன்னால் கீழ் இந்தியா தீவுகளில் உள்ள விசேஷங்களை அறிய உன்னி ஒருவர் பிரயாணம் செய்துவந்தார். ஒருநாள் அவ்விடங்களிலுள்ள வனாந்தரத்தின் மத்தியில் போய்க்கொண்டிருக்கையில் இருளடையவே அவ்விடமே தங்கினர். ஆகாரம் உட்கொண்டபின்னர் சயனிக்கஎண்ணி அண்டையிலிருந்த ஒரு புதரைத்தள்ளி கையை வைத்தவுடன் மிருதுவாயும் குளிர்ச்சியாயுமிருந்த ஒரு ஜந்து நகருவதை உணர்ந்தான். தற்சமயம் கையை அகல எடுக்கின் பாம்பு எட்டிக் கையைக் கொத்திவிடும் என்ற எண்ணத்தால் கையை அசைக்காமல் நின்றுவிட்டார். அஜ்ஜெந்துவும் பையப்பைய நகர்ந்து அகலச்சென்றது. இவ்விதமாக அநேக முறைகளில் அவர் செய்தது உண்டு.

நாடகக் கொட்டகை பெரியதாய்போட்டிருக்கின்றது. அநேக ஜனங்கள் இரவில் செல்லுகிறார்கள். யாவரும் அமைதியாய் உட்கார்ந்தபின் நாடகம் ஆரம்பமாகின்றது. உட் செல்ல சக்தியற்றவனும், கெட்ட குணம் நிறைந்துமுள்ள ஒரு வாலிபன் வெளியினின்று கொட்டகைக் குள்ளிருக்கும் ஜனங்கள் மேல் பொறாமை கொண்டு யோசனை செய்கிறான். திடீரென்று மனதிற்கு ஒன்று உதயமாகின்றது. "தீ தீ" என்று கத்திவிட்டு ஓடுகிறான். உள்ளிருக்கும் மானிடர் என் செய்கிறார்கள்? ஒருவர்பேரில் ஒருவராகவிழுந்து ஓடிக்கடைசியில் வழியை மறைத்து ஜனங்கள் வெளிச்செல்ல முடியாமல் அநேக உயிர்களுக்குசேதமும் துன்பமும் உண்டாக்குவார்கள். ஆனால் மனதைர்யமும் அமைதியு முடையவர்கள் முதலில் கூச்சல் போட்ட சங்கதி உண்மையாவென்று, பார்த்தபிறகு தான் ஒரு முடிவுக்கு வருவார். அப்பொழுதும் கூட தீப்பற்றியது உண்மையாயின, தங்கள் எவ்வாறு சென்றனரோ அவ்விதமே வெளிச் செல்லுவார்கள்.



உரோமாபுரியில் தளகர்த்தராயும் பிறகு மன்னராயுமிருந்த ஜூலியஸ் ஸீஸர் (Julius caesar) என்பவர் வரலாறு யாவரும் கேட்டிருக்கலாம். ஆங்கிலேயரைக்கண்டால் தூரத்தித் தோற் கடிக்காமல் வந்ததேயில்லை. எதிரிகள் கூட்டம் கூட்டமாகவரினும் தன் சேனைக்கு தைர்யம் ஊட்டி நடத்தும் திறம்பெற்றவர். இவ்வளவிலோ? இவர் தன்னைத்தான் அடக்கி ஆளும் வல்லமை வாய்ந்தவர். எவ்வித அவசரமான காரியத்தையும் செய்யத் துடங்குமுன் சற்று ஆலோசனை யிலாழ்ந்து, ஏதோ ஒன்றைக் கண்டு பயப்படுபவன்போல்நின்று பிறகுதுடங்குவர். அப்பொழுது தான் அவர் ஞானக்கண்ணுக்கு எல்லாம் துல்லெனப் புலப்படும். இவ்விதச்செய்கைகளே அவரைக்குடிகள் மனதில் உயர்த்தியது.

இவருக்கு அநேக ஆண்டுகளுக்கு முன்னால் கிரீஸ் தேசத்தில்கீர்த்தி பெற்று வாழ்ந்த கண்ணியவான் லைகர்கஸ் (lycurgus) என்பவர் தான் அத்தேசத்தின் இராஜாங்க காரியத்தை நடத்திவந்தார். சட்டதிட்டங்களும் அவர்தான் ஏற்படுத்துவது. மிகவும் கண்டிப்பாயும் தயை தாக்ஷண்ய மில்லாமலும் அரசாட்சி நடத்திவரும் திடம் வாய்ந்தவர். இவர் செய்கைகளை அநேகர் பொருத்து சகிக்காதவராய் முறு முறுத்தார். இதுவே காரணமாய் ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டு கலகமும் உண்டாயிற்று. கலகத்தில் பிரவேசித்து முக்கியஸ்தராய் யிருந்தவர்களில் இருவர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அடா, பாவி! இருப்பு நாணயங்களை உபயோகிக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறானே. தங்கமும் வெள்ளியும் கிடைப்பதரிதோ? பணம் இருந்தபோதிலும் அதை உபயோகிக்கக் கூடா தென்கிறான். நாம் படுக்கைக்கு உரைபோட்டால் இச்சண்டாளனுக்கு என்ன? கதவுகளில் சித்திர வேலைகள் செய்திருக்கக் கூடாதாம். இச்செய்கைகட்கு அவன் உத்திரவு என்ன?

கலகன், ஆகா! இது ஒரு பெரிய சங்கதியா? ஆகாரம் உட்கொள்ள அவன் ஆக்ஞை, சத்திரத்தில் தான் சாப்பிடவேண்டுமாம். அதற்குமவர் அனுமதி அவசியம் பெறவேண்டியது. பதினைந்து பேருக்குகுறைந்து ஒரு

சமயத்தில் போஜனம் செய்யக்கூடாது. அங்கும் என்ன கிடைக்கிறது, ஒன்றுமில்லை?

கலகன், இவ்வளவிலோ மையிருளில் விளக்குகள் இல்லாமல தைர்யமாய் வீடு செல்லவேண்டுமாம். அவன் முழுதும் கெட்டவன், தன்னிஷ்டப்படி நடக்கும் முரட்டு நியாயாதிபதி.

ஆக்ஷேபணை சமாதானங்கள் இவ்வாறிருக்க லைகர்கஸ் அம்மார்க்கமாய் போக நேரிட்டது. ஜனங்கள் அவன் பேரில் கற்களை எறிந்தார்கள். உயிர்தப்பிக்க ஓடி ஒருகோயிலை நண்ணுமுன் அல்ஸாண்டர் என்னும் ஒருவாலிபன் அவனைப் பிடித்துக் கொண்டான். அவன் முகத்தில் கல்விழுந்த அடியில் இரத்தம் தாரை தாரையாய் வழிவதை அங்குள்ளோர் நோக்கினர். நோக்கவே அவர்களுக்கு உண்டான விசனத்திற்கு அளவில்லை 'சீ! என்ன செய்கை செய்தோம், என்று வெட்கப்பட்டார்கள். உடனே அல்ஸாண்டரை இழுத்துக் கொண்டுபோய், காவலன் கையில் ஒப்பிவித்து, "ஐயா, இதோ குற்றவாளி, இஷ்டப்படி இவனைத் தண்டியுங்கள்" என்றார். நியாயாதிபதியும் குடிகள் புடைசூழ வீடடைந்து, உங்கள், உதவிக்கு அநேக வந்தனம். இவ்வாலிபன் என்னிடம்விட்டு நீவிர் செல்லுங்கள்," எனப் பகர்ந்து உட்புகுந்தான். வாலிபனை தன் மனைக்கு அழைத்து சென்றனனே யொழிய அவனைத் திட்டவாவது உதைக்கவாவது ஒன்றும் செய்யவில்லை. சிறுவனும் தன்னை ஆளும் அரசனண்டையில்கொஞ்சகாலம் வாழ்ந்து வந்தான். அந்நாள்களில்தான் மன்னன் நடை உடைகளில் தன்னைத்தான் எவ்வித கஷ்டங்களுக்கு உள்ளாக்கிக்கொள்கிறான் என்பதையும் குடிகளிடம் பக்ஷம் வைத்திருப்பதையும் அறிந்தான். ஸ்பார்டா (sparta) நகரில் நன்மையே உருவெடுத்துவந்தவர் அவர்தானென அறிந்தனன். தான் அவருக்கு நியாயமின்றி விளைத்த தீங்கை உன்னி விசனமடைந்தான். பின்பு சிறுவன் தன் கோபாவேசத்தை அடக்கும் விதம் எவ்வாறென அறிந்து அதிகபொறுமை பொருந்தி வாழ்ந்தான்.

மேல்விருத்தாந்தத்தினின்றும் லைகர்கஸ் குடிகளுக்கு சட்டம் ஏற்படுத்துவது மாத்திரமல்ல; தனக்கும் அவ்விதம் செய்துகொண்டதாக அறிகிறோம். கோபாவேசனைப் குடிகள்மேல்பாய்ந்து தாக்கியிருந்தால் அரசன் தன்மை குறுகியிருக்கும் அன்றோ?

Chandra. V.

---

# நமது சித்திரப்பட கதைகள்.

## சித்திரக் குள்ளன்—3.

ஒரு காலத்தில் ஒரு ஊரில் ஒருமனிதன் வசித்தான். இவன் உழுது ஜீவனம் செய்து வந்தான். இவனுக்கு ஒரே ஒரு ஆண்குழந்தையிருந்தது. இவனுக்கு ஐந்து அல்லது ஆறுவயது ஆனபோதிலும் இவன் தாயாரின்



கட்டை விரல்போலிருந்தான். அவனை அவன் தாயார் தன் உள்ளங்கையில் நிற்கவைத்து அவனை ஒற்றுப் பார்த்தபொழுது அவள் தன் கட்டைவிரலுக்குச் சரியாக யிருந்ததைக்கண்டு ஆச்சரியங் கொண்டாள். அவன் வளரவே இல்லை. ஆகையால் எல்லாரும் சித்திரக்குள்ளன் என்றுகூப்பிட்டு வந்தார்கள்.




ஒருநாள் இவன் தாயார் கூழ்செய்து கொண்டிருந்தாள். சித்திரக் குள்ளன் கூழ் செய்யும் வகையை யறிந்துகொள்ள விரும்பினான். ஆகையால் அப்பாத்திரத்தின் விளிம்புக்குத் தாவி உள்ளே எட்டிப்பார்த்தான். அப்பொழுது அவன் தாயார் வேறுவேலை ஏதோ செய்துகொண்டிருந்தமையால் இவனைப்பார்க்கவில்லை. இவன் எட்டிப்பார்த்து யோசனை செய்யுமுன், வழுக்கி அதனுள் விழுந்தான். விழவே மாவோடு மாவாகயிருந்தான். அவன் தாயார் அவன் அதில் விழுந்ததைப் பார்க்காதபடியால் மாவை ஒரு துணியில் கட்டி ஜலமுள்ள பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து கொதிக்கவைக்க ஆரம்பித்தாள்.

மாவுக்கு சூடுபட்டவுடன் சித்திரக்குள்ளன் பாடு திண்டாட்டமாய்ப் போனது. அங்கு மிங்கும் பார்த்தான். எல்லாவிடத்திலும் மாவாகயிருந்தது. ஒரு துணிமேலே யிருந்ததைக்கண்டு அதில் ஒரு துவாரம் தன்னால் கூடியமட்டும் செய்து கொண்டு ஜலத்தில் மேலும் கீழுமாகக் குதித்தான். மாவும் துணியுடன் இவன்கால்பட்டு குதிக்க ஆரம்பித்தது. மாவு நூதனமாக பாத்திரத்தில் குதிப்பதைக்கண்டு அவள் பயந்து, அதற்கு ஏதோ மாயாசக்திவந்திருக்கிறதென்று நினைத்தாள். ஆகையால் அதை அப்பாத்திரத்தினின்று சரேலென்று எடுத்து தன் வீட்டுவழியாக தேசாந்தரியாய்ப் போய்க்கொண்டிருந்த ஒருவனுக்கு கொடுத்தாள்.

அவன்வலுவில் கிடைத்த ஆகாரத்தை சந்தோஷமாக பெற்றுக் கொ
ண்டுதன் மூட்டையில் வைத்துக் கட்டிக்கொண்டு வழிநடந்து சென்றான்.
பிரயாணம் செய்பவன் சிறிதுதூரம் சென்றதும், ஒரு வேலியின் அருகே
உட்கார்ந்து தனக்கு கிடைத்த ஆகாரத்தைப்புசிக்க மூட்டையை அவிழ்த்
தான். சித்திரக்குள்ளன் அதிலிருந்து வெளிக்கிளம்பி அலறி கூச்சலிட
ஆரம்பித்தான். அப்பிரயாணி இதென்ன! விந்தையாயிருக்கிறதே! இதெ
ன்ன மாயமோ தெரியவில்லை என்று நினைத்து அதை அப்படியே எடுத்து
அந்தவேலியின்மேல் தொங்க விட்டு விட்டு, பசியால் வருந்திகொண்டு
நடந்து சென்றான். அப்படி அதை அவன் தொங்க விட்டமையால், மாவு
சிதறி கீழேவிழ ஆரம்பித்தது, சித்திரக்குள்ளன் செத்தேன்பிழைத்தேன்
என்று மனதில் எண்ணிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். அவன்
தாயார் அவன் வீட்டுக்கு வந்ததும் அவனுக்கு முத்தம்கொடுத்து கொஞ்
சி விளையாடி படுக்கையில் படுக்கவைத்து. அவனைத் தூங்கும்படி செய்
தாள்.

மறுநாள் காலையில் சித்திரக்குள்ளன் கண் விழித்துக்கொண்டு எழுந்
தான். இவன் தாயார் இவனைத் தன்னுடன் இட்டுக்கொண்டு பால் கறக்
கப்போனாள். அப்பொழுது காற்று அதிகமாக அடித்துக் கொண்டிருந்
தது. தன் குழந்தையைக் காற்று அடித்துக்கொண்டுபோகுமோ எனபய
ந்து, அவன் சிறு இடுப்பில் ஒரு நூலைச் சுத்தி சமீபத்திலிருந்த ஒரு முட்
செடியில் கட்டினாள். பசுமாடு அந்தப்பசுமையான செடியைப்பார்த்து
அதைத் தன்வாயால் கௌவிக்கொண்டது. சித்திரக்குள்ளன் அப்பொழு
துமிகவும் பயப்பட்டான். எங்கே பசுமாடு தன்னையும் தின்றுவிடுமோ
வென்று திகிலடைந்து சுற்றிப்பார்க்கையில் பசுமாட்டின் வாயில்தான்
இருக்கக்கண்டு நடுநடுங்கி தன்னாலானமட்டும் கெட்டியாய் 'அம்மா!'
'அம்மா!' என்று கூவினான்.

குழந்தாய்! எங்கிருக்கிறாய் என் கண்மணியே! என்று அவன்தாயார்
கேட்டாள் 'அம்மா மாட்டின்வாயில் இதோ இருக்கிறேன்பார்' என்று
உரக்ககூவினான். மாடோ இதென்ன நமது வாயில் ஆச்சரியமான சப்தம்
கேட்கிறதே என்று அதிசயித்து தன்வாயை அகலமாகத்திறந்தது.
உடனே சித்திரக்குள்ளன் வெளியில் குதித்தான். அவன் தாயார் அவனை
வாரி எடுத்து தனதுபையில் போட்டுக்கொண்டு தன்வீட்டுக்குள்போனாள்.
இவன் பால் குடித்துவிட்டு அங்குமிங்கும் குதித்துவிளையாடிக் கொண்டு
தன் காலத்தை கழித்து வந்தான்.

இன்னொருநாள் சித்திரக்குள்ளன் கையில் ஒருவைக்கோலை சவுக்காக
செய்து வைத்துக்கொண்டு வயலின் உழவுசால்வழியாகப் போனான். அச்
சமயத்தில் ஒருகாகம் பறந்துவந்தது. வைக்கோலைப் பிடித்துக்கொண்டி
ருக்கும் சித்திரக்குள்ளன் தானியமென்றும், அது வைக்கோலில் கீழே
விழாமல் ஒட்டிக்கொண்டி ருக்கிறதென்றும் எண்ணி அது கீழே பறந்து



வந்து வைக்கோலைப் பற்றிக்கொண்டு பறந்துபோயிற்று. சித்திரக்குள்
ளன் வைக்கோலை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு போகிறதையும்,
காகம் வைக்கோலை கௌவிக்கொண்டு பறந்துபோவதையும் பாருங்கள்.
எவ்வளவு அதிசயமாயிருக்கிறது! ஒரு அரண்மனை மெத்தையின்மேல்
காகம் தங்கி வைக்கோலைப்பார்த்து அதில் ஏதோ பூச்சியிருப்பதாகப்
பயந்து அதை நழுவ விட்டுவிட்டது. சித்திரக்குள்ளன் நல்லவேளையாய்
புல் நிறைந்த இடத்தில் விழுந்தான். அந்த அரண்மனை ஒரு ராக்ஷத
னுடையது. அவன் புல்லின்மேல் சித்திரக்குள்ள னிருப்பதைப்பார்த்து
அவனை எடுத்து வாயில்போட்டுக்கொண்டு விழுங்கிவிட்டான். சித்திரக்
குள்ளன் இராக்ஷதன் வயிற்றுக்குள் சென்று அங்குமிங்கும் குதித்து
தாண்டவமாடினான். இராக்ஷதன் குள்ளன் செய்யும் தொந்திரவை சகிக்
கமுடியவில்லை. அடுத்தாப்போலிருந்த கடலில் அவனைக் கக்கினான்.
உடனே ஒரு மீன் தனக்கு ஆகாரம் கிடைத்ததென்று நினைத்து நீஞ்சி
வந்து சித்திரக்குள்ளனை ஒரேவாயில் விழுங்கிற்று.



இச்சமயத்தில் ஆர்தர் என்ற அரசனுடைய செம்படவர்கள் மீன்
பிடிக்க படகில் வந்தார்கள். அவர்கள் அநேக மீன்களைப் பிடித்தார்கள்.
அவைகளில் இது ஒன்று. இவைகளை அரசன் மாளிகைக்கு எடுத்துக்
கொண்டு போய் சமையல் செய்பவனிடம் கொடுத்தார்கள். அவன்
சமையல் செய்யு மிடத்திற்கு இவைகளைக் கொண்டுபோய் பெரிதாகிய
ஒன்றை எடுத்து துண்டித்தான். உடனே அதிலிருந்து சித்திரக்குள்ளன்
யாவரும் ஆச்சரியப்படும்படி வெளியில் குதித்தான். அங்குள்ளவர்க
ளெல்லாம் இக்குள்ளனைக் கண்டு மகிழ்ந்து, இவனை ஒரு அழகான தாம்
பாளத்தில் வைத்து தங்கள் அரசனுக்குக் கொண்டுபோய் காண்பித்
தார்கள்.

அரசன் இச் சித்திரக்குள்ளனைப் பார்த்து 'நீயார்' என்றுகேட்டான்.

சித்திரக் குள்ளன் 'ஐயா' நான் அனேக கஷ்டங்களைப்படாத பாடெல்லாம் பட்டு இங்குவந்திருக்கிறேன். என் தாயார் தகப்பனார் மிகவும் ஏழை,' என்று சொன்னான். அரசன் இதைக்கேட்டு தன் பணப்பெட்டியைத் திறந்து 'உனக்கு வேண்டுமான பணத்தை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கு சுகமாகத் திரும்பிப்போய் இதை உன்பெற்றோருக்கு இனாமாகக்கொடு' என்று சொன்னான்.

சித்திரக்குள்ளன் அதிகபணத்தை எடுத்து தூக்கிக்கொண்டு போக முடியுமா? முடியாதாகையால் 3-அணா பெரும்படியான மூன்று பென்ஸ் என்ற நாணயத்தை எடுத்து மிகக் கஷ்டத்துடன் தன் முதுகில் வைத்துக்கொண்டு அரசனுக்கு வந்தனம் செய்துவிட்டு தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான். இப்படி தன்வீடுவந்துசேர இரண்டுநாள் பிடித்தது. அரசன் மாளிகைக்கும் இவன் வீட்டிற்கும் அரைமைல்தான் உண்டு. இவ்வளவு தூரம் இவனால் நடக்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி மூன்றுபென்ஸ் நாணயத்துடன் கடைசியாக வீடுவந்து சேர்ந்தான். இது சிறுநாணயமாயிருந்தபோதிலும், சித்திரக்குள்ளன் இந்தபளுவைத் தூக்கமுடியாமல் வெகு கஷ்டத்துடன் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தமையால் இளைப்புற்று மயங்கி கீழே படுத்துக்கொண்டான்.

---

## வானசாஸ்திரம்.

### சூரியன்.

எல்லாவற்றையும் விடப்பெரிதும் மிக்க பிரகாசமுடையதும் பூமியை யடக்கியாளுங் குணமுடையதும், நமக்கு நம்மை யடுத்திருக்கும் கிரகங்களுக்கும் ஒளி, உஷ்ணம் முதலிவற்றைக் கொடுப்பதும் சூரியனே. இச்சூரியனுடைய சக்தி பூமியிலும் மற்றைக் கிரகங்களிலும் நடக்குங்காரியங்கள் சரிவர நடப்பதற்கு ஏதுவாகின்றது. இவ்வளவு காரியம் நடப்பதற்குச் சூரியனிடத்திருந்து எட்டும் சக்தியோ இரண்டாயிரத்து முந்நூறு கோடிடியிலி லொருபாகந்தான்; மற்றையவை எங்குச் செல்கின்றனவோ; இப்பூமண்டலம் கிரகிக்கக் கூடியது அவ்வளவுதான். அந்தப் பாகத்தாலுண்டாகுஞ் சக்தியாலேயே இவ்வளவு காரியங்களும் நடக்கின்றன. இச்சூரியனுடைய காந்தியாலேயே குரு, சுக்கிரன் முதலிய கிரகங்கள் கட்டியாகிக் கிரகங்களாகின்றன. இச்சூரியனை ஒரு தகப்பனாயும், மற்றைய கிரகங்களை யவனுக்குப் புத்திரர்களாயும் ஒப்பிடலாம். நமக்கு இப்பொழுது தெரியவேண்டியது அச்சூரியனுடையகுணம், பரிமாணம், முதலியவைகளேயாம்.

இச்சூரியனது ஒளியை நாம் நேரே கண்ணாற் பார்த்துச் சகிக்கமாட்டோமென்பதுயாவருமறிந்த விஷயம். இதிலொரு ஆச்சரியமுமில்லை; ஏனெனில், சூரியனது ஒளியானது சந்திரவெளிச்சத்தைக் காட்டிலும் எட்டு இலக்ஷம் மடங்கு அதிகமுடையதாக விருக்கின்றது. இதுவரையில் காணப்பட்டுக் கணக்கிடப்பட்டிருக்கும் தாரா கணங்களுள் மிகப்பெரிதென மதிக்கப்படுவதும், திருவோண நக்ஷத்திரத்திற்குச் சிறிது வடமேற்காகக் காணப்படுவதுமான வேகா என்னும் நக்ஷத்திரத்தினது ஒளி



யைவிட இருபத்திராயிரம் கோடிபாகம் அதிகமாகவு மிருக்கின்றதென்று கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதனை நாம் பார்க்கவேண்டுமானால் மப்புமாசுகள் மறைக்கும்போது பார்க்கலாம். சாதாரணமாகத் தூரதிருஷ்டி கொண்டு பார்க்கலாமென்றாலோ, கண்ணாடிக்கே சூரிய கிரணங்களைக் கிரகித்து ஒருமைப்படுத்திக் காட்டுங் குணமுடைமையதால் நிச்சயமாக அக்கிரணங்கள்கண்ணிற்பாய்ந்து கண்ணைக்கெடுத்துவிடும்; அதற்காக வர்ணக்கண்ணாடிகளைப் பூட்டி அதற்குமேல் தூரதிருஷ்டி கொண்டு பார்ப்பது வழக்கம்.

இப்படிக் கண் கூடாகப் பார்க்கும்போது சூரியன் விருத்தவலிவாயிருப்பதாகத் தெரிகிறது. மேல்நாட்டிலுள்ள வானசாஸ்திரிகள் அதிநுட்பமான கருவிகள் கொண்டு சோதித்து சூரியன் இதே மாதிரியாகப் புலப்படுவதோடு, அது தன்னைத்தானே சுற்றிக்கொள்வது நிச்சயம்; அது சுற்றும்போது பலபாகங்கள் தெரிகின்றன. அவைகளில் வித்தியாசம் காணப்படாமையால், சூரியனும் ஒரு கோளவடிவினது என்றே கொள்ளுகிறோம் என்கின்றனர். காலையில் சூரியன் உதயமாகும்போதும், மாலையில் அஸ்தமிக்கும்போதும் மாசுமறைப் பின்றிச் சூரியனைப் பார்ப்போமாயின், அப்பொழுது மத்தியான்ன காலங்களிற் பார்ப்பதைவிடப் பெரிதாயும், விகற்பமுடையதாயும் புலப்படுகிறது; இது நமது கண்ணுக்குப் புலப்படும் தோற்றமேயொழிய உண்மையில் அப்படியில்லை யென்பதைப் விவகரிக்கப்படும்.

சூரியன் ஒருமாதம் வித்தியாசமாகக் காணப்படுமென்பது ஒரு துணிபு. பூமி தன்னைத்தானே சுற்றுவதன்றிச் சூரியனையும் சுற்றுகிறதென முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. உத்தராயண தெக்ஷிணாயனங்கள் உண்டாவதே இதற்குப்போதிய சான்றாகும். இந்துக்கள், பூமி நடுவாகவும், சூரியனும் மற்றைக்கிரகங்களும் பூமியைச் சுற்றியோடுகின்றன வென்றும் கொண்டிருக்கிறார்கள்; ஆகையால் கிரகங்கள்சுழலுகின்றனவென்ப துண்மை; இவ்வுண்மையைக்கொண்டு சூரியன் நடுவிலிருக்கப் பூமி சுற்றுமாயின், அச்சூரியனுக்குச் சமீபமாக ஒருகாலம் செல்லும். அது போலவே, ஒருகாலம் தூரத்திற்செல்லும். ஆகையால், அக்காலங்களில், காலத்துக்குத் தக்கபடிசிறிது பெரிதாகப் புலப்படும். இதுவன்றி ஒருபொருளைச் சமீபத்திலோ தூரத்திலோ நின்று பார்ப்பதற்குத் தக்கபடி அதன் வடிவம் மாறிவருமென்பது காமெல்லோரும் அறிந்ததே. அதன்படி சூரியன் பல கிரகங்களினின்று பார்க்கும்போது அதற்குத்தக்கபடி புலப்படும்.

புதனிடத்திருந்து பார்க்கும்போது எல்லாவற்யையும் விடப்பெரிதாயும், அந்த வரிசைக்கிரமத்தில், சுக்கிரன், பூமி, செவ்வாய், குரு, சநி, விமந்தன், பிரமந்தன். முதலியவற்றிலிருந்து பார்க்கும்போது மிகச்சிறிய நக்ஷத்திரம்போலும், குருவினின்று பார்க்கும் போது நமக்கு சுக்கிரன் புலப்படுவது போலவுங் காணப்படுகிறது.

இப்படிக்கிரகங்களினின்று நோக்கும்போது சூரியன் பெரிது சிறிதாகக் காணப்படினும், ஒளியும் உஷ்ணமும் வேறுபடுவதில்லை. அக்கிரகங்களுக்கு எவ்வளவு சக்தியோ அவ்வளவுதான் வாங்குகின்றன. ஒரு கிரகத்தின் பரிமாணம் அறிய வேண்டுமாயின், நாம் சாதாரணமாய்ப் பார்ப்பதைக்கொண்டே சொல்லிவிடக் கூடாது. நமக்கும் பார்க்கப்படும் வஸ்துவுக்கும் தூரம் எவ்வளவிருக்கிறதென்பதை தெரிந்துதான் அதன் பரிமாணத்தை நிச்சயம் செய்யவேண்டும். ஆகையால், முதலிற் சூரியனுக்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமிருக்கிறதென்றும், மற்றைக்கிரகங்களுக்கும் சூரியனுக்கும் எவ்வளவு தூரமிருக்கிறதென்றுங் கவனிக்கவேண்டும். (செந்தமிழ்)

# ரஸிகை.

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

### அங்கம் 1,

### காட்சி 3.

[இருவரும் பாடுகின்றார்கள்].

பங்கஜ வெண்மலர் பண்பொடமர்ந்திடு பாஸிகை என்னம்மணீ
துங்கவெண்மந்தஹா சத்தொடிலங்கியே தோற்றிடும் என்னம்மணீ
அண்டமனைத்தையும் ஆக்கிப்புரந்தழி ஆநந்த வென்னம்மணீ
விண்டவெவ்வேதத்தின் வித்தென நின்றிடு விமலையே என்னம்மணீ
செஞ்சுவை சிந்திடச் செப்பிடு கீதமுமாயினை என்னம்மணீ
அஞ்சுபுலன்களும் ஆயினை உள்ளமும் ஆயினை என்னம்மணீ
வெங்கதிர்ச் சூரியன் தண்கதிர் வெண்மதியாயினை என்னம்மணீ
பொங்குறு சூல் முகில்*(1)பொழிவுரை மாரியும் ஆயினை என்னம்மணீ
நீடுமலைத்தொடர் ஓடுவெள்ளாறுகள் ஆயினை என்னம்மணீ
காடுகதிர்ப்புலம்(2)பாடுதிரைக்கடல் ஆயினை என்னம்மணீ [மணீ
(3)குருதவழ் வானொடு(4)கொள்ளைச்(5)சுடர்களும் ஆயினை என்னம்
கருத்தொடுங் கண்ணொடுங் காண்பகணக்கில வாயினை எனனம்மணீ
கருத்தினுங் கண்ணினும் காந்தகணக்கிலவாயினை என்னம்மணீ
ஒருமுதலாமுனை உணர்ந்திடுவாரெவர் உத்தமி என்னம்மணீ
ஆதியனாதியாய் அன்புநிறைந்தொளிர் அற்புத என்னம்மணீ
பேதமில் ஏகமே பேதிய கோடியாம்மாயையே என்னம்மணீ
நித்தநின் நேர்மையை நினைந்து வியர்ந்தகம் நெகிழ்ந்திட என்னம்மணீ
சித்தியெ மக்கருள் சத்திய வஸ்துவே சாரதா என்னம்மணீ

இருவரும் தேவ மாதரையொப்ப இமைகொட்டாது அன்னையையே உற்றுநோக்கிக்கொண்டு விழிகளிலிருந்து முத்து முத்தாக ஜலம் பெருக தன்னை மறந்த தியானத்திலிருக்கின்றனர்.

[தடாகத்துக்கப்பால் வேலியைத் துளைத்துக்கொண்டு ஓர் நெடிய கத்தி தக தக வெனஜ்வலிக்கின்றது. உடனே சட சடவென ஓர் சப்தம். அடுத்த க்ஷணத்தில் வேலியில் ஓர் பிளவு உண்டாகின்றது. அதன் வழியாய் கையிற் கத்தியோடு கம்பீரமாய்ப்பிரவேசிக்கின்றான் ருக்மணி ரமணன். தடாகத்தை நோக்கி விரைந்து நடக்கின்றான். அதை அணுகிவிடு

* (1) முகில்—மேகம்.
(2) புலம்—வயல்
(3) குரு—நிறம். இங்கே நீலநிறம் குறிக்கப்பட்டது.
(4) கொள்ளை—மிகுதி
(5) சுடர்கள்—நட்சத்திரங்கள்



கின்றான்.] ஊழ்வலியால் அவனது திருஷ்டி ஆலயத்தை நோக்கி செல்லு கின்றது. கன்னிகைகளையும் காண்கின்றான். பதுமையாக நின்று நோக்குகின்றான். அவன் உள்ளத்திலோர்புதிய கிளர்ச்சி எழுகின்றது. பெரும்பான்மை அந்தக் கிளர்ச்சி காரணமாகவும் சிறுபான்மை தாகத்தின் கொடுமையாலும், ஓடிவந்தகளைப்பினாலும், ஓர் மபக்க முறுகின்றான். லோசனா என்ற மொழியைப்பதறுகின்ற குரலில் தொனித்து மூர்ச்சையாய் கீழே விழுகின்றான். அந்தத்தொனி அரசபுத்திரிகளின் தியானத்தைக்கலைத்து விடுகின்றது. இருவரும் தடாகத்தின் புறமாகப் பார்க்கின்றார்கள். ரஸிகையின் நெஞ்சம் பதைக்கின்றது. வசீகரி அவள் முகத்தை நோக்குகின்றாள். அவள் தலை தாழ்த்திகொள்ளுகின்றாள்].

வசீகரி.—அக்கா! யாரோ ஒருவர் அதோ தடாகத்தருகே மூர்ச்சையாய் விட்டார், போய்ப் பார்ப்போம் வா.

ரஸிகை.—(மனக்குழப்பத்துடன்) என்ன! நாம் போகலாமா! நம் தந்தைக்குத் தெரிந்தால் என்ன சொல்வார்?

வசீகரி.—என்ன அக்கா! ஆபத்திற்கூடவா அந்தப்புரச்சட்டங்கள்! அவர் என்ன அவஸ்தையிலிருக்கிறாரோ? ஓர் உயிரைக் காப்பாற்றியதால் உண்டாகும் ஆநந்தத்தை உனக்களிப்பதற்காகவே சாரதா தேவி இந்தப்புருஷரை அனுப்பியிருக்கிறாள். ஆலசியாமல் வா.

[எழுந்து தடாகத்தை நோக்கிச் செல்லுகின்றாள் விவாகத்தை வெறுத்தவிமலை. ரஸிகையும் எழுந்து அவளைத்தொடர்கின்றாள். இருவரும் ரமணனருகே வந்து அவன் முகத்தை நோக்குகிறார்கள். ரஸிகையின் விழிகளில் தாரை தாரையாக ஜலம் பொங்கி வடிகின்றது, அதரங்கள் அதிரப்பிதற்றுகின்றாள்].

"வசீகரீ! வசீகரீ! இனி என்ன செய்வதடீ? என்ன செய்வதடீ?"

[மேற்கூறச்சக்தியற்று, தன் வலக்கரத்தால் நெற்றியைத் தாங்கிக் கொண்டு கீழே உட்காருகின்றாள்].

வசீகரீ.—பயப்படாதே அக்கா! தைரியமாயிரு; சற்று நேரத்தில் எழுந்து விடுவார் பார்.

[தடாகத்திலிருந்து இருகைநிறைய ஜலம் மொண்டுவந்து ரமணன் முகத்தில் தெளிக்கின்றாள். ரமணன் மூர்ச்சை தெளிந்து அருகே உட்கார்ந்திருந்த ரஸிகையின் முகத்தை நோக்குகின்றான். பெண்மணி நாணி எழுந்துநிற்கின்றாள். ரமணனும் எழுந்துட்கார்ந்து மெல்லியகுரலில் "ஜலம்! ஜலம்!" என்கின்றான். வசீகரி ஆலயத்திற் கோடுகின்றாள். ஆங்கு அம்மணியின் முன்பிருந்த அமிர்தபாத்திரத்தை எடுத்துக்கொண்டு திரும்பிவந்து அதை ரமணனுக்குக்கொடுக்கின்றாள். அவன் அமுதத்தைப் பருகுகின்றான். அவ்வாறு பருகும் பொழுதே, தலைதாழ்த்திநின்ற ரஸிகையின் கள்ளக்கண்கள் அவன்முகத்திற் பொருந்திய சௌந்தரியத்தையும்

3

காந்தியையும் பருகுகின்றன. ருக்மணிரமணன் அமிர்தபானம் புரிந்த பின்பு பாத்திரத்தைக் கீழேவைத்து விட்டு எழுந்து நின்று இருசகோதரிகளையும் நோக்கிக் கூறுகின்றான்.]

ருக்மணிரமணன்.—தாகத்தின் கொடுமையால் வேலியைப் பிரித்து இந்த இடத்திற்கு வந்துவிட்டேன். க்ஷமித்துக்கொள்ளுங்கள். நீங்கள், என்னுயிரைக் காப்பாற்றியதை ஒருபோதும் மறவேன். நான் வேலியை முன்போல் அமைத்துவிட்டுப் பின்பு அகத்திற்குப் போகிறேன்.

[தரையிற் கிடந்த கத்தியை எடுத்துக் கொண்டான். சரசரவென நடக்கின்றான். ரஸிகையும் வசீகரியும் அவனையே நோக்குகின்றார்கள். ரமணன் வேலிக்கப்பால் நிற்கின்றான். ஓர் ஏழை விருத்தை (கிழவி) ஓர் சுள்ளிக் கற்றையைத் தன்னிடையிற் றாங்கி தன்னிடக்கையால் அணைத்துக் கொண்டு வருகின்றாள். ரமணன் வேலிக்கப்பால் வந்ததும், பிரமித்து அவனைப் பார்த்தவாறே நிற்கின்றாள்.]

ருக்மணிரமணன்.—ஏன் பாட்டி மலைத்து நிற்கிறாய்?

விருத்தை.—யாரு நீங்கோ? நந்தவனத்திலே ருந்து வரேளே.

ருக்.—நான் இருப்பது புஷ்பபுரி. வேட்டையாடுவதில் எனக்குப் பிரியமதிகம். எங்கள் ஊருக்கருகே யுள்ள காட்டில் இன்று வேட்டையாடப்போய் ஒருமானைத் தொடர்ந்து நெடுந்தூரம் ஓடினேன். மான் அகப்படவில்லை. பின்பு தாகத்திற்குத் தண்ணீரைத் தேடிக்கொண்டு இந்த இடத்திற்கு வந்தேன். இந்த வேலிக்கப்பால் ஒரு தடாக மிருக்கிறதென்று ஒரு விறகுவெட்டி சொன்னான். தாகத்தை என்னாற் சகிக்கக் கூடவில்லை. ஆகையால் என் கத்தியின் உதவியினால் வேலியைப் பிரித்துக்கொண்டு தடாகத்திற்குப் போய் என் தாகத்தைத் தணித்துக் கொண்டேன்.

விருத்தை.—நீங்க நல்ல மனுஷாளா இருக்கிரேள். நீங்க இந்த நந்தவனத்துள்ளே போன சேதி நம்ம ராஜாவுக்குத் தெரிஞ்சுட்டா பெருந் தொல்லை வந்திடும். ரெண்டாம் பேருக்குத் தெரியாமலே வீட்டுக்குப் போயிடுங்கோ.

ருக்.—என்ன தொல்லை வந்திடும் பாட்டி?

விருத்தை.—இது யாரு நந்தவனமின்னு ஒங்களுக்குத் தெரியாதோ? நம்மராஜா பெண்களுக்காக ஏற்பட்டது.

ருக்.—அதோ நிற்கிறார்களே! அவர்கள் தானா ராஜா பெண்கள்?

விருத்தை.—ஆமாம், அவாள் தான்.

ருக்.—ஏன் பாட்டி! நமது ராஜா பெண்களின் பெயர் ரஸிகை, வசீகரி என்று சொல்லுகிறார்களே. இவர்களில் யார் ரஸிகை, யார் வசீகரி?



விருத்தை.—வெள்ளைப் பட்டுக் கட்டிக்கொண்டி ருக்காளே அந்த அம்மா தான் வசீகரி. பீதாம்பரம் கட்டிருக்கிற அம்மா தான் ரஸிகா. ஆனா ஏன் நமக்கு இந்த வீண்பேச்சு. ஆரேனும் பாத்துட்டா நம்ம ரெண்டு பேரையும் ராஜாமுன்னே கொண்டு போயிடுவா.

ருக்.—பிரித்த வேலியை நான் முன்போல் சரியாய் அமைத்துவிட்டுப் போகிறேன்.

விருத்தை.—ஒங்க இஷ்டப்படி செய்யுங்கோ. நான் போறேன்.

[விருத்தை செல்கின்றாள். ரமணனும் வேலியை முன்போல் அமைத்துவிட்டு மறைகின்றான். தடாகத்தருகே நின்ற ரஸிகையும் வசீகரியும் சம்பாஷிக்கின்றனர்.]

வசீகரி.—ஏனக்கா! இந்தச் சமயம் நாம் இங்கே இல்லாவிட்டால் அவருடைய கதி என்னவாயிருக்கும்!

ரஸிகை.—அடி கண்மணீ! வசீகரீ! நீ ஓர் அரிய வீரஸ்திரீ. (தங்கையின் கன்னமொன்றை முத்தமிடுகின்றாள்.) உன் பரோபகார குணத்தையும் உன் தைரியத்தையும் எனக்கு நன்கறிவிப்பதற்கே நமது அன்னை இவரை அனுப்பினாள். நீயே அரசியாவதற்குத் தகுந்தவள். நீ அரசியானாற்றான் நமது குலத்தின் புகழ் எங்கும் பிரகாசிக்கும்.

வசீகரி.—என்னை வீணாய்ப் புகழாதே அக்கா.—இந்த விஷயத்தை நமது தந்தைக்குத் தெரிவிக்கவேண்டுமல்லவா?

ரஸிகை.—அவருக்குத் தெரிந்தால் நான் புகழ்ந்ததைப்பார்க்கிலும் அதிகமாகவே உன்னைப் புகழ்வார். ஆகையால் தெரிவிக்கவேண்டியதுதான்.

வசீகரி.—அவர் என்னைப் புகழ்வதாயிருந்தால் தெரிவிக்கஎனக்குப் பிரியமில்லை. ஆனால் நமது நந்தவனத்தில் ஓர் புருஷன் வந்ததை அவருக்குத் தெரிவிக்காதிருக்கக்கூடாது. ஆகையால் அம்மணிக்குச் சமர்ப்பித்த பிரசாதங்களை எடுத்துக்கொண்டு தந்தையிடம் போகலாம் வா. (போக அடியெடுக்கின்றாள்.)

ரஸிகை.—சற்றுப்பொறடீ.

வசீகரி.—ஏனக்கா ? (செல்லாது நிற்கின்றாள்.) தந்தைக்குத் தெரிவித்துவிட்டால் எனக்கு அகந்தை தலைக்கேறிவிடுமென் றெண்ணுகிறாயோ?

ரஸிகை.—அகந்தை என்னைப்போன்ற பேதைகளிடமிருக்குமேயொழிய உயர்ந்தகொள்கைகளையுடைய உன்னை அணுகுவதற்கும் அஞ்சுமே.

வசீகரி.—அப்படியானால் நீ ஏன் நமது தந்தைக்குச் சொல்லவேண்டாமென்கிறாய்?

ரஸிகை.—ஏனென்றால்— ஏனென்றால்— ஏனென்றால்— (சிறிது நேரம் மௌனம்.) காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் நமது தந்

தைக்குச் சொல்லவேண்டாமென்று மாத்திரம் என் புத்தியில் தோன்றுகிறது.

வசீகரி.—சரி. உன் புத்தியில் தோன்றுகிறபடியே சொல்லாதிருந்து விடுவோம்.

ரஸிகை.—ஒரு விஷயம் என் மனத்தைக் கலக்குகிறதடி.

வசீகரி.—என்ன விஷயம்?

ரஸிகை.—அந்தப்புருஷர் யாரென்று நினைக்கிறாய்?

வசீகரி,—யாராயிருந்தாலென்ன?

ரஸிகை.—அவர் ஒரு அரச வம்சத்தைச் சேர்ந்தவரென்று நினைக்கிறேன்.

வசீகரி.—அவர் அரசவம்சத்தைச் சேர்ந்திருந்தாலென்ன! ஆண்டி வம்சத்தைச சேர்ந்திருந்தாலென்ன! நமக்கென்ன! நாழிகையாகிறது. போகலாம்வா.

ரஸிகை.—ஆனால்—

வசீகரி.—ஆனால், என்ன?

[ரஸிகை தன் மேல் இதழ்களைக் கிள்ளிக்கொண்டு மௌனமாய் ஆலோசிக்கின்றாள்.]

வசீகரி.—(புன்னகையுடன்) என்னக்கா! இங்கேநடந்த விஷயங்களை நமது தந்தைக்குச் சொல்லவேண்டாமென்று நீ சொன்னதையும் நீ மெல்லமெல்லப் பேசுவதையும் என்னென்னவோ யோசித்துக் கொண்டு உதட்டைக் கிள்ளிக்கொண்டிருப்பதையும் கவனித்தால், நீ விரும்பிய வரத்தை இன்றைக்கே அம்மணி அளித்துவிட்டாள் போலிருக்கிறது.

ரஸிகை.—என்னடி இப்படிப் பேசுகிறாய்! என் புத்திக்குத் தோன்றியதைச் சொன்னால் என்னென்னவோ அர்த்தம் பண்ணிக்கொள்ளுகிறாய். எல்லாவற்றையும் இப்பொழுதே நமது தந்தைக்குச் சொல்லலாம் வா.

வசீகரி —வேண்டாம். வேண்டாமக்கா. என்னை க்ஷமித்துக்கொள். நான் வேடிக்கையாகச் சொன்னேன். உண்மையில் நான் ஒரு அர்த்தமும் பண்ணிக்கொள்ளவில்லை.

ரஸிகை.—எல்லாவற்றையும் மறந்துவிடுவோமடி. போகலாம் வா.

[இருவரும் ஆலயத்தை நோக்கிச் செல்லுகிறார்கள்.]

(தொடரும்.)

சு. அ. சுப்பராயன்.

---

# மார்க்கோ போலோ செய்த பிரயாணம்,

முன்காலத்தில் இங்கிலாந்து முதலிய தேசங்களில் உள்ளஜனங்களில் புத்தியும் பரோபகாரமுமுள்ள மகான்கள் சுயநலத்தைக் கருதாமல் தங்கள்



தேசத்தை விட்டு காடு, வனாந்தரம், கடல் முதலியவைகளில் சென்றுபற்பல புதியநாடுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்பத்திரிகையில் சீனமத்திய ஏஷியா, ஏஷியாவின் தென்கிழக்குபாகம் முதலியவைகளுக்குச் சென்ற மார்க்கோபோலோ என்பவரைப்பற்றி சிற்சில விஷயங்களை எழுதுகிறோம்.

வெனிஸ் என்ற நகரில் நிகலோபோலோ என்பவருக்கு மார்க்கோ போலோ என்ற புதல்வன் ஜனித்தான். நிகலோபோலோ வியாபாரம் செய்துவந்தார். இவர் தனது சகோதரன் மப்போ வுடன் மார்க்கோபோலோ பிறப்பதற்கு முன் சீனதேசத்திற்குப் போனார். அப்பொழுது சீனாவை கும்லாய்கான் அரசுபுரிந்து வந்தான். இவ்வரசனிடத்திற்கு போலோ இருவரும் சென்று பற்பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். கிறிஸ்துமதத்தைப்பற்றியும் அவ்வரசனுக்குச் சொன்னார்கள். அவ்வரசன் இவர்கள் சொன்னதையெல்லாம் மிக்க ப்ரியத்துடன் கேட்டு இவர்கள் இத்தாலி தேசத்திற்குத் திரும்பிப்போனவுடன் போப்புடன் சொல்லி 100 புத்திமான்களை அனுப்பி தமது பிரஜைகளுக்கு கிறிஸ்துவமார்க்கத்தைப் போதிக்குமாறு கேட்டுக்கொண்டான். இவர்கள் திரும்பி தங்களதுதேசத்திற்கு வந்து சிறிதுகாலம் வசித்துவந்தார்கள். மார்க்கோபோலோ புத்திசாதுர்யமுள்ளவனும், அநேக விஷயங்களை அறிய விருப்பமுள்ளவனுமிருந்ததை இவன் தகப்பனார் கண்டு, தான் செய்தபிரயாணத்தைப் பற்றி கதையாகச் சொன்னார். மார்க்கோபோலோ இவைகளைக் கேட்டுதானும் பிரயாணம் செய்யவேண்டும் என்று எண்ணினான். அப்பொழுது இவனுக்கு வயது பதினைந்துதான். இவனது தகப்பனாரும் மப்போபோலோவும் பிரயாணம் செய்ய ஏற்பாடுசெய்து வந்தார்கள். மார்க்கோபோலோ ஊக்கத்துடன் தானும் வருவதாகச் சொல்லவே, இவர்கள் அவனை இட்டுக்கொண்டு பிரயாணம் செய்ய புறப்பட்டார்கள்.

இவர்கள் ஆர்மீனியா, பெர்ஷியா முதலிய தேசங்களுக்கு வந்து ஆர்மஸ் என்ற பட்டணத்திலிருந்து கப்பலேறி சீனாவுக்குப்போக யோசித்தார்கள். ஆனால் மார்க்கோபோலோ வியாதியால் வருந்தினான். இவனை அங்கேயே வைத்துக்கொண்டு இவனுக்கு மருந்து கொடுத்து வியாதியை நீக்கமுயன்றார்கள். ஒருவருஷம்வரையில் இங்கேயேஇவர்கள் தங்கவேண்டியிருந்தது. ஏனெனில் மார்க்கோபோலோவுக்கு வியாதி நீங்கவில்லை.

ஒருவருஷமானவுடன் மார்க்கோபோலோ சௌக்யமடையவே, இவர்கள் அநேக உயரமான பர்வதங்கள், பயங்கரமான வனங்கள், உஷ்ணமான தேசங்கள், குளிருள்ள நாடு முதலியவைகளைத் தாண்டிச் சென்றார்கள். வனாந்தரங்களில் கோபி வனாந்தரம் மிகவும் பெரியது. எங்கு பார்த்தாலும் மணல்தான். இவைகளையெல்லாம் கஷ்டத்துடன் கடந்து கடைசியாக சீனதேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் சீன சக்ரவர்த்தியைப் பார்க்கவே, அவர் சந்தோஷத்துடன் அவர்களை வரவழைத்து அவர்களுடன் பேசினார். மார்க்கோபோலோவை

சக்ரவர்த்தி கண்டு மகிழ்ந்து தனது அரண்மனையிலேயே வைத்துக்கொண்டான். போலோ அநேக பாஷைகளைப்பேச கற்றுக்கொண்டான். அத்தேசத்து ஜனங்களைப்பற்றியும், அத்தேசத்தைப் பற்றியுமுள்ளவைகளைக் கற்று தெரிந்துகொண்டான். அத்தேசத்திலுள்ள யாவரும் இவனது புத்தியைக்கண்டு மெச்சி வந்தார்கள்.

சிலவருஷங்கள் சென்றபின்பு அவ்வரசன் மார்க்கோபோலோவை கொச்சின் சைனா, இந்தியா முதலிய தேசங்களுக்கு தூதனாக அனுப்பி அங்குள்ள அதிசயங்களைத் தனக்கு தெரிவிக்குமாறு அனுப்பினான். மார்க்கோபோலோ அவ்விதமே அவ்விடங்களுக்கெல்லாம் சென்று ஆங்காங்குள்ள அருமையும் பெருமையும் வாய்ந்துள்ள விஷயங்களைப் பார்த்தும் கேட்டும் தெரிந்துகொண்டு சீனா தேசத்திற்கு வந்து சக்ரவர்த்திக்கு ஒன்று விடாமல் தான் நேராகப் பார்த்த பர்வதங்களைப் பற்றியும், நீண்டவும் அகலமான நதிகளைப்பற்றியும், காடுகளைப்பற்றியும், விவரித்துச் சொன்னான். ஜனங்களின் நடவடிக்கை, பாஷை, கைத்தொழில் வியாபாரம்முதலியவைகளையும் செவ்வனே அரசனுக்குத் தெரியுமாறு சொன்னான். நகரங்கள் பட்டணங்கள் இவைகளின் அழகு, விஸ்தீர்ணம் முதலியவைகளைப் பற்றியும் சொன்னான். சக்ரவர்த்தி மிக மகிழ்ந்து மார்க்குபோலோவுக்கும், இவனது தகப்பனாருக்கும், மப்போவுக்கும் குவியல் குவியலாக பணம், நகை, நவரத்னங்கள் முதலியவைகளை இனாமாகக் கொடுத்தான்.

சக்ரவர்த்தி தன் குமாரத்தியை பர்ஷியா தேசத்து அரசனுக்கு மணம் புரிந்து வைக்கும்படி அவளை மார்க்குபோலோவுடன் பர்ஷியாவுக்கு அனுப்பினான். இவனும் அவ்விதமே சக்ரவர்த்தி இட்ட வேலையை செய்துவிட்டு சீனாவுக்குத் திரும்பிவந்தான்.

மறுபடியும் சக்ரவர்த்தி மனமகிழ்ந்து நகை, திரவியம் முதலியவைகளைத் திரளாக இவர்களுக்குக் கொடுத்தான். இவர்கள் இவைகளைப் பெற்றுக் கொண்டு தங்கள் ஜன்மதேசத்துக்குப் போகவிரும்பி சக்ரவர்த்தியிடம் சொல்லி அவன் விடையை எதிர்பார்த்திருந்தார்கள். சக்ரவர்த்தியும் இவர்கள் சுமார் 23 வருஷங்களாக இவ்விதம் தங்கள் சொந்தவூரைவிட்டு வந்திருப்பதைக்கண்டு, அவர்களைத் தங்கள் ஊருக்குத் திரும்பிப் போகும்படி உத்தரவளித்தான். ஆனால் அவ்விதம் சொல்ல இவனுக்குமனம் சிறிதுமில்லை. இவர்களிடத்தில் இவனுக்கு அதிகப்பிரியமிருந்தது. ஆயினும் கடைசியாக விசனத்துடன் போய்வாருங்கள் என்று சொன்னான்.

இவர்கள் சக்ரவர்த்தி விடை பெற்றுக் கொண்டு க்ஷேமமாய் தங்கள் நகராகிய வேனிஸுக்கு வந்து சேர்ந்தார்கள். மார்க்கோபோலோ பிரயாணம் செய்ததில் தான் பார்த்து கற்றுக் கொண்ட சகலவிஷயங்களையும் விடாமல் ஒருபுஸ்தகத்தில் எழுதிவைத்தார். அதில் சீனாவிலுள்ள பீகின் பட்டணத்தைப் பற்றியும், அவர்கள் செய்யும் பீங்கான் சாமான்கள், அத்தேசத்து பட்டு முதலியவைகளைப் பற்றியும் விவரமாக எழுதியிருக்கிறார்.



மேலும் நிலக்கரி அதன் உபயோகம் முதலியவைகளைப்பற்றியும் விவரித்து எழுதியிருக்கிறார். அவைகள் மலையிலிருந்து வெட்டி எடுக்கப் பட்டு விரகு போல் எரிகின்றன வென்று சொல்லுகிறார். ஐரோப்பாவிலிருந்து இப்படி பிரயாணம் செய்து ஜப்பான் தீவைப்பற்றி எழுதியிருக்கிறவர்களில் இவர்தான் முதலானவர்.

இவர்கள் 1295ம் வருஷம் வேனிஸுக்கு வந்து சேர்ந்ததும், இவர்கள் இவ்வளவு காலம் திரும்பி வராமையால் இவர்கள் இறந்துபோயிருக்கலா மென்று நினைத்தவர்கள், இவர்களைக்கண்டு ஆநந்தங்கொண்டு இவர்களைச் சந்தோஷத்துடன் வர வேற்றார்கள்.

அந்த நகரத்து ஜனங்கள் இவர்கள் சொன்னதை யெல்லாம் முதலில் நம்பவில்லை. பெரிய தேசங்களாகிய சீனா, இந்தியா முதலியவைகளில்லவே யில்லை யென்று நினைத்தார்கள். இவர்கள் அங்குள்ள ரத்தனம், வைடூரியம் பட்டு, நகை முதலியவைகளைப் பற்றி சொன்னதையும் நம்பவேயில்லை, மார்க்கோபோலோ சிறியபையனாயிருந்தபொழுதே பிரயாணம் செய்து திரண்ட திரவியத்தை சுமார் 23 வருஷங்களுக்குப் பின் சம்பாதித்துக் கொண்டு தனது தேசத்துக்கு வந்தபொழுதும் ஜனங்கள் நம்பவில்லை.

ஆகையால் இவர்கள் தங்கள் சிநேகிதர்களுக்கு ஒருவிருந்து செய்யப் போகிறதாகச் சொல்லி ஒரு குறிப்பிட்ட தினத்தில் விருந்துண்ண எல்லாசிநேகிதர்களையும் தங்கள் வீட்டிற்கு வரவழைத்தார்கள். முதலில் இவர்கள் பிரயாணம் செய்யும்பொழுது அணிந்திருந்த உடுப்புகளுடன்வராமல் தங்கள் சிநேகிதர்களுக்குமுன் நல்லவிலையுயர்ந்த உடுப்புகளை அணிந்துகொண்டுவந்துநின்றார்கள். பின்புஉள்ளே சென்று இவைகளைஎடுத்துவிட்டு பிரயாணம் செய்யுமுன் இவர்கள் அணிந்திருந்த உடுப்புகளைத் தரித்துக்கொண்டு அவைகளினுள் சில விலையுயர்ந்த நகைகளையும், கற்களையும் வைத்துக்கொண்டு இவர்கள் முன்வந்து நின்று, அவ்வுடுப்புகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். விருந்தாளிகள் போலோக்கள் அணிந்திருந்த உடுப்புகளைக் கண்டு அதிசயித்தார்கள். உடனே அவைகளுள் இவர்கள் வைத்திருந்த நகை முதலியவைகளை எடுத்து அவர்களுக்கு காண்பிக்கவே அவர்கள் கொண்ட சந்தோஷத்திற்கு அளவில்லை. உண்மையான போலோக்கள் தனவந்தர்களாக வந்திருக்கிறார்களென்று சொன்னார்களாம். அப்பொழுது தான் இவர்கள் சொன்னது எல்லாம் உண்மையென்று அவர்கள் நம்பினார்களாம்.

200 வருஷங்களுக்குப்பின் கோலம்பஸ் என்பவர் மார்க்கோபோலோ எழுதிய புஸ்தகத்தைப்படித்து இதர தேசங்களைப்பற்றி அறிந்துகொண்டு தானும் இந்தியாவிற்குப்போய் அதைப்பார்க்க வேண்டுமென்று விரும்பினாராம். இவர்செய்த பிரயாணத்தைப் பற்றி அடுத்தபத்திரிகையில் எழுதுவோம்.

C. S. R.

## ஹாஸ்யத் துணுக்கு.

ஒரு பெரிய வக்கீல் அநேக சட்டப்புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு நியாயஸ்தலம் சென்றுகொண்டிருந்தார். அவரை ஒரு சிறுவன் சந்தித்து,

"ஐயா! அந்தப்புத்தக சமாசாரங்களையெல்லாம் நீர் உம்ம மண்டையிலே கொண்டுபோறீர் என்று நினைத்தேனே!

"ஆம் பையா! இவை எனக்காகவல்ல. ஜட்ஜுகளுக்காக கொண்டு போகிறேன்.

*　　　　*　　　　*

ஒரு கோவில் அர்ச்சகன் ஒரு க்ஷவரகனிடம் பணம் வசூலிக்கச் சென்றான்.

க்ஷவ.—ஏதய்யா பணம்!

அர்ச்.—கோவிலுக்கு உன் வரும்படியிலே பத்திலொருபங்கு கொடுக்கணும்.

க்ஷவ.—எனக்குக் கிடையாது: நான் கோவிலுக்கு வருவதேயில்லை.
அர்ச்:—ஆனால் நீ ஒருகால் இனிமே வருவாய்
உடனே க்ஷவரகன் தானும் 12 ருபாய்க்கு ஒரு பில் எழுதினான்.
அர்ச்:—இது எதுக்குடா?
க்ஷவ:—நீர் எனக்குக் கொடுக்கவேண்டியது.
அர்ச்:—நான் உன்னிடம் க்ஷவரம் பண்ணிக்கிணடதேயில்லையே.
க்ஷவ:—நீர் இனி மேல் ஒருகால் பண்ணிக்குவீர்.
அர்ச்சகன் வெட்கித்திரும்பிப்போயினான்.

*　　　　*　　　　*

ஒருவன் ஒரு உபந்நியாசகரைப்பார்த்து.

"நீரெப்பொழுதாவது உமது உபந்நியாசம் முடிந்தவுடன் வாசலண்டையிருந்துகொண்டு ஜனங்கள் சொல்லிக்கொள்வதைக் கேட்டீரா?"

உபந்நி:—"கேட்டேன் ஒருதரம்." பெரு மூச்சுவிட்டுக்கொண்டு "என் ஆயிசுலே இனிமேல் மாட்டேன்" என்று பதிலளித்தார்

*　　　　*　　　　*　　　　*

ஒரு தனவான் தன் மகன் இன்னும் பிரமசாரியாயிருப்பதற்குக் கோபித்து "நீ சீக்கிரம் ஒரு மனைவியையடைய வேண்டியது அவசியம்" என,

"ஆமா! அப்பா! யார் மனைவியை?" என புத்திரன் வினவினான்.

வி. என். ராஜ்.

---

## ஸ்நேகலதாவின் கடிதம்.

"என்னைப்பலி கொடுக்கிறேன்"

ஸ்நேகலதா தன் உயிரைவிட்டதற்குமுன் தன் தகப்பனுருக்கு எழுதிவைத்திருந்த கடிதத்தின் மொழி பெயர்ப்பை சுதேசமித்திரன் பத்திரிகையிலிருந்து எடுத்து பிரசுரிக்கிறோம்:—



"அப்பா அவர்களுடைய பாதபத்மங்களில் ஸ்நேகலதா அநேக நமஸ்காரம். என்னை விவாகம்செய்து கொடுப்பதற்காகத் தாங்கள் நம்முடைய வீட்டைப்பெந்தகம் வைக்கநினைப்பது என்னால் சகிக்கக்கூடவில்லை. அப்படிச் செய்யவேண்டாம்; செய்யவேண்டிய அவசியமிராது; ஏனென்றால் நாளைப்பொழுது விடியுமுன், பரம துக்கத்துக்காளாகிய என்னுடைய ஜீவன் பறந்துபோய் எப்பொழுதும் இன்பமயமாயிருக்கும் தேவியின் பாத நிழலை அடைந்துவிடும்.

என்னைச் செல்வமாய் வளர்த்தீர்கள். தாங்களும் அம்மாவும் என்னிடத்தில் வைத்துள்ள அன்பினால் நான் சந்தோஷமாயிருந்திருப்பது போல் மகாராஜா வீட்டுக்குழந்தைகளும் இருந்திருக்க மாட்டார்கள். இப்படி அன்புடன் நீங்கள் என்னை வளர்த்ததற்குப் பதிலாக, உங்களையும் குஞ்சு குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியே ஓட்டி நீங்கள் கஷ்டப்படும்படி செய்யவா நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்தேன்!

மூன்றாம் நாள் இரவு வெகு நேரம் சென்ற பிறகு பகலெல்லாம் அலைந்து களைத்து கால் வலிக்க நீங்கள் வீட்டுக்கு வந்த பொழுது உங்கள் முகத்தைப்பார்த்தேன். அதில் துக்கம் குடி கொண்டிருந்தது. "எல்லாம் போய்விட்டது" என்று நீங்கள் சொன்னது என் காதில் விழுந்தது. அதுமுதல் அப்பொழுது உங்கள் முகமிருந்த மாதிரி என் கண்முன் எப்பொழுதும் நின்றுகொண்டே இருக்கிறது. அந்த வார்த்தை என் காதில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. என் விவாகத்துக்காக கடன்வாங்கத் தாங்கள் செய்திருந்த யோசனை பலிக்காமற் போய்விட்டதென்பதும், வீட்டைப் பெந்தகம் வைத்துக்கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் பிறகு எனக்குத் தெரிந்தது. அப்பா, அந்த நினைப்பை சகிக்கக் கூடவில்லை. என் விவாக விஷயமாக எவ்வளவு மனோ விசாரம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இன்னும் எனக்கு விவாகமாகவில்லை என்று எவ்வளவுபேர் தங்களைத் தூற்றுகிறார்கள். தகுந்த வரன் சம்பாதிக்க நீங்கள் எவ்வளவு அரும்பாடுபட்டிருக்கிறீர்கள். எவ்வளவோ தலைமுறையாக நமக்குச் சொந்தமான இந்த வீட்டில் பிறத்தியார் நடமாட நான் சகிக்கமாட்டேன். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். "என்னை நான் பலி கொடுத்து விடுகிறேன்."

பரத்வானில் வெள்ள மெடுத்த பொழுது, அங்கு கஷ்டப்பட்டவர்களுக்கு உபகாரஞ்செய்ய உத்தம குணமுள்ள பிள்ளைகள் எவ்வளவோ பெயர்கள் முன் வந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். கஷ்டப்பட்ட ஜனங்களுக்கு இரங்கின அவர்களுக்கு பகவான் கிருபை செய்வாராக. அந்நிய பண்டங்களை வாங்குகிறதில்லை யென்று எவ்வளவோ பிள்ளைகள் பிரதிஜ்ஞைசெய்துகொண்டிருப்பதாகவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வெகு தூரத்திலுள்ள தென் ஆபிரிக்காவில் இருக்கும் நம் ஜனங்களின் பொருட்டுப் பணம் வசூல் செய்ய உத்தமகுணமுள்ள பிள்ளைகள் அநேகர்வீடு

தோறும் போனார்கள் என்று கேள்விப்பட்டேன். இங்கு கிட்டவிருந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு இறங்குகிறவர்களில்லையா?

நேற்றிரவு, அப்பா, நான ஒரு கனவு கண்டேன். அதிலிருந்து ஒரு பிரமாணம் செய்துவிட்டேன். திடீரென்று ஒரு சங்கீதம் கேட்டது; உடனே ஜோதி ஒன்று உண்டாயிற்று; அந்த ஜோதியின் மத்தியில் நம் தன்னை துர்க்கா தேவியைக்கண்டேன். சிரித்தமுகத்துடன் என்னைப் பார்த்து தன்னண்டை வந்து விடும்படி கூப்பிட்டாள். அப்பொழுது உங்களையும், குடும்பத்தில் அடிபட்டு எப்பொழுதும் வருத்தத்துடன் இருக்கிற என் அம்மாவையும், ஸ்வர்க்கம்போன்ற சந்தோஷமயமாய் நம் வீட்டைச் செய்யும் குழந்தைகளையும் நினைத்துக்கொண்டேன. உங்களை எல்லாம் ஆபத்திலிருந்து தப்புவிக்கிறதாக உடனே பிரமாணம் செய்துகொண்டு, நமது துர்க்காதேவி கூப்பிட்டபடி தவக்க மன்னியில் வந்துவிடுகிறதாக பதிலுரைத்து விட்டேன். நான் போய்விட்டால், நீங்கள் அழுவீர்கள். ஆனால் நான் போகத்தான் போகிறேன். வீடு தப்பட்டும்; அது முதல் எப்படி உயிரை விடலாமென்று பலவழிகளை யோசித்தேன். நெருப்பிட்டுக் கொள்ளலாமா? நீரில் விழலாமா? விஷம் சாப்பிட்டு விடலாமா? என்று பலவாறு யோசித்தேன். நெருப்பே சிரேஷ்டமென்று தீர்மானித்து விட்டேன். நானிடும் தீ தேசமெல்லாம் மூண்டு பெண்ணைவைத்துக்கொண்டு விவாகம் செய்து கொடுக்கக்கூடாமல் தவித்துருகும் ஸர்வஜனங்களின் துக்கத்தை எரிக்கட்டும்.

போய்வருகிறேன், அப்பா! பலியிடும் நேரம் கிட்டி விட்டது. உலகெலாம் தூங்கிக்கொண்டிருக்கிறது. நானும் நித்யமான தூக்கத்தை அடையப்போகிறேன். எனக்கு இப்பொழுது ஒரு சந்தோஷம் ஜனிக்கிறது. இவ்வளவு நாளாய் நீங்கள் என்னை அன்பாய் வைத்து ஆதரித்து வந்ததுபோல் நமது துர்க்கை அம்மாளும் இனி என்னை வைத்து ஆதரிப்பாள். நீங்களும் அம்மாவும் அங்கு வரும் வழியைப்பார்த்துக்கொண்டே நிற்பேன்.”

அநேக நமஸ்காரம்,
துரதிருஷ்டசாலி ஸ்நேகலதா.

---

## பத்திராதிபர் குறிப்பு.

இந்திய ஸிலோன் ரயில்பாதை சென்றமீ 24உ நமது கவர்னரவர்களால் திறக்கப்பட்டது. அச்சமயத்தில் சென்னை ராஜதானியிலுள்ள சில பிரமுகர்கள் சென்றிருந்தார்கள். இந்த ரயில்பாதை ஸிலோனிலிருந்து மண்டபம், தனுஷ்கோடி, தலைமன்னருக்குச் செல்லுமாம். இதற்கு 70-லக்ஷம் ரூபாய் இந்திய கவர்ன்மெண்டாரால் செலவழிக்கப்பட்டது.



நமது கவர்னர் இப்பாதையால் ஸிலோனுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரம், கைத்தொழில் விருத்தியாகுமென்றும், கப்பல் மார்க்கமாய் செல்லும் தொல்லை ஒழிந்துவிடுமென்றும் சொன்னார்.

நமது அரச சக்ரவர்த்தியும், மேரி ராணியாரும் ஏப்ரல்மீ 21உ பாரி ஸுக்குச் செல்வார்கள்.

ஈஜிப்ட் தேசத்து கலப்பையின் விலை ரூ. 5 வியவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள் இக்கலப்பைகளை சிண்டு என்ற விடத்தில் அதிகமாக உபயோகித்து வருகிறார்களாம்.

குச்பீஹார் மகாராணியார் தமது காலஞ்சென்ற கணவரின் சரித்திரமொன்றும், தமது சொந்த சரித்திரத்தையும், இந்தியாவில் ஸ்திரீகளின் அபிவிருத்தியைப் பற்றியும் 3-புஸ்தகங்கள் எழுத உத்தேசித்திருக் றார்கள்.

இம்மாசம் 26உயிலிருந்து ஏப்ரல்மீ 2உ வரைக்கும் அலிகாரில் மக ம்திய மாதர் கான்பரன்ஸ் நடக்குமாம். அப்பொழுது போபால் பீகம் அவர்கள் அங்கு தங்கியிருப்பார்களாம்.

பிகனீர் மகாராஜா அவர்கள் இந்து யுனிவர்ஸிடிக்கு லக்ஷம் ரூ. அளித்திருக்கிறார்கள். இப்பொழுது மொத்தம் 43-லக்ஷம் ரூ. சேர்ந் திருக்கிறதாம்.

இன்ப்ளுயன்ஸா என்ற சுரம் வராமல் தடுப்பதற்கு அடியில்வரும் ஒன்பது முக்யவிதிகளைக் கவனிக்கவேண்டும்.—(1) நல்ல ஆகாரத்தை உண்ணவேண்டும். (2) வீட்டில் நல்லகாற்றும் வெளிச்சமுமிருக்கவேண் டும். நித்திரை செய்யுமிடம் காற்று உலாவுமிடமா யிருக்குவேண்டும். (3) வீடு ஓதமாயிருக்கக் கூடாது. (4) பாலை நன்றாகக் காய்ச்சி சாப்பிட வேண்டும். (5) தினம் 8-மணிநேரம் தூங்கவேண்டும். (6) சாப்பிடுமுன் கால்மணி நேரமும் சாப்பிட்டபின் கால்மணி நேரமும் வேலைசெய்யாம லிருக்கவேண்டும். (7) இடுப்பைச்சுற்றி தளர்த்தியாய் உடுப்புகளைக் கட்டிக்கொள்ளவேண்டும். (8) தினம் காற்றுள்ளவிடத்தில் தேகாப்பியாசம் செய்யவேண்டும். (9) மூளைவேலை செய்யப்பட்டவர்கள் சாவகாச மிருந்தால் வருஷத்திற்கு ஒருமாசமாவது மலைப்ரதேசத்தில் வசித்து வா வேண்டும்.

ராஜமேந்திரியில் இண்டர் மீடியட் பரிக்ஷை நடக்கும்பொழுது ஒரு பையன் காப்பியடித்தானும். அவன்கண்டுபிடிக்கப்படவே. அவன்குளத்தில் விழுந்து மடிந்தானும். கெட்ட குணமுள்ளவர்கள் படும்பாடு இதுதான்.

மாதர் மனோரஞ்சினி பத்திரிகை இனி ஒவ்வொரு மாதமும் தவறாமல் 25உயில்பற்பல நூதனவிஷயங்களுடனும், அழகான சித்திரப்படங்களுட னும் வெளிவரும். பெண்கல்வியில் அபிமான முள்ளவர்களும், மற்ற கன வான்களும், இப்பத்திரிகையை ஆதரிக்க முன் வருவார்களென்று நம்புகி

னோம். பாக்கியுள்ள சந்தாதாரர்கள் வி. பி. மூலமாய் நாம் அடுத்தமாசம் அனுப்பும் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மாதர்கள் நமது பத்திரிகைக்கு அடிக்கடி சிறிய வியாசங்களை எழுதி அனுப்பமுன்வந்தால் நலமாயிருக்கும். வியாசங்கள் சுருக்கமாயும், அவர்களுக் குரியதாயு மிருக்கவேண்டும். எந்த ஸ்திரீ அல்லது பெண் ஒரு வருஷத்தில் அதிக வியாசம் எழுதி அனுப்புகிறாளோ அவளுக்கு ஒரு வெகுமதியளிக்க இஷ்டமிருப்பதாக ஒருமாது நமக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவ்விதம்செய்ய இஷ்டமுள்ளவர்கள் மாதர்மனோரஞ்சினி பத்திராசிரியருக்கு என்று எழுதி அனுப்பவேண்டும்.

---

## சமாச்சாரக் குறிப்பு.

மைலாப்பூர் ஸ்திரீகளின் கூட்டம்:—"ஹிந்து விவாகத்திருத்த லீகின் இரண்டாவது வருஷோற்சவம் மார்ச்சு மாதம் 11-ந்தேதி மாலை 4-30 மணிக்கு மைலாப்பூர் பெண்பாடசாலையில் மிஸ்ஸஸ் சதாசிவ அய்யரின் அக்கிராசனத்தின் கீழ், கொண்டாடப்பட்டது. ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரின் மனைவியான மிஸ்ஸஸ் சதாசிவ அய்யர், பால்ய விவாகத்தினால் உண்டாகும் கெடுதிகளைப்பற்றி நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தார். சகோதரி சுப்புலட்சுமியம்மாள், வரதக்ஷிணை வாங்குவதின் கெட்ட வழக்கத்தைக் கண்டித்து நீண்டதோர் வியாசம் வாசித்தார். அதைக்கேட்ட ஸ்திரீகள் எல்லோரும், சகோதரி சுப்புலட்சுமி அம்மாள் சொன்னது சரி சரி என்று மும்முறை ஆரவாரஞ்செய்து, இனிமேல் தங்களுடைய பிள்ளைகளுக்கு வரதட்சணை கேட்கிறதில்லையென்றும், ஒருவேளை அவர்களுடைய பிள்ளைகள் வரதட்சணை வாங்குவதற்கு விருப்பத்தைக் காட்டி வருவார்களேயானால் அதையும் கூடாது என்று தடுத்துவிடுகிறோம் என்று இவ்விதமாய் அவர்கள் செய்யச் சித்தமாய் இருக்கிறார்கள், என்று உரக்கச் சொன்னார்கள். சமீபத்தில் இன்னொரு மீட்டிங்கு கூடி அவர்களுடைய அபிப்பிராயங்களை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரத் தீர்மானஞ் செய்தார்கள். மிஸ்ஸஸ் சதாசிவ அய்யரின் பேச்சுக்களைத் துண்டுப்பத்திரங்களில் தமிழில் அச்சிட்டு, அவைகள் தமிழ் ஜில்லாக்களிலுள்ள ஸ்திரீகளின் கிளைச்சங்கத்து மெம்பர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஸ்னேகலதா என்ற வங்காளப் பெண் வரதட்சணை வாங்கும் வழக்கத்தை இந்தியாவிலிருந்து அடியோடேதொலைத்துவிடவேண்டுமென்ற எண்ணத்தை ஜனங்களுக்குள் உண்டாக்கவே தற்கொலை செய்துகொண்டாள் என்ற விஷயமடங்கிய துண்டுப்பத்திரிகைகளை இங்கிலீஷில் அச்சிட்டு, மிஸ்டெனெண்டு சபையோருக்குக்கொடுத்தார். தவிரஸ்திரீகளின்மனதில் மேற்கண்ட விஷயங்கள் நன்றாய்ப்பதியும்படி ஓர் உபந்நியாசஞ்செய்தார்."



பம்பாய் கவர்ன்மேண்ட் ஹவுஸில் குழந்தைகளுக்குக்களியாட்டு:— பம்பாய் கவர்ன்மெண்ட் ஹவுஸில் பம்பாய் கவர்னரின் மனைவியார் இந்த மீ 10உ செய்வாய்க்கிழமையன்று அவ்வூரிலுள்ள குழந்தைகளைக் கூப்பிட்டு ஒரு களியாட்டுக் கச்சேரி நடத்தினார். அதற்கு 1000-குழந்தைகளுக்குக் குறையாமல் போயிருந்தார்கள். அவர்கள் தேத்தண்ணீரும், சிற்றுண்டி சிற்றுண்டிகளும் கொடுத்து உற்சாகப்படுத்தப்பட்டார்கள். சிற்றுண்டிகளும் தேத்தண்ணீரும் உண்டபிறகு அக்குழந்தைகள் கடற்கரைக் கிட்டுக்கொண்டு போகப்பட, அவர்கள் அங்கே பொழுதுபோக்குக்காக நடத்தப்பட்ட வேடிக்கைகளைப் பார்த்துச் சந்தோஷித்தார்கள். பம்பாயில் லேடி வில்லிங்டன் குழந்தைகளைக் கூட்டி கச்சேரி நடத்தினதுபோல சென்னைக் கவர்னராயிருந்த லார்ட் ஆம்ப்தில் சென்னையிலுள்ள பிரைமரி பள்ளிக்கூடச் சிறுவர்களை கவர்ன்மெண்டு ஹவுஸுக்கு வரவழைத்து அவர்களுக்குச் சிற்றுண்டிகள் முதலியன வுதவி அவர்களை உற்சாகப் படுத்தி யிருக்கிறார்.

பள்ளிக் கூடங்களில் விவாகமான பிள்ளைகள்:—விவாகமான பிள்ளைகளை ஸெகண்டரிப் பள்ளிக் கூடங்களில் சேர்த்துக்கொள்ளாமல் தடுக்க வேண்டுமென்று திருவாங்கூர் ஸ்ரீமூலம்சபையில் சென்ற 27-ந் தேதி யன்று ஒரு மெம்பர் அபிப்பிராயப்பட்டார். அப்படித் தடுப்பது பிராமணர்களைப் பொருத்தேயாகு மாகையால், அவர்கள் சம்மதிப்பார்களா என்று திவானும் வித்தியா இலாக்காத் தலைவரும் கேட்டார்கள். அப்ப அப்படிச் செய்வது நல்லதென்று கவர்ன்மெண்டுக்கும் பட்டால், அப்படிச்செய்ய கவர்ன்மெண்டார் கடமைப்பட்டவர்கள் என்று அந்த மெம்பர் பதில் சொன்னார். பிறகு ஆலோசனை செய்து முடிவு செய்கிறதாக திவான் அந்த அபிப்பிராயத்தைக் குறித்துக் கொண்டார். அவ்விஷயமாக ரிபோர்ட் செய்யும் படி வித்தியா இலாக்காத்தலைவரைக் கேட்பதாகவும், பிராமண வகுப்பின் சம்மதத்தைத் தெரிந்து கொள்ளும்படி திவான் பேஷ்காரைக் கேட்பதாகவும், திவான் அறிவித்தார்.

லேடி ஹார்டிஞ்சு:—லேடி ஹார்டிஞ்சு இம்மாதம் 21-உ யன்று பம்பாயை விட்டு ஜன்மதேசத்துக்குப் பிரயாணமானார்கள். அப்பெருமாட்டியும் லார்ட் ஹார்டிஞ்சும், லார்ட் வில்லிங்டனும் லேடி வில்லிங்டனும் கூடவே வர, அன்று பிற்பகல் அப்பாலோ பந்தர் துறைமுகம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு லேடி ஹார்டிஞ்ச் தம்மை வழிவிட வந்திருந்தவர்களுடன் கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்டு கவர்ன்மெண்ட் ஹவுஸ் ஸ்டீம் லாஞ்சில் மஸிடோனியா ஸ்டீமர் போய்ச் சேர ஏறினார். லார்ட் ஹார்டிஞ்சும் கூடவே சென்றார். லார்ட் வில்லிங்டனும் லேடி வில்லிங்டனும் அப்பாலோ பந்தர் துறைமுகத்து படிக்கட்டின் அடிவாரம் வரை கூடவே சென்று வழியனுப்பினார்கள். ஸ்டீம் லாஞ்ச் இருப்பிடம் விட்டு நகர்ந்தது, லார்ட் வில்லிங்டனும் லேடி வில்லிங்கடனும் தங்கள்

கைகுட்டைகளை வீசிப் பிரிவுபசாரஞ் சொல்ல, துறைமுகத்திலிருந்தவர்
கள் ஆரவாரித்தார்கள். ராஜப்பிரதிநிதி லேடி ஹார்டிஞ்சை மஸிடோனி
யா ஸ்டீமரில் கொண்டுபோய் விட்டுவிட்டு கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குப்
பிற்பகல் 2-மணிக்குத் திரும்பினார்.

சென்னையில் ஸ்திரீகளின் காலேஜ்:—சென்னையிலுள்ள உபாத்தினி
மார்களின் போதனா முறை ஸ்கூலை, காலேஜாக உயர்த்த சென்னைக் கவர்
ன்மெண்டார் தீர்மானித்து விட்டார்கள். அந்த ஸ்கூல் இனிமேல் சென்
னை ஸ்திரீகளின் காலேஜ் என்ற பெயருடன் விளங்கிவரும். இந்தவருஷ
த்திலேயே அதில் ஜூனியர் இண்டர்மீடியேட் வகுப்பு ஒன்று வைத்து
நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்தில் செய்யப்படும்.
இதற்காக யோக்யதை பெற்ற இரண்டு ஆங்கில உபாத்தினிகளை இங்
கிலாந்திலிருந்து வரவழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிரு
க்கிறது. இந்த கேலேஜுக்கு இன்னும் சில கட்டடங்களும், விளையாடு
மிடங்களும் அவசியம் வேண்டியிருப்பதால் ஜெனரல் ஆஸ்பத்திரி கட்டுவ
தற்கு ஸ்பர் டாங்கில் கவர்ன்மெண்டாரால் விசாலமான இடம் வாங்கப்ப
டும். அப்பொழுது அங்கு இக்காலேஜுக்குவேண்டிய இடம் கிடைக்கும்.

ஆகாய விமானத்தில் உலகத்தைச் சுற்றிவருதல்:—ஆகாய விமானத்
தில் ஏறி உலகத்தைச் சுற்றிவர அமெரிக்கா ஏரோ கிளப் என்ற சங்கம்
ஒரு பந்தயம் போட ஏற்பாடுசெய்திருக்கின்றது. மே மாதம் 15-ந்தேதி
சான் பிரான்ஸிஸ்கோ நகரத்திலிருந்து பந்தயம் ஆரம்பிக்கும். பத்தொ
ன்பது தினங்களில் உலகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பிவந்துவிடவேண்
டும். ஜயம் அடைந்தவருக்கு முதல் வெகுமானம் மூன்றுலக்ஷத்து அறு
பதினாயிரம் (3,60, 000) ரூபாய் என்று திட்டமாயிருக்கிறது.

அநாதைகளான துருக்கியர்களுக்கு லேடிஹார்டிஞ்சின் உதவி:—த்ரேஸ்
நாட்டில் திக்கற்ற நிலைமையில் இருக்கும் துருக்கியருக்கு உதவி செய்வத
ற்கு ராஜப்பிரதிநிதியின் மனைவியார் லேடி ஹார்டிஞ்சு ரெட்க்ரெஸெண்டு
ஸொஸைட்டிக்கு 1000 ரூபாய் அனுப்பியிருக்கிறார்.

ஸ்திரீகளுக்கு மெடிகல் ஸ்காலர் ஷிப்புகள்:—சென்னையிலுள்ள
கவுண்டெஸ் ஆப் டப்ரின் பண்டின் கிளைச்சங்கத்தாரால் M. B. அண்டு
C. M. பரிட்சைக்கு வாசிக்கப் பிரியப்படும் ஸ்திரீகளுக்கு மூன்றுஸ்காலர்
ஷிப்புகள் கொடுக்கப்படும். இண்டர் மீடி யேட் பரிட்சை தேறுதவர்
களுக்கு மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் ஸ்காலர்ஷிப்பும், ஏற்கெனவே இண்
டர் மீடி யேட் பரிட்சை தேறினவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35ரூபாய்
ஸ்காலர்ஷிப்பும் மேற்கண்ட இரு வகுப்பாருக்கும் வேண்டிய புஸ்தகங்
களும், கருவிகளும் இலவசமாய்க் கொடுக்கப்படும். ஸ்காலர் ஷிப்புகள்
பெற்றுஐந்து வருஷங்களுக்குள் M. B. அண்டு C. M. பரீட்சை தேறுகிற
வர்களுக்கு 100 ரூபாய்வெகுமதி கொடுக்கப்படுமாம்.

# அமிருதாஞ்ஜனம்.

ஸகலமான வியாதிகளுக்கும் உபயோகமானது

நல்ல மணமாக இருக்கும்! இனிமையாக இருக்கும்!!

சீசா 1-க்கு ரூ. 0—8—0.




தலைநோவு, கால்நோவு, முட்டிகள் நோவு, வாயு, இருமல், க்ஷயம், சுளுக்கு, காயங்கள், பல்நோவு, தேள்கடி, உப்பசம், திமுறு, வீக்கம் முதலான நோய்கள் அதிகமாக பாதைபடுத்துகிறபடியால் இதற்கெல்லாம் அமிருதாஞ்ஜனம் என்கிற மருந்தை உபயோகித்ததில் சுகமாக இருக்கிறதென்று தெரிந்து கொண்டார்கள். இலக்ஷக்கணக்கான ஜனங்கள் இதை அனுபவிக்கிறார்கள்.

## மோகினி தைலம்.

5 தோலா எண்ணையுள்ள சீசா 1-க்கு ரூ. 1—0—0

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் உபயோகப்படுத்தத் தகுந்தது.

இவை வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு சுகமான நித்திரையையுண்டுபண்ணி ஸௌக்கியத்தைத்தருகிறது. சுந்தரமான லாவண்ணியமுள்ள மயிர்கள் இனிப்பாக வளரும். ஒருதடவை உபயோகித்துப் பார்த்தால் அதனுடைய உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

## படைக்குப்போடும் தைலம்.

இந்தத் தைலம் எல்லாவித அஸாத்தியமான படைகளையும் போக்கும். சர்மத்தில் உண்டாகும் எல்லாவித வியாதிகளுக்கும் கூட சிறந்த ஔஷதம். இரண்டுதடவை உபயோகித்தவுடன் படை போய்விடும். அப்படி குணம் தெரியாவிட்டால் ரூபாயைத் திருப்பிவிடுவோம். ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான பாட்டல்கள் செலவாகிறது. விலை புட்டி 1-க்கு 6. அணா.

## தந்தசூர்ணம்.

பல் துலக்க இது நல்ல தூள். அநேகரால் தினந்தோறும் உபயோகிக்கப் படுகிறது. இதன் விலை 0—2—0 மாத்திரமே.

எங்களுடைய கேட்லாக் தேவையானவர் இந்த அட்ரஸுக்கு எழுதினால் அனுப்பிக்கப்படும்.

அமிருதாஞ்ஜனம் டெப்போ,
9. ஜிஹாங்கீர் தெரு, ஜார்ஜ்டவுன்,
சென்னப்பட்டணம்.

**AMRUTANJAN DEPOT.**
*9. Jehanger Street,*
*George Town, Madras.*

## மாதர் மனோரஞ்சினி சந்தாதார்களுக்கு.

### ஸ்திரீகளுக்கு மிகவும் அவசியமான ஹிந்துமத தத்துவ பாடல்களும் கும்மிகளும.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வால்மீகிராமாயணப்பாட்டும் ஞான ராமாயணக்கப்பலும் ... | 0 | 3 | 0 | பஞ்சீகரணமகாவாக்கியமும் ஜீவநாடகம் ஒரு கட்டமுள்பட ... | 0 | 5 | 0 |
| குசலவாக்கியம் ... | 0 | 2 | 6 | சாவித்ரிபாடம் ... | 0 | 1 | 6 |
| அனந்தங்காடு ... | 0 | 1 | 6 | ஐந்து கும்மிகள் ... | 0 | 2 | 0 |
| பார்வதியம்மன் சோபனம் | 0 | 3 | 6 | | | | |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீலலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும் | 0 | 5 | 0 |
| குறிப்பு:—எல்லாப்புத்தகங்களும் சேர்த்து விலை ரூ | 1 | 6 | 0 |
| வி.பி. தாபரற்செலவு உள்பட ரூ. | 1 | 9 | 0 |

மாதர் மனோரஞ்சினி சந்தாதாரர்களுக்கு மட்டும் வி. பி. தபால் செலவும் உள்பட விலை ரூ. 1 6 0 தான். இப்பத்திரிகை சந்தாதாரர்களுக்கு லலிதாம்பாள் சோபனம் 4 அணாவுக்குக்கொடுக்கப்படும்.

இச்சமயத்தை இழக்காதீர்கள்! உடனே எழுதுங்கள். செலவாகி விடுமுன் எழுதுங்கள்.

V. N. ராஜ்.

31/38 ஹைரோட், எழும்பூர், சென்னை.

ஆர்டர் செய்யும்பொழுது இப்பத்திரிகையில் கண்டதாக எழுதவும்.

---

### சித்திரப்படங்களடங்கிய புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இந்து ஸ்திரீரத்னங்கள் ... ... ... | 0 | 8 | 0 |
| இந்திய மாயாவிநோதக் கதைகள் ... ... | 0 | 4 | 0 |
| 5-வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தியின் சரித்திரம் ... | 0 | 8 | 0 |

- மாதர் மனோரஞ்சினி ஆபீஸ், திருவல்லிக்கேணி,
மதராஸ்.

---

**JUST THE THING YOU WANT. ONE PACKET PRESS WITH THE FOLLOWING LETTER ATTACH CASE**

**Most Storing!** **Most Useful !!** **Most Elegant !!!**

Made of solid ebonised highly polished case Mahagony color size 9x6x4 containing (1) 3 trays for the following 10 Presents. Positive




Newly Indented ever ready pen, Proof against leakage as clean as pencil In use can be refilled with any ink. A nib. (2) 1 Well Sharpened bone Handled pen knife. (3) 1 Doz. Parchment Letterpaper. (4) 1 Doz. Post Card. (5) 1 Doz. Envelope (Bothivory Finish) (6) 1 Sheet Plotting. (7) 3. Packet Pin. (8) 1 Free saving guide. (9) 1 Complete Letterwriter. (10) 1 Packet press for Printing Letter Heading. Price With all the Presents. Rs. 2—8—0 on Bost free.

*Apply to*

**S. Seal & Co., 17. T. Z. Kapalee Tola,**
*Calcutta*

# மாதர் மனோரஞ்சினி.

OFFICE OF THE REGISTRAR OF ... 30 APR 1914 MADRAS.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol XVI] Madras April 1914. No. 4
புத்தகம் கசு. சென்னை: ஏப்ரல்மீ 1914 ௵. இலக்கம். 4

## கம்பியில்லாத் தந்தி.

### அதன் சரித்திரமும், வேலை செய்யும் முறையும்.

(சுதேசமித்திரன்.)

"சென்னையில், கோட்டையைச்சேர்ந்த மைதானத்தில் உயரமான ஸ்தம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. அவ்விடத்தில் கம்பி யில்லாத் தந்தி ஏற்படுத்தப்போகிறார்களாகையால், அதைப்பற்றிய விவரங்களைச் சொல்லுவோம்.

கம்பித் தந்தியும் கம்பியில்லாத் தந்தியும் ஏறக்குறைய ஒரே காலத்தில் யோஜனை செய்யப்பட்டதென்று சொல்லலாம். கம்பிகள் மூலமாய் மின்சார சக்தியைச் செலுத்தி சமிக்ஞை செய்யலாமென்று கண்டு பிடிக்கப்பட்டபோதே கம்பியின் உதவி யில்லாமலே சமிக்ஞை செய்யக் கூடுமென்று சாஸ்திர நிபுணர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 1838-ம் வருஷத்தில் ஜெர்மன் தேசத்தவராகிய ப்ரொபஸர் ஸ்டீன்ஹில் என்பவர், கம்பியின் வழியாய் மின்சாரசக்தி செல்வதுபோல, பூமியின் வழியாயும் செல்லக்கூடும் என்று கண்டு பிடித்தார். அதன் பிறகு சாதாரண கம்பித் தந்தி உபயோகத்துக்கு வந்தது. பிறகு கம்பியின் உதவி யில்லாமலே முற்றிலும் பூமியின் வழியாகவே மின்சாரத்தை செலுத்திவரக்கூடுமென்று யோஜனை தோன்றிற்று. 1842-ம் வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ்ஸைச் சேர்ந்த ப்ரொபஸர் மார்ஸ் என்பவர் பரிக்ஷை செய்து பார்த்தார். ஒரு வாய்க்காலின் அக்கரையில் மின்சார யந்திரத்தை வைத்து இக்கரையில் தந்தி சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்ளும் கருவியை வைத்தார். இந்த சமிக்ஞைகாட்டும் கருவிக்கும் எதிர்கரையிலுள்ள மின்சாரத்துக்கும் இடையே ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஜலத்தின் வழியாய் மின்சாரசக்தி எதிர்கரைக்கு ஓடி தந்திக்கருவியில் சமிக்ஞைகள் உண்டாக்கிற்று. ஆகையால் கம்பிமூலமாய்த்தான் மின்சாரம் ஓடிச் செல்ல வேண்டுமென்பதில்லை. வாய்க்காலின் இரண்டு கரைகளையும் கம்பியைக் கொண்டு சேர்க்காமலே சமாச்சாரம் அறிவிக்கலாமென்று தெரியவந்தது.

1880-ம் வருஷம் ப்ரொபஸர் டிரோபிரிட்ஜ் மற்றொரு பரீக்ஷை செய்தார். மின்சார யந்திரத்தைக்கொண்டு தரையில் மின்சார சக்தியைச்செலு

த்தினர். மற்றோரிடத்தில் டெலிபோன் யந்தரம்வைத்தார் (பேச்சு வார்த்தைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கேட்கச் செய்வதற்கு "டெலிபோன்" என்ற யந்திர மொன்றிருக்கிறது) அந்த டெலிபோன் யந்திரத்தில் தரையிலிருந்த மின்சார சக்தி பாய்ந்துகொண்டிருந்த சப்தம் நன்றாய்க் கேட்டது. இதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு கம்பியின் சம்பந்தமில்லாமலே தரைவழியாய் மின்சாரசக்தியை செலுத்தலாமென்று ஏற்பட்டது. 1882-ம் வருஷத்தில் கிரஹாம் பெல் என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள பொட்டோமாக் நதியில், ஒரு படகிலிருந்து $1\frac{1}{2}$-மைல் தூரத்திலுள்ள மற்றொரு படகுக்கு சமிக்ஞை செய்தார். இவ்வாறு 1887-ம் வருஷம் வரையில் இன்னும் அநேக சாஸ்திர நிபுணர்கள் பற்பலவிதமாய்ப் பரீக்ஷை செய்து பார்த்தார்கள். ஆனால் மின்சார சக்தியை அதிக தூரம் செலுத்த முடியாமலிருந்தது. அதன் பிறகு செய்யப்பட்ட பரீக்ஷையைப் பற்றிச் சொல்வதற்குமுன், இங்கு தந்தியைப்பற்றி பொதுவாயுள்ள சில விஷயங்களைச் சொல்வோம்.

### மின்சாரத் தந்திகள்—பொதுவாயுள்ள சில விஷயங்கள்.

மின்சாரத் தந்தி இப்போது இரண்டு விதமாயிருக்கிறது. (1) சாதாரண கம்பித் தந்தி, அதாவது பூமியில் ஸ்தம்பங்கள் நட்டு, கம்பி மாட்டி தந்தி அனுப்புவது. ஜலத்துக் கடியிலும் கம்பிமாட்டி தந்தி அனுப்பப்படுகிறது. இப்போது சமுத்திரத்தின் கீழே இவ்வாறு கம்பி போட்டிருக்கிறது. இவ்விரண்டிலும் கம்பி வழியாகவே தந்தி அனுப்பப்படுவதால் யாதொரு வித்தியாசமுமில்லை என்று வைத்துக் கொள்ளலாம். இனி சொல்லப் படுவனவற்றில், ஜலத்தில் தந்தி அனுப்புவதென்றால் ஜலத்துக்கடியில் கம்பிபோட்ட தந்தியைக் குறிப்பிடாது என்று அறியவும். (2) கம்பி இல்லாமல் மின்சாரத் தந்தி அனுப்புவது. இது ஜலத்தின் மூலமாயும் தரை மூலமாயும் கம்பியில்லாமலே சமிக்ஞை செய்வதாகும்.

சாஸ்திர ரீதியாய்ப் பார்த்தால், கம்பித் தந்தியும் கம்பியில்லாத்தந்தியும் வேலை செய்யும் முறைப்பாடு ஒன்றுதான். தந்திக்கம்பியானது மின்சாரசக்தியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு செலுத்துவதற்காகவிருக்கிறது. அதே மாதிரியாக மின்சார சக்தியைச் செலுத்துவதற்கு சமுத்திர ஜலத்துக்கும் போதுமான சக்தியிருக்கிறது. தரைக்கும் அந்த சக்தி சற்று குறைவா யிருக்கிறது. மின்சார சக்தி ஜலத்தில் கம்பியில்லாமல் எப்படி செல்கிறது? காற்று அடிக்கும்போது எதிரே பற்பல தடைகளிருந்தாலும் அவைகளுக் கேற்றபடி அது இசைந்து தாவச் சென்று கொண்டே யிருப்பதுபோல, மின்சார விசையும் சமுத்திர ஜலத்தின் மேல்மட்டத்துக் கேற்றபடி இசைந்து ஜலத்தால் இழுக்கப்பட்டு செல்கிறது. மின்சார விசை சிற்சில விடங்களில் சற்றே சிதறிப்போனாலும், காற்றைப் போல விசையின் பெரும்பாகமும் சென்றுகொண்டுதானிருக்கும். காற்றானது போக்கிடங்களையே நாடி நுழைந்து செல்வதுபோல, மின்சாரவிசை



யானது தன்னை இழுக்கும் சக்தியுடைய ஜலம், தரை இவைகளையேநாடிச் செல்லும். ஆகையால் மின்சார விசையானது கம்பியில் செல்வதுபோல ஜலத்திலும் செல்லும். தவிர தந்தி அனுப்பும் முறையும் ஒன்றுதான். தந்தி அனுப்புவது எப்படி என்பதைப்பற்றிச் சொல்வோம்.

### தந்தி அனுப்புவ தெப்படி?

கம்பியினலாவது, கம்பியில்லாமலாவது மின்சாரத் தந்தி அனுப்ப வேண்டுமானால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மின்சாரம் செல்வதற்கு வழி ஏற்பட வேண்டும். மின்சாரம் அனுப்புவதற்கு வழி, கம்பி, ஜலம், தரை இவைகளாயிருக்கலாம். அந்த வழியே, ஒரு யந்திரத்தைக் கொண்டு மின்சார சக்தியை ஒரு பக்கத்திலிருந்து அனுப்பிவர, மற்றொரு பக்கத்தில் அதன் செயல்கள் சமிக்ஞைக் கருவியைக் கொண்டு அறியப் படுகின்றன. இதுதான் மின்சாரத் தந்தி என்பது. தந்தி சமிக்ஞைகள் செய்யும் விதத்தைப்பற்றிச் சொல்வோம்.

மின்சார சக்தி நிறுத்தி நிறுத்தி அனுப்பப்படுகிறது. கம்பித்தந்தியில், அந்த மின்சார சக்தி கம்பி மூலமாய்ச்சென்று சமிக்ஞைக் கருவிக்கு வருகிறது. அவ்வாறு மின்சாரம் இடை யிடையே நின்றபின் செல்கிற காலத்தை அந்த சமிக்ஞைக் கருவி குறிப்பிடுகிறது. சமிக்ஞைக் கருவியில் எழுத்தாணி போன்ற ஒரு முள் இருக்கிறது. மின்சாரவிசை தந்திக்கம்பி மூலமாய் சமிக்ஞைக் கருவிக்கு வந்தவுடன், எழுத்தாணியின் ஒரு முனை யை கீழே இழுக்கிறது. அதனால் மற்றொரு முனை காகிதத்தில் ஒரு குறி போடுகிறது. மின்சாரவிசை நின்றுவிடும் வரையிலும் அந்தக் கீறலைப் போட்டுக் கொண்டிருக்கும். மின்சாரம் இடைவிட்டு ஓடும் கால அளவை சிறியதென்றும் பெரியதென்றும் இரண்டு விதமாகப் பிரித்து சிறிய குறியை "புள்ளி" என்றும் பெரியதை "கீறல்" என்றும் சொல்லப்படும். அம்மாதிரி 1-குறிப்பு முதல் 4 குறிப்புகள் வரை பலவிதமாய்ச் சேர்த்து; ஒவ்வொரு எழுத்தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்ன குறிப்புகள் இன்ன எழுத்தாகுமென்று அடையாளங் காணப்படுகிறது. சமிக்ஞைக் கருவிகள் எழுத்தாணி யில்லாமல் வேறு விதமாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், மின்சார சக்தி இடைவிட்டு அனுப்பப்படும் காலத்தைக் குறிப்பிடுவதற்குத் தான் அக்கருவிகளெல்லாம் உபயோகிக்கப் படுகின்றன. தந்தி அனுப்பும் விதத்தைப்பற்றி இங்கு சற்றுவிவரமாய்ச் சொல்லியதற்குக் காரணம் என்னவென்றால், மேலே சொல்லியமுறையானது கம்பித்தந்தியில் அனுஷ்டிக்கப் படுவதோடுகூட கம்பியில்லாத்தந்தியிலும் அதே மாதிரி உபயோகிக்கப்படுகிறது. கம்பியில்லாத் தந்தியிலும் இவ்வாறே சமிக்ஞை செய்யப்படுகிறதைப் பற்றிப் பின்னால் சொல்லப்படும்.

### முக்கியமான வேறுபாடு.

சாஸ்திரப்படி அவ்விரண்டுவித தந்திகளுக்கும் வித்தியாசமில்லையென்றாலும், அனுஷ்டானத்தில் ஒரு முக்கியமான வேறுபாடு கவனிக்க

வேண்டும். தந்திக் கம்பியில் செலுத்தப்படும் மின்சாரம் கம்பியில் மாத்திரம் செல்வதால் அவ்வளவாக வீண்போகாது. மின்சாரத்தை ஜலத்தின் வழியாய் அனுப்பினால் ஜலமிருக்கு மிடத்திலெல்லாம் பரவிச் செல்லுமாகையால் மின்சாரத்தின் விசை வரவரக் குறைந்துபோகும். அதனால் மின்சார விசை ஜலத்தில் சற்றுதூரம் சென்று பலஹீனப்பட்டு சமிக்ஞைகளை யுண்டுபண்ண பயன்படாது.

ஆகையால், சாஸ்திரநிபுணர்கள் இரண்டுமுக்கியமான வழிகளில் ஆராய்ச்சி செய்தார்கள். 1 மின்சாரசக்தி ஜலமுழுவதும் பரவி பலஹீனப்படுவதால் அதற்குப் பரிகாரமாக மின்சாரத்தை ஏராளமான விசையுடன் உண்டுபண்ணவேண்டும். 2. அப்படிச் செய்தும் அந்த மின்சாரம் வெகுதூரம் சென்று பலஹீனமடைந்தாலும் அன்னிலைமையில் அதை கிரகித்துக் குறிப்பிடக் கூடிய அவ்வளவு நுட்பமானகருவி உண்டுபண்ணவேண்டும். முன்பு சொல்லியபடி, தந்தி அனுப்புவதென்றால், ஓரிடத்திலிருந்து மின்சார சக்தியை செலுத்தி, மற்றோரிடத்தில் அதன் செயல்களை ஒரு சமிக்ஞைக் கருவியைக் கொண்டு அறியவேண்டும். அதாவது, மின்சார சக்தியை அனுப்பும் ஸ்தலம் ஒன்றும், அதைப்பெற்றுக்கொள்ளும் ஸ்தலம் ஒன்றும் இருக்கவேண்டும். ஆகையால், அனுப்பும் ஸ்தலத்தில் மின்சாரத்தை மிகுந்த விசையுடன் அனுப்பவும், பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மிகுந்த நுட்பமான கருவியைக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிற மின்சாரத்தைக் கிரகித்து சமிக்ஞை செய்யவும் வேண்டும் என்று சாஸ்திர நிபுணர்கள் கம்பியில்லாத்தந்தி விஷயமாய் யோசனை செய்தார்கள். மின்சாரசக்தி கம்பி வழியாய்ச் செலுத்தப்பட்டால் விசையுடன் செல்வதால் அதைச் கிரகித்து சமிக்ஞை உண்டு பண்ணுவது கஷ்டமல்ல. ஆனால் கம்பியில்லாத் தந்தியில், மின்சாரம் ஜலத்தின் வழியால் அனுப்பப்படும்போது அதன் சக்தியை இழந்து விடுவதால் அதைக் கிரகிப்பதற்கு நுட்பமான கருவி தேவையா யிருக்கிறது. கம்பியில்லாத் தந்தி வெகுதூரம் சென்று வேலை செய்ய வேண்டுமானால் இவ்வழிகளில் ஆராய்ச்சிசெய்வது அவசியமென்று சாஸ்திர நிபுணர்கள் உணர்ந்தார்கள்.

### “மின்சார அலைகள்”

சாஸ்திர நிபுணர்கள் ஆரம்பத்தில் செய்த பரிக்ஷைகளில் மின்சார சக்தியைப் பலவிதமாய் உண்டுபண்ணிப் பார்த்தும், கம்பியின் உதவியில்லாமல் வெகு தூரம் செல்லக்கூடவில்லை என்று அறிந்தார்கள். ஆனால் 1887-ம் வருஷத்தில் ஜெர்மன் ப்ரொபஸர் ஹெர்ட்ஸ் என்பவர் செய்த ஆராய்ச்சியானது, தற்போது வேலை செய்துவருகிற கம்பியில்லாத் தந்திக்கு முக்கிய ஆதாரமாயிருந்து வருகிறது. மின்சார சக்தியைக் கொண்டு நெருப்புப்பொறி கிளம்பச் செய்தால், அந்த பொறியானது மின்சாரத்தை அலைகளாகச் சுற்றிலும் வீசுகிறதென்று கண்டு பிடித்தார். அதாவது அந்தப் பொறியா லுண்டாகும் மின்சார சக்தியானது அலைகள் போலத்



161413

தாவிச் செல்கிறது. மின்சாரப் பொறி விஷயமாய்ச் செய்யப்பட்ட இரண்டு பரிக்ஷைகளைப்பற்றி சொல்வோம். ஒரு வீட்டில் மின்சாரப் பொறியொன்று ஒரு அங்குல நீளத்துக்கு உண்டு பண்ணப்பட்டபோது, இரண்டு மெத்தைகளுக்கு மேல் 30 அடி உயரத்திலிருந்த ஊசிக்கு காந்த சக்தி உண்டாயிற்று என்று தெரிய வந்தது. பிறகு அந்தஊசிக்கு பதிலாக ஒரு குழாயில் உலோகத்துண்டுகள் போட்டு பரிக்ஷை செய்ததில் 500 கஜத் துக்கப்பால் உண்டாக்கிய மின்சாரப்பொறி அந்த குழாயைய் பாதித்தது என்று தெரியவந்தது. இதனால் இரண்டு முக்கியமான விஷயங்கள் அறியப் பட்டன. முதலாவது மின்சாரப் பொறி மின்சாரத்தை அலைகளாகச் செய்து விசேஷ விசையுடன் செலுத்துகிறது. இரண்டாவது உலோகத் துண்டு களையுடைய ஒரு குழாய் மின்சார அலைகளை எளிதில் கிரகிக்கக் கூடிய நுட்பத்தை உடையதாயிருக்கிறது. ஆகையால் தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப் பொறியைக் கொண்டு மின்சாரத்தை அலைகள் போல செலுத்தினால் அதிக விசையுடன் அனுப்பலாமென்று ஏற்படுகிறது; மேலும் தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மின்சாரத்தைக் கிரகிப்பதற்காக அந்த நுட்பமான குழாயை உபயோகிக்கலா மென்றும் ஏற்படுகிறது. இந்த உண்மைகளைத் தான் ஆதாரமாகக் கொண்டு இப்போதுள்ள கம்பியில்லாத் தந்தி வேலை செய்துவருகிறது. சாதாரண தந்தியை மின்சாரக் கம்பித்தந்தி என்று சொல்வது போல, கம்பியில்லாத் தந்தியை மின்சார அலைத்தந்தி என்று சொல்லலாம்.

### மார்க்கோனி என்ற பேர்பெற்ற நிபுணர்.

கம்பியில்லாத் தந்தி சம்பந்தமாய் மார்க்கோனி என்ற நிபுணரின் பெயர் பிரபலமாயிருப்பதுபோல, வேறெவருடைய பெயரும் வழங்குவதில்லை. இடாலிதேசத்தவராகிய அவர் 1875-ம் வருஷம் பிறந்து மின்சார சாஸ்திரத்தில் அநேக பரிக்ஷைகள் செய்து பிறகு இங்கிலாந்துக்குச் சென்று அந்த சாஸ்திரத்தில் தேர்ச்சி அடைந்தார். 1894-ம் வருஷமுதல் கம்பியில்லாத் தந்தியைப் பற்பலவிதமாய் விருத்தி செய்துவருகிறார். அவருடைய முறைப்படிதான் அநேகமாய் எல்லாதேசங்களிலும் கம்பியில்லாத் தந்தி வேலை செய்யப்பட்டு வருகிறது. கம்பியில்லாத் தந்தியில் அதுவரையிலும் செய்யப்பட்டுவந்த பரிக்ஷைகளும் உபயோகிக்கப்பட்ட கருவிகளும்,சாஸ்திர ஆராய்ச்சிச் சாலையில் உபயோகிக்கக் கூடியவையேயன்றி, உலகவழக்கத்துக்குக்கொண்டு வரக்கூடியவையல்ல. இதனை உணர்ந்த ப்ரொபஸர் மார்கோனி அநேகபரிக்ஷைகள் செய்யத்தொடங்கினார்.

### “ஆகாயக்கம்பி.”

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், மின்சாரப்பொறியை உண்டாக்கி மின்சாரத்தை அலைகள்போல செலுத்தினால் அதிகவிசையுடன் அனுப்பலாமென்று மேலேசொல்லப்பட்டது. தந்தியைப்பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில், மின்சார அலைகளைக் கிரகிப்பதற்காக அதி நுட்பமான குழாயை

உபயோகிக்கலா மென்றும், மேலே சொல்லப்பட்டது. ஆனால் அந்தக் குழாயானது எவ்வளவு நுட்பமான சக்தி பெற்றிருந்தாலும் அதிக தூரத்தில் கொண்டுபோகப்பட்டால் மின்சார அலைகளை அவ்வளவு தெளிவாகக் குறிப்பிட வில்லை. ஏனென்றால் அந்தச் சிறிய குழாயின் மேற்புறம் அவ்வளவு விஸ்தாரமா யில்லாதபடியால் மின்சார அலைகளை ஜாஸ்தியாய்க் கிரகிப்பதற்கில்லை. இந்தக் குறையை நீக்கும்பொருட்டு ப்ரொபஸர் மார்கோனி 1896-ம் வருஷத்தில் ஓர் உபாயஞ் செய்தார். உயரமான கம்பியை அந்தக் குழாயுடன் சேர்த்தால் அந்தக் கம்பியானது மின்சார அலைகளை மிகுதியாய்க் கிரகித்து அந்தக் குழாயில் செலுத்துகிறதென்று தெரிய வந்தது. அந்த கம்பியானது அந்தக் குழாய்க்கு உதவியாயிருக்கிறது. ஆகையால் நீளமான கம்பி ஒன்றைநடுவதற்கு ஏற்பாடு செய்தார். உயரமான ஸ்தம்பத்தை பூமியில் நாட்டி, அதன் மேல் முனையில் வெகுநீளமான கம்பியை நட்டார். இதற்கு "ஆகாயக்கம்பி" என்றுபெயர். இந்த ஆகாயக்கம்பியைக் கொண்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மார்கோனி தந்தி சமாசாரம் அனுப்பினதைப் பற்றிச் சொல்வோம். 1901-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குத் தென் மேற்கேயுள்ள லிஜார்ட் என்ற துறைமுகத்திலிருந்து 200மைல் தூரத்திலுள்ள ஐல் ஆப் வொயிட் என்ற தீவுக்கு கம்பியில்லாத் தந்தி முறைப்படி சமாசாரம் அனுப்பப்பட்டது. தந்தி அனுப்பும் ஸ்தலத்திலும், தந்தியைப் பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்திலும் உயரமான ஸ்தம்பங்களை நாட்டி அவைகளின் மேல் ஆகாயக் கம்பியை நட்டுமற்ற யந்திரங்களையும் பூட்டி ப்ரொபஸர் மார்கோனி சமாசாரம் அனுப்பினார். தந்தி அனுப்பும் ஸ்தலத்தில் செய்யப்பட்ட ஏற்பாட்டைப் பற்றிச் சொல்லி பிறகு தந்தி பெற்றுக் கொள்ளும் ஸ்தலத்தைப்பற்றிச் சொல்வோம்.

தந்தி அனுப்பும் ஸ்தலம்.




1. மின்சாரப் பொறி உண்டுபண்ணும்யந்திரம்.
2. மின்சாரப் பொறி கிளம்பும் இடம்.
3. ஆகாயக் கம்பி.
4. ஸ்தம்பம்.
5. மின்சார யந்திரம் தரையுடன் சேர்க்கப் படும் இடம்.

தந்தி அனுப்பும் ஸ்தலத்தில், ஆகாயக்கம்பி உயரமான ஸ்தம்பத்



தின்மேல் நடப்பட்டிருக்கும். அதற்கருகில் மின்சாரசக்தியைக்கொண்டு பொறிகிளம்பச் செய்வதற்கு ஒரு யந்திரம் வைக்கப்பட்டிருக்கும். அந்த யந்திரம் ஆகாயக்கம்பியுடன் சேர்க்கப்பட்டிருக்கும்; பூமியுடனும் சம்பந்தப்படுத்தி யிருக்கும் அந்த யந்திரத்தில் மின்சாரப்பொறி யுண்டு பண்ண வேண்டும். மின்சாரப்பொறி, மின் சாரத்தை அலைகள் போல வீசும் தன்மையுடைய தென்று மேலே சொல்லி யிருக்கிறோம். அவ்வாறு உண்டாகும் அலைகள் ஆகாயக்கம்பியால் நாலாபக்கங்களிலும் செலுத்தப்படுகின்றன. ஏனெனில், மின்சாரப் பொறியுண்டாகும் யந்திரத்துடன் ஆகாயக் கம்பி சேர்க்கப்பட்டிருக்கிறது.

மின்சாரப்பொறியால் உண்டாகும் அலைகளை ஆகாயக்கம்பி மூலமாய்ச் செலுத்தவேண்டுமென்று மார்க்கோனி ஏற்பாடு செய்ததில் என்ன விசேஷம்? மின்சார அலைகளை விசாலமாக்கிச் செலுத்துவதில் ஆகாயக்கம்பி மிகுந்த சக்தியுடையது. அந்த கம்பியால் செலுத்தப்படும் அலையின்நீளம் கம்பியின் உயரத்தைப்பற்றியது; அலையின் நீளம் கம்பியின் உயரத்துக்கு நான்கு மடங்கா யிருக்குமென்று மதிக்கப்படுகிறது. 200 அடிஉயரமுள்ள ஆகாயக்கம்பி செலுத்தும் அலையானது சுமார் ஒன்றரை பர்லாங்க் நீளமிருக்கும். ஆகையால் ஆகாயக்கம்பி அதிக உயரத்தி லிருந்தால் அதனால் செலுத்தப்படும் அலைகளும் அதிக பெரிதா யிருக்கும். ஆகாயக்கம்பியைக் கூடுமானவரையில் உயரமாய் வைப்பது நல்லது. மேலும் அந்தக் கம்பி பூமியுடன் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்காவிட்டால் மின்சார அலைகள் அதிகதூரம் செல்லக்கூடவில்லையென்று தெரியவந்தது. பூமியின் சம்பந்தத்தால் மின்சார அலைகளுக்கு சக்தி அதிகரித்து வெகுதூரம்செல்லும். இந்த ஏற்பாடுகளைக்கொண்டு ஆகாயக் கம்பியால் நாலாபக்கத்திலும் செலுத்தப்படுகிற மின்சார அலைகள் ஜலத்தினாலோ தரையினாலோ இழுக்கப்பட்டு சென்று கொண்டிருக்கின்றன. இவ்வாறு ' தந்தி அனுப்பும்

தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலம்.




1. சமிக்ஞைக் கருவி.
2. உலோகத் துண்டு களையுடைய நுட்பமான குழாய்.
3. ஆகாயக் கம்பி.
4. ஸ்தம்பம்.
5. நுட்பமான குழாய் தரையுடன் சேர்க்கப்படும் [இடம்.

ஸ்தலத்தி" லிருந்து சென்றுகொண்டிருக்கிற அலைகளை, "தந்திபெற்றுக் கொள்ளும் ஸ்தலத்தில்" எவ்வாறு கிரகித்துக் குறிப்பிடுகிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்வோம்.

தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்திலும், உயரமான ஸ்தம்பத்தின் உச்சியில் நீளமானகம்பி நடப்பட்டிருக்கும். உலோகத்துண்டுகளையுடைய சிறிய குழாய் ஒன்று அந்த ஆகாயக் கம்பியுடன் சேர்க்கப்பட்டிருக்கும். அந்த குழாய் பூமியுடனும் சேர்க்கப்பட்டிருக்கும். அந்த குழாயுடன் சற்று தூரத்தில் சமிக்ஞை செய்யும் கருவி யொன்று சேர்க்கப்பட்டிருக்கும் தந்தி ஆபீஸ்களில், சாதாரணமாய் உபயோகிக்கப்படும் சமிக்ஞைக் கருவி தான் இங்கும் உபயோகிக்கப்படுகிறது.

தந்தி அனுப்பும் ஸ்தலத்திலிருந்து நாலாபக்கங்களிலும் சென்றுகொண்டிருக்கிற மின்சார அலைகளை இந்த "பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தி" லுள்ள ஆகாயக்கம்பி கிரகித்துக் கொள்கிறது. ஆகாயக்கம்பியால் கிரகிக்கப்பட்ட அலை அந்த நுட்பமான குழாயைத் தாக்குகின்றது. இந்த குழாய் மின்சார அலையால் தாக்கப்பட்டவுடன், மின்சார சக்தியைப் பெறுவதால் அதற்குச் சற்று தூரத்திலுள்ள சமிக்ஞைக் கருவியை வேலை செய்யத் தூண்டுகிறது. சமிக்ஞைக் கருவி வேலை செய்யும் விதம் முன்பு சொல்லப்பட்டிருக்கிற மாதிரி தான். மின்சார அலை யொன்று ஆகாயக் கம்பியால் கிரகிக்கப்பட்டு குழாயில் செலுத்தப் படுகிறது. அந்த குழாய் மின்சார சக்தியை அடைந்தவுடன் சமிக்ஞைக் கருவியிலுள்ள எழுத்தாணியின் ஒரு முனையைக் கீழே யிழுக்கிறது; எழுத்தாணியின் மற்றொரு முனை ஒரு குறி போடுகிறது. மின்சார அலை நின்றவுடன் அந்தக் குழாய் மின்சார சக்தியை இழந்து விடுகிறது. எழுத்தாணியும் குறிபோடுவதை நிறுத்திவிடுகிறது. மற்றொரு மின்சார அலை வந்தவுடன் மற்றொரு குறி போடப்படுகிறது. இவ்வாறு மூன்று தரம் நிறுத்தி நிறுத்தி அலைகள் அனுப்பப்படுகின்றன என்று வைத்துக்கொள்வோம். சமிக்ஞைக் கருவியில் மூன்று குறிகள் காணப்படும். இந்த மூன்று குறிகள் கொண்டது ஒரு எழுத்தென்று பாவித்துக்கொண்டு தந்தி சமிக்ஞைகளால் வார்த்தைகள் அறியப்படுகின்றன.

### ஆகாயக் கம்பியின் பிராதான்யம்.

ஆகாயக்கம்பி மின்சார அலைகளை விசாலமாய் அனுப்புவதற்கு அதிக சக்தி யுடையதென்று முன்பு சொன்னோம். அதேமாதிரி, விசாலமாய்ப் பரவி வருகிற அலைகளைக் கிரகிப்பதற்கும் அந்த கம்பிக்கு விசேஷ சக்தியிருக்கிறது. கம்பி மிகவும் நீண்டிருந்தால் விசாலமான அலைகளை அதிகமாய்ப் பிடித்துக் கிரகிக்கும். ஆகையால் கம்பி எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் மின்சார அலைகளை கிரகிக்கும். உலோகத் துண்டுகளை யுடைய சிறியகுழாய் எவ்வளவு நுட்பமாயிருந்தாலும் அதன் மேற்புறம் அவ்வளவு விஸ்தாரமாயில்லாதபடியால் மின்கார அலைகளை ஜா



ஸ்தியாய்க் கிரகிப்பதற்கில்லை. ஆனால் நீளமாயுள்ள ஆகாயக் கம்பியானது அந்த அலைகளை அதிகமாய்க் கிரகித்து, நுட்பமானகுழாய்க்குள் செலுத்துகிறது. அப்போதுதான் அந்தக் குழாய் மின்சார சக்தியை அதிகமாய்ப் பெற்றுக் கொண்டு, சமிக்ஞைக் கருவியை வேலைசெய்யத் தூண்டுவதற்கு போதுமான சக்தி அடையும். மின்சார அலைகள் ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்து அனுப்பப்படுமானால் மிகவும் பலஹீன மடைந்துவிடுமென்பதைக் கவனிக்கவேண்டும். அப்போது ஆகாயக் கம்பி யில்லாவிட்டால் அந்த நுட்பமான குழாய் கொஞ்சங்கூட மின்சார சக்தியைப் பெற்றுக்கொள்ளாது. அப்போது சமிக்ஞைக் கருவியும் வேலை செய்யாது. ஆகையால் நீளமான ஆகாயக் கம்பி அவசியமானது.

### யந்திரத்தைப் பொருந்தச்செய்தல்.

மின்சார அலைகள் ஆகாயக்கம்பியால் நாலாபக்கங்களிலும் செலுத்தப்படுகின்றன வென்று சொன்னோம். உதாரணமாக, 150 அடி உயரமுள்ள ஆகாயக் கம்பியிலிருந்து புறப்படும் மின்சார அலைகள் சுற்றிலும் 200 மைல் வரையிலும் சென்று கொண்டிருக்கும். அப்படி எல்லாதிக்கிலும் குறிப்பிட்ட தூரம் வரையிலும் செல்லுமானால், அந்த வட்டத்துக்குள் நாலாதிக்கிலும் வைக்கப்பட்டுள்ள தந்தி பெற்றுக்கொள்ளும் யந்திரங்களெல்லாம் சமிக்ஞைகளைத் தெரிவிக்கத் தொடங்கும். நாலாபக்கங்களிலுள்ள யந்திரங்களெல்லாம் இவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கக் கூடும். அதனால் சமிக்ஞைகள் குழம்பிவிடும். தந்தி சமாசாரங்களும் ரகஸ்யமாயிருக்க முடியா. ஆகையால் தந்தி அனுப்பும் யந்திரமும் தந்தி பெற்றுக் கொள்ளும் யந்திரமும் ஒரே அளவுள்ள சக்தி கொண்டதாய்ச் செய்யப்படுகின்றன. அப்படிச் செய்வதால், அவைகள் மற்ற யந்திரங்களை பாதிக்காமலும் மற்ற யந்திரங்களால் பாதிக்கப்படாமலும் இருக்கின்றன. தந்தி அனுப்பும் ஸ்தலத்தில் மின்சாரப் பொறி யுண்டுபண்ணும் யந்திரத்தில் சில உபாயங்கள் செய்து அதிலிருந்துண்டாகும் மின்சார அலைகள் குறிப்பிட்ட நீளமுள்ளதாய்ச் செய்யப்படுகின்றன. அதேமாதிரி தந்தி பெற்றுக்கொள்ளும் ஸ்தலத்தில் மின்சார அலைகளைக் கிரகிக்கும் யந்திரத்தில் சில உபாயங்கள் செய்து குறிப்பிட்ட நீளமுள்ள அலைகளையே பெற்றுக்கொண்டு சமிக்ஞை செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அதனால் இவ்விரண்டு யந்திரங்களும் ஒன்றோடொன்று பொருந்தி வேலைசெய்யும், மற்ற யந்திரங்களுக்குப் பதில் கொடுக்கா. உதாரணமாக, பம்பாயிலிருந்து 300 கஜ நீளமுள்ள மின்சார அலைகளைக்கொண்டு சென்னைக்கு சமிக்ஞை செய்யப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். சென்னையில், 300 கஜ நீளமுள்ள அலைகளை கிரகித்துக் குறிப்பிடக்கூடிய யந்திரத்தை பூட்டவேண்டும்; அதை ஆகாயக் கம்பியுடன் பூட்டப்படவேண்டும். சென்னையில் வேறு யந்திரம் பூட்டப்பட்டால் பம்பாயிலிருந்து வரும் சமிக்ஞைகளைக் குறிப்பிடாது.

### வெகுதூரம் தந்தி அனுப்புதல்.

மேற் சொன்னவாறு யந்திரங்களைப் பொருந்தும்படிச் செய்தால் சமிக்ஞைகளை அதிக தூரம் அனுப்பச் சாத்தியமாகு மென்றும் தெரிய வந்தது. அட்லாண்டிக் மகா சமுத்திரத்துக்கு குறுக்கே சுமார் 2000-மைல் தூரம் 1901-ம் வருஷம் டிசம்பர் மாதம் பேர் பெற்ற நிபுணராகிய மார்க்கோனி சமாசாரம் அறிவித்தார். இங்கிலாந்துக்கு தென் மேற்கிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து சமுத்திரத்துக்கு எதிர்க் கரையாகிய நியூபவுண்லாந்து என்ற தீவுக்கு சமாசாரம் அனுப்பினார். இங்கிலாந்திலுள்ள துறைமுகத்தில் இரண்டு ஸ்தம்பங்கள் நடப்பட்டு அவைகளுக்கு இடையே 150-அடி உயரமுள்ள 50-கம்பிகள் விசிறிபோல் மாட்டப்பட்டன. நியூபவுண்லாந்து தீவில் 400-அடி நீளமுள்ள ஒரு கம்பியை ஒரு காற்றாடியில் உயரத்தூக்கி, சமிக்ஞைகளைக் குறிப்பிடும் யந்திரத்தை மாட்டி, சமிக்ஞை செய்யப்பட்டது. வெகுதூரம் என்பதை லக்ஷியஞ் செய்யாமல் ஆயிரக்கணக்கானமைலுக்கு தந்தி அனுப்ப சாத்தியமாயிருப்பதுபற்றி கம்பியில்லாத்தந்தி மிகுதியும் பாராட்டப்படுகிறது. அது எவ்வாறு அனுப்பப்படுகிறதென்று இதுவரையில் சொல்லிவந்ததை இப்போது சுருங்கக் கூறுவோம்.

மின்சாரசக்தி வெகுதூரம் செல்வதற்கு மிகுந்த வேகங் கொண்டிருக்கவேண்டும். இதற்காக, யந்திரத்தில் ஏராளமான மின்சாரசக்தி சேகரித்து வைக்கப்படுகிறது. மின்சாரத்தைச் சாதாரணமாய் அனுப்புவதை விட, மின்சாரப் பொறியைக்கொண்டு அலைகள் ரூபமாகச் செலுத்துவதால் அதிக வேகம் உண்டாகிறது. தவிர அந்த மின்சார அலையை உயரமான கம்பி மூலமாய்ச் செலுத்தினால் அதன் விசை அதிகரிக்கிறது. அந்த ஆகாயக்கம்பி மின்சார அலைகளைச் சுற்றிலும் வீசுகிறது. அந்த அலைகள் ஜலத்தாலும் தரையாலும் இழுக்கப்பட்டு நாலாப் பக்கங்களிலும் செல்கின்றன. அலைகள் ரூபமாயுள்ள மின்சாரத்தைக் கிரகிப்பதற்கு விசேஷ சக்தியுடைய கருவியொன்றிருக்கிறது. அந்த கருவியைக் கொண்டு, மற்றெவ்விதத்தாலும் அறியக்கூடாதபடி எங்கும் வியாபித்துச் செல்கிற அந்த மின்சார அலைகள் கிரகிக்கப்படுகின்றன. கம்பியில்லாத் தந்தி அல்லது மின்சார அலைத்தந்தி என்பது அவ்வாறு வேலை செய்யப்படுகிறது.

அவ்வாறு வேலை செய்யப்பட்டு வருவதில் சில வேறுபாடுகள் தெரிய வந்திருக்கின்றன. மின்சார அலையானது ஜலத்துக்குக் குறுக்கே அனுப்பப்பட்டால் தரையின் குறுக்கே செல்வதை விட அதிக தூரம் போகிறதென்று தெரிய வருகிறது. நல்ல ஜலத்தைக் காட்டிலும் சமுத்திரஜலத்தில் அதிக தூரம் செல்கிறது. காய்ந்த தரையைக் காட்டிலும் ஈரமான தரையில் அதிக தூரம் செல்கிறது; பகற்காலத்தைவிட இராக்காலத்தில் அதிக தூரம் செல்கிறது. கம்பியில்லாத் தந்தியில் இன்னும் பற்பல



OFFICE OF … REGISTRAR OF BOOKS … 1914 MADRAS.

குறைகளிருக்கிறபடியால சாஸ்திரநிபுணர்கள் வெகு ஊக்கமாய் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அது வேலை செய்யும் முறையை யாவரும் எளிதில் அறியும்பொருட்டு அதற்கு ஆதாரமாயுள்ள முக்கிய அம்சங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட்டு மற்ற விவரங்களைச் சொல்லாமல் விட்டிருக்கிறோம்.

### உபயோகங்கள்.

பொதுவாய் அதன் உபயோகம் தந்திக் கம்பிகள் போட முடியாத இடங்களுக்கும் போட்டிராத இடங்களுக்கும் சமாசாரம் அறிவிப்பதாகும்.

உண்மையில், நினைத்த விடத்துக்கு சமாசாரம் அனுப்பக் கூடுமென் றேசொல்லலாம். தந்திக்கம்பி போடுவதென்றால்,முக்கியமாய் சமுத்திரம், மலை, ஆறு இவைகளுக்குக் குறுக்கே கம்பிபோடுவதென்றால் எளிதில் ஆகக்கூடியதல்ல. மார்க்கோனி கண்டுபிடித்த முறைப்படிதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலும் எல்லா கப்பல்களிலும் உபயோகிக்கப்படுகிறது. கப்பல் விபத்துகளில், உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் தவிர்க்கப்பட்டும் குறைக்கப்பட்டு மிருக்கின்றன. யுத்தங்களில் மிகவும் உபயோக முள்ளதென்றும் தெரிய வந்திருக்கிறது."

---

## நமது சித்திரப்படக் கதைகள்.

### சித்திரக் குள்ளன்—3.

78-வது பக்கத்தொடர்ச்சி.

சித்திரக்குள்ளன் பெற்றோர்கள் தங்கள் குழந்தை வீட்டுக்குத்திரும்பி வந்ததைக்கண்டு சந்தோஷப்பட்டு, ஒரு தேங்காய் ஓட்டில் உட்கார வைத்து அவனுக்குப்புசிக்க பாதாம் கொட்டைகளைக் கொடுத்தார்கள். இவைகள் அவனுக்கு ஒருமாதம் வரையிலிருக்கும், ஆனால் குழந்தையாகையாலும், பசி அதிகமிருந்தமையாலும் எல்லாவற்றையும் தின்று விட்டான். இப்படி அதிகமாய் தீனி உண்டமையால் அஜீரணம் உண்டாய் அசௌக்யமாயிருந்தான்.

ஒரு நாள் ஒரு தேவதை இறக்கையுள்ள எலிகளால் இழுக்கப்பட்ட ரதத்தில் உட்கார்ந்துகொண்டு சித்திரக்குள்ளனிடத்திற்கு வந்து அவனை சௌக்யப்படுத்த எடுத்துக்கொண்டுபோயிற்று. தேவதை தன்னிடத்தில் சிறிதுகாலம் வைத்துக்கொண்டிருந்து இவன் வியாதியை நீக்கி இவனை சௌக்கியப்படுத்திற்று. பின்பு இவனைத்தனது மாயாசக்தியால் கிங் ஆர்தர் அரண்மனைக்கு காற்றுடன் காற்றாகப் பறந்துபோகும்படி செய்தது. சித்திரக்குள்ளனும் அரண்மனையையடைந்து சமையல் செய்யுமிடத்திற்குப்போனான். அப்பொழுது சமையல் செய்பவன் அரசனுக்கு வெள்ளிக்கிண்ணத்தில் சுடச்சுட பாயசத்தை எடுத்துக்கொண்டு போகும்

பொழுது சித்திரக்குள்ளன் அதில் தாவிக்குதித்து அப்பாயசம் சமையல் காரன் கண்ணில் தெளிக்கும்படி செய்தான்.



" ஓ! ஓ! " என்று சித்திரக்குள்ளன் கத்தினான்.

" கொல்லு! கொல்லு! என்று உரக்க சமையல்காரன் சொல்லிக் கொண்டு அப்பாயசத்தை சாக்கடையில் கொட்டினான்.

சமையல்காரனுக்கு கோபம் அதிகரித்தது. இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. உடனே அரசனிடத்திற்குச் சென்று 'சித்திரக் குள்ளன் தங்களுக்காக நான் கொண்டு வந்த பாயசத்தில் விழுந்து அதைக்கெடுத்துவிட்டான், அவன் வேணுமென்று தான் செய்தான்' என்று சொன்னான்.

உடனே அரசன் சித்திரக்குள்ளனைப்பிடித்து வரும்படி கட்டளையிடவே, வேலைக்காரர்கள் பரபரப்புடன் சென்று சாக்கடை ஓரத்தில் பதுங்கியிருந்த சித்திரக்குள்ளனை எடுத்துக்கொண்டுவந்து அரசன் முன் வைத்தார்கள். அரசன் இவனை ஜட்ஜி முன்பாக விசாரணைசெய்து இவனைத்தண்டிக்கும்படி உத்தரவளித்தான்.

வேலைக்காரர்கள் கோர்ட்டுக்கு ஜட்ஜிமுன்பாக இவனை இட்டுக் கொண்டுபோய் ஜட்ஜியினிடத்தில் இவன் செய்தகுற்றத்தைச் சொன்னார்கள். ஜட்ஜி இவன் தலையைத்துண்டித்து விடும்படி உத்தரவுசெய்தார். இவ்விசாரணையைப் பார்க்க திரளாக கூட்டம் கூடியிருந்தது. சித்திரக் குள்ளனுக்கு சமீபத்தில் ஒரு யந்திரம்வைத்து வேலைசெய்பவன்தன் அகன்ற வாயைத்திறந்துகொண்டு தலை நிமிர்ந்து இவனைப் பார்த்துக்கொண்டிருந்தான். அங்குள்ளஜனங்கள் மிகவும் கடுமையான தீர்ப்பை ஜட்ஜி விதித்தாரே என்று நினைத்து அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்



கும்பொழுது சித்திரக்குள்ளன் யந்திரம்வைத்து வேலைசெய்யும் மனிதன்
வாயில் சரேலென்று தாவிகுதித்து அவன் தொண்டைக்குள் போய்விட்
டான். சித்திரக்குள்ளன் காணாமையால், அவன்தலையை எப்படிவெட்ட
முடியும்? யாவரும் வெட்கி தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

யந்திரம்வேலை செய்யும் மனிதன்தனது யந்திரசாலைக்குப்போனதும்
சித்திரக்குள்ளன் அவன்தொண்டையில் மேலும்கீழுமாகக்குதிக்கஆரம்பித்
தான்.யந்திரகாரன் இதென்ன அதிசயமாயிருக்கிறதென்று மிகவும்பயந்து
டாக்டரை வரவழைத்தான். டாக்டர் உடனே வந்தபொழுது சித்திரக்குள்
ளன் இவன்தொண்டையிலிருந்தவண்ணம், குதிக்கவும் பாடவும் ஆரம்பிக்
கவே,டாக்டர் பயந்து விட்டான். இந்த டாக்டர் வேறு சில டாக்டர்களை
வரவழைத்தான்! இவர்களெல்லாம் மேஜையைசுற்றி உட்கார்ந்துயந்திரகா
ரனுடன் பேசினார்கள், யந்திரகாரனோ மாணவஸ்தையிலிருக்கிறான். இவர்
களுடன் பேச சிறிதும் பிடிக்கவில்லை. ஐயோவென்று தன் வாயைக்கொ
ட்டாய் விடுபவன்போல் அகலமாகச்செய்தான். உடனே சித்திரக்குள்ளன்
அவன் வாயிலிருந்து வெளியில் மேஜைக்கு சமீபத்தில் குதித்தான்.



உடனே அங்கிருந்தவர்களுக்கு எல்லாம் தலைவணங்கி வந்தனம்
செய்தான். யந்திரகாரனுக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. யந்
திரத்திலிருந்து சுடும் ஜலம் ஓடும் கால்வாயில் ஜன்னலின் வழியாக இவனை
விட்டெறிந்தான். அதிலிருந்த ஒரு வகை மச்சம் இவனை விழுங்கிற்று.

சிறிது நேரம் சென்றபின் செம்படவன் ஒருவன் இம்மீனைப்பிடித்து
அரசன் சமையல்காரனுக்கு விலைக்கு விற்றான். அவன் அதை சமையல்
செய்ய இரண்டு துண்டாகச்செய்தபொழுது அதிலிருந்து சித்திரக்குள்
ளன் வெளிக்கிளம்பி குதித்தான்

சமையல்காரன் சித்திரக்குள்ளனையிட்டுக்கொண்டு நேராக அரசனிடத்திற்குப்போனான். அரசன் ராஜ்யகாரியத்தில் வேலையாயிருந்தமையால் இவனை கவனிக்கமுடியவில்லை. சமையல்காரன் இவனை ஒரு மேஜையின் காலில் கட்டிவைத்திருந்தான். இவ்விதம் ஒருவாரம் இவன் இங்கேயேயிருந்தான்.

பின்பு அரசன் சமையல்காரனை அழைப்பித்து, என்ன சங்கதி என்று விசாரித்தான். சித்திரக்குள்ளன் அகப்பட்ட விதத்தைச்சொல்லவே, அரசன் மகிழ்ந்து புந்நகைகொண்டு, அவனை இட்டுவரும்படி கட்டளையிட்டான். சித்திரக்குள்ளன் தன் முன் வந்ததும், இவன் தன் பாயசத்தைக் கெடுத்ததைப்பற்றி மன்னித்துவிட்டான்.

அரசன் சித்திரக்குள்ளனுக்கு ஒரு ''வீரன்'' என்று பட்டமளித்தான். பட்டுப்பூச்சியின் இறக்கைகளாலும், கோழிக்குஞ்சின் தோலாலும் உடுப்புகளைச்செய்வித்து சித்திரக்குள்ளனுக்கு கொர்டுத்தான். மேலும் கையில் வைத்துக்கொள்ள பட்டாகத்திக்குப்பதிலாக ஒரு ஊசியையும், குதிரைக்குப்பதிலாக ஒரு மூஞ்சூரையும் கொடுத்தான்.

சித்திரக்குள்ளன் அரசன் ப்ரியத்துடன் அளித்த உடுப்புகளை அணிந்துகொண்டும் கையில் ஒரு ஊசியைவைத்துக்கொண்டும், மூஞ்சூரின் மேல் ஏறிசவாரி செய்துகொண்டு வேட்டையாடப்போய் வருவான்.



ஒரு நாள் சித்திரக்குள்ளன் உடுப்புகளைத் தரித்துக்கொண்டு ஒரு தோட்டத்திலிருந்த வீட்டுக்கு அப்பால் வேகமாக சவாரி செய்துகொண்டு போனான். அச்சமயத்தில் ஒரு பூனை தாவி குதித்து வந்து சித்திரக்குள்ளனுடைய சுண்டெலியைப்பிடித்துப் புசிக்க முயன்றது. சித்திரக்குள்ளன் தன்னாலானமட்டும் கையிலுள்ள ஊசியால் அதை எதிர்த்



தான். என்ன எதிர்த்தும் இவனால் முடியவில்லை. பூனை இவனைப்பிராண்டிக்கொண்டும் சுண்டெலியை எடுத்துக்கொள்ள முயன்றும் வந்தது. அப்பொழுது அரசனுடைய சிப்பாய்கள் தற்செயலாய் அவ்வழியாய் வந்தார்கள். பூனையும் சித்திரக்குள்ளனும் பலமாக சண்டை செய்வதைக்கண்டு, உடனே, பூனையை அடித்து துரத்திவிட்டார்கள். நல்லவேளையாய் சித்திரக்குள்ளன் காப்பாற்றப்பட்டான். ஆனால் இவன் உடம்பில் காயம் தென்பட்டது. ஆகையால் இவனை அரண்மனைக்கு எடுத்துக்கொண்டுபோய் ஒரு சிறிய பெட்டியில் பருத்தியைப்போட்டு அதில் இவனைப்படுக்கவைத்தார்கள். சண்டை செய்தமையால் களைப்புற்று நன்றாகத்தூங்கினான் சித்திரக்குள்ளன்.

மறுநாள் இவன் தேகத்திலுள்ள காயங்களுக்கு மருந்து போட்டார்கள். சில நாள் சென்றவுடன் சித்திரக்குள்ளன் சௌக்யமடைந்தான். அரசன் ஒரு அடி உயரத்தில் தங்கத்தால் ஒரு அரண்மனை செய்வித்தான். அதில் ஒரு சிறிய நாற்காலியும் வைக்கும்படி சொன்னான். சித்திரக்குள்ளன் தனக்கு விலையுயர்ந்தவும் அழகுள்ளதுமான அரண்மனை கிடைத்ததைக்கண்டு மனமகிழ்ந்து அதில் சிறிதுகாலம் சுகமாகவசித்துவந்தான். ஆனால் இவன் அடிக்கடி ராணிக்குத் தொந்தரவு செய்து வந்தமையால் ராணிக்கு இவனிடத்தில் சிறிதும் ப்ரியமில்லை. ஆகையால் ஒருநாள் இராணி அரசனிடத்தில் இவன் அடிக்கடி துஷ்டத்தனம் செய்கிறானென்று சொன்னாள். அரசனுக்கு கோபம் வந்துவிட்டது. சித்திரக்குள்ளன் ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிப்போய்விட்டான். கடைசியாக ஒரு தோட்டத்திற்கு வந்து ஒரு பெரிய நத்தையின் ஓடு இருந்தது, அதில் சிறிதுகாலம் வசித்து வந்தான். ஆனால் இவனுக்கு வேண்டிய ஆகாரம் கிடைக்கவில்லை. பசியால் வருந்தினான், பசி பொறுக்க முடியாமல் வெளியில் வந்து அங்குமிங்கும் பார்த்தான். ஒரு பட்டுப்பூச்சி புல்லின் மேலிருந்தது. அதன் மேல் ஏறிக்கொண்டு போனான். வெகு தூரம் பட்டுப் பூச்சி சென்று ஒரு புஷ்பத்தின் மீது உட்கார்ந்தது. உடனே அங்கு ஒரு சிலந்தி இவனைக்கண்டு இவன் ஒரு ஈ என்று நினைத்து இவனைப்பிடித்துப் புசிக்கவந்தது. இவன் அத்துடன் சண்டை செய்ய பிரயத்தனப்பட்டான். அதன் சுவாசத்தால் வெளிவந்த விஷமானது சித்திரக்குள்ளனை மெய்மறந்துபோகும்படி செய்தது. சிலந்தியோ உடனே வந்து அவன் தேகத்திலுள்ள ரத்தத்தைக் குடித்துவிட்டு போய்விட்டது.

இச்சங்கதி அரசன், அவன் ஆட்கள் முதலியவர்களுக்குத் தெரிந்தவுடன் விசனமுற்றார்கள். உடனே இவர்களெல்லாம் ஓடிவந்து இவனைத்தேடி எடுத்து ஒரு ரோஜா செடியின்கீழ் புதைத்துவைத்தார்கள். அச்சவக்குழியின் மேல் சலவைக்கல் ஒன்றைவைத்து அதில் பின் வருமாறு எழுதியும் வைத்தார்கள்.—

"இங்கே சித்திரக்குள்ளனிருக்கிறன். இவன் கிங் ஆர்தருடைய வீரன், இவன் சிலந்திப் பூச்சியால் மரணமடைந்தான்."




(முற்றிற்று.)

---

## மனம்

நாம் உள்நாடுகளில் சென்றல் வழிப்போக்கர்களைக் கண்டு நாய்கள் குலைப்பதைக் கண்டிருக்கலாம். ஆயினும் எல்லா நாய்களும் அவ்விதம் செய்கின்றனவோ? இல்லை; நல்ல ஜாதி நாய்கள் பிரயாணிகளை சற்று, ஏறிட்டுப்பார்த்து பின்னல் தங்களிருப்பிடம் போய்ச்சேருகின்றன.

இம்மாதிரியே வாத்துக்கோழிகளையும் பசுக்களையும் ஒத்துப்பார்ப்போம். வயலில் பக்கலில் என்ன இறைச்சல்? அனேக வாத்துக்கோழிகள் கீச்சுக் கீச்சென்று சத்தமிடுகின்றன. அண்டையில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களைப்பார். அவைகள் வழிப்போக்கர்கள் வருவதையாவது போவதையாவது கவனிக்கின்றனவோ?

மேற்கண்ட உதாரணங்களால் அற்பர்களும் கையிலாகாத அசக்தர்களும் எப்பொழுதும் சத்தமும் இறைச்சலும் போட்டுக்கொண்டேயிருப்பார்கள். காரியத்தில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது. அறிவும் அன்பும் அமைந்த ஆண்மையோர் அமரிக்கையாயிருப்பர்.

மஹா அலெக்சாண்டரைப்பற்றி முன்பு கூறி உள்ளோமே. அவர் அனேக நாடுகளை ஜெயித்தாரே யொழிய தன்னைத்தானே அடைக்கியாளும் திறமைவாய்ந்தவர் அல்லர். கோபாவேசத்தால் தன் சினேகிதன் ஒருவரைக் குத்திக்கொன்ருர். செய்த காரியத்தைக் குறித்து பின்பு



பிரலாபித்தார். யாதுபயன்? இறந்தவர் திரும்பவில்லை. அலெக்சாண்டர்
குடியில் மிகவும் தேர்ந்தவர். மதுபானமின்றி ஒரு நாளாவது அவர்
கழித்ததில்லை. அதனுல் உடம்பு தளர்ந்து இறந்தார். அவர் ஜெயித்த
நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அவருக்கு முன்பு பௌத்தமதத்தை ஸ்தா
பித்த மஹான் புத்தர் ஒருவர் இருந்தார். அவர் 'யுத்தகளத்தில் கோடா
கோடி ஜனங்களை ஜெயித்தலினும் ஒருவன் தன்னைத்தான் வெல்வானுயின்
அதுவே மேன்மை.' என்று சொல்லியிருக்கிறர்.

மிதமான வாழ்க்கை குணம். லிடியா தேசத்து அரசனுன கிரீசஸ்
என்போன் செல்வத்திலும் சிறப்பிலும் மேன்மை யடைந்ததாக கர்வங்
கொண்டு தத்வசாஸ்திரியான, சாலனை நோக்கிக் கூறுவான். "நண்பா!
என் கிரீடத்தை நோக்கு. அதில் அமைத்திருக்கும் இரத்தினங்களுக்கு
உவமை எங்குள? அதோ பட்டமகிஷி பூங்காவனத்தில் செல்லுகிறள்!
அவள் அங்கமுழுதும் அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கவனி! ஒவ்
வொன்றையும் வர்ணிக்கப்புகுமின் ஒப்பில்லையன்றே? அதோ உற்றுக்
கேள். வாத்தியங்கள் கோஷிக்கின்றன! அதற்கேற்ப சைனியங்கள் நடை
பழகுகிறர்கள். இக்காலத்திய கருவிகள் ஈட்டி, அம்பு, வில், முதலிய
வைகளுடன் அவர்கள் செல்வது எவ்வளவு நேர்த்தியா யிருக்கின்றது!
சற்று அரண்மனையைச் சுற்றுவோம். சித்திரப்பதுமை என்ன, தந்த சிம்
மாசனம் என்ன, இவைகளுக்கேற்ப விசித்திரமான திரைகளென்ன இவை
கள் எங்குள? இவை முன்னிலையில் சதா மழைத்துளிகள்போல் விழுந்து
கொண்டிருக்கும் ஊற்றுக்கண்களென்ன; ஆ ஆ! அதோ செல்லும் வேடர்
களைப்பார்! வேட்டை நாய்களுடன் சென்று காட்டுமிருகங்களை அடித்துக்
துலைக்கச் செல்லுகின்றனர். இப்புவியில் என்னைப்போல் சுகம் அடைய
வன் யாவனுளன்?"

இவைகளைக்கேட்ட சாலன் சொல்லலுற்றனன். "அரசே! யான்
உன்னிலும் சுகம் அடைந்தவனைக் கண்டிருக்கின்றனன்; அவன் அரசனல்ல;
என்னைப்போல் ஒரு ஆண்மகன். (Athens) ஏதன்ஸ் என்னும் நகரைச்
சார்ந்தவன். பணம் காசுகளில் மிகுந்தவன் அல்லன். சுகானுபவங்களுக்கு
வேண்டிய சாதனங்கள் அவனிடமில்லை. கண்ணியத்திலும் தைரியத்திலும்
மிகச் செல்வன். அதன்பொருட்டே யாவரும் மரியாதையாக அவனை
நடத்தினர். அவன் தன் தேச அபிமானத்தால் நாட்டை எதிர்த்த பகை
யாளியை அறத்த எண்ணி சண்டை செய்து போர்க்களத்தில் மாண்ட
னன். அவன் வம்சத்தார் அவனுடைய குணத்தை மெச்சி அவ்வழி
ஒழுகுகின்றனர்."

இவர்தானே? இன்னும் அனேகருளர். "ஒரு ஊரில் இரண்டு சகோ
தரர்களிருந்தார்கள். அவர்கள் ஒற்றுமையை நோக்கி மனிதர் 'காமனும்
சாமனும் போலும் அன்பினர்' என்று கூறினர். இருவரும் தங்கள்
தாயிடத்தில் பயபக்தியுடன் நடந்துவரும் ஒரு நாட் காலை அவர்கள்

தாயார் கோயிலை நண்ண எண்ணியபொழுது வண்டியிற்கட்ட குதிரை
வரத்தாமதமானதால் தாங்களே வண்டியை இழுத்துச்சென்று அன்னை
யின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்தனர். அவர்கள் இறந்து வெகு நாட்க
ளாயினும் அவர்கள் பெயர் இன்னும் வழங்குகின்றது.”

இவைகளினின்றும் சாலன் கூறியவை மெச்சத்தக்கன என்று எளி
தில் அறியலாம். கிரீசஸைவிட இரு சகோதரர்கள் எவ்விதம் சுகவாசி
கள் ஆனார்கள்? கிரீசஸோ, திரவியத்திரள் புகந்தோன். கட்டிக்காற்க
காவலாளிகள் ஏராளமாய் உள்ளவன். நகைகளும், நாணயங்களும், சிம்
மாசனங்களும், பட்டாடைகளும் பெற்ற சக்கராதிபதி. இவைகள் அவ
னுடன் பிறந்து தேகத்தில் ஒரு பாகமாய் பிரிக்க முடியாமல் இருப்பவை
களோ? அன்றி உடம்பினின்று கழற்றிவைக்கும் பொருள்களோ? இவை
களை அவர் வாழ்நாட்களில் ஒருநாள் இழக்கக்கூடும். அவ்விதமே கொஞ்ச
காலங்களுக்கப்பால் தன் அரசாக்ஷியை எதிரி கையில் ஒப்பிவித்து தானும்
சிறைசேர்ந்தான். மற்றமூவரும் தங்கள் குணத்தின் பெருமையால் ஒன்
றும் இழக்கவில்லை.

திரிலோகமும் பெயர்பெற்ற அரிச்சந்திரன் கதையை யாவரும் கேட்
டிருக்கலாம். தன் நாடு நகரங்கள் யாவற்றையும் இழந்தனன்; ஆயினும்
‘கட்டுரை இழுங்கிலேம்’ என்றான். உலகோர் மெச்சும் ஐசுவரியங்களினும்
சத்தியமே மேன்மையெனத் தேர்ந்தெடுத்தனன் அன்றோ?

சந்திரா. வி.

---

# கொலம்பஸ் செய்த ப்ரயாணம்.

கோலம்பஸ் ஆட்டு ரோமத்தைச் சிக்கெடுத்து ஜீவனம் செய்து
வந்தவரின் குமாரர். இட்டாலியில் ஜினோவாவில் கொலம்பஸ் வசித்து
வருகையில் இவர் கப்பல் தங்கும் இடத்திற்குப்போய் அங்கு கப்பல்கள்
வருவதையும் அவ்விடத்திலிருந்து கப்பல்கள் புறப்பட்டு வேறு தேசங்
களுக்குப் போவதையும் பார்த்துவருவார். இவர் தகப்பனார் மிகவும்
ஏழை. ஆயினும் தன் பிள்ளையை ஒருபள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவந்
தார். கொலம்பஸ் பாடசாலையில் அநேக தேசங்களைக் கண்டுபிடித்தவர்
களின் சரித்திரங்களையும், அவர்கள் செய்த ப்ரயாணங்களையும், கேட்ப
தில் வெகு ஊக்கமுடையவராயிருந்தார். பாடசாலையில் பூகோளம், வான
சாஸ்திரம், முதலியவைகளை மிக்க ப்ரியத்துடன் படித்துவந்தார். உல
கத்திலுள்ள பூபாகம், நீர்பாகம், இரவில் கப்பல்களுக்கு உதவியாகயிருக்
கும் நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப்பற்றி படித்துவந்தார்.

இவர் சிறுவயதிலேயே எல்லா தேசங்களையும் போய் பார்த்துவா
நிச்சயம் செய்துகொண்டார். இவர் விரும்பிய வண்ணம் இவரது பெற்
றோர்களும் சம்மதித்தார்கள். இவர் தமது 14-வது வயதில் கப்பலில்



ஏறிப்போக உத்திரவு பெற்று, ப்ரயாணம் செய்தார். இதர தேசங்களுக்
குப் போய் அவைகளைப்பார்த்தார். அத்தேசங்களின் படங்களை வரைய
கற்றுக்கொண்டார். சமுத்திரமார்க்கயாகச் செல்லுகையில் அதைப்பற்
றியும் படம் வரையகற்றுக்கொண்டார். கப்பல் விடவும் கற்றுக்கொண்
டார். இவர் மிக்க தைர்யமும், புத்திசாதுர்யமும் பொருந்தியவர்.

இவர் காலத்தில் போர்ச்சுகீஸ் தேசத்தார் கப்பல் ப்ரயாணம் செய்
வதில் தைரியமானவர்கள். ஆபிரிக்காவின் மேற்குகரை வரைக்கும் இத்
தேசத்தார் சென்று அங்குள்ளவைகளைப் பார்த்து வந்தார்கள். கோலம்
பஸ் இவர்கள் செய்த ப்ரயாணத்தைப்பற்றி தீர விசாரித்து அவைகளைக்
கற்றுக்கொண்டார். இவர் கினி, மதீர, போர்டோ ஸான்டோ முதலி
யவைகளுக்குப் போய்வந்தார். இவரது 29-வது வயதில் ப்ரயாணம்
செய்வதில் சமர்த்தரென பேர்பெற்றார்.

லிஸ்பன் என்ற பட்டணத்தில் எல்லா படங்களையும் சமுத்திர
மார்க்கங்களையும் செவ்வனே கற்றுக்கொள்ள தங்கி வசித்துவந்தார்.
அப்பொழுது ஒரு போர்ச்சுகீஸ் மாதை மணம் புரிந்துகொண்டார். பல
தேசங்களுக்கு ப்ரயாணம் செய்தவர்கள் எழுதிய புஸ்தகங்களை யெல்
லாம் கஷ்டப்பட்டு சம்பாதித்து அவைகளை யெல்லாம் நன்றாகப் படித்து
சகல விஷயங்களையும் அறிந்துகொண்டார். மார்க்கோ போலோ எழு
திய புஸ்தகத்தைப் படித்து சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டார்.
அநேக புத்திமான்களுக்கு அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத்தாண்டி
ப்ரயாணம் செய்தால் ஏஷியாவைப் பார்க்க முடியுமாவென கடிதம் எழுதி
கேட்டுவந்தார் அவர்களில்சிலர் “முடியும்” என்று கோலம்பஸுக்குச்
சொன்னார்கள். அக்காலத்தில் புத்திமான்களில் சிறந்தவரான டாஸ்கநல்லி
என்பவர் கோலம்பஸுக்கு தாம்வரைந்த படத்தை அனுப்பினார். மேலும்
மேற்கு நோக்கி ப்ரயாணம் செய்யும்படியும் அப்படி செய்யாவிடின் அதி
சயமான ஜேப்பானைப் பார்க்க முடியாதென்றும், அப்படி ஜெப்பானைப்
பார்க்க தவறினால் சீனா, இந்தியா முதலிய தேசங்களுக்காவது வந்து சேர
லாமென்றும் இவைகளுக்கு வழியை படத்தில் பார்க்கலாமென்றும் ஒரு
கடிதம் எழுதி அனுப்பினார்.

கோலம்பஸ் ஆபிரிக்கா மார்க்கமாக போகுவதற்குப் பதிலாக மேற்கு
பக்கம் இந்தியாவுக்குப்போக ப்ரயாணம் செய்ய ஏற்பாடு செய்தார்.
அநேக தனவந்தர்களை தமக்கு திரவியமும் கப்பலும் கொடுத்து சகாயம்
செய்யும்படிகேட்டார். ஒருவரும் முன்வரவில்லை. ஜினோவாவிலுள்ள
வர்களும் இவர்க்கு உதவிசெய்யவில்லை. 1480-ம் வருஷத்தில் போர்ச்சு
கலுக்குப்போய் அத்தேசத்து அரசனிடத்தில் தனது எண்ணத்தை தெரி
வித்தார். அரசனுடைய மந்திரி முதலியவர்கள் அவ்வித ப்ரயாணத்துக்கு
அதிக திரவியம் செலவாகுமென்று சொன்னபோதிலும் அரசன் கோலம்
பஸ் சொன்னவைகளுக்கு சம்மதித்தார்.

ஆனால் இவ்வரசன் நல்லவனல்ல. கபட நெஞ்சுள்ளவன். ஆகையால் கொலம்பஸ் சொல்வது நிஜமாவென்பதை அறிய சிலரை கப்பலுடன் அனுப்பினான். கொலம்பஸுக்கு பதில் சொல்லாமல் காத்திருக்கும்படி சொன்னான். அவ்விதம் அரசனால் அனுப்பப்பட்ட மனிதர்கள் பெரிய புயல்காற்று அடித்தபோது பயந்தார்கள். தங்கள் உயிருக்கு எங்கு அபாயம் நேரிடுமோவென்று அஞ்சி வந்த வழியைப் பார்த்துக்கொண்டு தங்கள் ஊருக்குப்போய் அரசனைக்கண்டு "கொலம்பஸ் கனவுகாண்போன் போல் தோன்றுகிறது. அவன் நினைக்கிற ப்ரகாரம் செய்வது அசாத்தியம்" என்று சொன்னார்கள்.

கொலம்பஸுக்கு இவ்வரசன் ரகசியமாக சிலரை ப்ரயாணம் செய்யச் சொல்லிய சங்கதி தெரிந்தது. மிகவும் கோபங்கொண்டு விசனமுற்று அத்தேசத்தைவிட்டுப் போகவும் இனி அத்தேசத்துக்கு தனக்கு வர இஷ்டமில்லையென்றும் சொல்லி உடனே அத்தேசத்தை விட்டு புறப்பட்டு தன் சிறியகுமாரனுடன் ஸ்பெயன் தேசத்துக்குப் போனார். இங்கு வருவதற்குள் இங்கிலாந்து அரசனுக்கு தனக்கு உதவிபுரியுமாறு ஒரு கடிதம் எழுதினார். இவரிடமிருந்து பதில் வருமுன் ஸ்பெயினுக்கு வரவே போர்ச்சுகல் அரசன் இவரை தன் தேசத்துக்குத் திரும்பிவரும்படி கடிதம் எழுதினான். கொலம்பஸ் வரமுடியாதென்று மறுதளித்துவிட்டார். ஸ்பெயின் தேசத்தில் ஒரு பிரபுவினிடம் சென்று தன் எண்ணம் முழுவதையும் சொன்னார். இப்பிரபு தன்னால் ஒன்றும் உதவிபுரிய முடியாதென்று சொல்லி அரசனிடத்திற்கு கொலம்பஸை அனுப்பினார். அச்சமயம் பர்டினாண்ட் அரசனும் ராணி இஸபல்லாவும் ராஜ்யகாரியத்தில் தங்கள் கவனத்தை செலுத்திவந்தார்கள். அச்சமயம் மூர்ஜாதியாருக்கும் ஸ்பெயினுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அரசன் கொலம்பஸை கவனிக்க முடியவில்லை. கொலம்பஸ் வெகுநாள் காத்துக்கொண்டிருந்தார். அரசன் தன்னை விசாரிக்க அவகாசமில்லாததைக் கண்டு மனம் வருந்தி அவ்வூரை விட்டு பிரான்சு தேசத்துக்குப்போக தீர்மானித்தார். ஆனால் இவர்மிகவும் ஏழை. அன்னாகாரத்திற்கு கையில் காசுகூட இல்லை. இவரது சிறுபிள்ளை பசியால் தவிப்பதைப் பார்த்து ஒரு மடத்தில் தங்கினார். அங்குள்ள சந்நியாசிகள் இவருடைய வாக் சாதுரியத்தைக்கண்டு களித்து இவருக்கு வேண்டிய உதவியைச் செய்தார்கள். இங்கு சிலநாள் இருந்தபின் ஸ்பெயின் தேசத்து ராணிக்கு ஒரு நண்பராயுள்ளவர் இவ்விடத்தில் இவருக்கு சினேகமானார். அவர் கொலம்பஸிடத்தில் அன்புடையவராய் அவருக்கு தன்னாலியன்ற உதவிபுரிவதாக வாக்களித்து, ராணியாருக்கு ஒரு கடிதம் எழுதி இவரிடத்தில் கொடுத்தார். அதில் கொலம்பஸ் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி வெகு இலேசானதல்ல. அவருக்கு உதவி செய்தால் அது வீணாகாது என்பதும் எழுதியிருந்தார். ராணியார் இக்கடிதத்தைக் கண்டதும் கொலம்பஸை தமது இருப்பிடத்திற்கு உடனே வரும்படி எழுதினார்கள்.



கொலம்பஸ் இங்கு வந்து முன்போல் காக்கவேண்டியிருந்தது. இப்படி வெகு நாளிருந்தார். ராணியார் ஆட்டமாடிக்கொண்டும், பாட்டுபாடிக்கொண்டும் தமது காலத்தை உற்சாகமாக கழித்துவந்தார்கள். கொலம்பஸ் ஞாபகமே ராணிக்கு வரவில்லை. விசனமுற்று காத்திருக்கும் கொலம்பஸுக்கு தன்னை ராணியார் லக்ஷியம்செய்யாததைக்கண்டு மனம் வருந்தி மறுபடி பிரான்சுக்குப் புறப்பட எத்தனப்பட்டார்.

இச்சங்கதி ராணியார் காதுக்குஎட்டவே, கொலம்பஸ் உண்மையாகவே ஊக்கமுடையவரென்பதை அறிந்துகொண்டு அவரை வரவழைத்து அவருடன் கலந்துபேசி யாவற்றையும் செவ்வனே அறிந்துகொண்டாள். இது 1491ம் வருஷம் நடந்தது. அப்பொழுது ஜனங்கள் இவரைப்பார்த்து இது முடியாத காரியமென்று சொல்லி சிரித்து கேலிபண்ணினார்கள். தாம்கைகொண்டகாரியம் நிறைவேறவேண்டுமென்ற உறுதிகொண்ட கொலம்பஸ் மௌனமாக இருந்தாரே யொழிய, உதாசீனமாக யாவருக்கும் பதிலுரைக்கவில்லை. பொறுமையே உருவெடுத்தாற்போல் தோன்றினாராம். ஆனால் இவரது நண்பர்களில் அநேகர் இவர் வார்த்தையில் நம்பிக்கையுள்ளவர்கள். இவர்கள் அரசியிடத்தில் இவரைப்பற்றி சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லி இவருக்கு எவ்விதமாயாவது உதவி புரியும்படி அரசியைத் தூண்டினார்கள். அரசி மனமகிழ்ந்து "கொலம்பஸ் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றவேண்டும். அதாவது சமுத்திர யாத்திரை செய்து ஸ்பெயினுக்கு இதரதேசத்தைக் கண்டுபிடிக்கட்டும். என் விலையுயர்ந்த நகைகளை விற்றாவது கொடுக்கிறேன்" என்றாள். அரசனும் தனது மனைவி சொல்லிய பிரகாரம் மனமுவந்து கொலம்பஸுக்கு உதவிபுரிய வாக்களித்தான். உடனே சிறிய 3 கப்பல்களையும், ஆகாரம், திரவியம், மனிதர்கள் முதலியவைகளையும் சேகரித்து கொடுத்தார்கள். கொலம்பஸ் முயற்சி உடையார் இகழ்ச்சியடையார் என்பதற்கிணங்க, தைரியத்துடனும் கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்பதற்கிணங்க கடவுளை நம்பி ப்ரயாணம் செய்யலானார்.

இக்காலத்தில் கொலம்பஸ் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் யாத்திரைசெய்தயாத்திரி, ஒருவரும் செய்யத் துணியமாட்டார்கள். ஏனெனில் அவருடைய கப்பல்கள் சிறியவைகள். அவைகளில் பெரியது 63 அடி நீளமாம். கப்பல்களும் இக்காலத்திலுள்ளவைகளைப்போல் அவ்வளவு நன்றாக செய்யப்பட்டவைகளல்ல. கொலம்பஸ் கப்பல் தலைவனாகயிருந்து கப்பல்களை விட்டார். 1492வருடம் ஆகஸ்ட்மீ 3உ ஸ்பெயின்தேசத்து துறைமுகத்தை விட்டு கொலம்பஸ் புறப்பட்டுவிட்டார். அங்குள்ள ஜனங்கள் மிகவும் பயந்து இவர்களை இனி திரும்பி பார்க்க முடியாதென்று நினைத்தார்களாம். கப்பல் ஓட்டிகளும், மாலுமிகளும் பயந்தார்களாம். பூமி இவர்கள் கண்களுக்கு மறைந்ததோ இல்லையோ இவர்கள் கொண்டபயத்திற்கு அளவேயில்லையாம். கப்பல்கள் போய்க்கொண்டிருக்கும்பொழுது.

இவர்கள் தங்களுக்கு அபாயம் நேரிடுமென்று மிகவும்பயந்து தங்கள் தலைவனை சமுத்திரத்தில் தள்ளிவிட சதியாலோசனை செய்தார்களாம். இவர்களெல்லாம் மிகவும் பயங்காளிகளல்லவா? இவர்களை தனக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படிசெய்வது கொலம்பஸுக்கு வெகுகஷ்டமாயிருந்தது. பொறுப்பான் பூமியை யாளுவான் என்ற பழமொழிப்படி. பொறுத்துக்கொண்டு சாந்தமாயும் முகமலர்ச்சியுடனும் அவர்களுக்கு தைரியமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு போனாரே தவிர, அவர்களைச் சிறிதும் கோபக்குறியுடன் பார்த்து பேசவில்லை. இவ்விதம் அநேக வாரங்கள் சென்றன. கடைசியாக 1492 ம் வருஷம் டிசம்பர்மீ 12உ யன்று பூமியைக் கண்டு கப்பல்களை நிறுத்தினார்கள். கொலம்பஸ் ஒரு விளக்கு வெளிச்சத்தைக் கண்டார். யாவரும் பயம்தெளிந்தார்கள். இவர்கள் அப்பொழுது அடைந்த சந்தோஷத்திற்கு அளவு கிடையாது. உடனே அநேக மைல் நீளமுள்ள தீவைக்கண்டார்கள்.

கொலம்பஸும் மற்ற கப்பலோட்டி மாலுமி முதலியவர்களும் கரைக்குவந்தார்கள். கொலம்பஸ் உடனே கடவுளை ஸ்துதி செய்தார். மற்றவர்களையும் கடவுளை வணங்கும்படி செய்தார். கடவுள் ஸ்துதி முடிந்ததும் சிறிதுதூரம் போனவுடன் அத்தீவிலுள்ள ஜனங்கள் இவர்களைக் கண்டு அதிசயித்து பயத்துடன் ஓடினார்கள். இதைத்தான் இந்தியா என்று கொலம்பஸும் அவருடனிருந்தவர்களும் நினைத்தார்கள். இது அமெரிக்காவின் பாகம் என்று அவர்களுக்கு அப்பொழுது சிறிதும் தெரியவேதெரியாது. ஆகையால் அத்தீவின் ஜனங்களுக்கு இந்தியர்களென்றும், தீவுகளுக்கு வெஸ்ட் இண்டீஸ் என்றும் பெயரிட்டார்கள். இப்பெயர்கள் இப்பொழுதும் வழங்கி வருகின்றன.

இரண்டு மூன்று தினம் சென்றபின் அத்தீவிலுள்ள ஜனங்கள் பயம் தெளிந்து தங்கள் தேசத்திற்குப் புதிதாய் வந்திருப்பவர்களைப் பார்க்க கூட்டம் கூட்டமாக வந்தார்கள். கொலம்பஸ் அவர்களைப் பார்த்தபொழுது அவர்கள் நீக்ரோவைப்போல் கருப்பாயில்லாமல் சிவந்த பழுப்புநிறமுள்ளவர்களா யிருப்பதைக்கண்டு அதிசயித்தார்கள்.

இவர்கள் உடுப்புகளொன்றும் தரிக்காமல் நிர்வாணமாயிருந்தார்கள். இவர்கள் தேகமுழுவதும் பலவர்ணங்கள் பூசப்பட்டிருந்ததாம். அத்தீவின் ஜனங்கள் கொலம்பஸ் முதலியவர்கள் ஆகாயத்திலிருந்து வந்த தேவதைகளென்று நினைத்தார்களாம். இவர்களுடன் இந்தியர்கள் பழகப் பழக பயம் நீங்கி இவர்களுடன் சிநேகமானார்கள். கொலம்பஸ் முதலியவர்களுக்கு அவர்கள் பக்ஷிகள், தங்கம், தங்கமோதிரம், முதலியவைகளைக் கொடுத்து, கண்ணாடியால் செய்யப்பட்ட மணிகளை வாங்கிக்கொண்டார்களாம்.

கொலம்பஸ் அங்கு அவர்களிடம் அதிக தங்கமிருப்பதைக் கண்டு "இது ஸ்பெயின் தேசத்து அரசனுக்குச் சொந்தமானது. இவ்வித



வியாபாரம் இனி செய்யக்கூடாது. இத்தீவும் ஸ்பெயினுக்குச் சொந்தம்" என்றாராம். இந்தத் தீவை முற்றிலும் பார்த்துவிட்டு க்யூபா, ஹைட்டி என்ற தீவுகளைக் கண்டுபிடித்தார். இங்கு வந்தவுடன் ஒரு கப்பல் உடைந்துபோயிற்று. ஆனால் உயிர்ச்சேதமில்லை. அந்தக் கப்பலின் மரத்துண்டுகளை எடுத்து ஹைட்டியில் ஒரு கோட்டைகட்டி, அதில் தன்னுடன்வந்த சிலரை வசிக்கும்படி சொல்லிவிட்டு, மீதி இரண்டு கப்பல்களில் அந்த தீவுகளிலுள்ள விசேஷப் பொருள்களை எடுத்துக்கொண்டு ஸ்பெயின் தேசத்துக்கு ப்ரயாணமானார். 1493௵ மாச்சுமீ 15உ ஸ்பெயினுக்கு கொலம்பஸும் மற்றவர்களும் சௌக்யமாக வந்துசேர்ந்ததைக்கண்டு அரசனும் ராணியும் மகிழ்ந்து சகல சங்கதிகளையும் கேட்டுக் களித்தார்கள்.

ஆறுமாதமானவுடன் கொலம்பஸ் இரண்டாம்தடவை ப்ரயாணம் செய்தார். அப்பொழுது எல்லாவித விதைகள், மிருகங்கள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு ஹைட்டிக்கு வந்து சேர்ந்தார். அவ்விடங்களில் விதைகளை விதைத்து தான் கொண்டுவந்த மிருகங்களை வளர்த்துவந்தார். இங்கிருந்து ப்ரயாணம் செய்து ஜமைக்கா என்ற தீவை கண்டுபிடித்தார். 1496-ம் வருஷம் ஸ்பெயின் தேசத்துக்குத் திரும்பிப்போனார்.

ஸ்பெயினுக்கு கொலம்பஸ் வந்ததும் இங்கு 2 வருஷம் தங்கியிருந்தபின் இன்னும் பூபாகத்தைக் கண்டுபிடிக்க ப்ரயாணமானார். "வெஸ்ட் இண்டீஸு"க்குத் தெற்கில் ஏதாவது தீவுகளிருக்குமோவென்று நினைத்து அந்தப்பக்கம் சென்றார். அவ்விதமே ஒன்றை கண்டுபிடித்தார். அது தான் இப்பொழுது தேன் அமெரிக்கா என்று சொல்லப்படுகிறது. இங்கிருந்து ஹைட்டிக்கு வந்தார். சாதாரணமாக ஜனங்களுக்கு பொறாமைகுணம் வந்துவிடுமல்லவா? கொலம்பஸ் இப்படி கஷ்டப்பட்டு அநேக தீவுகளைக் கண்டுபிடித்து நற்பேர் பெற்றிருப்பதைக் கண்டு, அநேகர் பொறாமைகொண்டு, ஸ்பெயின் ஜனங்கள் அரசனிடத்திலும், ராணியிடத்திலும் இவருக்கு விரோதமாக கோள்சொன்னார்கள். அரசன் ஒரு பெரிய உத்தியோகஸ்தரை அனுப்பினார். அந்த உத்தியோகஸ்தன் ஹைட்டிக்கு வந்ததும் கொலம்பஸு கையில் சங்கிலி போட்டு கப்பலில் வைத்து ஸ்பெயினுக்கு அனுப்பினான். கொலம்பஸ் மிக்க வருத்தத்துடன் ஸ்பெயினுக்கு வந்ததும் இராஜனும் இராணியும் பார்த்து மிகவும் வருந்தி உடனே சங்கிலியை அவிழ்த்துவிட உத்திரவுசெய்து முன்போல ப்ரியத்துடன் கொலம்பஸை மரியாதை பாராட்டி வந்தார்கள்.

இவருக்கு முன்போலவே கப்பல்கள், மனிதர்கள், திரவியம் முதலியவைகளைக் கொடுத்தார்கள். சோம்பேரியாய் சுயநயம் பாராட்டுபவன் எங்கும் போகாமல் ஒரேயிடத்திலிருந்து தனது வேலையைப் பார்த்து வருவான். கொலம்பஸ் அப்படியல்ல. தமது விடாமுயற்சியால் இன்னும் தேசங்களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றும், தம்மாலியன்ற நன்மை அத்தேசத்தவர்களுக்குச் செய்யவேண்டுமென்ற எண்ணமுடையவர். மே

னும் "தெய்வமே துணை" என்று நம்பியிருப்பவர். இவ்வித நல்ல குணமுள்ள கொலம்பஸ் தனவந்தரல்ல. மிக்க ஏழை. பணம் சம்பாதிக்கவேண்டுமானால் எத்தனையோ சம்பாதிக்கலாம். 'எல்லாம் ஸ்பெயினுக்கு சொந்தம்' என்று சொன்னதிலேயே இவருக்கு ராஜனிடத்திலிருந்த இவரது விசுவாஸமும் கண்ணியமும் தெரிகின்றதல்லவா?

நிற்க, கொலம்பஸ் தன் தேகஸ்ரமத்தை சிறிதும் கவனியாமல் மறுபடியும் நான்காம் தடவை ப்ரயாணம் செய்ய புறப்பட்டார். இந்தத் தடவை இவருக்கு பற்பல கெடுதல்கள் உண்டாயின. கப்பலோ ஜமைக்காவின் கரையில் உடைந்துபோயிற்று. 1504-ம் வருஷத்தில் இரண்டு கப்பல்கள் இங்கு அனுப்பப்பட்டன. கொலம்பஸ் முதலியவர்கள் ஸ்பெயின் தேசததுக்குத் திரும்பிவந்தார்கள். ஆனால் கோலம்பஸ் வியாதியால் வருந்தி மிக்க பலஹீனமாய் நடக்ககூட சக்தியற்றிருந்தார். ஆகையால் கப்பலிலிருந்து இவரை வீட்டிற்கு ஒரு தூளியில் வைத்து எடுத்துக்கொண்டு போனார்கள். இச்சமயத்தில் இவரிடத்தில்ப்ரியமாயிருந்தராணி இஸபல்லா இறந்துவிட்டாள்என்றசங்கதி இவர்காதில் பட்டவுடன் இவருக்குண்டான துக்கத்திற் களவில்லை. இவருக்கு வீடுமில்லை, ஆஸ்தியுமில்லை, சிநேகிதர்களுமில்லை, பந்துக்களுமில்லை. விசனமும் வியாதியும் இவரைக் கொன்றது. இவர் மரணமடைந்தார். இவர் பிள்ளைகள் இவரை 1506௵ மேமீ 20௳ அடக்கம் செய்தார்கள்.

கொலம்பஸ் மரணமடைந்தபின் அவர் கண்டுபிடித்த தேசத்திற்கு அமரிக்கா என்று பெயரிடப்பட்டது. எப்படியெனில் அமரிகோ வெஸ்புகி என்ற ஒருவன் கொலம்பஸ் கண்டுபிடித்த தேசத்தைப் போய்ப் பார்த்து பரிசோதித்து அது இந்தியாவின் கரையல்லவென்று தெரிந்துகொண்டான். இது ஒரு புதிய உலகம் (New World) என்று சொன்னான். வெகுகாலம் இது "நியூ வொர்ல்ட்" என்று சொல்லப்பட்டு வந்தது. பின்பு இதற்கு அமேரிக்கா வென்று பெயரிடப்பட்டது. ஏனெனில் அமெரிகோ பரிசோதனை செய்து இது இந்தியாவின் கரையல்லவென்று சொன்னான் அல்லவா? அமெரிக்கா கொலம்பஸால் 1492-ம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. 1506-ம் வருஷம் வரையில் இதற்கு இந்தப் பெயர் வரவில்லை.

அடுத்த தடவை வாஸ்கோடிகாமா செய்த ப்ரயாணத்தைப்பற்றி எழுதுவோம்.

பத்திராதிபர்.

---

## ஹாஸ்யத் துணுக்குகள்.

ஒரு கனவான் ஒரு கோவிலுக்குள் நுழைந்துசென்றார். பின்னால் கோவில் காரியஸ்தனொருவன் அவரைக் கூப்பிட்டு அவர் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு சிறு நாயைக்காட்டி "நாய்களை உள்ளேயழைத்து வரக்கூடாது" என்றான்.



கனவான்:—"நாய் என்னுடையதல்ல"

காரியஸ்தன்:—"உம்மைப்பின்னால் தொடர்ந்து வருகிறதே!"

கனவான்:—"ஆனால் நீயும் என்னைத்தொடர்ந்து தானே வருகிறாய்!

காரியஸ்தன் வெட்கி முணு முணுத்துக்கொண்டே சென்றான்.

* * * * *

உபாத்தியாயர்:—ஏண்டா கலியாணம் என்றால் என்ன?

பையன்:—ஐயா! அது ஒரு ஜயிலே. தினம் விளக்குமாற்றுப் பூசை கிடைக்கும். பாவம்! சில பேர் ரொம்ப நாள் அந்த ஜயிலிலே கிடக்கா! சில பேர் சீக்கிரம் மோக்ஷத்திற்குப் போயிடறா!

உபாத்தி:—அது என்னடாது! எனக்குத் தெரியல்லையே.

பையன்:—ஏன்! சார்! அடுத்தாத்து குப்பனுக்குக்கிடைக்கும் உபசாரம் கொஞ்சமில்லை, கலியாணமானது முதல் அவனுக்கு கோமய ஸ்நானமும் சாமரப்பூசையுந்தான்.

* * * * *

ஒரு விகடகவி மிகவும் வியாதியாய்க்கிடந்தான். அவனைப்பார்த்துப் போக அவன் சிநேகனொருவன் வந்து "அப்பா! என்ன செய்வது? தெய்வச்செயல்! நீ ஆகாரம் சாப்பிட்டாயோ?" என, விகடன் "எனக்கு சாதம் கஞ்சி இறங்குவதில்லை" என்று சொன்னான். உடனே சிநேகிதன் "உனக்குத்தான் அது இறங்கல்லை, கொஞ்சம் சுயப்பாலையாவது குடி" என்று தன் வஸ்திரத்தில் பாலை ஊற்றி அவன் வாயில் பிழிந்தான். அப்பொழுதும் விகடனுக்கு அவன் வேடிக்கையை விடாமல் "சிநேகா! உன் வஸ்திரத்திலிருக்கும் அழுக்கினால் பால் வஸ்திரத்தில் ஒட்டவில்லை" என்று அவனைப் பரிகசித்தான்.

* * * * *

ஒருவன் மிகவும் அசௌக்கியமாயிருந்தபடியால், வைத்தியர் அவனைப்பார்த்து "நீ குடியாமலிருப்பதே உனக்கு சௌக்கியத்தைக் கொடுக்கும். அப்பொழுது தான் உனது நாட்களுந் நேரமும் ஜாஸ்தியாகும்" என்று சொல்லிவிட்டுச்சென்றார். இரண்டு நாள் கழித்து வந்து "இப்பொழுது எப்படி? நான் சொன்னபடி செய்கிறாயா?" என, அவன் "ஆம்! நீர் சொன்னது சரியே! சென்ற இரண்டு நாட்களும் எனக்கு இரண்டு யுகங்களாயிருந்தன."

* * * * *

ஒரு சிறுவன் ரொட்டிக்கடைக்குச்சென்று ஒரு அரையணா ரொட்டியை வாங்கிக்கொண்டு விலையை விசாரிக்க,

கடை:—ஆறு தம்படி! தம்பி என்றான்.

பை:—ரொம்ப சின்னதாயிருக்கே!

கடை:—அதுக்கென்ன உனக்குத் தூக்கிக்கொண்டுபோக அதிக சிரமமில்லை.

பையன் உடனே மூன்று தம்பிடியை மேஜைமேல் வைத்துவிட்டுத் திரும்பினான். உடனே கடைக்காரன் கூப்பிட்டு "காசு குறைச்சலாயிருக்கே!"

பைய:—"அதுக்கென்ன உனக்கு எண்ணிவைக்க அதிக சிரமமில்லை."

* * * * *

ஒரு திருட்டுலோபி ஒரு பையனைப்பார்த்து ஏண்டா உன்னை எல்லாரும் மட்டி என்கிறார்களே! உனக்கு என்னதெரியும், என்ன தெரியாது சொல்லு பார்ப்போம்!"

பையன்:—"எனக்கு நீர் கட்டிக்கொண்டிருக்கும் வேஷ்டி ரொம்ப விலை உயர்ந்தது என்று தெரியும்.

திருடன்:—தேவலையே! ஹேஹ! உனக்கு என்ன தெரியாது!

பையன்:—ஆனால் அதை யார் பணம் கொடுத்துவாங்கினா என்கிறது தான் தெரியல்லை.

வி. என். ராஜ்.

---

## ரஸிகை.

### ஓர் இனிய நாடகம்.

(84-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அங்கம் 1.

#### காட்சி 4.

[வனத்தில், கையில் பளபளவென மின்னும் கத்தியுடன் என்னவோ சிந்தனையிலாழ்ந்து ஸ்தம்பமாய் நிற்கின்றான் ருக்மணிரமணன். ஸத்யலோசனன் ஜலம் நிறைந்த கூஜாவுடன் அருகே வந்து வினவுகின்றான்:]

ஸத்யலோசனன்.—அண்ணா! என்ன சிந்திக்கின்றாய்? உன் முகமெல்லாம் வியர்க்கிறதே, உறையிலிருந்த கத்தியையும் உருவியிருக்கிறாயே. நான் போனவுடன் என்ன சம்பவித்தது?

ருக்மணிரமணன்.—(சற்றுக் குழப்பத்துடன்) ஒன்றுமில்லை லோசனா! பெரிய சம்பவம் ஒன்றுமில்லை.

ஸத்ய.—உனக்கு எதுதான் பெரிய சம்பவமாய்த் தோன்றும்! எப்படிப்பட்ட சம்பவம் உனக்குத் திரணம் போலும், சரி. இதைப்பற்றி அப்புறம் பேசுவோம், நீ இந்த ஜலத்தை அருந்து முதலில், (கூஜாவைக் கொடுக்கின்றான்.)

ருக்.—கூஜாவை வாங்கிக் கீழேவைக்கின்றான்) எனக்கு இப்பொழுது ஜலம் வேண்டியதில்லை, என் தாகம் தணிந்துவிட்டது.

ஸத்ய.—(வியப்புடன்) தாகம் தணிந்து விட்டதா! யாரண்ணா இந்த வனத்தில் உனக்கு ஜலம் கொடுத்தார்கள்?

ருக்.—யார் கொடுத்தார்கள்! இந்தக் கத்திதான் கொடுத்ததென்னலாம், அல்லது நமது தேவதை கொடுத்தாளென்னலாம்.

ஸத்ய.—என்ன அண்ணா! நீ சொல்வது ஒன்றும் எனக்கு அர்த்தமாகவில்லை

ருக்.—அதோ தெரிகிறது பார் வேலி, (வேலியைச் சுட்டிக்காட்டுகிறான்.)



ஸத்ய.—ஆமாம், தெரிகிறது.

ருக்.—அந்த வேலிக்கப்பால் என்ன இருக்கிறது?

ஸத்ய.—ஒரு தடாகமிருக்கிறதென்று விறகு வெட்டி சொன்னான், ஞாபகமிருக்
கிறது, அந்தத் தடாகத்திலா தாகசாந்தி செய்துகொண்டாய்?

ருக்.—அந்தத் தடாகத்திலல்ல.

ஸத்ய.—பின்பு வேறெங்கே?

(ருக்மணிரமணன் மௌனமாய்ப் புன்னகை புரிகின்றான்.)

ஸத்ய.—விஷயமென்ன அண்ணா? சொல்லு, ஏன் சிரிக்கிறாய்?

ருக்.—எல்லா விஷயங்களையும் சொல்லுகிறேன், கேள். நீ ஜலத்திற்குப் போன
பின்பு சற்று நேரம் இங்கே நின்றேன், தாகம் என்னால் சகிக்கக்கூடவில்லை.
வறட்சியினால் நாவு இற்று விழுந்துவிடும்போலிருந்தது. என்சரீரமே உயிரற்று
விழுந்துவிடும் போலிருந்தது. ஆகையால் பைத்தியங்கொண்டவனைப்போல்
நான் இன்னது செய்கிறேனென்பதையும் அறியாமல் வேலியருகே ஓடி இங்
தக்கத்தியால் வேலியைப்பிரித்துக்கொண்டு அப்பாலிருக்கும் தடாகத்தை அணு
கினேன். அணுகியதும் என்னென்னவோ என் சிந்தத்திற் சுழன்றன. ஓர்வித
மயக்கமடைந்தேன். "லோசனா" என்று கூவினேன், மூர்ச்சித்து விழுந்துவிட்
டேன்.

ஸத்ய.—நீ கொடிய தாக அவஸ்தையிலிருக்கும் பொழுது நான் உன்னைப்பிரிந்ததே
பெருந்தவறு. ஆனால் நமது தாய் சாரதாம்பாள் எப்பொழுதும் நமக்குத் துணை
நிற்பாள். பின்பு எப்படியண்ணா நீ மூர்ச்சை தெளிந்தெழுந்தாய்?

ருக்.—நான் பிரக்ஞையடைந்து கண் விழித்துப்பார்த்தபொழுது என் முகமெல்லாம்
ஜலமாயிருப்பதை உணர்ந்தேன். அருகே இரண்டு யௌவன ஸ்திரீகளைக்
கண்டேன். ஒருத்தி தன் நெற்றிமேற் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்
தாள். நான் கண்விழித்துப் பார்த்தவுடனே எழுந்து நின்றாள். மற்றொருத்தி
நின்றுகொண்டேதானிருந்தாள். நான் எழுந்துட்கார்ந்து "ஜலம்! ஜலம்!"
என்றேன். சிறிது தூரத்தில் ஒரு பன்னகசாலைப்போல் தோன்றிய சற்று
உன்னதமான இடத்திற்கு ஒரு ஸ்திரீ ஓடி அங்கிருந்து ஒரு பொற்பாத்திரத்
தில் பால் கொணர்ந்து கொடுத்தாள். அப்பாலைப் பருகினேன். என் தாகமும்
களைப்பும் அடங்கின. உடனே எழுந்து அந்தப் புண்ணியவதிகளுக்கு வந்தன
மாகச் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு விரைவாய் வேலியைக்கடந்து வந்து
விட்டேன்.

ஸத்ய.—அண்ணா! அந்த ஸ்திரீகளிருவரும் அரசபுத்திரிகளாகத்தானே யிருக்க
வேண்டும்?

ருக்.—ஆமாம் அவர்கள் ராஜகன்னிகைகள் தான். நான் வேலிக்கப்பால் வந்தவுட
னே, சுள்ளிபொறுக்கும் ஒரு ஏழைக்கிழவியைக் கண்டேன். அவள் அவ்விரு
கன்னிகைகளும் ரவிகை, வசீகரி என்ற ராஜப்புத்திரிகள் தானென்று சொன்
னதுமன்றி ரவிகை இன்னவள் வசீகரி இன்னவளெனக் குறிப்பிட்டுஞ் சொ
ன்னாள்.

ஸத்ய.—நீ ராஜபுத்திரிகளின் பூஞ்சோலைக்குள் போனதை அரசனுக் கறிவிப்பதாக
அந்தக் கிழவி சொல்ல வில்லையா?

ருக்.—இல்லை அவள்நல்லவள். அவளைக்கண்டதும், நான் வேட்டையாடி ஒருமானை
தொடர்ந்து வந்ததையும், தாகத்தின் உக்கிரகத்தால் வேலியைப் பிரித்துச்சோ

லைக்குள் போய் தாகசாந்தி செய்து கொண்டதையும் அவளுக்குச்சொன்னேன். அவள் "நீங்கள் நல்லவர்களாயிருக்கிறீர்கள். இரண்டாம் பெயருக்குத் தெரியாமல் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள்" என்று எனக்கு மதிசொல்லிவிட்டுப் போய்விட்டாள். நானும் வேலியை முன்போல ஒழுங்காய் அமைத்துவிட்டு வந்து விட்டேன்.

ஸத்ய.—அண்ணா! நமது அம்மணிதான் இன்று உன்னைக்காப்பாற்றினாள். நீ பூஞ்சோலைக்குள் போன விஷயம் நமது அரசருக்குத் தெரிந்ததென்றால்—

ருக்.—தெரிந்தால் என்ன பிரமாதம் விளைந்துவிடும்?

ஸத்ய.—என்ன பிரமாதமா! நமது தேசத்துச் சட்டங்களை யெல்லாம் நீ நன்றாய்க் கற்றிருக்கிறாயே. ராஜஸ்திரீகளின் அந்தப்புரத்தில் ஒரு அந்நியபுருஷன் போவது ஒரு அற்ப குற்ற மென்று நினைக்கிறாய்?

ருக்.—லோசனா! நமது நாட்டுச் சட்டங்களெல்லாம் நியாயத்தை அநுசரித்தே ஏற்பட்டிருக்கின்றன. அநியாயமாய் ஒரு அற்பஜீவனையும் துன்புறுத்த அந்தச் சட்டங்களில் ஒரு அக்ஷரங்கூட இடங்கொடாது. நான் பூஞ்சோலைக்குப் போனதற்காகத் தண்டிக்கப்படுவது நியாய மென்று உனக்குத்தோன்றுகிறதோ?

ஸத்ய.—எனக்கு நியாயமாகத்தோன்றவில்லை.

ருக்.—அவ்வாறே தான், நான் பூஞ்சோலைக்குள் போனதற்காக என்னைத் தண்டிப்பதற்கு சட்டங்களில் யாதொரு ஆதாரமுமில்லை. அந்தப்புரத்தைப் பற்றிய சட்டங்களைக் கவனித்தால், "சில புருஷர்களைத் தவிர மற்ற புருஷர்களது பார்வைக்கு ஸ்திரீகள் மறைவாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிற இடங்களாகிய அந்தப்புரங்களில் வசிக்கும் ஸ்திரீகளைப் பார்க்கவேண்டு மென்றாவது, அவர்களோடு விவாக சம்பந்தமாவது ஏற்படுத்த வேண்டு மென்றாவது மனத்தால் எண்ணுவதும், அவ்வெண்ணம் நிறைவேற வேண்டு மென்ற கருத்தோடு அதற்காக எத்தனிப்பதும் குற்றம்" என்றுதான் அந்தச் சட்டங்கள் சொல்லுகின்றன. நான் அவ்வித எண்ணம் எண்ணவுமில்லை. அவ்வித எண்ணம் நிறைவேற வேண்டுமென்ற கருத்தோடு யாதொரு யத்தனம் புரியவு மில்லை. என் தாகத்தை ஒழிக்கும் ஒரே கருத்தோடுதான் அரச புத்திரிகளின் அந்தப் புரத்திற்குப் போனேன். அப்படிப் போனது குற்றமாகாது. அது குற்றமென்று நமது சட்டங்கள் சொல்லா. அது குற்றமென்று நமது அரசரும் எண்ணார். அது குற்றமென்று நமதுநாட்டிலுள்ள எந்தநியாயாதிபதியும் எண்ணார். இவ்வளவு சமீபத்தில் அரச புத்திரிகளின் பூஞ்சோலைத் தடாகமிருக்க நான் தாக அவஸ்தையினால் இந்த இடத்தில் இறந்தேனென்று நமதுஅரசர் அறிந்தால் அப்பொழுது தான் அவர்மிகவும் வருந்துவார். உண்மையில் அவரது தர்ம அரசாட்சிக்கு அநுக்கிரகிக்கும் தேவதை தான் இங்கே அவலமாய்ச்சாகாதிருக்கும் பொருட்டு, அந்தப் பூஞ்சோலைக்குள் போகும்படி என்னைத் தூண்டினாள் என்று நம்புகிறேன். நமது செங்கோல் மன்னரது புத்திரிகளும் தங்கள் தந்தையைப்போலவே சிறந்த காருண்யவதிகளென்று எண்ணுகிறேன். தங்கள் அந்தப்புரத்தில் ஒரு அந்நிய புருஷன் மூர்ச்சித்து விழுந்தானென்றால் அந்தப்புர ஸ்திரீகளில் அநேகர் உடனே அஞ்சி ஓடிவிடுவார்கள். ஆனால் நமது ராஜகன்னிகைகளோ மூர்ச்சித்து வீழ்ந்த என்னைக் காப்பாற்ற வேண்டுமென்ற பரோபகார நோக்கத்துடன் என்னருகே வந்து எனக்கு உயிர் கொடுத்தார்கள். அவர்கள் உண்மையில் அந்தப்புரச்சட்டங்களை நன்றாய் அறிந்தவர்களாகவேயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அவர்கள் செய்த



சுகிர்த காரியத்தைப்பற்றி நமது மன்னர் கேள்வியுற்றால், அத்தகைய உத்தம புத்திரிகளைப் புகழ்ந்து ஆநந்தபரவசந்தானடைவார்.

ஸத்ய.—அண்ணா! காருண்ய வள்ளலாகிய நமது அரசரையும் நமது அரசாட்சியையும் பற்றி நீ நன்கறிந்திருக்கிறாய். அவரது அரசாக்ஷியில் நீ ஒரு உன்னத பதவியை வகித்தற்குரியவன். அவ்வாறு வகிக்க நமது தேவி சீக்கிரம் கடாக்ஷிக்க வேண்டும்.

ருக்.—நாம் இப்படிப் பேசிக்கொண்டேயிருந்தால் அர்த்தராத்திரி வரையில் பேசிக்கொண்டேயிருப்போம். நாம் வனத்தில் எங்கெங்கேயோ சுற்றிக்கடைசியாய் நமது அரசர் வசிக்கும் நகரத்திற்கே வந்துவிட்டோம். இனி நமதூருக்குப் போகலாம். நமது மாதா பிதாக்கள் நம்மை எதிர்பார்த்து வருந்திக்கொண்டிருப்பார்கள். விரைவாய்ப்போவோம் வா.

(இருவரும் போகிறார்கள்.)

எஸ். ஏ. சுப்பராயன்.

---

# பத்திராதிபர் குறிப்பு.

யுனைடெட் ஸ்டேட்ஸில் 5000 மதவிஷயமாக பிரசங்கம் செய்யும் ஸ்திரீகளிருக்கின்றார்களாம். ரெவரெண்டு ஸாரா A டிக்ஸன் என்ற மாது இங்கிலாந்தில் பிரசங்கமாரி பொழிந்துவருகிறாளாம்.

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் அணிந்திருந்த எல்லா விலையுயர்ந்த உடுப்புகளும் லண்டன் மியூசியத்திலிருக்கின்றதாம். அலக்சாண்ட்ரா ராணியார் பட்டாபிஷேக காலத்தில் தாம் அணிந்திருந்த முடியும் மியூசியத்திலிருக்கிறது.

பற்பலதேசங்களில் கலியாணத்தில் நடக்கும் சில விஷயங்கள் அதிசயமாயிருக்கின்றன. ஒரு ஜாதியாருக்கு மோதிரம் அவசியம் தேவை, ஸ்பெயினில், கலியாணப்பிள்ளை கலியாணப்பெண்ணுக்கு ஒரு புஷ்பத்தைக் கொடுக்கவேண்டும். அவள் அதை வாங்கிக்கொண்டு தனது வலது காதின்மேல் வைத்துக்கொள்வதாக சபதம் செய்யவேண்டும். அவ்விதம் செய்தவுடன் அதை வலதுகாதில் வைத்துக்கொண்டால் கலியாணம் முடிந்துவிடுமாம்.

17 அங்குலம் சுற்றளவுள்ள ஆப்பில் இங்கிலாந்திலே 16 கினிக்கு விலை போனதாம்.

(Neppur) நிப்பர் என்ற விடத்தில் வெட்டிப்பார்த்தபொழுது ஒரு சிறு பீடம் கண்டெடுக்கப் பட்டதாம். அதில் செதுக்கப்பட்ட எழுத்துக்களை டாக்டர் ஆர்னோ போவல் வாசித்து பார்த்து கிறிஸ்து பிறப்பதற்கு 7,000 வருஷங்களுக்கு முன் உலக சிருஷ்டி உண்டாயிருக்கலாமென்று நம்புகிறாராம். இது இலாது நம்பிக்கையே.

விவாக காலத்தில் ஸஸெக்ஸில் ஒரு ஸ்திரீ தன் கணவனிடமிருந்து பெற்ற மோதிரத்தை தன் கால் விரல்களிலொன்றில் அணிந்திருக்கி

றுளாம். எனெனில் இவளுக்கு கைகளில்லையாம். இவளது இடது காலால் நேர்த்தியாய் எழுதுகிறுளாம். இது அதிசயமே!

நமது சக்ரவர்த்தியும் மேரி ராணியாரும் ஜூலைமாதம் ஸகாட்லண்டுக்குப் போய் வருவார்களாம்.

பம்பாய் பார்ஸி பிள்ளைகளுக்கு பம்பாயில் ஒரு பாடசாலை ஸ்தாபிக்கப்படுமாம்.

கொலாபாவில் பருத்தி கிடங்கில் நெருப்பு பிடித்தமையால் 125 லக்ஷம் ரூ. நஷ்டமாம்.

தென் துருவத்துக்கு 1915ம் வருஷம் வெயில் காலத்தில் புறப்பட்டு போவார்களாம். இதற்கு செலவு க்ரேட் ப்ரிடன் கொடுத்து உதவியிருக்கிறது நமது நேயர்களுக்குத் தெரியும். ஜெர்மனியும் பணம் கொடுத்து உதவி யிருக்கிறதாம்.

1915ம் வருஷம் இந்திய பாஷைகளைக் கற்றுக் கொள்ளுபதற்காக ஒரு பாடசாலை இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்படும். அதற்கு போஷகராகயிருக்க நமது 5 வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தி சம்மதித்து விட்டதைக் கேட்க யாவரும் சந்தோஷமடைவார்கள்.

---

## சமாசாரக் குறிப்பு.

லேடி ஹார்டிஞ்சின் நன்கோடை:—இதற்கு முன் டெல்லியில் அரசாண்ட ராஜவம்சத்தாரின் படிப்புக்காக டெல்லி சீப் கமிஷனரிடம் 1000 ரூபாய் லேடி ஹார்டிஞ்ச் ஒப்புவித்திருக்கிறுர்.

ஸ்ரீ உத்திராதி மடத்து ஸ்வாமிகள்:—திருவல்லிக்கேணியில் ஸ்ரீ உத்திராதி மடத்து ஸ்வாமிகள் சிறிதுகாலம் தங்கியிருந்தார். அவருடைய சிஷ்யர்கள் அவருக்கு தினமும் பிட்சை செய்து வைத்தார்கள்.

இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகளின் அக்கிரமம்:—ஸ்திரீ சுதந்தரவாதிகளின் தலைவர்களில் ஒருவராகிய மிஸ்ஸில்வியா பாங்கர்ஸ்ட் என்பவர், லண்டன் டிரபால்சர் சதுக்கத்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகள் நடத்துவதாயிருந்த கண்டன கூட்டமொன்றுக்குப் போகும்பொருட்டு மோட்டாரில் போய்க்கொண்டிருக்கையில் போலீஸாரால் கண்டுகொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட விஷயம், கூட்டம் கூடியிருந்த ஸ்திரீகளுக்குத் தெரிந்தவுடன் பெரிய தடிகளை எடுத்துக்கொண்டு இவ்விஷயத்தைக் குறித்து டௌனிங் தெருவில் கூட்டங்கூடி ஆக்ஷேபிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அக்கூட்டத்தார் போலீஸாரால் எதிர்க்கப்பட்டு கடைசியாய் கலைக்கப்பட்டுப் போனுர்கள்.

பேசும் நாய்கள்:—ஜர்மெனியிலுள்ள ஒரு ஸ்திரீயினிடம் ஒரு நாயிருக்கிறது. அதற்கு வாசிக்கவும் எழுதவும் எழுத்துக்கூட்டவும் முடியுமாம். அதன் கால் பாதங்களால் தட்டிக்காட்டி எண்ணவுங்கூடுமாம். அந்த நாயின்பெயர் ரால்ப் என்று சொல்லப்படுகிறது. அந்த நாயை மூன்று ப்ரபல ப்ரோபஸர்கள் பரீக்ஷித்துப்பார்த்து அதற்கு மேற்சொன்ன குணங்கள் இருப்பது வாஸ்தவமென்று சொல்லுகிறுர்கள். லார்ட் ஆவ்பரி என்பவர் தம்மிடமுள்ள ஒருநாய்க்கு 'ஜலம்' 'வெளியேபோ' என்பவை முதலான சிலவார்த்தைகளை அட்டைகளில் எழுதிக்கற்றுக் கொடுத்திருந்தார். நாய்க்கு குடிக்க ஜலம்வேண்டியிருந்தால் அது ஜலம் என்றுஎழுதப்பட்டிருந்த கார்டைக் கொண்டுவந்து கொடுக்கும். வெளியில் போகவேண்டுமானல் வெளியில்போ என்று எழுதியிருந்த கார்டையும் இப்படியே மற்ற கார்டுகளையும் கொண்டு வந்து காட்டும்.

ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கில் ஒரு பேசும் நாயிருக்கிறது. அதற்கு 75,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியும் நாயின் சொந்தக்காரர் அதை விற்க ஸம்மதப்படவில்லையாம். அதைப்பல மிருகசாஸ்திரிகள் பரீக்ஷித்துப் பார்த்ததில் வாஸ்தவத்தில் அதற்கு அபாரசக்தி யிருப்பதாகத் தெரியவந்தது. அது அநேக ஜெர்மன்வார்த்தைகளை தெளிவாய் உச்சரிக்குமாம்.




ரசாயன அரண்மனையில் செய்த ஹரிதாசருடைய

**கைகண்ட மருந்துகள்.**

ஹரிதாசர் காலராதுளி.

வாந்திபேதிக்கும், சகல பேதி, வயிற்றுவலி அஜீரண சம்பந்தமான வியாதிகளுக்கும் கைகண்ட உப்பு துளிமருந்து. ஒரு காலரா கேஸாவது மரணம் அடையவில்லை. புட்டி 1-க்கு விலை ரூ 1-4-0.

ஹரிதாசர் வெள்ளி யெண்ணை.

சகலவிதமான கடோமான மேக வியாதிகளும், கண்டமாலை ஆருதாணங்கள், அசுத்தரத்தம், மேக நீர் படை, கட்டி, நீரழிவு, இவைகளெல்லாம் அடியோடே நீங்கும். அசல் வெள்ளியிலும், மூலிகைகளிலும் செய்தது. ஒரு முறைக்கு மருந்து ரூ 2-8-0 23-முறைகளில் மேற்கண்ட வியாதிகளும் நீங்கும்.

ஹெர்பல் பெயின் பாம்:—மிகவும் கைகண்டது. தலைவலி, கால்வலி, மார்வலி, பாரிசவாய்வு, திமிர், இருமல் நீங்கும். விலை 10-அணு.

தேக புஷ்டி அல்வா:—1பவுண்ட் ரூ 3.

ஸ்நான தைலங்கள்:—புட்டி 1-க்கு ரூ 1.

பிரமேகத்திற்கு பஸ்பம்:—ரூ. 1-8. எண்ணை ரூ. 2.

குத்திருமலுக்கும் சுரக்கட்டிக்கும் காக்காய் வலிக்கும் காசம், க்ஷயம், சீதபேதிக்கும் வாரமருந்து ரூ 2.

ஹரிதாசர் அமிர்த பில்லை:—(5-வீதம்) கர்ப்பஸ்திரீகளுக்குண்டாகும் சகலமான வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது. விபரம் எழுதி பில்லை பெரவும். 30-பில்லை பாட்டில் விலை ரூ 1.

சகல விதமான வியாதிகளுக்கும் மருந்து தயார்; எழுதிப் பெற்றுக் கொள்ளலாம், தெளிவாய் எழுதவும்.

மானேஜர்,
ரசாயன அரண்மனை,
39. செம்புதாஸ் தெரு, மதராஸ்.

## “பர்மீஸ் பியூடி ஆயில்.” (Regd.)

“ பெண்களின் அன்பு.”




எங்கள் கூந்தல் தைலத்தின் சுத்தத்தை அறிவிப்பதுடன் இது தற்கால மேல்மாகாண நாகரீகத்தின்படி கூந்தலை வளரச்செய்து முக விலாசத்தை தரக்கூடியதும், மனதிற்கு சந்தோஷத்தை கொடுக்கக்கூடியதும் நீடித்த மனமுள்ளதுமான அநேக வாசனைகளும் சேர்த்து செய்யப்பட்டுள்ளது. இதை யாவரும் உபயோகிக்கலாம். இது ரோமங்களின் உதிரலைத் தவிர்த்து அவைகளை வளரச் செய்வதுடன் வழுக்கு தலையில் மயிரை வளரச் செய்யக்கூடியதும் சிரசிற்கு குளிர்ச்சியையும், அதனவயவங்களுக்கு வலிவை தரக்கூடியதுமான அநேக உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்து செய்யப்பட்டமையால் இதை சகல ஜாதியாரும் சமமாய் உபயோகிக்கலாம். கடைகளில் விற்பனை யாகிவரும் அனேகவகை தைலங்களிலும் சிறந்தது. இது அழகான ஓர் பெட்டியில் முகம் பார்க்கும் கண்ணாடியும் சீப்பும் சேர்த்துவைக்கப்பட்டுள்ளது. இதை ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்.

கிரயம் சீசா 1-க்கு ரூ. 1 0 0. } வி. பி. பிரத்தியேகம்.
3 3 0 0. } வி. பி. கிரயம் கிடையாது.

## “ ஆடோ பாரடைஸ்.” (Regd.)

சுகந்தங்களுக்கெல்லாம் இராணியும்! இராணிகளுக்கேற்ற சுகந்தமும்!!




மிகவும் மாதுரியமானதும், மனதை ரமியிக்கக்கூடியதும், சாராய கலப்பில்லாமல் உண்மையான உயர்ந்த ஜாதி புஷ்பங்களால் செய்யப்பட்டதுமான இதை ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்.

இதனுடைய சில துளிகளை உங்கள் கைத்துவாலையில் உபயோகிக்க சுவர்க்க லோகத்தின் உன்னத நந்தவனங்களின் மத்தியில் நின்றதுபோலிருக்கும்.

மற்றைய எல்லாவித வாஸனைகளையும் வெற்றி கொள்ளக் கூடியது.

போலிச் சரக்குகளைப் பார்த்து எங்களுடைய மேலான “ ஆடோ பாரடைஸ் ” (Rig) என்னும் உயர்ந்த சரக்குகளை வாங்கத் தவராதேயுங்கள்.

½-டிராம் சீசா 1-க்கு ரூ. 0 8 0. }
1 ” ” 0 12 0. } வி. பி. பிரத்தியேகம்.
½ அவுன்ஸ் ” 2 0 0. }

ராமானுஜ தாஸ் நாராயண தாஸ் அண்டு கம்பெனி,
49, சைனு பஜார் ரோட்,
மதராஸ்.

PREPARED BY THE FLORAL PERFUMERY CO.,
*Lamington Road, Bombay.*



# மாதர் மனோரஞ்சினி.

“ எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் ”—ஔவையார்.

| Vol XVI] புத்தகம் கசு. | Madras May, 1914. சென்னை: மேமீ 1914ஞூ. | No. 5 இலக்கம் 5 |
| --- | --- | --- |


## வாயுவில் உள்ள நீர் ஆவியின் அளவை நிர்ணயிக்கும் கருவி.

நமது ஆடைகளை உலரப்போட்டால் சில நாட்களில் அவை சீக்கிரம் உலர்வதையும் சில சமயங்களில் தாமதமாய் உலர்வதையும் கண்டு இருக்கிறோம். எக்காலங்களில் ஈரவேஷ்டிகள் சீக்கிரம் உலர்கின்றன? எந்நாட்களில் தாமதமாகின்றது? மழைகாலத்திலும் ஆகாயத்தில் மேக சஞ்சாரம் இருக்கும் சமயத்திலும் ஆடைகள் சீக்கிரம் உலர்வதில்லை. ஆகாயம் நிர்மலமாய் இருக்கும் நாட்களில் அவை உலர்வது வெகு விரைவு. ஏன் அப்படி? இதற்கு பதிலுரைப்பதற்கு முன் உலர்வதென்றால் என்னவென்று தெளிவாய் விசாரிக்கவேண்டும். உலருமுன் வேஷ்டியெல்லாம் நனைந்து இருக்கின்றது. ஆடையின் ஒவ்வொரு துவாரத்திலும் நீர் தங்கியிருக்கின்றது. உலர்ந்த பிறகு நீர் எங்கே போகின்றது? ஆவியாக மாறிற்று என்பீர். ஆவி எங்கே? கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் வாயுவிலேயே கலந்து இருக்கின்றது. எவ்வண்ணம் கண்டு கொள்வது? ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கொஞ்சம் பனிக்கட்டியைப் போட்டு மேஜையின் மேல் வைத்தால் பாத்திரத்தின் வெளிப்புறமெல்லாம் சிறிது சிறிது ஜலம் நிற்கக்காணலாம். இந்த ஜலம் எங்கிருந்து வந்து இருக்கக்கூடும்? பனிக்கட்டியிலிருந்து பாத்திரத்தின் வழியாய் வெளிப்புறப்பட்டிருக்குமோ என்றால் கண்ணாடி வழியாய் ஜலம்போக முடியாதே. அந்த ஜலம் வாயுவிலிருந்தே வந்து இருக்கவேண்டும். பாத்திரத்தில் பனிக்கட்டியைப்போட்டால் பாத்திரம் குளிருவதால் பாத்திரத்தைச் சுற்றிலுமுள்ள வாயுவும் குளிர்கின்றது. வாயு குளிரவே அதில் நின்ற நீராவியும் குளிர்ந்து ஜலரூபமாய் மாறுகின்றது. ஆகவே வாயுவில் எப்பொழுதும் நீர் ஆவி இருந்துகொண்டேயிருக்கின்றது. அப்படியானால் சில நாள் வேஷ்டி சீக்கிரமாயும் சிலநாள் தாமதமாயும் உலர்வதற்குக் காரணம்யாது? வாயுவில் உள்ள நீராவி பிரதிதினமும் ஒரே அளவாய் இருப்பதில்லை. சில நாள்களில் மிகக்குறைவாய் இருக்கின்றது. சில நாள்களில் அபரிமிதமாயிருக்கும். பின்கூறியவாறு அபரிமிதமாய் நீர் ஆவி ஆகாயத்தில் நிறைந்து இருப்பின் அப்பொழுது மேகங்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன; மழை

பொழியும்; தொட்டவிட மெல்லாம் ஈரமாயும் நனைந்தும் இருக்கும். அத்தினங்களிலேயே நமது ஆடைகள் சீக்கிரம் உலர்வதில்லை. ஆவி குறைவாய் இருக்கும் நாட்களிலே வானத்தில் மேகமின்றி கதிரவன் கம்பீரமாய்ப் பிரகாசிக்க எப்புறமும் உலர்ந்து ரம்மியமாய் இருக்கும். அத்தினத்தில் வாயுபகவானுக்கு தாகம் அதிகம், நீர் ஆவியை வெகு விரைவில் உட்கொள்ளுகின்றது.

ஆகவேவேஷ்டிகள் மாத்திரமல்ல; ஈரமானவஸ்துக்கள்எல்லாம் உலர்ந்துபோகின்றன. நமது மூக்குக்கூட அத்தினங்களில் வரண்டு பசையற்றுப்போகின்றன. இவ்வனுபோகங்களை முன்னிட்டு ஒருகருவி செய்து இருக்கிறார்கள். நாமும் ஒன்று எளிதாய்ச்செய்துவைத்துக் கொள்ளலாம். அதற்குமுக்கியமாய் வேண்டியவை இரண்டு தெர்மாமீடர்கள். * படத்தைப் பாருங்கள். இரண்டு தெர்மா மீடர்களுக்குள் ஒன்றைச் சும்மா தொங்க விட்டிருக்கின்றது. மற்றொன்றைச் சுற்றி ஒரு மஸ்லின் துணி கட்டியிருக்கின்றது. அத்துணியைச் சுற்றிலும் நீளமாய்த் தொங்குவது, நன்றாய்க் கழுவின பருத்தி நூல். அந்நூல் கீழேயிருக்கும் பாத்திரத்தில் உள்ள ஜலத்தில் தோய்ந்துகிடக்கின்றது. கிண்ணத்தில் ஜலம் இருப்பதாலும் நூல் ஜலத்தில் தோய்ந்து இருப்பதாலும் ஜலம் நூலின் வழியாய் மேலேறி மஸ்லினை நனைக்குமல்லவா? மஸ்லின் நனைய நனைய, மஸ்லினிலிருந்து நீராவிபோய்க்கொண்டே இருக்கும். ஆகையால் அந்தத் தெர்மாமீடர் குறைந்த டெம்பரேசரைக் காட்டுகின்றது. வாயுவில் நீர் ஆவிகுறைவாய் இருக்கும் நாளில் ஜலம் வெகு விரைவாய் ஆவியாகவே ஈரமான தெர்மாமீடர் அதிகமாய்க் கீழ் இறங்கி நிற்கும். வாயுவில் ஆவி நிரம்பியிருப்பின் மஸ்லின் வெகு தாமதமாய் உலர்வதால் மேல் சொன்னவாறு அதிகமாய்க் கீழிறங்குவதில்லை. பக்கத்தில் நிற்கும் ஈரமில்லாத தெர்மாமீடரோ இவ்விதமான மாறுபாடுகள் இல்லாமல் வாயுவின் உண்மையான டெம்பரேசரையே காட்டுகின்றது. ஆகவே ஈரமில்லா தெர்மாமீடரின் நிலையையும் ஈரமான தெர்மாமீடரின் நிலையைப்பார்த்து வாயுவில் அதிக ஆவி இருக்கின்றதா இல்லையா என்று ஒருவாறு நிர்ணயம் செய்யலாம். உதாரணம் ஒன்று சொல்லுகிறேன்.

1914-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 20ம் தேதி யன்று பகல் 3 மணிக்கு ஈரமில்லாத தெர்மாமீடரில் டெம்பரேசர் 91 டிகிரி. ஈரமான தெர்மாமீடரில் டெம்பரேசர் 76 டிகிரி, இரண்டிற்கும் வித்தியாசம் 15 டிகிரி. பாருங்கள்!!

1913-ம் வருஷம் அக்டோபர் மாதம் 18ம் தேதி யன்று மாலை 3 மணிக்கு ஈரமில்லாத தெர்மாமீடரில் டெம்பரேசர் 83 டிகிரி. ஈரமான தெர்மாமீடர் 80 டிகிரி. இரண்டிற்கும் வித்தியாசம் 3 டிகிரியே!! அன்றைய தினம் வாயுவில் ஆவிமிகுந்து இருந்ததென்று சொல்லவும் வேண்டுமா! அதற்கு முதல் நாள் பலத்த மழை பெய்து எங்கே பார்த்



தாலும் ஜலம். அப்பொழுதும் மழைமொழியும் சமயம். அன்று 4½-
மணிக்கு பலத்த மழை பெய்தது. இவ்விதமாய் ஒவ்வொரு நாளைக்கும்
மேற்கூறிய கருவியைக் கொண்டு டெம்பரேசர் எடுத்து அனுப்புகின்றனர்.
தினப்பத்திரிகளைப் பார்த்தால் தெரியவரும். பின்னேயும் 4, 5 நாளுக்குக்
கொடுத்து இருக்கின்றது. இக்கருவியைக் கண்டுபிடித்தவர் (Masons)
மேஸன் என்னும் சாஸ்திரபண்டிதர். ஆகையால் இக்கருவிக்கு (Mason
dry and wet bulb Thermometer) என்று பெயர். ஆகவே வாயுவில்
எப்பொழுதும் நீர்ஆவிஇருந்து கொண்டே இருக்கின்றது. சில சமயங்
களில் மிதமிஞ்சிப்போகின்றது. அப்பொழுது அந்நீராவி குளிர்ந்து
மழையாகவும், பனியாகவும் மூடுபனியாகவும் மாறுகின்றது. விசேஷ
மாய் அவ்விதம் அபரிமிதமாய் இருப்பதில்லை. ஆகையால் எவ்விடத்திலும்
உள்ள நீர் ஆவிபாய்ப் போய்க்கொண்டேயிருக்கின்றது. அவ்வாவி வாயு
வில் கலந்துகொண்டு வருகின்றது.

ஆர். கே. சுவாமி பி. எ. எல். டி.

---

# நெபோலியன் போனபார்ட்

சிறுவர்களே! நான் இப்பொழுது உங்களுக்குச்சொல்ல உத்தேசித்
திருக்கும் சரித்திரமானது பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதியில்
பிரபலத்திற்கு வந்து தீரவீரபராக்கிரமாதி குணங்களில் உலகத்திற்கே
ஒரு திலகமாய் பிரகாசித்து விளங்கிய நெபோலியன் (Nepoleon) என்ற
பிரான்ஸ் (France) தேசத்து சக்ரவர்த்தியின் பாலிய சரித்திரமே.

1767-ம் வருஷத்தில் பிராஞ்சுக்காரர்கள் கார்ஸிகா (Corsica) என்
னும் தீவைப்படையெடுத்துச் சென்றார்கள். அப்பொழுது தேசாபிமானத்
தால் தூண்டப்பட்ட பாலிய வக்கீல் ஒருவர் தன் தொழிலை விட்டுவிட்டு
தன் தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டு யுத்தகளத்தில் போய்ச்சண்
டைசெய்தார். தன் கட்சி தோல்வியடைந்து போகவே முன் இந்தியா
வில் பதினாறாம் நூற்றாண்டில் ஹுமாயூன் (Humayun) என்ற மொக
லாய அரசன் ஷேர்ஷா (SherSha) என்னும் ஆப்கானியினால் தோற்கடிக்
கப்பட்டு, பால்யஸ்திரீயாயும், கர்ப்பவதியாயுமிருந்த தன் பத்னியுடன் தப்
பியோடுங்கால், அம்மாது, பிறகு அளவற்றபுகழும் கீர்த்தியும் பெற்று
விளங்கப்போகின்ற, ஆக்பர் (Akbar the great) மகா சக்கிரவர்த்தியை
ஈன்றெடுத்தப்படி, போனபார்ட் என்னும் இந்த நியாயவாதியும் தன் பத்னி
யுடன் தப்பியோடுகையில், கணவனைப்போலவே குதூகலமும், தைரியமும்,
பெருந்தன்மையுமுடைய லெடீஷியா (Letitia) என்னும் மாதும், பிறகு
வணங்காமுடி மன்னர்களையும் வணங்கச்செய்து, தொட்டி முதல் தொண்
டைமான்வரை அவன் பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே பீதியடையும்
படி பிரகாசிக்கப்போகின்ற நெபோலியன் (Nepoleon the great) என்
னும் மகாபுருஷனை 1769ம் வருஷம், ஆகஸ்டுமாதம் 5ம் தேதி பெற்றாள்.

மேற்சொன்ன சந்தர்ப்பத்தில் ஜனித்தமையாலேயே இப்புத்திரனி
டம் போனபார்ட்டுக்கு அதிக ப்ரீதியுண்டாயிற்று. பல தடவைகளில்
அவர் தன் புத்திரனை மடிமேல் வைத்துக்கொண்டு தன் தேசத்திற்காக
செய்த சண்டைகளையும், தான்பட்ட கஷ்டநிஷ்டூரங்களையும் கதையாகச்
சொல்லுவார்.

ஒரு குழந்தையின் மனோபாவமானது ஒரு தேர்ந்த குயவன் கை
களிமண்போல் எம்மாதிரி வேண்டுமோ அம்மாதிரி திருப்பக்கூடியது.
ஆகையால் பால்யத்தில் பெற்றோர்கள் குழந்தைகளை தங்களுக்கு கஷ்டத்
தையுண்டுபண்ணப் பிறந்த பெரும் சுமையாக பாவியாமல் "இன்றைக்கு
பாபா (Child) நாளைக்கு பாச்சா (Padshah King) என்று பாவித்து தாங்
கள் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை இப்பொழுதே சரிவர
நடத்தி அவர்கள் விர்த்திக்குவரும்படி கவனித்து நற்போதனைகளைப் புக
ட்டி, அதே சமயத்தில் இருந்த குழந்தைகளும், பிற்காலத்தில் பெற்றோர்
களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் சரிவரபோதித்து வந்தால்,
இக்குழந்தைகளும் மேன்மேலும் விர்த்திக்கு வந்து நாட்டார் புகழ நல்
லோரென்று பெயரெடுத்து பெற்றோர்களின் ஜன்மத்தை புனிதமாக்கு
வார்கள்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் சத்வம், ரஜஸ், தமஸ், என்னும் முக்
குணங்களும் சுபாவத்திலேயே யிருக்கின்றன. ஆனால் எவனிடத்தில் எக்
குணமானது மற்ற இரண்டைவிட அதிகமாயிருக்கின்றதோ, அவனை அக்
குணத்தின் காரணமாய், சாது வென்றும், போக்கிரியென்றும், பலவாராய்க்
கூப்பிடுகிறோம். ஆகையால் பால்யத்திலிருந்தே குழந்தைகளை சாமர்த்
திய சாலியாகிய தகப்பன் எவ்விதத்தில் வேண்டுமானாலும் திருப்பலாம்.
தவிர புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! ஆகையால் வீரசுபாவத்தை
அதிகமாயுடைய தாய் தகப்பனுக்கு அச்சுபாவம் தீட்சண்யமாய் பிரகா
சித்துக்கொண்டிருந்த காலத்தில் ஜனித்த நம் நெபோலியன் மனதில்
யுத்தப்ரீதி அதிகமாய் விர்த்தியாயிற்று. ஆகவே பிற்காலத்தில் கத்திவீசி
தலையை சீவி, குத்தி, வெட்டி சண்டைசெய்யும் தன் சேனைகளையும், அடி
பட்டு, முறிபட்டு தோல்வியடைந்து, தப்பிப் புறங்காட்டியோடும் சத்ருக்
களையும், ஆயிரம் இடி முழக்கம்போல் முறளும் பீரங்கிகளையும், ஹாகார
த்வனியோடு போர்க்களத்தில் மாண்டுகிடக்கும் வீரர்களையும், தன்
மனக்கண்ணால் கண்டு களிப்பான்.

இவன் அதிபாலியமாயிருந்த பொழுதே இவன் சுபாவத்தைக்கண்டு
பின்காலத்தில் பெரியவீரனாவானென்று அறிந்திருந்த இவன் பிதா சுவர்க்
கம் சென்றார். லெடீஷியாவும் நெபோலியன் உள்பட எட்டு குழந்தைகளு
டன் சொல்ப சொத்தோடுயிருந்து வந்தாள். ஊரையாள்வது புருஷனானா
லும், க்ருஹத்தையாள்வது ஸ்திரீயேயல்லவா? ஆகையால் லெடீஷியாவும்
தாயாரால் குழந்தைகள் எவ்வளவு தூரம் சரிவர நடத்திவரப்படவேண்டு



மோ அவ்வளவு குழந்தைகளின் பால் தன் கடமையை சரியே நிறைவேற்
றினாள். இதற்கு சாட்சியமாக பின்காலத்தில் உலகத்தையே ஒரு குடை
யின் கீழ் ஆளும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் நெபோலியன் தான்
அந்த நிலைமையில் சரிவரநடந்துகொள்ள 'பாலியத்திலேயே தன் தாயா
ரால் கற்பிக்கப்பட்டதாயும், தானும் தன் சகோதரர்களும் பல தேசங்க
ளுக்கு மன்னர்களாயிருப்பது தன் தாயின் சிட்சையின் பலனேயென்றும்'
பலவாறு கூறியிருக்கிறான்.

கடற்கரைக்கருகாமையிலுள்ள ஒரு சிறிய பங்களாவில் லெடீஷியா
குழந்தைகளுடன் குடியிருந்தாள். பிற்காலத்தில் தாங்கள் அனுபவிக்கப்
போகும் பதவியை அறியாமலே இக்குழந்தைகள் அப்பங்களா முன்னா
லுள்ள புற்றரையில் ஓடிவிளையாடும். ஆனால் வீரத்தன்மையிலும் சூரத்
தன்மையிலும் முதல் வனாயிருந்து அவர்களெல்லோரையும் உயர்பதவிக்
குக் கொண்டுவரப்போகிற நெபோலியனோ, இன்றைக்கும் அவன் பெயரி
ட்டு அழைக்கப்படுகிற அவன் மனதுக்கு இன்பமானவும், அவன் மனோ
ராச்சியத்திற்கு சாதகமானதுமான ஒரு அழகிய குகையண்டையிலிருப்
பான்.

"விளையும்பயிர் முளையிலே" யென்றபடி, ஒரு சிறிய பித்தளை
பீரங்கியை வைத்துக்கொண்டு வெகு உற்சாகத்துடனும், ஆலோசனை
யோடும் அங்கே விளையாடிவருவான். இந்த விளையாட்டு பீரங்கிவெடிக்
குங்கால், அத்தொனி இவன் காதுக்கு மதுரமாயிருக்க, இவன் சோதர
சோதரிகளுக்கு பயத்தையுண்டுபண்ணும். மற்றொரு சமயத்தில் தன்
னுடைய ரம்யமான ஓதுக்கிடத்தில் முன்னால் ஒரு புஸ்தகம் விரிக்கப்பட்
டிருக்க, சமுத்திரத்தில் கப்பல் சண்டைபோடுவதாக நினைத்துக்கொண்டு
தன் மாலுமிகளுக்கு உத்திரவளிப்பதுபோல் கூச்சலிடுவான். இவ்வளவு
இளம்பிராயத்திலேயே ஆட்சிக்குரியவன் தானேபோலும், தன்வார்த்தை
தடையற்றதுபோலும், உத்தண்டமாயும், தோரணையாயும் பேசுவது
அவன் வழக்கம். இவன் குணத்தை நன்கறிந்த இவன் மாமன் ஒருநாள்
இவனையும் இவன் தமையனையும் பற்றிபேசுங்கால் "அண்ணா முத்தண்ணா
தான். குடும்பத்தில் பெரியவன் ஜோஸப்; ஆனால் குடும்பத்துக்குத் தலை
வன் நெபோலியனே" யென்றார்.

முதலில் பிரஞ்சுக்காரர்களைக் கண்டால் நெபோலியனுக்கு உண்டா
கும் வெறுப்புக்கு அளவில்லை. தேசாபிமானமென்பது இக்குழந்தை
யின் பால் நன்குணரலாம். தன் சொந்த கார்ஸிகாத்தீவினர் தாங்கள்
சுதந்தரங்களுக்காக பட்ட கஷ்டங்களையும் தன் தாயும், தகப்பனும், தங்
கள் தேசத்தின் பொருட்டு, காடு, மலை, வனம், வனாந்திரம் முதலியவிடங்
களில் அரைவயிற்றுக்கும், கால்வயிற்றுக்கும், சாப்பிட்டுவிட்டு அதி
பாலியமான தங்கள் குழந்தைகளுடன் அலைந்து திரிந்து பட்ட கஷ்ட
நிஷ்டூரங்களையும் கேட்டு மனம் கொதிக்க கண்ணீர் விடுவான். வயது

ஆறு ஆனவுடன் ஒரு கிராமப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டான். அங்கே படித்து வந்த சிறுவர் சிறுமிகளுக்குள் ஒரு சிறு பெண் மாத்திரம் இவன் சிநேகிதத்திற்குப் பாத்திரமானாள். பள்ளிக்கூடம் போகையிலும், திரும்பி வருகையிலும், மற்ற பையன்கள் பரிகசித்த போதிலும் அதை த்ருணமாக பாவித்து, அவளைக் கைப்பிடித்து அழைத்துப் போய் வருவான். சில சமயங்களில் அவர்கள் பரிகசிப்பதைக்கண்டு கோபித்து, கையில் அகப்பட்ட எந்த வஸ்துவையும் அவர்கள் மீது வீசியெறிந்து சண்டையிடுவான். தவிர சட்டைப்போட்டு அலங்காரம்செய்து கொள்வதிலும் அவன் பாலிய முதல் அதிக கவனம் வைப்பதில்லை. அவன் மேஜோடு சதா அவன் பூட்ஸைச் சுற்றி தொங்கிக் கொண்டேயிருக்கும். இம்மாதிரி அவன் கவனிக்காமலிருக்கும் சில சில்லரை விஷயங்களைக் குறித்து பையன்கள் அவனைக் கண்ட பொழுதெல்லாம் கூச்சலிட்டு கேலி செய்வதுண்டு.

கார்ஸிகாத்தீவு ஜெயிக்கப்பட்டவுடன் அதற்கு கவர்னராக நியமிக்கப்பட்ட மார்ப்யூப் (Marbeouf) என்பவர் லெடீஷியாவின், வனப்பையும், பெருந்தன்மையும், தைரியத்தையும் கண்டுமகிழ்ந்து, அவள் மாதிரியே சகலகுணங்களும் அடையப் பெற்றிருந்த அவள் குழந்தைகளிடத்தும் அன்பு பாராட்டி அவர்கள் முன்னுக்கு வரும் வழிக்கு சாதகமாய் ஒத்தாசை செய்து வந்தார். அவருடைய உதவியால் பாரிஸ் நகரத்தின் பக்கத்து ஊரிலேயுள்ள யுத்தசாலைக்கு நேபோலியன் பத்தாவது வயதில் அனுப்பப்பட்டான். பள்ளிக்கூடத்திற்குப் போகும்முன் தாயினிடம் விடைபெற்றுக் கொள்ளுகையில் நேபோலியனும் சாதாரண குழந்தைகளைப்போலவே பார்ப்போர்மனம் கரையும்படி விம்மி விம்மியழுதான். லெடீஷியாவும் யுத்தத்திலும் தன் கணவன்சமீபத்திலிருந்து உதவிசெய்து வந்த வெகு தைரிய சாலியாகிய பெண்மணியாயிருந்த போதிலும் தன் கண்ணுக்குக் கண்ணாகிய நேபோலியன் பிரிந்து போவதால் உண்டாகப் போகிற புத்ரவியோகத்தை சகிக்கமாட்டாதவளாய் கன்றைவிட்டுப் பிரியும் பசு போல் கதறியழுதாள்.

சிறுவர்களே! மாத்ருவாஞ்சையென்பது மனிதன் இறந்தாலும் போகாதவாஞ்சை. பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்ததாயின் ஒரு நாள் கஷ்டத்திற்கு ஈடாகுமோ நாம் நம் ஆயுள் பரியந்தம் அவளுக்கு செய்யும் கைங்கரிய சிஸ்ருஷைகள்? ஒருக்காலும் ஆகாது. ஆகையால் நம் கஷ்டசுகங்களை தங்களுடையதாக பாவித்து நம்மை ஆளாக்கி, நமக்கு சகல நன்மைகளையும் செய்து நம் க்ஷேமத்தையே சதாகோறி ஈஸ்வரத்யானம் செய்து வரும் நம் தாய் தகப்பன் மார்களுக்கு நம் கடமையை என்றைக்கும் சரிவரசெலுத்திவரவேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஔவையார் வாக்கியத்தை தினந்தோறும் படனம் செய்யவேண்டும்.



நேபோலியன் யுத்தகலாசாலையில் சேர்ந்தவுடனேயே அங்கே படி
ந்து வரும் கனவான்களுடையவும், துரைமார்களுடையவும், பெரிய
மனுஷ்யாளுடையவும், அகம்பாவமும், கர்வமுங்கொண்ட புத்திரர்கள்
இவனை ஒரு அன்னியனைப்பாவித்து நடத்தவாரம்பிப்பதைக்கண்டு மனம்
நொந்தான். மேலே சொன்னபடி இளம் பிராயத்தில் மனதில் குடிகொண்
டதும், தான் பெரியவனானபோதும் ஒருவன் மனதில் வியாபித்திருக்கு
மாகையால், அதேமாதிரி நேபோலியன் சிறுவனாய்ப்பள்ளிக்கூடத்தில்கன
வான்கள் பிள்ளைகளால் அவமதித்து நடத்தப்பட்ட பொழுது அவர்களி
டத்தில் கொண்ட வெறுப்பு பின் காலத்தில் அவன் சக்ரவர்த்தியான
பொழுது ப்ரான்ஸ் தேசத்து பரம்பரையான உயர் குலத்தை அழிக்கக்கார
ணமாயிற்று. இம்மாதிரி அவமதிக்கப்படவே நேபோலியன் அவர்களுடன்
சேராமல் தனியே தன் பாடங்களை அதிக கவனமாய்ப் படித்து
அவைகளில் வெகு தேர்ச்சியடைந்தான். பள்ளிக்கூடத்திற்கு கீர்த்தியைக்
கொடுக்கும் பையன் இவன்ஒருவனே யென்றுஉபாத்தியார்களால் கொண்
டாடப்பட்டான். ஆனால் அவசியமான கணிதசாஸ்திரத்தையும், தேசசரித
திரத்தையும் பூகோள சாஸ்திரத்தையும் இவன் எவ்வளவு கவனித்துப்
படித்தானோ அவ்வளவு அலங்காரப்படிப்பாகிய லத்தின் (Latin) முதலிய
மற்றபாடங்களை அதிகமாய் கவனிக்கவில்லை. ஜெர்மன் பாஷையில் இவ
னுக்கு அபிலாஷையே கிடையாது. ஆகையால் ஜெர்மன் சொல்லிக்கொடு
க்கும் இவன் உபாத்தியாயர் இவனைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கொள்ள
வில்லை. ஒரு நாள் ஜெர்மன் கிளாஸில் இவன் இல்லாததைக்கண்டு இவன்
எங்கே யென்று உபாத்தியாயர் மற்ற பையன்களைக் கேட்டார்.

"நேபோலியன் இஞ்சினியர் கிளாஸில் உட்கார்ந்திருக்கிறான்." என்றார்கள்.

"ஓகோ! துரைவாள் ஏதாவது கொஞ்சம் கற்றுக்கொள்ளுகிறாப் போலிருக்கிறதே! என்று உபாத்தியாயர் ஏளனமாய்ப் பேசினார்.

" இல்லை, சார், கணிதசாஸ்திரத்தில் பள்ளிக்கூடத்திலேயே அவனை முதல் பையனென்று சொல்லுகிறார்கள்" என்று ஒரு பையன் குதூகலமாய்ச் சொன்னான்.

"அப்படியா, முட்டாள்கள் தான் கணித சாஸ்திரம் கற்கயோக்கியதையுள்ளவர்களென்று நான் கேட்டும், நம்பியு மிருக்கிறேன்" என்று கோபம் கொண்ட அந்த உபாத்தியாயர் வெறுப்புடன் சொன்னார். இதைக்கேட்டிருந்த நேபோலியன், பின் காலத்தில் தன் கணிதசாஸ்திர பாண்டித்தியத்தாலும், தன் மனோதிடத்தாலும் ஐரோபாகண்டமுழுவதும்ஜெயித்து அரசனாக வீற்றிருக்கையில் "இப்பொழுது ஏன் ஜெர்மன் உபாத்தியாயர் இருந்து என் கணிதசாஸ்திர பாண்டித்தியத்தினுடையவும், அதினாலுண்டான என் முட்டாள் தனத்துடையவும் பலனைப் பார்த்தால் வெகு விசித்திரமாயிருக்கும்" என்று மனப்பூரிப்புடன் சொல்லுவான்,

வெகு ஆவலுடன் செய்யுள் படிப்பான். தேசசரித்திரம், ராஜநீதம், ராஜ தந்த்வம் முதலிய சாஸ்திரங்களைக் கற்று வருவான். அதினால் அலக்சாண்டர் (Alexander) என்னும் மகாராஜனுடைய ராஜாங்கதோரணையும், ஹானிபல் (Hannibal) என்னும் மகாவீரனுடையயுத்த சாமர்த்தியத்தையும் தன்னுள்ளே ஒருங்கு சேர்த்து விர்த்திசெய்து உலகத்தில் அக்காலத்தில் அலேக்சாண்டரும் ஹானிபலும் தானொருவனாகவேயிருந்து அனேக அசாத்தியகாரியங்களைச் செய்து வந்தான்.

மேலோர்கள் சரித்திரத்தைப் படிப்பதும் அவர்களை சாக்ஷியமாகக் கொண்டு உலகத்தில் அவர்களைப்போல் உழைத்து முன்னுக்கு வர முயல்வதும் தான் புத்திசாலிகளுக்கு அடையாளம். நம் இந்திய சரித்திரத்தில் மிகவும் க்யாதிபெற்ற சிவாஜி மகாராஜாவென்ற மாஹாராஷ்ட்ர ராஜாவானவர் தன்இளமைப் பருவமுதல் ராமாயணக்கதைகளைக் கேட்பதும் அதில் சொல்லப்பட்டிருக்கும் ராமலட்சுமணர் முதலான பேர்களைப்போல்தானும் கீர்த்திவானாக முயன்று கடைசியில் பிரசித்தி பெற்ற மகாராஜாவாய் விளங்கியது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். ஒரு கையில் கத்தியும், ஒரு கையில் ராமாயணமும் தான் சிவாஜியின் முக்கிய கருவிகள். அதேமாதிரி நெபோலியனும் "ஹோமர் (Homer) என்னும் யவனகவி எழுதிய காவ்யம் ஒரு கையிலும் கத்தி ஒரு கையிலும் கொண்டு உலகத்தையே ஜெயித்தான். அவன் பன்னிரண்டாவது வயதில் தான் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் "அம்மா, ஒரு கையில் கத்தியும், ஒரு கையில் ஹோமரும் கொண்டு உலகத்தில் கட்டாயம் நான் கீர்த்தியடைவேன்" என்று எழுதினான். இது வல்லவோ வீரத்தன்மையினுடையவும், திடசித்தத்தினுடையவும் அறிகுறி.

அநேகம் செல்வந்தர்களுடைய புத்திரர்கள் இவனை வெறுத்தபோதிலும் இவனுடைய கண்ணியத்திற்காகவும், நாணயத்திற்காகவும் இவனிடத்தில் மரியாதை காட்டுவார்கள். தப்பிதம் செய்கின்றவர்கள் பெரியவர்களாயிருந்தாலும் அவர்களுக்கு பயப்படாமல் அவர்களை தைர்யமாய் கண்டிப்பான். தன்னைவிட சிறியவர்களை ஒருவரும் ஹிம்சிக்காமல் பார்த்துக்கொள்ளுவான்.

ஒருசமயத்தில் ட்யூரேன் (Turenne) என்னும் பிரஞ்சு தலைகர்த்தனை பற்றிப் பேசும்பொழுது ஒருவர் சொன்னதாவது "அவர் (ட்யூரேன்) மிகவும் பெரிய மனுஷ்யரென்பதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் பலடினேட் என்னும் தேசத்தை கொளுத்தாமலிருந்திருக்கும் பட்சத்தில் அவரைப் பற்றி என் அபிப்ராயம் வெகு சிலாக்யமாயிருக்கும்" என்றார்.

"அதினாலென்ன? அவர் உத்தேசித்த காரியத்திற்கு அந்த தேசத்தை கொளுத்துவது அவசியமாயிருந்திருக்கும் பட்சத்தில் அவர்மேல்குற்றமில்லை" யென்று தன் சுபாவத்திற்கு அடையாளமாகப் பேசினான் நெபோலியன். இதனால் இவன் முக்கியமான சமயசந்தர்ப்பங்களில், வாஞ்சை



கோழைத்தனம், முதலிய குணங்களால் பீடிக்கப்பட்டு யுத்தகாரியத்திற்கு குந்தகம் ஏற்படும்படி விடக்கூடிய சுபாவமுள்ளவனல்ல வென்று நன்கு விளங்குகின்றதல்லவா?

1781-ம் வருஷத்தில் பனிகாலம் மிகவும் கடூரமாயிருந்தது. அதிகமாய்ப் பனிபெய்ததால் பையன்கள் சாதாரண விளையாட்டுகள் விளையாட முடியாமல்போகவே, பனிக்கட்டியைக் கொண்டு கோட்டைகட்டி விளையாடலாமென்று நெபோலியன் சொல்ல, யாவரும் அதற்கிணங்கி விளையாடுகையில், நெபோலியன் அந்த சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றறிந்தவனாகையால் சட்டப்படி கோட்டை கொந்தளங்கள் கட்டப்பட்டு விளையாடப்பட்டது. அவன் மனோதிடத்தின் மகிமையால் ஒருவனும் அவனுடைய அதிகாரத்தைத் தடுக்காமல் அவனுக்குக் கீழ்ப்பட்டு நடந்து வந்தார்கள். துர்பாக்கிய சாலியாகிய ஒரு பையன் மாத்திரம் அவன் உத்திரவை மீறி நடந்தமையால் உடனே யாதொரு யோசனையில்லாமல் அவனை அடித்துக் கீழேத் தள்ளிவிட்டான். அதினாலுண்டான காயத்தின் அடையாளம்
அந்த பையன் மேல் ஆயுள் பரியந்தமிருந்தது.

பதினைந்தாம் வயதில் பாரிஸ் நகரத்திலிருக்கும் யுத்தகலாசாலைக்கு அனுப்பப்பட்டான். அங்கேயிருக்கும் சுகவாசத்தைக்கண்டு அந்த கலா சாலைத் தலைவரிடம் வெகுதூரம் போராடி வழக்கத்தை மாற்றி வைத்தான். அதாவது வேலையாட்கள் உதவியில்லாமல் சிப்பாய் வேலைக்கு தர்ப்பேத் தாகும் பையன்கள் தங்கள் குதிரைகளைத் தாங்களே தேய்த்து மாலீஸ் செய்யவும், கவசங்களைச் சுத்தம் செய்து கொள்ளவும், யுத்தகளத்தில் யென்ன யென்ன காரியம் செய்யவேண்டுமோ அவைகளை பள்ளிக்கூடத் திலே செய்து கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுவும் தான். இவன் பாலி யத்தில் ப்ரேரேபித்த வழிகளை அனுசரித்தே பிற்காலத்தில் இவன் ஏற் படுத்திய யுத்தகலாசாலை நடத்தப்பட்டது.

பதினாறும் வயதில் சேனையில் உத்தியோகம் இவனுக்கு கிடைத்தது. "லியன்ஸ்" (Lyons) என்னும் ஊரிலிருந்தபொழுது "ஜனங்களுடைய சுகாபிவிர்த்திக்கு சாதகமான ஏற்பாடுகள் யாவை" யென்ற விஷயத்தைக் குறித்து எழுதிய வியாசத்தில் முதல் வெகுமதி பெற்றான். இவனுடைய பிந்திய சரித்திரம் நமக்கு தத்சமயம் அவசியமில்லை.

1799-ம் வருஷம் டிசம்பர்மாதம் பிரான்ஸ் தேசத்திற்கு முதல் கான்ஸலாக (First consul) நியமிக்கப்பட்டான். 1802-ம்வருஷத்தில் ஆயுள்பரியந்தம் கான்ஸலாக ஏற்படுத்தப்பட்டான். இரண்டு வருஷத்திற்குப்பிறகு சக்கிரவர்த்தி பட்டம் பெற்றான்; ஆனால் 1814-ம் வருஷத்தில் எல்பா என்னும் இடத்திற்கு சிறைபிடித்து அனுப்பப்பட்டான்.

அங்கிருந்து தப்பிவந்து 1815-ம் வருஷம் ஜூன்மாதம் வாடர்லூ (Waterloo) என்னுமிடத்தில் இங்கிலீஷ் தளகர்த்தன் வெல்லிங்டனோடு

கடைசி சண்டை போட்டான். தோற்றுப்போகவே செண்ட் ஹெலினா என்னும் தீவுக்கு சிறை செய்து அனுப்பப்பட்டான். 1821--ம் வருஷம் மே மாதம் 5-ம்தேதியன்று இவ்விடத்தில் யாதொரு கஷ்டமுமில்லாமல் காலகதியடைந்தான். சாகும்பொழுது கூட "என்சேனை"—"பிரான்ஸ்" என்று சொல்லிக்கொண்டே யிறந்தான். இவ்வார்த்தைகள் அவனிருந்த பெருமை தங்கிய நிலைமையையும், எங்கும் வியாபித்த அவன் கீர்த்தியையும் என்றும் எடுத்துச்சொல்லும்.

பி. வி. சேஷாத்திரி சர்மா.

* [சித்திரப்படம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்] ப. ர்.

முற்றிற்று

---

# ராஜா டைரி

என் பிரியமுள்ள டைரியே! நாலு நாளுக்கு முன் நான் டாக்டர் கருணாகரர் ஆபீஸுக்குப் போயிருந்த பொழுது அங்கே நடந்த சில சமாசாரங்களை உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கையில் தூக்கம் அதிகமாய் வந்தபடியால் சமாசாரத்தை பாதியில் நிறுத்தி விட்டு தூங்கப்போய்விட்டேன். பிறகு உன்னிடம் பேசவந்தபொழுது உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் கொண்டு வந்திருந்தபடியால் டாக்டர் ஆபீசில் நடந்த சமாசாரத்தையும், பிறகு நான் வண்டி சக்கிரத்தில் கட்டுப்பட்ட காரணத்தையும் சொல்லாமல் நான் ராமனால் கட்டவிழ்க்கப்பட்டு ஓடிப்போனபிறகு கள்வர்களைப் பிடித்துக் கொடுத்ததின் நிமித்தம் ஊரார்களால் கொண்டாடப்பட்டதை மாத்திரம் சொன்னேன். ஆனால் நான் ஓடிப்போவதற்கு முன் கட்டுபட்டதின் காரணத்தைச் சொல்லுகிறேன் கேள்.

அன்று டாக்டர் கருணாகரர் ஆபீசில்தர்மாம்பாள் வலிப்பினால்கஷ்டப்பட்டுப்போனபிறகு அங்கே யேதோ யோசனை செய்து கொண்டு உலாத்திக் கொண்டிருந்தேன். ஒரு பீரோவில் வெல்வட் மூடிபோட்ட பெட்டி ஒன்று வைத்திருந்தது. அதில் ஏதாவது நகைகளிருக்கலாமென்று திறந்து பார்த்தேன். ஆனால் பலவிதமான கூர்மையான கத்திகள்தான் அதில் காணப்பட்டனவென்று சொன்னேனல்லவா?

அச்சமயத்தில் கையில் ஒருபெரிய சிரங்கால் (boil) அவஸ்தைப்பட்டு கொண்டு ஒரு சிறு பெண் டாக்டரைத் தேடிக்கொண்டு அங்கே வந்தாள். அவளிடம் வெகு பிரியமாய்ப் பேசி டாக்டர் வரும்வரை அங்கேயிருக்கும்படி சொன்னேன். அவள் வலி சகிக்க முடியவில்லையென்று அழுததின் பேரில் "நீ அசங்காமலிருந்தால்வலிக்காமல் உன் சிரங்கை கீறிவிடுகிறேன். அதிலிருக்கும் அசிங்க நீர் (puss) வெளிவந்துவிட்டால் வலி நின்றுபோம். டாக்டர் வந்த பின் மருந்து போட்டுக்கொள்ளலாம்" என்றேன்.



அவளும் சம்மதித்ததினால் ஒரு கத்தி கொண்டு அவள் சிரங்கை மேலாகக்
கீறினேன்.

ஆனால் அந்த முழு மூடம் வலிக்கிறதென்று கூச்சலிட்டுக்கொண்டு
கையைத் திமிறி இழுத்துக்கொண்டாள். உடனே கத்தி அவள் விரலில்
பட்டு பெரியகாயம் (cut) செய்துவிட்டது. ஆபீசில் கீழே போட்டிருந்த
ஜமக்காளம் பலவிடங்களில் ரத்தக்கறை யாய்விட்டது. "முட்டாள் பெண்
ணே! சீக்கிரம் வீட்டிற்கு ஓடிப்போய் உன் தாயாரை கை விரலுக்கு மரு
ந்து போட்டுக் கட்டச்சொல், நீ இங்கேயிருந்தால் டாக்டர்வந்து உன்னை
யடிப்பார். ஓடிப்போ" என்றேன்.

"பொழுதாய்விட்டது. டாக்டர்வரும் வழியைக்காணோம். டாக்டர்
வந்தாலும் ஜமக்காளத்திலுள்ள ரத்தக்கறையைக் கண்டால் கோபிப்பார்.
ஓடிப்போகலாமென்றால், நம்மை காவலுக்கு வைத்திருக்கும்பொழுது
ஆபீசை தனியே போட்டு விட்டு ஓடுவதும் நியாயமில்லை. தவிர அப்ப
டிச்செய்தால் திருடன் யாராவது வந்து ஆபீஸில் களவு செய்து போவா
னாகையால் அதற்கு ஒரு உபாயம் செய்தேன். அதாவது:—அங்கேயிரு
ந்த எலும்புக்கூட்டை (skeleton)பெட்டியிலிருந்து தூக்கிவந்து டாக்டரு
டைய நாற்காலியில் உட்காரவைத்து கையில் நான் சிரங்கறுத்த கத்தியை
கொடுத்து வைத்தேன். டாக்டருடைய கவுன் சட்டையை (Gown) எடு
த்து அந்த உருவத்திற்குப் போட்டேன். பார்ப்பதற்கு ஒரு மனிதன் உட்
கார்ந்திருப்பது போலிருந்தது. கொஞ்சம் தீப்பாஷாணத்தை (phos-
phorus) எடுத்து ஒருகாகிதத்தில் கண்மாதிரி செய்து அந்த உருவத்தின்
கண்குழியில் வைத்தேன். பார்ப்பதற்கு பயங்கரமாயிருந்தமையால் எந்தத்
திருடனும் அங்கே வராமல் பயந்தோடிப் போவானென்று நினைத்துக்
கொண்டு நான் வீட்டுக்குப் போய்விட்டேன்."

மறுநாள் டாக்டர் எங்கள்வீட்டிற்கு வந்திருந்தார். இனிமேல் நான்
அவர் ஆபீஸ் பக்கம் போகக்கூடாதென்று சொன்னார். ஏனெனில் தர்மாம்
பாள் வயற்றுப்போக்கால் கஷ்டப்படுவதாயும், சுசீலா புத்திமாறுட்ட
மாய் மூளைக்காயலாவால் வருந்துவதாயும் சொன்னார்.
சுசீலா நான் வீட்டுக்கு வந்த பிறகு யேதோ மருந்து வேண்டும்
என்று வெகு அவசரமாய் ஆபீசுக்குள் வந்ததாகவும், அப்பொழுது
இருட்டில் போனமையால் அங்கே நெருப்புப்போல் ஜ்வலிக்கும் கண்களை
யுடையவும் பிசாசுபோல் கருத்த சரீரத்தோடும் கூடிய எலும்புக்கூட்
டைக்கண்டு பயந்து வீறிட்டலறி கீழே விழுந்து மூர்ச்சை போனாளாம்.
மூர்ச்சை தெளிந்து எழுந்த பொழுதும் அறையில்அந்த எலும்பு மனிதன்
மட்டிலும் இருக்கக்கண்டு மூர்ச்சித்தாளாம். பிறகு டாக்டர் வந்து அவளை
சாந்தப்படுத்தி மருந்து கொடுத்தாராம். இன்னும் மூளைக்கலங்கி பிதற்றிக்
கொண்டேயிருக்கிறாளாம். ஆனால் என்மேல் பழி போடுவதால் என்னப
லன்? நான் செய்தகாரியம் திருடர்களை பயப்படுத்துவதற்கு மாத்திரமாகை

யால் அது அம்மட்டில் சரியானதுதானே? சுசீலா முட்டாள்தனமாய் பயந்து போனால் அது அவளுடைய கோழை சுபாவத்தின் பலனே! அதுவும் என் குற்றமா?

அங்கே ஆபீசில் எலும்பு மனிதனை நாற்காலியில் உட்காரவைத்துக்கொண்டிருந்த பொழுது ஒருபையன் பல்வலியென்று டாக்டரைத் தேடிக்கொண்டுவந்தான். அவனுக்கு நான் மருந்து கொடுத்ததை சொல்ல மறந்துவிட்டேன். அதெப்படியென்றால், நான் ஆயுதங்களை சரியாய் உபயோகப்படுத்த டாக்டரிடம் சிஷ்யனாக (Apprentice) இருந்துகற்றுக்கொண்டிருப்பதாயும் வேண்டுமானால் பல்லை வலியில்லாமல் பிடுங்கிவிடுவதாயும் சொன்னேன். தவிர அவன் சிறிய பையனாகையால் பல்லைப் பிடுங்கிவிட்டால் வேறு பல்கூட முளைத்து விடுமென்றும் சொன்னேன். அவன் அதற்கு சம்மதிக்கவில்லை. வலி அதிகமாயிருக்கிறதென்று அவன் அழுதமையால் டாக்டர் வரும் வரை தூங்கினால் வலி தெரியாதென்று சொல்லி தூக்கம்வரும் பொருட்டு க்ளோரோபாரம் (chloro form)என்ற திராவகமுள்ள சீசாவையெடுத்து கொஞ்சம் முகர்ந்து பார்க்கச் சொன்னேன். அவன் மயக்கமாய் நித்திரை வருகிறாப்போலிருக்கிறதென்றான். அப்படியானால் நன்றாய் வலியும் நின்று தூங்கும்பொருட்டு சீசாவையே அவனிடம் கொடுத்து அவன் கைகுட்டையில் கொஞ்சம் விட்டு நனைத்து வைத்துக்கொண்டு முகர்ந்து பார்த்துக்கொள்ளச்சொன்னேன். அவன் அப்படி செய்வதற்குள் முன் முகர்ந்த மயக்கத்தினாலேயே சீசாவைக் கீழேபோட்டுவிட்டுத் தானும்கீழே படுத்துவிட்டான். சீசா உடைந்து வாசனை ஆபீஸ் பூராவும் பரவிவிட்டது. ஆகையால் டாக்டர் வந்து கவனித்துக் கொள்ளட்டுமென்று எலும்பு மனிதனை மட்டில் நாற்காலியில் சரியாய் வைத்துவிட்டு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். மருந்து சீசா உடைந்துபோனதால் டாக்டருக்கு ரூ. 4 அல்லது 5 நஷ்டமாயிருக்குமேயென்றுதான் விசனமாயிருந்தது. ஆனால் அந்த பையனுக்குக் கட்டாயம் பல்வலி நிவர்த்தியாயிருக்குமாகையால் அவன் தான் அதன் விலையை டாக்டருக்குக் கொடுக்கவேண்டும். ஆனால் டாக்டர் என்மேல் பழி போடுகிறார். உபகாரம் செய்ய அபகாரமாய் முடிகிறது. அதுவும்என் அதிர்ஷ்டம்தான்.

தவிர, திருடனும் ஆபீஸுக்கு வந்திருக்கவேண்டுமென்று டாக்டர் சொல்லுகிறார். ஏனெனில் அங்கு வைத்திருந்த பிஸ்கோத் ஜாடியைக் காணோம். ஆனால் ஜாடிகாலியாய் ஆபீஸில் மருந்து சாமான்களும் தட்டுமுட்டு சாமான்களும் வைத்திருக்கும் அறையில் ஒரு பீப்பாய்க்குப்பின் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் சங்கதி எனக்கும் என் தோழன் ராமனுக்கும் தான் தெரியும். அதையேன் வலுவில் நான் போய்ச் சொல்லி, யானை போல் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளவேண்டும்? சங்கதி வெளியாகி என்னை வந்து கேட்டால் பொய் சொல்லக் கூடாதாகையால் சங்கதியை ஒப்புக்கொண்டால் போகிறது.



டாக்டர் சொன்னதைக்கேட்டுவிட்டு என் தகப்பனார் சிரிப்புமேலிட, ஒரு பக்கம் கோபம் வர, என்னைப் போய் அவருடைய அறையில் இருக்கும்படி சொன்னார். அதன் அர்த்தம் தான் உனக்குத் தெரியுமே! இந்தத் தடவை தப்பித்துக்கொள்ளும்படி குதிரை லாயத்தில் போய் ஒளிந்து கொள்ளலாமென்று அங்கேபோய் வண்டியின்மேலேறி உள் பக்கமிருந்து மூடிக்கொண்டு அதினுள்ளேயே படுத்திருந்தேன்.

ஆனால் நான் லாயத்திற்குப் போகும்பொழுது பார்த்திருந்த ஆநந்தா என் தகப்பனார் என்னைத் தேடும்பொழுது நான்லாயத்திற்குள்ளிருப்பதைச் சொல்லிவிட்டாளாம். தகப்பனாரும்உடனே லாயத்திற்குவந்துஎன்னை வண்டியிலிருந்து கீழேயிறக்கி கன்னம் சிவந்து ஐந்து விரலும் கன்னத்தில் பதியும்படி கொஞ்சம் தவடை சுத்திசெய்து என்னை மறுபடி வண்டிச் சக்கரத்தோடு சேர்த்துப் பின் கட்டாய் கட்டிவிட்டுப் போனார். நானும் பேசாமலிருந்தேன். பிறகு நான் ராமனால் கட்டவிழ்க்கப்பட்டு ஓடிப்போனேன்.

நிற்க, டைரியே! எங்கள் வீட்டில் "ராமாயணம்" படிக்கவைத்துக் கொஞ்சகாலமாய் நடந்து வருகிறது. அதைப்பற்றி உன்னிடம் நான் இதுவரை சொல்ல மறந்து விட்டேன். நேற்று தான் "சீதாகல்யாண" வைபவம் வெகு விமரிசையாயிருந்தது. சாதாரணமாய் "சீதாகல்யாண காலத்திலும் "ராமபட்டாபிஷேக" காலத்திலும் ராமாயணம் வாசிக்கும் சாஸ்திரிகளுக்கு ஜனங்கள் வெகுமதியளிப்பது வழக்கம். இரண்டு தினங்களுக்கு முன் சாஸ்திரிகளின் சம்சாரம் என் தாயாரிடம் வந்து பேசிக்கொண்டிருக்கையில், தங்கள் வீட்டில் செலவுக்கு சர்க்கரையில்லையென்றும், சீதாகல்யாண காலத்தில் யாராவது 4 வீசை சர்க்கரை வாங்கி வந்து கொடுத்தால் நலமாயிருக்குமென்று சொன்னாள். இதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவளுக்கு நன்மை செய்யலாமென்ற உத்தேசத்தோடு, நாராயணய்யர், அப்புசேஷய்யர், திருமலாசாரியார். வரதய்யங்கார், இன்னும் மற்ற பெரிய மனுஷயாளிடம் போய் ராமாயண சாஸ்திரிகள் சர்க்கரை வேண்டுமென்றாரென்று சொல்லி வந்துவிட்டேன். நேற்று சீதா கல்யாண உத்சவம் நடந்து சாஸ்திரிகளுக்கு வெகுமதியளிக்கும் சமயத்தில் மூட்டை மூட்டையாயும், பொட்டளம், பொட்டளமாயும் சர்க்கரை ஓதிவைக்கப்பட்டது. முதலில் நாராயணய்யர் பேரால் சர்க்கரை மூட்டை ஓதிவைக்கப்படவே, சாஸ்திரிகளும் புன் சிரிப்பாய் அவர் பத்தினியைப் பார்த்துவிட்டு பிறகு நாராயணய்யரைப் பார்த்து "ஏது தங்களுக்கு ஜோஸியம் தெரியுமோ— ஹா ஹா ஹ— இது வல்லவோ பெரிய மனுஷயாளுக்கு அடையாளம். ஏழைகளுடைய கஷ்ட சுகங்களை நன்றாய் தெரிந்து வைத்துக்கொண்டு சமயத்தில் ஒத்தாசை செய்கிறஅவ்விடத்திய குணமே குணம். அடியேன் கடமையை எப்படி செலுத்தப் போகிறேனோ தெரியவில்லை" என்றார்.

ஆனால், பிறகு சர்க்கரை மூட்டை மூட்டையாய் ஓதிவைக்கப்படுவ

தைப் பார்த்து சாஸ்திரிகள் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்டாப் போலாய்விட்டது. அவரும் அப்பு சேஷய்யரைப் பார்த்து இதற்குக் காரணமென்ன வென்று கேட்டார். உடனே எல்லாரும் என்னைப் பார்த்தார்கள். "ராஜா, தாங்கள் வேண்டுமென்று அபேட்சித்ததாகச் சொன்னான்" என்றார்கள்.

நான் சாஸ்திரிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று தானே அவர்களிடமெல்லாம் சிரமப்பட்டு வீடு வீடாய்ப் போய்ச் சொன்னேன். அதற்காக என்னை காதைப்பிடித்து தர தர வென்று இழுத்துக்கொண்டு போய் உள்ளேவிடும்படி என் தகப்பனார் சொன்னாரே. பலவித "சுண்டல்களும், பட்சணங்களும், வினியோகம் செய்யப்படாமலிருக்க சாஸ்திரிகளுக்கு நன்மை செய்ய உத்தேசித்ததின் பலன் எனக்கு ஒன்றுமில்லாமல் போச்சுது. இதனால் ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடாதென்று தோன்றுகிறது. ஆனால் உபாத்தியாயரோ நம்மால் கூடியமட்டில் ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்கிறார். நல்லது நாளை அவரையே கேட்டு சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளுகிறேன்—தீபாவளி இன்னும் இரண்டு தினம் தானிருக்கிறது. பட்சணம் சாப்பிடப்போகிறேன். பட்டாஸ் விடப்போகிறேன். ஆனால் தீபாவளிக்கு மாத்திரம் ஏன் புதுவேஷ்டி கட்டிக்கொள்ள வேண்டும், பட்டாஸ் விடவேண்டுமென்பதுதான் தெரியவில்லை. அம்மாவைக்கேட்டு உனக்கு சொல்லுகிறேன்.

டைரியே! தீபாவளி வந்து போய்விட்டது, ஜரிகை வேஷ்டியும் கட்டிக்கொண்டேன். பட்டாஸும் விட்டேன். பட்சணம் மாத்திரம் திருப்தியாய் சாப்பிடவில்லை.

அதெப்படியென்றால் தீபாவளிக் கொண்டாட்டத்திற்குக் காரணமென்ன வென்று அம்மாவைக் கேட்டேன். தீபாவளியன்று விடியற்காலம் கிருஷ்ணபகவான் தைலஸ்நாநம் செய்து விட்டு புதுவேஷ்டியுடுத்தி, தாம்பூலம் தரித்துக் கொண்டு நரகாசுரன் என்ற ஒரு ராக்ஷதனை பாணங்களாலும் அஸ்திரசஸ்திரங்களாலும் வதை செய்து கொன்றதாகவும், இறப்பதற்கு முன் அந்த ராக்ஷதன் தான் கிருஷ்ணபகவானால் கொல்லப்பட்டதால் தனக்கு மோட்சம் கிடைக்கவேண்டுமென்றும், தான் மோட்சமடைந்த தினத்தை ஜனங்கள் தைலஸ்நாநம் செய்து புதுவேஷ்டியுடுத்தி, பாணங்களுக்கு பதிலாய் அதிர்வெடிகளும், பட்டாஸுகளும் விட்டு கொண்டாடவேண்டிக் கொண்டதாயும், அதேமாதிரி கிருஷ்ணபகவான் அனுக்கிரஹம் செய்ததாயும், அதற்காகத்தான் ஜனங்கள் தீபாவளியைக்கொண்டாடுகிறார்களென்றும் சொன்னாள். நானும் சந்தோஷமாய் புதுவேஷ்டி தரித்து பட்டாஸ் விட்டுக்கொண்டிருக்கையில் ஒரு யோசனை தோன்றிற்று. அப்படியே ஒத்தைவெடி, இரட்டை வெடியென்ற பட்டாஸுகளைத் திண்ணையில் கட்டுக்கட்டாய் அடுக்கி அவைகளுக்கு நெருப்புவைத்து விட்டு அவைகளின்மேல் ஒரு பானையை மூடி அதின் பேரில் ஏறி நின்



றுகொண்டேன். உடனே இடி இடித்தாப்போல் ஒரு சத்தம் கேட்டது. என்மண்டையில் பலமாய் ஏதோ ஒரு அடி பட்டது. 5, 6, மணிகாலம் எனக்கு ஸ்மரணை தப்பியிருந்ததென்று சொல்லுகிறார்கள். எனக்கு என்ன ஆபத்து வந்து விடுமோ வென்ற பயத்தால் என் தாயாருக்கு ஜ்வரம் வந்து விட்டதாம். நான் ரோட்டுக் குழிக்கல்லில் உருண்டு விழுந்து மண்டையில் அடிபட்டு அதனால் உண்டான வீக்கம் இன்னும் தணியவில்லை. எனக்கு ஜ்வரம் வந்து விட்டபடியால் பட்சணம் ஒன்றும் கொடுக்கமாட்டார்களாம். கேட்டால் ஏன் தப்புக்காரியம் செய்தாய் என்கிறார்கள். வயதானவர்கள் நியாயமாய் நடப்பதென்பதையே விட்டு விடுகிறார்கள். ஏனெனில் விஷயங்களைக் கண்டு பிடித்துக்கொள்வதற்கு முன்னமேயே குழந்தைகளிடமிருந்து சகல விஷய ஞானத்தையும் எதிர் பார்க்கிறார்கள். இது நியாயமா?

(இன்னும் வரும்)

பி. வி. சேஷாத்திரி சர்மா.

---

## ரஸிகை.

### ஓர் இனிய நாடகம்.

(125-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அங்கம் 2.

#### காட்சி 1.

[புஷ்பபுரியில் ருக்கமணிரமண ஸத்யலோசனரது சயன அறை அர்த்தராத்திரி. அறையில் ஓர் தீபம் எரிகின்றது. ஒரு அழகிய மஞ்சத்தில் ரமணலோசனரிருவரும் சயனித்திருக்கின்றார்கள். ரமணன் துயில்கின்றான். லோசனன் துயில்வதற்கு முயல்கின்றான். நித்திரை வராமையால் எழுந்துட்கார்ந்து தனக்குட் சொல்லிக் கொள்ளுகின்றான்.]

" அண்ணா! உன்னைப்பற்றிய சிந்தனையால் எனக்கு இன்று நித்திரையும் வரவில்லையே. ஏன் நீ இரண்டு தினங்களாக யாவையும் வெறுத்த துறவியைப்போலிருக்கிறாய்? வேட்டையாடுவதில் உனக்கிருந்த பிரியம் எங்கே மறந்துபோய்விட்டது? உணவும் சரியாய் உட்கொள்ளுகிறாயில்லை. இந்த அறையைவிட்டு நீ வெளிவருவதும் அபூர்வமாய்விட்டது. என்னோடு சம்பாஷிப்பதும் உனக்குக் கசப்பாய்விட்டது போலிருக்கிறது. திடீரென உன்னிடம் இவ்வளவு மாறுபாடுகளுண்டாகும்படி என்ன சம்பவம் நிகழ்ந்துவிட்டது? அன்று நீ பூஞ்சோலைக்குச் சென்ற சம்பவந்தானே? பூஞ்சோலையில் அரசபுத்திரிகளையும் வேலிக்கருகே ஒரு விருத்தையையுந்தானே சந்தித்தாய். வேறொருவரையும் சந்திக்கவில்லையே. அரச கன்னிகைகளொருத்திபாற் காதலுற்றனையோ? அட அற்பமனமே!

என்ன தகாத எண்ணம் எண்ணுகிறாய்! என் அண்ணன் அரசரைத் தந்தையாகக் கருதியவனாயிற்றே. அவரிடம் சிறந்த பக்தியுடையவனல்லவா. அவனா அவரது புத்திரியின்பாற் காதலுறுவான்! ஆனால் அண்ணா! அன்று வேட்டைக்குப் போய்திரும்பிவந்தது முதற்றானே நீ புதிய ரமணனாய் மாறிவிட்டாய். ஆகையால் ஒருகால் ஊழின் சக்தியால் நீ அரசபுத்திரியிடந்தான் காதலுற்றிருக்கிறாயோ? அவ்வாறு காதலுற்றிருந்தால், காதலுற்ற க்ஷணத்திலிருந்து எப்பொழுதும் நீ உன் காதற்குரிய காரிகையை நினைந்து நினைந்து ஏங்கிக் கொண்டல்லவோ இருக்கவேண்டும். அவ்வாறின்றி நீ எப்பொழுதும் அறையிலிருந்து வைராக்கிய சதகம், பட்டினத்தடிகள் பாடல், தாயுமானவர் பாடல் முதலிய ஞானநூல்களையே வாசித்துக் கொண்டிருக்கிறாயே. காதலினால் உருகுவான் இந்த நூல்களையே வாசிப்பான்! ஆகையால் அண்ணா! காதலினால் நீ வருந்தவில்லை. யாரோ ஒரு மகான் நீ துறவறத்தை அநுசரிக்கும்படி உனக்குப் போதித்து விட்டார் போலிருக்கிறது. ஆனால் நானறியாமல் எந்த மகான் உனக்குத் தரிசன மளித்தார். நான் தான் எப்பொழுதும் உன்னோடிருக்கிறேனே. நீ மானைத் தொடர்ந்தோடிய பொழுதும் அரசபுத்திரிகளையும் விருத்தையையும் நீ கண்டபொழுதுந்தான் உன்னைப் பிரிந்திருந்தேன். மானைத்துரத்தி ஓடியபொழுது ஒரு மகானைக்கண்டாயோ. கண்டிருந்தால் எனக்குச் சொல்லாதிராயே. அந்த விருத்தை தான் உன் மனத்தை மாற்றி விட்டாளோ? சீ! சுள்ளிபொறிக்கும் ஏழைக்கிழவி என்றல்லவோ நீ அவளைப்பற்றிப் பேசினாய். அந்தக் கிழவிக்கு என்ன தெரியும்? ஒருகால் அரசபுத்திரிகள் சிறந்த ஞானிகளோ! அவர்கள் தான் உலகப்பற்றை ஒழிக்கும் ஞானத்தை என் சகோதரனுக்கு உபதேசித்து விட்டார்களோ.

நான் என்னென்ன வீண்எண்ணங்கள் எண்ணுகிறேன். அந்தப் புரத்திலிருக்கும் பேதைப் பெண்களாவது! சிறந்த ஞானிகளாயிருப்பதாவது! எனக் கொன்றுந் தோன்றவில்லையே, அண்ணா! அண்ணா! (அண்ணன்கன்னத்தைமுத்தமிடுகின்றான்.) நீ விழித்தவுடன் எவ்வாறேனும் உன்வாயால் உண்மை யனைத்தையும் அறிந்துகொள்வேன். அம்மணி. ஸரஸ்வதீ! லோகநாயகீ! பங்கஜவல்லீ! உன்னையே நம்புகின்றேன். என் அண்ணன் எதிலும் பற்றற்றிருப்பதின் காரணத்தை எனக்கறிவிப்பாய்.” (கண்களை மூடிக் கொண்டு தேவியைத் தியானிக்கின்றான்.

[சிலநிமிஷங்களில் ரமணன் நித்திரையில் பிதற்றுகின்றான்.]

“வசீகரீ! வசீகரீ! நான் என்ன செய்வேன்! ஸரஸ்வதியன்னையல்லவோ உன்னை என் காட்சிக்கு அளித்தாள்!”

லோசனன் கண்விழித்துத் தன் சகோதரன் முகத்தை உற்று நோக்கிக்கொண்டு “அண்ணா! அண்ணா! அண்ணா!” என அழைக்கின்றான்.

ருக்:—என்ன வசீகரீ! நான் உனக்கு அண்ணனா?



[லோசனன் “அண்ணா! அண்ணா!” என அழைத்துக்கொண்டே அண்ணன் சரீரத்தை அசைத்து அவனை எழுப்புகின்றான். ரமணன் பதறி விழிக்கின்றான்.”

ஸயா:—என்ன அண்ணா! சாரதா தேவி வசீகரியை உன்காட்சிக்கு அளித்தால் என்ன?

(தொடரும்)

ச. அ. சுப்பராயன்.

---

# மோட்ச ஆலயம்.

## TEMPLE OF HEAVEN.

“சீனாதேசத்தில் பிக்கிங் பட்டணத்தில் ஒரு சிங்காரத் தோட்டமிருக்கிறது. அது ஒரு சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. அத்தோட்டத்தில் இவ்வாலய மிருக்கிறது. இதற்கு மோட்ச ஆலயம் அல்லது யோக தசைக்கு ஜெபம்செய்யும் ஆலயம் எனப் பெயர். இவ்விடத்தில் சீனர் பூஜை செய்வார்கள். தம் குடிகளுக்குப்பதிலாக சக்ரவர்த்தி மாத்திரம் இங்கு வந்து கடவுளைத் தொழுது போவார். வருஷத்துக்கு மூன்று முறையும், மற்றும் விசேஷித்த காலங்களிலும் சக்ரவர்த்தி இங்கு வருவது வழக்கம். கோயிலுக்கு பலி செலுத்தப்போகும் முந்தின நாள் மாலையில், யானையிழுத்துப்போகும் வண்டியில் தாமும், தமது பிரபுக்களும், மந்திரிகளும் ஏறிக்கொண்டு இந்த ஆலயத்திற்கு அருகாமையில் கட்டியிருக்கும் உபவாச மாளிகையில் போய் இறங்கி, அன்றிரவு முழுமையும் தூங்காமல் சக்ரவர்த்தி தியானம் செய்துகொண்டிருப்பார். பொழுது விடிந்தபின் 27 படிகள் வைத்து உயரத்தில்மூன்று சுற்றளவான பளிங்கு தளங்கள்போட்டுக்கட்டியிருக்கும் மோட்ச பீடத்தண்டைக்கு அவர் ஏறிப்போவார். அவ்விடம் ஸ்தாபித்திருக்கும் ஷாங்டியின் சித்திரப் பீடத்தண்டை தான் முகங்



குப்புறவிழுந்து, கொண்டுபோயிருந்த பலிகளைக் கிரமப்படிசெலுத்தி அந்தப்பரிசுத்தமுள்ள தெய்வத்துக்கு முன்பாக துதி செய்து தம்தேசத்தை, அந்தத்தெய்வம் பார்த்து ஆசீர்வதிக்கும்படியாய்க் கெஞ்சி மன்றாடுவார்.

சக்ரவர்த்தி ஒருவரே மேற்படி தெய்வத்தைவணக்கஞ்செய்ய உரியவராம். அவரையன்றி ஜனங்கள் எவருந் அந்தமோட்ச பலி பீடத்தண்டை வந்து பரிசுத்த பூசை முதலானதுகள் செய்யச் சுதந்தரங்கிடையாது. தங்கள் பெற்றோரைக்கனம் பண்ணுவதும், சகோதரரைநேசிப்பதும், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதும், தாங்கள் பெற்றிருக்கும் அறிவே போதுமென்று மனரம்மியமாயிருப்பதும், அண்டை அயலாரோடு சமாதானமாய் வாழ்வதும், தங்களுக்குப் போட்டிருக்கும் வரியைச்சரிவரக்கட்டுவதும் பொதுவாக ஜனங்கள் நடத்தவேண்டிய கடமைகளாம்."

('சீனம், சீனர்கள் சித்திரப்படச்சரிதைகள்' என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது) ப-ர்.

## வாஸ்கோடி காமா.

போர்ச்சுகல் தேசத்தார் குலம்பஸ் மேற்குதிசையில் பிரயாணம் செய்து இந்தியாவைக் கண்டுபிடித்தார் என்று நினைத்து தாங்கள் கிழக்கு திசையை நோக்கி பிரயாணம் செய்து இந்தியாவைக் கண்டுபிடிக்க தீர்மானித்தார்கள்.

ஆனால் இவ்விதம் பிரயாணம் செய்யவேண்டுமானால் போர்ச்சுகல்தேசத்திலிருந்து நேராகச்சென்று ஆபிரிக்காவின் மேற்கு கரையின் வழியாகச் செல்லவேண்டும். இப்படி செய்வதோ அக்காலத்தில் மிகவும் கஷ்டம். ஏனெனில் இக்காலத்தில் உள்ள நீராவிக் கப்பல்களைப்போன்ற பலமுள்ள கப்பல்கள் அக்காலத்தில் இல்லை. ஆனால் டையஸ் என்ற ஒருவன் கேப் ஆப் குட்ஹோப்பை கண்டு பிடித்திருந்த சங்கதி யாவருக்கும் தெரிந்திருந்தும் ஜனங்கள் அவ்விடத்திற்குப் போய்வர துணியவில்லை. அவ்வளவுபயந்திருந்தார்கள். கேப் என்ற முனையுள்ள இடமிருக்கிற தென்பதைக் கண்டுபிடிக்க அக்காலத்தில் நூறுவருஷங்கள் பிடித்ததாம். ஏனெனில் சமுத்திர யாத்திரை செய்ய ஜனங்கள் மிகப்பயந்து பூமி மார்க்கமாகச்சென்று அந்த முனைவரைக்கும் போய் திரும்பி வந்துவிட்டார்களாம். இதனால் அவர்களுக் கிருந்த பயம் இவ்வளவென்பதைக் காண்பிக்கின்றதல்லவா?

போர்ச்சுகல் தேசத்து அரசனுக்கு இந்தியாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆசை அதிகமாக இவன் மனதில் குடிகொண்டிருந்தது. தன்பிரஜைகளோ பிரயாணம் செய்ய விரும்பாமல் பயப்பட்டிருப்பது இவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் எவரை அனுப்பலாம் என்ற கவலையுள்ளவனாயிருந்தான்.



இவ்வரசன் மூன்று கப்பல்களைத் தயார்செய்து தக்க மனிதனைத்தேடி.
அனுப்ப எண்ணிக் கொண்டிருந்தான். ஒருநாள் இவ்வரசன் தனது அரண்
மனையில் சபாமண்டபத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது தனதுகிரக
விசாரணைசெய்யும்கனவான் அம்மண்டபமார்க்கமாகப் போவதைக் கண்
டான். இந்தமனிதன் அவ்விதம் பிரயாணம் செய்யத்தகுந்தவன் என்று
இவன் மனதில் பட்டது. உடனே அந்த மனிதனைக் கூப்பிட்டு நீ இந்த
மூன்று கப்பல்களுக்கும் தலைவனாயிருந்து ப்ரயாணம் செய்து இந்தியாவைக்
கண்டு பிடித்து வரவேண்டும் என்று சொன்னான். இவன்தான் வாஸ்கோடி
காமா. இவன் நல்ல குணம்வாய்ந்தவன். அரசன் சொல்லுக்கு மறு உத்திரம்
சொல்லவேமாட்டான். ராஜவிசுவாஸம் இவனிடத்திலுண்டு. ஆனதினால்
தான் தன் உயிரையும் கவனியாமல் அரசன் இஷ்டப்படி ப்ரயாணம் செய்ய
சம்மதித்தான்.

மறுநாள்காலையில் அரசன் உத்திரவு பெற்றுக்கொண்டு வேண்டிய
சாமான்கள், திரவியம் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு சிலமனிதர்
களை கப்பல் ஓட்டிகளாயும் வேலைக் காரர்களாயும் நியமித்துக்கொண்டுஅத்
தேசத்தை விட்டுப் புறப்பட்டான். கப்பல்கள் வெகுதூரம் சென்றன. வாஸ்
கோடி காமாவின் மனிதர்களும் குலம்பஸ் பிரயாணம் செய்தகாலையில் அவ
னுடைய மனிதர்கள் எவ்விதம் நடு நடுங்கி பயந்தார்களோ அவ்விதமே பயந்
தார்கள். கடைசியாக கேப் ஆப் குட் ஹோப்புக்கு "Cape of Good Hope"
வந்து சேர்ந்தார்கள். பூமியைக் கண்டவுடன் கப்பல்களிலிருந்த ஜனங்கள்
கொண்ட சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. கேப்பிலிருந்து ஆப்பிரிக்
காவின் மற்றகரைக்கும் போகலாமென்பதை அறிந்துகொண்டான்காமா.

பின்பு இவ்விடத்தைவிட்டு புறப்பட்டார்கள். பெருத்த பயங்கரமான
புயல் அடித்தது. கப்பலோட்டிகளும், இதர வேலையாட்களும் "திரும்
பிப்போய்விடுவோம்" என்றார்கள்.

பிடிவாதமும், தனக்கு அரசன் உத்திரவளித்த காரியத்தை நிறை
வேற்றவேண்டுமென்றதிட சித்தமுள்ளகாமா "இந்தியாவில் கால்வைக்கும்
வரையில் நான் ஒருபொழுதும் திரும்பிப்போகமாட்டேன்" என்றுசொன்
னான்.

சிலர் 'காமாவை' கொன்றுவிட சதியாலோசனை செய்தார்கள். இச்
சங்கதி காமாவுக்குத் தெரிந்ததும் அவர்கள் கைகளில் சங்கிலிகளைக்கட்டி
வைத்துவிட்டு தானே தைரியமாக கப்பலை ஓட்டினான். ஆப்ரிக்காவின்
கிழக்குகரை ஓரமாகவே வந்தார்கள். வரும்பொழுது அனேக பெரிய
நகரங்களைக் கண்டு களித்தார்கள். அல்கோவா பேயைக்கடந்து அங்குதென்
பட்ட பூமிக்கு சமீபத்தில் தங்கினார்கள். அப்பொழுது கிறிஸ்துமஸ்பண்
டிகை தினமாயிருந்தது. இவர்கள் கண்டபூமியை நேட்டால் என்று பெய

ரிட்டார்கள். இங்கு இவர்கள் சிலதினம் தங்கியிருந்து தங்கள் கப்பல்களைப் பழுதுபார்த்துக் கொண்டார்கள். பின்பு இவ்விடத்தைவிட்டு மோஸாம்பிக், க்யில்லோவா, மொம்பாஸா முதலிய துறைமுகப் பட்டணங்களில் தங்கினார்கள். இவ்விடங்களிலுள்ள மூர்ஜாதியார் இந்தியாவுடன் வியாபாரம் செய்து வந்தார்கள். இவர்கள் காமாமுதலியவர்களைப் பிரியமாய் நடத்தவில்லை. ஆகையால் காமா இவ்விடங்களிலிருந்து புறப்பட்டு மெலண்டா என்ற துறைமுகப்பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இங்குள்ளவர்கள் இவர்களிடத்தில் சிநேகமாயும் அன்பாயுமிருந்தார்கள். மெலண்டாவின் அரசன் இப்பிரயாணிகளுக்கு வெகுமதியாக ஆடுமாடுகளை அனுப்பினார். அவைகளைச் சந்தோஷமாக பெற்றுக்கொள்ளவே, கரைக்குவர உத்தரவு பெற்றார்கள். இவர்கள் கரைக்கு வந்து இவ்விடத்தில் ஒன்பதுநாள் வசித்து வந்தார்கள்.

பின்பு சமுத்திரத்தில் வழிகாட்டுவதில் சிறந்த மனிதன் ஒருவன் இவர்களுக்கு சிநேகமானான். அவனைத் தங்களுடன் இடுக்கொண்டு ப்ரயாயாணம் செய்யலானார்கள். இருபத்துமூன்றுநாள் பிரயாணம் சுகமாகச் செய்தார்கள். கடைசியாக பூமிதென்பட்டது. ஜனங்கள் குதூகலத்துடன் கரையில் கப்பல்களை நிறுத்தினார்கள். அதுதான் கள்ளிக்கோட்டை (Calicut) காமாவும் அவன் ஜனங்களும் இங்கு இறங்கி தங்கினார்கள். கள்ளிக்கோட்டை அரசனுக்கு வெகுமதிகளையனுப்பி அவனுடன் சிநேகம்செய்துகொள்ள முயன்றார்கள். அவ்வரசன் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு இவர்களைக் கொல்ல முயன்றான். இவ்வரசன் நல்ல எண்ணமுடையவனல்லவென்பதை காமா முதலியவர்கள் அறிந்துகொண்டு நாம் இந்தியாவைக் கண்டுபிடித்தோம், அதுவேபோதும் என்று மகிழ்ந்து, கள்ளிக்கோட்டையிலிருந்து தங்கள் ஜன்மதேசத்திற்குப் போகப்புறப்பட்டார்கள். யாவரும் சந்தோஷத்துடன் கப்பல்களை ஓட்டிக்கொண்டு லிஸ்பன் பட்டணத்திற்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்தார்கள். இவ்விதம் பிரயாணம் செய்ய இரண்டு வருஷம் பிடித்ததாம்: போர்ச்சுகல் அரசன் அதிக சந்தோஷமடைந்து காமாவுக்கு கௌரதாபட்டமளித்து வருஷம் சுமார் ரூ 10,000பென்ஷன் கொடுத்துவந்தாராம்.

7-வது ஹென்றி அரசன் காலத்தில் அமெரிக்கா கொலம்பஸ்ஸால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் காலத்தில் தான் கேப் ஆப் குட்ஹோப்பும் இந்தியாவும் வாஸ்கோடிகாமாவால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் காலத்தில்தான் வில்லியம் கேக்ஸ்டன் லண்டனில் முதல் முதலில் அச்சடிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். ஹென்றி 1509-ம் வருஷத்தில் இறந்தார்.

பத்திராதியர்.



# சிறுவர் சிறுமிகளுக்கான விநோதக் கதைகள்.

## மூன்றுதங்கமோதிரங்கள்.

ஓர்ஊரில் ஒருகனவான் எல்லா ஏழைகளிடத்திலும் அன்பு வைத்து அவர்களுக்கு வேண்டிய உபசரணைகளை யாதொரு குறைவில்லாமல் செய்துவந்தான். அதனால் அவனுக்குப் பெரும் பெயர் உண்டாயிற்று. இவரிடத்தில் ஓர் இருஷிவந்து ஒரு தங்கமோதிரத்தைக் கொடுத்து "அப்பா" உன்னுடைய தயாள குணத்தைப் பற்றி மிகவும் மெச்சுகின்றேன். இந்தமோதிரம் விலை உயர்ந்தது. இதற்கு ஒரு மாயா சக்தி உண்டு. அது என்ன வெனில் இதையணிந்திருப்பவனை எல்லாரும் விரும்பி அதிக நேசம் பாராட்டி வருவார்கள். இதை உன்னுடைய அந்தியகாலத்தில் உன்னுடைய பிள்ளைகளுள் உனக்கு எவனிடத்தில் பிரியமதிகமோ அவனுக்குக் கொடுத்து விடு. அவனே அக்குடும்பத்திற்குத் தலைவனாவான்" என்று சொல்லி மறைந்து விட்டார். அவ்வாறே அந்தக்கனவான் முன்னிலும் அதிகமாக நேசிக்கப்பட்டு வந்தான். தனக்குப் பிற்பாடு தனக்குப் பிரியமுள்ள பிள்ளையினிடத்தில் மோதிரத்தைக் கொடுத்து இருஷி சொன்ன வார்த்தைகளையுஞ் சொல்லி இறந்து விட்டான். அவ்வாறே அந்தமோதிரம் தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருந்தது.

இப்படி வந்துகொண்டிருக்கையில் மூன்றுகுமாரர்களையுடைய ஒருவனிடத்தில் வந்தது. அம்மூன்று குமாரர்களும் தம்முடைய தந்தையை ஒரேவாறு நேசித்து வந்தார்கள். அத்தந்தையும் அம்மூன்று சிறுவர்களை வித்தியாசம் பாராட்டாமல் ஒரேவாறு நேசித்துவந்தான். எவனிடத்தில் மோதிரத்தைக் கொடுப்பது என்பது அவனுக்குப் பெரிய கஷ்டமாயிருந்தது. அச்சமயத்தில் அவனுக்கு ஒரு யுக்திதோன்றிற்று. உடனே ஒரு தட்டானை யழைப்பித்து தான் அணிந்திருந்த மோதிரத்தைக் கொண்டு அதற்குச் சிறிதும் மாறுபடாத வேறிரண்டு மோதிரங்களைச் செய்யும்படி சொன்னான். அந்ததட்டானும் மிகச் சாமர்த்தியமாய் இரண்டுமோதிரங்களைச் செய்து பழைய மோதிரத்தையுஞ் சேர்த்து மூன்று மோதிரங்களைக் கொண்டு வந்து கொடுத்தான். இதுதான் உண்மையான மோதிரம் என்று அத்தந்தையாலும் சொல்ல முடியவில்லை. அம்மூன்றும் ஒரேவிதமாகவே இருந்தன.

கொஞ்ச காலங்கழித்து தன்னுடைய மூத்தகுமாரனை யழைத்து அவனுக்குப் பிரியவார்த்தைகளையும் இருஷிசொல்லிய வற்றையுங் கூறி ஒரு மோதிரத்தைக் கொடுத்தான். அவன்போனதும் இரண்டாவது குமாரனுக்கும் அவ்வாறேபேசி மற்றொரு மோதிரத்தைக் கொடுத்தான். மூன்றுவது குமாரனுக்கும் அவ்வாறே மூன்றுவது மோதிரத்தைக் கொடுத்து சில

நாட்களுக்கெல்லாம் இறந்து விட்டான். அவனுக்குரிய அபாக்கிரியை
களை அம்மூவரும் ஒன்றுசேர்ந்து செய்தார்கள். அவைகள் முடிந்ததும்
மூத்தகுமாரன் அவ்விடத்தில் வந்திருந்த பெரியவர் முன்னிலையில் தன்னு
டைய தந்தை கொடுத்த மோதிரத்தைக் காண்பித்து அதன்படி தானே
அக்குடும்பத்திற்குத் தலைவனென்று சொன்னான். இதைக்கேட்டதும்
மற்றவர்கள்மிக ஆச்சரியமுற்றார்கள். அவர்களும் தம்முடைய தந்தை
தமக்களித்த மோதிரத்தைக் காட்டி அவர்களை குடும்பத்திற்குத் தலைவர்
எனக்கூறினர். அம்மோதிரங்கள் மூன்றும் முன்சொல்லியவாறு ஒரே
மாதிரியாக விருந்தமையால் இதுதான் நிசமான மோதிர மென்று யாவ
ராலும் சொல்ல முடியவில்லை. தம்முடைய தந்தை தம்மை ஏமாற்றினான்
என்று எண்ணவே இல்லை. அக்குமாரர்களும் ஒருவர்க் கொருவர் மிக
அன்புபாராட்டி நேசித்துவந்திருந்தமையால் அவர்கள்மற்றவனை ஏமாற்றி
யிருப்பார் என்றும் நம்பவில்லை. இந்த வழக்கு விந்தையானதொரு வழக்
காயிருந்தமையால் அங்குவந்திருந்த பெரியவர்கள் அக்குமாரர்களை நியா
யாதிபதியிடம் அழைத்துச் சென்றனர்.

நியாயாதிபதியும் நம்மைப் போலவே ஒருமனிதன்தானே. ஆகவே
அவனும் உண்மையான மோதிரத்தைக் கண்டுபிடிக்காமற் போனது ஒரு
விந்தையல்ல. ஆகையால் அந்தவழக்கைக் கீழ்வருமாறு தீர்மானஞ் செய்
தான். "இந்தவழக்கு ஒரு நூதனமான வழக்கா யிருக்கிறது. இதுதான்
உண்மையான மோதிரம் என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஆயி
னும் உண்மையான மோதிரம் தன்னுடைய மாயா சக்தியினால் தன்னைத்
தானே வெளியாக்கிக் கொள்ளும். உங்களில் எவனிடத்தில் ஜனங்கள்
அதிகபிரியம் பாராட்டி வருகிறார்களோ அவனே உண்மையான மோதிரத்
தையுடையவன். இந்தமாயாசக்திமற்ற இரண்டு மோதிரங்களிடத்தில் இரா
தல்லவா? ஆகையால் நீங்கள் எல்லாரையும் நேசித்து ஒற்று வாழுங்கள்.
பின்னால்நான் உங்களுக்கு தீர்ப்பளிக்கிறேன்" என்று சொல்லி அனுப்பி
விட்டான். அக்குமாரர்கள் ஒவ்வொருவனும் தானே உண்மையான மோதி
ரத்தையுடையவன் என்று சொல்லும்படி எல்லோரிடத்திலும் அதிக
நேசம் பாராட்டி வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கெல்லாம் மோதிரத்தின்
சண்டையையும் மறந்து ஒருமிக்க வாழ்ந்து வந்தார்கள்.

தி. மா. மார்க்கசகாயன்.

---

## பேராசை பெரு நஷ்டம் —

ஓர் நாட்காலை ஒரு கிருகஸ்தர் மனைவி மக்களை யெல்லாம் வெறுத்து
நாட்டைவிட்டோடி காட்டை யடைந்து ஈசனைத்தியானம் செய்து கொண்
டே நடந்து போனார். வெகு நேரம் நடந்து ஒரு வனாந்தரத்தை யடைந்



வெயிலில் நடந்து
தார். சூரியனின் உக்கிரகம் மிகவும் அதிகரித்தது.
மிகவும் களைத்துப் போனார் கிருகஸ்தர்.
மனைவி மக்களை யெல்லாம் வெறுத்து
"ஆ! ஜெகதீசா, உம்மை நம்பி
கஷ்டப்படுகின்றேனே! இதை நீர்
இவ்வனாந்திரத்திற்கு வந்து மிகவும்
அறிய வில்லையா? இவ்விடத்தில் ஒரு விருட்சத்தை யுண்டாக்கி உமது
அன்பனாகிய எனக்கு நிழலை உண்டாக்கக் கூடாதா?" என்று கிருகஸ்தர்
மிகவும் வருத்தப்பட்டார். கடவுள் இவரைப் பரீட்சிக்கும் பொருட்டு
உடனே அங்கு ஒரு கற்பகவிருட் சத்தை உண்டாக்கினார்.
கற்பக விருட்ச மானது தன் நிழலில் நின்று யார் எதை நினைக்கிறார்
களோ அதை அவர்களுக்கு கொடுக்கக் கூடியது. இத்தன்மை சிறப்பு
வாய்ந்த மரத்தின் நிழலில் வந்து கிருகஸ்தர் சந்தோஷமாக நின்று கொண்
டிருந்தார். தென்னல் காற்று ஜில் என்று வீசியது; வீசவே கிருகஸ்
தனுடைய மனமும் பேதலிக்க ஆரம்பித்தது.
"ஆகா! இவ்விருட்சத்தை உண்டாக்கி என் களைப்பைச் சிறிது நீக்
கின எம் பெருமான் ஒரு நாற்காலியை ஏற்படுத்தினால் நான் சுகமாக உட்
கார்ந்து கொள்வேனே" என்று கிருகஸ்தர் நினைத்தார். இவர் கற்பக
விருட்சத்தின் நிழலில் நின்று நினைத்ததினால் உடனே அங்கு ஒரு நாற்
காலி தோன்றிற்று. பேராசை கொண்ட இவர் நாற்காலியில் உட்கார்ந்து
கொண்டு "ஒரு சோபா இருந்தால் ஆனந்தமாக சாய்ந்து கொள்ளலா
மே" என்று யோசித்தார். உடனே சோபாவும் அங்கு காணப்பட்டது.
இவர் ஆனந்தமாக சோபாவில் சாய்ந்து கொண்டார்.
பிறகு சாப்பாடு வேண்டு மென்று நினைத்தார். சாப்பாடும் வந்தது.
சந்தோஷமாகச் சாப்பிட்டார். உண்ட இளைப்பு தொண்டனுக்கு முண்டல்
லவா?"ஒரு கட்டிலும், மெத்தை, திம்பு, தலையணை முதலியவைகளுமிருந்
தால் சற்று படுத்து நித்திரை செய்யலாமே" என்று கிருகஸ்தர் நினைத்
தார். நினைத்தபடியே இவைகளும் அங்கு தோன்றின. கட்டிலில் படுத்
துக்கொண்டு அடியில் வருமாறு மனைவி மக்களையெல்லாம் வெறுத்து
வந்தகிருகஸ்தர் நினைத்தார்:
"ஆகா! நிழல், சாப்பாடு, கட்டில் முதலிய வைகளைக் கொடுத்த கட
வுள் ஒன்று குறைவாக விட்டு விட்டாரே? இச்சமயம் ஓர் அழகிய பெண்
மணியை கடவுள் கொடுத்தால் இங்கு பேசிக்கொண்டிருப்பேனே."
ஓர் சுந்தரி உடனே அங்கு தோன்றவே கிருகஸ்தருக்கு மனதில்
பயம் தோன்றிற்று. "இப்பெண் இவ்வனாந்தரத்தைக் காக்கும் பேயா
யிருக்குமோ" என்று பயந்தார். உடனே அப்பெண் பேயாய் மாறி
பயங்கரமான ரூபத்தோடு தோன்றினாள். கிருகஸ்தர் பார்த்தார் பேயை;
கிடுகிடு என்று நடுங்கினார்; வாய் குழறினார். "என்னை இப்பேய் விழுங்கி
விடுமோ" என்று மிகவும் பயந்தார். பிறகு என்ன நடந்தது என்பதை
நான் சொல்ல வேண்டுவதில்லை.

C. P. முத்துசாமி.

# கட்டிப்பாலின் அருமை பெருமை

கட்டிப்பால் அநுபவத்தில் பரிக்ஷை செய்தவர்கள் தவிர, அது குழந்தைகளுக்கு மாத்திரமன்றி வயது வந்தவர்களுக்கும் கிழவர்களுக்கும் சரீரத்திற்கு போஷணை தரும் ஆகாரமாக உபயோகப்படும் என்பதை அறிந்தவர் மிகச்சிலர்.

கட்டிப்பாலின் குணாதிசயங்களின் சரியான சமாசாரம் தெரிந்து கொள்ள வேண்டி பாரிஸ் (Paris) நகரத்தின் பெயர்போன டாக்டர் லாஸபிளாரி (Dr. Lassabliere) என்பவர் இரண்டு வருஷகாலம் சில குழந்தைகளுக்கு கட்டிப்பால் தவிர வேறொன்றும் கொடுக்காமல் அவர்களை—கிரமேண பரிமாணமும், நிறையும்—பரிக்ஷித்தார். அந்த பரிக்ஷையின்பலனாக கட்டிப்பால் ஒழுங்காகவும், ஜாக்கிரதையாகவும் சுத்த ஜலத்தில் கலந்து கொடுத்து வந்தால் நல்லபலன் கொடுக்கும் என ஏற்பட்டது.

வேறு வித ஆகாரம் கொண்டு வளர்ந்த குழந்தைகளைக் காட்டிலும் கட்டிப்பால் சாப்பிட்டு வளர்ந்த குழந்தைகள் வளர்ச்சியில் சிரேஷ்டமானவைகளாக வேனும் அல்லது சமவளர்ச்சி யுடையனவாக வேனும் காணப்பட்டன. மேலும் இக்குழந்தைகள் குடல் வீக்கம், குடல் ஏற்றம் கனச்சூடு முதலிய வியாதிக் கூறுகளுடையனவாகக் காணப் படவும் இல்லை.

இப்பரிக்ஷையில் கட்டிப்பாலில் சாதாரணமான பால் உபயோகிப்பதால் குழந்தைகளுக்கு உண்டாகும் மேற்கூறிய வியாதிகளைப் போக்க இது மருந்துபோல் உபயோகப்படும் என்பது ஏற்பட்டது. ஊட்டம் சிறிதும் இல்லாததும் நெடுங்காலம் திருப்திகரமாய் கொடுக்க முடியாததும் ஆன சுத்த ஜலத்தின் அளவையும், மரக்கரி பதார்த்த குழம்புத் தெளிவின் அளவையும் குறித்து அபாயகரமான உதராசய வீக்கம் நேர்ந்தகாலத்தில் கட்டிப்பால் அரிசிக் கஞ்சியோடு கலந்து கொடுக்க சுலபமாய் உட்கொள்ள இயலும். இது முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயம்.

இந்தியாவில் அநேக ஆஸ்பத்திரிகளிலும் இன்னம் இதரமான சங்கங்களிலும் மேற்சொல்லியமாதிரி பரிக்ஷைகளை திருப்திகரமாய் கார்யானுகூலத்துடன் மில்க்மெயிட் குறிகட்டிப்பாலின் உதவியைக்கொண்டு செய்து வருகிறார்கள். இந்த பால் இத்தேசத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் சாதாரணமாய் கிடைக்கத்தக்கவைகளுள் மிகவும்சிறந்த பால் என நன்றாய் தெரியும்.

## பெண்கள் தெரிந்து செய்யவேண்டிய வேலை.

பெண்களுக்கு கல்வி மிகவும் அவசியமானது ஆனால் படிக்கவும் எழுதவும் தெரிவதுமட்டுமே போதாது.



சமையல் செய்யும் முறை, கணவன் குழந்தை முதலியவர்களைப் போஷிக்கும் முறை, வியாதிகளைத் தடுக்கும் வகை, வியாதிக்காரரை போஷிக்கும் விதம், குடும்பவிஷயங்களை யெல்லாம் நடத்துகிற மாதிரி முதலியவைகளெல்லாவற்றையும் அறியவேண்டியது அவசியம்.

படிக்கத் தெரியவேண்டியது மிகவும் அவசியம்தான். ஏனென்றால் படிக்கத் தெரிந்தால் மட்டுமே நாம் நம் புத்தியை விசாலப்படுத்திக் கொள்ளக்கூடும்.

நமது வீட்டுவேலைகள் தீர்ந்த பிறகு நம் சாவகாச நேரத்தை வீண் பேச்சு முதலியவைகளில்லாமல் சரியான வழியில் உபயோகப்படுத்த முயலவேண்டும். தேவாரம், திருவாசகம், திருவிளையாடல், இராமாயணம், பாரதம் முதலிய நல்ல புஸ்தகங்களைப் படிப்பதினால் தெய்வபக்தி, பொறுமை, சாந்தம் முதலிய நற்குணங்கள் நமக்கு ஏற்படுகின்றன.

எழுதத் தெரிவதால் நாம் நம் வீட்டுக்கணக்கு முதலியவைகளை எழுதிவைத்துக் கொள்ளவும் நம்முடைய சொந்தக் கடிதங்களை எழுதவும் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கவும் ஆகிய பலகாரியங்களுக்கு உபயோகமாயிருக்கிறது. இதுபற்றியே ஒளவையாரும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று பாடியிருக்கிறார்கள்.

சமையல் செய்யுமுறையும் ஒவ்வொருவரும் அறியவேண்டியது அவசியம். பக்குவமாய் சமையல் செய்தும், ருசியுள்ள பலகாரம் முதலிய சிற்றுண்டிகளைச் செய்தும் கணவன் பிள்ளைகள் முதலியவர்களைப் போஷிக்கவேண்டியது பெண்களுக்கு முக்கிய கடமையாகும்.

இக்காலத்துப் பெண்கள் படிப்பதும் எழுதுவதுமே முக்கியமான கல்வியென்று எண்ணி சமையல் செய்யும் முறையை விட்டு விடுகிறார்கள். பெண்களாயிருந்தும் சமையல் சரியாகச்செய்யத் தெரியாதிருப்பது மிகவும் கேவலமாயிருக்கிறது. பெண்களுக்கு சமையல் வேலை தெரியாதிருப்பதால் சமையல் செய்ய ஒரு ஆள் வைக்க வேண்டியிருக்கிறது.

ஆள் வைத்தால் அந்த ஆள் மனப்பூர்த்தியாக சமையல் செய்வதுமில்லை. இக்காலத்தில் சமையல் செய்யும் ஆள் கிடைப்பதும் கஷ்டமாயிருக்கிறது. சமையல் ஆள்களும் ஸ்திரமாயிருப்பதில்லை. அவர்கள் திடீரென்று போய்விட்டால் சமையல் தெரியாதிருக்கும் பெண்கள் எவ்விதம் சமைப்பார்கள்? கைகள் இருந்தும் முடம்போலிருக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் பெண்களுக்கு சமையல் செய்யத் தெரிந்திருப்பது மிகவும் அத்யாவசியம்.

கணவன் குழந்தை முதலியவர்களைப் போஷிக்கும் முறையும் ஒவ்வொரு பெண்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். வெளியே போய் அலைந்து திரிந்துவரும் கணவனுக்கு தக்க மரியாதை செய்து சமயமறிந்து நாவுக்கு ருசியான சாப்பாடு சிற்றுண்டி முதலிய போஜன பதார்த்தங்களைச் செய்து கொடுத்தல்வேண்டும்.

இவைகளை சோம்பலில்லாமலும் சரியான நேரங்களிலும் செய்யவும் கற்றுக் கொள்ள வேண்டும். குழந்தைகளை வெகு ஜாக்கிரதையாய் காப்பாற்ற வேண்டும். மிதமிஞ்சி ஆகாரம் கொடுக்கக்கூடாது. "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு." பிள்ளைகளைப் பட்டினிப் போடப்படாது. குழந்தைகளுக்குத் தக்கபடி உணவு கொடுத்தும் உடுப்புகளை காலத்துக்கு தக்கவாறு போட்டு பாதுக்காக்க வேண்டும். குழந்தைகள் உடம்பையும் அவர்கள் உடுப்புக் களையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். நம்முடைய சுற்றத்தார் உறவினர் முதலிய பேர்களிடத்திலும் நாம் நல்ல அன்புடையவர்களாயும் பிரீதியுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். நம்வீட்டிற்கு அவர்கள் வரும்போது நல்ல போஜனத்தாலும் உபசாரத்தாலும் மற்றும் பலவிதங்களால் அவர்களைச் சந்தோஷப் படுத்த வேண்டும்.

வியாதிகள் நம்மை தொந்தரவு செய்யாமலிருக்கும்படி அவைகளைத் தடுப்பதற்கு வேண்டிய சாதனங்களை பெண்கள் தெரிந்திருக்க வேண்டும். சுகாதார விளக்கமென்கிற புஸ்தகம் படித்து அதிலுள்ள விஷயங்களை மனதில் பதித்துவைத்து அதிலுள்ளபடி நடக்கப் பிரயாசப்பட வேண்டும். கெட்டுப்போன போஜனங்களையும் அழுகிப்போனபழம்முதலியவற்றையும் விலக்கிவிட வேண்டும். நம் வீட்டையும் நம் தேகத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வியாதிக்காரரைப் போஷிக்கவும் நாம் தெரிந்திருக்க வேண்டியதவசியம். நம் வீட்டில் யாராவது வியாதியாயிருந்தால் வைத்தியர் எந்தெந்த நேரம் மருந்து கொடுக்கச் சொல்லுகிறாரோ அந்தந்த சமயங்களில் தகுந்தளவு மருந்து கொடுத்தும் சமயத்துக்குத் தக்கபடி ஆகாரம் கொடுத்து போஷிக்கவேண்டும். வியாதிக்காரருடைய வஸ்திரம், படுக்கை முதலியவைகளைச் சுத்தப்படுத்தி ஒவ்வொரு தினமும் மாற்றவேண்டும். வியாதிக்காரர் நம்மைக் கடிந்து பேசினாலும் நாம் கோபிக்காமல் சாந்தமாகப் பேசி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வாறு வியாதிக்காரரை பாதுகாக்கும் வகை நாம் அறிந்திருக்க வேண்டுவது அவசியமல்லவா?

இவைகள் தவிர மற்றபடி எல்லாம் குடும்ப விஷயத்தை நடத்தவும் நாம் அறிந்திருக்கவேண்டும். மாமன், மாமி மைத்துனர், நாத்தனார் முதலியவர்களிடத்தில் அன்புடையவளாயும், அவர்களோடு சண்டை சச்சரவு செய்யாமலும் இருக்கவேண்டும். அவர்களுக்கு நம் சக்திக்குத் தகுந்தபடி நம் வீட்டில் சமைத்த பதார்த்தங்களையும், ஆகாரத்தையும் நம்மால் கூடியமட்டும் வஞ்சனையில்லாமல் கொடுக்கவேண்டும். தன் கணவனிடத்தில் மிகவும் அன்புடையவளாயும், பிரியமுடையவளாயு மிருக்கவேண்டும் அவன் அழகில்லாதவனாயிருந்தாலும், அவனையே அதிக அழகுள்ளவனாக எண்ணி திருப்தியடைய வேண்டும். 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்ற வாக்கியப்படி கணவன் எப்படியிருந்தாலும் அவனை அழகுள்ளவனாக எண்ணி, அவன் காலில் பட்டது தன் கண்ணில் பட்ட



தாக நினைத்து நடத்தல் வேண்டும். அவன் கோபித்தால் அவன் கோபத்தை எவ்விதம் சாந்தப்படுத்த வேண்டுமோ அவ்விதம் சாந்தப் படுத்த வேண்டும். வருமானத்திற்குத் தக்கபடி செலவு செய்யவும் சாமான்கள் மலிவாய் விற்குங் காலமறிந்து வீட்டுக்கு வேண்டிய சாமான் களை வாங்கவும் பழகிக்கொள்ள வேண்டியது. பானை சட்டிகளைத் தட்டிப்பார்த்து வாங்கவும், நூலை அறுத்துப்பார்த்து வாங்கவும், கம்பளித் துணியை சுட்டுப்பார்த்து வாங்கவும், உடுப்புத்துணி நல்ல சேலை முதலியவைகளை பார்த்தெடுக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். நெய் எண்ணெய் முதலியவைகளை பரீட்சித்தறியக் கூடிய வகையையும் நாம் கற்றுக் கொள்ளவேண்டும். வீட்டுச் சாமான்களை, எலிக்கும் எறும்பு முதலியவைகளுக்குக் கொடாமலும் வீணாகச் செலவு செய்யாமலும் செட்டாக இருக்கப் பழகவேண்டும். வேலைக்காரருக்கு தக்க சம்பளம் கொடுத்து அவர்களைக் கொண்டு என்ன யென்ன வேலைசெய்ய வேண்டியிருக்கிறதோ அந்தந்த வேலையை செய்து முடிக்கும்படி யேற்பாடு செய்யவேண்டும். இவ்வாறாக குடும்ப விஷயங்கள் பலவற்றையும் நன்றாக நடத்தத் தெரிந்திருப்பதும் படிக்க எழுதத் தெரிவதுமே பூர்த்தியான கல்வியாகும்.

புஷ். பாலயாம்பாள்.

## ஹாஸ்யத் துணுக்குகள்

ஒரு தகப்பன் தன் மகனைப்பார்த்து, "அடே, இதோ காலணா இருக்கிறது. இக்கடிதத்தைக்கொண்டுபோய் தலையொட்டித் தபாற்பெட்டியில் போட்டுவா" வென்று உத்திரவுசெய்தான். பையன் 'அப்படியே' என்று சொல்லிப் போய்த் திரும்பி வந்து தகப்பனிடத்தில் அந்தக் காலணாவைக் கொடுத்தான். தகப்பன் "ஏண்டா, போடவில்லையா?" வென்று கேட்க, பையன் போட்டுவிட்டதாகச் சொன்னான். தலையொட்டவில்லையே என்றதற்கு, அவன் "நான் என்ன ஏமாந்தவனா? போடப்போகையில் பெட்டியினருகே அயல்ஜனங்கள் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் போகும்வரை மறைவிலிருந்துவிட்டுப் பிறகு ஒருவருக்கும் தெரியாமல் மெள்ள நகர்ந்துபோய்ப் பெட்டிக்குள் கடிதத்தை நழுவவிட்டு வந்துவிட்டேன்." என்றான்.

* * * *

ஒருவாணியன் வீட்டுக்குத் தர்க்க சாஸ்திரி யொருவன் ஒருநாள் எண்ணைவாங்கப் போய்ச் சேர்ந்தான். அங்கே வாணியன் மாடுகள் செக்கு இழுத்துக் கொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றின் கழுத்திலும் பெரிய மணியொன்று கட்டப் பட்டிருந்தது.

தர்க்கசாஸ்திரி: உன்னுடைய மாடுகள் தானே இவை?

வாணி: ஆம்?

தர்: அவைகள் கழுத்தில் ஏன்மணி?

வாணி: நான் செக்கோட்டிக் கொண்டிருக்கும் போது வியாபாரிகள் எண்ணை வாங்கவருவார்கள். மாடுகளை யதட்டிவிட்டு உள்ளே சென்று எண்ணை கொடுத்தபிறகு மற்ற அலுவல்கள் பார்க்கநேரும். மணிச்சத்தம்

ஓய்ந்துவிட்டால் மாடுகள் நின்றுவிட்டன வென்றறிந்து அவைகளை ஓட்டவந்து விடுவேன்.

தர்:—சரிதான்! உன்யுக்தியைக் கொண்டு அவைகள் நீ போனதும் கீழேபடுத்து படுத்தபடியே தலையை ஆட்டிக்கொண்டிருந்தால் என்ன செய்வாய்? மணி யோசை மாத்திரம் கேட்டுக் கொண்டிருக்குமே?

வாணி:—தங்களைப்போல் அவையும் தர்க்க சாஸ்திரம் படித்திருந்தால் அப்படியே செய்யும்!

* * * *

தகப்பன்:—குழந்தாய்! ஏன் நீ உன் கடிதத்தில் பெரிய பெரிய எழுத்துக்களாய் எழுதுகிறாய்?

பையன்:—என் தாதாவுக்கல்லவா எழுதுகிறேன்!

தகப்பன்:—ஆம், அதனாலென்ன?

பையன்:—தாதா செவிடல்லவா? அருகிலிருக்கும் பொழுது உரக்கப்பேசவேண்டி யிருக்கிறதே! கடிதத்திலும் பெரிதாய் எழுதினால் தானே காதிற்படும்!

* * * *

ஒற்றன்:—அவர்கள் கணவனும் மனைவியும் எவ்வளவு ஒத்துமை! கத்திரிக்கோல் போலன்றோ விருக்கிறார்கள்!

மற்றவன்:—அதென்ன அப்படிச் சொல்லுகின்றீரே. அவ்வளவு எதிர்த்து நின்று அடியும் பிடியும் கிழிப்புமாகவா யிருக்கிறார்கள்?

ஒற்றன்:—அல்ல, அல்ல; நீ இது புரிந்துகொள்ள வில்லையே! எதிர்த்து நின்றாலும், தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொள்ளாமல், பிறர் அவர்களுக்கிடையில் தலையிட்டால் நறுக்கிவிடுகிறார்கள்!

* * * *

போஜனசபையில் வெகு நேரம் வரை வாய்திறவாதிருந்த ஒருவர் தான் ஏதாகிலும் பேசாவிட்டால், மற்றவர்கள் தன்னை ஒன்றுந் தெரியாதவனென அலமதித்து விடுவார்களென்று பயந்து, ஆழ்ந்து யோசித்து "இந்தவருஷம் புதிதாய் விவாகமான பெண்களை விட விவாகமான பிள்ளைகளதிகம்" என்று அழுத்தந்திருத்தமாய்க் கூறினார்.

* * * *

பருத்தமனிதன்:—இந்த மூவருக்கு அன்னம் கிடைக்குமா?

ஹோடல்காரன்:—இருக்கிறது வாருங்கள். (சற்றுகழித்து)

பருத்தமனிதன்:—பின் ஏன் நிற்கிறீர்? கொணர்ந்து பரிமாறும்.

ஹோடல்காரன்:—தங்கள் சிநேகிதர்களிருவரும் வரட்டுமென்று நிற்கிறேன்.

பருத்தமனிதன்:—சிநேகிதர்களா? நான் தான் மூவரும்! சீக்கிரம் அன்னமிடுங்கள்

* * * *

அரைப்படிப்புப் படித்தவன் வீடு ஒரு நாள் நெருப்புப் பிடித்துக் கொண்டது. ஜனங்கள் வந்து அந்நெருப்பை ஜலங் கொண்டு அணைக்க யத்தனிக்கையில் அவன், "அடடா! என்னகாரியம் செய்கின்றீர்கள்? உஷ்ணம் உஷ்ணேன சாம்யதி" சூட்டுக்கு சூடு மருந்தென்று சாஸ்திரம் தெரியாதா! எனச்சொல்லி ஒருகுச்சியைக் கொளுத்திக்கொண்டு புறக்கடைக் கூரையிலும் தீவைக்கப் போனானாம்!

T. S. ராஜகோபாலன்.




# சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.



Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

நல்ல தேகக்கட்டுள்ள, ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, ஜுரம் முதலிய வியாதிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பிடிக்கிறது. அவ்வித முள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவது கஷ்டம்.

**SCOTT'S Emulsion**

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத் தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும் சதைகளைப் புஷ்டியுள்ளவைகளாகவும்செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக்கொடுக்கிறது.

மருந்து உட்கொண்டபின் இதன் அனுபவம் தெரியும.

கையினால் தொடாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஒளஷத சாலையிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

"ஸ்காட் அண்டு பௌன்" கம்பெனி லிமிடெட்

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன், இங்கிலாந்து.

## சமாசாரக் குறிப்பு.

50 வருஷத்தில் வைத்தியம் இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறதாம்.

வெஸுவியஸ் என்ற மலையும், எட்ணு என்ற மலையும் கொதிக்கும் சமயத்திலிருக்கிறதாம்.

மிஸ்ஸஸ் ஸரோஜினிநாயுடு ராயல் சொஸைடி ஆப் லிட்டரேசருக்கு ஒரு பெல்லோவாக தெரிந்தெடுக்கப்பட்டதைக் குறித்து யாவருக்கும் மிகுந்த சந்தோஷமே.

சென்ற 17-வருஷங்களாக இந்தியாவில் ப்ளேக் நோயின் கொடுமையால் 80லக்ஷம் ஜனங்களுக்குமேல் மடிந்தார்கள்.

ஜர்மன் ராஜ்யத்தை பாது காப்புக்காக 200, 000-பவுன் ஜர்மன் சக்ரவர்த்திகொடுத்திருக்கிருர்கள்.

சென்னை ஐகோர்ட்டுக்கு இன்னும் இரண்டு ஜட்ஜிகளை நியமிக்க வேண்டுமென்று யோசனை ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது. மிஸ்டர் C. S நேபியரும், மிஸ்டர் C. V குமாரசாமி சாஸ்திரியாரும்டெம்போரரி ஜட்ஜிகளாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

மதுரையில் கால்நடைக்காட்சி வெகு சிறப்பாக நடந்தேறியது. அச்சமயத்தில் ப்ரசிடெண்ட் அவர்கள் கால்நடைகளைப் பாதுகாக்கும் விஷயமாக செய்த உபந்நியாசத்தை யாவரும் கவனித்து அதன்படி கால்நடை விருத்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

மதுரை தமிழ்ச்சங்கத்தின் வருஷோற்சவம் இந்தத்தடவை ராமநாதபுரத்தில் சென்றவாரத்தில் நடந்தேறியது. அதன் பிரசிடெண்டும் இன்னும் மற்ற கனவான்களும் தமிழ்பாஷையையும், அச்சங்கத்தையும் விருத்தி செய்ய முயற்சிகள் செய்யப்படவேண்டுமென்று பேசினுர்கள்.

* * * *

ரங்கூனில் தந்தியில்லாக் கம்பி ஸ்டேஷன்.—ரங்கூனில் தந்தியில்லாக் கம்பி ஸ்டேஷனென்று கட்டப்பட்டு வருகிறது. அந்த ஸ்டேஷன் அடுத்த ஜூன்மாதக் கடைசியிலாவது ஜூலை மாதத்திலாவது திறக்கப்படுவதற்குச் சித்தமாய் விடுமென்று தெரிகிறது.

* * * *

புத்தகவரவு:—

### ஸ்ரீபால இராமாயணம்.

இது வாசுதேவ கோவிந்த ஆப்டே பி. ஏ. என்பவரியற்றிய மராடிபாஷையிலிருந்து தமிழில் ஒரு மராடி ஸ்திரீயினுல் மொழிபெயர்க்கப்பட்டது. இராமாயணம் முழுவதும் சுருக்கமாகவும் வெகு இனிமையாகவும் யாவருக்கும் எளிதில் விளங்கும்படியாகவும் இது எழுதப்பட்டிருக்கிறது. இதில் 4 அழகான சித்திரப்படங்களிருக்கின்றன. இப்புத்தகத்தின் கடைசியில் இராமர், இலக்ஷுமணர், பரதர். சீதை, ஹநுமார், இராவணன், முதலியவர்களின் குணம் முதலியவைகளிலிருந்து சிறுவர் சிறுமியர் கற்றுக்கொள்ளவேண்டிய நீதி விஷயங்களும் மிகவும் நன்ருக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வித சிறந்த சிறுபுஸ்தகம், இதுவரையிலும் தமிழிலில்லாத குறையை நீக்கிற்றென்கலாம். இதன் விலையோ அணு 4, வேண்டுவோர் ம-ா ா-ஸ்ரீ வி. ரங்கநாதராவ், வெங்கடேச நாய்க்கன் தெரு, திருவல்லிக்கேணி சென்னை என்று எழுதவேண்டும்.






எந்த காரணம் கொண்டு

பழைய கால சௌகர்ய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் சப்ளை உபயோகிப்பதை யோசிக்க வேண்டும் என்ருல், நவீனமான பால் சப்ளை:—

வியாதிக் கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால். மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்க வேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும், ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும் ஆன பால்.

உருசியில் திக்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆன பால்.

பழையகால வழிகளுக்கு விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளபமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றும் அருத்தமாகும்.

மில்க்மெயிட் குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது. மில்க்மெயிட் குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி லாபமடையச் செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினுல் எங்களுக்கு இரண்டு அணு ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒரு மாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம்.

பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும்,
அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லேஸ் அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்,
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்

வெயில் காலத்திற்கு அவசியமான பண்டிட் S. S. ஆனந்தரின்

## மஹா சந்தனாதித்தைலம்.

பாரம்பரியமாய் அனுபவசித்தியுடையது, அதிகபணச்செலவு செய்தும் மிகுந்த பிரயாசைப்பட்டும், சாஸ்திர ரீதியாய் பாகந்தவறாமல் தயாரிக்கப்பட்டது.

பிரதிதினம் காலையில் உச்சியில் பதனிட்டுவருவதாலும், வாரமிருமுறை சூரியஉதயத்தில் ஸ்நானம்செய்வதாலும், அதிகஉஷ்ணத்தால் உண்டாகும் தலைநோய், மயக்கம். மாதிமுதலிய மூளையைப்பற்றின நோய்கள், தொற்று வியாதிகள், ஸ்திரீபுருஷர்களுக்கு முகத்திலுண்டாகும் பருக்கள், தேமல் சொறிசிரங்கு, மேகப்படை, கைகால் எரிச்சல் முதலிய தோலைப்பற்றின நோய்கள், நரம்பைப்பற்றின பட்சவாதம் முதலிய நோய்கள் கண்கலக்கம், கண்சிவத்தல், கண்ணிற் நீர்வடிதல் கண்ணெரிச்சல், பீளைசார்தல் முதலிய கண்நோய்கள், செவிநோய்கள் முதலியவைநீங்கும்.

ரோமம் உதிர்வதையும் அகாலத்தில் நரைப்பதையும் தடுத்து கருமையும் பளபளப்பையும் தருவதில் பேர்பெற்றது.

மனோகரமான மணமும் குணமுமுடைய எங்கள் மஹாசந்தனாதித்தைலம் எங்கும் பிரசித்திபெற்று வருகிறது.

12- அவுன்ஸ் பாட்டில்... 2 0 0
6. அவுன்ஸ் பாட்டில்... 1 2 0

நமது ஆயூர்வேத வைத்தியசாலையிலுள்ள மற்றமருந்துகளின் விவரங்களும், தக்கமனிதர்களில் அபிப்பிராயங்களும் அடங்கிய புஸ்தகம் வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்புகிறோம்.

பண்டிட் S. S. ஆனந்தர்.
வைத்தியசாலை.
நெ. 31, நாட்டுபிள்ளையார் கோயில் தெரு.
சென்னை. கி.

## முக்கியவிளம்பரம்

எங்களால்தயார் செய்யப்படுகிற சதானந்த "சர்வரோகநிவாரணி" 100 கணக்கான வியாதிகளை குணப்படுத்துகிறது. இதற்கு பத்தியமோ இல்லை. இதை இன்ன நேரத்தில்தான் உட்கொள்ளவேண்டுமென்ற நியதி இல்லை. வெளிப்பிரயோகம் உட்பிரயோகம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது. தவறிச்சாப்பிடுவதினால் எவ்விதத்தீங்கும் செய்வதில்லை. பாலர் விருத்தர் யாவரும் சந்தேகமில்லாமல் சாப்பிடலாம். இம்மருந்தை கன்றுகாலிகளுக்குங்கூட உபயோகப்படுத்தலாம். இம்மருந்தானது சர்க்கியூட் ஆபீசர்களுக்கும் மிகவும் சௌகரியமாயிருக்கும். இம்மருந்தைப்பல இங்கிலீஷ் வைத்தியர்களும், ஐரோப்பியர்களும், இந்து கனவான்களும், விசேஷமாகப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். மருந்துக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு முழுவிவரமடங்கிய கியாட்லாக்புஸ்தகமொன்று அனுப்பிக்கொடுக்கப்படும்.

வி. லக்ஷிமிநரசு அண்டு பிரதர்,
சதானந்த வைத்யசாலை,
கோயமுத்தூர்.

மருந்தின் விலை ரூ 1-8-0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 AUG 1914
MADRAS.

160-A

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol XVI] புத்தகம் கசு. | Madras June, 1914. சென்னை: ஜூன்மாதம் 1914வரு. | No. 6 இலக்கம். 6

## தாழ்ந்த ஜாதியார்.

### TEE DEPRESSED CLASS MISSION SCHOOL FOR HINDUS DACCA.

இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் 294, 361,056ல் 76, 368, 671 பேர் தாழ்ந்த ஜாதியார்களென 1901-வது வருஷ ஸென்ஸஸ் கணக்குப்ரகாரம் தெரிகிறது. இவர்களுக்கு கல்வி புகட்டி நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர பற்பல கனவான்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய விடங்களில் முயன்று வருகிறார்கள்.

இவைகளில் மிகவும் சிறந்தது பம்பாயிலுள்ள சங்கமேயாம். இதற்கு கிளைச் சங்கங்கள் பல இடங்களில் உண்டு. 1912-ம் வருஷத்தில் 27 பாடசாலைகளில், மொத்தம் 1231 பிள்ளைகள் சேர்ந்து படித்தார்கள். வருஷம் ரூ 25,000 செலவு பிடிக்கிறதாம். பெருந் தொகையாயுள்ள தாழ்ந்தஜாதியாருக்கு இந்தத்தொகைபோதாது. ஆயினும் கிடைத்தபணத்தைக்கொண்டு திருப்தி யடைந்து இச்சங்கம் தைரியத்துடனும் பரோபகார சிந்தையுடனும் உழைத்து வருவது யாவருக்கும் திருப்தியை யுண்டாக்குகிறது.

1912-ம் வருஷம் கைத்தொழில் கற்றுக்கொடுக்க பாடசாலை ஒன்று (Parl) பாரல் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு அது செவ்வனே நடத்தப்பட்டுவருகிறதாம். அதற்கு வருஷம் 6000 ரூ மிஸ்டர் M.M. வட்டியா தர்மத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறதாம். இங்கு சுமார் 60 பிள்ளைகள் போஜனமுண்டு வேலை கற்றுக்கொண்டு வசித்து வருகிறார்களாம். தச்சவேலை, தையல்வேலை, பைண்டிங்வேலை, வர்ணவேலை முதலியவைகள் போதிக்கப்பட்டு வருகின்றன. பூனாவிலும் பாடசாலையில் படிப்பவர்க

ளுக்கு தினம் இரண்டுமணி நேரம் தச்சவேலையும், தையல் வேலையும் கட்
டாயப் படிப்பாக போதிக்கப்பட்டு வருகிறதாம். இவ்விதம் செய்து வரு
வதால் பிள்ளைகளுக்கு கண்ணுக்கும், கைக்கும், பழக்கமுண்டாய் பின்
னிட்டு அவர்கள் சுகமாக வேலைசெய்து ஜீவிக்க உதவுகிறது. இவர்கள்
நாலாவது வகுப்புக்கு மேல் பாடசாலைகளில் படிப்பதில்லையாம். இவர்
கள் தகப்பனுர்கள் இவர்கள் சிறு வயதா யிருக்கும்பொழுதே இவர்களை
வேலைசெய்ய அனுப்பிவிடுகிறார்களாம். இதனுல் புத்தியும், இங்கிலீஷ்
கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையுமுள்ளவர்கள் விருத்தியடைய
முடிகிறதில்லை.

இவர்களுக்காக பஜனை கூட்டங்களு மிருக்கின்றன. இவ்விடங்களில்
உபந்நியாசங்களும், சுவாமி ஸ்தோத்திரம் முதலியவைகளும் செய்யப்
பட்டு வருகின்றனவாம்.

பூனுகிளைச்சங்கத்தார் மகாராஷ்ட்ரகான் பிரன்ஸ் கூடியகாலத்தில் பற்
பல விடங்களிலிருந்து 400 தாழ்ந்த ஜாதியார் வந்திருந்து தங்களது விர்த்
தியைகோரி சந்தோஷமாக அந்த கான்பிரன்ஸின்நடவடிக்கைகளில் அக்க
ரையையும் ஊக்கத்தையும் காண்பித்தார்களாம். இவர்களெல்லாம் ஒரு
மிக்க புசித்து தங்களிருப்பிடங்களுக்குச் சென்றூர்கள். இதற்கு ஸர். ஆர்.
ஜி. பண்டர்கார் ப்ரசிடெண்டாக யிருந்தாராம்.

இன்னொரு விசேஷம் என்னவெனில், 200 தாழ்ந்த ஜாதி ஸ்திரீகள்
ஒருமிக்க சேர்ந்து ஒரு மீட்டிங் கூடினூர்களாம். அதற்கு மிஸ்ஸஸ் ராமா
பாய் ரானடே பிரஸிடெண்டாக யிருந்தார்கள். உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த
200 மாதர்கள் இச்சபைக்கு வந்து தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்து
உபந்நியாசமும் செய்தார்களாம். இச்சங்கத்துக்கு இண்டூர் மகாராஜாவா
கிய துக்காஜிராவு ஹோல் காரவர்கள் 20,000 ரூ. தருமமாக அளித்தா
ராம். பம்பாயிலுள்ள மாதர்கள் தங்களாலியன்றளவு இதற்கு உதவி
புரிந்து வருகிறூர்கள் என்பதைக் கேட்க மிகவும் சந்தோஷமடைகிறோம்.
பாரல் பாடசாலையிலுள்ள பிள்ளைகளுக்கு ட்ரில் போதிக்கப்பட்டும்,
பெண்களுக்கும், சில பிள்ளைகளுக்கும் சங்கீதமும் போதிக்கப்பட்டும் வரு
கிறது. இவைகளெல்லாம் ஒழுங்காய் நடத்தப்பட்டு வருகிறதாம். இவ்விதம்
பெங்காலிலும் பெருத்தவேலை நடத்தப்பட்டுவருகிறது. நமது சென்னையில்
தாழ்ந்தஜாதி சங்கமொன்றிருக்கிறது. இதில் சுவாமி ப்ரம்மாநந்தரும், இன்
னும் சிலகனவான்களும் உழைத்துவருகிறூர்கள். இதைப்பற்றி இன்னொரு
சமயம் எழுதுவோம்.

---



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED ... 1914 MADRAS

## ஸ்ரீரங்கம்.



ஸ்ரீரங்கத்திலுள்ள ஆலயம்.

இது ஒருமுக்ய விஷ்ணு ஸ்தலம். இது ஒருதீவு. இது கொள்ளிடம்,
காவேரி என்ற நதிகளுக்கு மத்தியிலிருக்கிறது. இது திருச்சினுப்பள்ளி
க்கு வடக்கே மூன்றுமைல் தூரத்திலிருக்கிறது. இதில் 23,034 ஜனங்
கள் வசிக்கிறூர்கள். சுமார் 200 ஜனங்களைத்தவிர மீதியுள்ளவர்கள் இந்துக்
கள், இந்துக்களில் பெரும்பாலார் பிராமணர்கள். இவர்களில் அநேகர்
வைஷ்ணவர்கள். இந்த ஸ்தலத்தில் ரங்கநாதர் ஆலயமிருக்கிறது. இத
னுல்தான் இத்தீவுக்கு ஸ்ரீரங்கம் எனப் பெயருண்டாயிற்று. இப்பொழுது
இது ஒரு முனிசிபல் பட்டணமா யிருக்கிறது. இங்கே ஒரு டிஸ்டிரிக்ட்
முன்சீப் கோர்ட்டும், சப்ரிஜிஸ்டர் ஆபீஸும் ஆஸ்பத்திரியும் பாட
சாலைகளும், ஆறுசத்திரங்களும், ஒரு போலீஸ்ஸ்டேஷனு மிருக்கின்றன.

கோயிலைச் சுற்றிலும் வீடுகளும், கடை, ஆபீசு முதலியவைகளுமிருக்கின்றன. இவைகளுக்கு வெளிப்புரத்தில் பெரியசுவர் இப்பட்டணத்தைச் சுற்றிலுமிருக்கிறது. தென் இந்தியாவிலுள்ள கோயில்களைவிட இது மிகவும் பெரியது. சுவாமிதரிசனம் செய்ய உள்ளே போகவேண்டுமானால் 7 ப்ராகாரங்களைச் சுற்றிக்கொண்டு போகவேண்டும். ஸ்ரீரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கிறார். கோடானுகோடி ஜனங்கள் இத்திவ்ய ஸ்தலத்திற்கு வருகிறார்கள். கோயிலுக்குள் 4-வது ப்ராகாரத்தில் ஆயிரக்கால் மண்டபமொன்றிருக்கிறது. உற்சவகாலங்களில் இந்த மண்டபத்தில்தான் உற்சவ விக்ரகம் அலங்காரம் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். இந்தமண்டபத்திற்கு எதிரில் சேஷகிரி ராவ் மண்டபமொன்றிருக்கிறது. இங்குள்ள ஸ்தம்பங்களில் குதிரைகளும், யாளி, யானை, முதலியவைகளும் சதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத்தவிர அற்புதமான வேலைப்பாடுகளில்லை.

ஆயிரக்கால் மண்டபத்திற்கு கிழக்கு பக்கத்தில் படிகட்டுகளிருக்கின்றன. மேலேசென்று பார்த்தால் கோயிலின் காட்சி நன்றாகத் தெரிகிறது. நதிக்கும், திருச்சிக்கும் போகும் வழியில் தெற்கில் வாசற்படியும் கட்டிமுடியாத கோபுரமுமிருக்கின்றன. இவைகள் வெகு நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகள். கோபுரம் 150 அடிநீளம் 100 அடி அகலமுள்ளது. இதுகட்டி முடிந்தால் 300 அடி உயரமிருக்குமாம். கட்டி முடியாமல் வெகுகாலமாக விடப்பட்டிருக்கிறது. வாசற்படி 21½ அடி அகலமும் 43 அடி உயரமுமுள்ளது.

இந்த ஆலயத்தில் அதிக விலையுயர்ந்த நகைகளிருக்கின்றன. அவைகளெல்லாம் விலையுயர்ந்த கற்கள் அமைந்தவைகள். 1704-வது வருஷ முதல் 1731-வது வருஷம் வரையில் அரசுபுரிந்த விஜயரங்க சொக்கநாத நாயக்கனால் அளிக்கப்பட்ட சில நகைகளிருக்கின்றன. 1875-வது வருஷம் காலஞ்சென்ற 7-வது எட்வர்ட் அவர்கள் (இளவரசராய் யிருந்தபொழுது) இந்தியாவிற்கு வந்தகாலையில் ஸ்ரீரங்கத்திற்கு வந்து கோயில் முதலியவைகளைக்கண்டு களித்து ஒருவிலையுயர்ந்த தங்கத்தாம்பாளம் இவ்வாலயத்திற்கு அளித்தார். இவைகள்தான் சரித்திரசம்பந்தமானவைகள். ருஷியாவின் சக்ரவர்த்தியினுடைய செங்கோலில் பதியவைத்திருக்கும் வைரக்கல் ஒரு காலத்தில் ரங்கநாதசுவாமியின் கண்களிலொன்றிலிருந்த பேர்பெற்ற வைரக்கல் என தலைமுறை தலைமுறையாக சொல்லப்படுகிறது.

இவ்வாலயத்தைப்பற்றி பூர்வசரித்திரம் சிறிதுதான் தெரியும். கட்டடத்தில் சிற்சில விடங்களில் சாஸனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளால் சோள அரசனான பரந்தகன் (I)906-வது வருஷமுதல் 946-வது வருஷம் வரையில் ஆண்டதாகவும் தெரிகிறது. சரித்திர சம்பந்தமாக பாண்டியன், விஜயநகர் குடும்பத்தார் விஷயமும் தெரிகிறது.



OF THE REGISTRAR ... REGISTERED ... 1914

ஆயினும் ஸ்தலபுராணத்தில் பின்வருமாறு அதன் உற்பத்தியைப் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது.

ராவணனுடன் லங்கையில் யுத்தம் செய்த ஸ்ரீராமருக்கு உதவிபுரிந்த ராவணன் தம்பியாகிய விபீஷணரால் ரங்கநாதசுவாமி இந்தக் கோயிலில் வைக்கப்பட்டது. எப்படியெனில் விபீஷணர்மீது மிகவும் நன்றியுள்ள ஸ்ரீராமர் அந்த ரங்கநாத சுவாமியின் சிலையை லங்கைக்கு எடுத்துக் கொண்டு போகும்படி கொடுத்தாராம். ஆனால் விபீஷணர் அப்படி அதை எடுத்துக் கொண்டு போகும்பொழுது ஸ்ரீரங்கத்தில் தங்கி அந்த சிலையை வைத்ததாகவும் அது பூமியோடு பூமியாக ஸ்திரமாக ஒட்டிக்கொண்ட தாகவும் சொல்லப்படுகிறது. அச்சிலையை பூமியில் படும்படி வைத்தால் அது அவ்விதம் ஒட்டிக் கொள்ளும் என்று ஸ்ரீராமர் சொன்னாராம். விபீஷணர் திருச்சினாப்பள்ளியிலுள்ள உச்சி பிள்ளையாரிடத்தில் சிறிது நேரம் அதை வைத்திருக்கும்படி கொடுத்தாராம். பிள்ளையார் அவ்விதம் செய்வதாக ஒத்துக்கொண்டு அதைப் பெற்றுக் கொண்டபோதிலும் அப்படிச் செய்யாமல் அதைக் கீழே வைத்துவிட்டாராம். ஆனதால் அதை அசைக்கக் கூட முடியவில்லையாம். பின்பு விபீஷணர் அதைப்போல் ஒன்று செய்வித்து எடுத்துச் சென்றதாக ஒருகதை வழங்குகிறது.

இவ்வாலயத்தின் சிறப்பு யாவருக்கும் தெரிந்த விஷயம். மார்கழி மாசத்தில் உற்சவம் சிறப்பாக நடந்து வருகிறது. ஜனங்கள் திரளாகச் சென்றுவருகிறார்கள்.

---

# இராமாயண பேதங்கள்.

ஸ்ரீராமர் சரித்திரம் வால்மீகி பகவானருளிச்செய்த மகா இதிகாசத்தில் தவிர புராணாதிகளிலும் பல பல இடங்களில் காணப்படுகிறது என்பது சகலருமறிந்த விஷயமே. மகா பாரதத்தில் வனபர்வத்தின் பாகமாகிய ராமோபாக்கியானபர்வமும் மிகப்பேர்பேற்றது. இவைகளைத்தவிர்த்து வேறு ராமாயணங்கள் சில சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன:—ஆனந்த ராமாயணம், அற்புத ராமாயணம், ஸத்யோபாக்யான ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், முதலானவைகள்.

ஆகையால் "சரிதம் ரகுநாதஸ்ய ஸதகோடி ப்ரவிஸ்தரம்" என்னும் வசனம் ஸத்யமாகிறது. இவ்வளவு விஸ்தாரமான ராம இலக்யத்தில் ஆச் சரித்திரப்போக்கும் வருணனையும் சங்கதிகளும் மாறுபாடடைவது ஆச்சரியமல்ல. இந்தவித்தியாசங்களுக்கெல்லாம் நம்மவர்கள் ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள். ராம அவதாரம் கல்ப பேதங்களில் வெவ்வேறு வித

மாயிற்றன்றோ. சரித்திரப்போக்கு வர்ணனைகளுக்கு அந்தந்த கவிகள்
உத்திரவாதிகளென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ ?

அவ்வித்தியாசங்களென்னவென்று சற்று விசாரிப்போம்.

ராவண ஸம்ஹாரத்திற்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஒருவண்
ணன் பேசின பேச்சினால் உலோக சிக்ஷார்த்தமாய் சீதையைக்காட்டுக்
கனுப்ப நேரிட்டது. இலக்ஷ்மணர் சீதையை வால்மீகி மகாரிஷியின் ஆஸ்
ரமத்தில் விட்டு அயோத்திநகரடைந்தார். அச்சீதையைக் காண ஸ்ரீராமர்
ரகசியமாய் புஷ்பக விமானத்தில் சென்று அவள் சோகத்தைமாற்றி இரு
வருமானந்தமாயிருந்தார்களென்று ஆனந்தராமாயணத்தில் சொல்லியிருக்
கிறது.

மேலும் சீதாதேவி அஸ்வமேதயாக சந்தர்ப்பத்தில் காட்டிலிருந்து
திரும்பிவந்து வால்மீகி முதலான ரிஷிகள் பார்க்க ஸ்ரீராமர்சந்நிதியில் சத்
தியம்செய்து பூமியில்போய்விட்டதாக உத்தரகாண்டத்தில் காணும் கதை
க்கு மாறுபாடாக ஆனந்த ராமாயணக்காரர் சீதையை ஸ்ரீராமர் அங்கீகரி
த்து வெகுகால மவதாரசமாப்தி வரையிலும் சந்தோஷமாய் ராஜ்யபாரம்
செய்தார் என்று சொல்லியிருக்கிறார். சாதாரண ராமாயணம் சோகரஸப்பிர
தானியமாயிருப்பதாலும் ஆனந்தராமாயணத்தில் சோககரமானகதைகளைப்
போடுவது அயுக்தமானதாலும் இவ்வித பேதங்களேற்பட்டன. கல்ப
பேதத்தினால் ஒரு அல்லது சில ராம அவதாரங்கள் சோகபீடைகளாலதிக
மாய்ப் பாதிக்கப்படாமல் நடந்தேறின என்று சொல்வதிலும் அநுசித
மொன்றும் புலப்படவில்லை. அஸ்வமேதயாகக் குதிரை விஷயமாய் ஸ்ரீராம
ருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் யுத்தம் நேரிட்டு குசன் போட்ட பாணத்
தினால் பகவான் மூர்ச்சையடைந்தார் என்று ஒரு கதை உண்டு. இதை
ஆனந்த ராமாயணக்காரர் அங்கீகரிக்கவில்லை.

கல்பபேதம் என்னும் கொள்கையால் நம்புராணாதிகளில் ஒருவிநோத
மேற்படுகிறது. அது என்னவென்றால் அத்யாத்ம ராமாயணத்தில் ஸ்ரீராமர்
காட்டுக்குப்போகும் சமயத்தில் சீதை தன்னையும்கூட்டிக்கொண்டுபோகும்
படியாகப் பலவிதமாய் மன்றாடுகிறாள்? ஸ்ரீராமபிரான் பலவாறு சமாதானம்
சொல்லியும் சீதை கேட்காமல் ஒருமுக்கியகாரணம் தனக்கனுகூலமென்று
பகர்கிறாள்:—ஸ்ரீராமர் வீட்டுப்பௌராணிகர் படிக்கும் ராமாயணத்தில்
சீதையும் காட்டுக்குப் போனதாகச் சொல்லியிருக்கிறதே தவிர ஸ்ரீராமர்
மட்டும் காட்டுக்குப்போனதாகச் சொல்லவில்லை.

"ஸ்ரீராமர் சரித்திரம் நடக்குமுன்னே ராமாயணமேற்பட்டிருந்தது
அதைப்பௌராணிகர் தசரதனரண்மனையில் படித்தார்" என்றால் இந்த இங்
கிலீஷ்காலத்தார் நம்பமாட்டார்கள். அதைநாம் நம்பவேண்டுமென்றும்



கட்டாயமொன்றுமில்லை. மொத்தத்தில் பலராம அவதாரங்கள் நடந்தன
என்பதுதான் கருத்து. எவ்வளவுதூரம் புதிய விஷயங்களேற்பட்டாலும்
ஸ்திரீ புருஷர்களுக்கு இன்றியமையாததான ஒழுக்கம், ஆசாரம், தருமம்
இவைகளைத்திடம் செய்யப் பல பல கதைகள் ராமாயண பேதங்களில்
காணப்படுகின்றன. இவ்விஷயமாய் சிலகதைகளை அடியில் வரைந்து தற்
காலத்தில் பிரஸ்தாபத்தை முடித்துவிடுகிறேன்.

கைகேசி ஒருகாலத்தில் ஸ்ரீராமரை (பட்டாபிஷேகத்திற்குப் பிறகு)
தனக்கு ஞானோபதேசம் செய்யவேண்டுமென்று கேட்க, பகவான் தான்
சர்வஞ்ஞனாயிருந்தபோதிலும் மானுட ரூபியானதால் சிறு தாயாருக்குக்
குருஸ்தானம் வகிப்பது உலோக விரோதமென்று நினைத்து, ஒருவிதமாய்
சிறுதாயாரின் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய ஒரு உபாயத்தை மனதில்
யோசித்து, மறுநாள் காலமே இலக்ஷ்மணரை ஆட்டுமந்தைகள் மேயுமி
டத்து கைகேசியைக் கொண்டுபோய் விடும்படியாய் கட்டளையிட்டு, ஆடு
களின் வாக்கியத்தைக் கவனித்து யோசிக்கச் சிறுதாயாரைப் பிரார்த்தித்
தார். ஆடுகள் மேமே என்று சப்திப்பதை கைகேசி கேட்டு ஆலோசிக்க
வாரம்பித்தாள்:—"மே" என்றால் சம்ஸ்கிருதத்தில் "என்னுடையது"
என்று அர்த்தம். தசரதன் என் புருஷன். நான் அவனுக்கு வேண்டிய
மனைவி. பரதன் என்பிள்ளை. ராஜ்யம் எனக்கு வேணும். பரதன் ஆள
வேணும் என்று ஸ்ரீராமரைக் காட்டுக்கனுப்பினேன்" இப்படி யோசிக்க
யோசிக்க சம்ஸாரத்தின் அநித்யம் விளங்கி வஸ்து ஞானமும் அவளுக்கு
உண்டாக, சபைக்குத் திரும்பின காலையில் ஞானோபதேசம் அவசியமோ
என்று ராமர் வினவ, கைகேசி ஆட்டுகளின் வாக்கியத்தால் தனக்கு ஞான
முண்டாயிற்றென்று மறுமொழி பகர்ந்தாள். பகவானும் அடாது செய்
தால் படாது படுவர் என்பதை விளக்க அற்புத ராமாயணத்தில் ஒரு கதை
உண்டு. ருக்குமாங்கதன் என்னும் ராஜாவுக்கு ஸ்ரீமதி என்னும் பெண்
ணிருந்தாள். அவளைக்கண்டு முநீஸ்வர சிரேஷ்டர்களாகிய நாரதர்,
பர்வதர் இருவரும் மோகமடைந்து தங்களிச்சையை நிறைவேற்
றிக்கொள்ள வைகுண்டத்திற்குச் சென்று தனித்தனியாய் பகவானை தரி
சித்து வரம் பெற்றார்கள். ஸ்வயம்வர மண்டபத்தில் ஸ்ரீமதியின் கண்
ணுக்கு நாரதர் குரங்கு முகமாய்க் காணவேண்டியதென்று பர்வதரும்,
பர்வதர் குரங்கு முகமாய்க் காணவேண்டியதுஎன்று நாரதரும், பகவானி
டத்தில் பிரார்த்தித்தனர். பகவானும் இருவருக்கும் வரம் கொடுத்தார்.
ரிஷிகள் சபைவந்து சேர்ந்து அரசனை பயமுறுத்தித் தங்களில் ஒருவனைத்
தான் ஸ்ரீமதி வரிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தார்கள். ஸ்வ
யம்வர மண்டபம் சோடித்து, சகலதேச அரசர்களும் வர, தாதிகள்
பல்லக்கில் ஸ்ரீமதியைச் சபைக்குக் கொண்டுவந்தார்கள். பிதா ருக்குமாங்
கதன் ரிஷிகளைச் சுட்டிக்காட்டி ஒருவரை வரி என்று சொல்ல,
ஸ்ரீமதி இரண்டு குரங்கு முகத்தார்களைக் கண்டு பிதாவின் ஆக்ஞைப்

பிரகாரம் நடக்க மனம் வாரமல் மனச் சஞ்சலம் கொண்டிருந்தாள். இப்படியிருக்கச் சபையார்களுக்கு "குரங்கு மூஞ்சிகளாய் ரிஷிகள் ஸ்ரீமதிக்கு மட்டும்தான் காணப்படுகிறார்கள்" என்னும் சமாசாரம் வியக்தமாயிற்று. யாரை வரிப்பளோ என்று ஆச்சரியமும் மேலிட்டது. பிதாவின் தொந்திரவினால் ஸ்ரீமதி ஒரு குரங்கை வரிப்போமென்று மாலையைக் கையில் கருதி அவர்களாசனத்தின் பக்கத்தில் நெருங்க கோதண்டம் கையிலேந்திய ஒரு சுந்திர புருஷன் ரிஷிகளின் மத்தியில் தனக்கு மட்டும் தோன்றக்கண்டு அவசரத்தில் அவன் கழுத்தில் அவள் மாலையைப் போட, அப்பெண் இப்பூமியில் காணப்படவில்லை. மாயாவியாகிய பகவான் அப்பெண்ணைக் கொண்டு வைகுண்டம் சேர்ந்தார். அரசனும், ரிஷிகளும், சபையாரும், பிரமித்தார்கள். நாரத பர்வதர்கள் வைகுண்டம் சென்று தன் தன் முகம் குரங்கானதுக்குக் காரணம் பகவானாலறிந்து, புத்திதெளிந்து, திருடன் பகவானென்று ஞானதிருஷ்டியால் கண்டுபிடித்து அரசன் மாயக்காரனல்லவென்றும் பெண்ணை மந்திரத்தினால் மறைக்கவில்லையென்றும் தெரிந்துகொண்டு, தங்கள் கோபத்தை யடக்க முடியாமல் பகவானைச் சபித்தார்கள். அதாவது பகவான் மானிடதேகம்பெற்று பெண்சாதியை ராக்ஷஸன் எடுத்துச் செல்ல விரகதாபத்தையும் சகல இடுக்கண்களையும் அடையவேண்டுமென்றுதான். பகவானும் இச்சாபத்தை ஏற்றுக்கொண்டு ரிஷிகளின் பச்சாத்தாபத்தைக் கண்டு இரக்கம்கொண்டவராய் அவர்களைத் தங்கள் ஸ்தானத்திற்கு அனுப்பிவிட்டு, ராமாவதாரோன்முகரா யிருந்தார்.

ஸி. எஸ். கிருஷ்ணையர், எம். ஏ.

## பதார்த்தகுண சிந்தாமணி.

பசுவின்பால்.—பசுவின் பாலானது பாலருக்கும், விருத்தருக்கும் நீடித்த சுரமுள்ளவருக்கும், சிரங்கு, சொரியுள்ளவருக்கும், துற்பலமுள்ளவருக்கும் மிகவும் நன்மையை யுண்டாக்கும்.

வெண்மைநிறப் பசுவின்பால் பித்தத்தையும், செம்மைநிறப் பசுவின்பால் வாத தோஷத்தையும், கருமைநிறப் பசுவின்பால் க்ஷயரோகத்தையும், கபிலைநிறப் பசுவின்பால் திரிதோஷத்தையும் போக்கும்.

எருமைப்பால் திமிர்வாயுவைத் தருவிக்கும். தெளிந்த புத்தியின் கூர்மையையும் மருந்தின் குணத்தையும் கெடுத்துவிடும்.

வெள்ளாட்டுப்பால்.—வெள்ளாட்டுப் பாலினால் வாதபித்தம், சுவாசகாசம், சீதம், அதிசாரம், கபம், வாதத்தால் உண்டாகிய வீக்கம் முதலியவைகள் நீங்கும், நல்ல பசியும் உண்டாகும்.



சென்னமாதப் பத்திரிகையில் 129, 131 வது பக்கங்களைப் பார்க்கவும்—



நேபோலியன் போன பார்ட் "விளையும் பயிர் முளையிலே"




வாயுவில் உள்ள நீராவியின் அளவு நிர்ணயிக்கும் கருவி.—

சென்னையில் பாலிலிருந்து இயந்திரத்தினால் வெண்ணெய் எடுத்த பின் அப்பாலை விற்றுவருகிறார்கள். இப்பாலை அநேகர் காப்பி ஓட்டல் களில் காப்பியில் சேர்த்தும் தயிராகவும் செய்து உபயோகிக்கிறார்கள். இப்படிச் செய்வதால் அக்கினிமந்தம் உண்டாகும். தேகத்தில் பலத்தைக்கொடுத்து நன்மையைச் செய்யாது, ருசியாயுமிராது; ஆகையால் அவ்வித பாலையும், தயிரையும் உபயோகிக்கக்கூடாது. வெள்ளாடு, பசு இவைகளின் பாலுக்கு எட்டிலொருபங்கு ஜலம் விட்டுக் காய்ச்சவேண்டும். சக்குசேர்த்து காய்ச்சி குழந்தை, விருத்தர் முதலியவர்களுக்குக் கொடுத்தால் மிகவும் நல்லது.

பாலேட்டின் குணம்.—பாலினுண்டாகும் ஏட்டினால் பயித்திய நோயும், கொடியவாந்தியும் மூர்ச்சையும் நீங்கும். மிகுபலமும், தேகபுஷ்டியும் உண்டாகும். ஜாடராக்கினியும் விருத்தியடையும் துற்பலமுள்ளவர்களும் புசித்தாலும் குற்றமில்லை.

பால் நீலவர்ணமாயிருந்தால் அதில் சிறு கிருமிகளிருக்கின்றன வென்றுதெரியும். அதனால்தான் பால் நீலவர்ணமாயிருக்கிறது.

புயல்காற்று அடிக்கும் சமயத்தில் பாலை வைத்திருந்தால் அதுபுளித்துவிடும். ஏனெனில் ஆக்ஸிஜன் காற்றில் அதிகமுண்டாய் அது பாலில் கலந்து, அதைப் புளிக்கும்படிசெய்கிறது. ஆனால் பாலை நன்றாக கொதிக்க வைத்தபின் அது புளிக்காது. ஏனென்றால் அதிக சூடு பாலில் ஏறினவுடன் (ஆக்ஸிஜனை) ப்ராணவாயுவைவெளியில் தள்ளிவிடுகிறது. பால் புளித்தால்அது தயிராய்விடும். பலஹீனமுள்ளவர்களுக்கு பால் அஜீரணத்தையுண்டுபண்ணும். ஏனெனில் அதில் அதிக வெண்ணெயிருக்கிறதல்லவா? ஆகையால் அதைக் காய்ச்சி ஏடை எடுத்துவிட்டு கொடுத்தால் ஒன்றும் செய்யாது. பாலை தனிமையாகச் சாப்பிடுவதைவிட ஆகாரத்துடன் கலந்து புசிப்பது நலம். ஏனெனில் பாலைமாத்திரம் குடித்தால் அது வயிற்றில் உடனே உறைந்துபோகிறது. பின்னிட்டு உறைந்தபால் ஜீர்ணமாகிறது. ஆனால் மற்ற ஆகாரத்துடன் கலந்து புசித்தால் பால் வயிற்றில் தயிராக மாறி சிறு தூளாக உடைந்து ஜீர்ணக்கருவியில் சென்று சுலபமாக ஜீர்ணமாகிறது.

பாலை ஈயம்பூசின பாத்திரங்களிலும், ஈயப் பாத்திரங்களிலும் வைத்திருக்கக்கூடாது. ஏனெனில் காய்ச்சினபாலை வைத்திருந்தால் புளிப்பு வந்துவிடும். பின்னிட்டு பாலை எடுத்தபின் ஏடு ஓரங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். அதில் விஷம் வந்து சேரும். அது தேகத்திற்கு பல வியாதிகளை யுண்டுபண்ணும். இங்கிலாந்தில் வெகு வருஷங்களுக்கு முன் ஒரு குடியானவனுடைய பெண் ஈயப்பாத்திரத்தில் ஓரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த பால் ஏடையை வழித்து தின்றாளாம். இதனால் வியாதியுண்டாய் மடிந்தாளாம்.

வெண்ணெய் சேர்த்து ரொட்டி புசிப்பதும் நல்லது. வெண்ணெய் ரொட்டியை ஜீரணமாகும்படிசெய்யும்.

தயிர்:—தயிரைககடைந்து மோராகச்செய்து உப்பும் கருவேப்பிலையும் போட்டு அன்னத்துடன் புசிப்பது வழக்கம். இது தேகாரோக்யத்திற்குச் சிறந்தது. தயிரைமாத்திரம் அன்னத்துடன் கலந்தும்புசிக்கலாம்; ஆனால் பலஹீனர்களுக்கு மந்த முண்டாகும். புளித்தமோரை உபயோகிப்பவர்களிடத்தில் காலரா கிருமி கிட்ட அண்டாதென அமெரிக்காவிலுள்ள டாக்டர்கள் சொல்லுகிறார்கள். மேலும் மோரை அஜீர்ணமுள்ளவர்கள் உண்டால் ஜீர்ணமாய் விடும். சோடா தண்ணீருக்குப்பதிலாக இதை உபயோகிக்கலாம்.

## மெக்லனும், டெல்கானோவும் பெசிபிக்மகாசமுத்திரத்தைக் கண்டுபிடித்த விதம்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபின் ஸ்பெயின் தேசத்து அரசன் மேற்குதிசையை நோக்கிச் சென்றால் இந்தியாவைக் கண்டுபிடிக்



கலாமென்று இன்னும் நம்பியிருந்தான். இவ்விதம் நம்பியிருந்தமையால் அவ்விதம் செய்ய மெக்லன் என்பவரை அனுப்பினான். இவர் போர்த்துக்கல் தேசத்தைச் சேர்ந்த பிரபு. இவர் முன் ஒருசமயம் இந்தியாவுக்கு சமீபத்தில் வந்திருக்கிறார். ஸ்பைஸ் தீவுகளைக்கண்டார். இச்சமயத்தில் குலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடிக்க முடியாமற்போனதை தான் கண்டுபிடிக்க மேற்கு திசையை நோக்கி 1519ம் வருஷம் செப்டம்பர்மீ 20உ 5 கப்பல்களில் 270 மனிதருடன் ப்ரயாணமானார். இவருக்கு உதவியாக டெல் கானோ என்பவர் இவருடன் சென்றார். இவர் கப்பல்களுக்குத் தலைவராயிருந்து வந்தார்.

இவர் தைரியத்துடன் தென் அமெரிக்காவின் தென்பாகத்திற்குச் சென்றார். அதுவரையிலும் அங்கு ஒருவரும் போனதில்லை. ஒருவருக்கும் அதைச்சுற்றி போகமுடியாதா வென்று சொல்லவும் முடியவில்லை. இவர் ப்ரயாணம் செய்கையில் இவரது ஜனங்கள் கலகஞ்செய்தார்கள். ஒரு கப்பலிலுள்ள ஜனங்கள் இன்னும் வெகுதூரம் போகபயந்து அவரை விட்டுவிட்டு தங்கள் கப்பலை திரும்பி நடத்திக்கொண்டுபோய்விட்டார்கள்.

மெக்லன் அவர்கள் இவ்விதம் செய்ததைக்கண்டு சிறிதும் மனம் தளராமல் தைரியத்துடன் கடற்கரையோரமாக உள்ள இடங்களை எல்லாம் நன்றாக பரிசோதனை செய்தார். கடைசியாக அகலமாயிருந்த நீர் உள்ள இடத்திற்குவந்தார். அம்மார்க்கமாய் சென்றால் வழி நேராகப்போகும் என்று நினைத்தார். இவர் அவ்விதம் நினைத்தது வீணாகப் போயிற்று. அந்த அகன்ற நீர்பாகம் ஒரு பெருத்த நதி. ஆகையால் அவர் திரும்பிவந்து கரையின் ஓரமாகவே அது இரண்டாக தென்படும் இடம் வரையில்போனார். அவர் அவ்விதம் போகும்பொழுது பெருத்த அலைகள் அடித்துக்கொண்டிருந்தன. செங்குத்தான பாறையின் மத்தியில் ஒரு வாய்க்கால் வெட்டுபோலிருந்தது. அங்கு பெருத்த அலைகள் பயங்கரமாக வீசிக்கொண்டிருந்தன. இவர் மாத்திரம் பயப்படாமலிருந்தார். ஒரு பெரும்புயல் அடித்தபொழுது இவரது மனிதரில் அநேகர் பயத்தால் இறந்தார்கள். இவர் அநேகருடைய பயத்தைநீக்கமுயன்றார். கடைசியாக அந்தவாய்க்கால் வெட்டைதாண்டினார்கள். பின்புமகத்துவமான சமுத்திரம் தோன்றிற்று. இங்கு அலைகளுமில்லை, புயல்காற்றுமில்லை. சமுத்திரம் சாந்தமாயிருந்தது. ஆகையால் இதற்குபெஸிபிக் மாகசமுத்திரம் என்று பெயரிட்டார். பெஸிபிக் என்றால் சாந்தமான என்றர்த்தம்

அங்கு ஒரு ஜலசந்தியை (Strait)க் கடந்து வந்தார். அதற்கு இவர் பெயர் இடப்பட்டது. இந்த ஜலசந்திதான் இவருக்கு தென் அமெரிக்காவைக்காண்பித்தது. உலகத்தைச்சுற்றிசரிபாதி பிரயாணம்செய்து பிலிப்பையன் தீவுகளுக்குவந்தார். இங்குள்ளவர்கள் இவருடன் சண்டைசெய்து இவரைக் கொன்றுவிட்டார்கள்.

இவர் இறந்தவுடன், டெல்கானோ பிரயாணம்செய்ய சரியாயிருந்த

ஒரு கப்பலைமாத்திரம் எடுத்துக்கொண்டு தமது ஜன்மதேசத்திற்கு திரும்பிப்போக பிரயாணம் செய்யலானார். கேப் ஆப்குட்ஹோபைச் சுற்றி வந்தார். கடைசியாக தமது ஜன்மதேசத்திற்குவந்துசேரவே, ஜனங்கள் கொண்ட சந்தோஷத்திற்கு அளவில்லை.

இவ்விதம் முற்காலத்தில் மகான்கள் தங்கள் சுயநலத்தைச் சிறிதும் கருதாமல் பற்பல கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு அநேக புதியதேசங்களைக் கண்டுபிடித்து அங்குள்ள ஜனங்களை நாகரீகமுள்ளவர்களாகச் செய்து அவர்களை நல்லஸ்திதிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவ்வித தைரியம் பொருந்தியவர்களுடைய சரித்திரங்களை நமது சிறுவர்நன்றாய் படித்துவரவேண்டுமென்றஎண்ணத்துடன் அவர்கள் செய்தபிரயாணங்களைக்குறித்து எழுதிவருகிறோம். அடுத்தமாசப்பத்திரிகையில் ஆப்ரிக்காவுக்குப்போய் அங்குள்ளவர்களைக்கண்டு அவர்களுக்கு நன்மைசெய்தசில கனவான்களின்சரித்திரங்களை எழுத எண்ணியிருக்கிறோம். பத்திராதிபர்.

---

# ரஸிகை

(145-ம் பக்கத்தொடர்ச்சி)

[முறுவலுற்ற முகத்துடன் எழுந்துட்காருகின்றான் ரமணன்]

ருக்மணிரமணன்.—என்ன லோசனா! நான் என்னென்ன வார்த்தைகளைப் பிதற்றினேன்?

ஸத்யலோசனன்:—"வசீகரீ! வசீகரீ! நான் என்னசெய்வேன்! ஸாஸ்வதி யன்னையல்லவோ உன்னை என் காட்சிக்களித்தாள்" என்று சொன்னாய். நான் "அண்ணா! அண்ணா!" என்றழைத்து உன்னை எழுப்பினேன். அதற்கு நீ "என்ன வசீகரி! நான் உனக்கு அண்ணனா?" என்றனை.

ருக்.—இந்த வார்த்தைகளைத்தானே பிதற்றினேன். வேறொன்றுஞ் சொல்லவில்லையே?

ஸத்.—வேறொன்றுஞ் சொல்லவில்லை—என்ன கனவுகண்டு அப்படிப் பிதற்றினையண்ணா?

ருக்.—உன் கண்கள் சிவந்திருக்கின்றனவே. நீ படுக்கைக்கு வந்தது முதல் தூங்கவேயில்லையோ?

ஸத்.—ஆமாமண்ணா! நான் தூங்கவேயில்லை. நீ என்ன கனவு கண்டாய்? சொல்.

ருக்.—அர்த்த ராத்திரியில் விழித்துக்கொண்டு கனவுகளைப்பற்றி வீண்பேச்சுக்கள்பேசி ஏன் நமது நித்திரையைப் பங்கப்படுத்தவேண்டும்? சயனித்து நமது அம்மணியைத் தியானித்துக்கொண்டே தூங்கலாம், படு.



ஸத்.—உன் ரகஸ்யத்தை நான் முற்றும் அறிந்து கொள்வதற்கு முன் நான் தூங்கவே மாட்டேனென்று சற்றுநேரத்திற்கு முன்புதான் நான் பிரதிக்கினை செய்துகொண்டேன்.

ருக்.—என் ரகஸ்யமா! என்ன ரகஸ்யம்!

ஸத்.—என்ன ரகஸ்யமென்று எனக்குத்தெரிந்திருந்தால்தான் என் பிரதிக்கினைப்பிரகாரம் நான் நித்திரை செய்வேனே.

[ரமணன், பித்தம் பிடித்தவனைப் போல் சற்றுநேரம், தன் பார்வையை நாற்புறமும் செலுத்தி விழிக்கின்றான். பின்பு தலையணைமீதுசாய்ந்து கண்களை மூடிக்கொள்கின்றான்.]

ருக்.—லோசனா! எனக்கு மயக்கமாயிருக்கிறது நான் தூங்கவேண்டும்.

ஸத்ய.—(அண்ணனைத்தழுவி முத்தமிடுகின்றான்) அண்ணா! உன் ரகஸ்யத்தை எனக்குச் சொல்லுவதில் உனக்கு என்ன லஜ்ஜை? நான் உன் உயிர்ச் சகோதரனல்லவா?

[ருக்மணி ரமணன் நித்திரையிலோ அல்லது ஒரு மயக்கத்திலோ இருந்ததால் பதிற்பேசவில்லை,]

ஸத்.—அண்ணா! அண்ணா! அண்ணா! அண்ணா!

[உத்தரமேயில்லை.]

ஸத்.—இதென்னமயக்கம்! சாதாரண தூக்கமயக்கமோ! காதல் மயக்கமோ! அல்லது ஞானிகளின் யோக மயக்கமோ! தூக்கமயக்கமாயிராது. க்ஷணப்பொழுதிலா தூக்கம்வந்துவிடும்? என்ன மயக்கமா யிருந்தபோதிலும், அதை நீக்கி என் அண்ணன் சித்தத்தைத் தெளிவிக்கவேண்டும்.

[மஞ்சத்திலிருந்து இழிந்து சென்று ஒருமேஜைமீதிருந்த பன்னீர்ப் பாத்திரத்தை எடுத்துவந்து மீண்டும் மஞ்சத்திலேறித் தன் அண்ணன் முகத்திற் பன்னீர் தெளித்துக்கொண்டே அண்ணா! அண்ணா! அண்ணா! என்றழைக்கின்றான்.]

ருக்.—(கண்விழித்து) ஏன் லோசனா என் நித்திரையைக் கெடுக்கின்றாய்?

ஸத்ய.— அண்ணா! நான் உனக்குத் தினையளவேனும் தீங்கிழைப்பேனா? நீ தலையணைமீது சாய்ந்தவுடனே பிரஜ்ஞையற்றிருந்தா யாகையால் நீ தூங்கவில்லை, என்னவோ ஒருமயக்கத்திலிருக்கிறாய் என்றெண்ணி உன் முகத்திற் பன்னீர் தெளித்து உனக்குப் பிரஜ்ஞை வரச்செய்தேன். அண்ணா!உன் சித்தம் இப்பொழுது ஒரு சாதாரண சலனமடைந்திருக்கிறது. அந்தச் சலனம்நீங்கி உன்சித்தம் தெளிவடையும்பொருட்டு, எழுந்துட்கார், சற்றுநேரம்பேசிக்கொண்டிருப்போம். (தன்கரங்களால் ரமணன் சிரத்தையும் சரீரத்தையும் நிமிர்த்தி அவனை உட்காரச்செய்கின்றான்.)

இந்தப் பன்னீரால் உன்கண்களைச் சுத்தம்செய்துகொள் (பன்னீர்ப்பாத்திரத்தைக்கொடுக்கின்றான். ரமணனும் அவ்வாறே தன்கண்களைச் சுத்தம் செய்து கொள்ளுகின்றான்.) இப்பொழுது உனக்கு ஒருமயக்கமுமில்லையே

ருக்.—இல்லை.

ஸத்ய.—ஏனண்ணா நீ புதிய அண்ணனாகமாறிவிட்டாய்? சொல்லு, சொல்லு. இரண்டுநாளாக நீ இருக்கும் ஸ்திதியைப்பற்றி நினைத்து நினைத்து நான் ஏங்குகிறேன். என்னவோ ஒரு விஷயத்தைப்பற்றிய சிந்தனையில் நீ ஆழ்ந்திருக்கிறாய். அந்த விஷய மென்னவென்று நீ சொல்லுகிறவரையில் நான் உணவையும் உறக்கத்தையும ஒழித்து வருந்துவேன். (கண்களிலிருந்து ஜலம்பொங்கிவழிகின்றது.) ஏனண்ணா உன் ரகஸ்யத்தை எனக்குச் சொல்லக்கூடாது? நீ என்னை வெறுக்கிறாயா? ஹா! உன் சொந்த லோசனையும் வெறுக்கும்படியான தன்மை எப்படி உன் மனத்திற் புகுந்தது? (ரமணன் விழிகளிலும் நீர் பொங்குகின்றது.) அண்ணா? உன்னுடைய ஹிதத்தையும் என்னுடைய ஹிதத்தையும் நாடிச் சொல்லுகிறேன். நான் எப்பொழுதும் உனக்கினிய உன் சொந்த உயிர்ச்சகோதரன். உன் ரகஸ்யத்தை எனக்குச்சொல்வதால் உனக்கு யாதொரு இன்னலுமில்லை சொல் அண்ணா? சொல். என்ன ரகஸ்யம்? சொல். நமது அரசபுத்திரி வசீகரியைக் காதலிக்கின்றாயோ? அதுதானா—

ருக்.—(முகஞ்சிவக்க, இதழ்பதைக்க) தாயே! லோகநாயகீ! நான் மறைத்தபோதிலும் நீயே தெரிவித்துவிட்டாயே.— ஆமாம் லோசனா! அதுதான் என் ரகஸ்யம். அதுதான் என் உள்ளத்திலிருக்கத் தகாத ரகஸ்யம்.

ஸத்.—இந்த ரகஸ்யத்தைத்தானா எனக்குச் சொல்லாமலிருந்தாயண்ணா?

ருக்.—என்ன! அந்த ரகஸ்யத்தைப்பற்றி அவ்வளவு அலட்சியமாய்ப் பேசுகிறாயே.

ஸத்.—நான் அலட்சியமாய்ப் பேசவில்லை. இந்த ரகஸ்யத்தை எனக்குத் தெரிவிப்பதிற் பாதகமொன்றுமில்லையென்றுதான் கருதினேன்.

ருக்.—எனக்குச் சற்றுந்தகாத இந்தரகஸ்யத்தைச் உனக்குச் சொல்வது உன் பரிசுத்தமான மனத்திற்கு மிகுந்த லஜ்ஜையையும் துன்பத்தையும்தரும் என்றெண்ணித்தான், நான் உனக்குச் சொல்லாதிருந்தேன். ஆனால், யாவும் ஸாரதாதேவியின் செயல்கள். அந்த அம்மணி உன்முன் என்னைக் கனவிற் பிதற்றச்செய்து, என் பாவமயமான ரகஸ்யத்தை உனக்குத் தெரிவித்துவிட்டாள்.

ஸத்ய.—பாவமயமான ரகஸ்யம், எனக்குச் சிறிதும் தகாத ரகஸ்யம்" என்று ஏன் சொல்லுகிறாயண்ணா?



ருக்.—ஆமாம், அது பாவமயமானதுதான். நான் நமது காருண்ய அரசரது பிரஜைகளிலொருவன். அவரது புத்திரிகள் நமக்கு அரசிகளாலதற்குரியவர்கள். ஆகையால் அவர்கள் நமக்கு 'அன்னைகள். அன்னைபாற் செலுத்தும்பக்தியைத் தவிர்த்து, காதல் என்ற கிளர்ச்சி அரசபுத்திரியின் பால் எனக்கிருப்பது தகுமா? அது பாவமயமான கிளர்ச்சியல்லவா?

ஸத்ய.—அது உனக்குத் தகாத கிளர்ச்சியாயிருந்தால், அது பாவமயமான கிளர்ச்சியா யாயிருந்தால், ராஜஸ்திரீகளின் அந்தப் புரச் சட்டத்தை நீ மீறினவனல்லவா?

ருக்.—ஆமாம். மீறினவன்தான்.

ஸத்ய.—அப்படியானால் நான் அன்று கூஜாவில் ஜலங் கொணர்ந்தபொழுது, நீ அந்தப்புரச்சட்டத்தினால் தண்டிக்கத் தகுந்த யாதொரு எண்ணமும் எண்ணவில்லை என்று சொன்னாயே?

ருக்.—ஆமாம். சொன்னேன். என் மனத்திலிருந்த கிளர்ச்சி களங்கமயமானதென்று அப்பொழுது எனக்குத் தோன்றவில்லை. அரசபுத்திரிகளை முதல் முதல் நான் கண்டவுடனே வசீகரியின் முகத்தில் அற்புதமான தேஜஸும் சௌந்தரியமும் பிரகாசித்ததாக எனக்குத் தோற்றியது. அப்பொழுது மூர்ச்சித்து வீழ்ந்தேன். மூர்ச்சை தெளிந்தெழுந்தவுடனே வசீகரியின் முகத்தைப்பார்த்தேன். அவள் ஒரு தெய்வத்தன்மை வாய்ந்த ஸ்திரீயாகத் தோன்றினாள். என் மனத்தில் ஒரு பேரானந்த பரவசம் வியாபித்தது. அந்தப் பரவசம், நமது தேசத்தின் உயிராய் விளங்கும் அரசரது அதியற்புத சௌந்தரிய புத்திரியைத் தரிசித்தவுடனே இயற்கையாகவே என்னுள்ளத்திலுள்ளராஜபக்திப் பெருக்காலுண்டான பரவசம் என்றெண்ணினேன். அவ்வாறு எண்ணித்தான், நான் அந்தப் புரச்சட்டங்களினால் தண்டிக்கத் தகுந்த யாதொரு எண்ணமும் எண்ணவில்லை என்று தீரமாக அப்பொழுது சொன்னேன்.

ஆனால், அன்றிரவு நான் வீட்டுக்கு வந்தபின்பு சற்றுநேரம் தனிமையிலிருந்தேன். அப்பொழுது நான் பூஞ்சோலைக்குச் சென்றதையும் அரசபுத்திரிகளைக் கண்டதையும் அமிர்தம் பருகினதையும் பற்றி விழித்துக்கொண்டே ஒரு கனவு கண்டேன். அப்பொழுது முதல் என் சித்தம் ஒரு மாறுபாடுற்றுவிட்டது. எப்பொழுதும் வசீகரி என் கண்முன் நிற்பதுபோல் என் சித்தத்தில் ஒரு பிரம்மை நிலைத்திருக்கிறது. அவள் முகத்தின் காந்தியும்! கண்களின் பிரகாசமும் மருட்சியும்! ஹா! இன்னும் எத்தனையோ விஷயங்கள் என் சித்தத்திற் சுழன்று சுழன்று சுகமயமான ஒருவித சோகத்தைக்கொடுக்கிறது. நான் பூஞ்சோலையிலிருந்து வீட்டுக்கு வந்த பிறகு தான் என் மனத்தின் உண்மையான தன்மையை அறிந்தேன். வசீகரியின் முன், என்மனம் அடைந்த பரவசம் அந்த உள்ளத்தில்

இயற்கையாகவே யுள்ள ராஜ பக்தியினா லுண்டானதல்ல, அதிற் புதிதாய் உதித்த காதல் என்றகிளர்ச்சியால் உண்டாயிற்று என்று அப்பொழுது தான் அறிந்தேன்.

அறிந்தவுடனே நான் அன்னையாகக் கருதவேண்டிய ராஜபுத்திரியின் பாற்காதலுற்றது எவ்வளவு பாதகமென்பதையும் உணர்ந்தேன். என் உள்ளத்திலிருக்கத்தகாத அந்தக் காதலை என் அகத்திலிருந்து பிரஷ்டப்படுத்த என்னாலியன்றவரையில் யத்தனித்தேன். இன்னும் யத்தனிக்கிறேன். ஆனால் வசீகரியின் உருவம் என் சித்தத்தை விட்டு நீங்கவில்லை. பட்டினத்தடிகள் பாடல்கள் வைராக்கிய சதகம் முதலிய ஞானநூற்களில் பெண்ணாசையை இழித்துப் பழித்துக் கூறும் பாகங்களையெல்லாம் வாசித்தால் என் உள்ளக்கிளர்ச்சி ஒழிந்துவிடு மென்றெண்ணி அவைகளை மிகுந்த விநயத்தோடும் ஆர்வத்தோடும் வாசித்தேன். ஆனால் அந்தப் பாட்டுகளெல்லாம் கேவலம் புலன்களால் அநுபவிக்கும் போகங்களின் அற்பத்தன்மையையும் நிலையற்ற தன்மையையும் தெளிவாய் விவரித்து, அந்தப் போகங்களை ஆசிக்கும் இச்சையென்ற கிளர்ச்சியை எரிக்கத்தகுந்த சக்தியுடையனவா யிருக்கின்றனவே யன்றி, என் அகத்திலிருக்கும் காதலை அழிக்கச் சக்தியற்றனவாயின.

ஆகையால், மகா உன்னத அந்தஸ்தையுடைய பரிசுத்தவதியாகிய வசீகரியின் பால் நான் கொண்ட பாதகக் காதலை என் மனத்திலிருந்து ஒழிக்கும்படி நமது சமயோசித சஞ்சீவியாகிய ஸ்ரீஸரஸ்வதி யன்னையைத் தியானித்தேன். ஆனால் ஐயோ! என் தியானகாலத்திலும் வசீகரியின்சித்திரம் என் சித்தத்திலிருந்து நீங்கவில்லை, நமது அம்மணியும் இவ்விஷயத்தில் எனக்கு அருள்செய்யவில்லை, நான் என்ன செய்வேன்! என்ன செய்வேன்! பலசமயங்களில் என் காதல் பாதகமான கிளர்ச்சி யென்ற உண்மையையும் மறந்துவிடுகிறேன். நீ என்னை எழுப்பியபொழுது நான் என்ன கனவுகண்டு கொண்டிருந்தேன் தெரியுமா?

நான் அந்தப் பூஞ்சோலைக்குப் போனதாகவும், வசீகரியைக் கண்டதாகவும், அவள் என்னை நோக்கி "நீ அந்தப்புரத்திற்குள் மீண்டும் ஏன் வந்தாய். என் தந்தைக்குச் சொல்லி உன்னைச் சிறையிலடைக்கிறேன்," என்று சொன்னதாகவும், கனவுகண்டு, கனவில் வசீகரி சொன்னதிற்குச் சரியானபதிலும் சொல்லாமல் பைத்தியங் கொண்டவனைப்போல் அந்தப் புண்ணியவதியின் பெயர் சொல்லி அழைத்து வசீகரி! வசீகரி! நான் என்ன செய்வேன்! ஸரஸ்வதி யன்னையல்லவோ உன்னை என் காட்டிக் களித்தாள்." என்ற பாதக வார்த்தைகளைப் பிதற்றினேன்.—ஹே! தேவீ ஸர்வேஸ்வரீ! பங்கஜவல்லீ! பாதக எண்ணங்களை என் ஹிருதயத்தினின்று ஒழித்து அதைப் பரிசுத்தப்படுத்துவாய்!—லோசனா! நான் அவளையே நம்புகின்றேன்.



ஸத்ய.—ஆமாம் அண்ணா! அம்மணியையே நம்பியிரு, அவள் அவசியம் உன் மனத்திற்கு எவ்வாறேனும் அமைதியை அளிப்பாள்.—உன் வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து எனக்கு ஒருவிஷயம் தெளிவாய்த் தெரியவில்லை.

ருக்.—என்ன விஷயம்?

ஸத்ய.—இச்சை என்றாலென்ன? காதல் என்றாலென்ன? பக்தியென்றாலென்ன?

எஸ். ஏ. சுப்பராயன்.

---

# பழமொழி.

1. மாமி ஒட்டினாலும் பானை ஒட்டாது.
2. மாமி மெச்சிய மருமகள் இல்லை.
3. மாமி யாருக்குக் கண்மண்டைபிதுங்கிப் போகிறது.
4. மாமி யாருக்குச் சுவாமியார் இவள்.
5. மாமி யாருக்கும் மாமியார் வேண்டும்.
6. மாமி யாரும் ஒரு வீட்டு நாட்டுப் பெண் (மாட்டுப் பெண்) தான்.
7. மாமி யாரும் சாகாளோ, மனக்கவலையும் தீராதோ?
8. மாமி யாரைக் கண்டு மருமகள் நாணுகிறது போல.
9. மாமி யார் உடைகுலைந்தால் வாயாலும் சொல்லக் கூடாது, கையாலும் காட்டக் கூடாது.
10. மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால்பொன் கலம்.
11. மாமி யார் வெல்லத்தைப் பார்க்கிலும் மருமகள் கைத்தவிடு தேவையில்லை.
12. மாமி யார் செத்த ஆறும் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர் வந்ததாம்.
13. மாமி யார் செத்து மருமகள் அழுகிறது போல.
14. மாமி யார் தலையிலே கையும் வேலிப் புறத்திலே கண்ணும்.
15. மாமி யார் தலையில் கையும் மாப்பிள்ளை மேல் சிந்தையும்.
16. மாமி யார் மெச்சினமருமகளில்லை, மருமகள் மெச்சினமாமியாரில்லை.
17. மாமி யார் வீடு மகா சௌக்கியம்.
18. மாம் பழத்திலிருக்கும் வண்டே! மாமி யாருக்கும் மருமகளுக்கும் சண்டை.

## Scientific Notes

## சோளப்பயிரும் கரிநோயும்

சில ஜில்லாக்களில் சோளப்பயிருக்கு கரிநோய் என்னும் ஒருவித நோயுண்டாகி பயிர் அழிகிறது. இவ்விதநோய்க்கு சோளவிதைகளிலுள்ள கண்ணுக்குப்புலப்படாத நுண்ணிய கருமிகளே காரணமென்று சாஸ்திர ஆராய்ச்சியார் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்விதநோய் பயிர்க்கு உண்டாகாமல் தடுப்பதற்கு சோளவிதைகளினின்றும் மேற்கூறப்பட்ட கிருமிகளை நீக்கவேண்டிய தவசியம். சோளவிதைகளை கீழ்கண்டமுறைப்படி மயில்துத்தங்கரைத்த ஜலத்தில் 15 நிமிஷம்வரையில் ஊறவைத்து பின்னர் அவைகளை பக்குவப்படுத்தி விதைத்தால் மேற்சொல்லிய பயிரழிவை நீக்கிவிடக்கூடும். ஒரு சாதாரண கிருஷ்ணையில் புட்டியளவு ஜலத்தில் ஒரு தோலா மயில்துத்தம் கரைத்து அந்த ஜலத்தில் சோளவிதைகளை ஊறப்போடவேண்டும். இந்த ஜலத்தை மரத்தொட்டிகளிலும் பீங்கான் பாத்திரங்களிலும் வைத்துக் கொள்ளவும்.

---

## புகையிலையினாலுண்டாகும் நன்மைதீமைகள்.

புகையிலை: பிடிப்பதனால் வாயிலும் எச்சிலிலு மிருக்கும்படியான நுண்ணிய கிருமிகள் அழிகின்றன. இதை சாஸ்திரபண்டிதர்கள் வேறு விதமாகவும் நிரூபித்திருக்கின்றனர். ஆயினும் புகையிலையினால் கெடுதியுமுண்டு. புகையிலை இருதயத்தின் பலத்தைக் குறைக்கின்றது. இதனால் தேகம்கெட்டு மரணமும்சம்பவிக்கின்றது. AGRICULTURAL WORLD.

## இரட்டைக் கண்ணி.





THE REGISTRAR OF BOOKS REGISTERED 1914 MADRAS.

### முதல் பாகம்.

ஒரு காலத்தில் ஒரு ஸ்திரீ தன்து மூன்று பெண்களுடன் ஒரு ஊரில் வசித்துவந்தாள். இவள் கணவன் காலகதியால் இறந்துவிட்டான். இவளுடைய மூத்தகுமாரியின் பெயர் சிறிய ஒத்தக்கண்ணி. ஏனெனில் இவளுக்கு ஒரு கண் தான் இருந்தது. அதுவும் நெற்றியின் மத்தியிலிருந்தது. இரண்டாவது குமாரத்தியின் பெயர்சிறிய இரட்டைக்கண்ணி. ஏனெனில் எல்லாரைப்போல் இவளுக்கு சரியாக இரண்டுகண்களிருந்தன. இளையகுமாரத்தியின் பெயர் முக்கண்ணி. ஏனெனில் நம்மைப்போல் சரியான இடங்களில் இரண்டுகண்களும் நெற்றியில் ஒருகண்ணுமிருந்தன.

இரட்டைக்கண்ணியைப் பார்த்து மற்ற இரு பெண்களும் தாயாரும் பொறாமை கொண்டார்கள். ஏனெனில் இவள் எல்லாரைப்போல் இருந்தாள் அல்லவா? அவளை அடிப்பார்கள். தாங்கள் கட்டி கிழிந்த புடவைகளை அவளுக்கு கொடுப்பார்கள். தாங்கள் புசித்தபின் தங்கள் தாம்பாளங்களில் மீதுள்ள அன்னாகாதிகளைத் தான் அவளுக்கு கொடுத்து வந்தார்கள்.

சிறிய இரட்டைக் கண்ணியை ஆடுகளைமேய்க்கவும் அவைகளைப் பாதுகாக்கவும் வயல்களுக்கு அனுப்புவார்கள். இப்படி இவள் நாள் தப்பாமல் போய்வருவாள். ஒரு நாள் வயலிலிருக்கும் பொழுது இவளுக்கு பசி அதிகரித்தது. உடனே கீழே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அச்சமயத்தில் தன்னைநோக்கி பார்த்துக் கொண்டிருந்த ஒரு கிழ ஸ்திரீயைக் கண்டாள். அந்த கிழ ஸ்திரீ "சிறிய இரட்டைக்கண்ணியே! நீ என்னத்திற்காக அழுது கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"எனக்கு பசி அதிகரித்திருக்கிறது. என் சகோதரிகளும் தாயாரும் வீட்டில் என்னிடத்தில் ப்ரியமாயிருப்பதேயில்லை. ஏனெனில் எல்லாரைப்போல் எனக்கு இரண்டுகண்களிருப்பதால் அவர்களுக்கு என் மேல் பொறாமை." என்றாள்.

கிழவி விவேகமுள்ள ஸ்திரீ. வனதேவதையே கிழவிஉருவம்கொண்டு வந்திருக்கிறாள். இவள் இதைக்கேட்டு இப்பெண்மீது இரக்கங்கொண்டு "அம்மா! இரட்டைக்கண்ணியே! உன் கண்ணீரைத் துடைத்துக்கொள். உனக்கு பசியுண்டாகும் பொழுதெல்லாம் "சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே, என் கண் முன்வா" என்று ஆட்டு முகத்தைப்பார்த்து சொல். உடனே ஒரு அழகான மேஜையும் வந்துவிடும். அதன்மேல் நேர்த்தியான ஆகாரங்களிருக்கும். நீ அவைகளைப் புசித்தவுடன் 'சிறிய ஆடே! அழு சிறியமேஜையே போய்விடு' என்று சொல், அது உன் கண்

னுக்குத் தெரியாமல் மறைந்துபோய்விடும். அவ்வளவு தான் நான் உனக்கு செய்யக்கூடியது, நான்போய் வருகிறேன்" என்று சொல்லி அந்த விவேகமுள்ள கிழவி மறைந்து விட்டாள்.



சிறிய இரட்டைக்கண்ணிக்கு பசி அதிகரித்தது. உடனே அந்த வன தேவதை சொன்னபடி முயற்சிசெய்ய வேண்டுமென்று நினைத்தாள். அப்படியே 'சிறிய ஆடே அழு, சிறியமேஜையேவா' என்று சொன்னாள். உடனே அவள் முன் ஒரு அழகான சிறிய மேஜை தென்பட்டது. மேஜையின்மேல் ஒரு அழகான துணி விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் ருசியுள்ள ஆகாரங்களிருந்தன. அவைகள் இப்பொழுதுதான் சமையல்செய்து வைக்கப்பட்டவைகள் போல் தென்பட்டன. ஏனெனில் அவைகள் ஆறிப்போகாமல் சுடசுட யிருந்ததாம். அந்தப் பெண்பசியாற ஆகாரங்களைப் புசித்தாள். பின்பு 'சிறிய ஆடே அழு, சிறியமேஜையே போய்விடு' என்று சொல்லவே, உடனே எல்லாம் மறைந்து போயிற்று.

சிறிய இரட்டைக்கண்ணி ஆடுகளையெல்லாம் தன்வீட்டுக்கு திரும்பி ஓட்டிக்கொண்டுபோன பொழுது வீட்டில் பூந்தொட்டியில் ஒரு தட்டில் ஆறிப்போன ரொட்டி துண்டுகளை அவர்கள் ஒதுக்கி வைத்திருப்பதைக் கண்டாள். இவளுக்கோ இப்பொழுது பசி என்பதே கிடையாது. ஆகையால் அவைகளை பூனைக்குக் கொடுத்துவிட்டாள்.

இச்சிறு பெண்ணுக்கு இப்பொழுது சாப்பாட்டு விஷயமாக விசாரமேயில்லை. ஏனெனில் இவளுக்கு வேண்டியளவு புசிக்க அன்னம் கிடைக்கிறதல்லவா? தினம் இவள் வெளியில் ஆடுகளை மேய்க்கபோகும்பொழுது 'சிறிய ஆடே அழு, சிறியமேஜையே வா? என்றுசொல்லுவாள். உடனே



தேவதையின் வரப்ரசாதத்தால் அறுசுவையோடு அன்னாகாராதிகள் வந்துவிடும். மெலிந்தும், சதையின்றி எலும்புகளுடன் தோன்றின இப்பெண்மணி பலமுள்ளவளானாள். இவள் மனதிலிருந்து விசனம் நீங்கி சந்தோஷம் உண்டாயிற்று. வீட்டில் இவளுக்கு கொடுக்கும் பிரயோஜனமற்ற ரொட்டி துண்டுகளைப் பூனைக்கு கொடுத்து வந்தாள். பூனைபாடு அதிர்ஷ்டமேயாம்?



இப்படி இவள் செய்து வருகையில் இவள் முகத்திற் சந்தோஷக்குறியும், தேகத்தில் பலமும் இருப்பதை இவள் சகோதரிகள் கண்டுபொறாமை கொண்டார்கள். "நமக்கு இவளிடத்தில் சிறிதும் அன்பு கிடையாது. இவளுக்கு நாம் முன் எவ்விதமான ஆகாரம் கொடுத்தபோதிலும் அதை வெறுக்காமல் புசிப்பாளே. இப்பொழுது அவ்விதம் செய்வதில்லை. ஏதோ காரணமிருக்கிறது. அதை நாம் தீர அறியவேண்டும். அதற்காக அவள் எவ்விடத்திலிருந்து தினம் உண்ண உணவை அடைகிறாள் என்பதை உற்று கவனித்து வருவோம்" என்று எல்லோரும் ஒருமிக்க சேர்ந்து யோசித்து தீர்மானித்தார்கள்.

மறு நாள் சிறிய ஒற்றைக்கண்ணி சிறிய இரட்டைக் கண்ணியைப் பார்த்து 'நீ பசுமையான புல் நிறைந்த இடங்களில் ஆடுகளைமேயும்படி விடுகிறாய் என்று நான் நம்பவில்லை. நீ அவ்விதம் நிச்சயமாய் செய்கிறாயா வென்பதை அறிய இன்றையதினம் உன்னுடன் வருகிறேன்.' என்றாள்.

ஆனால் தன்னுடைய மனதிலிருப்பது சிறிய இரட்டைக் கண்ணிக்கு நன்றாகத்தெரியும். சரி என்று சொல்லி ஆடுகளை ரஸ்தாவின் வழியாக வெயிலில் ஓட்டிக்கொண்டுபோய் பின்பு பசும்புல் நிறைந்த மைதானத்திற்

குப் போனாள். அவள் சகோதரியும் கூடவந்தாள். வெயில் அதிகமாயிருந்தது. இருவரும் களைப்புற்று புல் தரையில் உட்கார்ந்தார்கள். சிறிய ஒற்றக்கண்ணி வெயிலால் வருந்துவதைக்கண்டு "சகோதரியே! இங்கே படுத்து இளைப்பாறு. நான் உனக்கு பாட்டு பாடுகிறேன்" என்றாள்.

பின்பு சிறிய ஒற்றக்கண்ணி புல்லில் படுத்தாள். சிறிய இரட்டைக்கண்ணி ஒரு குழந்தையை தூங்கும்படி செய்ய தாயார் தாலாட்டு சொல்வதுபோல் தானும் பாதி தூக்கத்துடன் பாடினாள். 'சிறிய ஒற்றக்கண்ணி! கண் விழித்துக்கொண்டிருக்கிறாயா? தூங்குகிறாயா?" என்றும் பாட்டாகப்பாடினாள். இப்படி பலதரம் திருப்பித்திருப்பி பாடினமையால் சிறிய ஒற்றக்கண்ணி நிஜமாகவே துயிலுற்றாள்.



தன் சகோதரி சிறிய ஒற்றக்கண்ணி தூங்க ஆரம்பித்தவுடன், சிறிய இரட்டைக்கண்ணிக்கு பசி அதிகரிக்கவே, உடனே சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே வா, என்று சொன்னாள். வழக்கம்போல் மேஜை இவள் முன் தோன்றிற்று, நல்ல சாப்பாட்டை இப்பெண் நன்றாகப் புசித்தாள். பின்பு 'சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே போய்விடு' என்று சொன்னவுடன் அவைகள்மறைந்துவிட்டன, அச்சமயத்தில் சிறிய ஒற்றக்கண்ணி கண் விழித்துக் கொண்டாள். இருவரும் ஆடுகளுடன் தங்களிருப்பிடத்திற்குப் போனார்கள். வழக்கப்படி சிறிய இரட்டைக்கண்ணி ரொட்டி துண்டுகளுள்ள தட்டை பூனைக்கு வைத்தாள். இவள்சகோதரிகள் செய்வது மூடத்தன மானதே.

[அடுத்த பத்திரிகையில் இக்கதை முடிவுபெறும். ப. ர்.]



## சாமர்த்தியமான காரியத்தைச்செய்த சிறுவன்

## The Story of Hans

குழந்தைகளே! மிகவும் சாமர்த்தியமான காரியத்தைச் செய்த ஒரு சிறுவனைப்பற்றிய உண்மைக் கதையொன்று உங்களுக்குச் சொல்லப் போகிறேன்: அப்பையன் நம்மைப்போல் ஆசியாக் கண்டத்தில் வசிக்கவில்லை. கடலுக்கு வெகுதூரத்துக்கப்பாலுள்ள வொருதேசத்தில் குடியிருந்தான். அவன் பெயர் ஹான்ஸ். அவன் பெற்றோர்கள் வறுமைத்தசையிலிருந்தமையால், அவர்கள் பாடு பட்டுழைத்துப் பணம் சம்பாதித்து ஹான்ஸுக்கு உண்டி, உடைமுதலியவை வாங்கிக்கொடுத்து ஜீவனம் செய்து வந்தார்கள். ஹான்ஸும் அடுப்புக்கு விறகும், கிணற்றிலிருந்து ஜலமும் கொணர்ந்து கொடுத்து ஏதோ தன்னால் கூடியமட்டும் அவர்களுக்கு உதவியாயிருந்து வந்தான்.

ஹான்ஸ் முதலில் கலாசாலைக்குப் போனபோது மற்றமாணவர்களைப் போல் அவன் நல்ல தேர்ச்சியுள்ளவனாயிருக்க வில்லை. இன்னுமவன் விளையாடுவதிலும் ஒழுங்கீனமாயிருந்ததால் அவனைப் பரிகாசமாய் அறியாக் குழந்தை யென்று அவர்கள் அழைத்தார்கள். நாளாக ஆக, அவன் தன் பாடங்களை சிரமப்பட்டுக்கற்று அவைகளில் தேர்ந்தான். சீக்கிரத்திலேயே விளையாட்டுகளிலும் நற்பயிர்ச்சியடைந்து உபாத்தியாயராலும் மற்ற மாணாக்கர்களாலும் கொண்டாடத்தக்கவனானான். இவன் நண்பர்களெல்லாம் 'இவனா அறியாக்குழந்தை? என்று மதிசயப்பட்டார்கள். இருந்தும், அநேக விஷயங்களில் மற்ற பிள்ளைகளைப் போலிருந்தானேயன்றி விசேஷ குணம் பொருந்தினவனல்ல.

எப்பொழுதும் ஹான்ஸ் அதிகாலையிலெழுந்து விறகும் தண்ணீரும் கொண்டுவருவது வழக்கம். காலைக்கடன்கள் முடிந்ததும் தன்குல்லாயை எடுத்து வைத்துக் கொண்டு கலாசாலையை நோக்கிச் செல்வான். மார்க்கத்தில் ஒவ்வொரு சமயம் புஷ்பங்களைக்கொய்து கொண்டு நிற்பதும், பூச்சிகளைத் துரத்துவதும், சிலவேளை தவளை வழியில்தத்திக் கொண்டுவந்தால் அதை உற்றுநோக்கிக் கொண்டிருப்பதுமே வழக்கமாய்ப் போய்விட்டது. இவைகளெல்லாம் அவன் காலம் சென்று வித்தியாசாலையை அடையக் காரணமாயின. இவ்வாறிவன் ப்ராக்குப்பார்த்துக் கொண்டு போவதற்குள் பள்ளியில் மணியடித்து விடுவதுமுண்டு. மணிச்சத்தம் காதிற்பட்டவுடன் பையன் அதிவிரைவாயோடி கதவு மூடுவதற்குள் உள்ளே பாய்ந்து விடுவான். ஒரு நாள் வரும் வழியில் சிலந்திப் பூச்சியொன்று கூடுகட்டுவதை வழக்கம்போல் பார்த்துக் கொண்டிருந்தான். அதை அதிக ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்ததால் கால தாமதமானதை பையன் அடியோடு மறந்து விட்..ான். பாடசாலைமணி டிங், டிங், டிங், என்று அடித்து

விட்டது. ஹான்ஸ் இருந்த விடத்திற்கும் பள்ளிக்கும் வெகுதூரமிருந்ததால் அவன் விரைந்தோடியும் பலிக்கவில்லை. வாசற்படி ஏறுவதற்குள் கதவு படீடென்று சாத்தப்பட்டது. உள்ளே செல்ல வேறு வழியில்லை. கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவன் உபாத்தியாயர் கதவைத் திறந்து கொண்டு வந்து ஹான்ஸைப்பார்த்து ஏனிவ்வளவு தாமதமின்றைக்கென்று கேட்டார். “ஐயா, நான் வரும்வழியில் ஒரு சிலந்தி கூடு கட்டிக் கொண்டிருந்தது. அது எப்படிக் கட்டுகிறதென்று உற்றுநோக்கிக் கொண்டிருந்தேன். நேரமானதைக் கவனிக்கவில்லை. என்னைதயை கூர்ந்து மன்னியுங்கள்” என்று ஹான்ஸ் வேண்டினான். உபாத்தியாயர் அது கேட்டுக் கோபமீறி, “எல்லாப்பையன்களும் போனபிறகு அரைமணிவரைக்கும் நீ பள்ளியில் தங்கி பாடங்களை ஒப்புவித்து விட்டுப் போகவேண்டியது” என்று உத்திரவுசெய்தார். ஹான்ஸ் உட்கார்ந்து தன் பாடங்களைப் படித்தான். அப்பொழுதுதான், உபாத்தியாயர் தங்கிப் போகும்படி சொன்னதை மறந்து விடுவாரென்றெண்ணினான். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறாதெனச் சீக்கிரத்திலேயே அறிந்து கொண்டான்.

---

## ஹாலெண்ட்.

நானிப்பொழுது ஹான்ஸ் வாஸம் செய்த விடத்தைப் பற்றி உங்களுக்குக்கொஞ்சம் சொல்லப்போகிறேன். அத்தலத்தின்பெயர்ஹாலெண்ட். அதை ‘உலாந்து’ என்றும் சொல்வதுண்டு. அதன் மேல்பாகம் தாழ்ந்த பூமி. ஜனங்கள் கடலின் ஜலம் வேண்டிய அளவுக்கு மேல் வருவதைத்தடுப்பதற்காக பெரிய கற்சுவறுகள் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யாவிடில், பட்டணங்களில் ஜலம் பிரவேசித்து வெள்ளம் கொண்டுவிடும். சில சமயங்களில் புயலடிப்பதுமுண்டு. அப்போது விசாலமான அலைகள் உயரக்கிளம்பி ஜனங்களால் எழுப்பப்பட்டிருக்கும் சுவறுகளை உடைத்து விடும்படி அவ்வளவு வேகத்தோடு அடிக்கும். இச்சுவறுகளில் ஒருசிறிய துவாரமிருந்தாலும் அதன் வழியாய் நீர் உள்ளே ப்ரவேசித்து அத்துவாரத்தைப் பெரிதாக்கிவிடும். அந்தத்துவாரத்தை சீக்கிரம் பரிகாரம் செய்யாவிடில் சுவறுகள் இடிந்து விழுந்து, ஜலம் பூமியின் மேல் பரவி, சிற்சில சமயங்களில் ஆடுமாடுகளும், மரங்களும், இன்னும் வீடுகளும் அடித்துக் கொண்டு போய்விடப் படுகின்றன. சிலவிடங்களில் ஏராளமான ஜனங்கள் அமிழ்ந்தும் போய்விடுவதுண்டு. இப்படிப்பட்ட வெள்ளம் ஒரு தடவை உண்டாகி, ஒரு பட்டணத்தில் ஒரு வீடுமாத்திரம் அசையாமலிருந்ததாகவும், அவ்வீட்டிலிருந்த ஒரு மனிதன், அவன் மனைவி, இரண்டு பெண்கள், இவர்களைத் தொலை தூரத்திலிருந்த சிலமனிதர்கள் கண்டு, ஒரு படகிலேறிக் கொண்டு இவர்களிருப்பிடம் வந்து, உயரத்திலிருந்தவோர் ஜன்னலின் வ ாய் இவ்வேழை ஜனங்களை எடுத்து வந்தார்களென்றும், அப்பெரிய பட்டணத்தில் தப்பிப்பிழைத்தவர்கள் இவர்கள் மாத்திரமேயென்றும் சாற்றுகிறார்கள்.



வெயில் காலத்திற்கு அவசியமான பண்டிட் S.S. ஆனந்தரின்

# மஹா சந்தனாதித்தைலம்.

பாரம்பரியமாய் அனுபவசித்தியுடையது, அதிகபணச்செலவு செய்தும் மிகுந்த பிரயாசைப்பட்டும், சாஸ்திரீதியாய் பாகந்தவறாமல் தயாரிக்கப்பட்டது.

பிரதிதினம் காலையில் உச்சியில் பதனிட்டுவருவதாலும், வாரமிருமுறை சூரியஉதயத்தில் ஸ்நானம்செய்வதாலும், அதிகஉஷ்ணத்தால் உண்டாகும் தலைநோய், மயக்கம், மாதி முதலிய மூளையைப்பற்றின நோய்கள், தொற்று வியாதிகள், ஸ்திரீபருஷர்களுக்கு முகத்திலுண்டாகும் பருக்கள், தேமல், சொறிசிறங்கு, மேகப்படை, கைகால் எரிச்சல் முதலிய தோலைப்பற்றின நோய்கள், நரம்பைப்பற்றின பட்சவாதம் முதலியநோய்கள் கண்கலக்கம், கண்சிவத்தல், கண்ணில் நீர்வடிதல், கண்ணெரிச்சல், பீளைசார்தல் முதலிய கண்நோய்கள், செவிநோய்கள் முதலியவைநீங்கும்.

ரோமம் உதிர்வதையும் அகாலத்தில் நரைப்பதையும் தடுத்து கருமையும் பளபளப்பையும் தருவதில் பேர்பெற்றது.

மனோகரமான மணமும் குணமுமுடைய எங்கள் மஹாசந்தனாதித்தைலம் எங்கும் பிரசித்திப்பெற்று வருகிறது.

12. அவுன்ஸ் பாட்டில் ரூ. 2.    6. அவுன்ஸ் பாட்டில் ரூ. 1 2.

நமது ஆயுர்வேதவைத்தியசாலையிலுள்ள மற்றமருந்துகளின் விவரங்களும், தக்கமனிதர்களிற் அபிப்பிராயங்களும் அடங்கிய புஸ்தகம் வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்புகிறோம்.

பண்டிட் S. S. ஆனந்தர், வைத்தியசாலை.

நெ. 31 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு, சென்னை கி.

---

## முக்கியவிளம்பரம்

எங்களால் தயார்செய்யப்படுகிற சதானந்த“சர்வரோகநிவாரணி”100 கணக்கான வியாதிகளை குணப்படுத்துகிறது. இதற்கு பத்தியமோ இல்லை. இதை இன்ன நேரத்தில்தான் உட்கொள்ளவேண்டுமென்ற நியதி இல்லை. வெளிப்பிரயோகம் உட்பிரயோகம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது, தவறிச்சாப்பிடுவதினால் எவ்விதத்தீங்கும் செய்வதில்லை. பாலர் விருத்தர் யாவரும் சந்தேகமில்லாமல் சாப்பிடலாம். இம்மருந்தை கன்றுகாலிகளுக்குங்கூட உபயோகப்படுத்தலாம். இம்மருந்தானது சர்க்கியூட் ஆபீசர்களுக்கும் மிகவும் சௌகரியமாயிருக்கும். இம்மருந்தைப் பல இங்கிலீஷ் வைத்தியர்களும், ஐரோப்பியர்களும், இந்து கனவான்களும் விசேஷமாகப்புகழ்ந்து கூறியிருக்கின்றனர். மருந்துக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு முழுவிவரமடங்கியகியாட்லாக் புஸ்தகமொன்று அனுப்பிக்கொடுக்கப்படும்.

வி. லக்ஷ்மிநரசு அண்டு பிரதர்,

சதானந்த வைத்தியசாலை,

கோயமுத்தூர்.

மருந்தின் விலை ரூ. 1-8-0.

# ஹாஸ்யத் துணுக்குகள்.
## Fun and Laughter.

ஒரு பெரிய உத்தியோகஸ்தரோடு ஒரு வாய் துடுக்கான சிறுவன் சில விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது உத்யோகஸ்தரின் வலது காதினிடையே கைசிறுவிரல் நுழையக்கூடிய துவாரமொன்றிருக்கக் கண்டான். அவர்கள் பேசிநின்றவிடமோ ஒரு மரங்களடர்ந்த தோப்பு. அங்கே முன்காலத்துக் கிஷ்கிந்தாபட்டணவாசிகள் உல்லாசமாய்க்கிளைகளில் குடியிருந்தன. சிறுவன் உத்தியோகஸ்தரின் காதுவழியே ஆச்சரியப்பட்டவன்போல் உற்றுநோக்கினன். உத்தியோகஸ்தர் "என்னபார்க்கிறாய்" என்று கேட்டதும், பையன் அவர்காலில் வீழ்ந்தெழுந்துக் கைகூப்பி "அடியேன் இன்றுதான் சித்தனானேன். நீங்கள் பரப்ருமத்தின் அம்சமாயிருக்கவேண்டும்! தங்கள் காதிலேயே ஸ்தாவர ஜங்கமங்களாகிற விருக்ஷங்களும் மிருகங்களும் தென்படுகின்றனவென்றால் தங்கள் குக்ஷியில் அண்டமுழுதும் இருக்கவேணும்!" என்றான்.

ஒரு உபாத்தியாயர் தன்வகுப்பு பிள்ளைகளுக்கு ஒருநாள் பூகோளசாஸ்திரம் கற்பித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் மாணவர்களைப்பார்த்து "சிறுவர்காள்! நாளை இன்ஸ்பெக்டர் அவர்கள் வந்து பரீட்சை செய்வார். பூமியின் உருவமென்னவென்று கேட்டால் மறந்துவிடப்போகிறீர்கள். என் பொடிகுடுக்கை ஞாபகமிருக்கட்டும்" என்றார். பிள்ளைகளுள் ஒருவன் அடிக்கடி அவர்வீட்டுக்குப் போவது வழக்கம். அவர் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் வேறொரு சதுரடப்பிவைத்துப் பொடி உபயோகிப்பது அவனுக்குத்தெரியும். மறுநாள் எதிர்பார்த்தபடியே இன்ஸ்பெக்டரும் வந்து அதேகேள்வியும் கேட்டார். எல்லோரும் முன் இவன் எழுந்து "ஐயா, எனக்குத்தெரியும், ஞாயிற்றுகிழமைதோறும்சதுரமாயும், மற்றநாட்களில்உருண்டையாயுமிருக்கு" மென்றான்.

ஒரு நாள் பத்துமணிவரை விடாமல் மழைபெய்து பையன் பள்ளிதிறந்து ஒரு மணிகழித்து மெதுவாய் வந்துசேர்ந்தான்.

உபாத்தி:—ஏனப்பா இவ்வளவுநேரம்?

பையன்:—ஐயா, விரைவாய்த்தான் வந்தேன். வழியில் இரண்டொருதடவை சருக்கிவிழுந்தேன். எழுந்து ஓரடி எடுத்துவைக்க என்ன ஆச்சரியம்! அச்சகுதிவழி இரண்டடி பின்னுக்கிழுத்தது! நான் என்ன செய்வேன்?

உபாத்:—அடே! மடையா! நீ சொல்வது உண்மையாயின் எப்படியடா இங்குவந்து சேர்ந்தாய்?

பையன்:—அதுதான் ஐயா சொல்லப்போகிறேன். இதென்ன விபரீதமென்று திகைத்துக்கொண்டிருக்கையில் ஒரு யுக்தி தோன்றிற்று.






# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் ஸப்ளை உபயோகிபபதை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் ஸப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றுப் அருத்தமாகும்.

மில்க்மெயிட்குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது. மில்க்மெயிட்குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்திலாபமடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினால்எங்களுக்கு இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம்.

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும்,
அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லேஸ் அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்,
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்.

பள்ளிக்கு என்முதுகு புறத்தை காண்பித்துக்கொண்டு வீட்டைநோக்கிஓரடி எடுத்துவைக்க சகுதியிரண்டடி பின்னுக்கிழுத்தது. அப்படியே மறுபடியும் வைக்க மறுபடியுமிழுத்தது. இத்தகரார் நடந்து நானிவ்விடம் வர இன்னேரமாயிற்று!

ஒரு வாலிபன் பிழைக்க வகைபுரியாமல் அலைந்து கொண்டிருந்தான். அவன் தகப்பனார் அவனை ஒரு வக்கிலிடம் குமாஸ்தாவாக அமர்த்திவிடலாமென நினைத்து அவரிடமழைத்துப்போனார்.

வக்கீல்:—சிறுவ, நீ எதுவரைப் படித்திருக்கிறாய்?

பையன்:—ஆறுவது வகுப்புவரை படித்திருக்கிறேன்.

வக்கீல்:—கணக்கு நன்றாய்ப் போடுவாயா?

பையன்:—ஆம், போடுவேன்.

வக்கீல்:—ஒருவன் கடைக்குப்போய் படி ஒன்றுக்கு 2 அ. 6-பை வீதம் 8 மரக்கால் ரவையும், சேர்ஒன்றுக்கு 6 அ. வீதம் 12 சேர் நெய்யும் வாங்குகிறான். மொத்தம் என்ன ஆச்சுது? சீக்கிரம் சொல்.

பையன்:—வீட்டிலிருக்கும் உப்பு, மிளகாய்வற்றல், கடுகுஇவைகளையும் சேர்த்துக்கொண்டால் முதல்தாம் ரவா உப்புமா ஆச்சுது.

ஒரு குரு தன் சிஷர்களையழைத்துக்கொண்டு ராஜபேட்டிக் காணப் போனார். பேட்டி காணும்போது தான் கும்பிடுவதுபோல் சிஷ்யர்களும் கும்பிட வேணுமென்று சொல்லியிருந்தார். அரசன் வந்ததும் கீழே மட்டிபோட்டுக்கும்பிடக் கைதூக்கின மகானுக்குச் சுரீரென ஒரு கொசு கன்னத்திற் கடித்துவிட்டது. குருகன்னத்தில் ஓரறைஅறைந்துகொண்டு கும்பிட்டுவிட்டு நகர்ந்துகொண்டார். இதைப்பார்த்து சிஷ்யர்களில் முதல் போனவனும் அறைந்து கொண்டு மட்டிபோட்டுக் கும்பிட்டான். இவ்வாறே எல்லோரும் 'பளேர், பளேர்' என்று அறைந்துகொண்டு கும்பிட்டுவிட்டேயன்று சென்றார்கள். அரசனுக்கு மாத்திரம் இவர்கள் செய்ததின் கருத்து புரியவில்லை.

டி. எஸ். ராஜகோபாலன்.

## புத்தகவரவு! சரீரசாஸ்திரம்.

இச்சிறந்தபுஸ்தகம் சென்னை சப்அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் என். சுவாமிநாதய்யர், பி. ஏ. எல். டி. அவர்களால் தமிழில் எளிய நடையில் யாவரும் சுலபமாக அறிந்துகொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது. இதில் சரீர சம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகள் இங்கிலீஷ் தெரியாத வைத்தியர்களுக்கு முக்கியமாய் தெரிய வேண்டும். அவர்களுக்கும் இப்புஸ்தகம் மிகவும் உபயோகமுள்ளது. பாடசாலையில் படிக்கும் மாணாக்கர்களும் சரீரத்தின் கூறு, உபயோகம், முதலியவைகளை அறிந்திருந்தால் அவர்கள் தேகாரோக்யத்திற்கு மிகவும் நல்லது. ஆகையால் உபாத்தியாயர்கள் இப்புஸ்தகத்திலுள்ள விஷயங்




# சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.

—(o)—




நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பிடிக்கிறது. அவ்வித முள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவது கஷ்டம்.

**SCOTT'S Emulsion**

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத் தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும் சதைகளைப் புஷ்டியுள்ளவைகளாகவுஞ்செய்து வியாதி கிட்டஅண்டாமல் உனக்குச் சக்தியைக்கொடுக்கிறது.

மருந்து உட்கொண்டபின் இதன் அனுபவம் தெரியும.

கையினால் தொடாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஸ்காட் அண்டு பௌன்' கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன், இங்கிலாந்து.

களை நன்றாகத் தெரிந்துகொண்டு தங்கள் மாணாக்கர்களுக்கும் போதிக்க இப்புத்தகம் மிகவும் உபயோகமானதென்று அபிப்பிராயப் படுகிறோம். ஸ்திரீகளுக்கும் இவ்விஷயம் தெரியவேண்டிய தாகையால், அவர்களுக்கும் இது பெருத்த நன்மையைத்தரும். ஆகையால் இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் கையாடுவார்களென்று நம்புகிறோம். இதன் விலையோ அணா 8. வேண்டுவோர் குமாரசுவாமி நாயுடு அண்டு ஸன்ஸ் சென்னை என்று எழுதவேண்டும்.

## சிவமலை ஸந்நிதிமுறை என்னும் ஸ்ரீசுப்ரமண்ய பஜனை.

இது சப் இன்ஜினீயர் ம-ா-ா-ஸ்ரீ எ. எஸ். விசுவநாதையர் இயற்றியது. இப்புத்தகத்திற்கு சிவன் மலையில் ஆண்டவன் முதற்றரிசனங் கொடுத்து இவரையாண்டு கொண்டபடியால் இப்பெயரிடலாயிற்று என்று முகவுரையால் தெரிகிறது. இச்சந்நிதிமுறையிலுள்ள மிகுந்தப்பாடல்களும், திருப்புகழ்ப்பாக்களும் பலவேறு இராகங்களில் பாடக் கூடுமாயினும் பாடுவதற்கு அநுகூலமாக மேற்கூறப்பட்ட பாடல்களுக்குக் குறிப்பாக இராகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாடல்களும், கீர்த்தனங்களும் வெகு இனிமையாயும், இலக்கியவழுக்கின்றியுமிருக்கின்றன. இவைகளைப் பாடிவந்தால் பக்தி அதிக முண்டாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவரேதமது கிருகத்தில் பஜனை செய்தகாலத்தில் இப்பாடல்களை நாம் கேட்டு ஆநந்தப்பரவசமடைந்தோம். இவரோ நற்குணசீலர், சிறந்த தெய்வபக்தியுடையவர். பக்திமான்களுக்கு இப்புஸ்தகம் தேவையிருந்தால் சப் இஞ்சினீயர் ம-ா-ா-ஸ்ரீ எ. எஸ். விஸ்வநாதையர் அவர்கள் நெ. 7 தனிகாசலப்பிள்ளைத்தெருவு திருவல்லிக்கேணி, சென்னை என்று கடிதம் எழுதி ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் இனாமாக அனுப்பப்படுமாம்.

---

## சமாசாரக் குறிப்பு

இத்தாலி தேசத்திற்குத் தெற்கிலுள்ள ஸிஸிலி என்ற தீவில் பூகம்பம் மேமீ 9உ உண்டாய் ஒரு கிராமத்தில் 30 ஜனங்கள் மாண்டு போயினர். 120 பெயர்கள் காயப்பட்டுப் போயினர். வேறொரு கிராமத்தில் 10 பெயர்கள் இறந்து போயினர். பொருள் சேதம் மிகுதி.

* * * * * *

**டென்மார்க்கு தேசத்தின் அரசரும் அரசியும்:**—ப்ரிட்டிஷ் ராஜ குடும்பத்துக்கு உறவினர்களாகிய டென்மார்க்கு தேசத்து அரசரும் அரசியும் தாங்கள் பட்டத்துக்கு வந்ததை முன்னிட்டு ப்ரிட்டிஷ் தேசத்துக்கு வந்து விட்டுப் போவதற்காக மேமீ 9உ லண்டன்மாநகருக்கு விஜயம் செய்தார்கள். வேல்ஸ் இளவரசர் முன்சென்று அவர்களை வரவேற்றார். துறைமுகத்தில் அவர்களுடைய கப்பல் வந்து சேர்ந்ததும், கடற்படை செய்யவேண்டிய மரியாதைகள் எல்லாம்செய்யப்பட்டன. நமது அரசரும், அரசியும், அலெக்ஸாண்டிரா மகாராணியும், ராஜ வம்சத்தினர்களாகிய பிறரும், மந்திரிகளும், மற்றப் பிரமுகர்களும் ஸ்டேஷனுக்குச்சென்று அவர்



களை வரவேற்று உபசரித்தார்கள். அவர்கள் பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் செல்லும் வழியிலெல்லாம் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் நின்று சந்தோஷம் கொண்டாடினார்கள்.

* * * * * *

**ரங்கூனில் தந்தியில்லாக் கம்பி ஸ்டேஷன்:**—ரங்கூனில் தந்தியில்லாக் கம்பி ஸ்டேஷனொன்று கட்டப்பட்டு வருகிறது. அந்த ஸ்டேஷன் அடுத்த ஜூன் மாதக் கடைசியிலாவது ஜூலை மாதத்திலாவது திறக்கப்படுவதற்குச் சித்தமாய்விடுமென்று தெரிகிறது.

* * * * * *

**ராஜப்பிரதிநிதி:**—ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் மேமீ 4உ சிம்லா போய்ச் சேர்ந்தார். அவர் டெக்ரா டூனைவிட்டுப் புறப்பட்டு நேரே சிம்லாவுக்குப் போகாமல் டெல்லிக்குப்போய் விட்டுப்போனார். டெல்லிப் புதுநகர் நிர்மாண சம்பந்தமாய் நடந்து கொண்டிருக்கும் வேலைகளைப் பார்வையிட்டார். ஜார்ஜ் சக்கரவர்த்தி விஜயம் செய்து தர்பார் நடத்திய தர்பார் கொலுமண்டபத்தைப் போய்ப்பார்த்தார். (அக் கொலுமண்டபம் அமைக்கப்பட்டிருந்தவிடத்தில் ஒரு ஞாபகச் சின்னம் எழுப்பப்படப்போகிறது.) டெல்லி சீப் கமிஷனருடன் காலை வேளைச் சாப்பாடு சாப்பிட்டார். அவர் மறுநாள்சாயங்காலந்தான் டெல்லியைவிட்டு சிம்லாவுக்குப்புறப்பட்டார்.

* * * * * *

**ராமனாதபுரம் கவர்ன்மெண்டு பெண்பாடசாலையில் பரிசளிப்பு:**—ராமனாதபுரம் கவர்ன்மெண்டு பெண்பாடசாலையின் வருஷோற்சவதினம், ராமனாதபுரம் ராஜா ஹைஸ்கூல் ஹாலில், ஸப் கலெக்டரின் அக்கிராசனத்தின் கீழ் ஏப்ரல் மாதம் 29-ந் தேதி மாலை 5-மணிக்குக் கொண்டாடப்பட்டது. பலர் வந்திருந்தார்கள். ஹெட் மிஸ்ட்ரெஸ் மிஸ்ஸஸ் ரஞ்சிதம் தாஸ், அந்த ஸ்கூலின் வருஷாந்த ரிப்போர்ட்டை வாசித்தார். அந்த ரிப்போர்ட்டினால் அந்த ஸ்கூலில் நடந்துவரும் வேலை நிரம்ப திருப்திகரமாக இருக்கிறதென்பதும் ஆனால், அவ்வூரார் பெண்கல்வியினால் விளையும் பயனை செவ்வையாக உணர்ந்தவர்களல்லவென்பதும் வெளியாகின்றன. மிஸ்டர் நாகலிங்கம்பிள்ளை பெண்கல்வியின் பிரயோஜனத்தைப்பற்றி தமிழில் சிறந்ததோர் உபந்நியாசஞ் செய்தார். பின்பு பரிசுகள் கொடுக்கப்பட்டன.

* * * * * *

**பிற்பட்டஜாதிகளின் படிப்பு:**—சென்னை கல்வி இலாகா தலைவர் தமது 1912-13வருஷத்துரிபோர்ட்டில் எல்லாவழிகளிலும் படிப்புஅபிவிருத்தியாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறார். பஞ்சமர்களில்மட்டும் பிரஸ்தாப வருஷத்தில் 7,750 பிள்ளைகள் அதிகமாய்ப்படித்தார்களென்றால் அந்த வகுப்பார் கல்வியில் அபிவிருத்தி செய்து வருவது விளங்குகின்றது. மகமதியரும் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். லோகல் போர்ட்டுகளால் மகமதியருக்கென்று 218 கீழ்த்தர ஸ்கூல்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளும் மற்ற அபிவிருத்திகளும் இந்தியா கவர்ன்மெண்டுசெய்த பணஉதவியால் சாத்தியமாயின. இதற்காக ஸர் ஆல்ப்ரெட் போரனை சென்னை கவர்ன்மெண்டார் சிலாகித்து எழுதியிருக்கிறதை நாம் அங்கீகரிக்கிறோம்.

* * * * * *

**மைசூரில் பச்சைக் கற்கள் அகப்பட்டன:**—கன்னம் பாடியில் காவேரி நதிக்கு அணை கட்டுவதற்காக அதற்குச் சமீபத்தில் பூமியைத்தோண்டுகையில், விலையுயர்ந்த சிறந்த பச்சைக்கற்கள் அகப்பட்டனவென்று சொல்லப்படுகிறது. பச்சைக்கற்கள் அகப்பட்டனவென்று சொல்லத் தகுந்த ஆதார மொன்றுமில்லை. ஆனால் அந்தப் பிராந்தியங்களில் இதைப்பற்றி ஒரு வதந்திமட்டும் உலாவிக்கொண்டிருக்கிறது என்று ஒருவர் மதராஸ் மெயில் பத்திரிகைக்கு எழுதுகிறார்.

* * * * * *

**ஒரு சிறுமியின் புத்திசாலித்தனம்:**—பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த மார்ஸெல்ஸ்நகரில் சில மாதங்களுக்கு முன் ஒரு கொள்ளைக்காரன் ஆயுதபாணியாய் ஒரு

வீட்டினுட்புகுந்து கொள்ளையாடினான். அப்பொழுது அவ்வீட்டிலுள்ளார் அவனைத் தாக்கவே, அவன் அவர்களைத் துப்பாக்கிக்கொண்டு சுட்டுவிடுவதாக வெருட்டினான். உடனே அவ்வீட்டிலிருக்கும் 12 வயதுள்ள ஒரு சிறுமி அக்கொள்ளைக்காரனுடைய கண்களில் நிரம்ப மூக்குத்தூளைப் போட்டுவிட்டாள். உடனே அங்கிருந்தோர் அவனைப் பிடிக்க ஓடினதாலும், பொடிவிழுந்ததனால் எரிச்சலுண்டானதைச் சகிக்க முடியாததாலும் அக்கொள்ளைக்காரன் அச்சமயமே துப்பாக்கியினால் சுட்டுக்கொண்டு இறந்து போனான்.

* * * * * *

**ஒரு ஸ்திரீ எஞ்சினீர்:**—லண்டன் நகரில் மிஸ்கிரிப் (Griff) என்று ஒருஸ்திரீ எஞ்சினீர் இருக்கிறார். அநேகவித கைத்தொழில்களில் அவளுக்கு நல்ல பிரக்ஞை உண்டு. பத்திரிகைப் பிரதி நிதியொருவர் சமீபத்தில் அவரைப்பார்த்துப்பேசிய பொழுது, அந்த ஸ்திரீ எஞ்சினீயர் பின்வருமாறு சொன்னார்.

“இன்னின்ன யந்திரங்களும் வேலைகளும் ஸ்திரீகளுக்கு மிகவும் ஏற்றனவென்று ஸ்திரீகளுக்குப் புத்திசொல்பவர் பலர் வேண்டியிருந்தால், நான் இவ்வேலையைக் கைகொண்டேன். பண்ணை சாகுபடியில் எத்தனை ஸ்திரீகள் இருந்துவருகிறார்களென்று அநேகருக்குத் தெரியாது. என்னுடைய சிநேகிதர்களில் இருவர் கானடா நாடுசென்று அங்குபெரிய பண்ணைத் தொழில்கள் செய்து வருகிறார்கள். அத்தொழிலைச் சரிவரச் செய்வதற்கு அநேக யந்திரங்களை அவர்கள் உபயோகித்து வருகிறார்கள். இவவழியில் ஸ்திரீகளுக்கு அநேக வேலைகள் கிடைக்குமென நான் நம்புகிறேன். பாற்சாலைகள், வண்ணாரச் சாலைகள் இவைகள் ஸ்தாபிக்கப்படுவதிலும் வீட்டுக்கு விளக்கு போடுவதிலும் ஸ்திரீகள் தேர்ச்சி பெறவேண்டுமென்பதே என் உத்தேசம்.” ஆகையினால், ஸ்திரீகள், குடும்பத்திற்கு ஒரு பாரமாயில்லாமல், ஓய்வு நேரங்களில் ஏதேனும் கைத்தொழில் செய்து குடும்பத்திற்கு இலாபகரமாயிருக்க வேண்டிய வழியைத் தேடுவது அவசியமாகும்.

* * * * * *

**ஆண் பெண்ணாகமாறிய அதிசயம்:**—அயர்லாந்தில் பிறந்த ஆல்பர்ட் காஷியர் என்றவர் சிறு வயதிலேயே தன் ஜென்ம பூமியைவிட்டு அமெரிக்கா சென்று சில காலம் வரையில் கப்பலில் வேலை பார்த்து வந்தார். பின்பு சைன்னியத்தில் ஸோல்ஜர் வேலையிலமர்ந்து, அங்கு ராஜாங்கக் கலகம் நடந்தபொழுது நேர்ந்த சண்டைகளில் மிகவும் தீரத்துடன் சண்டைசெய்தார். சண்டை முடிந்ததும் சைன்னியத்தை விட்டு நீங்கி வேறு வேலையிலமர்ந்தார். இப்பொழுது அவருக்கு வயது 72 ஆய்விட்டதாலும், வேலை செய்யச் சக்தியற்றுப்போய் விட்டதாலும், சக்தியற்ற ஸோல்ஜர்களுக்கென்று தர்மார்த்தமாக ஏற்பட்டிருக்கும் விடுதியில் சேர்ந்தார். உடம்பு அசௌகரியத்தினால் சமீபத்தில் அவர் ஒரு ஸர்ஜனுடையசிகிச்சையிலிருந்து வரும்பொழுது, அவர் ஆணல்லவென்றும் ஆனால் பெண்ணென்றும் தெரியவந்தது. 60-வயதுவரையில் நடை உடைபாவனைகளில் ஆண்போலவே யிருந்ததனால் அனைவரும் அவரை ஆணென்றே எண்ணியிருந்தார்கள். தன்னையொருவரும் பெண்ணென்றறிந்து கொள்ளாதபடி வெகுகாலம் ஆணைப்போலவே நடந்துவந்தது ஆச்சரியமாயிருந்தது. தன் உண்மைப் பெயர் இன்னதென்றாவது, தன் குடும்பத்தின் வரலாறுகளைப் பற்றியாவது எவ்வித சமாச்சாரத்தையும் அந்த அல்பர்ட் காஷியர் வெளிப்படுத்தவில்லை.

* * * * * *

**வயது வராப் பெண்களின் பாதுகாப்பு மசோதா:**—வயது வராப் பெண்களின் பாதுகாப்பு மசோதாவை, அது விசேஷக் கமிட்டியாரால் திருத்தப்பட்டபடி, இந்தியா கவர்மெண்டார் மாகாணகவர்மெண்டுகளுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் அவைகளின் அபிப்பிராயங்களுக்காக அனுப்பி யிருக்கிறார்களென்று தெரிகிறது.

# மாதர் மனோரஞ்சனி.

...ICE OF THE REGISTR... REGISTERED 3 - ... 1914 MADRAS.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”—ஔவையார்.

VolXVI] Madras July, 1914. No. 7
புத்தகம் கசு. சென்னை: ஜூலை௴ 1914௵. இலக்கம். 7

## லேடி ஹார்டிஞ்சின் மரணம்.

நமது ராஜப்பிரதிநிதியின் உத்தம பத்தினியாராகிய லேடி ஹார்டிஞ்சு லண்டனுக்கு சமீபத்தில் போனாரென்ற சங்கதி நமது நேயர்களுக்குத் தெரியும். அவர் ஜூலை௴ 9௳ லண்டன் ஹாஸ்பிடலில் ரணசிகிச்சை செய்யப்பட்டதாகவும், சௌக்கியமா யிருப்பதாகவும் தந்தி சமாச்சாரத்தால் தெரிந்தது. ஆனால் 12௳ சனிக்கிழமை பகல் $4\frac{1}{2}$ மணிக்கு லேடி ஹார்டிஞ்சு இறந்துபோய் விட்டாரென்றறிந்து மிகவும் துக்கப்படுகிறோம். இதற்கு சற்றுமுன் இவர் தேகஸ்திதி கவலைக்கு இடமாயிருக்கிறதென்று தந்தி சிம்லாவுக்கு வந்தது. வந்ததும் அங்கு நடந்துகொண்டிருந்த வேடிக்கைகள் நிறுத்தப்பட்டன. இந்தியாவிலுள்ள அனைவரும் வெகு கவலைப்பட்டார்கள்.

அன்று ராத்திரி அவர் இறந்தாரென்ற சமாச்சார தந்தி இந்தியாவுக்கு எட்டவே ஜனங்கள் கொண்டிருக்கும் துக்கத்திற்கு அளவில்லை. லேடி ஹார்டிஞ்சின் பூர்வநாமம் ஆனரெபில் வினிபிரெட் ஸெலீனா. அவர் லார்ட் ஆலிங்டனின் குமாரத்தி. அக்குடும்பத்திற்கு ஸ்டார்ட் குடும்பமென்று பெயர். அக்குடும்பத்தார், சென்ற நூற்றாண்டின் பலவருஷகாலம் பார்லிமெண்டில் பிரதி நிதியாய் இருந்துவந்தார்கள். லேடி ஹார்டிஞ்சுக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. முதல் குமாரர் 1892-ம் வருஷத்தில் பிறந்தவர், இரண்டாவது குமாரர் 1894-ம் வருஷத்தில் பிறந்தவர். ஆனரெபில் டயமண்ட் எவிலின் வயோலெட் என்ற குமாரத்தி 1900-ம் வருஷத்தில் பிறந்தவர். நமது ராஜப்பிரதி நிதி இந்தியர்களிடத்தில் மிக்கப்பிரியமும் இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணமுமுடையவர். இவருக்கு இவ்வித துக்கம் வந்ததைப்பற்றி நாம் மிகவும் விசனப்படுகிறோம்.

லேடி ஹாராடிஞ்சு இந்திய மாதர்களின் க்ஷேமலாபங்களைக் கோரி நடத்தியிருக்கும் நடவடிக்கைகளோ அநேகம் என்னலாம். மேலும் டெல்லியில் லார்ட் ஹார்டிஞ்சின்மேல் வெடி குண்டெறியப் பட்

டபொழுது, அவர் அதனால் தமக்கு நேர்ந்த கொடுந் துன்பத்தையும் லட்சியஞ் செய்யாது "ஊர்கோலஞ் செல்லட்டும்" என்று சொன்னபோது லேடி ஹார்டிஞ்சு, தமக்குப் பின்னாலிருந்த மனிதனுக்கு நேர்ந்தகதியை யறியாது ராஜப்பிரதிநிதி அவ்விதம் சொல்லுவதாய்க் கருதி, ஊர்கோலத்தை நிறுத்திவிடுவதே நலமென மதித்து "இதோ இந்த மனிதன் இறந்துபோய் விட்டான்," என்று லார்ட் ஹார்டிஞ்சின் மனதில் படும்படி சொன்னதே பெரிய சாட்சியாகும். இறந்திருக்கும் மனிதன் ஒரு இந்தியன் தானே என்று லேடி ஹார்டிஞ்சு இளப்பமாய் எண்ணவில்லை. இது அச் சீமாட்டிக்கு இந்தியர்களிடமுள்ள உள்ளங்கசிந்த அன்பையே காட்டுகிறது. பின்பு இராஜப் பிரதிநிதிக்குப் பட்டகாயத்தை அவர் பக்கத்திலிருந்து தம்மாலியன்ற சிகிச்சை செய்துவந்தார். இச் சீமாட்டியை உத்தமபத்னி யென்று நாம் சொன்னதும் இதற்காகத்தான்.

---

## ராஜகுடும்பத்தின் அனுதாபம்.

நிற்க, ராஜ சக்ரவர்த்தியும், மேரி சக்ரவர்த்தினியும், அலெக்ஸாண்டிரா மகாராணியும், மற்ற ராஜ குடும்பத்தினர்களும், லேடி ஹார்டிஞ்சின் மரணத்தால் தங்களுக்குண்டாய்விட்ட துக்கத்தைத் தெரிவித்து, லேடி ஹார்டிஞ்சின் ஸகோதரியாகிய லேடி மியூவுக்கு சமாச்சாரம் அனுப்பியிருக்கிறார்கள்.

பிரேதத்தை லண்டன் நகரில் லேடி மியூவின் ஜாகைக்குக் கொண்டுபோய் லார்டு ஹார்டிஞ்சின் சகோதராகிய வைகௌண்டு ஹார்டிஞ்சின் வாசஸ்தலமாகிய பென்ஹர்ஸ்ட் என்ற இடத்தில் பிரேத அடக்கம் நடந்தது. அதே சமயத்தில் லண்டனிலும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

## கூட இருந்தவர்கள்.

லேடி ஹார்டிஞ்சின் பிராணன் போனபொழுது அவருடைய இரண்டு பிள்ளைகளும், மைத்துனரும் கூட இருந்தார்கள்.

இந்தியாவில் எல்லா அபீசுகளும், ஸ்கூல்களும் புதன்கிழமை மூடப்பட்டன. ஜனங்கள் துக்கத்துடன் வைஸ்ராய் அவர்களுக்கு அநுதாபத் தந்திகள் அனுப்பிவந்தார்கள்.

---

## An open Window School in America
## அமெரிக்காவில் காற்றோட்டமுள்ள பள்ளிக்கூடம்.

பாடசாலை யிருக்கும் படியான கட்டடம் விசாலமாகவும் காற்றும் வெளிச்சமும் உள்ள இடமாயும் இருக்கவேண்டுமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இவைகளை அநுசரித்து அநேக பாடசாலை கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் மழை, பனிமுதலிய வைகளுள்ள காலங்களில் பாடசாலையில் ஜன்னல்களை யெல்லாம் மூடிவிடுகிறார்கள்.



அச்சமயத்தில் காற்று உள்ளேவர சாத்தியப்படுவதுமில்லை. வெளிச்சமும் குறைவாகத்தானிருக்கும். இப்படிசெய்வதால் பிள்ளைகளின் தேகஸ்திதி குன்றிப்போகுமே யொழிய விருத்தியடையாதென பல வைத்திய சாஸ்திரிகளுடைய அபிப்பிராயம். இந்தியாவில் பாடசாலைகளுக்கு கட்டடங்களில்லாமலே மரங்களின் நிழலில் பிள்ளைகளை உட்காரவைத்துக்கொண்டு போதித்துவந்தால் மிகவும் நல்லதென சிலர் அபிப்பிராயம்.

காற்று வரும்படியான இடத்தில் பிள்ளைகள் எப்பொழுது மிருந்தால் அது அவர்கள் தேகஸ்திதிக்கும், மனோசக்திக்கும் சிறந்தது. வெளிச்சமும், தாராளமாக நல்ல காற்றும், இல்லாமலும்பூமி ஈரமாயும், அறைகளில், இருக்கவேண்டிய பிள்ளைகளுக்கு மேல் அதிகமாகவுமிருந்தால் அவர்கள் தேகஸ்திதி கெட்டுப்போகும்.

அமெரிக்காவில் பிலடெல்பியாவில் பாடசாலைக்கு வைத்திய நிபுணர்கள் இவ்விஷயங்களை கவனித்துவர இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் டாக்டர் வால்டர்ரோச் என்பவர் பாடசாலைகளிலுள்ள எல்லா கதவுகளையும், ஜன்னல்களையும் குளிர்காலங்களில் கூட திறந்துவைத்து வந்தமையால் பிள்ளைகள் முன்னைவிட அதிக நல்ல ஸ்திதியிலிருப்பதாக சொல்லுகிறார்.

முதலில் இந்த டாக்டர் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு இதன் நன்மையைப்பற்றி ஒரு கடிதம் எழுதினாராம். பின் இப்படி செய்துவந்ததால் உண்டான நன்மையைப் பற்றியும் ரிபோர்ட்டில் எழுதி யிருக்கிறார். அது பின் வருமாறு:— "சுத்தமானகாற்று, பிள்ளைகள், உபாத்தியாயர்கள் இவர்களுடைய பல விருத்திக்கு காரணமாகிறது. அவர்களை சுறுசுறுப்பாயிருக்கும்படி அவர்கள் மனதை உற்சாகப் படுத்துகிறது. சுத்தமான காற்றுள்ள இடத்தில் பிள்ளைகள் ஆவலுடன் கற்றுவருகிறார்கள். இவர்கள் சந்துஷ்டியாயிருந்து அதிகவிரைவில் வளருகிறார்கள். குளிர்ந்த காற்று நரம்புக்குரிய ஒழுங்கை சாந்தப்படுத்தி இவர்கள் ஒருவர் மேல் ஒருவர் பட்டு உரைவதையும் நீக்கிவிடுகிறது."

டாக்டர் ரோச் சொல்லுகிறபடி விசாலமான காற்றுள்ள விடத்திலுள்ள பிள்ளைகள் அறைகளில் அடைபட்டுள்ள பிள்ளைகளைவிட அதிகபலமுள்ளவர்களாயும், வேலையைத் அதிகதிறமையுடன் செய்யக்கூடியவர்களாயுமிருக்கிறார்களாம். 12 வாரம் இவ்விதம் பிள்ளைகள் பழக்கப்பட்டுவந்ததில் ஒவ்வொருபிள்ளையும் நிறையில் 2பவுண்ட் அதிகரித்திருக்கிறானாம். மற்ற அறையிலுள்ளவர்களுக்கு ஒரு பவுன்தான் அதிகரித் திருக்கிறதாம். பிள்ளைகள் பாடங்களை நன்றாகப் படித்து கேட்ட கேள்விகளுக்கு உடனுக்குடனே சரியாய் விடையளித்தார்களாம். இதிலும் விருத்தியுண்டா யிருக்கிறதென தெரிகிறது. இவ்விதம் நம்மவர்கள் தங்கள் பிள்ளைகளை நடத்திவந்தால் மிகவும் நலமே.

## ஏன் சில பிள்ளைகளை கெட்டவர்களென்று சொல்லுகிறோம்.

## Why Some School Children are bad.

பாடசாலை உபாத்தியாயர்கள் சிற்சிலசமயங்களில் "அந்தப்பிள்ளை மிகவும் கெட்டவன்" "அவனைத்திருத்தி நல்வழிக்குக்கொண்டு வரமுடியாதென" சொல்வது யாவருக்கும்தெரியும். அவ்விதப் பையனை உபாத்தியாயர் கண்டிப்பார், தண்டிப்பார்; ஆனால் நிஜமாகவே அவன் திருத்தப்படாமலிருப்பான். ஒரு முக்கிய விஷயத்தை யாவரும் கவனித்து வந்தால் அது அவனைத்திருத்த வழியைக்காண்பிக்கும். பையன் வீட்டில் எப்படி நடந்து வருகிறான்? பாடசாலைக்கு வெளியில் பையன் எப்படி நடந்து வருகிறான்? என்ற விஷயங்களை கவனித்து வரவேண்டும். நியூயார்க்கில் ஒரு உபாத்தியாயர் தமது பாடசாலையில் படித்துவந்த 11 வயதுள்ள பையனைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறார்:—இப்பையன் நியூயார்க்கில் ஒருபாடசாலையில் படித்துவருகையில் இவன் மிகவும் கெட்டவனென்றும், இவனைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவருவது அசாத்தியமென்றும் நினைத்தார்கள். அப்பாடசாலையிலுள்ள ஒரு உபாத்தியாயர் இவன் வீட்டிற்குப் போய் இவன் நடத்தையையும் இவனுடன் சிநேகம் செய்து வரும் பிள்ளைகளையும் கவனித்துவந்தார். அப்படிசெய்து வருகையில் இப்பையனுடைய தாயார் வியாதியால் வருந்தி படுத்த படுக்கையிலிருந்தாளாம். இவளுக்கு அன்னுகாராதிகள் கொடுத்து உதவிபுரிய உபாத்தியாயரைத்தவிர வேறொருவருமில்லையாம். இவளுக்கு மூன்று சிறு குழந்தைகள் இருந்தனவாம். இவரே அவர்களுக்கு ஆகாரம்கொடுத்து வந்தாராம். இப்படியிருக்கையில் இப்பையனுடைய தகப்பனார் அதிகமாக குடித்துவிட்டு வேலைசெய்யாமலும் சரியான ஆகாரம் சம்பாதித்து புசிக்காமலும் திரிந்துகொண்டிருந்தாராம். தகப்பனைப் பார்த்து பிள்ளையும் குடித்து, கெட்டபிள்ளையாய்த் திரிந்துகொண்டிருப்பதையும் உபாத்தியாயர் கண்டுகொண்டார்.

"உடனே அந்தப் பையனை தனிமையாக பாடசாலையிலேயேவைத்து அவனுக்கு புசிக்க அன்னம் அளித்து அவனுக்கு படிப்பும் போதித்து வந்தாராம். இவ்விதம் செய்துவருகையில் பையன் வரவர நல்ல பையனாக மாறிவிட்டான்."

நியூயார்க்கில் உள்ளதைப்போல் நமது ஊர்களிலில்லை. அக்கம் பக்கத்தார்களும் குடி முதலிய துர்வழக்கமுடையவர்களல்ல.

ஆயினும் அந்தப் பையனை விருத்திக்குக் கொண்டுவந்தமாதிரி, பாடசாலைப் பிள்ளைகளுடைய தேகஸ்திதி, குணம், சேர்க்கை முதலியவைகளை பாடசாலையிலும், அவர்கள் வீட்டிலும் கவனித்து வரவேண்டும்.



இதற்காக உபாத்தியாயர்கள் வெட்கப்படாமல் அவர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்கள் விருத்தியை நாடி நடக்க முயலுவார்களென்று நம்புகிறோம். இது எல்லா தர்மங்களிலும் சிறந்த தர்மகைங்கரியம்.

---

## ஆபிரிக்காவைக் கண்டுபிடித்தவர்கள்.

ஆபிரிக்காவை ஆங்கிலேயர் இருளடர்ந்த கண்டம் என்று சொல்லுகிறார்கள். "ஏன் அவ்விதம் சொல்லுகிறார்கள் தெரியுமா? அங்கு சூரியன் உதிப்பதில்லையா?" என்று நீங்கள்கேட்கலாம். சூரியன் இங்கு அதிகபிரகாசமாயும் உஷ்ணத்துடனும் உதிக்கிறது. எல்லாதேசங்களைவிட இவ்விடத்தில்தான் உஷ்ணம் அதிகம். அநேக ஆயிரம் வருஷங்களுக்குமுன் இக்கண்டமிருப்பதே தெரியாது. வரவர சிறியபாகங்களாக பலரால் கண்டுபிடிக்கப்பட்டன. அப்படிக் கண்டுபிடித்தவர்கள் வெகு கஷ்டங்களையும், அபாயங்களையும் அனுபவிக்கவேண்டியிருந்தது. அதனால்தான் இருளடர்ந்த கண்டமென்று இதைச்சொல்லுகிறார்கள்.

ஆப்ரிக்காவில் ரயில்பாதைகள் போடப்பட்டிருந்தபோதிலும் பிரயாணிகள் ரயில்பாதைகளில்லாதவும் காட்டுமிருகங்கள் ஏராளமாயுள்ள காடுகளையும், வனாந்தரங்களையும் கடந்துபோகவேண்டியதாயிருக்கிறது.

கிரீஸும், ரோமாபுரியும் உன்னதஸ்திதியை யடையுமுன்னே ஆபிரிக்காவின் வடபாகத்தில் கற்றறிந்த வித்வசிரோன்மணிகள் வசித்துவந்தார்கள். இவர்கள் ஈஜிப்டியன்ஸ். ஏசு கிறிஸ்து குழந்தையாயிருந்தபொழுது இவ்விடத்திற்கு கொண்டுவரப்பட்டார். ஹெராட் என்ற துஷ்டன் இவரைக் கொல்ல பிரயத்தனம் செய்தானும். அவன் கைக்குள் அகப்படாமல் இயேசுகிறிஸ்துவை இவ்விடத்திற்கு க்ஷேமமாய் கொண்டு வந்துவிட்டார்கள். அக்காலத்தில் ஈஜிப்ட்தேசத்து ஜனங்கள் பெரியபட்டணங்களை ஸ்தாபித்து அநேக அழகான ஆலயங்களைக்கட்டிவைத்தார்கள். அவைகளைப்போல் இப்பொழுது கட்டுவதென்றால் மிகவும் கஷ்டம். அவர்களுக்கு சட்டதிட்டங்களுமிருந்தன. களிமண்செங்கலில் எழுதிவந்தார்கள். இவர்கள் மற்றதேசங்களிலுள்ள ஜனங்கள் காட்டு ஜனங்களைவிட சிறிது மேலானவர்களென்று நினைத்திருந்தார்கள். இவர்கள் தேசத்தில் நயில் என்ற நீளமான நதியிருக்கிறது. இவர்கள் இதன் கரைக்கு அப்புறமுள்ள இடங்களுக்குப்போக துணியவேயில்லை. அவ்வளவு தைரியசாலிகள்!

இவர்கள் பலம் குறையவே பொனீஷியன்ஸ் வந்தார்கள். இவர்கள் ஈஜிப்டியன்ஸைவிட தைரியசாலிகள். கடலில் பிரயாணம் செய்வதில் துணிகரமுள்ளவர்கள். ஆயினும் இவர்கள் ஆபிரிக்காகண்டத்தின் மத்தியில் போகத்துணியவில்லை. இவர்களுக்குப்பின் க்ரீக் தேசத்தார் இதை ஆண்டுவந்தார்கள். இவர்கள் தைரியசாலிகள். சமர்த்துள்ளவர்கள்.

இவர்களுக்குப்பின் ரோமாபுரியிலுள்ளவர்கள் இதை ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில் யாவருக்கும் தெரிந்த தேசங்களையெல்லாம் இவர்கள் ஆண்டுவந்தார்கள். இவர்களுக்கும் அங்குள்ள வடக்குபாகமும், மெடிடரேனியன் தென்சமுத்திரக்கரையிலுள்ள பாகங்களைத்தவிர வேறொன்றும் தெரியாது. இவ்விதம் இவர்கள் அநேக ஆயிரம் வருஷங்களாக இவ்விடத்தில் வசித்துவந்தார்கள். ஏன் இவர்கள் மற்ற இடங்களைக்கண்டு பிடிக்கவில்லை என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு முக்கிய காரணம் என்னவெனில், உண்மையான ஆபிரிக்கா சஹாரவனாந்தரத்துக் கப்பாலிருப்பதே. இதை ஒருவரும் தாண்டமுடியாது. இந்த வனாந்தரத்தில் குடிக்க நீரும், வசிக்க அன்னமும் கிடைக்காது. கரைக்குக் கீழ்பாகத்திலோ வனாந்தரங்களோ, மலைகளோ அல்லது காட்டுமிருகங்களுள்ள காடுகளோ இருக்கின்றன.

கடைசியாக வாஸ்கோடிகாமா பலகஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு இக்கண்டத்தைக் கண்டுபிடித்தாரென்பது நமது மனோரஞ்சினியில் 146-வது பக்கத்திலுள்ள விஷயங்களைப்படித்தவர்களுக்குத் தெரியும்.

வாஸ்கோடி காமா இத்தேசம் முழுவதையும் கண்டு பிடிப்பதற்கு முன் 2,000-வருஷங்களாக இங்கு அநேகர் வாத்தலைப்பட்டார்கள். அரேபியர்களில் அநேகர் வந்தார்கள். ஆசியாவிலிருந்து நாகரிகமற்ற காட்டு ஜனங்கள் அரேபியர்களை பின் தொடர்ந்து வந்தார்கள். ஆனால் ஐரோப்பா கண்டத்திலிருந்து ஒருவரும் போகவில்லை. ஐரோப்பாவிலிருந்து கடைசியாக ஜனங்கள் சமுத்திரத்தைத் தாண்ட ஆரம்பம் செய்து ஆபிரிக்காவின் கரையோரங்களில் வசிக்கத் தலைப்பட்டார்கள். இங்கிலாந்திலிருந்தும் ஜனங்கள் கரையோரங்களிலுள்ள இடங்களைக் கண்டு பிடிக்க ஆரம்பித்தார்கள்.

## ஜேம்ஸ் ப்ரூஸ் செய்த பிரயாணம்.

1770-ம் வருஷத்தில் ஜேம்ஸ் ப்ரூஸ் என்பவர் ஆப்ரிக்காவின் ஒருபாகமாகிய அபிஸீனியா வழியாக பிரயாணம் செய்தார்.

அப்பொழுது அபிஸீனியாவில் ஒரு அரசன் அரசுசெலுத்திவந்தான். இத்தேசத்து ஜனங்களுக்கு நாகரிக வாசனையே தெரியாது. குரூரமுள்ளவர்கள். பாவதோஷத்திற்கு அஞ்சாத நெஞ்சமுடையவர்கள். ப்ரூஸ் என்பவர் புத்திசாதுரியமுள்ளவராயும், சமயோசிதமாய் நடப்பவராயுமில்லாமலிருந்திருந்தால் அவரை அத்தேசத்தவர்கள் கொன்றிருப்பார்கள்.

முதலில் அரசன் மாளிகையில் சில மனிதருக்குண்டான வியாதியை சொஸ்தமாக்கினார். இப்படி இவர் செய்தமையால் அரசனும் அரசியும் இவருக்கு சிநேகமானார்கள். இவர்கள் இதற்கு முன் துப்பாக்கியைப் பார்த்ததேயில்லை. இவர் ஆகாயத்தில் அதிக உயரத்தில் பறக்கும் பக்ஷி



களைச் சுட்டதைக்கண்டு அதிசயித்தார்கள். மேஜையின்மீதுள்ள மெழுகுவர்த்தியைத் தமது கை துப்பாக்கியால் கீழே விழும்படி செய்தபொழுது அவர்கள் இவரை ஜாலவித்தைக்காரனென்று நினைத்தார்கள். இவர் காட்டு முரட்டு குதிரைகளைப் பழக்கி அவைகளின்மீது சவாரி செய்தபொழுது அவர்கள் கொண்ட அதிசயத்திற்கும், மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. உடனே வெகு நேர்த்தியானவும், சிறந்த குதிரையொன்றை இவர் எப்பொழுதும் சவாரிசெய்ய இவருக்கு இனாமாக கொடுத்தார்கள்.

மேற்கூறிய வண்ணம் பற்பல அபூர்வமானவைகளைச் செய்து காண்பித்து அவர்கள் தன்மேல் பிரியப்படும்படி செய்தார். அவ்வரசன் தன் தேசத்தில் ஒரு பாகத்திற்கு எஜமானனாக ப்ரூஸை நியமித்தார். ப்ரூஸுக்கு இது இஷ்டமேயில்லை. இவர் இன்னுமுள்ள மற்ற இடங்களைக் கண்டு பிடிக்க விரும்பினார். இப்படி செய்ய அரசன் உத்திரவைப்பெற்று பல கஷ்டங்களை அநுபவித்து அநேக இடங்களைப் பார்த்து நயில் நதியின் உற்பத்தி ஸதானத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். இப்படி முயன்றதில் இந்நதியில் சேரும் பல நதிகளில் பெரியதாகிய ஒன்றை நயில் நதி என்று நம்பி அதன் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடித்தார்.

இவர் இவ்விடத்தைக் கண்டுபிடித்தபின் திரும்பிவரும்பொழுது பல அபாயங்கள் நேரிட்டன. போனவழியாக வரமுடியவில்லை. வேறு வழியாக வந்தார். வரும் மார்க்கங்களில் பல காட்டு ஜனங்களிருந்தார்கள். இவர்கள் நல்லவேளையாய் இவரைத் தொந்தரவு செய்யவில்லை. இவர் இவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு க்ஷேமமாய் கரைக்குவந்தார். உடனே கப்பலேறி இங்கிலாந்துக்கு யாதொரு கெடுதலின்றி வந்து சேர்ந்தார். தாம் செய்த பிரயாணத்தைப்பற்றி எழுதி ஒரு புஸ்தகத்தைப் பிரசுரித்தார்.

மார்க்கோபோலோ எழுதிய புஸ்தகத்தைப்பற்றி எவ்விதம் ஜனங்கள் கேலிசெய்து நகைத்தார்களோ அவ்விதமே இவர் எழுதிய புஸ்தகத்தைப்பற்றி கேலிசெய்தார்கள். இவர் எழுதியமாதிரி ஜனங்களிருப்பார்களாவென்ற கதைகளைச் சிறிதும் நம்பவேயில்லை, இவ்விதம் நாற்பது வருஷங்கள் சென்றபின் வேறொருபிரயாணி அப்ஸீனியாவுக்குப் பிரயாணப்பட்டு ப்ரூஸ் எழுதியவைகளெல்லாம் உண்மையெனத்தெரிந்துகொண்டார். அச்சமயத்தில் ப்ரூஸ் இறந்துவிட்டார். அவர் இருந்திருந்தால் வெகு ஆநந்தம் கொண்டிருப்பாரன்றோ? இவர் உயிருடனிருந்தபொழுது இவர் வார்த்தையை ஒருவரும் சிறிதும் நம்பவில்லை. இது உலக வழக்கம்.

## மஸ்கோபார்க் ஆபிரிக்காவில் இறந்தவிதம்.

மார்க்கோபோலோ எழுதிய புஸ்தகம் ஜனங்களை ஆபிரிக்காவுக்குப் போகும்படி தூண்டிற்று. ப்ரூஸ் எழுதிய புஸ்தகமும் ஆப்ரிக்காவைப் பற்றி இன்னும் அதிகமாக அறியும்படி செய்தது. இப்படிச் செய்யத் துணிவது அபாயமானதென்று அவர்களுக்குத் தெரியுமல்லவா?

மங்கோபார்க் என்பவர் இவ்விதம் பிரயாணம் செய்யபுறப்பட்டார். இவர் ஸ்காட்லாண்டு தேசத்து டாக்டர், சிறு பிராயமுள்ளவர். இவர் ஜன்மதேசத்துக்கு வெகு தூரத்திலுள்ள விடங்களுக்கு கப்பலில் பிரயாணம் செய்தமையால், பிரயாணியாகயிருக்க இவருக்கு விருப்பமுண்டானது. ஆப்ரிக்காவுக்கு வந்து இவர் சேர்ந்ததும் காட்டு ஜனங்கள் இவரைப் பிடித்து கைதியாக வைத்தார்கள். இவர் அவர்களிடம் தப்பித்துக்கொண்டு காட்டுக்குப்போனார். அங்கே வியாதியால் வருந்தினர். அனாதைக்கு தெய்வமே துணை என்பதற்கிணங்க ஒரு பக்ஷமுள்ள அவ்வூரான் இவரைக் கண்டு, இவரை மெதுவாக கரைக்கு கொண்டுவந்து சேர்த்தான். சில வருஷங்கள் சென்றபின் நாற்பது மனிதருடன் மறுபடியும் புறப்பட்டார். இவர் நைகர் நதியண்டைபோய் சேர்ந்தபொழுது 33-பேர் இறந்துவிட்டார்கள். ஏழுபேர்தான் இவருடன் உயிருடனிருந்தார்கள். தாம் செய்த பிரயாணங்களைப்பற்றி புஸ்தகமாக எழுதி இங்கிலாந்துக்கு அனுப்பினர். பின்பு அந்நதியில் படகை விட்டு சிறிதுதூரம் பிரயாணம்செய்தார். அது ஜலத்திற்குள்ளிருந்த பாறையின்மீது மோதிற்று. உடனே இவரும், இவர் மனிதரும் உயிர்தப்பிவர படகை சரியாக பழுதுபார்க்க பிரயத்தனம் செய்துகொண்டிருக்கையில் காட்டு ஜனங்கள் வந்து இவர்களையெல்லாம் கொன்றுவிட்டார்கள். முரட்டு ஜாதியாரால் இவர்கள் கொல்லப்பட்டது மிகவும் விசனிக்கத் தகுந்ததே!

---

## சாமர்த்தியமான காரியத்தைச் செய்த சிறுவன்.

## The Story of Hans.

(183-வது பக்கத் தொடர்ச்சி)

ஜலத்தைத் தடுப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் சுவருக்கு 'டைக்' என்று பெயர். இதை நீங்கள் மறந்துவிடாமல் மனதில் வைத்திருக்க வேண்டியது.

நிற்க, ஹான்ஸ் பிறகு என்ன செய்தானென்பதை அறிவிக்கிறேன்: அன்று எல்லாப்பிள்ளைகளும் வீடு செல்வதைப்பார்த்து மிகுந்த வருத்தம் அவனடைந்திருந்தும் உபாத்தியாயர் தனக்குக் கொடுத்த வேலையைச் செய்துமுடித்தான். குறிக்கப்பட்ட அரைமணிநேரத்தில் பாடங்கள் எல்லாவற்றையும் நன்றாய்த் தெரிந்துகொண்டு உபாத்தியாயரிடம் அவைகளைப் பிழையின்றி ஒப்புவித்தான். பிறகு வீட்டுக்குப்போக எண்ணங்கொண்டு



புத்தகங்களைப் பையிற்போட்டு, விளையாடுமிடத்தையடைந்தான். அங்கே பையன்கள் யாவரும் வீடு போய்விட்டார்கள். தான் ஒண்டியாய் நடந்து போக வேண்டியதாயிற்று. ஆகவே, அவன் தன் புத்தகப் பையைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு, ஆநந்தமாய்ப் பாடல்கள் பாடிக்கொண்டு, வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

இப்படிப்போய்க்கொண்டிருந்தவன் திடீரெனபாட்டைநிறுத்தினன். அவனுக் கெதிரிலிருந்த டைக் கொன்றில் ஒரு சிறு துவார மிருக்கக்கண்டான். அதன்வழியாய் கொஞ்சம் ஜலம் கசிந்துகொண்டிருந்தது. பட்டணத்திற்கு ஓடிச்சென்று ஜனங்களையழைத்து வரலாமோவென்று முதலில் எண்ணினன். மறுபடி துவாரத்தைப் பார்த்தபோது யோசித்துக்கொண்டிருப்பதற்குள்ளேயே அது பெரிதாகிவிட்டது. "ஓடிப்போய்ச்சொல்வதில் பயனில்லை. நானோடித் திரும்பி வருவதற்குள், ஜலம்பட்டணத்தில் பிரவேசித்துவிடும். துவாரம் பெரிதாய்ப்போய் அடைக்கக் கஷ்டத்தை விளைவிக்கும். ஏதோஎன்றால் முடிந்தவரை இங்கிருந்தபடியே முயற்சிசெய்துபார்க்கிறேன்." என்று திடப்படுத்திக் கொண்டு டைக்கினருகில் உட்கார்ந்து! துவாரத்தை மணலால் அடைத்தான். ஆனால் அது பிரயோஜனமில்லையென்று தோன்றிற்று. ஜலமானது மணலை அதிசீக்கிரத்தில் கரைத்துக்கொண்டு துவாரத்தின் வழியாய் முன்போல் போக வாரம்பித்துவிட்டது. பிறகு ஹான்ஸ் தன் கையின் பெருவிரலை சுவற்றிலுள்ள துவாரத்தில் வைத்துப் பார்க்க இரண்டுக்கும் பொருந்தி யிருந்தது. அவன் கையை வைத்தவளவில் ஜலம் அடைப்பட்டு விட்டது. "யாராகிலும் உதவிபுரிய வருமளவும் கையை எடுக்கமாட்டேன்" என்று சொல்லி டைக்கின் பக்கத்தில் அமர்ந்தான். ஹான்ஸ் மிகச் சிறுவனாயிருந்தும் டைக்கில் ஒரு சிறிய துவாரமிருந்தால் அது எவ்வளவு துன்ப முண்டுபண்ணு மென்றுணர்ந்ததைச் சற்று நிதானியுங்கள்.

ஹான்ஸ், வழியில் யாராகிலும் போவார்களென்ற நம்பிக்கையோடு வெகுநேரம்வரை கையை துவாரத்தில் செலுத்தியபடியே உட்கார்ந்திருந்தான். ஆனால் யாருமங்கு வரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் சூரியனும் தன் கிரணங்களை யடக்கிக்கொண்டு அஸ்தகிரியடைந்தான். இருளும் சூழ்ந்துகொண்டது. ஆகாயத்தில் நக்ஷத்திரங்களைத் தவிர்த்து வேறு பிரகாசமென்பதே கிடையாது. குளிர் அதிகரித்தது. உபத்திரவமும் மிகுந்தது. ஆயினும் ஹான்ஸ் கையைக் கொஞ்சமேனும் அசைக்கவில்லை. கையை எடுத்தால் ஜலம் உள்ளே புகுந்தோடும். வரும் அலைகளைத் தடுக்க முடியாமல் துவாரமும் பெரிதாகிவிடுமென்று பயந்தான். இப்படியிருக்கையில் பட்டணத்து மணிக்கூண்டின் கெடிகாரம் பத்தடித்தது. அப்பொழுது ஹான்ஸ் "இனியாரும் இங்கு வரப்போகிறதில்லை. காலையில்தான்

"வருவார்கள்" என்றுணர்ந்தான். "காலை வரையில் என்னாலிப்படியே யிருக்கமுடியுமா? பார்க்கிறேன். நான் அச்ரத்தையாயிருந்தால் அநேக ஜனங்கள் மடிவார்களன்றோ!" என்று வருந்தினான். இரண்டொரு சமயம் அவனுக்கு நித்ரைவந்தும் கையின் உபத்திரவ மவனைத் தூங்காமற் செய்துகொண்டே யிருந்தது.

இக் கதையைப் படிக்கும் சிறு குழந்தைகளே! உங்கள் கைகளிலொன்றை ஐந்து நிமிஷங்களாகிலும் அசைவற்று வைத்திருந்தால் அன்று ஹான்ஸ் பட்டவருத்தத்தைக் கொஞ்சமேனு மறிவீர்கள். அவன் கையை அத்துவாரத்தினுள் ஐந்துநிமிஷங்களல்ல, ராமுழுமையும்வைத்திருந்தான். அநேகமுறை தன்தாயைப்பற்றி எண்ணுவான். "என் தாய் எங்கெங்கெல்லாம் சென்று என்னைத்தேடுகிறாளோ? என்னசெய்கிறாளோ?" வென்று பரிதவித்து "இனி என்னால்முடியாது" என்றுசொல்லிக் கையை எடுக்கப் போனான். அப்பொழுது ஆகாயத்தின் கண் நக்ஷத்திரங்கள் 'மினு' 'மினு' வென்று பிரகாசித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அவைகள் ஆநந்தமாய்ப்பையனைப்பார்த்து "விடாதே,விட்டுவிடாதே, இன்னும்கொஞ்சநேரம் பொறுத்திரு" என்று சொல்வது போல ஜ்வலித்துக்கொண்டிருந்தன.

கடைசியாய் இரவும் கழிந்தது, நக்ஷத்திரங்களும் மறைந்துவிட்டன. ஹான்ஸ் பகல் வந்துவிட்டதென்று சந்தோஷங் கொண்டான். இப்பொழுது குளிரின் மிகுதியை அவன் ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. பகல் வேளையில் திரளான ஜனங்கள் அவ்வழி நடப்பார்களென்று அவனுக்குத் தெரியும்.

ஹான்ஸ் டைக்கினருகி லுட்கார்ந்திருக்க அவன் தாய் வீட்டு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் பள்ளிவிட்டபிறகு தன் தோழர்களோடு விளையாடிவிட்டு வெகுநோங் கழித்து வீட்டுக்கு வருவது வழக்கமாகையால், அவளன்று கொஞ்ச மசட்டையா யிருந்துவிட்டாள். இருட்டினதும், ராச்சாப்பாட்டுக்கு வேண்டிய பதார்த்தங்களைப்பரிமாறி. முகப்புக்கதவைத்திறந்து ஹான்ஸையும் அவன் தகப்பனையும்கூப்பிட்டாள். தகப்பன் வந்தானேயன்றி குழந்தைவரவில்லை. கொஞ்சநேரம் காத்தும் வீணாய்ப்போகவே, அன்றிரவு ஹான்ஸில்லாமலே சாப்பாடுநடந்தது. அப்பொழுதுதான் தன்மகனுக்கு ஏதோ கெடுதல் நேர்ந்திருக்கவேண்டுமென்று தாய்க்கு மனதிற்பட்டது. நிசியில் இருவரும் தேட கிளம்பினார்கள். வெகுதூர மலைந்து திரிந்து, உறக்கச்சத்தமிட்டு அழைத்தும், காற்றின் சத்தத்தைத்தவிர்த்துப் பதிலொன்றுமில்லாமற் போய்விட்டது. போகவே, அவர்கள் வீடுதிரும்பி அன்றிரவுமுழுதும் கண்கொட்டாமல் ஹான்ஸ் வரவையே எதிர்பார்த்திருந்தார்கள்.

பொழுதுவிடிந்ததும் கூலியாளொருவன் ஹான்ஸ் உட்கார்ந்திருந்த



வழியாய் "வந்து இவ்வளவு அதிகாலையில் இங்கே என்னப்பா தேடிக்கொண்டிருக்கிறாய்?" என்று வினவினான். குளிர்மிகுதியால்களைப்படைந்திருந்ததால் ஹான்ஸ் முதலில் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. சற்று நேரம் சென்றதும் "நானொன்றும் தேடவில்லை. சுவற்றில் ஒரு துவாரமிருக்கிறது." தண்ணீர்வாராதபடி ராத்திரிமுதல் தடுத்துக்கொண்டிருக்கிறேன்" என்று விடையளித்தான். உடனே, கூலியாள் விரைவாய்ச்சென்று, துவாரத்திலிருந்து பையன் கையை மெள்ள எடுத்துவிட்டு, சீக்கிரத்தில் தண்ணீர் வாராதபடி துவாரத்தையும் தடுத்தான். பிறகு குளிரினால் அவஸ்தைப்பட்டு வியாதியடைந்திருந்த ஹான்ஸை அவன் தாயிடம் கொண்டு போய்ச்சேர்த்தான். தாய் அவனைப்படுக்கப்போட்டு சவுக்கியமடையுமளவும் அநேகநாட்கள் வரை சிகிச்சை செய்துவந்தாள்.

அச்சிறுபையன் எப்படி பட்டணத்தைக் காத்தானென்பதைப் பாருங்கள். அவன் துவாரத்தினுள் கையை வைத்துக்கொண்டிராவிட்டால் அநேக உயிர்கள் சேதமாய்ப் போயிருக்குமல்லவா? இதனால் ஹான்ஸ் கியாதிபெற்றவொரு வீரனானான். அவன் பள்ளியில் ஓதும் பாலர்களெல்லாம், "எப்படி டைக்கிலிருந்து வந்த ஜலத்தை நிறுத்தினாய்?" என்று அடிக்கடி கேட்பார்கள். ஹான்ஸோ மிகவும் நாணமுள்ள பையனாதலால் ஒன்றும் பதில் கூறாமல் "அன்றைக்கிருந்தநேரம் ஓரிரவுமிருந்ததில்லை" என்று மாத்திரம் சொல்லுவான்.

குழந்தைகளே! இத்தகைய சிறுவன் ஒரு பெரியகாரியத்தைச்செய்ததையும், அதை எவ்வாறு செய்தானென்றும் சற்று யோசியுங்கள். ஒருசமயம் உங்களுக்கும் இப்படிப்பட்டகாரியம் செய்ய நேரும். அப்பொழுது வானசோதிகள் ஹான்ஸுக்கு "சற்று நேரம் பொறுத்துக்கொள் இன்னும் விடாதே" என்று சொன்னதை மறந்துவிடாதேயுங்கள். மேலும், அன்றன்றுள்ள கடமைகள் செய்வது கடினமாயிருந்தால் அப்பொழுதும், அவைகளை நிறைவேற்ற வேண்டுமேயன்றி விட்டுவிடலாகாது. 'அல்பகார்யம்' தானேயென்று அலட்சியம் செய்யவுங்கூடாது.

டி. எஸ். ராஜகோ[illegible]

161413

## பழிக்குப்பழி

களம் 3

(15 வது பக்கத் தொடர்ச்சி)

இடம்.—ஒரு தோப்பு. துலுக்கர் இறங்கியிருக்கும் கூடாரங்கள்.

நேரம்.—இரவு நான்காவது ஜாமம்.

[பிரவேசம்]

காசிம் சேனாதிபதி.—ஆப்னி சிப்பாஹி காய்சிஹாங் சண்டைக்குத்

தயாரில்லை. நம்மள்கி எதிரி என்ன சொன்னுங்கோ. யுத்தம் பண்றான் செத்துப்போறான். என்ன.

முகமத்ஹாஜா.—குஷ்ராஹோ! யுத்தம் செய்றுங்கோ. இஸ்லாமில் சேரமாட்டங்களாம்.

காசிம்.—அச்சா! நல்லவேட்டை. கொண்ணுபோட்டு வேலை. நம்ம கிட்ட சண்டை போடறுங்கோ. பலே! கோவிலை இடிச்சுப்போடணும். கல்லைகும்பிடறுங்கோ.

முகமத்.—கல்லை உடைக்கலாம்.

காசிம்.—நம்ம சக்ரவர்த்தி உத்திரவென்ன? சொல்லுங்கோ. ஓலை வாசிக்கச் சொல்.

முகமத்.—நமக்கி தெரியாதுங்கோ.

காசிம்.—சுல்தான், ஆமத் கூப்பிட்றுங்கோ.

(சுல்தான் ஆமத்தைக் கூப்பிட அவன் வந்து ஒரு ஓலைச்சுருளை வாசிக்கிறான்.)

"இதனால் நமது பிரஜைகளுக்குத் தெரிவிப்பது யாதெனில், நமது சற்குருவாகிய ஸ்ரீமகமத் நமக்குப் போதித்திருக்கும் நன்மார்க்கத்தை யறியாத மூடராகிய ஜனங்களுக்குப் புகட்டி, அவர்களை நமது மதத்தினராக்கி, நமது குரு இறக்குந் தருணம் தெரிவித்த கட்டளையை இவ்விதமாக நிறைவேற்ற முன்வருபவர்களுக்கு யாம் எவ்விதமாகவேனும் உதவிபுரியத் தீர்மானித்திருக்கிறோம். அப்பேறபட்டவர்களுக்கு பணவுதவி புரிந்து அவர்களை எமது ராஜ்ஜியத்தில் உயர்ந்த பதவியில் வைப்போம். அவர்கள் வெளிதேசங்களுக்குச் செல்வதற்கு வேண்டிய சாதனங்கள் செய்ய ஏற்பாடு பண்ணியிருக்கிறோம். இதை யாவரும் அறியவும்.

நமது சற்குரு இறந்த பிறகு 900 வருஷங்களுக்குப் பின் சூரியன் தெற்கே இருக்குங்காலம் இருட்டுந்தினம் நமது முத்திரை வைக்கப்பட்டது"

காசிம்.—பேஷ்! நமக்கு கீர்த்திவரும்,

ஆமத்.—எப்பொழுது! துலுக்கராகப் பண்ணினாலன்றோ.

முகமத்.—கொண்ணுபோட்டாங்கோ.

ஆமத்.—கீர்த்தி கொஞ்சந்தான்.

காசிம்.—இருந்தாலும் நம்மள் துலுக்கனாக்க முடியல்லிங்கோ. கோவிலை இடித்துவிட்டு கல்லை நம்ம சக்ரவர்த்திக்கு அனுப்பு.

ஆமத்.—நல்லதுதான். இனிமேல் இங்கே ஒருவரும் கல்லைக் கும்பிடமாட்டோங்கோ. அது ஒரு நல்லது.

முகமத்.—ஆயிரம்பேர் சாகிறுங்கோ, கஷ்டம்!

காசிம்.—என்ன சொல்றது. நல்லது சொன்னுங்கோ கேக்கல்லை.



கல்லைக் கும்பிடாரவங்களை கொன்னு போட்டால் பாவம்கிடையாதுன்னு நம்ம குரு சொல்லியிருக்காங்கோ.

ஆமத்.—சரி சண்டைக்கு ஏற்பாடுசெய்.

காசிம்.—நம்ம அனுப்பின தூதுக்கு பதில் என்ன சொன்னுங்கோ தெரியுமா? தைர்யம் இருந்தால் கோவிலைபிடித்து சனங்களை கொன்று போடுங்கள். இஸ்லாம் மதத்தில் சேரமாட்டோம்? கல்லைக்கும்பிடுங்கழுதைகளைக் கொல்ல தைர்யம் வேணுங்கோ என்னவேண்டாமா.

முகமத்.—நம்பள்கி ரொம்ப இருக்காங்கோ ரோக்குகூடவேணும்

காசிம்.—இந்தக்கோவிலைக் கொள்ளையிட்டுவிட்டு, ராஜா டபீர்தாசனை பிடித்துவிட்டால் வேலை முடிந்துபோச்சு.

ஆமத்.—பதினாயிரம் வீரர்களாம். ஆனை குதிரை அல்லாம் இருக்குது. நம்ம கிட்ட குதிரையும் ஆள்களும்தான் இரண்டாயிரம் என்னமா சண்டைபோடறுது.

காசிம்.—நாம்மட்கி பயமில்லை. முகமத் நம்ம சிபாய்களை யெல்லாம் நிறுத்திவை. சண்டைக்குத்தயார். (முகமத் செல்கிறான்) ஆமத் நீசென்று எதிரிகள் வேலைதெரிஞ்சுகினு வாங்கோ.

(ஆமத்செல்கிறான்.)

காசிம்.—உலாத்தினவண்ணம் யோசிக்கிறான். "ஐயோபாவம் இத்தனைபேரக்கொண்ணுபோடணுமே. அவுங்க சாறது நிச்சயம். ஆனால் இவர்கள் சுத்த மட்டிகள். சௌக்கியமாய் இஸ்லாமாகிவிட்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கலாம். சுவாமி அப்பொழுது காப்பாற்றுவார்கள், நம்மை நமது சண்டையில் சுவாமி ஜெயிக்கப் பண்கிறார். அவர்கள் சுவாமியைத் தெரியாமல் கல்லைத்தொழுகிறார்கள். அந்தக்கல்லெல்லாம் ஒடைச்சுப் போட்டால் கல்லைக்கும்பிடமாட்டாங்கோ. இனிமேல் அதான் நாம்ம செய்யனும். அல்லாட்டி போனால்.—

ஒரு சேவகன் ஓடிவந்து காசிமை அவசரமாய் அழைக்க காசிம் சென்று முகம்மத் சேனை அணிவகுத்திருக்குமிடத்தையடைந்தான்.

காசிம்.—என்ன ஆமத்! துஷ்மான் கிஸ்தார் ஹாஹெய்.

ஆமத்.—இப்பவே சண்டை போடணும். ராத்திரிமுழுக்க அவுங்க கண் முழிச்சபடியால் இப்ப சண்டைசெய்ய் கஷ்டப்படுவங்கோ. இருநூறுபேர் அந்தகோத்துவிட்டில் இருக்காங்கோ. கோவிலுக்குள் போகமுடியாது. கதவெல்லாம் சாத்திவிட்டாங்கோ. இருநூறுபேரைக் கொண்ணு போட்டா உள்ளே போறது.

களம் 4.

இடம்.—கோவில் மதிலும், அதன்கீழும், யுத்தகளம்.

நேரம்.—காலை: சூரியோதய சமயம். [பிரவேசம்.

பட்டாமணியக்காரர் மதிலில் நடந்தவண்ணம் யோசிக்கிறார்— ஏது! என்னமோ கெட்டவேலைதான் நமக்கு. நாம்ஜெயிப்பது இனிமேல் சொப்பனத்திலும் கிடையாது. அதோ ராஜசிம்ஹன் வெகு கஷ்டத்துடன் சண்டைபோடுகிறான். பாவம்! ஐந்நூறு காட்டுமிருகங்களுடன் சண்டை செய்ய எவனால் முடியும்! நமது கோவில் மதில்களை ஒரு விநாடியில் இடித்துப்போடுவார்கள். உள்ளே நுழைந்துவிட்டால், விக்ரமெல்லாம் அக்குநூறு. பிள்ளை குட்டி பெண்சாதி எல்லாரும் எமனுக்கிரைதான். சிலபேரைப் பிடித்துக்கொண்டு போய்விடுவான். ஐயோ! கஷடம். எதற்கும் நமது பார்வதி அம்மன் துணை. அவன் கொடியை நாட்டிவிடுகிறேன் கோபுரத்தில், அந்தக்கொடியில். என்னமோ மகத்துவம் என்கிறார்களே என்ன இருக்கிறதோ! நமது கணக்குப் பிள்ளை கெட்டிக்காரன், சற்று இரு அதோ நமது வீரர்கள் ஓடுகின்றனரே! என்ன விஷயம்.

(குப்பமுத்து வருகிறான்)

ஐயா! ராஜசிம்ஹர் சண்டைபோட்டார்! சயிக்க முடியல்லை சுமார் நூறுபேர் செத்துப்போனாங்கோ பாக்கி நூறுபேருடன் எங்கேயோ ஓடரமாதிரி போக்கு காட்டி மேல் கோபுரவாயில் வழியாக உள்ளே நுழைந்துவிட்டார்கள். நான் கதவை திறந்து வைத்திருந்தேன். துலுக்கர்களெல்லாம் மேலே கோபுரத்துக்குத்தான் போயிருக்கிறார்கள். அதோ பாருங்கள்;

பட்டா.—மற்ற கோபுரங்களின் வாயில்களில் எவ்வளவு காவல்.

குப்ப.—இந்தக் கோபுரவாயிலில் துலுக்கன் ஒருவரும் இல்லை. மற்ற வடக்கு, மேற்கு, கிழக்கு கோபுரங்களிலெல்லாம் துலுக்கன்கள். மேல் கோபுரவாயில்லேதான் ரொம்பபேரு, அங்கே நம்பவீராகள் நூறுபேரிருக்காங்கோ. மற்ற கோபுர வாசலில் பத்துபேர் இருக்கா ஒவ்வொரு இடத்திலும்.

பட்டா.—மேற்கு கோபுரவாயிலில் சண்டை மும்முரம் போலும்! கொடி நாட்டியிருக்கிறது. அம்மன் துணை. அடே இதென்ன! (சமீபத்தில் ஒரு அம்பு கிர்ரென்று பாய்ந்தது.)

குப்புமுத்து.—பலே பசங்களுக்கு கண் தெரியுதே! துலுக்கனுக்கு அதிகமாய் அம்புவிடத்தெரியாதே. நம்ப பசங்க எவனோ வேலை இது. சாமி! இட்டவாங்கோ ஒரு சேதி! இந்தப் பஞ்ஞாயத்து மேலே எனக்கு ஒரு சந்தேகம்.

பட்டா.—ச்செய், அவன் அப்பேற்பட்டவனில்லை யோக்கியன். வா நாம் மேற்கு கோபுரம் செல்வோம்.

(செல்கிறார்கள்.)



(யுத்தக்களம்:—ஒருபாகம்)

ராஜசிம்ஹன்.—வீரர்களே! கதவின் ஒருபாகத்தை பெயர்த்துவிட்டார்கள். நாம் இனிமேல்தான் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். துவாரத்தருகே இருவர் எப்பொழுதும் நின்றிருக்கவேண்டும். ஒருவன் நுழைந்தால் வெட்டிவிடவேண்டும்.

எல்லாரும்.—அப்படியே,

பட்டாமணியம்.—(கோவில் மதில்மேல் இருந்து) அம்பு எய்யும் வீரர்களே! இப்பொழுதுதான் உங்கள்தொழிலின் உபயோகம் வேண்டியது. கீழே துலுக்கர்கள் பலமாக தாக்குகிறார்கள். அவர்கள்மேல் அம்புகள் விடுங்கள், செவ்வையாக குறிபார்க்கக்கூடியவன் சேனாதிபதியைக்கொல்லுங்கள். அதிகவனமாயிருங்கள்.

கணக்குபிள்ளை.—ஐயா! உள்ளே பஞ்சாயத்துக்கட்டைவிட்டு வெளியே வரமாட்டேன் என்கிறார். கோகர்ன தீக்ஷிதர் வரைக்கோட்டைக்குள் புகுந்துகொண்டிருக்கிறார். சக்கரை சாஸ்திரிகள் கிணற்றுக்குள் இறங்கிவிட்டார். அப்பு தீக்ஷிதர்வைக்கோற் போரினுள் படுத்துக் கொண்டார்.

பட்டி.—அதெல்லாம் இப்போ என்ன ஐயா! உள்ளே நுழையுமுன் இவர்கள் முன் ஜாக்கிரதையா யிருக்கிறார்களோ. பலே!

குப்பமுத்து.—அச்சா! எத்தனை துலுக்கன் விழுந்தான்கள்! நம்ம அம்புகள் பாவாயில்லை.

(யுத்தகளம். மற்றொரு பாகம்)

காசிம்—நுங்கள்கு சண்டைபோடத் தெரியல்லை. அந்த நூறுபேரை ஓடவிட்டீங்க. கொண்ணுபோடல்லை. இப்ப துலுக்கன்கள் அம்புபட்டு சத்துப்போறான்கோ.

ஆமத்.—இவங்கள் நாம நினைச்சதுக்கு மேலே சிபாய்கள் தாம். நம்ம பேர் விழிந்துவிட்டான்.

முகமத்.—என்ன செய்யறது. கதவை ஒடைக்க முடியவில்லை. சுவற்றை யிடிக்கலாமா.

காசிம்.—அரே! நமள்கி யுத்தி வந்தாங்கோ. கோபுரத்து மேலே ஒரு கொடி பறக்குறாங்கோ.

ஆமத்.—அது அவுங்கபக்கம் பறக்கிறது நம்பபக்கம்பறந்தால் நமக்கு ஜெயம். அல்லா.

முகமத்.—காற்று அப்படி அடிக்கிறதே! இப்படி என்னுமா பறக்கும்.

காசிம்.—அரே! கொண்ணு போட்றாங்கோ முகமத் (பயந்து) யாரை?

காசிம்.—கொடியை.

ஆமத்.—அச்சா! அப்போ அவங்களுக்கு ஜெயமில்லை.

காசிம்.—அவாளுக்கல்லாட்டி நம்மள்கு தான். பலே! நம்ம பக்கர் கானைக் கூப்பிடு!

(பக்கர்கான் வந்துட்கார்ந்து கொடியை இலக்குவைத்து அம்பு எய்யுமுன் வேறொரு அம்பு அவன் தலையைக் கொய்து சென்றது.)

காசிம்.—பலே! அவங்கள் கெட்டிக்கார பசங்கள் பக்கர்கானை கொண்ணு போட்டாங்கோ.

முகமத்.—நான் வேலை செய்கிறேன்.

(முகமத் அம்பு எய்யுமாறு உட்கார்கிறான். அவன் மேல் எய்யப்பட்ட அம்பு அவன் பாகையைப் பிய்த்துச்செல்ல முகமத் அம்பினால் கொடியை அடித்துத் தள்ளிவிடுகிறான்.)

காசிம்.—பலே! அல்லா! அல்லா! முகமத்!

(எதிர்த்த பக்கத்தில் அழுகுரல் அதிகமாக கேட்கிறது.)

காசிம்.—அரே! அவுங்க தோத்துப் பூட்டாங்கோ! உள்ளே போய் விட்டாங்கோ. அரேரே மதில்மேலே துலுக்கன். பலே! கதவு உடைஞ்சு விழுந்து விட்டது- பாவம் அத்தனைபேருங் நசுங்கிச் சத்துப்பூட்டான். எல்லாரும் ஓடிவாங்கோ (ஓடுகிறார்கள்.)

## களம் 5

இடம்.—கோவில் உள்பாகம்.

நேரம்.—காலைநேரம்.

*துலுக்கவீரர்கள் கோவிலைச் சூறையாடுகிறார்கள். ஜனங்களை அடித்துக் கொல்லுகிறார்கள்.*

ஆமத்—அரே! அங்கே ஒருவன் ஓட்ரான் பிடி.

காசிம்.—இந்தப் பசங்கள் ரொம்ப பணம் இருக்கும்.

(முகமத் பஞ்சாயத்துக்காரரின் குடுமியைப் பிடித்திழுத்து வருகிறான்.)

ஆமத்.—இவனு!

முகமம்—இவன் கிட்டதான் கல் இருக்கு. பணம் இருக்கு

காசிம்.—அரே! கல்லை எடு ஒடைச்சுப் போடலாம். பணத்தை கொண்டா. சல்தி. அல்லாட்டி போனால் உன்னைக் கொண்ணுடுவோம்.

பஞ்சா.—ஹரஹர மஹாதேவா! இந்தப் பாதகர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டேனே. என்கதி இப்படியாயிற்றே ஐயோ!

(ஒரு துலுக்கன் கோகர்ன தீக்ஷதர் நாவலையைப் பிடித்து முக்கிக் கொண்டு வருகிறான்)

ஆமத்.—ஒரு தொந்திக்காரன் வந்தான்.

பஞ்சா.—வந்தீரா, தீக்ஷிதரே இன்னிக்கி என்னமோ நமக்கு கிடைக்கப் போகிறது.



காசிம்.—அரே! தொந்திக்காரரைக் கட்டாதே நம்ம ராஜாவுக்கு இவ்வளவு பெரிய தொந்திவேணும்.

ஆமத்—எ. திட்டதரே! தொந்திநம்கி என்னுமை வந்தாங்கோ.

தீக்ஷிதர்.—இதேதரா வம்பாயிருக்கு! வடை தின்னாமல் வாடியிருக்கிறதே என் தொந்தி.

ஆமத்.—பலே! படைவடி தொந்தி!

காகிம்.—இவனைப் பிடிச்சுக்கொண்டு போகணும்.

தீக்ஷிதர்.—வாணும். நம்மள்கி கஷ்டம்.

காசிம்.—அல்வாட்டிப் போனா தொந்திலே குத்துவன்.

தீக்ஷிதர்.—உன்னோடே வந்தால் எனக்கு வடை கிடைக்காது. தொந்தி இல்லை.

காசிம்.—அரே! போனாப்போறான். தொந்திகாரனை அவிழ்த்துப் போடு. தொந்தி! சொல் அல்லா. முகமத்

(தீக்ஷிதர் 'அல்லா அல்லா' என்று குதிக்கிறார். அவர் பூணூலை அறுத்து அவரைத் துரத்திவிடுகிறார்கள்.

முகமத்.—காசிம்! இவனை உதைக்கணும்.

காசிம்—எய்! கல்லை காண்பிக்கிறாயா இல்லையா? (வேறு சிலர் பட்டாமணியகாரர் அவர் மனைவி இன்னும் சில ஸ்திரீகள் புருடர்கள் இவர்களை கட்டிக்கொண்டு வருகிறார்கள்.)

காசிம்.—அரே ரொம்பபேர் வராங்கோ. ஆமத் நீ கல்லைக்கொண்டுவா. (ஆமத் செல்கிறான்

முகமத்—(பட்டாமணியகாரரை நோக்கி) அரே! நீதான் சண்டை போட்டே! ரெம்ப கெட்டிக்காரன். இப்பொழுது துலுக்கனு, கொண்ணு போறியா எது வேணும்:

பட்டா.—சிவ! சங்கர மஹாதேவ அரே! நீ கொன்னுபோடு. பயமில்லை.

காசிம்:—என்ன தைர்யம்டா இவனுக்கு! முகமத்! இவன் பெண்ணைக் கொண்டுவா இப்படி..

பட்டா.—அரே! ஜாக்கிரதை. ஸ்திரீமேல் கையைப் போடாதே.

முகமத்.—என்ன பேசறே! பலே!

(என்று சொல்லி ஒரு ஸ்திரீயை இழுக்கச் செல்கிறான். உடனே பட்டாமணியம் புலிபோல் அவன்மேல் பாய்ந்து குப்புற வீழ்த்தி விலாவில் இருகுத்து வைத்து எழுந்து நிற்கிறான். உடனே ஓடி தன் பெண்ணை நெருங்கி

பட்டா.—என் பெண்ணே நம்கதி இவவாறாயிற்று. சுவாமியை நினை.

(இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் பெண் கீழே விழுகிறாள். பட்டாமணியகாரர் தன் கைவாளினால் தன்னைக் குத்திக்கொண்டு மாள்கிறார்.)

காசிம்.—அச்சா! இவன்தான் சிபாய்! பலே!

(ஆமத் வருகிறான். அநேகர் அம்மன் விக்ரகம் சுவாமி விக்ரகம் எல்லாவற்றையும் தூக்கி வருகிறார்கள்.)

காசிம்.—ஆமத்! என்ன கொண்டுவந்தாய் கல்லெல்லாம் இப்படி போடு. இந்த ஆளை ஒரு கல்மேல் படுக்கவைத்து இன்னொரு கல்லை அவன் மேல் போடு.

முகமத்.—அரே! கல்லெல்லாம் உடைத்தெரி. அல்லா! அல்லா! கல்லைத்தொழும் மூடர்கள்! கல்லைப்போட்டு மிதி.

காசிம்.—அல்லா—ஜபம்.

(எல்லாரும் குழந்தாட் படியிட்டு ஜபிக்கிறார்கள்.

(திரைவிழுகிறது)

இன்னும்வரும்.

வி. என். ராஜ்.

---

# தேரையின் மாணிக்கம்

முன்னொருகாலத்தில், ஒருஉத்தியானவனத்தில்மிகவும்விகாரமான தேரையொன்று வசித்துவந்தது. அவ்வுத்தியானத்திற்குரிய குழந்தைகள் அவ்விடம் வந்தால் அவர்கள் திடுக்கிட்டு "ஐயோ! அதோ ஒரு தேரையிருக்கிறது, துஷ்டஜந்து, தொடாதே, கடித்துவிடும்" என்று அலறுவார்கள். ஆனால் அது கடிக்கவேண்டுமென்றாலும் முடியாது. முடிந்தாலும் வேண்டாது. இவ்விஷயம் குழந்தைகளுக்குத் தெரியாததனால் அச்சமுற்று ஓடிவிடுவார்கள். அதனால் தேரை தன் அவலட்சணத்தை இகழ்ந்து துக்கித்துக்கொண்டிருக்கும்.

ஒருநாள் இலைகளடர்ந்த ஒரு விருட்சத்தின் கீழ் தேரை படுத்திருந்தது. அப்பொழுது ஒரு சிறு தேவதை வானத்திலிருந்து பறந்துவந்து தேரையினருகிலுட்கார்ந்து கொண்டது. மயிர் மஞ்சள் நிறம், நீண்டிருந்தது. கண்கள் அழகுவாய்ந்து விசாலமாயிருந்தன, சிறகுகள் வானவில் வர்ணங்களால் அமைக்கப்பட்டிருந்தன, கிழத்தேரை அத்தேவதையினழகைப்பார்த்து வியந்து, தானிருக்கிற விடந்தெரிந்தால் தன் கோரரூபத்தைப்பார்த்து தேவதை பயந்துப் பறநது போய்விடுமென்றெண்ணி சுவாச பந்தம் செய்து கிடந்தது.



தேவதையோ, இவ்வளவு அழகு படைத்தும் இன்பமுற்றிருந்ததாகக் காணப்படவில்லை, அதன் மனதில் ஏதோ வருத்தம் குடிகொண்டாற்போலிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் முகத்தைக்கைகளால் மூடிக்கொண்டு ஹ்ருதயம் வெடித்துவிடும்போல் விசித்து விசித்து அழத்தொடங்கினது,

இதுகண்டு தேரை வருத்தமுற்று மெதுவாய் "நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? எனக்குச் சொல்லக்கூடாதா?" என்று வினவினது.

தேவதை (தலையைத் தொங்கப்போட்டபடியே): "ஐயோ! என்மகாராணியின் கிரீடத்திலுள்ள விலையுயர்ந்த மாணிக்கக் கல்லைத் தொலைத்துவிட்டேனே! நான் என்ன செய்வேன்?" என்று அங்கலாய்த்தது.

தேரை:—"(அருகில்வந்து) எங்கேவிழுந்தது?" என்றதும், தேவதை அதன் அவலட்சணத்தைக்கண்ணுற்று உரக்கச்சத்தமிட்டு ஓடவாரம்பித்தது.

தேரை:—"பயப்படவேண்டாம் நீங்கள். பார்வைக்கு நான் இவ்வளவு விகாரமாயிருந்தாலும் என்னுள்ளங் கெடவில்லை. தங்களுக்கு நேர்ந்த விபத்தைத் தெரிவித்தால் என்னால் கூடியவரையில் உதவி செய்யலாமென்று நினைக்கிறேன்." என்றதும், தேவதை தைர்யமடைந்து சொல்லத் தொடங்கிற்று.

"நான் தேவதை, மகாராணியின் பிரதம வேலைக்காரி. அவளது ஆடையாபரணங்களெல்லாம் என் வசத்தில்தானிருக்கும். தேவதைகளிருக்கும் வனத்திலின்று பெரிய நாடகமாடப்போகிறார்களாம். ஆதலால் அரசிக்கு உயர்ந்த உடுப்பும் அதிலுமுயர்ந்த கிரீடமும் தேவையாம். அம்மகுடத்தில் வைத்திழைக்கப்பட்டிருந்த மாணிக்க வைடூரியங்கள் கண்ணைப் பறிக்கக்கூடிய சோபையுடனிருந்ததால், என் சிரஸில் அதை தரித்துக்கொண்டு என்னழகை ஏரியில் * பார்த்துக்கொண்டிருக்க திடீரென்று ஒரு ரத்தினம் நழுவி ஜலத்தில் விழுந்து ஆழத்தில் போய்விட்டது. நான் என்னசெய்வேன்?—

தேரை:—ஆ! அப்படியா! ஜலஜந்துக்களில் ஒன்று கொணர்ந்து கொடுக்கக்கூடாதா?

தேவதை:—கூடாதாம்! அஜ்ஜந்துக்களினரசி அதை யெடுத்துத் தன் மகுடத்தில் தரித்துக் கொண்டு விட்டாள். நீரில் விழும் சப்பண்டமும் (அவர்களே கொடுத்தாலொழிய) அவர்களைச் சேர்ந்ததாகும். என்னரசியிடம் இவ்விஷயத்தை நான் தெரிவிக்கவில்லை. தெரிந்தால் என்ன சொல்லுவாளோ? தன் நாட்டைவிட்டு விலகு என்பாளோ, அல்லது பூதத்தி

* தேவதைகளுக்கு ஏரிகளும் குளங்குட்டைகளுமே கண்ணாடிகள்.

னிடம் என்னையனுப்பி சிட்சிக்கச் சொல்லுவாளோ? எனக்கு ஒன்றும் புரியவில்லை. வேறொரு ரத்தினம் கிடைத்தால் அதை வைத்தாவது சரி செய்துவிடலாம். எனக்கு யார்கொடுப்பார்கள்? பதிலாகக் கொடுக்கவோ என்னிடமொன்றுமில்லையே!

தேரை:—என்னிடமொரு அழகிய கல்லொன்றிருக்கிறது. நீங்கள் நான் கேட்பதைக் கொடுத்தால் நானதைத் தருகிறேன்.

தேவதை:—என்னிட மொன்றுமில்லையென்று முன்னமே சொன்னேனே!

தேரை:—உங்களிடமிருக்கிறது! நான் மாணிக்கங்கொடுத்தால் நீங்கள் ஒரு முத்தம் தருவீர்களா?

தேவதை:—முத்தமா? ஒருமுத்தத்திற்கு உன் கல்லைக் கொடுத்து விடுவாயா?

தேரை:—தருவேன். தங்களுடைய முத்தம் உலகத்திலுள்ள கற்களைக் காட்டிலுமுயர்ந்ததே. என்னை இதுவரை யொருவரும் முத்தமிட்டதில்லை. நான் அவ்வளவு அவலக்ஷணம் பொருந்தினவன். அருவருப்புள்ளவன்.

தேரையின் வருத்தத்தைப்பார்த்து சகிக்கமுடியாத தாய் தேவதை அது எவ்வளவு ஊழலாயிருந்ததெனக் கவனியாமல் தேரையின் கழுத்தை சிறுகத் தழுவிக்கொண்டு, தன் கன்னத்தை அதன் முகத்தில் வைத்து அதிக ஆதரவோடு முத்தமிட்டது. உடனே தேரை பேரின்பமடைந்து அருகேயிருந்த ஒரு பாறையின்மீதேறி தன் தலையை இரண்டொரு தடவை அதன் நுனியில் மோதிக்கொண்டது.

தேவதை:—ஐயோ! என்ன செய்கிறாய்? உன் தலை யுடைந்து சிதறிப்போகிறதே! ஏன் அவ்வாறு மோதிக்கொள்ளவேண்டும்?

தேரை:—"அச்சம் வேண்டாம், அப்படி செய்துகொள்ளாவிட்டால் ரத்தினம் வெளிவராது." என்று சொல்லி கண் குருடுபடும்படி ஒளியுள்ள மாணிக்கத்தை சிரஸிலிருந்தெடுத்து தேவதையிடம் கொடுத்தது.

தேவதை:—அந்தோ! என்னைத் தண்டனையிலிருந்து நீக்க நீ யவ்விதமா கஷ்டப்படுகிறது? எனக்கு கண்டு சகிக்க முடியவில்லையே!

தேரை:—"இதைவிடப் பதினாயிரம் மடங்கு தங்களுக்கு நான் உதவிசெய்யலாமே. சீக்கிரம் இதைக் கொண்டுபோய்க் கொடுங்கள்." என்றதும் தேவதை மற்றொருமுறை ஆனந்தத்துடன் தேரையைக் கட்டிக்கொண்டு முத்தந் தந்துவிட்டு, "போய் வருகிறேன், என்னருமைத் தேரையே! நீ செய்த நன்றியை நான் ஒரு பொழுதும் மறவேன்." என்று சொல்லி விடைபெற்று மறைந்தது.



அன்றிரவு தேரை ஒரு இலையின்மேல் படுத்துக்கொண்டு தேவதையையும் அவள் தந்த முத்தத்தையும் குறித்து நினைத்து நினைத்து உருகினது. தான் அழகற்றிருப்பதைப் பற்றி துக்கித்தது. தலைப்புண் துன்பங் கொடுத்துக் கொண்டே யிருந்தது. நித்திரை போக எவ்விதம் முயன்றும் பயன்பட வில்லை.

திடீரென எங்கிருந்தோ சங்கீத த்வனியொன்று காதிற்கேட்டது. அடுத்த நிமிஷம் அநேக தேவதைகள் பலவர்ணமுள்ள பட்டாடைகளுடன் தேரை முன் தோன்றின. இவ்வளவு பேரும் அங்கு வருவதற்குக் காரணம் யாதென்று யோசிப்பதற்குள் அவர்களுக்கெல்லாம் அரசி அதன் முன் வந்து நின்றது. அதன் மகுடத்திலிருந்த கற்களிலொன்று மற்றவைகளைவிட ஆயிரம் மடங்கு பளீர் பளீரென்று ஒளி வீசிக்கொண்டிருந்தது. அரசியினருகில், தேரை யாரிடம் கல்லைக்கொடுத்ததோ அத்தேவதை நின்று 'அதோ'வென்று சுட்டிக்காட்டினது. அரசி தேரையை ஸம்க்ஞை செய்து கிட்ட வரவழைத்து "உன் செயல்களைக் கேள்வியுற்று மிக்கக் களிப்படைந்தேன். நீயும் லட்சணமுண்டாக வேண்டி ஆசைப்படுவதால் உன்னை எங்களொடொருவனாய் ஆக்கிக்கொள்கிறேன். வா" வென்றுரைத்து தன் பிரம்பால் தேரையை ஒருதரம் தடவினாள். உடனே மற்ற தேவதைகளை விட நூறுமடங்கு திவ்ய ரூபத்தை தேரை யடைந்தது. ஆனந்த பாஷ்பம் பெருகவிட்டது. மட்டி போட்டது. . ராணியின் கீழே தொங்கிக்கொண்டிருந்த உடுப்பைப் பிடித்துப் பிடித்து முத்தமிட்டது. அரசியும் புன் சிரிப்புடன், கல்லை முதலில்பெற்றுக்கொண்ட தேவதையை தேரை தேவதையிடம் தள்ளி "இவளாலல்லவோ உனக்கு இவ்வளவு பாக்கியம் கிடைத்தது. இவளுக்கு நீ வந்தனமளிப்பது தகும்." என்று சொல்லி இருவரையும் விட்டுவிட்டு மற்றவைகளை யிட்டுக்கொண்டு மெல்லெனச் சிறகுகளை விரித்துப் பறந்துபோய்விட்டது. தேரை தேவதை ஆநந்த பரவசமாகி, மெள்ள எழுந்து தன் சகியை உற்று நோக்கி "என் கண்ணே" என்று இருகைகளையும் விரித்தழைத்தது.

ஒருவித சந்தோஷத்துடன் இயற்கை தேவதையும் அதோடுசென்று, சுகமாக ஜீவித்து வந்தது.

T. S. ராஜகோபால்.

---

## ஊற்றுகள் எப்படி உண்டாகின்றன?

ஒரு தேசத்தின் பரப்பிலுள்ள நிலக்கூறு கற்பாறைகள் இவைகளைக் கொஞ்சம் கவனித்துப்பார்த்தால் அவைகளுக்குள் வெகு பேதங்களுண்டென்றறியலாம். சில புரபுரவென்று விலத்தி யுள்ளனவாக இருக்கும்.

மற்றுஞ் சில கெட்டியாயும், நெருக்கமாயும் இருக்கும். ஆதலால் அவை
களின் வழியாய்ச்செல்லும் நீரினளவும் பேதிக்கும். ஒன்று பாருங்கள்,
மணலுள்ள தரை அதிகக் கண்ணுள்ளதாயிருக்கும். அதாவது அதில்
ஜலம் தாராளமாயிறங்கும். அங்குள்ள மணல் மணிகள் ஒன்றோடொன்று
படிந்திராமல் ஒன்றை யொன்று சில முனைகளில்மாத்திரம் தொட்டுக்
கொண்டிருக்கிறபடியால் நடுவில் இடுக்குகள் இருக்கும். இவ்விடுக்குகளின்
வழியாகத் தண்ணீர் தடையின்றிப்போகும். மணற்பாங்கு நிலத்தில் மேல்
தண்ணீர் இறங்கி, அந்நிலம் முழுமையும் நீர் கோத்துக்கொண்டு ஜலங்
கொண்டுப்பிய பூஞ்சடைபோலிருக்கும். களிமண் தரையிலோ இதற்கு
மாறாகவிருக்கும். நுட்பமான அதன் அணுக்கள் ஒன்றோடொன்று
நெருங்கி இறுகி, தண்ணீர்நுழைய இடங்கொடாது. அங்கு சிக்கிக்
கொண்ட நீர் கீழேசெல்லவும்மாட்டாமல் மேலே ஏற்றவும்மாட்டாமல் தப்
பித்துக்கொண்டுபோக வேறு வழியைத்தேடும்.

மணற்பாங்கான நிலத்தில் பெய்யும்மழை உடனே கீழேசெல்லத் தரை
காய்ந்துபோகும். களிப்பாங்கான நிலத்திலோ நீர் தாராளமாய் இறங்கிப்
போகாமையால் ஜலந்தங்கிப் பூமி சதசதப்பாகவே யிருக்கும்.

மழைத்தண்ணீரும் உறைபனி இளகிய தண்ணீரும் மண்ணுக்குள்ளும்,
பாறைக்குள்ளும் இறங்கினால், இறங்கின ஜலம் அங்கேயே நிலையாயிருக்
கிறதில்லை. ஆழமாய்க் கிணறு தோண்டிப்பார்த்தால் தோண்டிய பள்ளத்
தடியில் பக்கங்களில் அணுக்களினிடையில் தங்கிய ஜலம் வடிந்து கீழே
தேக்கமாயிருக்கும். இந்நீரையிறைக்கவிறைக்கப் பக்கங்களிலிருந்து விடா
மற் பொசிந்துகொண்டே இருக்கிறபடியால் இறைத்தகிணறு மறுபடியும்
விரைவிலூறும். இதனால் கீழ்நிற்கும் நீர் தனக்கு எவ்விதத்திலாவது ஒரு
போக்குக்கண்டால் உடனே அவ்வழியாய்ப் பாயுமென்பதை அறியலாம்.

பூமிக்குள் செம்பூராங்கற்போன்ற பாறைகளில் அணுவிலத்தியாயி
ருப்பதுமன்றி தமக்குள் வெடிப்புகளும் கொண்டிருக்கும். இவ்வெடிப்பு
களில் சில ஜன்னற்கண்ணாடிப்பிளப்புபோல் நெருக்கமாயும், சில பிளப்
பகன்றும் இருக்கும். இவ்வெடிப்புக் கால்களெல்லாம் கீழிருக்கும் நீர்
வெளியிற்செல்ல வழிகளாகும். ஆதலால் பாறை கெட்டியாய் ஜலம்
பொசிய இடங்கொடாமலிருந்தாலும் அதற்குள் இப்படிப்பட்ட வெடிப்பு
கள் விஸ்தாரமிருந்தால் அவைகளின்வழியாய் ஜலம்அதிகமாய்ச் செல்லும்.
சுக்கான்பாறை வெகு கெட்டியானது. அதன் அணுக்கள் தண்ணீர்
பொசிய இடங்கொடா. ஆகிலும் அதனுள் வெடிப்புகள் வெகுவாயுண்டு.
அப்பாழிகள் பெரும்பாலும் மெத்த அகன்றிருப்பதால் அவைகளின்
வழியே வெகு நீரோடும்.

குன்றடுத்த நாடுகளில் கலப்பையாடாக் காம்புநிலத்தில் காலம்
நீடித்துக் கோடையாக இருந்தாலும் தரை சதசதவென்று ஈரம் தங்கியி



ருக்கும். சுற்றிலும் அடுத்த இடமெல்லாம் சூரியன் வெப்பத்தால் வரண்டு
கெட்டிப்பட்டிருக்கும். அத்தனை காங்கைக்குந் தப்பி இவ்விடங்களில்
மாத்திரம் ஈரம் காத்திருக்கிறது. இங்கு ஜலமெப்படி எட்டியது? காற்றி
லிருந்து நீர் இறங்கவில்லை; அப்படியானால் மற்றவிடங்களிலும் நமிர்ப்
பிருக்குமே. ஆதலால் அங்குள்ள நீர் மேலே வானத்திலிருந்து இறங்கி
யதன்று, கீழே பூமியிலிருந்தே ஏறியது.

தரைக்குள்ளிருந்து தானாகச் சுரந்து வெளிப்படும் ஜலந்தான் ஊற்று.
இந்த ஜலம் ஏன் இப்படி வெளிப்படவேண்டும்? அது தரைக்குமேல் வர
ஏதுவென்ன? என்று நீங்கள் கேட்கலாம்.

மேலே காட்டிய உருவத்தில் பாறைகள் ஒன்றோடொன்று அடுக்கி
யிருக்கும் விதம் தெரியும். கற்பாருள்ள நிலத்தில் ஆழத்தில் வேறு
பள்ளம் வெட்டிப்பார்த்தால் இவ்வடுக்குகள் நன்றாகத் தெரியும். அவ்வ
டுக்குகள் ஒன்றின்மேலொன்று இருப்பதைப்பாருங்கள். a ஜலமிறங்காத
களிப்பாறையாகவும், b நீர்க்கண்ணுள்ள மணற்பாங்காகவும் எண்ணிக்
கொள்ளுங்கள். பூமியின்மேல் பெய்யுமழை மேலேயுள்ள மணற்பாரி
லிறங்கி அடியிலிருக்கும் களிப்பாரில் தடைபட்டு, அங்கே தங்கியாவது
இருக்கும், அல்லது அப்பார்மேலே ஓடியாவது போகும். இப்பாரோடும்
வழியில் ஒரு பள்ளம், படுகுழி, மலைக்கல்லு ஏதாவது குறுகிட்டால்
அதன் பக்கங்களில் ஊற்றுக்கண்பொசியும். உருவத்தில் s s குறிக்கு
மிடத்தைப்பாருங்கள். நீர்க்கால் இங்கு காட்டியபடி இரண்டு கற்பாரி
னிடை யிலாவது ஓடும். அல்லது மேற்காட்டியகண் வெடிப்புகளின்
வழியிலாவது செல்லும். எந்தவிதத்திலாவது தான் வெளிப்பட வழி
யுள்ளவரையில் ஜலம் கீழுமேலும் ஓடாமலிராது. கீழிருக்கும் கற்பாறை
களில் எத்தனையோ வெடிப்புகள் இருக்கிறபடியால் அவைகளின் வழியாக
தண்ணீர் செல்லக் கஷ்டமில்லை.

இக்கீழ்நீரில் பெரும்பாலும் மலையிடைப் பள்ளங்களின் கீழ் மட்டத்
திற்கும் அவ்வளவேயன்றிச் சமுத்திரத் தடிநீர்மட்டத்துக்கும் தாழவோ
டும். அப்படி வெகு மைல்கள் கீழ்நோக்கிச் சென்றாலும் முடிவில் பூமிக்
குமேல் வரவேவரும். பூமியில் பெய்யு மழையில் பூமிக்குள்ளிறங்குநீர்
ஒரு துளிபோகும் வழியை ஆராய்ந்துபார்ப் போம். அது வேறு துளிக
ளுடன் சேர்ந்து மண்ணுக்குள்ளிறங்கி அங்கு பெருகும் ஊற்றுக்கண்
ணுடன் அல்லது வேறு பெருநீர்த்தாரையுடன் கலந்து, அத்தாரை கமர்
களிலும் வெடிப்புகளிலும் செல்லும் வழியெல்லாம் சென்று முடிவில்
அநேகவாயிரமடி ஆழத்துக்குக் கீழ் ஓர் கற்பாறையில் முட்டி ஓட்டத்தில்
தகைவுறும். இப்படியே பூகர்ப்பத்துள் இந்நீர்த்துளியுடன் வேறு பல
துளிகளும் வந்து சேர்ந்து சுற்றிச்சுழன்று ஓடிக் கடைசியில் இந்தப்

பாறையிலேயே வந்து முட்டுறவேண்டும். அங்கு முட்டித் தேக்கங் கொள்ள, பின்னும் மேலிருந்து நீர்த்தாரைகள் வந்துசேர, குவிந்தநீர் நிற்கத் தடம்போதாமல் கீழேபோக வழியுங்காணமல் கட்டுப்பட்ட நீர்மேலே மேலுமேலும் முட்டியெழும்பி வேறு வெடிப்புகள் சந்துகள் இவைகளின் வழியாய்ச் சுற்றிச்சுழன்று மீண்டும் மேல்தளத்தை அடைந்து அங்கு குழிலென்று ஊற்ருகப் பரிணமிக்கும்.

இப்படிப் பூமிக்குமேல் சுரக்கும் சங்கியையற்ற ஊற்றுகளில் ஒவ்வொன்றும் பூமியின் மேல்பரப்பில் நீர்ச்சுழலிருப்பதுபோலப் பூமிக்குள்ளும் நீர்ச்சுழற்சி இருப்பதற்கு அடையாளம். பூமிக்குள் நீரோட்டம் உண்டென்பதற்கு மேற்கூறிய ஊற்றுகளே திருட்டாந்தமாம். கிணறுகள், சுரங்கங்கள், பள்ளங்கள், கனிகள் முதலிய குடைந்தெடுக்கும்போது அவ்வித நீரோட்டம் உண்டென்பது புலப்படும். இவ்வூற்றுக்கண்களால் சுரக்கு நீர் பாதகமாகும்போது இறைத்து விடுவார்கள்.

---

## சமாச்சாரக் குறிப்பு.

ஸ்ரீகாசியில் இந்து யுனிவர்ஸிடி; ஸர்ஹார் கோட் பட்லர் எழுதிய கடிதம்.—அந்தக் கடிதப்படி ஐக்கிய மாகாணங்களின் லெப்டினெண்ட் கவர்னர் ஹிந்து யூனிவர்ஸிடிக்கு சான்ஸலரா யிருப்பார். அவர் அவசியமானபோது ஆலோசனை சொல்லவும், புரொபெஸர்களை வைக்கவும், எடுக்கவும் அதிகாரம் கொண்டவராவார் கல்வி திறமையாய்ப் போதிக்கப் படுகிறதா வென்று அறிவதற்காகவும், வேறு விஷயங்களுக்காகவும், அவருக்கு யூனிவர்ஸிடியை வந்து பார்த்துச் சோதனை செய்யப் பாத்தியமுண்டு. அந்த யூனிவர்ஸிடி செய்யும் பரீக்ஷைகளில் பரீக்ஷை கர்த்தாக்களை நியமிக்கவும் அதிகாரமுண்டு. இந்த யூனிவர்ஸிடி சம்பந்தமாய் ஆரம்பத்தில் செய்யப்படும் ஒழுங்குகளையும் பின்னல் அவைகளை அவசியமானல் மாற்றுவதையும் சான்ஸலர் ஒப்புக்கொள்ள வேண்டும். ஸ்ரீ காசியிலுள்ள காலேஜ்களை யூனிவர் ஸிடியோடு சேர்க்கவேண்டுமானல் அதையும் அவர் ஒப்புக்கொள்ள வேண்டும். புதுக் கல்விக் கிளைகள் (Faculties) ஏற்படுத்துவதானல் அதற்கும் சான்ஸலர் அனுமதி கொடுக்கவேண்டும். யூனிவர்ஸிடியை நடத்தும் ஸினேட் சபையில் ஐந்து மெம்பர்களை சான்ஸலர் நியமிக்கவேண்டும், இப்படிக் கவர்மெண்டுக்குள்ள அதிகாரங்களை வரையறுத்துவிட்டு, அந்த அதிகாரங்களில் சில அடிக்கடி செலுத்தப்படாமல், நெருக்கடியான சமயத்தில் மட்டும் செலுத்தப்படும்.

### ஒரு தலை இரண்டு உடல் கொண்ட பன்றி

இலங்கைக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் ஒரு தலையும், இரண்டு உடலும், நான்குகால்களும், இரண்டு வால்களும் கொண்ட ஒரு அதிசயமான பன்றி அகப்பட்டிருக்கிறது. கொழும்பு நகரிலுள்ள கண்காட்சிச்சாலைக்கு அதைக்கொண்டுபோயிருக்கிறார்கள்.

### மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுகளைப் பற்றிய விதிகள்.

மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுகளைப் பற்றி அப்போதப்போது செய்யப்பட்ட விதிகளை யெல்லாம் திரட்டி யொன்ருய்ச் சேர்த்து விடுவதைப் பற்றி இந்தியா கவர்ன் மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.




## முக்கிய விளம்பரம்.




எங்களால் தயார்செய்யப்படுகிற சதானந்த "சர்வரோக நிவாரணி 100 கணக்கான வியாதிகளை குணப்படுத்துகிறது. இதற்கு பத்தியமே இல்லை. இதை இன்ன நேரத்தில்தான் உட்கொள்ளவேண்டுமென்ற நியதி இல்லை. வெளிப்பிரயோகம் உட்பிரயோகம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது, தவறிச் சாப்பிடுவதினல் எவ்விதத் தீங்கும் செய்வதில்லை. பாலர் விருத்தர் யாவரும் சந்தேகமில்லாமல் சாப்பிடலாம். இம்மருந்தை கன்று காலிகளுக்குங்கூட உபயோகப்படுத்ததாம். இம்மருந்தானது சர்க்கியூட் ஆபீசர்களுக்கும் மிகவும் சௌகரியமாயிருக்கும். இம்மருந்தைப் பல இங்கிலீஷ் வைத்தியர்களும், ஐரோப்பியர்களும், இந்து கனவான்களும் விசேஷமாகப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். மருந்துக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு முழு விவரமடங்கிய கியாட்லாக் புஸ்தகமொன்று அனுப்பிக்கொடுக்கப்படும். மருந்தின் விலை ரூ. 1-8-0.

வி. லக்ஷிமிநரசு அண்டு பிரதர்,
சதானந்த வைத்தியசாலை, கோயமுத்தூர்.


---

### திராட்சி சூரணம்.

கொடி முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், முட்காவேளை, நெற்பொரி, கோரைக்கிழங்கு, ஏலம், கிராம்பு, கொத்தமல்லி, மிளகு, திப்பிலி, கூகைநீர், வேலிப்பருத்திவேர், ஜாதிக்காய், ஜாதிபத்ரி, லவங்கப்பத்ரி, வால்மிளகு இவைகள் வகைக்குப் பலமொன்று வாங்கி இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து, ஸமனிடை சர்க்கரையைச் சேர்த்து திரிகடி ப்ரமாணம் அந்திசந்தி நாற்பதுநாள் தேனிலாகிலும் நெய்யிலாகிலும் கொள்ளவும். இதனல் தீரும் வ்யாதிகளாவன;—அந்திரவாய்வு, பாண்டுரோகம், தாபஜ்வரம், மயக்கம், தூக்கமின்மை, பித்தவாந்தி, அன்னத்வேஷம், உஷ்ணரோகம், சிலேஷ்மரோகம், அக்கினி மந்தம், கைகாலெரிவு முதலியவைதீரும். இச்சாபத்யம். கைகண்டது. உஷ்ணதேகிக்கு நெய்யிலும் சிலேஷ்மதேகிக்கு தேனிலும் கொடுக்கவேண்டும்.—விச்வகர்ம குலோபகாரி.

### மிகவும் உயரமான மரம்.

அமெரிக்காவிலுள்ள வெல்லிங்டோனியா என்னும் மரந்தான் உலகத்திலுள்ள மரங்களெல்லாவற்றிலும் மிகவும் உயரமான தென்று இதுவரையில் எண்ணிவந்தார்கள். தற்போது ஆஸ்ட்ரேலியாவில் உள்ள 'யூகலிப்டஸ் அமிக்டாலின' (Eucalyptus Amygdalina) என்னும் ஜாதி மரங்கள் வெல்லிங்டோனியாவைவிட ரொம்ப உயரமாயிருக்கின்றனவாம். இவைகளில் ஒன்று 480 அடி உயரம் வளர்ந்திருக்கிறதாம். இவைகளில் சிலவற்றின் அடி மரத்துச் சுற்றளவு 53 அடி இருக்கிறதாம். இவைகள் பல நூற்றாண்டுகள் உயிரோடிருந்திருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இவைகளின் அடிமரத்துச்சுற்றளவு 200 அல்லது 300 வருஷத்துக்குள் 6 அடி அதிகரிக்குமாம். இந்தக் கணக்கைக் கொண்டு பார்த்தால் மேலே குறித்த பெரியமரம் ஸுமார் இரண்டாயிரம் வருஷம் உயிரோடிருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுமென ஒரு தாவர

**மிஸ்டர் காந்தாபாய் தர்க்கட்.**—மிஸ் காந்தாபாய் S. தர்க்கட் என்ற பம்பாய் ஹிந்து ஸ்திரீ பம்பாய் யூனிவர்ஸிடி L. M. S. பரீட்சையில் தேறியிருக்கிறார். தர்கட் குடும்பத்தில் பிறந்தவர்கள் ஆசாரத்திருத்தக்காரர்களெனப்பேர் வாங்கினவர்கள். அக்குடும்பத்தைச் சேர்ந்தவர் யூனிவர்ஸிடி படிப்பில் பிரசித்தி பெற்றவர்கள். மிஸ் காந்தாபாய் அந்தக்குடும்பத்தில் உயர்தரப் படிப்புப் படித்து யூனிவர்ஸிடி பட்டங்கள் பெற்றவர்களில் 6-வதாவாள்.

**பம்பாயில் மகமதியச் சிறுவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள்.** பம்பாய்கவர்ன்மெண்டார் கீழ்த்தர வகுப்புகளில் வாசிக்கும் மகமதியச் சிறுவர்களுக்கு மாதம் 12½ ரூபாயில் 133 ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதாய் உத்தேசித்துக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது.

**பழையகால நாகரிகச்சின்னச்சோதனை.**—பழையகால நாகரிகச் சின்னச் சோதனைகள் பேஹார் மாகாணத்திலும் பஞ்சாப்பிலும் நடத்தப் பட்டுவருகின்றன. பஞ்சாப்பிலே தட்சசிலம் Taxilla என்றவிடத்தில் பழையகால நாகரிகச் சின்னச் சோதனையைக் கருதி பூமியை வெட்டிப்பிரித்துப் பார்த்து வருகிறார்கள். இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் பழையகால நாகரிகச் சின்னச் சோதனைக்கென்று காது குத்தி வைக்கப் பட்டிருக்கும் தொகையிலிருந்து ரூபா 20000 தட்சசிலத்தில் பூமியை வெட்டிப் பிரித்துச் சோதிப்பதற்காகச் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

**பர்ஷியா ஷாவின் முடிசூட்டு** பர்ஷியா ஷாவின் முடிசூட்டை முன்னிட்டு டெல்லி மகம்மதியர்களும் காசி மகம் மதியர்களும் மீட்டிங்குகள் கூடி அந்த ஷாவுக்குத் தங்கள் வாழ்த்துபசாரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**மிஸ்ஸஸ பாங்கேஸ்ரீட் ராசருக்கெழுதிய கடிதம்** லண்டன், ஜூலை 24—ஸ்திரீ ஸ்வதந்தரவாதிகளின் தலைவராகிய மிஸ்ஸஸ் பாங்கேஸ்ரீட் அரசருக்கு ஒரு கடிதமெழுதி யிருக்கிறார். சண்டைக்காரர்களாகிய அல்ஸ்டர் காரர்களுக்கும் சுராஜ்யக் கட்சிக்காரர்களுக்கும் அவர் பேட்டி கொடுத்ததுபோல் சண்டைக்கார ஸ்திரீ ஸ்வதந்தரவாதிகளுக்கும் பேட்டி கொடுக்கவேண்டுமென்றும், அவ்விரு வகுப்பாரும் எப்படி நிதான புத்தியும் பொறுப்புமுள்ளவர்களோ அதேமாதிரி சண்டைக்கார ஸ்திரீ ஸ்வதந்தர வாதிகளும் நிதான புத்தியும்பொறுப்பு முள்ளவர்களென்றும் அவர் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

**பண்டி ஷோலா எலிமெண்டேரி ஸ்கூல்**—11-ந்தேதி சனிக்கிழமையன்று லார்ட் பெண்ட்லண் மோட்டாரில் ஏறி உதக மண்டலத்திலுள்ள பண்டி ஷோலா எலிமெண்டெரி ஸ்கூலைப் பார்க்கச் சென்றார். அந்த ஸ்கூல் மூன்று வருஷங்களுக்கு முந்தி லேடி லாலியால் திறந்துவைக்கப்பட்டது.

**திருவாங்கூர் மகாராஜா** திருவாங்கூர்மகாராஜா தம் குடும்பத்தாருடன் 19ந் தேதியன்று திருவனந்தபுரத்தை விட்டு கன்னியாகுமரி முதலிய விடங்களைப் பார்த்து வரப்புறப்பட்டுப்போனார். மகாராஜா திரும்பிவருவதற்கு இன்னும் 18-நாள் பிடிக்கும். கன்னியாகுமரி என்பது தேக ஆரோக்கிய ஸ்தலம். பொறுக்க முடியாத உஷ்ணமாயிருந்தாலும் அங்கே அடிக்கும் காற்று தேகத்திற்கு நிரம்ப ஆரோக்யமானது.

**சென்னையில் இந்திய ஸ்திரீகள் காலேஜ்:**—ஜூலைமாதம் 14உ சென்னை சமுத்திரக் கரையிலுள்ள காபர்ஹௌஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்திய ஸ்திரீகள் காலேஜுக்கு இங்கிலாந்திலிருந்து இரண்டு ஸ்திரீ வாத்தியார்கள் தருவிக்கப்படுவார்களென்று அறிகிறோம்.

**ஸ்ரீநிவாச மந்திரம் ஸ்திரீகளின் கூட்டம்:**—எங்கு பார்த்தாலும் மும்முரமாய் நடத்தப்படும் இச்சமய விவாக காலங்களிலுங்கூட, மேற் கண்ட மந்திரத்தின் ஸ்திரீ மெம்பர்கள், வாரம் வாரம் தவறாமல் மீட்டிங்குகள் கூடி வருகிறது மெச்சத் தக்கது. போன மாதம் 27-ந்தேதியிலும் இந்த மாதம் 4-ம் தேதியிலும் மீட்டிங்குகள் கூடினகாலத்தில் மிஸ்ஸஸ் கோட்டீஸ்வர குப்தாவும் சௌபாக்கியவதி காவேரியம்மாளும், "ஸமாஜங்கள், ஆரியர்கள்" என்ற விஷயங்களைப்பற்றி வியாசங்கள் படித்தார்






# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் ஸப்ளை உபயோகிப்பதை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் ஸப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு

## விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றும் அருத்தமாகும்.

மில்க்மெயிட்குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒருபொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது. மில்க்மெயிட்குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி லாபமடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினால்எங்களுக்கு இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம்.

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லேஸ் அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட், மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்.

ஸம்ஸ்கிருத வித்தியாலயம்.—இம்மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை சுமார் 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி ஸம்ஸ்கிருதவித்தியாலயத்தை R. சுப்புலக்ஷிமிஅம்மாள் B.A.L.T. வந்துபார்த்தார். குழந்தைகளை சுலோகம் சொல்லச் சொல்லிக் கேட்டு சந்தோஷப்பட்டார், குழந்தைகளுக்கும் சந்தோஷமாயிருந்தது.

ராமோதந்தம், ரகுவம்ஸம், சப்தம் தேவாஸத்தவ மஞ்சரீ இவைகளை ஸ்திரீகள் சொன்னார்கள், பிறகு ஸ்கூல் விடப்பட்டது. சென்ற 20-ந்தேதி திங்கட்கிழமை யன்று ஹைகோட் ஜட்ஜ மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் மனைவியாரும் குமார்த் தியும் ஸம்ஸ்கிருத வித்தியாலயத்தை வந்து பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.

ஒரு குரங்குகுழந்தை.—நெய்னிடாள் என்பது வட இந்தியா ஐக்கியமாகாணங் களிலுள்ள ஒருஊர், அவ்வூர்க்காட்டில், குரங்குகளின் மத்தியில் வளர்ந்து வந்த ஒரு பெண் குழந்தை கண்டு பிடிக்கப்பட்டது. அக்குழந்தையின் தேகத்தில் அம் மைத் தழும்பகளிருந்தன. அதனால் அதை மனிதசாதியில்பிறந்த குழந்தைஎன்றே சொல்லவேண்டும். அக் குழந்தை 9-வருஷகாலம் குரங்குகளின் மத்தியிலேயே வளர்க்கப்பட்டுப் போனதினால் அதற்குள்ள மனித நடை பாவனை பழக்கவழக்கங்கள் போய், குரங்கு ஜாதி களுக்குள்ளநடை, பாவனை பழக்க வழக்கங்களே மேலிட்டி ருந்தன. இதை ஒரு கட்டுகதையென்று சொல்லி விடுவதற்கில்லை. ஹிமாலயக் காடுகளில் லாங்கர் என்ற பெரிய ஜாதிக்குரங்குகள் உண்டு. பழம் தரும் மரங்கள் மனிதர்கள் வசிக்கு மிடங்களுக்கருகிலிருந்தால் அவைகள் பயமில்லாமல் அங்கே போய் அப்பழங்களைத் தின்னும். தன் குட்டியை யிழந்த ஒரு பெண் குரங்கு, காட்டு குடிசையில் வசித்துவந்த இப்பிரஸ்தாபக் குழந்தையை யாருமில்லாத சமயம்பார்த்து தூக்கிக்கொண்டு போய் வளர்த்து வந்திருக்கவேண்டும். சிக்காரிக்கூட்டத்தார் (வேட்டையாடுகிறவர்கள்) சில வருஷங்களுக்கு முந்தி ஓனாய் வேட்டையாடுவதற் காக ஒரு காட்டில்சென்றபொழுது கூட்டங் கூட்டமாய் ஓடின ஓனாய்களில் ஒன்று மட்டும் ஓடமுடியாமலிருந்தது. அதைப் பிடித்து பரிசோதிக்கையில் அதுமனிதஜாதி யில் பிறந்த பையனென்று தெரியவந்தது. ஓனாய்பையனை அவர்கள் கொண்டு வந்து ஆக்ராவிலுள்ள அனாதைக் குழந்தைகளின் சாலையில் வைத்திருந்தார்களாம்.

நீரிழிவு வியாதி.—நீரிழிவு வியாதி எப்படி உண்டாகிறது என்பதின் காரணத் தைக் கண்டு பிடிப்பதற்காக நிபுணர்கள் பிரயத்தினஞ் செய்து வருகிறார்கள். அது சம்பந்தமாய் அவர்கள் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். எந்த ஜாதியாருக்குள் அந்த வ்யாதி அதிகமாய்ப் பரவி வருகிறது? எவ்விதமான ஆகாரம் அந்த வியாதியின் கொடுமையை அதிகரிக்கச் செய்கிறது? எவ்விதமான ஆகாரம் அந்த வியாதியின் கொடுமையைத் தணியச் செய்கிறது? என்ற அம்சங்கள் கவ னிக்கத் தக்கவை. இந்தியர்களின் ஆகாரம் ஜாதி பேதத்திற்குத் தக்கபடி வித்தி யாசப்படுகிறது. மேனாட்டு வைத்தியர்களுக்கு இந்தியர்களின் ஆகாரத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்தியரின் ஆகாராதிகள் இப்படிப்பட்டவைகள் என்பதை நன்றாக அறிந்தால்தான் அந்த வியாதியின் காரணத்தைப் பரிசோதனை செய்வ தற்கு அனுகூலமாயிருக்கும். பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் இந்தியரை பாமாக்கார்கள் ஒத்திருந்தும், இந்தியர்கள் இந்தவியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறது போல் அவர்கள் பீடிக்கப்படுகிறதில்லை. நீரிழிவு வியாதியின் பரிகாரத்திற்கு டான் யெந்திச் செடியின் விதையினால் செய்யப்பட்ட மருந்து தக்க ஔஷதமென்று கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது. அந்த விதையை பாமாக்காரர்கள் உணவுப் பொ ருளாக உபயோகித்து வருகிறார்கள். காயாகவே சாப்பிடுவதும் பழுத்தபிறகு அவைகளை எண்ணெயில் பொரித்தோ சுட்டோ சாப்பிட்டும் வருகிறார்கள். அதை ஜாஸ்தியாகத்தின்றால் அதனால்பலவித வாத நோய்கள் உண்டாகும்.

தஞ்சாவூருக் கருகிலுள்ள திருவையாற்றில் ஒரு சமஸ்கிருத காலேஜ் நடத் தப்பட்டு வருகின்றது. இந்தக் காலேஜில் போஜனம் பெற்றும் படிக் கும் வித்தியார்த்திகள் ஆதியில் 150 பேராயிருக்க, இப்போது ஐவேஜ் கம் மியால் 100 ஆகக் குறைக்கப்பட்டுப் போயிற்று. இந்தக் காலேஜ் சென்னை யூனி வர்ஸிடியுடன் சேர்க்கப்பட்டு, அதில் படித்துத் தேறும் வித்தியார்த்திகளுக்கு யூனிவர்ஸிடி சங்கத்தார் சிரோமணி, வித்வான் பட்டங்கள் கொடுத்து வருகிறார் கள். தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டால் நடத்தப்படும் ரீழ்த்தர ஸ்கூல்கள் மொத்




# சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.

—(o)—



Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனி தன் பிளேக், அம்மை, காலரா, ஜு ரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீன முள்ளவர் களைப் பீடிக்கிறது. அவ்வித முள் ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவது கஷ்டம்.

**SCOTT'S Emulsion**

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியா தியைத் தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாக வும் சதைகளைப் புஷ்டியுள்ளவைக ளாகவும்செய்து வியாதி கிட்டஅண் டாமல் உனக்குச் சக்தியைக்கொடுக் கிறது.

மருந்து உட்கொண்டபின் இதன் அனுபவம் தெரியும.

கையினால் தொடாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஸ்காட் அண்டு பௌன்' கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து.

தம் 369-ல் பஞ்சமப் பிள்ளைகளின் ஸ்கூல்கள் 101; அவைகளில் 4038 பிள்ளைகளும் 199 பெண்களும் படித்தார்கள். எலிமெண்டரி ஸ்கூல்களில் பிரஸ்தாப வருஷத்தில் இரண்டே ஸ்கூல்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன வானல் கீழ்த்தரப் படிப்பின் அபிவிருத்தியில் டிஸ்டிரிகட் போர்டுக்குப் பரபரப்பில்லை யென்று நாம் சொல்ல வேண்டியது.

**பம்பாய்க் கவர்ன்மெண்டும் கீழ்தேச பாஷைகளின் அபிவிருத்தியும்.**—பம்பாய்க் கவர்ன்மெண்டார் மோல்விகளுக்கும் பண்டிதர்களுக்கும் பொருளுதவி செய்து கீழ்தேச பாஷைகளின் தேர்ச்சியை வளர்ப்பதற்காக இந்த வருஷத்து பட்ஜட்டில் பணம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதுபற்றி இப்போது பம்பாய் வித்தையிலாகாத் தலைவர் மிஸ்டர் W. H. ஷாப்பும்.ஆனரெபில் மோல்வி ராபுடீன் ஆமதும், டாக்டர் ஸர் R பாண்டார்கரும் ஒரு கமிட்டியாக மீட்டிங்கு கூடி கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெறக்கூடிய மோல்விகள் பண்டிதர்கள் இவர்களை அறிந்து அவர்களின் பேர்களை ஒரு ஜாப்தா செய்யமுயன்று வருகிறார்கள். பம்பாய்க் கவர்மெண்டார் கீழ்த்தேச பாஷைகளில் இந்தியர்கள் தேர்ச்சி யடைவதைக் கருதி மோல்விகளுக்கும் பண்டிதர்களுக்கும் பொருளுதவி செய்து அவர்கள் மூலமாய் அப்பாஷைகளை அபிவிருத்தி செய்யப் பார்ப்பதைப்போல சென்னைக் கவர்மெண்டாரும் செய்து பார்க்கலாம்.

**உணவுப்பொருள்களில் கலப்படஞ் செய்தல்:**-அநேகமாய் ஜனங்கள்உபயோகித்துவரும் உணவுப்பொருள்கள் கலப்படஞ் செய்யப்படுவதால், அதைத்தடுப்பதற்கு இந்தியா முழுவதும் ஒரு புதிய சட்ட திட்டம ஏற்படுத்த வேண்டுமென பர்மா வியாபார சங்கத்தார் இந்தியா கவர்ன் மெண்டுக்கு ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். பர்மா வியாபார சங்கத்தார் செய்துகொண்டிருக்கும் மனுவைத்தாம்அங்கீகரிப்பதாக பர்மா லெப்டினெண்டு கவர்னர் அறிவித்திருக்கிறார். தங்கள் அந்த மனுவின் பொருட்டு அனுதாபம் பாராட்டுவதாக காரச்சியா பாரசங்கத்தார் தெரியப்படுத்தியிருப்பதுமல்லாமல், இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதுவதாகவும் அறிவித் திருக்கிறார்கள். வங்கான வியாபார சங்கத்தாரும் அது விஷயமாய் அனுதாபங் காட்டினும் உணவுப் பொருள்கள்கலப்படமாவதைத் தடுக்க சட்டதிட்டம் ஏற்பட்டாலும், அது பலிக்குமாவென்பதைப் பற்றித் தாங்கள் சந்தேகப்படுவதாகவு, ஆயினும் அது விஷயமாயுள்ள கடிதப் போக்கு வரவுகளை பர்மா சங்கத்தா.ரிடமிருந்து தருவித்து அதைத் தீர யோசிப்பதாகவும் சொல்லி யிருக்கிறார்கள். உணவுப் பொருள்கள் கலப்பட மாவதைத் தடுத்து நல்ல பொருள்கள் ஜனங்களுக்குக் கிடைக்கும்படியான வழியைத் தேடுவது அத்தியாவசியம்.

கொயம்பத்தூர் டிஸ்ரிக்ட் போர்ட் செகண்டெரி ஸ்கூல்களில்ஏற்ற குறைவு இல்லை. எலிமென்ட்ரி ஸ்கூல்கள்247லிருந்து249 ஆயின.இவைகளில்வாசித்தபிள்ளைகள் 12233 லிருந்து 12742 ஆனார்கள். இது அதிக அபிவிர்த்தியைக் காட்டவில்லை, எலிமென்ட்ரிஸ்கூல்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கவலைகாட்டி கவர்மெண்ட் சொல்லிக் கொள்வதுபோல கோயம்பத்தூர் டிஸ்டிரிக்ட்டில் அந்த ஸ்கூல்கள் அதிகமாக வில்லை. பஞ்சமர்களுக்கென்று ஆறு புது ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப் பட்டன. முன்னிருந்த 852-மாணவர்களில் 57 பெண்களு மிருந்தார்கள். இப்பொழுது ஆண்களும பெண்களுமாக 1225 பெயர்களிருக்கிறார்கள். அவர்களில் 92 பெண்கள்.

**ஒரு பம்பாய் மாகாண வாசியின் நன் கொடை.**—பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்னகிரி ஜில்லாவைச் சேர்ந்த மல்வன் என்னும் ஊர் வாசியாகிய அனந்த சிவாஜி தேசாயி அவ்வூரில் ஒரு ஹைஸ்கூல் வைத்து அதற்காக 75,000 ரூபாய் பம்பாய்க் கவர்ன்மெண்டார் வசம் ஒப்பிவித்திருக்கிறாரென்று தெரிந்து சந்தோஷிக்கிறோம். தருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது வித்யா தருமமாதலால் அனந்த சிவாஜி தேசாயின் நன்கொடை மிகுதியும் பாராட்டத்தக்கதாகும். அவர் அத்தொகையிலிருந்து அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்களின் தக்க யோக்கியதையுள்ளவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கும் படியாயும் ஏற்பாடு செய்திருக்கிறார்.



# ஹாஸியத் துணுக்குகள்

ஓரரசனும் அவன் மகனும் ஒருவிகட கவியைக் கூட்டிக்கொண்டு வேட்டைக்குச் சென்றனர். வேட்டையாடித் திரும்புகையில் மழைபெய்து இவர்களை நனைத்து விட்டது. அரசனும் மகனும் ஈரஉடையைக்களைந்து புது உடைதரித்து ஈரத்தை விகடகவியிடம் கொடுத்துத் தூக்கிவரச்சொன்னார்கள்.

செல்கையில் அரசன் மகன் சற்று விளையாட்டாய் "விகடன் ஒரு கழுதை சுமை தூக்குகிறான்" என உடனே விகடன் சற்று கோபத்துடன் "ஒரு கழுதைச் சுமையாப்போவானே! இரண்டு கழுதையோடே சுமையின்னு!"

ஒரு சங்கீத கச்சேரியில் ஒருவன் இடத்துக்காக முண்டியடித்துக்கொண்டு கடைசியாக ஒரு தனவானருகில் போயுட்கார்ந்து கொண்டார். தனவான்கோபித்து "ஓய்! உமக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?" என்று அதட்ட, அவர் சாவதானமாய் தனக்கும் அவருக்கும் இடையிலுள்ள இடத்தைக் கையால் அளந்து, "ஐயா! ஒரு சாண்தான் வித்தியாசம்" என்றார்.

ஒரு தாசில்தார் ஒரு நாள் தன் பரிசாரகனைக் கூப்பிட்டு "ஏய்! இனி மேல் சமயல் திட்டத்தை மாற்றவேண்டும். பச்சடி, பாயசம், வடை இவைதேவையில்லை. எனக்கே நான் இன்னிமுதல் பின்சின் வாங்கிக்கொண்டேன். தெரிந்ததா!"

பரிசா:—"பிஞ்சின்னு என்ன?"

தாசில்:—"நான் இன்னி முதல் தாசில்தார்வேலையை விட்டுவிட்டேன். இத்தனை நாள் வேலை செய்ததற்காக கிழவயசுலே சாப்பாட்டுக்கொஞ்சம் பணம் மாசம் மாசம் கொடுப்பது தான் பிஞ்சின்.

பரிசா:—தெரிஞ்சுது எசமான் சொல்படி செஞ்சுடறேன்.

பகல் போஜனத்திற்கு தாசில்தார்வந்தவுடன் அவர் சொல்லியிருந்தபடி, வற்றல் குழம்பும் ஒரு பொடுத்தவலும் இலையில் பரிமாறி யிருந்தது. தாசில்தார் சாப்பிட்டு எழுந்தவுடன் பரிசாரகன் போஜனத்துக் குட்கார்ந்தான். ஏதோகாரியமாய் வந்த தாசில்தார் அவன் மட்டும் பச்சடி, பாயஸத்துடன் சாப்பிடுவதைக்கண்டு "ஏண்டா! நான் தான் சொன்னேனே!" என்று கோபித்தார். உடனே பரிசாரகன் "ஆம் ஐயா! உமக்கு வேலை நீங்கிப் பிஞ்சின் வருகிறது எனக்குத்தான் வேலையிருக்கே"

வி. என். ராஜ்.

# ஒருவிந்தையான வியாபாரம்

ஒரு தனவான் தானிறக்குந் தருணத்தில் தன்னுடைய குதிரையின் விலையைத் தன்னுடைய வேலைக்காரனுக்கு இனாம்கொடுக்கும்படி உயில் எழுதிவைத்திருந்தான். அவன் இறந்த சில தினங்களுக்கெல்லாம் சடன்காரர்கள் அநேகர் அவ்விதவியை ஏமாற்றி வீடு நிலம் முதலியவற்றைக் கவர்ந்து கொண்டனர். எல்லாம் கொடுத்து அக்குதிரை யொன்றே மிகுந்தது. அந்த வேலைக்காரன் உயிலின்பிரகாரம் அக்குதிரையைவிற்று பணத்தைக் கொடுக்கும்படிக் கேட்டான் தம்முடைய நிலைமையைப்பற்றி எவ்வளவு சொல்லியும் கேட்காமல் குதிரையின் விலையைக் கொடுக்காவிட்டால் நியாயஸ்தலத்தில் முறையிடுவதாக பயமுறுத்தினான். அதற்கவள் அடுத்த சந்தையில் விற்றுக்கொடுப்பதாக சொன்னாள். சந்தை நாளுங்கிட்டியது. அக்குதிரையைச் சந்தை கூடு மிடத்திற்கு அழைத்துச் சென்று கேட்போர்க்கு அக்குதிரையின் விலை ஒரு ரூபாய் என்றாள். அங்கேவந்த வியாபாரி "என் அம்மா! உமக்குப் பைத்தியம் ஏதாவதுண்டோ?" என அவள் "இல்லை! இல்லை! உண்மையிலேயே சொல்கின்றேன்.

அக்குதிரையின் விலை ஒரு ரூபாய் தான். ஆயினும் இந்த குதிரையை வாங்குகிறவர் இந்தப் பூனைக்குட்டியையும் வாங்கவேண்டும். இதன் விலை ரூபாய் ஐந்நூறு" என்றாள். ஆகவே அந்த வியாபாரி ரூபாய் ஐந்நூற்றொன்றையும் கொடுத்து குதிரையைப் பெற்றுச்சென்றான். வேலைக்காரன் மிகவெட்கமடைந்து ஒன்றுஞ் சொல்ல வழியறியாமல் ஓட்டம் பிடித்தான்.

வெயில் காலத்திற்கு அவசியமான பண்டிட் S. S. ஆனந்தரின்

**மஹா சந்தனாதித் தைலம்,**

பாரம்பரியமாய் அனுபவ சித்தியுடையது, அதிக பணச்செலவு செய்தும் மிகுந்த பிரயாசைப்பட்டும், சாஸ்திரரீதியாய் பாகந்தவறாமல் தயாரிக்கப்பட்டது.

பிரதிதினம் காலையில் உச்சியில் பதனிட்டுவருவதாலும், வாரமிருமுறை சூரியஉதயத்தில் ஸ்நானம்செய்வதாலும், அதிகஉஷ்ணத்தால் உண்டாகும் தலைநோய், மயக்கம், மாதி முதலிய மூளையைப்பற்றின நோய்கள், தொற்று வியாதிகள், ஸ்திரீ புருஷர்களுக்கு முகத்திலுண்டாகும் பருக்கள், தேமல், சொறிசிறங்கு, மேகப்படை, கைகால் எரிச்சல் முதலிய தோலைப்பற்றின நோய்கள், நரம்பைப்பற்றின பட்சவாதம் முதலியநோய்கள் கண்கலக்கம், கண்சிவத்தல், கண்ணில் நீர்வடிதல், கண்ணெரிச்சல், பீளைசார்தல்முதலிய கண்நோய்கள், செவிநோய்கள் முதலியவைநீங்கும்.

ரோமம் உதிர்வதையும் அகாலத்தில் நரைப்பதையும் தடுத்து கருமையும் பளபளப்பையும் தருவதில் பேர்பெற்றது.

மனோகரமான மணமும் குணமுமுடைய எங்கள் மஹாசந்தனாதித் தைலம் எங்கும் பிரசித்திப்பெற்று வருகிறது.

12-அவுன்ஸ் பாட்டில் ரூ. 2.  6-அவுன்ஸ் பாட்டில் ரூ. 1-2.

நமது ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள மற்ற மருந்துகளின் விவரங்களும், தக்க மனிதர்களிற் அபிப்பிராயங்களும் அடங்கிய புஸ்தகம் வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்புகிறோம்.

பண்டிட் S. S. ஆனந்தர், வைத்தியசாலை,
நெ. 31 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு, சென்னை, இ.

சித்திரப் படங்கள் உள்ள புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இந்து ஸ்திரீ ரத்னங்கள் ... ... ... | 0 | 8 | 0 |
| இந்திய மாயா விநோதக் கதைகள் ... ... | 0 | 4 | 0 |
| 5-வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தி ... ... | 0 | 8 | 0 |

விலாஸம்:—

மாதர் மனோரஞ்சினி ஆபீஸ், திருவல்லிக்கேணி,. சென்னை.

**The Complete Letter Writer.**

*(4th Edltion Revised and Enlarged.) by*
HARI CHARAN DAS.
Price Re. 1. (*full cloth gilt 320 pages*).

An universal Guide to the Art of letter Writing for all positions of life.

It contains 24 Chapters —Private Correspondence, News Papers, Doctors, School Correspondence Government and Commercial, Collectors Office, Attorneys Vakils and Muktears, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms of address Paper Currency, Abbreviations and Daily wages.

**Matriculation Essay**—by Hari Charan Das. Very useful book for school Boys. Price As. 8.

**ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.**

A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only.

**Child's Easy Conversation**, 2nd. ED.

If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two or three months. Price As. 10 only.

M. L. DAS & CO. BOOK SELLERS & PUBLISHERS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 OCT 1914
MADRAS

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol XVI] Madras August, 1914. No. 8.
புத்தகம் 16 சென்னை: ஆகஸ்டுமீ 1914வு. இலக்கம் 8.

## யுத்தம்.

உலகத்தில் 5-கண்டங்க ளிருக்கின்றன. அவைகளில் ஒன்றாகிய யூரோப் கண்டத்தில் க்ரேட்ப்ரிடன் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாண்டு) ப்ரான்சு, ஜர்மனி, ருஷியா, ஆஸ்டிரியா, இட்டலி, ஸெர்வியா முதலிய தேசங்களும் இன்னுமநேகம் தேசங்களும் இருக்கின்றன. நாம் ஏஷியா கண்டத்தில் உள்ள இந்தியா தேசத்தில் இருக்கிறோம்.

நமது அரச சக்ரவர்த்தி இங்கிலாந்திலிருக்கிறார். இவர் க்ரேட்பரிட்டனுக்கு அரசர், இந்தியாவுக்கு அரச சக்ரவர்த்தி.

யூரோப்பிலுள்ள ஆஸ்டிரியா தேசத்து இளவரசராகிய ஆர்ச் டியூக் பார்டினண்டையும், அவர் மனைவியையும் ஒரு ஸெர்விய தேசத்தான் ஜூலைமீ ஸராஜிவோ என்கிற பட்டணத்தில் சுட்டுக் கொன்றுவிட்டான்.—ஸெர்வியா பால்கன் முதலிய நாடுகளை அடைந்து பெரிய ராஜ்யமாகக் கூடாதென்றும் அவ்விதம் அது பலமடையாமலிருக்கவும் அதைத்தடுக்க அபேக்ஷையுள்ளவராய் பார்டினண்ட் இருந்தார்.—இதனால் ஆஸ்ட்ரியா தேசத்துக்கு மனக்கொதிப்புண்டாய், ஸெர்வியாவை அடக்கவேண்டுமென்று அக்கவர்ன்மென்டை ஜூலைமீ 24வ சமாதானம்கேட்டது. ஸெர்வியா இதற்குச்சரியான சமாதானம் சொல்லாவிட்டால் உடனே யுத்தம் ஆரம்பிக்கப்படுமென்று எழுதியிருந்தது. அக் கடிதத்தின் சாரம் "ஆஸ்டிரியாவுக்கு விரோதமாய் ஸர்வியா தேசத்தில்செய்யப்படும் முயற்சிகளைப்பற்றி ஸர்வியா கவர்ன்மெண்ட் கண்டனம் செய்திருந்தால் அதை வெளிப்படுத்த வேண்டும். அப்படி முயற்சி செய்தவர்களுக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தால் அவைகளையும் வெளிப்படுத்தவேண்டும்; ஸர்வியாவிலுள்ள ஸ்கூல்களில் ஆஸ்டிரியாவுக்கு விரோதமாய்ப் போதனைசெய்தலை நிறுத்திவிடவேண்டும். ஆஸ்டிரியா கவர்ன்மெண்ட் ஸெர்வியாதேசத்து உத்தியோகஸ்தர்களில் எவர்களை நீக்கிவிடவேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களை நீக்கிவிட வேண்டும். ஸராஜிவோவில் செய்யப்பட்ட கொலைக்கு உடந்தையாயிருந்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும்." என்பவைகளே

இவைகளுக்கு உடனே பதில்வேண்டுமென்று எழுதியதைக்குறித்து ஸெர்வியா என்ன செய்யும்? யோசனை செய்யக்கூட சாவகாசமில்லையே. இதற்குள் ருஷியா பிரஞ்சு தூதர்கள் ஆஸ்டிரியாவின் அன்னியமந்திரியை கெடுவை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். உடனே அப்படிச் செய்யமுடியாதென ஆஸ்டிரியா அன்னியதூதர் பதில் அளித்தார். இதனால் ருஷியாவுக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஏனெனில் ருஷியாவும் ஸெர்வியாவும் ஒரே ஜாதியார், பரஸ்பர அன்புள்ளவர்கள். ஆஸ்டிரியா எழுதின கடிதத்தில்கண்ட நிபந்தனைகளில் சிலவற்றை அங்கீகரித்தும், சிலவற்றை மறுத்தும் ஸெர்வியா தைரியத்துடன் பதில் அனுப்பிவிட்டு தங்கள் முக்கியபட்டணமாகிய பெல்க்ரேடை விட்டுப் புறப்பட்டு (அதற்கு தெற்கே 70-மைலுக்கப்பாலுள்ள) கிரகுஜிவா என்ற இடத்துக்கு வந்து இதை முக்யபட்டணமாகச் செய்துகொண்டார்கள். படைகள் போருக்குத் தயாராயிருக்க ஏற்பாடுகள் செய்துவந்தார்கள்.

ஆஸ்டிரியாவிலோ ராணுவச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. ஒரு பாதி சேனை போருக்குத் தயாராயிருந்தது.

ஜுலைமீ 28வ யுத்தம் தொடங்குவதாக ஆஸ்டிரியா தெரிவித்துவிட்டது. டான்யூப் நதியில் தங்கியிருக்கும் ஸர்வியக் கப்பலொன்றில் உள்ள துருப்புகள் ஆஸ்டிரியாவின் துருப்புகள் மேல் துப்பாக்கிகளைச் சுட்டார்கள். ஆஸ்டிரியாக் காரர்களும் பதிலுக்குச்சுட்டார்கள்.

நிற்க, வல்லரசுகள் (Great Power) என்று சொல்லப்படும் பெரிய ராஜ்யங்களில் ஆஸ்டிரியா, ஜெர்மனி, இட்டலி, இந்த மூன்றும் ட்ரிப்பில் அல்லையன்ஸை" சேர்ந்தவை. அதாவது யுத்த சமயங்களில் இவைகள் ஒன்றுக்கொன்று உதவி செய்வதாக உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றன.

இவ்விதமே இங்க்லண்ட், ப்ரான்சு, ரஷ்யா இந்த மூன்றும் இவ்வித உடன்படிக்கை கட்சியைச் சேர்ந்தவை. இவைகளும் யுத்த சமயத்தில் ஒன்றுக்கொன்று சகாயம் செய்துகொள்ளும்.

ஆஸ்ட்ரியா ஸெர்வியாவுடன் யுத்தம்செய்து ஜெயமடைந்தால் அது ஸெர்வியாவையும் மற்ற பால்கன்நாடுகளையும் சேர்த்துக்கொள்ளுமல்லவா? இவ்விதம் செய்தல் ரஷியாவுக்கு மனம் சகிக்கவில்லை. ஏனெனில் இவர்களும் ஸெர்வியா முதலிய விடங்களிலுள்ளவர்களும் ஒரே ஜாதியார், ஒரே மதத்தினர். இந்நாடுகள் ஸ்வாதீனமாகவே யிருக்கவேண்டுமென்பது ரஷ்யர்வின் கருத்து. மத்தியில் இந்த யுத்தத்தில் இதாராஜ்யங்கள் சேராமலிருக்கவும் இவ்விருதேசத்தாரும் எப்படியாவது சமாதானமாயிருக்க வேண்டுமென்றும் ஐரோப்பிய ராஜ தந்த்ரிகள் முயற்சி செய்துவந்தார்கள். நமது 5-வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தியும் தம்மாலான முயற்சி



யும் செய்தார் ஒன்றும் பயன்படவில்லை. ரஷ்யாவும், ஜெர்மனியும் தங்கள் ஸைனியங்களை தயாராய் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஜர் மனி போர்க்கப்பல்கள் கீல்வில்ஹேல்மஸ் ஹாவென் என்ற துறைமுகங்களில் வந்து கூடிக்கொண்டிருக்கின்றன. ஜெர்மனியும் ரஷ்யாவும் தங்கள் தங்களுடைய எல்லையிலுள்ள ரயில் ஸ்டேஷன்களை துருப்புகள் வசமாக்கி விட்டன.

ஸெர்வியாவின் ஆகாய விமானங்கள் எல்லைப்புறத்தைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. மாண்டிநிக்ரோவின் படை ஒன்று ஸெர்வியாவுக்கு பீரங்கியுடன் உதவிசெய்து கொண்டிருக்கிறது. இத்தேசத்து அரசன் இட்டலி அரசனுக்கு மாமனார். ஆகையாலும், ஜர்மனி ஆஸ்ட்ரியாவுடன் சேர்ந்தீது தர்மமில்லையாகையாலும் இட்டலி அவர்கள் பக்கத்தில் இதுவரையிலும் சேரவில்லை. ஆனால் ஜெர்மனி ஆஸ்டிரியாவுடனும், ரஷ்யா ஸெர்வியாவுடனும் சேர்ந்துவிட்டது. ஜெர்மனி பிரான்ஸோடு யுத்தம்செய்ய பெல்ஜியம் வழியாகப்போக எண்ணம் கொண்டிருந்தது. பெல்ஜியத்திற்கு இது இஷ்டப்படவில்லை. பெல்ஜியம் இவ்விதம் ஜெர்மனி ஆஸ்டிரியாவுடன் சேர்ந்ததைக்கண்டு நடுநடுங்கி நமது ராஜசக்ரவர்த்திக்கு ஒரு கடிதம் எழுதியது. "ஜெர்மனி என் தேசத்திற்குள் புகுவார்களே! அப்பொழுது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா? என்னைக் கைவிடாதேயுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கூக்குரலிட்டு அழுதது. ஜர்மனியர்கள் கர்வம்கொண்டவர்கள். அந்நிய தேசங்களைப் பிடிக்கவேண்டுமென்ற துராசைக்காரர்கள். காட்டு மராண்டியைப்போல நாகரீகமற்ற செய்கைகளைச் செய்பவர்கள். இவர்களை அவ்வித அநியாய காரியங்களைச் செய்யும்படி பிரிடிஷ் கவர்ன்மெண்டார் விட்டு விடுவார்களா? ஆகையால் அவர்களுக்குச் சிறிதும் சம்மதமில்லை. ஆனால் ஜெர்மனி பெல்ஜியம் வழியாகச் சென்றால் இங்கிலண்ட் யுத்தத்திற்குவர நேரிடுமென்று தெரியப்படுத்திய விஷயத்தை ஜர்மனிசிறிதும் கவனிக்கவில்லை. சரியானபதில் கொடுக்கவுமில்லை. பெல்ஜியம் வழியாகப்போகவும் யுத்தம் செய்யவும் ஜர்மனி ஆரம்பிக்கவே இங்க்லண்டுக்கு கோபமுண்டாய் ஜர்மனியர்கள் நியாயத்திற்கு விரோதமாய் நடந்து வருவதைக்கண்டு நியாயத்திற்காக யுத்தம்செய்ய ஆகஸ்டுமீ 4வ தீர்மானித்தது.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியாவின் தலைநகராகிய பெல்க்ரேடை பீரங்கிகளால் தகர்த்தார்கள். சில கட்டடங்கள் சேதமாயிற்றாம். பீரங்கி ஏற்றியிருந்த ஆஸ்டிரியாவின் படகு சேதமாய்ப் போய்விட்டது. ஆற்றைக் கடந்துபோக இவர்கள் முயன்றார்கள். ஸெர்வியர்கள் இவர்களை துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் தடுத்தமையால் இவர்கள் அவ்விதம் போக முடியவில்லை. மறுநாள் நதியைத் தாண்டி ஒஸிபானிகா, ரிஷி, என்ற இரண்டு பட்டணங்களைப் பிடிக்க முயன்று வருகிறார்கள். ஸெமெண்ட்ரியா

வில் நதியைத்தாண்டின படைக்கும் ஸெர்விப் படைக்கும் யுத்தம் நடந்தது. ஸெர்வியர்களுக்கு உயிர்ச்சேதமில்லையெனத் தெரிகிறது. ஸெர்வியர்கள் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தே வருகிறார்கள். ஷபட்ஸில் ஆஸ்திரியர்களைத் தோல்வியடையும்படி செய்தார்கள்.

பெல்ஜியம் ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் நடுவிலிருக்கிறது. மேலும் லக்ஸம்பர்க் என்ற ஒரு சிறு ஸ்வயேச்சையான நாடும் இருக்கிறது. ஜெர்மனி இவைகளின் வழியே சென்று லக்ஸம்பர்க்கிலுள்ள ரயில்களைக் கைப்பற்றியபின் இம்மார்க்கமாய் ஒரு லக்ஷம் துருப்புகளைக் கொண்டு போய் லாங்க்வீ என்னும் இடத்திலுள்ள ப்ரான்ஸின் ஸைன்யங்களைத் தாக்கிற்று. அப்படி போகுமுன் அங்கு ஒரு பாலமிருந்தது. அதைப் பிடித்தார்கள்.

பெல்ஜியம் ஜெர்மனி அக்கிரமம் செய்கிறதென்று சொன்னதற்கு ஜெர்மனி, ரயில், பாலம் முதலியவைகள் தங்களுக்குச் சொந்தமென்றும், தங்கள் இஷ்டப்படி செய்ய தங்களுக்கு சுதந்திரமுண்டென்றும் சொல்லிற்று. பார்த்தீர்களா ஜர்மனியின் அநியாயச் செயலையும், கர்வம் பொருந்திய வார்த்தைகளையும்! ஜர்மனியர்கள் லீஜ் பட்டணத்தைத் தாக்கியபொழுது பெல்ஜியம் அவர்களை எதிர்த்துப் போராடியது. ஜர்மனியர் ஜயமடையவில்லை. இன்னம் சண்டை நடந்து வருகிறது. ஜர்மனி பெல்ஜியத்துடன் ஜயம்பெற முடியவில்லை.

பிரான்ஸும் ஜர்மனியும் ஓதேன் நதிக்கரையில் நடந்த சண்டையில் ஜர்மனியரின் பீரங்கிகளையும் குண்டுகள் ஏற்றியிருந்த வண்டிகளையும் பிரஞ்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டுவிட்டனர். மண்ட் மிடி என்ற பிரஞ்சு கோட்டைக்குத் தெற்கிலுள்ள ஓதேன் நதிக்கரையில் இரண்டு நாள் சண்டை நடந்த பிறகு ஜர்மனியர் தோற்று ஓடிவிட்டார்கள். இரண்டு ஜர்மன் ஆகாய சஞ்சாரிகள் டீஸ்டு என்ற பட்டணத்தில் பெல்ஜியரால் பீரங்கியால் சுடப்பட்டு இறந்துபோயினர். இன்னொருவன் சுடப்பட்டு பலமான காயமடைந்தான்.

4 லட்சம் ஆஸ்டிரிய துருப்புகள் ஸெர்வியா எல்லை முழுமையிலும் புகுந்து செல்லப் பார்த்தனர். ஸெர்வியர்கள் அவர்களுடன் கடும்போர் செய்து அவர்களைத் திருப்பித் துரத்திவிட்டார்கள். ஆஸ்திரியர்களுக்கு சேதம் அதிகம். பிரஞ்சு, ருஷியா, ஸெர்வியா இவர்களுக்கும், ஜர்மனி ஆஸ்ட்ரியாவுக்கும் யுத்தம் நடந்து வருகிறது. ஜர்மனியர்கள் அதர்மமாக யுத்தம் செய்து தோல்வியடைந்துவருகிறார்கள். மேலும் லீஜில்நடந்த போரில் இவர்கள் தோல்வியடைந்தார்கள். இவர்கள் அபஜெயமேயடைந்து வருகிறார்கள். இங்லாண்ட் இன்னும் யுத்தம் புரியவில்லை. யுத்தம் செய்ய ஆரம்பித்தால் ஜயமடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.



இங்லண்டுக்கு அமெரிக்காவிலுள்ளவர்கள் ஏராளமான திரவிய சகாயம் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். கனடா, ஆஸ்ட்ரேலியா, இந்திய, தென் ஆபிரிக்க முதலிய தேசத்தார் தங்களாலியன்ற உதவியைப் புரிவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். ஹைதராபாத்திலுள்ள நைஜாம், பீகனீர் மகாராஜா தங்கள் சைனியங்களை அனுப்புவதுடன் தாங்கள் சகாயம்செய்யவருவதாக வாக்களித்திருக்கிறார்கள். மைசூர் மகாராஜா அவர்கள் 50லக்ஷம் ரூபாயும் தமது துருப்பின் உதவி தேவையிருந்தால் அனுப்புவதாகவும் சொல்லியிருக்கிறார்.

பிரிடிஷ் ராஜ்யம் ஜெயம்பெற்று இன்னும் அதிக உன்னதபதவியையடைந்து பெருமையுடனிருக்கவேண்டுமென்பதே இந்தியர்களது முக்கிய எண்ணம். இவ்வெண்ணம் நிறைவேற இவர்களுக்கு ஜயம் வருமாறு நாம் ஈச்வரனை பிரார்த்திக்கிறோம்.

---

# ELEMENTARY SECTION

## Madras Teachers' guild

*Anniversary day—4th August, 1914.*

## WELCOME SONG

## வந்தனோபசாரப் பாட்டு.

சஹானா—ரூபகம்.

பல்லவி

“வந்தனம் பலதந்தோம் தந்தோம் தந்தோம்
வாத்திமார் இங்கு வந்தவர் யாவர்க்கும். (வ)

அநுபல்லவி

இந்தச் சபைக்கக்ராஸனர் இன்ஸ்பெக்டர்
வ.ஸி. ப்ரண தார்த்திஹர ஐயரவர்கட்கு பல. (வ)

சரணங்கள்

1. எப்பக்கங்களிலுமுள்ள வெங்களைத்
தப்பாமல் வந்து சந்தித்துத் திருத்தும்

---

வைரங்களைப் பரீட்சித்தல்:—வைரக்கல் நல்ல கல்லா என்பதை அறியப் பின்வருமாறு செய்யவேண்டும். வெள்ளைக்காகிதத்தில் மையினால் ஒரு பொட்டு வைத்து அந்தப் பொட்டின்மேல் வைரக்கல்லை வைத்து அந்தக்கல் வழியாகப் பார்க்கையில் ஒரே ஒரு பொட்டுத் தெரிந்தால் சுத்தமான வைரமென்று தெரிந்துகொள்ளலாம். சுத்தமற்ற வைரமானால் அநேக பொட்டுகள் தெரியும். அல்லது அந்தப் பொட்டுப் பரந்து தெரியும்.

ஸப் அஸிஸ்டெண்ட் இனிஸ்பெக்டர் தமக்கும்
இப்பொழுதும் அப்பொழுதும் எப்பொழுதும் ஒப்பிமனம். (வ)

2 சிந்தை மகிழ்ந்து சிறப்பாகப் பல
நந்தவிலா நலமுள லெக்ச்சர்கள்
சந்ததமெங்கள் புத்தியிலவை
தங்கிடவிச் சங்கமேல்வி ளங்கவைத்த இங்கிதர்க்கும். (வ)

3. தங்களலுவலைத் தாம் கருதாமல்
இங்குவந்துள இனிய நேயர்க்கும்
மங்களமாக வாழ டீச்சர்ஸ் கில்டும்
இந்துமங்கு மெங்குமுள்ள எங்களிறைப் பங்கயத்தாள்.' (வ)

சென்னை டீசர்ஸ்கில்டிலுள்ள எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்கு சென்ற மூன்று வருஷகாலமாய் சாஸ்திரம், தாவரநூல், தேகதத்துவ சாஸ்திரம் முதலியவைகளைத் தக்க நிபுணர்களைக்கொண்டு இதற்காக ஏற்பட்டுள்ள கமிட்டியார் உபந்நியாசம் செய்வித்தார்கள். இவைகளுக்கு முதன்மையா யிருந்தவர்கள் அதன் பிரசிடெண்டாகிய ராய்பஹதூர் ஏ.சி. ப்ரணதார்த்திஹர அய்யரும், அதற்குக் காரியதரிசியாராகிய மிஸ்டர் என். சாமிநாத அய்யருமே.

இவ்விதம் உபந்நியாசங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் ஆனவுடன் ஒரு பரிக்ஷை வைத்தார்கள். அப்பரிக்ஷைகளுக்கு அநேக உபாத்தியாயர்கள் சென்று தேறியுள்ளார். இம்மாதம் 7உ கேப்ரீல் ஐஸ்கூலில் எலிமெண்டரிஉபாத்தியாயர் சபை கூடிற்று. அச்சபைக்கு ராவ் பஹதூர் எ.சி. ப்ரணதார்த்திஹர அய்யர் சபைத்தலைமையை வகித்து ப்ரைமெரி உபாத்தியாயர்கள் இவ்வித சாஸ்திரசம்பந்தமான உபந்நியாசங்களுக்கு வந்து கவனித்தபின்உபாத்தியாயர்கள் இப்பரிக்ஷைகளுக்கு வந்து பரிக்ஷைகளில் தேறியது தமக்கு அதிக சந்தோஷத்தை உண்டாக்குகிறதென்றும் இவ்விதம் உபாத்தியாயர்கள் தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்வது மிகவும் நலமென்று நினைத்து இவ்விதபிரசங்கங்களை நடத்த வித்வசிரோன்மணிகளைத் தாமும் கமிட்டியாரும் கேட்டுக்கொண்டதாகவும், சொன்னார். ஒரு உபாத்தியாயர் இப்பிரசங்கங்களைக் கவனித்து இன்று ஸயன்ஸ் ஸம்பந்தமாகச் செய்துகாட்டிய விஷயங்களைப்பார்க்க எவ்வளவு திருப்தியுண்டாக்குகிறதென்றும் சொன்னார். இப்பொழுது நடக்கும் யுத்த சம்பந்தமாய் நாமெல்லோரும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு நமது நன்றியறிதலை தெரியப்படுத்துவதுடன் பிரிடிஷாருக்குஜயமும், கீர்த்தியும், பெருமையும் உண்டாகுமாறு கடவுளைப் பிரார்த்திப்போம் என்று சொல்லவே யாவரும் ஏகோபித்து கரகோஷம் செய்து கடவுளை ஸ்தோத்திரம் செய்தார்கள்.



மிஸ்டர் என். சுவாமிநாதய்யர் இன்னும் இவ்வித பிரசங்கம் நடத்தப்படுமென்றும் அவைகளுக்கும் இப்பொழுதுள்ள எல்லா உபாத்தியாயர்களும் வருவார்களென்றும் தாம் நம்புவதாகவும் சொன்னார். மிஸ்டர் K. B. ராமநாதய்யர் அவர்கள் எம். ஏ. பிரசிடெண்டாகிய ராவுபஹதூர் ஏ.சி. ப்ரணதார்த்தி ஹர அய்யரவர்கள் தான் இவ்வித பிரசங்கங்களுக்கு முதன்மையாயிருந்து இவைகளைச் செவ்வனே நடத்திவந்தார்களென்றும், அவரை முதல் சர்களுக்கு மாற்றியது நமக்கு மிகவும் நஷ்டமென்றும் சொன்னதுடன், அவர் பென்ஷன்பெற்றபோதிலும் கல்வி விஷயமாக அவர் உழைக்க முன்வருவாரென்றும் சொல்லி அவருக்கு வந்தனமளித்தார். யாவரும் முகமலர்ச்சியுடன் கரகோஷம் செய்தார்கள். பின்பு மிஸ்டர் சுவாமிநாதய்யருடைய குமாரத்தி ஹார்மோனியம் வாசிக்கவே, அவருடைய குமாரர்கள் ரூல்ப்ரிடானியா என்ற திவ்ய பாடலைப் பாடினார்கள். சபையோர் கொண்ட ஆநந்தத்திற்களவில்லை. கடைசியாக ராஜவாழ்த்து ஆனவுடன் சபைகலைந்தது. இவ்விதம் அடிக்கடி எலிமெண்டரி உபாத்தியாயர் கூடிவந்தால் அவர்களுக்கு வெகு நன்மையுண்டாகுமென்று நம்புகிறோம்.

## 1. கடல், நிலம்-இவைகளின் பகுதிகள்.

நாம் நிலத்தில் வசித்துக்கொண்டு அதின் பரப்பில் வெளிகளென்றும், பள்ளத்தாக்குகளென்றும், குன்றுகளென்றும், பருவதங்களென்றும் தோன்றும்படியான நாநாவிதத் தோற்றங்களைக் கண்டு பழக்கமுற்றிருக்கிறோம். இப்பழக்கம்பற்றிப் பூமியில் பெரும்பாகம் நிலந்தானென்று நாம் நினைக்கக்கூடும். நமது தேசத்தில் உள்நாட்டுப் பிரதேசங்களிலுள்ள நமது ஜனங்களில் அநேகர் நிலத்தைவிட்டுத் தூரப்போயறியார். யாதேனும் ஒரு நதி, சரசு, ஒருவேளை ஒரு பெரிய ஏரி, இவை தவிர வேறு பெரிய ஜலபாகத்தை அவர்கள் கண்டறியார்கள். ஆகிலும் நீங்கள் பிரயாணப்பட்டு வடபுறந்தப்ப மற்றெந்தத்திசையையாவது நோக்கிப்போனால் நிலத்துக்கு முடிவுகண்டு விஸ்தாரமான ஜலபாகத்தையும் பார்ப்பீர்கள். ஒரு கப்பலிலேறி இந்தியாவைச்சுற்றி ஓட்டிப்பார்த்தால் அதற்குக் கிழக்கு தெற்கு மேற்கு முப்புறங்களிலும் கடலுண்டென்றும் காண்பீர்கள். தெற்கில் இலங்கையென்னுந் தீவைச்சுற்றிக் கப்பலோட்டிப்பார்ப்பதனால் தீவு இன்னதென்றும் அறிவீர்கள்.

இப்படி சிலவாரங்களுக்குள் கப்பல்யாத்திரைசெய்து நமது தேசம் பரியாயத் தீவென்றும், இதற்குத் தெற்கிலுள்ள இலங்கை, தீவென்றும் அறிந்துகொள்ளலாம். நேர்கிழக்காகக் கீழ்கரையிலிருந்து கப்பலேறிச்சென்றால் 400, 500 மைல் வரையில் கரைகாணாது. அப்படிக்கின்றி நிலந்நேர்தெற்காகச் சென்றால் பலமாதங்கள் கப்பல்யாத்திரைசெய்தும் நிலத்தைத் தோன்றாது. முடிவில் தென்துருவத்தைச் சூழ்ந்திருக்கும் நிலத்தை

யொட்டிய உறைபனிக்குன்றுகள் தென்படும். இப்படியாக இப்பூமியின் மேற்புறத்தில் அளவற்றபங்கு ஜலமயமா யிருக்குமென்றறியலாம்.

பூமியின் மேற்பரப்பில் நிலங்கொண்ட பாகத்தைவிட ஜலம் மூடியபாகம் சற்றேறக்குறைய மூன்றத்தனைக் கதிகமென்று நிஜமாய் அளந்தறியப்பட்டிருக்கிறது. நம்முடைய தேசத்திலிருந்தாவது மற்றெந்த தேசத்திலிருந்தாவது தோன்றுவதைமாத்திரங்கண்டு இந்தளவு நிர்ணயிக்கக்கூடாது. மாந்தர் பூமியைச் சுற்றியும் குறுக்கும் நெடுக்கும் பலபலவாறாகவும் கப்பல் யாத்திரைசெய்து ஜலக்கூறு இத்தனை, நிலக்கூறு இத்தனையென அறியலானார்கள்.

ஒரு பாடசாலையில் வழங்கும் பூகோளவுருண்டையை வைத்துக்கொண்டு பாருங்கள். அதை மெதுவாய் இருசுக்கம்பியைச்சுற்றிச் சுழற்றுங்கள். உடனே நிலப்பரப்பைவிட ஜலப்பரப்பு இத்தனைபங்கதிகமென்று எளிதில் காணலாம். இவ்வித்தியாசமே யொழிய நிலநீர்க் கூறுபாடுகளைப்பற்றி மனோகரமான மற்றும் பலவிஷயங்கள் நீங்கள் அறியக் கூடும்.

முதலாவது: ஜலபாகங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து கடல் என்கிற பெருநீர்க்காடாகிறது. நிலமோ அங்கங்கே கடல் நீரால் அறுப்புண்டு, அப்படி அறுப்புண்ட கூறுகளில் அநந்தம் பெருங்கண்டத்தைவிட்டு வேறு வேறு துண்டுகளாய் கடலில் தீவுகளாகப் பிரிந்துநிற்கும். இப்படி நிற்குந் தீவுகள்தாம், இலங்கையும் மகா பிருதானியாவும்.

இரண்டாவது: நிரக்ஷரேகைக்குத் தெற்கில் நிலபாகம் இருப்பதைவிட, வடக்கில் மெத்த அதிகமுண்டு. பூகோள உண்டையைச் சுழற்றி, லண்டன்நகரைக்கண்ணுக்குநேர் நிறுத்திப்பாருங்கள். பூமியிலுள்ள நிலபாகத்தில் பெரும்பாலும் அந்நகரத்தைச் சூழ்ந்துநிற்கிறதாகக் கண்ணுக்ககப்படும். பின்னும் உண்டையைத்திருப்பி லண்டனுக்கெதிர்த்தட்டான நியுஜீலாண்டின் பரப்பைப் பாருங்கள். அதைச்சுற்றி ஜலபாகத்தின் பெரும்பான்மை புலப்படும். இப்போது பார்த்தீர்களா, நிலபாகமுள்ள அர்த்தகோளத்தின் மையமாகவிருந்து லண்டன்நகரம், பூமியிலுள்ள தேசங்களுக்குள் நடுத்தூரத்திலிருக்கிறது. இப்படி மையமாக இருப்பதனால் பிருதானியா வர்த்தகம் விருத்தியடைவதற்கு அனுகூலகாரியாக இருக்குமென்பதற்கு ஐயமில்லை.

மூன்றாவது பெரிய நிலபாகங்கள் பங்கிட்டுக் கிடக்கும் வரிசையைப்பாருங்கள். அதனால் கடற்கூறுகளும் ஒருவாறு ஒன்றுக்கொன்று சேராமல் பிரிந்திருக்கின்றன. இப்பெரு நிலக்கூறுகளுக்குக் கண்டங்களென்றும், அவைகளுக்கிடையிலுள்ள அகன்ற பலபாகங்களுக்குச் சமுத்திரங்களென்றும் பெயர். பூமியில் இரண்டு கெட்டியான



பாகம் ஒத்த தரையல்லவென்றும், அதில் சில பாகங்கள் அகன்று பருத்தெழுந்த மேடுகள் காடுகளாகவும், சில பாகங்கள் விரிந்தாழ்ந்த குடுகுகள் பள்ளங்களாகவும் இருப்பதாய் மனதில் பாவித்துக்கொள்ளுங்கள். இப்பள்ளங்களும் குடுகுகளும் கடல் நீரால் நிறைந்து அக்கடல் மட்டத்துக்குமேலுள்ள மேட்டுப்பிரிவுகளே நிலமாகும்.

இதுவரையில் படித்துவந்த பாகங்களில் அடிக்கடி கடலைச்சுட்டிப் பேசிவந்தோம். காற்றிலுள்ள நமிர்ப்பு பெரும்பாலும் கடலிலிருந்து வருகிறதாக அறிந்தோம். பூமியிலுள்ள நதிகள் இடைவிடாமல் இந்த ஜல நிலையத்திலேயே போய்ப்படிகின்றனவென்றும், அதேயிடத்தில் பூமிப்பரப்பில் பூக்கிமடிந்து மண்ணெல்லாம் இழுப்புண்டு போகிறதென்றும் கண்டோம். இக்கடலில் தோன்றும் அதி முக்கியமான தோற்றங்களைப்பற்றிச் சற்று நுட்பமாய் நோக்கி அறியவேண்டும்.

## 11 கடலேன் உப்பாயிருக்கவேண்டும்

பூமியில் நீங்கள் குடித்து வழங்கிவரும் நீருக்கும் கடல்நீருக்கும் மெத்த பேதம் உண்டென்பதைப் பரிக்ஷித்தறியலாம். கடல் நீர் உப்புநீர். ஆற்றுநீரிலும் ஊற்றுநீரிலும் அகப்படாத ஒரு திரவியம் அதில் இருக்கிறது. ஒரு துளி ஊற்றுநீரை ஒரு கண்ணாடி பில்லையில்விட்டுச் சுண்டவைத்தால் கண்ணாடியில் அதிருந்த சுவடுதெரியாமல் வற்றிப் போகும். ஊற்று நீரிலும் சில தாதுக்கள் எப்போதும் கரைந்திருப்பதுண்டு. ஜலம் ஆவியாய்ப் பறந்துபோகும்போது இத்திரவியங்கள் அடியில் தங்கிப்போகும். ஆயினும் ஒருதுளி ஜலத்தில் இத்தாதுக்களின் கூறு அதிக சூக்ஷ்மமாகையால் அத்துளி வரண்டுபோக அதிருந்தவிடத்தில் கண்ணுக்குத் தோற்றும்படியாய் ஒருபுள்ளியும் தென்படாது. கடல் நீரில் ஒருதுளி எடுத்துவிட்டுச் சுண்டச்செய்து பார்த்தால் அதிருந்த விடத்தில் வெள்ளையாய்ப் பொருக்குத்தட்டும்; அல்லது ஏடு கட்டும். அவ்வேட்டை ஓர் பூதகண்ணாடியின் கீழ்வைத்துப்பார்த்தால், நாம் உண்கிற உப்பின் நுட்பமான படிகக்கம்பிகள் சேர்ந்த கட்டி யென்றறியலாம்.

உப்புத்தவிர வேறு சில பதார்த்தங்களும் கடல் நீரிலுண்டு; ஆயினும் உப்பே அதிகமாயுள்ளது. மற்றவைகளைப்பற்றி இப்போது நாம் அத்தனையாகக் கவனிக்கவேண்டுவதில்லை. இந்த உப்பு கடலில் எங்கிருந்துவந்து சேர்ந்தது? கடலுப்பெல்லாம் பாறைகள் தகர்ந்தழிந்த சித்துகளிலிருந்தே உண்டாகிறது.

[பௌதிக பூகோளத்திலிருந்து எடுக்கப்பட்டது. ப. ர்.]

# ஆப்ரிக்காவைக் கண்டு பிடித்தவர்கள்.

## The Ex Plorers of Africa.

மங்கோபார்க்கும் அவருடைய மனிதரும் கொல்லப்பட்ட சங்கதி யாவருக்கும் தெரிந்தது. புத்தியும் நாகரிகமும் இல்லாத ஜனங்களைப் பற்றி புத்திமான்கள் விசனமுற்றார்கள்.

### ஹியூஜ்க்ளேபர்டன்

பின்பு சிறிதுகாலஞ்சென்ற உடன் மனிதர் ஆப்ரிக்காவுக்குப்போக தலைப்பட்டார்கள். கப்பற்படைக்கு தன்விடாமுயற்சினால் தலைவனான ஒரு ஏழைப்பையனாகிய ஹியூஜ் க்ளேபர்டன் நைகர் உற்பத்திஸ்தானத்தைக் கண்டுபிடிக்க ஆப்ரிக்காவுக்குப்போனான். ஆனால்நைகர் நதியைக்கண்டுபிடிக்கமுடியவில்லை; ஆயினும் வேறு சில அற்புதமானவைகளைக் கண்டுபிடித்தான். பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இவரைமறுபடியும் அனுப்பினார்கள். இவருடன் சில மனிதரும் சென்றார்கள்: இவர்களில் ஒருவன் க்ளேபர்டனுடைய வேலைக்காரன். இவன் மிகவும் தைரியமுள்ளவன். இவன் பெயர் ரிச்சர்ட் லேண்டர். இவர்கள் வெகுதூரம் பிரயாணம் செய்தார்கள். அநேக கஷ்டங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு பற்பல இயற்கைப்பொருளைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். நாகரிகமற்றஜாதியார்களால் லேண்டர் தவிர மற்றயாவரும் கொல்லப்பட்டார்கள். லேண்டர் இங்லாந்துக்குப்போய் தான்செய்த ப்ரயாணம், அப்பொழுது சம்பவித்த விஷயங்கள் முதலியவைகளையெல்லாம் எழுதினார். இவர் கண்டு பிடித்தவைகள் திருப்திகரமாய் பிரிடிஷ் கவர்ண்மெண்டாருக்குத் தோன்றவே, அவர்கள் மறுபடியும் இவரையும், இவர் சகோதரரையும் ஆப்ரிக்காவுக்கு அனுப்பினார்கள். இவர்கள் அங்குசென்று அத்தேசத்தைப்பற்றி முன்னைவிட இன்னும் அநேக விஷயங்களைத்தெரிந்துகொண்டார்கள். இப்படி செய்துவந்ததில் இவர்கள் உயிரேபோய்விட்டது. அவ்வூர் முரட்டு ஜாதியார் இவர்களைக் கொன்றுவிட்டார்கள்.

இவ்விதம் பலர் ஆப்பிரிக்காவைப்பற்றி அறிய தங்கள் உயிரையே தத்தம் செய்தார்கள். க்ரமேண அநேகர் ஆப்ரிக்காவை நன்றாக கண்டுபிடித்து அதன் படத்தையும் எழுதினார்கள். அதில் கண்டுபிடித்த நதி, மலை, முக்கிய பட்டணங்கள் காடு, வனம், முதலியவைகள் வரையப்பட்டிருந்தன. இப்படி எழுதிவைத்தது யாவருக்கும் பிற்காலத்தில் யாத்திரை செய்தவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருந்தது.

### ராபர்ட் மொப்பட்

இப்படியிருக்க ஒரு ஏழை குடியானவனாயிருந்த ராபர்ட் மொப்பட் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு ஆப்ரிக்காவுக்கு பாதிரியாகச் சென்று



பேச்சுவான் லேண்டுக்கு வந்து இதை வாசஸ்தலமாக வகித்து வந்தார். இங்கே காட்டுத் தன்மையுள்ள ஜனங்களுக்கு கல்வி அறிவுண்டாக்கி அவர்களை கிறிஸ்துவ மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டார். அவர்களுக்கு நற்போதனைகளைப்போதித்துவந்தார். அவர்களிடத்தில்குடிகொண்டிருந்த கெட்ட நடவடிக்கைகளை யெல்லாம் நீக்கினார். பின்னிட்டு அடிக்கடி தமது வாசஸ்தலத்திற்கு அப்பால் பிரயாணம் போய் அங்குள்ள ஜனங்களுக்கும் இவ்விதமே போதித்து அவர்களையும் நல்லவர்களாகச் செய்ய முயன்று வந்தார்.

இவருக்கு ஒரு ரூபலாவண்ணியமுள்ள குமாரத்தியுண்டு. இப்பெண்மணியை டேவிட் லிவிங்ஸ்டன் என்பவன் மணம்புரிந்து கொண்டான். இவன் ஸ்காட்லாண்டில் ஒரு ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவன். பலவஸ்துக்கள் உண்டாக்கும் ஒரு சாலையில் இவன் கஷ்டப்பட்டு வேலை செய்து வந்தான். அதிகாலையில் தினம் எழுந்து சாயங்காலம் அதிகநேரம் வரையில் வேலைசெய்து வருவான். இத்துடன் இவன் அனேக புஸ்தகங்களைப் படித்து வந்தான். புத்தியுள்ளவனாகையாலும் விடாமுயற்சி மேலிட்டமையாலும் கெட்டிக்காரனானான். தன் மத சம்பந்தமான புஸ்தகங்களைப் படித்துவந்தான். அதிலும் சாமார்த்தியவானென்று பேரெடுத்து பாதிரியானான். உடனே சீனா தேசத்துக்குப் போகத் தீர்மானம் செய்தான். அச்சமயம் அங்கே பலத்த யுத்தம் ஆரம்பமானது. இவன் அவ்விடத்திற்குப் போகாமல் ஆபிரிக்காவுக்குப் போனான். இங்கே மொப்பட் உடன் சேர்ந்து உழைத்தான். அவன் சரித்திரம் மிகவும் சிறந்தது. அது பின்வருமாறு.

---

# டேவிட் லிவிங்ஸ்டன்

## DAVID LIVINGSTON.

இவர் ஆப்பிரிக்கவுக்குப் பிரயாணம் செய்ய எத்தனம் செய்தபொழுது அநேகர் இவரை பயமுறுத்தினார்கள். இவர் அவர்சொன்ன வார்த்தைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் மனோதிடத்துடன் ஆப்பிரிக்காவுக்கு பிரயாணமானார். கேப் ஆப். குட் ஹோபுக்கு வந்து இறங்கினார். இங்கிருந்து மாபோட்ஸா என்ற விடத்திற்கு வந்தார். இங்குள்ள ஜனங்கள் சிம்மம் அநேகமிருப்பதைக் கண்டுப் பயந்திருந்தார்கள். சிம்மம் இரவில் வந்து ஆடுமாடுகளை அடித்துக்கொண்டு போய்விடும். ஜனங்களையும் கொன்றுவிடும்.

லிவிங்ஸ்டன் இவர்களுடன் வேட்டைக்குப்போய் அநேக சிங்கங்களைக் கொன்றார்.

ஒருநாள் சிங்கங்கள் ஆட்டுமந்தையுள்ளவிடத்திற்கு வந்து சில ஆடுகளைத்தூக்கிக்கொண்டு சமீபத்திலிருந்த ஒரு குன்றுக்கு ஓடிப்போயிற்று. இவர் அங்குள்ள சிலருடன் துப்பாக்கியும் கையுமாக அவைகளின்பின் ஓடினார்கள். சிங்கங்கள் மரங்களடர்ந்த இடத்தில் ஆடுகளை வைத்துக்கொண்டு புசித்துக்கொண்டிருந்தன. லிவிங்ஸ்டன் இவ்விடத்திற்கு வந்ததும் தன் துப்பாக்கியை எடுத்து ஒரு சிங்கத்தின் மீது குண்டுபாயும்படி சுட்டார். சுடுபட்டபக்கம் ஓரேதாவாய் (குண்டுவந்த இடம்நோக்கி) தாவி குதித்தது. ஆனால் லிவிங்ஸ்டன் ஒரு புதருக்குப் பின்னாலிருந்தார். இவருடன் வந்தவர்கள் மிகவும் பயந்தசப்தம் செய்து கொண்டு ஓடிவந்தார்கள். எங்கே தங்கள் நண்பர் சிம்மத்திற்கு இறையாய் விட்டாரோ என்று எண்ணினார்கள். சிம்மம் இவர்தோளைப்பிடித்து இம்சிக்க ஆரம்பித்தது. இவர்பயந்து கீழே விழவே, இவருடன் வந்திருந்தவர்களில் ஒருவன் துப்பாக்கியை யெடுத்து இந்த சிங்கத்தின் மேல் குறி வைத்து சுட்டான். ஒருவன் ஈட்டியை எடுத்து அதன் தேகத்தில் குத்தினான். இம்மூவருடன் அதுவும் பயங்கரமாக சண்டை செய்தது. கடைசியாக குண்டு தன் தேகத்தில்புகுந்து வேதனைசெய்தமையால் அது கீழேவிழுந்து செத்தது. லிவிங்ஸ்டனுக்கு வலி அதிகமுண்டானது. எல்லாரும் இந்த சிங்கத்தை தங்கள் இருப்பிடத்திற்கு எடுத்துக்கொண்டு இதன் தோலை எடுத்து வைத்துக்கொண்டார்கள். சில நாட் சென்றபின் லிவிங்ஸ்டன் சௌக்கியமடைந்தார். அங்குள்ளவர்கள் இவரிடத்தில் அதிகப்பிரியமுள்ளவர்களானார்கள். இவரும் அவர்களுக்கு நற்காரியங்களைச் செய்துவரவும், கடவுளை ஸ்துதி செய்துவரவும் போதித்து வந்தார்.

பத்திராதிபர்.

---

# இராஜ பக்தி

## LOYALTY:— A HISTORICAL TALE OF THE 10th CENTURY.

## 10-வது நூற்றாண்டில் நடந்த ஒரு சரித்திரக் கதை,

### முகவுரை.

சாலிவாஹன சகாப்தம் 992 வருஷத்திலே விக்ரமசக்கிரவர்த்தி என்பவர் குண்டலதேசத்துக்கு அதிபதியானார். அவர் காலத்தில் காஞ்சீபுரத்துச் சோழராஜர்கள் குண்டலதேசத்தின் மீது அடிக்கடி படையெடுத்தனர். அவர்களைத் தோற்கடிக்க விக்ரமசக்கிரவர்த்தி பல நாள் சண்டை செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு பாகத்தையும் ஜயித்தபின் குண்டல தேசம் விஸ்தாரமாயிற்று. ஆகையால் விக்ரமசக்கிரவர்த்தி புதியதாய்த் தனக்குச் சேர்ந்த பல நகரங்களையும் ஊர்களையும் தன் சேனாபதிகளுக்கும் தளகர்த்தர்களுக்கும் பட்டயம் செய்ததாக சிலா சாஸனங்கள் சொல்லு



கின்றன. அவற்றுள் குண்டலதேசத்துக்குத் தென்கிழக்குப் பாகத்தில்
இருந்த கருமலைப் பிராந்தியங்களை ஜெயித்தவுடன், சேனைத்தலைவருள்
ஒருவரான உக்ரநரசிம்ம மல்லன் என்னும் தன் உறவினன் ஒருவனுக்கு
அவற்றை தானம் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு சுற்றுப் புறங்களில் உள்ள நகரம், ஊர், நாடு, இவற்றைக்
கொடுத்ததின் காரணம் தன் தேசத்தை பலப்படுத்துவதற்கே. தேசத்து
எல்லை முழுவதும் காடு வெட்டிப் பாதை போட்டு, ஊர்காத்து பிரஜா
ரக்ஷணம் செய்தபோது தேசத்துக்கு க்ஷேமம் ஏற்பட்ட தென்பதற்கு
ஆக்ஷேபனையென்ன! ஸ்ரீ சைலவாசியான மல்லிகார்ச்சுனன் ஸந்நதியில்
இருக்கவேண்டுமென்று உக்ர நரசிம்மனுக்கு இஷ்டமிருந்தது பற்றி இது
வரையில் அவன் வேறு ஓரிடத்திலும் நாடுகொள்ள பிரியப்படவில்லை.
வடமேற்குப் பிரதேசத்தை வஸந்தநாதமல்ல தேவனுக்கும், மேற்புறத்தை
ஸோமேசுவர மல்லனுக்கும், தென்மேற்கை அனந்த பால த்ரிபுவனனுக்
கும், தென்கிழக்கை உக்ர நரசிம்ம வீரனுக்கும் கொடுத்து விட்டபின்
விக்ரமசக்ரவாத்திக்கு தேச ரக்ஷணையைப் பற்றி விசாரப்படவேண்டிய
அவசியமே இல்லாமற்போயிற்று. கனவிலும் தீங்கு நினையாவீரர்களை உடை
ய விக்ரமனுக்கு விசாரப்படவேண்டிய காரணம் யாது உளது? பிரஜைகள்
கொண்டாட 51 வருஷகாலம் ராஜ்யபாரம் செய்தபின் விக்ரமசக்கரவர்த்தி
வீர சுவர்க்கம் புகுந்தார்.

உக்ர நரசிம்மன் தன் பாகத்தைப் பாங்காய்ப் பரிபாலனம் செய்து
வந்தான். எந்த இடத்தில் விக்கிரமன் தனக்கு நாடு கொடுத்தானோ அந்த
இடத்திலேயே * ([illegible] என்று தெலுங்கில் சொல்லுகின்றனர்.)
* கருமலை நகரம் என்று ஒரு பட்டணம் நிருமித்தான். சிறிது சிறிதாய்
மலைப்பாங்கான தன் தேசத்தை வனமழித்து ஊர்களைப் பெருக்கினான்.
பத்து வருஷத்துக்குள் மல்லிகார்ச்சுனன் கிருபையால் குண்டல ராஜ்யத்
தின் திரையில் 8-ல் 1 ங்கு கருமலை நாடுகளில் நின்றே வருவதாயிற்று.
குண்டல தேசத்தின் எல்லாப் பக்கங்களில் இருந்தும் ஸ்ரீ சைலவாசியான
மல்லிகார்ச்சுனனை தரிசனம் செய்ய கணக்கில்லா ஜனங்கள் நிர்பயமாய்
வருஷாவருஷம் கிரமமாய் வரத்தொடங்கினர். மலை நாட்டு ஜனங்களான
செஞ்சுக்களையும் வேடர்களையும் அன்புடனும் ஆதரவுடனும் நடத்தி
அவர்களின் உதவியால் செஞ்சுசேனை "ஒன்றும், வேடசேனை ஒன்றும்
தயார் செய்துகொண்டான். உக்ர நரசிம்மன் பெயர் இன்றைக்குத் அப்
பிராந்தியங்களில் ஜனங்களுடைய ஞாபகத்தில் அழியாமல் நிலைத்து நிற்
கின்றது. இவ்வாறு தேச பரிபாலனம் செய்துவிட்டு தன் சக்ரவர்த்திக்
குப்பின் 4 வருஷம் கழித்து அவர் போன வழியைப் பின் தொடர்ந்தான்.
உக்ரநரசிம்மன் மகன் வீரநரசிம்ம மல்லன். பிதாவினும் நூறுபங்கு

மேம்பட்ட குணசாலி. ஜனங்களிடத்து தயையும், இராஜ விசுவாசமும்,
தெய்வபக்தியும், தர்மபுத்தியும், இவனிடமே குடிகொண்டவை என்ன
லாம். விக்ரமசக்ரவர்த்திக்குப்பின் சக்ரவர்த்தியான த்ரைலோக்கியமல்ல
தேவன் அவ்வளவு கெட்டிக்காரன் அன்று: ஆனால் அவன் மிகநல்லவன்.
அவனை எதிர்க்க சில சிற்றரசர்கள் முயற்சி செய்தபொழுது உக்ர நரசிம்
மனே முன்னின்று அவர்களைத் தோற்கடித்தான். குழந்தைப் பருவம்முதற்
கொண்டே தன் தகப்பனால் தினமும் "அரசனுவாத்தியான் தாய்தந்தை
தம்முன், நிகரில் குரவரிலர்" என்ற ஆசாரக்கோவையின் உண்மையை
உபதேசிக்கப்பெற்றவனுதலால் சக்ரவர்த்தியை தெய்வம்போல் பாவித்து
வந்தான். உக்ரநரசிம்மனுடைய இராஜ்யம் குண்டலதேசத்தில் வெகுசிறிய
பாகமானுலும் தன்வல்லமையால் தான் முக்கியப் பிரபுவென்று காட்டிக்
கொண்டான்.

த்ரைலோக்கிய மல்ல தேவன் காலத்தில் நடந்த விசேஷங்களை நாம்
கவனிக்கவேண்டிய அவசியமில்லை. பிரஜைகளின் சௌக்கியத்தையே
தேடிக்கொண்டிருந்த விக்ரம சக்ரவர்த்திக்குப் பின் சுய நன்மையையே
கவனித்துக்கொண்டு சதா சிற்றின்பத்தில் மூழ்கி யிருந்த த்ரை
லோக்கியனை ஜனங்கள் வெறுத்தனர் என்று சொல்லவேண்டுவ
தில்லை. இவன் காலத்திலேயே கஸ்னி கோரி வம்சத்தார் வடஇந்தி
யாவைப் படையெடுத்தனர். ஸிந்துதேசத்தைச் சேர்ந்த சிற்றரசன் ஒரு
வன், காலபைரவ விசுவேசுவரன் என்பான், தன்மனைவியுடனும் தன் மகன்
விஜ்ஜலனுடனும் குண்டலதேசத்தில் அடைக்கலம் புகுந்தான்.

காலபைரவவிசுவேசுவரன் அதிபுத்திசாலி; வயது முதிர்ந்தவன்,
ஆனபடியால் அரசனை அநுசரித்துக்கொண்டு அவன் தயவால் அரண்
மனையில் முக்கிய உத்தியோகஸ்தர்களுக்குள் தானும் ஒருவனுனன்.
அது பற்றி அவன் மகன் விஜ்ஜலனுக்கு சேனையில் ஒரு தளகர்த்தனுக
சுலபமாய் வழியுண்டாயிற்று.

விஜ்ஜலனைப் பற்றியும் இரண்டொருவார்த்தை பேசவேண்டிய தவ
சியம். இவன் ஏழுவயதாய் இருக்கும்போது ஒரு ஜோசியன், "இவன்
சக்ரவர்த்தியாவான்" என்று சொல்லியிருந்தான். ஏற்கனவே யிருந்த சிற்
றாசும்போய் குண்டலதேசத்து இராஜனிடத்தில் தளகர்த்தனுய் வந்து
அமர்ந்து உயிர் வளர்ப்பது அவனுக்கு மிக மனவருத்தத்தை உண்டு
பண்ணிற்று. ஆயினும் செய்வது என்ன! சாமர்த்திய சாலியென்றால் இவ
னைப்போன்ற சாமர்த்திய சாலிகள் கிடையாதென்னலாம். தளகர்த்தனுன
ஒருவருஷத்துக்குள் தன் தளத்தைத் தன் இஷ்டப்படி யெல்லாம் நடத்த
வல்லவனுனன். இவன் சேனைத்தலைமை வகிக்கவே பிறந்தவன்போல்



OFFICE OF THE REGISTRAR ... 24 OCT 1914 MAD

தோன்றிற்று. சச்சரவு நடக்கும் [illegible]க்கெல்லாம் சேனையனுப்பும்
போது சக்ரவர்த்தி விஜ்ஜலனை மறப்ப[illegible] அதற்குக் காலபைரவ
விசுவேசுவரன் காரணமாய் இருந்தான் என்பது சொல்லவும் வேண்டுமா?
மற்றைய தளகர்த்தர்கள் சுகமாய்த்தூங்கிக்கொண்டு காலம்கழிக்க இவன்
மட்டும் தன் தேகப்பிரயாசத்தாலும், புத்தி கூர்மையாலும், ஊக்கத்
தாலும் சில நாட்களில் தளகர்த்தர்களுக்குள் முதல்வன் எனப்பெயர் பெற்
றான். சக்ரவர்த்தி பலமற்றவனுய் இராஜ்யபாரத்தை கவனியாமல் இருக்
கின்றான் என்பதும், ஜனங்களும், சேனைத்தலைவரும் அதிருப்தியடைந்து
இருக்கின்றனர் என்றும், காலபைரவ விசுவேசுவரனுக்கும் விஜ்ஜலனுக்
கும் நன்கு விளங்கின. இவ்வநுகூலங்களைக்கொண்டு இராஜ்ஜியத்தைத்
தான் அடையவேண்டுமென்று விஜ்ஜலன் மனதில் ஆசை சிறிது சிறிதாய்
பலப்பட்டுக் கொண்டேவந்தது.

ஆனால் வீர நரசிம்மனைப்போன்ற பிரபுக்கள் எத்தனையோ பேர் இருக்
கின்றார்களே! அரசனுடைய குணங்கள் எப்படியிருப்பினும் அரசன் அரச
னே—என்று அவர்கள் சக்ரவர்த்தியை அணுவளவும் அவமதிக்க விரும்ப
வில்லை. இத்தகைய பிரபுக்கள் இருக்கின்றார்கள் என்பதும், அவர்களின்
இராஜபக்தியின் உறுதியும், அவர்களது சைனியபலமும், விஜ்ஜலனுக்கு
நன்றாய்த்தெரியும். ஆனால் விஜ்ஜலனுடைய நடத்தையும், மற்றும் அவன்
வெளிப்படையாய்ச் செய்யும் காரியங்களும், அவனுடைய இராஜ பக்தி
யை சம்சயிக்க இடமே கொடுக்கவில்லை. வீர நரசிம்மன் போன்ற சுத்த
வீரர்கள் "ஐயோ பாவம்! அனுதியாய் நம்மரசனிடம்வந்து அடைக்கலம்
புகுந்த பைரவ விஜ்ஜலன் எவ்வளவு சமர்த்தன்? இச்சிறுவயதில் இவ்வளவு
சாமர்த்தியசாலியாய் இருப்பது அருமை" என்று அவனை மெச்சினர்.
சக்ரவர்த்தியும் 'நல்லபாம்பு ஒன்றைத்தான் பாலூட்டி வளர்த்து வருகி
றான்' என்பதைத் தெரியாமலே தன்னிஷ்டப்படி வாழ்நாட்களைக் கழித்து
வந்தான்.

இப்படிச் சில வருஷங்கள் கழியவே வைரமுடி தைலப்பமல்லதேவன்
என்னும் பெயர் வகித்த இளவரசனுக்கும் விஜ்ஜலனுக்கும் சிநேகம் பலப்
பட்டது. விஜ்ஜலனுக்கு நாளடைவில் தலை நகரான கலியாணபுரியிலேயே
சேனுதிபதிப் பதவியும் கிடைத்தது. த்ரைலோக்யமல்ல சக்ரவர்த்திக்கும்
பல வியாதிகள் பற்றின. இராஜகாரியங்கள் நடத்த முற்றிலும் அசக்தனு
னுன். சுற்றுமுள்ள ஜனங்களின் அதிருப்தியோ முன்னிலும் பதின்மடங்
கு அதிகமாயிற்று. அரசனைப்பதுமைபோல் நினைக்கவேண்டியதாயிற்றே
யொழிய அவனைக் காண்பதுவும் கஷ்டமாயிற்று. காலபைரவ விசுவேசு
வரனே முதல் மந்திரிபோல் அரண்மனையில் அதிகாரம் செலுத்தத் தொ
டங்கினன். த்ரைலோக்கிய மல்லனை சிம்மாசனத்திலிருந்து அகற்றி இள

வாசைப்பட்டத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்று சில ஜனங்கள் கலியாண புரியில் பிரயத்தனம் செய்வதாக ஒற்றர்களால் வீர நரசிம்மன் அறிந்து கொண்டான். விஜ்ஜலனும் அவன் சேனையும் இது சங்கதியை அறிந்துகொள்ள இஷ்டப்படவில்லை.

வீரநரசிம்மன் விஷயங்களை அறிந்துகொண்டதும் தன் குதிரை வீரரையும் வேடசேனையில் முதல் தரமான 100 வீரரையும் அழைத்துக்கொண்டு தலைநகருக்கேகினான். இவன் வந்து சேர்ந்தது விசுவேசுவரனுக்கும் அவன் மகன் விஜ்ஜலனுக்கும் இடிவிழுந்தது போலாயிற்று. குழப்பமெல்லாம் அப்படியே அடங்கிப்போயிற்று. உடனே விஜ்ஜலன் தான் இக்குழப்பத்துக்கு மூலகாரணம் என்று நரசிம்மனுக்கு நன்றாய்ப் புலப்பட்டது. ஆயினும் மேற்செய்யவேண்டிய காரியம் புலப்படவில்லை. இரண்டு நாள் கழித்து சபாமண்டபத்தில் விஜ்ஜலன் நரசிம்மனைப்பார்த்து "ஐயா வீராதிவீர நரசிம்மமல்லரே! நமது தலை நகரில் இருக்கும் சேனை போதாதென்று நீர் உமது வேடசேனையையும் அழைத்துவரீர்போலும்!! இப்பொழுது ஏதாவது எதிரிகள் தலைநகரை எதிர்க்கவந்ததாக கேள்விப்பட்டீரா என்ன?" என்று கேட்டான். நரசிம்மனுக்கு உடல் பதறுகின்றது. ஆயினும் விரோதத்தை வெளிக்காட்டுவது தப்பென்று உட்கொண்டு, யாதவர்களும், சோழர்களும் கீழ் நாடுகளைக் கொள்ளையடிக்கின்றார்களென்று கேள்விப்பட்டு, என்னால் தேசத்துக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டோ என்று அரசன் தயையை எதிர்பார்க்கவந்தேன். நீர் தலைநகரில் இருக்கும் வரையில் நம்மரசுக்கு என்னகுறை? உம்முடைய சாமர்த்தியத்தை நான் அறியாதவனா?" என்றான். சக்ரவர்த்தியும் விசுவேசுவரனால் தூண்டப்பட்டு நரசிம்மனைச் சில அடாதகேள்விகளைக் கேட்டு அவன் மனதைப் புண்படுத்தினான். ஆயினும் நரசிம்மன் "நான் சக்ரவர்த்தியின் உப்பைத் தின்று இருக்கின்றபடியால் என் ஆவியுள்ள வரையில் இவ்விராஜ்யத்துக்குத் தீங்குவாராமல் காப்பேன்" என்று தீர்மானம் செய்து கொண்டான். குழப்பமென்பதே வெளிப்படாமல் நகரமெல்லாம் அமைதியாய் இருப்பதைக்கண்ட நரசிம்மவீரன் தன்னிடத்துக்குப் போகப் பிரயத்தனம் செய்தான். இன்னும் அவனைப்போல் அநேககாரியமாய் தலைநகருக்கு வந்து இருந்த மற்றவீரரும் அரசனிடம் செலவு பெற்றுக்கொண்டு புறப்படத் தயாராய் இருக்கும் வேளையில் திடீரென்று அரசன் காலம் முடிந்துவிட்டதென்று சமாசாரம் வந்தது.

இன்னும் சிலநாள் இருந்து வைரமுடி தைலப்பமல்ல தேவனுக்கு முடி சூட்டியபின் ஒரு நாள் தனித்துச் சில பிரபுக்கள் அரசனிடம் சென்றனர். அவர்களை முன்னிட்டுக்கொண்டு சென்றவன் நரசிம்மமல்லன். சிறுபிள்ளையான அரசன் "பிரபுக்களே வாருங்கள்" என்று அழைத்து ஆசனம் கொடுத்தான். சிறிது நேரம் அளவளாவிய பின்னர் நரசிம்மமல்லன்



"அரசர்க்கரசே! நாங்கள் எமது இருப்பிடங்களுக்குப் போய்வரவேண்டும். சமுகத்துக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம். அரண்மனையிலேயே பாம்புகளும் குரங்குகளும் இருக்கவும் கூடும்; பாம்புபால் ஊட்டியவர்கள் மேலே சீறிவிழுந்து கடிக்கும் குரங்குகுடியிருக்கும் வீட்டையே பிடுங்கி எறிந்து நெருப்புவைக்கும். நீவிர் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாங்களோ தூரத்தில் இருப்பவர்கள். எந்தநிமிஷத்திலும் உதவிக்கு வரத்தயாராய் இருப்பினும் தாங்கள் பக்கத்துணை சிறுப் இருக்க வேண்டுமென்று எங்கள் அநுபவத்தில் பலதடவை கண்டிருக்கிறோம். ஆகையால் தாங்கள் தங்களுடைய க்ஷேமத்துக்கு வேண்டிய அளவு பக்கத்துணையைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதே எங்களது கோறிக்கை" என்றான்.

"பிரபுக்காள்! நீங்கள் பயப்படவேண்டியதில்லை. விஜ்ஜலன் எனது சேனைத்தலைவனைப் இக்கலியாணபுரியில் இருக்கும்வரையில் எனக்கு பயமேயில்லை" என எல்லாரும் தலைகுனிந்தனர். அரசன் இதை கவனியாது "எனக்குப் பட்டம்கட்டின இச்சமயத்தில் கூட என்னைப்பார்க்க வாராத சில பிரபுக்கள் இருக்கின்றார்களே; அவர்களை முதலில் வழிக்குத் கொண்டு வருகிறேன். அவர்களோ என்னைப் பகைத்துக் கொள்வார்கள் என்று நீங்கள் பயப்படுகிறீர்கள் போலும். அங்ஙனம் பயம் வேண்டுவதில்லை. மகா மாதத்தில் நல்ல நாள் பார்த்து நம் படைகளைச்சேகரிக்கும் பொழுது நீங்கள் உதவி புரிவீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் இப்பொழுது போய் வாலாம்" என்றான் அரசன்.

இந்த முகவுரையின் உதவியால் பின் வரும் கதை நன்கு விளங்கும். இந்தக் கதையைத் தொடங்குவோம்.

---

## இரட்டைக் கண்ணி.

180-வது பக்கத் தொடர்ச்சி.

### இரண்டாம் பாகம்.

மறுநாள் காலையில் முக்கண்ணி இரட்டைக்கண்ணியைப் பார்த்து "நான் உன்னுடன் இன்று வந்து நீ சரியான புல் அடர்ந்த இடத்தில் ஆட்டை மேய்க்கிறாயா வென்பதைப் பார்க்கப்போகிறேன்" என்று சொல்லவே, அவளும் அப்படி செய், என்றாள்.

இருவரும் ஆடுடன் புறப்பட்டார்கள், இரட்டைக்கண்ணி வழக்கம் போல தான் உட்காருமிடத்திற்கு தன் சகோதரியை யிட்டுக்கொண்டு வந்து உட்கார்ந்தாள். முக்கண்ணி வெயிலால் களைப்பு அடைந்தாள். இரட்டைக்கண்ணி இதைக்கண்டு "அம்மா, நீ வெகுவாய் களைப்படைந்திருக்கிறாய். இங்கே படுத்து, இளைப்பாறு, நான் பாடிக்கொண்டிருக்

கிறேன்" என்றாள். இவள் முன் செய்தமாதிரி பாதி தூக்கத்துடன் "சிறிய முக்கண்ணியே, கண் விழித்துக்கொண்டிருக்கிறாயா? நீ தூங்குகிறாயா?" வென்று கேட்டாள். முக்கண்ணியோ தனது இரண்டு கண்களை மாத்திரம் மூடிக்கொண்டும், மூன்றாவது கண்ணைத் திறந்துகொண்டும், தூங்கும் பாவனைபோல் பாசாங்குசெய்தாள்.

இரட்டைக் கண்ணியும் வெயிலில் வந்தமையாலும், சிரமத்தாலும் முக்கண்ணியை நன்றாகக் கவனிக்கவில்லை, அஜாக்ரதையாக யிருந்தாள்.

சிறிது நேரம் சென்றபின் இரட்டைக்கண்ணி எழுந்து உட்கார்ந்து "சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே வா" என்று சொன்னவுடன், வழக்கம்போல மேஜையும் அதில் நல்ல ஆகாராதிகளும் இருந்தன. இவள் அவைகளை எடுத்து பசியாற புசித்தாள். உடனே, "சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே போய்விடு" என்று சொன்னதும் அவைகள் கண்ணுக்குத் தென்படவில்லை. இரட்டைக் கண்ணியோ முக்கண்ணி தூங்காமல் பாசாங்கு செய்கிறாள் என்பதைச் சிறிதும் கவனிக்கவுமில்லை. அவள் அவ்விதம் செய்வாள் என்றும் நினைக்கவில்லை. ஆகையால் தான் புசித்த சங்கதி முக்கண்ணிக்குத் தெரியாதென எண்ணிக்கொண்டே அவளைத் தட்டி எழுப்பினாள்.

அவள் நித்திரையிலிருந்து எழுந்திருப்பவள்போல் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள். இருவரும் தங்கள் வீட்டுக்கு ஆட்டை ஓட்டிக்கொண்டு வழக்கம்போல் சென்றார்கள்.

அவர்கள் வீட்டிற்கு வந்தபொழுது முக்கண்ணி தன் தாயையும், சகோதரியையும் பார்த்து "இரட்டைக்கண்ணி ரொட்டிதுண்டை இப்பொழுது சாப்பிடாமலிருப்பதற்கு காரணம் எனக்குத் தெரியும். அவள் வெளியில் ஆடுடன் போனதும், 'சிறிய ஆடே அழு, சிறிய மேஜையே வா' என்று சொல்லுகிறாள். உடனே ஒரு மேஜை தோன்றுகிறது. அதன்மேல் நேர்த்தியான ஆகாராதிகளிருக்கின்றன. நமது வீட்டிலிருப்பதை விட அவைகள் அதிக நேர்த்தியா யிருக்கின்றன" என்றாள்.

இவர்களுடைய தாயார் இதைக் கேட்டவுடன் மிகவும் கோபங்கொண்டாள். 'நல்லது, அவளுக்கு இனி நாம் புசிப்பதைவிட உயர்ந்த ஆகாரம் கிடைக்காது,' என்று சொல்லி, உடனே உட்சென்று பெரிய கத்தியைக் கொண்டுவந்து நிரபராதியான சிறு ஆட்டை வெட்டி கொன்றுவிட்டாள்.

சிறிய இரட்டைக்கண்ணி தன்தாயார் அந்த பரிதாபமான ஆட்டைக் கொன்றதைக் கண்டபொழுது மிகவும் விசனமுற்று வெளியிற்போய் புல்தரையில் உட்கார்ந்து வருத்தத்துடன் கண்ணீர்விட்டழுதாள். தக்ஷணமே ஞானமுள்ள ஸ்திரீ இவள் முன்தோன்றி, "சிறிய இரட்டைக்கண்ணி



அழாதே என் கண்மணி! வீட்டுக்கு உடனே திரும்பிப்போய், அந்த ஆட்டின் ஹிருதயத்தை மாத்திரம் உனக்கு கொடுக்கும்படி கேள். அவள் கொடுத்தவுடன் உன் வீட்டுக்கு முன் கதவுக்கு எதிரில் பூமியில் அதை புதைத்துவிடு." என்று சொன்னவுடன் மறைந்து விட்டாள்.



சிறிய இரட்டைக்கண்ணி வீட்டுக்குத் திரும்பிப்போய் தன் தாயாரிடத்தில் "அம்மா! அந்த சிறிய ஆட்டினுடையபாகங்களில் ஏதாவதொன்றைஎனக்கு தயவுசெய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குஹிருதயத்தைக் கொடுத்தால் போதும். வேறொன்றையும் நான் கேட்கமாட்டேன்" என்று சொன்னாள்.

அச்சமயத்தில் இவள் தாயாரும், இரு சகோதரிகளும் இடி இடியென்று சிரித்து "உனக்கு அதுமாத்திரம் தேவையானால் அதை எடுத்துக்கொள்; அதனால் உனக்கு அதிக நன்மை யுண்டாகட்டும்!" என்று பரிகாசமாய்ச் சொன்னார்கள்.

சிறிய இரட்டைக்கண்ணி ஆட்டின் ஹிருதயத்தைமாத்திரம் பெற்று அதை தன் வீட்டின் வாசற்படிக்கு எதிரில் ஒருவரும் தான் செய்வதை அறியாதிருக்கும்படி சாயங்கால வேளையில் புதைத்து வைத்தாள்.

மறுநாள் காலையில் ஹிருதயம் புதைக்கப்பட்டிருக்கு மிடத்தில் விநோதமான விருக்ஷம் வளர்ந்திருந்தது. அதில் வெள்ளி இலைகள் தழைத்து எங்கு பார்த்தாலும் பரவியிருந்தன. தங்கமயமான ஆப்பில் பழங்களும் கிளைகளில் தொங்கிக்கொண்டிருந்தன.

இப் பெண்மணிகளின் தாயார் இவ்விநோத விருக்ஷத்தைக் கண்டு அதிசயித்து "சிறிய ஒற்றைக்கண்ணியே, இம்மரத்தில் ஏறி சில தங்க ஆப்பில் பழங்களைப் பறித்து வா" என்றாள்.

சிறிய ஒற்றைக்கண்ணி மரத்தின்மேல் ஏறினாள். முதலில் ஒரு பழத்தைப் பறிக்க முயன்றாள். அது அவள் கைக்கு எட்டவில்லை. இப்படி பல தடவை செய்தாள். அவைகள் இவள் கைக்குள் அகப்படாமல் சுழன்று வெகு தூரத்தில் சென்றன.

எவ்வளவு முயற்சி செய்தும் ஒரு பழமாவது இவளுக்கு கிடைக்கவில்லை. கடைசியில் கீழே இறங்கிவந்து புலம்பினாள். ஏனெனில் இவளுக்கு அது கிடைக்கவில்லையே என்ற மனவருத்தம் இவள் மனதில் உண்டாயிற்று.

பின்பு இவர்கள் தாயார் முக்கண்ணியைக் கூப்பிட்டு 'எனது ப்ரியமுள்ள முக்கண்ணியே! அதோ தெரிகிற ஆப்பில் பழங்களை நீ பறிக்க முடியுமா? முயற்சி செய்துபார்" என்றாள். இவளும் அவ்விதமே மரத்தின் மீது ஏறி பழம் பறிக்க ஆவலுடன் கையை நீட்டினாள். பழம் இவள் கைக்குள் சிக்காமல் தாவிச்சென்றது. இவள் தன்னாலானமட்டும் ஒரு பழமாவது கிடைக்காதாவென்று பறிக்க முயன்றாள். இவள் முயற்சிகள் வீணாகப்போவதைக் கண்டு வருத்தமுற்று கீழே இறங்கிவந்தாள்.



இவர்கள் செய்ததை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இரட்டைக் கண்ணி மெதுவான தொனியுடன் "அம்மா! நான் பழங்களைப் பறிக்கப் போகிறேன்." என்று சொல்லிக்கொண்டு மரத்தின்மேல் ஏறினாள். இவள் சகோதரிகள் தங்கள் வருத்தத்தால் அழுவதை நிறுத்திவிட்டு இவளைப் பார்த்து நகைத்தார்கள். இவள் ஒன்றையும் கவனியாமல், மரத்தின்மீது ஏறி, தனக்குத் தேவையான பழங்களை யாதொரு கஷ்டமின்றி ஏராள



மாகப் பறித்துக்கொண்டாள். பறித்த பழங்களை தன் இடுப்பில் அணிந்திருந்த முன்றானையில் வைத்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

---

சிறுவர்க்கான கதை.

## திருட்டுச் சாகஸங்கள்

### போலீஸ்காரனும் திருடனும்.

ஒரு ஊரில் அதிகமாக திருட்டு நடந்துவந்தமையால் எங்கேயும் போலீஸ்காரர்களை நிறுத்தி வைத்திருந்தார்கள். அப்படி யிருக்கையில் ஒரு திருடன் ஒரு கைவண்டியில் மூட்டையொன்றை யேற்றிக்கொண்டு ஒரு போலீஸ்காரன் இருந்த வழியாக வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் போலீஸ்காரன் தன்னுடைய வழக்கப்படி "நீ யார்? அந்த வண்டியிலிருப்பது என்ன?" என்று கேட்டான். திருடன் முதலில் கொஞ்சம் பயப்பட்டானாயினும் தைரியத்தைக் கைவிடாது "ஐயா! கான்ஸ்டேபில் வீராசாமிபிள்ளை நீர்தாமோ" என்று கூறினான். போலீஸ்காரன் "ஆம்! நான்தான். என்ன விசேஷம்" என்று சொன்னான். அதற்குத் திருடன் "ஐயா! நல்லகாலம் தங்களை இங்கேயே சந்தித்து விட்டேன். உங்களுடைய இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி ஐயர் ஒரு திருடனைப் பிடித்தார். அதற்குள் அவன் இந்த மூட்டையைப் போட்டுவிட்டு கம்பி நீட்டிவிட்டான். அந்த வழியாக வந்த என்னை இந்த மூட்டையைத் தங்களிடம் ஒப்பித்துவிடும்படி சொன்னார், எனக்கு நேரமாகிறது" என்று சொல்லிக்கொண்டே மூட்டையை யிறக்கிக்கொண்டிருந்தான். போலீஸ்காரன் "ஐயா! நான் உங்களுக்கு நாலணாத் தருகிறேன். அந்த மூட்டையை தயவுசெய்து போலீஸில் சேர்த்துவிடுங்கள்" என்று கூறி நாலணாவைக் கொடுத்து இன்ஸ்பெக்டரைத் தேடச் சென்றான். திருடன் "வந்த காசுக்கு வட்டமில்லை" யென்று நாலணாவைப் பெற்று வண்டியுடன் ஓட்டம் பிடித்தான். போலீஸ்காரன் இந்த சூதை யறிந்ததும் திருடனைப் பிடிப்பதைவிட்டு நாலணா இனாமும் கொடுக்கவேண்டியதாயிற்றே என்று மிக நாணமடைந்தான். டி. எம். மார்க்கசகாயம்.

---

## பழமொழிகள்.

1. தாயில்லா தகப்பன் தாயாதி.
2. தாயில்லாத பிள்ளை ஊருக்காகுமா?
3. தாயின் முகம் பார்க்கும் சேயின் முகம்போல.
4. தாயும் தகப்பனும் தள்ளிவிட்ட காலத்தில் வா என்று அழைத்த வங்கார வாசி.

5. தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறே.
6. தாயும் தகப்பனும் தவிர சகலமும் வாங்கலாம்.
7. தாயைக் கொன்றவனுக்கு ஊரிலே பாதிப்பேர்.
8. தாயைத் தண்ணீர் துறையில் பார்த்தால் பிள்ளையை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை.
9. தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு.
10. தாயைப் பார்க்கிலும் சிறந்த கோயிலுமில்லை
11. தாயை மறக்கடிக்கும் தயிரும் பழம் சோறும்.
12. தாயைப்போற் பிள்ளை நூலைப்போல் சீலை.
13. தாயைப் பார்த்து மகளைக் கொள்.
14. தாய் அறியாச் சூல் உண்டோ?
15. தாய் இல்லாப் பிள்ளையைத் தலையிலே தட்டலாமா?
16. தாய் உறவோ நாய் உறவோ?
17. தாய் எழடி பாய்ந்தால் மகள் எட்டு அடி பாய்வாள்.
18. தாய் ஒருபாக்கு, தான் கமுகந்தோப்பு என்கிறாள்.
19. தாய் கேட்டுப் பட்டி, தகப்பன் காவடிப் பட்டி, தங்கைமோரு பட்டி, தமக்கை சாதப்பட்டி.
20. தாய்க்குத் தவிடியான் தம்பிரானுக்கு இரும்பிடிப்பான்.
21. தாய்க் கைப் பசும்பொன்னிலும் தன் கைத் தவிடே மேலாம்.
22. தாய்க்கு உள்ளது மகளுக்கு.
23. தாய்க்குப் பின் தாரம்.
24. தாய்க்கு விளைந்தாலும் தனக்கும் விளையவேண்டும்.
25. தாய்க்குச் சோறு இருக்கிறது ஊருக்குப் புகழ்ச்சியா?

## பதார்த்தகுண சிந்தாமணி.

தேங்காய்ப்பால்:—தேங்காய்ப்பாலை உபயோகித்தால் வாதம் பித்தம் உண்டாகும், கரப்பானும் உண்டாகும், ஆனால் அன்னம் இறங்கும், அதி ருசியுண்டாகும் பலமுண்டாகும்.

ஆலம்பால்:—பிரமேகத்தை நீக்கும். ஆடும் பற்களை இறுக்கும். தலைக்கு குளிர்ச்சியை யுண்டாக்கி தேக புஷ்டியையும் தரும்.

அத்திப்பால்:—பித்தம், நீரிழிவு, முதலியவைகளை நீக்கும்.

மட்டிப்பால்:—வாசனையுடையது. இதை உபயோகித்தால் தலைவலி, சலதோஷம், வாதம், கபவாந்தி, அருசி இவை போய்விடும்.



* எருக்கம்பால்:—வாதக் கட்டிகளைக் கரைக்கும், இதைக் கட்டிகளின் மீது தடவிவந்தால் கரைத்துவிடும்.

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

குற்றவாளியைப்பார்த்து "நீதிஸ்தலத்திற்கு நீ இதற்கு முன்னால் வந்ததில்லையா" என்று நீதிபதி கேட்க,

குற்ற: (ஹெட்கான்ஸ்டபிளைக் காட்டி) "இந்த ஐயாதயவு! நான் இதுவரைக்கும் இந்த கோர்ட்டுக்கு வந்ததில்லைங்க."

* * * * * *

ஒரு வக்கீலும் அவன் குமஸ்தாவும் உலாவிக் கொண்டிருக்கையில் குமஸ்தா வக்கீலை நோக்கி "சார்! எனக்கு வக்கீல் வேலை பழக்கம் பண்ணேன்னேனே! கேசுகளில் முக்கியமாய் வேண்டியது என்ன?" வக்கீல் "கூலி வேணும்". குமஸ்தா "என்னவேணும்?"

வக்கீல்: "நமக்கு டிபன் இன்னிக்கு உன் செலவு!"

குமா: "சரி: சொல்லுங்கள்!"

வக்கீல்: "நல்ல சாக்ஷிகள் இருந்தாற்போதும்.

பிறகு வக்கீலும் குமாஸ்தாவும் காபிஹோட்டலுக்குச் சென்று வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வக்கீல் குமாஸ்தாவைப்பார்த்து "ஹூ! பணம் கொடுத்துடு அப்பா!". குமாஸ்தா "ஏதய்ய! சாக்ஷி எங்கே?" என்றான்.

* * * * * *

தகப்பனார்: "நீ வாசிக்கிற பள்ளிக்கூடத்திலே செலவு ரொம்ப ஆனதுடா!

பையன்: என்ன அப்பா!

தகப்: எவ்வளவு முடியுமோ அதுக்கு மேலே ரொம்ப செலவு ஆயிடறது.

பையன்: ஆனால் நான் என்னால் எவ்வளவு முடியுமோ அதுக்கு மேலே கொஞ்சங் கூட கற்றுக்கொள்வதில்லையே! அதுக்கிதுக்குஞ் சரியாப் போயிடும்.

* * * * * *

வேட்டைக்காரன்: ஐயா! இன்று ஒன்றும் அகப்படல்லை. இதோ மேயறவாத்துகளில் கொஞ்சம் பிடித்துக் கொள்றேன்: இரண்டு வெடி போரும்.

---

* வெள்ளெருக்கம் பால் ஐவகை வலிக்கும், சந்நிபாதம், எலிவிஷம் இவைகளுக்கு உதவும் * உட்கொள்ளக்கூடாது.

குடியா: ஐயையோ!

வேட்டை: இல்லை ஐயா! இந்தாரும் ஒரு ரூபாய்!

குடியா: சரி: பிடிச்சுக்கும்.

வேட்டைக்காரன் வார்த்தைகளின் நடுவே இரண்டு வெடிதீர்த்து, கீழே அடிபட்டு விழுந்தவைகளைப்பொறுக்க, அவை இருபதுக்குமேலேயிருக்கக்கண்டு சந்தோஷித்து, குடியானவனிடம் "இன்றைக்கு அதிர்ஷ்டம் ஐயா! நிரம்ப வந்தனம் ஐயா உமக்கு" என்று சொன்னான். உடனே குடியானவன்: "எனக்கில்லை ஐயா! வந்தனம், ஆனால் அந்த வார்த்தைகளின் சொந்தக்காரனுக் கன்றோ? உமக்கு வந்தனம் ஐயா! எனக்கு ஒரு ரூபாய் வரும்படி கிடைத்தது.

வி. என். ராஜ்.

---

## சமாசாரக் குறிப்புகள்
## NEWS & NOTES.

பாச்செலெட் என்னும் ப்ரெஞ்சு வித்வான் ஒருவர் மின்ஸாரத்தின் உதவியால் பூமியில் எவ்விதமான ஆதாரமுமில்லாமல் அந்தரத்தில் ஓடக்கூடிய வண்டித்தொடர் ஒன்று கண்டு பிடித்திருக்கிறாராம். அந்த வண்டித்தொடர் அலுமினியம் என்னும் உலோகத்தால் செய்யப்பட வேண்டுமாம். மணி ஒன்றுக்கு முன்னூறு மைல் வீதம் ஓடுமாம். இந்த வண்டித் தொடர் செய்யவும் ஓட்டவும் ஏற்படக்கூடிய செலவுகள் ஸாதாரணமாய் மற்ற ரயில்வேகளுக்கு ஏற்படும் செலவுகளைவிட மூன்றில் ஒருபங்கு குறைவாகவே இருக்கும் என்று தெரியவருகிறது.

லேடி ஹார்டிஞ்ச் ஞாபகச் சின்னமும் ஸிம்லா வாசிகளும்.—ஸிம்லா வாசிகள் பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் ஸர் M. ஓ'ட்வியரின் அக்கிராசனத்தின் கீழ் மீட்டிங்க் கூடி லேடி ஹார்டிஞ்சின் ஞாபகச் சின்னத்துக்கு உதவப்படும் தொகைகள் டெல்லியில் கட்டப்பட்டு வரும் ஸ்திரீ வைத்திய காலேஜ், ஆஸ்பத்திரி, இக் கட்டடங்களைக் கட்டி முடிப்பதற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்த மீட்டிங்கில் 15.30,500 ரூபாய்க்குக் கையொப்பங்கள் செய்யப்பட்டிருப்பதாய்த் தெரிவிக்கப்பட்டது. பாடியாலா சமஸ்தானம் $1\frac{1}{4}$ லட்சமும், ஹைதராபாத் சமஸ்தானம் 1 லட்சமும், குவாலியர் 2 லட்சமும், இந்தூர். 50,000 ரூபாயும், கோடா 1 லட்சமும், தர்பங்கா 1 லட்சமும், போபால் 30 000 ரூபாயும், பரோடா 1 லட்சமும், உதயபுரம் 1 லட்சமும், உறத்வா 1 லட்சமும், ஜோட்பூர் (யோதப்பூர்) 1 லட்சமும், வாடியா டிரஸ்ட் 25000 ரூபாயும், ஜெய்ப்பூர் (ராஜதனம்) 3 லட்சமும் கையொப்பஞ் செய்திருக்கின்றன. இவைகளைத் தவிர 1,00,500 ரூபாய்க்கு வேறு கையொப்பங்




## முக்கிய விளம்பரம்.




எங்களால் தயார்செய்யப்படுகிற சதானந்த "சர்வரோக நிவாரணி" 100 கணக்கான வியாதிகளை குணப்படுத்துகிறது. இதற்கு பத்தியமே இல்லை. இதை இன்ன நேரத்தில்தான் உட்கொள்ளவேண்டுமென்ற நியதி இல்லை. வெளிப்பிரயோகம் உட்பிரயோகம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது, தவறிச் சாப்பிடுவதினால் எவ்விதத் தீங்கும் செய்வதில்லை. பாலர் விருத்தர் யாவரும் சந்தேகமில்லாமல் சாப்பிடலாம். இம்மருந்தை கன்று காலிகளுக்குங்கூட உபயோகப்படுத்தலாம். இம்மருந்தானது சர்க்கியூட் ஆபீசர்களுக்கும் மிகவும் சௌகரியமாயிருக்கும். இம்மருந்தைப் பல இங்கிலீஷ் வைத்தியர்களும், ஐரோப்பியர்களும், இந்து கனவான்களும் விசேஷமாகப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். மருந்துக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு முழு விவரமடங்கிய கியாட்லாக் புஸ்தகமொன்று அனுப்பிக்கொடுக்கப்படும். மருந்தின் விலை ரூ. 1-8-0.

வி. லக்ஷ்மிநரசு அண்டு பிரதர்,

சதானந்த வைத்தியசாலை, கோயமுத்தூர்.

---

வெயில் காலத்திற்கு அவசியமான பண்டிட் S. S. ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்.

பாரம்பரமாய் அனுபவ சித்தியுடையது, அதிக பணச்செலவு செய்தும் மிகுந்த பிரயாசைப்பட்டும், சாஸ்திரரீதியாய் பாகந்தவராமலும், தயாரிக்கப்பட்டது.

பிரதிதினம் காலையில் உச்சியில் பதனிட்டுவருவதாலும், வாரமிருமுறை சூரியஉதயத்தில் ஸ்நானம்செய்வதாலும், அதிகஉஷ்ணத்தால் உண்டாகும் தலைநோய், மயக்கம், மாதி முதலிய மூளையைப்பற்றின நோய்கள், தொற்று வியாதிகள், ஸ்திரீ புருஷர்களுக்கு முகத்திலுண்டாகும் பருக்கள், தேமல், சொறிசிறங்கு, மேகப்படை, கைகால் எரிச்சல் முதலிய தோலைப்பற்றின நோய்கள், நரம்பைப்பற்றின பட்சவாதம் முதலியநோய்கள் கண்கலக்கம், கண்சிவத்தல், கண்ணில் நீர்வடிதல், கண்ணெரிச்சல், பீளைசார்தல்முதலிய கண்ணோய்கள், செவிநோய்கள் முதலியவைநீங்கும்.

ரோமம் உதிர்வதையும் அகாலத்தில் நரைப்பதையும் தடுத்து கருமையும் பளபளப்பையும் தருவதில் பேர்பெற்றது.

மனோகரமான மணமும் குணமுமுடைய எங்கள் மஹாசந்தனாதித் தைலம் எங்கும் பிரசித்திப்பெற்று வருகிறது.

12-அவுன்ஸ் பாட்டில் ரூ. 2. 6-அவுன்ஸ் பாட்டில் ரூ. 1-2.

நமது ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள மற்ற மருந்துகளின் விவரங்களும், தக்க மனிதர்களிற் அபிப்பிராயங்களும் அடங்கிய புஸ்தகம் வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்புகிறோம்.

பண்டிட் S. S. ஆனந்தர், வைத்தியசாலை,

நெ. 31 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு, சென்னை, இ.

களும் செய்யப்பட்டிருக்கின்றன. ஜம்முவும் காஷ்மீரும் வருஷந் தோறும் ரூபா 3500 கொடுத்து வருவதாய்ச் சொல்லியிருக்கிறது.

இந்திய ஸ்திரீகளின் ராஜ விசுவாசச் சங்கம்.—“ இந்திய ஸ்திரீகளின் ராஜவிசுவாசச் சங்கம் என்று பெயர்கொண்ட சங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று யோசனைசெய்த விஜயநகரம் ராணியார் பூல்பாக்கில் ஒரு மீட்டிங்கைக் கூட்டிவைத்தார். அடியிற்கண்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அவைகள் அனைவராலும் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன. விஜயநகரம் ராணியார் அக்கிராசனம் வகித்தார்.

“ இந்த மீட்டிங்கில் கூடிய விஜயநகரம் ஸமஸ்தானத்து ஸ்திரீகள் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு சம்பூர்ண ஜயமுண்டாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை செய்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு தங்களால் கூடிய உதவியைச் செய்ய சித்தமாயிருக்கிறார்கள். இந்திய ஸ்திரீகளின் ராஜவிசுவாசச் சங்கமென்று பெயர்கொண்ட ஒரு சங்கம் விஜய நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு இந்தியாவின் மற்ற பாகங்களிலும் ஸ்திரீகள் இவ்வித சங்கம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும். தேசத்தின் பலபாகத்துப் பிரதிநிதிகள் அடங்கிய ஜெனரல் கமிட்டியொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்திய ஸ்திரீகளிடமிருந்து வசூலிக்கும் பணம் ஜெனரல் கமிட்டியாரின் யோசனைப்படி செலவழிக்கப் படவேண்டும்.” ஸப் கமிட்டியொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு விஜயநகரம் ராணியார் பிரஸிடெண்ட். மிஸ்ஸஸ் நெய்லெரும், மிஸ்ஸஸ் G. ராமசந்திர ராவும் செக்ரிடெரிகள். மிஸ்ஸஸ் ராமானுஜாச்சாரியரும் மிஸ்டெய்லரும் ட்ரெஷரர்கள்.”

மைசூர் தஸரா பொருட்காட்சி.—மைசூர் தஸரா, தொழில், விவசாயப் பொருட்காட்சி இந்த வருஷம் செப்டம்பர் மாதம் 21-ந்தேதி முதல் அக்டோபர் மாதம் 5-ந்தேதி வரை திறந்து வைக்கப்படும். கால்நடைகள் கோழிகள் இவைகளின் காட்சியும், போட்டிபோட்டு நெசவுத்தறி நெய்யும் காட்சியும் அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் 3-ந்தேதி வரையிலும் திறந்து வைக்கப்படும். மரச்சித்திரத்தொழில் உலோக வேலை ஆகிய இவ்வேலைகளில் வேலைக்காரர்கள் போட்டி போட்டுக்கொண்டு வேலை நடத்துவார்கள். அது செப்டெம்பர் மாதம் 21-ந்தேதி முதல் அக்டோபர் மாதம் முதல் தேதிவரையிலும் நடக்கும். குலால் தொழிலிலும் உழவுத் தொழிலிலும், போட்டி வேலைகள் அக்டோபர் மாதம் 2,3 இவ்விரண்டு தேதிகளிலும் நடக்கும்.

தேள்களுக்குப் பகை கோழிக்குஞ்சுகள்.—தன்னுடைய வேலைக்கூடத்திலுள்ள தேள்களை எப்படிப் போக்கடிக்கக் கூடுமென்






# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் ஸப்ளை உபயோகிப்பதை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் ஸப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு

## விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றப் அருத்தமாகும்.

மில்க்மெயிட்குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது. மில்க்மெயிட்குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி லாபமடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினால்எங்களுக்கு இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம். பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லேஸ் அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்.
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்

பிரஞ்சு பத்திரிகைக்கு எழுத அநேகம் பதில்கள் வந்து குவிந்தன. எல்லா பதில்களிலும் கோழிக்குஞ்சுகள் என்று கண்டிருந்தன. தானியக் களஞ்சியங்கள் இருக்கும் இடங்களிலுள்ள கோழிக்குஞ்சுகளை தேள்கள் கடிப்பதேயில்லையாம். கோழிகள் தேள்களின்மேல் இருக்கும் சதையை ஒரு கொத்து கொத்தித் தின்கிறதாம். தவிர பூனைகளும் தேள்களைக் கொல்லுகின்றனவாம். இவைகள் எலிகளை எவ்வளவு துரிதமாய் கொல்லுகின்றனவோ அவ்வளவு துரிதமாய் தேள்களை உள்ளங்கையினால் அடித்துக் கொல்லுகின்றனவாம்.

பூலோகத்தில் பேசப்படுகிற பாஷைகள்.—இந்த பூலோகத்தில் மொத்தம் பேசப்படுகிற பாஷைகளின் சங்கியை 3500. இவைகளில் பெரும்பான்மையாய் பேசப்படுவன ஏழே ஆகுமாம். இங்கிலீஷ் பாஷையை 16 கோடி ஜனங்களும், ஜெர்மன் பாஷையை 13 கோடி ஜனங்களும், ருஷியா பாஷையை 10 கோடி ஜனங்களும் பேசுகிறார்கள். ப்ரெஞ்சு பாஷை 7 கோடி ஜனங்களாலும், இத்தாலி, ஸ்பானிஷ் பாஷைகள் 5 கோடி ஜனங்களாலும், போர்த்துகீஸ் பாஷை சுமார் 3 கோடி ஜனங்களாலும் பேசப்படுகின்றன. ஆகையினால் பூலோக முழுமைக்கும் ஒரே பாஷையாய் ஏற்படக்கூடியது இங்கிலீஷ் பாஷைதான் என்று டாக்டர் விசிடெல்லி சொல்லுகிறார்.

ஒரு பாட்டு தொனி 125 மைல் தூரத்தில் கேட்கப்பட்டதாம்.—ஒரு இத்தாலியா தேசத்து எஞ்சினீரால் கண்டுபிடிக்கப்பட்ட மைக்ராபோன் என்ற இயந்திரத்தினால் பெல்ஜியம்தேசத்தின் தலைநகராகிய ப்ரஸல்ஸ் என்ற இடத்தில் பாடின தொனியானது பாரிஸ்நகரத்தில் கேட்டதாம். தொனிமட்டும் கேட்டதே தவிர வார்த்தைகள் ஸ்பஷ்டமாகக் கேட்கவில்லையாம். இந்த இரண்டு இடங்களுக்குமுள்ள தூரமோ 125 மைல்கள். நாளாகவாக அதிசயங்களும் வித்தைகளும் ஜாஸ்தியாகின்றன.

திவான்பகதூர் P. ராஜகோபலாச்சாரி.—திவான் பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார் கவர்ன்மெண்ட் ஜுடிஷியல் செக்ரிடேரி பதவியை ஒப்புக்கொண்டுவிட்டார்.

கவுண்டஸ் ஆப் டப்பரின் நிதி சென்னைப்பிரிவு.—கவுண்டஸ் ஆப் டப்பரின் நிதியின் சென்னைப்பிரிவுக்கு பம்பாய் வாடியா தருமங்களின் டிரஸ்டிகள் பொருளுதவி செய்ய வேண்டுமென்று லேடி பெண்ட்லண்ட் கேட்டுக்கொண்டிருந்ததற்கு அந்த டிரஸ்டிகள் வருஷந்தோறும் 3000-ரூபாய் அந்த நிதிக்குக் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தொகை ஓர் இந்திய ஸ்திரீ கிரேட் பிரிட்டன் சென்று வைத்தியத் தொழில் கற்றுவர ஒரு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு உபயோ...




# சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.

—(o)—



Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்வித முள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவது கஷ்டம்.

**SCOTT'S Emulsion**

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத் தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும் சதைகளைப் புஷ்டியுள்ளவைகளாகவும்செய்து வியாதி கிட்டஅண்டாமல் உனக்குச் சக்தியைக்கொடுக்கிறது.

மருந்து உட்கொண்டபின் இதன் அனுபவம் தெரியும்.

கையினால் தொடாமலே செய்யப்படுகிறது.

ல்லா ஔஷத சாலையிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஸ்காட் அண்டு பௌன்' கம்பெனி லிமிடெட்.

யார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து.

சிசு மரணங் குறைந்த ஊர்.—"நியூசிலண்ட்" தேசத்திலுள்ள "டன்டி" என்னுமூரில் 60;00 பேர் வசிக்கின்றனர். அங்கு 6-வருஷங்களுக்குமுன் 100-க்கு 8-வீதம் சிசுக்கள் மரணமடைந்து வந்தன. இப்பொழுது 100-க்கு 4 வீதம் மரணமடைகின்றன. இதற்குக் காரணம் சிசுக்களை வளர்க்கத் தாயார்களைப் பழக்கும் பாடசாலைகள் பல அங்கு ஏற்பட்டிருக்கின்றமையேயாம்.

உடைகட்காகப் பெருந்தொகைப்பணஞ்செலவழிபோர்.—அமெரிக்காவிலே சிக்காக்கோநகரத்தில் வசிக்கும் அநேகபெண்கள் தங்கள் உடுப்புகளுக்கு மாத்திரம் வருஷத்தில் 15000-பவுன்செலவழிக்கின்றனராம்.

மிகப் பெரிய புத்தகம்.—சைனுவிலுள்ள வைத்திய சங்கத்தார் தற்போது ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கின்றார்களாம். அது 7-அடி நீளமும், 300000-அடி அகலமுமுடையதாயிருப்பதுடன் 1203 இறுத்தல் நிறையுள்ளதாயு மிருக்கின்றதென்று சொல்லப்படுகின்றது.

நீருண்ணுத மிருகங்கள்.—"ஹாவாயியன்" தீவெனு ஒரு தீவு இருக்கின்றது. அதில் வசிக்கும் ஆடு மாடு குதிரை முதலியன எப்போதும் தண்ணீர் குடிப்பதில்லையாம். அங்கு மலைச்சார்புகளிலுள்ள ஒருவகைப் புல்லே அவற்றிற்கு ஆகாரமாம். அப்புல் அவற்றிற்கு நீரும் ஆகாரமுமாக உபயோகப்படுகின்றதாம்.

ஒரு அதிசய முட்டை.—ஈஜிப்ட்தேசத்தில் ஒரு குழந்தையின் கல்லறையிலிருந்து 1800-வருஷங்களுக்கு முன்னால் புதைக்கப்பட்டிருந்த ஒரு முட்டை கொஞ்ச நாளைக்குமுன் தோண்டி யெடுக்கப் பட்டதாம்.

இந்திய ஸ்திரீகளும் யுத்தமும்.—பம்பாயில் ஸ்திரீகள் கூட்டமாய்க்கூடி யுத்தம் செய்யும் வீரர்களுக்கு எவ்விதம் சகாயம் செய்யலாமென்று யோசனை செய்ததும் காலவேற்றுமையைக்குறிக்கும் சம்பவம். லேடிவில்லிங்டனுடைய யோசனையின் பேரில் பம்பாய் ஸ்திரீகள் யுத்தவீரர்களுக்கு உடுப்புகள் தயார் செய்தும் வேறு சுகத்துக்குற்ற சாமான்கள் சேர்த்தும் அனுப்புவதாகத் தீர்மானித் திருக்கிறார்கள். இதற்காகச் சுமார் 28800-ரூபாய் சேர்ந்து விட்டது. இவ்வாறே ஜப்பானியர் ருஷியருடன் சண்டை செய்தகாலத்தில் ஜப்பானிய ஸ்திரீ+ள் தங்கள் யுத்தவீரர்களுக்கு உபயோகமான பல சாமான்களைத தயார் செய்து அனுப்பினார்கள். ஐரோப்பிய ஸ்திரீகள் இத்தகைய சமயங்களில் தாதிகளாக அமர்ந்து செல்வார்கள். சில வருஷங்களுக்கு முன்னால் இறந்துபோன மிஸ் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற ஸ்திரீ சில ஸ்திரீகளை தாதிகளாகச் சேர்த்து ரணகளத்தில் காயம்பட்ட ஸோல்ஜர்களுக்கு சிகிச்சை காலத்தில் உதவி செய்து பெருங்கியாதியைப் பெற்றார். அப்படி தாதிகளாய்ப் போய்க்




# புஷ்ப-காந்த கூந்தல் தைலம்.

பெண்களின் அன்பு நிறைந்தது

இக்கூந்தல் தைலமானது வாசனையில் சிறந்ததும், தலைமயிர்களின் வேருக்கு கெட்டியைக்கொடுத்து யாதொரு தடையுமின்றி தலை மயிர்களை வளரச்செய்வதும், நிரைத்திருக்கும் மயிர்களை வெகு சொல்ப உபயோகத்தினால் கறுத்த முன் நிலைமைக்கு கொண்டு வரக்கூடியதும், மூளைக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ஆனந்தத்தை கொடுக்கக்கூடியது மாகிய இத்தைலத்தை அநேகர்களால் உபயோகித்து நற்சாக்ஷி பத்திரங்களடைந்திருக்கின்றது. ஒரு தடவை உபயோகித்தால் தெரியவரும். சாம்பில் வேண்டுவோர் நமது ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையாகிய பெட்டியில் முகம் பார்க்கும் கண்ணாடியும், சீமை தந்த சீப்பும் சேர்த்து பாக்செய்திருக்கின்றது. விலை ரூபாய் 1. தபால் சில்வு அணு 4 பிரத்தியேகம்.

நமது சென்னை ஏஜண்டு:—

ராமானுஜ தாஸ், நாரன் தாஸ், அண்டு கோ.,
149, சைனுபஜார் ரோட்டு, சென்னை.

Sole Manufacturer. V. K. RANADE, Perfumer & Chemist Bombay, No 4.

## Approved Tamil Books.

BY

C. S. RAMASWAMY AIYAR,

*Editor Tamil Zenana Magazine, Triplicane.*

**Heroins of IND** with Illustrations Vide gazett P 361 D/ 26th May 1914.

**Indian Fairy Tales in Tamil.**

with 29 illustrations approved by the Text Book Committee for the Secondary & Elementary School as a Text Book As. 4

**The Life of H. M. the King Emperor George V.**

In Tamil approved by the Text Book Committee for Library and Training Schools, Calico Bound 0 12 0

Wrapper. 0 8 0.

Vide Gazette Pages 563, 581 and 589, 21st, October 1913.

*For Copies apply to:*—The Manager, Tamil Zenana Magazine Office.
12, Thanikachalla Pillai Street,
MADRAS, S. E.

and also to:—

**HIGGINBOTHAMS LD.,**

**HEAD OFFICE: Mount Road, Madras. BRANCH: South Parade, Bangalore**

**Bookstalls at**;—Madras Central. Egmore, Arkonam, Bangalore City, Ootacamund, Erode. Podanur, Mettapolliam, Calicut, Trichinopoly, Madura, Tuticorin, Tanjore Rameswaram, and Jalarpet Railway Stations.

கீர்த்தி பெற நமது ஸ்திரீகளுக்கு சாமார்த்தியமாவது வித்தையாவது இல்லை. ஆயினும் ஐரோப்பிய ஸ்திரீகளைப் போல வெளிச்செல்லாமல், இருந்தவிடத்திலிருந்து தூரதேசத்தில் சண்டை செய்யும் வீரர்களுக்கு சகாயப் பொருள்கள் அனுப்புவது ஒரு நவீனசம்பவம். இப்படி இந்தியர்கள் ஸ்திரீகளும் புருஷர்களும் வாலிபர்களும் இந்தச் சமயத்தில் பிரிட்டிஷாருக்கும் தங்களுக்கு சக்தியப் பட்ட வழிகளிலெல்லாம் உதவி செய்ய முன் வருவதைப்பார்த்து, உலகத்தாருக்கு பிரமை யுண்டாவதைத் தவிர பிரிட்டிஷாருக்கு இந்தியரிடத்தில் அபிமானமும்நேசபாவமும் முதிருவும் பெருங் காரணமாகும் என சுதேசமித்திரன் எழுதுகிறது உண்மையே!

சித்திரப் படங்கள் உள்ள புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து ஸ்திரீ ரத்னங்கள் ... | ... | ... 0 | 8 | 0 |
| இந்திய மாயா விநோதக் கதைகள் | ... | ... 0 | 4 | 0 |
| 5-வது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தி | ... | ... 0 | 8 | 0 |

விலாஸம்:—

மாதர் மனோரஞ்சினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

**The Complete Letter Writer.**

*(4th Edition Revised and Enlarged.)* by

HARI CHARAN DAS.

Price Re. 1. *(full cloth gilt 320 pages).*

An universal Guide to the Art of letter Writing for all positions of life.

It contains 24 Chapters —Private Correspondence, News Papers, Doctors, School Correspondence Government and Commercial, Collectors Office, Attorneys Vakils and Muktears, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms address Paper Currency, Abbreviations and Daily wages.

**Matriculation Essay**—by Hari Charan Das. Very useful book for school Boys. Price As. 8.

**ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.**

A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only.

**Child's Easy Conversation**, 2nd. ED. Price As. 10 only.

If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two or three months.

M. L. DAS & CO. BOOK SELLERS & PUBLISHERS.

122, *Baitakhana Road,* CALCUTTA.

OFFICE OF THE REGISTRAR OF ... 28 OCT 1914 MADRAS.

# The Tamil Zenana & School Magazine.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol XVI] | Madras September, 1914. | No. 9 |
| புத்தகம் 16 | சென்னை: செப்டம்பர் மூ 1914ஞ. | இலக்கம். 9 |

## மாண்டிசூரி என்ற மாதின் போதனமுறை.

இத்தாலி தேசத்து டாக்டர் மேரி மாண்டிசூரி என்னு மாது ப்ரதம கல்வி போதிக்கும் முறையை சில வருஷங்களுக்கு முன் கண்டுபிடித்திருக்கிறார். இவ்விதம் இம்மாது கண்டுபிடித்த முறை பலரால் அநுசரிக்கப்பட்டு வந்ததில் அபிவிருத்தி அதிகமுண்டானதாக இம்முறையை உபயோகித்தவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வுலகத்தில் இதரதேசங்களிலுள்ளவர்கள் இந்த முறையால் லாபமடையும்பொழுது இந்தியாவிலுள்ள குழந்தைகளுக்கும் ஏன் இந்த முறையின் வழியாகப் போதிக்க முயன்றுலாபமடையக்கூடாது? இதரதேசங்களில் தாய்மார்கள் இந்தியாவிலுள்ள தாய்மார்களைவிட கல்வி அறிவு உள்ளவர்கள். இந்தியாவிலுள்ள தாய்மார்களில் அநேகர் தங்கள்குழந்தைகளுக்கு போதிக்க சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் இந்த முறையைக் கையாளுவது மிகவும் நல்லதென்று நம்புகிறோம்.

டாக்டர் மாண்டிசூரி இம்மாது இத்தாலி தேசத்தைச் சேர்ந்தவர். ரோமாபுரியிலுள்ள யுனிவர்ஸிடியில் படித்து எம். டி (வைத்யபரிக்ஷை) பட்டம்பெற்ற முதல் ஸ்திரீ இம்மாதே.

பலஹீனமான மனதையும், புத்திக்குறைவையும், மூடத்தன்மையுமுள்ள குழந்தைகள் கெட்டுப்போகாமல் அவர்களது புத்தியை விருத்திசெய்வதில் இம்மாது மிகவும் ஊக்கம்கொண்டவர். அவர்களுக்கு தம்முறையால்போதித்து, அவர்களை நல்வழியில் திருப்பி விருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே இம்மாதின் முக்கிய எண்ணம். இம்மாது யுனைடேட் ஸ்டேட்டில் சுமார் 50 வருஷகாலமாய் பிரான்ஸ் தேசத்து வைத்தியராகிய எடோர்ட் ஸேகுயின் என்ற பரோபகாரி மூடத்தன்மையுள்ளவர்களைப் பழக்கி அவர்களுடைய மூடத்தன்மையை நீக்கி, அறிவை ஊட்டி, நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்திருக்கும் விஷயங்களைப் படித்தாள். அவர்

எழுதிய புஸ்தகங்களில் ஒன்றை விடாமல் படித்து அவர் கருத்தைச் சிறிதும் விட்டுவிடாமல் இத்தாலி பாஷையில் மொழிபெயர்த்து தாமே எழுதினார்கள். இவ்விதம் அவர் எழுதிய கோட்பாடுகளைச் செவ்வனே தெரிந்துகொண்டு அவைகளைப் பயிற்சிக்கும் கொண்டுவர முயன்றார்கள். இதற்காக பாரிஸ் நகருக்குச் சென்று பாலபோதன முறையை நன்றாய் பயிற்சி செய்து வந்தார்கள். இதன் முக்யத்தையும், அவஸ்யத்தையும் தெரிந்துகொண்டு தமது ஜென்மதேசத்துக்குத் திரும்பிச் சென்று ட்யூரின், ரோம்முதலிய விடங்களில் பலஹீனமுள்ள மனதையுடையகுழந்தைகளுக்குப் போதிக்கத் தகுந்த இம்முறையைப்பற்றி உபந்நியாசங்கள் செய்து வந்தார்கள். இவ்வித உபந்நியாசங்களைக் கேட்ட அத்தேசத்துக் கவர்ண்மென்டார் புத்திக்குறைவுள்ள குழந்தைகளுக்காக ஒருபாடசாலையை ஸ்தாபித்து அதற்கு இம்மாதை தலைவியாக நியமித்தார்கள். இம்மாது அப்பாடசாலையை இரண்டு வருஷகாலம் வெகு நன்றாக நடத்திவந்தபின் சில குறைகளைக்கண்டு அவைகளை நீக்க, மறுபடியும் ரோமாபுரியிலுள்ள யுனிவர்ஸிடியில் சேர்ந்து ஆத்ம தத்துவநூலையும் (Psychology) மனிதனுக்குரிய தேகபலம் மனோபலம் முதலியவைகளையும், இவைகள் மனிதனுக்கு முன் எவ்விதமிருந்தன, இப்பொழுது எவ்விதமிருக்கின்றன என்பதையும், (இவைகள் உபாத்தியாயர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்) ஏழு வருஷகாலம் வரையில் படித்து தெரிந்துகொண்டாள்.

## இம்மாதின் பாடசாலைகள்.

இவ்வளவு சிரமப்பட்டு தாம் தெரிந்துகொண்ட விஷயங்களை அநுபவத்திற்குக் கொண்டுவர 1906-ம் வருஷம் சமயம் நேர்ந்தது. ரோமாபுரியில் ஜனசமூகத்தை விருத்திக்குக் கொண்டுவரும் சங்கத்தார் நான்கு பாடசாலைகளை ஸ்தாபித்தார்கள். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு தலைவி உபாத்தியாயர், ஒரு வைத்தியன், பிள்ளைகளைக் கவனித்து வருவோன், என்ற மூவரை நியமித்தார்கள். மூன்றுவயதிலிருந்து ஏழுவயதுள்ளகுழந்தைகளை மாத்திரம் சேர்த்துக்கொண்டார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பாடசாலைக்கு க்ரமமாயும் தவறாமலும் தேகசுத்தமாயும், சுத்தமான உடைகளைத் தரித்துக்கொண்டும் போய்வரவும் அறிவிக்கப் பட்டார்கள். மேலும் பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கவும் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டார்கள். இவைகளில்எதிலாவது ஒரு குழந்தை தவறினால் அக்குழந்தையைப் பாடசாலையிலிருந்து நீக்கியும் வந்தார்கள். ஆனால் முதலில் மாண்டிசூரிக்கு தாம் கண்டுபிடித்த முறைப்படி போதிக்கத் தகுந்த உபாத்தியாயர்களை தெரிந்தெடுப்பது மிகவும் கஷ்டமாயிருந்ததாம். இது உண்மையே. இப்பொழுதும சரியான முறைப்படி பிள்ளைகளுக்குப் போதிக்கத்தக்க உபாத்தியாயர்களைத் தெரிந்



தெடுப்பது கஷ்டமாயிருக்கிறது யாவருக்கும் தெரியுமே. இவ்வித கஷ்டங்களிருந்தும், இம்முறைப்படி நடத்தப்படும் அநேக பாடசாலைகள் யூரோப் கண்டத்திலிருக்கின்றன. இத்தாலி, சுவிட்ஸர்லெண்ட் முதலிய விடங்களில் இம்மாதால் நடத்தப்பட்டு வரும் எழுபது பாடசாலைகளிருக்கின்றன. இவைகளிலுள்ள பிள்ளைகள் முன்னைவிட அதிக விருத்தி அடைந்து வருகிறார்களென்பதைக் கேட்க மிகமகிழ்ச்சியடைகிறோம்.

## இம்முறையின் முக்யநோக்கம்.

நாம் மேலே சொன்ன பாடசாலைகள் மற்ற பாடசாலைகளை விட எந்த விஷயத்தில் வேறுபட்டிருக்கின்றன? இப்பாடசாலைகள் எந்த எண்ணத்தைக்கொண்டும், முறையைக்கொண்டும் நடத்தப்பட்டு வருகின்றன? முதலில் குழந்தைகளுக்கு பேசவும், சுலபமாய் நடக்கவும் சக்தி உண்டானவுடனே அதாவது மூன்று வயதானவுடனே இப்பாடசாலைக்கு அவர்களை அனுப்பி வருகிறார்கள். இந்த வயதில் குழந்தைகள் தங்கள் தங்கள் தாய்மார்களுடைய பார்வையிலிருக்க வேண்டும். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நற்போதனைகளைப் போதித்து வரவேண்டும். பள்ளிக்கூடங்களுக்கு அவர்களை அனுப்பக்கூடாது. ஆனால் இந்தியாவைப்போன்ற தேசத்திலோ தாய்மார்கள் சாதாரணமாய் கல்வியறிவில்லாமலிருப்பதால், தங்கள் குழந்தைகளுக்கு நற்போதனைகளைச் செய்ய முடிகிறதில்லை. ஆகையால் அவர்களை தங்கள் தாய்மார்களிடமிருந்து வேறு படுத்துவது மிகவும் நல்லதே. இதே வயதுள்ள குழந்தைகள் இந்த முறையில் பழகி தேர்ச்சியடைந்த உபாத்தியாயரிருக்கும் பாடசாலைக்கு அனுப்பப்பட்டால், அவர் அக்குழந்தையை தன்னிஷ்டப்படி நடக்கும்படி விட்டுவிடுவார்.

சுபாவமாகவே குழந்தைகளுக்கு இதைச் செய்யவேண்டும்? அதென்ன? அதிலென்ன? அதேன் அப்படியிருக்கிறது? முதலிய கேள்விகளைக் கேட்க முயலுவார்கள். அவர்களுக்கு அச்சமயத்தில் உற்சாகமும், சுறுசுறுப்பும் அதிகரிக்கும், பற்பல காரியங்களைச் செய்வதிலும் தங்கள் சுறுசுறுப்பை காண்பிப்பார்கள். இவைகளையெல்லாம் செய்ய அவர்களுக்கு முழுசுதந்தரம் கொடுக்கவேண்டும். சாதாரண பொதுப்பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு சுயேச்சையாகவரும்எல்லா ஆவிர்ப்பவங்களைத் தடுக்கவும் அடக்கவும் உபாத்தியாயர்கள் முயலுவார்கள்; அவர்களை ஒரு குறித்த இடத்திலிருக்கும்படி செய்வார்கள். அந்த இடத்தில் தங்கள் கைகால்களை அசக்காமலும், பேசாமலுமிருக்கவேண்டுமென்று உறுதியாகச் சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் ஸ்கூல் என்ற பதம் க்ரீக் பாஷையிலிருந்து வந்த பதம். இதற்கு அப்பாஷையில் கற்றறிந்த வித்வான்கள் வாலிபர்களை விநோதமான விஷயங்களைக் கொண்டு சந்தோஷப்படுத்தும்

இடமெனப் பொருள். மனிதனுக்கு அது அவ்விதமிருந்தால் சிறு குழந்தைகளுக்கு அதைவிட இன்னும் அதிக வேடிக்கைகள் காண்பிக்க மிடமாயல்லவோ யிருக்கவேண்டும்? ஆனால் நமது பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ள பாடசாலைகள் அவ்விதமிருக்கின்றனவா? அவைகள் அவர்களுக்கு ஒரு சிறைச்சாலையைப் போலிருக்கின்றனவே. உபாத்தியாயர் கையில் பிரம்புடன் பிள்ளைகளை அதட்டி மேற்கூறிய சுபாவ எண்ணங்களைத் தடுத்து அவர்களை அடக்கி தமக்குத் தெரிந்தவைகளைப் போதித்து வருகிறார் என்கலாம். இதனால் அவர்களுக்கு பயமுண்டாய் தங்கள் புத்தியை விருத்தி செய்ய முடிகிறதில்லை. உற்சாகம் மங்கிப்போகிறது.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

---

# மழையும் உரைபனியும் எங்கிருந்து உண்டாகின்றன?

பூமியிலுள்ள நதிகள் தடங்கள் கடல்கள் இவைகளிலிருந்து சூரியன் வெப்பத்தால் ஜலம் சடிந்தாவியாவதும் அவ்வாவி இறுகிக் கண்ணுக்குப் புலப்படும் மேகமாவதும் நீங்கள் அறிந்தீர்களே. இம்மேகங்களோ வானத்தில் சதா நிற்கிறதில்லை; சில வேளைகளில் அவை கலைந்து மீளவுங் கண்ணுக்குத்தெரியாத நீராவியாகமறையும். மற்றும் பல வேளைகளிலோ அவை மறைந்து வேறுரூபமாகத் தென்படும். மேகநீர் வாயுமண்டலத்தின் வழியாக இறங்கி மழையாகவும் இமாலயம் முதலிய குளிர்ப்பிராந்தியங்களில் உறை பனியாகவும் பெய்யும்.

மழை எப்போதும் ஆகாயத்திலுள்ள மேகத்திலிருந்து உண்டாகிறதென்று நீங்கள் அறிவீர்களே. தலைக்குமேல் வானம் நிர்மலமாயிருக்கும் போது மழை பெய்யாது. மேகம் கவிழ்ந்தபோதே மழை வரும். கறுத்த நீருண்டமேகம் கனத்துச்சுரந்து பூமியில் வருஷிப்பதைப் பார்த்திருப்பீர்களே. வெப்பங்கொண்ட அறையில்கொணர்ந்த பளிங்குபாத்திரத்தில் சுற்றிலும் புகைபோலக் கம்மின நீரோடி வரவரத் துளிகளாய்ச்சேர்ந்துவழிவதைப் பார்த்திருப்பீர்களே. இப்பளிங்கில் படிந்த பனி, வானத்தில் கம்மும் மேகம் இரண்டும் வாயுவிலிருந்த சூக்ஷ்மமான நீர்த்திவலைகளால் உண்டாகுமவைதாம். இத்திவலைகளிணங்கித் துளிகளாகின்றன. பாத்திரத்தில் கட்டிய துளிகள் கீழேவழிகின்றன. வானத்தில் கட்டிய துளிகள் வாயுமண்டலத்தின் வழியே மழையாகப் பூமியில் விழுகின்றன. ஆகையால் வாயுமண்டலத்தில் உள்ளநீராவி இறுகும்போது பின்னும் ஒருபடி வலுவாயிறுகினால் மழையாகும். மேகத்திலுள்ள நுண்ணிய நீர்த்திவலைகள் இறுக விறுக தம்மைச் சுற்றிமேலும் நமிர்ப்பையிழுத்துப் பெருந்துளிகளாய்க் காற்றில் கனங்கொள்ளாமல் மழைத்துளிகளாய்த் தரையில் விழுகின்றன.



மேகம் மழையாய்ப் பெய்வதுந்தவிர மற்றோர் விசேஷ வடிவாய்ப் பூமியின்மேல் படிவதுண்டு. வாயு தக்கஅளவாகக் குளிர்ந்தால் நீராவி இறுகி மழையாகப் பெய்யாமல், பின்னும் தோய்ந்து உறைபனிப் பூக்களாய் விழும்.

இந்த உறைபனியை வீட்டுக்குள் கொண்டுவந்தால் விரைவில் உருகி நீராகும். அந்த நீரைக் காற்றுடவைத்தால் ஆவியாய் எழும்பி மறையும். ஆதலால் உறைபனி, ஜலம், நீராவி இவையெல்லாம் ஒரே பதார்த்தத்தின் விகற்பங்கள்தாம். தண்ணீர் மூன்று ரூபமாய் இருக்கிறதென்று விவகாரம். ஆவிரூபம், திரவரூபம், கனரூபம்; இந்தக் கனரூபத்துக்கு ஓர் உதாரணம் உறைபனி.

தோய்பனி மூடியவிரவில் குளிர்த்தேசங்களிலுள்ள நீர்க்கேணிகளில் ஜலத்துக்குமேல் கெட்டியாய்ப் பளிங்குபோல் அடைகட்டும்; அதுதான் பனிக்கட்டி. இந்த அடையைச் சுக்குச்சுக்காய் நொறுக்கிவிடலாம். குளிர் பின்னும் நீண்டிருந்தால் புதிதாய் அடைகட்டும். அதுதான் பனிக்கட்டி. இந்த அடையைச் சுக்குச்சுக்காய் நொறுக்கிவிடலாம். குளிர் பின்னும் நீண்டிருந்தால் புதிதாய் அடைகட்டும். இவ்வடையில், பழைய அடையின் துண்டுகள் கெட்டியாய் ஒட்டிக்கொண்டிருக்கும். சீதம் அதிகரிக்க அதிகரிக்க இந்த அடை கனதியாகும். ஒவ்வொரு காலத்தில் கேணிகளிலுள்ள நீரெல்லாம் ஒரே பாறையாகக் கட்டிப்போவதும் உண்டு. இப்பனிக் கட்டியில் ஒரு துண்டைத்தொட்டால் ஜில்லென்று இருக்கும். நருக்கினால் புரபுரவென்றுபோம். கண்ணுக்கு நேரப் பிடித்துப்பார்த்தால் பளிங்குபோல் ஒளிகாட்டும். வெப்பமுள்ள அறையில் கொணர்ந்தால் நீராய் இளகிப்போம். அந்நீரை ஆவியாகப் பறக்கும்படி செய்யலாம். ஆதலால் தண்ணீர் இறுகிக் கட்டியாயிருக்கும் தசையில் அதற்குப் பனிக்கட்டி என்று பெயர் வழங்கும். உறைபனியும் ஆலங்கட்டியும் இப்பனிக்கட்டியின் பேதங்கள்தாம். தண்ணீருக்கோர் வெப்ப நிலையுண்டு, அந்நிலைக்குத் தாழக்குறைந்தால் பனிக்கட்டியாகத் தோயும். இப்படிக் கட்டிகட்டும் நிலைக்குத் தோயுநிலை என்று பெயர். இது உஷ்ணமானி என்னும் கருவியில் குறித்திருக்கும்.

பனிக்கட்டிக்கு ஓர் உருவமுமில்லை, மொத்தாகாரமாயிருக்குமென்று நீங்கள் எண்ணக்கூடும்: உறைபனி பெய்யும் தேசங்களில் சில தோய்ந்த பில்லைகளை எடுத்துப்பார்த்தால் அவைகளுக்குள்ள வடிவம் தெரியும். அவை கும்பலாய்க் கிடக்கும்போது, கண்ணுக்கு மங்கிய வெண்மையுடன் தோன்றும். உள்ளபடி அப்படியல்ல. அவை ஜலம்போல சொச்சமுள்ளன. ஜொலிக்கிற பல முனைகளால் ஒளியை நாற்பக்கமும் பரவச்செய்கிறபடியால் அவை பார்வைக்கு வெண்மையாகத் தோற்றுகிறது. இர

ண்டோர் பில்லைகளைப் பிரித்து யாதேனும் ஒரு கறுப்புத் தளத்தின்மேல் வைத்துப்பாருங்கள். கறுப்புக்கம்பளியைத் தரையில் விரித்து அதன்மேல் வைத்துப்பார்த்தாலும் சரியே. இப்பரீக்ஷை வெளியில் நடத்தவேண்டும். உள்ளே கொண்டுவந்தால் வெப்பமிகுதியால் உருகிப்போம். ஒவ்வொரு பில்லையும் ஆறு கரங்களுடன்கூடி ஏறக்குறையப் பூரணநக்ஷத்திரவடிவாயிருக்கும். ஒவ்வொரு கரமும் பளிங்கூசிபோல் நிர்மலமான சொச்சப் பனிக்கட்டிக் கதிர். இவ்வுறைபனிகள் மகாநுட்பமானவை. அவை வானத்திலிருந்து விழும்பொழுதே ஒன்றோடொன்று தாக்கிச் சிதையுண்டுபோம்.

வாயுமண்டலத்தின் மேலடுக்குகளில் ஜலத்துக்குத் தோயுநிலைக்குள்ள குளுமையைவிட அதிக குளுமையுண்டு. அங்கிருக்கும் நீராவியாலாகும் மேகங்கள் மழையாகப் படிந்துவிழுகிறதில்லை. பூமிப்பரப்பிலிருந்து எழும்பிப்போகும் காற்றிலுள்ள நீராவி அவ்வுன்னதப்பிரதேசங்களில் இறுகித் தோய்ந்து சிறுசிறு பளிங்குத் துணுக்கைகளாய், அத்துணுக்கைகள் சேர்ந்து உறைபனிப் பூக்களாகின்றன. கோடைகாலத்திலும் வானத்தில் தொலையில் மிதக்கும் நுண்ணிய வெண்மேகத்திரள்கள் உறைபனியாய் இருக்கவுங்கூடும். குளிர்தேசங்களிலோ மழைகாலத்தில் தரையடுத்த காற்றே அதிசீதங்கொண்டிருக்கும் அங்கு ஒவ்வொரு வேளையில் உறைபனி பூமியில் விழுந்து, கோடைதிரும்பி உருகிப் போகிறவரையில் அதை மூடிக்கொண்டிருக்கும்.

மழையும் உறைபனியுந்தவிர காற்றிலுள்ள நீராவி ஆலாங்கட்டியாகவும் எண்ணெய் மழையாகவும் விழுவதுண்டு. ஆலாங்கட்டி மழை பெய்கையில் கலந்துவிழும் பனிக்கட்டியுண்டைகள். அவைகள் மழைதோய்ந்த கட்டிகள்போலத் தோன்றும். எண்ணெய் மழையென்பது உறைபனி ஒருவாறு இளகிக் கட்டியுமல்லாமல் ஜலமுமல்லாமல் எண்ணெய்போல் விழுவது. இப்படி நீராவி பல வடிவமாய் பூமியில் விழுவதுண்டு. அவைகளில் மழையும் உறைபனியுந்தான் விசேஷித்தவை. ஆதலால், அவை இரண்டையும்பற்றி இன்னும் சிறிதுபேசுவோம்.

ஸாராம்சம்: அப்படிப் பேசுவதற்குமுன் இதுவரையில் வாயுவிலுள்ள நீராவி இன்னவின்னவிதமாக மாறுமெனக் கூறியதையெல்லாம் திரட்டிப் படித்துப்பார்ப்போம்.

1 தரையிலுள்ள ஜலப்படலத்திலெல்லாம் நீராவி எழும்பும்; அதனால் வாயுவில் நீராவி நிறைந்திருக்கும்.

2 இந்த நீராவி இறுகிக் கண்ணுக்குத் தோற்றும் வடிவமாய் பனியாய், புகைபனியாய், மேகமாய் உருவெடுக்கும்.

3 மேகமோ மழையாய் உறைபனியாய் வடிவெடுத்து, மீண்டும் பூமியில் இறங்கும்.



4 இப்படிக் கீழுமேலும் பூமிக்கும் ஆகாசத்திற்கும் நீர் சுழன்றவண்ணமாயிருக்கும்.

5 நமது தேகம் இரத்தச் சுழற்சியால் உயிர்பெற்றிருப்பது போல் இந்நீர்ச்சுழற்சியால் பூமி உயிர்பெற்று, ஜீவகோடிகளுக்கு வாசயோக்கியமாகிறது.

6 அந்த நீர் காற்றுடன் கலந்து பட்டணங்களின் புகைபோக்கி முதலிய வழிகளால் கிளம்பி அதில் சேர்ந்திருக்கும் அசுத்தங்களைக் கழுவி அக்காற்றை நிர்மலமாக்கிறது.

7 நமிர்ப்புத்தந்து தரையைக் குளிரச்செய்து கந்தமூலாதிகளை அதில் பயிராக்கும்படி பக்குவப்படுத்துகிறது.

8 அது ஊற்றுகள், மடுக்கள், கால்கள், நதிகள் இவைகளுக்குள் தண்ணீர் சுரக்கச்செய்கிறது. இந்நீரே பூமியின் சத்துவத்துக்கு ஆதாரம்.

9 உலகம் நிலைகொள்ளக் கடவுளால் ஆக்கப்பட்ட ஏற்பாட்டில் இத்தனை விசேஷமானது ஜலம். ஆதலால் இதைப் பற்றி இன்னம் மெத்தக் கவனித்து விசாரம் செய்யவேண்டும்.

10 ஆதலால் வாயுமண்டலத்திலிருந்து மழையும் உறைபனியும் தரையைச்சேர்ந்தபின் என்னமாய்ப் போகின்றனவோ அதை விவரிப்போம்.

(பௌதிக பூகோளத்திலிருந்து எடுக்கப்பட்டது) ப-ர்.

---

# இராஜபக்தி.

## 10-வது நூற்றாண்டில் நடந்த ஒரு சரித்திரக்கதை.

## நரசிம்ம மல்லன் தலைநகருக்குச் செல்லுதல்.

### முதல் அதிகாரம்.

கருமலை நகரில் நரசிம்மன் திருமாளிகையில் என்றுமில்லாததோர் குழப்பம்; போர்வீரர்களும் வேலைக்காரர்களும் 'குறுக்கும் நெடுக்கும்' ஓடுகிறார்கள்; குதிரைகள் கனைக்கின்றன; ஆயுதங்கள் தயார்செய்வதால் உண்டாகும் சப்தம் நாற்புறமும் கேட்கின்றது. சில நிமிஷங்களுக்குள் ஊரில் உள்ள ஜனங்கள் எல்லாம் வந்து கூடிவிட்டனர். "என்ன சமாசாரம்! என்ன சமாசாரம்!!" என்று ஒவ்வொருவரும் கேட்க, ஒன்றும் தெரியவில்லை. ஜனங்களுக்கு என்ன யுக்திக்குறைவா? தங்கள் தங்கள் மனதுக்கு வந்தபடியெல்லாம் கட்டுக்கதை பிறப்பித்து ஸமாரியாய்ப் பரப்பினர். சக்ரவர்த்தி தலைநகரான கலியாணபுரியிலேயே சோழசேனை புகுந்துவிட்டதென்று ஒரு வதந்தி; அரசனைக் கொலைபுரிந்துவிட்டனர் என்று ஒருபுறம் பரந்தது சமாசாரம். நரசிம்மவீரன் மகனை மல்லிகார்ச்சுன எதுகுலவீரனை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதாக பேட்டைச்சுப்பாரெட்டி கேள்விப்பட்டதாக எல்லாரிடத்திலும் சொல்லுகிறான்.

"இல்லை இல்லை. நமது சக்ரவர்த்தி இந்நகரத்துக்கு வந்து நமது காடுகளில் வேட்டையாடப்போகிறார் அப்பா; அவரை எதிர்கொண்டுவர நரசிம்மராஜா போகிறார்," என்கிறார் அப்பாஜிராயர். எல்லாரும் இப்படி சரியான சமாசாரம் தெரியாமல் தாங்கள் சொல்வதே சரியென்று வாதாடிக்கொண்டே கோடைக்காற்றுபோல் இரைச்சலாய் இருக்க, நாம் மட்டும் உள்ளேபோய் சங்கதி தெரிந்துகொள்ளலாம்.

சபா மண்டபத்துக்கு முன்னிலையில் இரண்டு நீலவேணிக் குதிரைகள் தயாராய் நிற்கின்றன. மண்டபத்தின் ஒருவழியாய் நரசிம்ம வீரன் நுழைகின்றான். மற்றொரு வழியாய் சுந்திரவடிவுள்ள இரண்டு பெண்பிள்ளைகள் ஒரு நொடியில் ஓடிவந்து நரசிம்மன் கால்களைக் கட்டிக்கொண்டனர். முதல்வளுக்கு 10 வயது இருக்கலாம். இளையவளுக்கு 8 வயது. இருவரையும் மடியில் உட்காரவைத்து தழுவி முத்தமிட்டுக்கொண்டிருப்பதற்குள் ஒரு கிழவியும் இரண்டு பிள்ளைகளும் நுழைந்தனர். நரசிம்மன் நாற்காலியிலிருந்து எழுந்து அந்தக் கிழவிக்கு நமஸ்காரம் செய்து, "அத்தாய், இதோ இந்த நான்கு குழந்தைகளையும், என் மனைவி திரிபுரசுந்தரியையும் உன்வசம் ஒப்புவிக்கிறேன்; அவர்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். நம்மரசன் வைரமுடி தைலப்ப சக்ரவர்த்திக்குப் பேராபத்து வந்துவிட்டதுபோலும். நேற்றுவந்த சமாசாரப்படி கலகம் நடக்கும்போலிருந்தது. இன்று வந்த சமாசாரப்படி கலகம் ஆரம்பித்துவிட்டது என்பது நிச்சயம் ஆகின்றது. நாங்கள் போய்ச் சேரும் சமயத்தில் என்னவாய் இருக்குமோ தெரியாது—" என்று சொல்லித் தன மனைவியைப் பார்த்து "வீராதிவீரர் வம்சத்தில் பிறந்த என் கண்மணியே! குழந்தைகளைப் பார்த்துக்கொள். அவர்களை வளர்த்துவது உன்னைச் சேர்ந்தது. நான் திரும்பிவர எந்நாள் செல்லும் என்று நிச்சயம் சொல்ல முடியாது"—, என்பதற்குள் ஒரு வீரன் வாயுவேகமாய்த் தன் குதிரையை நடத்திக்கொண்டுவந்து குதிரையை விட்டிறங்கி நமஸ்கரித்து "ஐயா எல்லாம் போய்விட்டது: அரசனைச் சிறையில் வைத்துவிட்டனர். குடியரசு என்று ஏற்பாடு பண்ணிக்கொண்டு பிரபுக்கள் அரசாக்ஷியைக் கைக்கெண்டனர். விஜ்ஜலவீரனே அவர்களுக்குத் தலைவன்" என்றான். அவ்விதமே நானும் சந்தேகித்தேன்.—

'சரி போ வருகிறேன்' என்று சொல்லிக் குதிரைமீதேறிப் புறப்பட்டுவிட்டான். அரண்மனையைவிட்டு வெளிப்புறப்பட்டதும் அவர்களுக்கு எதிரே ஒரு கிழவன் கோல் ஊன்றிக்கொண்டு நடந்துவந்தான். அவனைக்கண்டதும் நரசிம்மவீரன் குதிரைவிட்டு இறங்கி "அமிர்தேசா! நீ நமது குடும்பத்தில் 50 வருஷகாலம் பழகினவன். இதோ உன் முன்னிலையில் நமது நாட்டுச் சிறுபிள்ளைகளும் மனிதர்களும் தண்டு எடுத்துச்



செல்லுகின்றனர்: இங்கே நான் விட்டுப்போகும் ஜனங்கள் உன்னைப்போலவே கிழவர்கள்—இல்லையேல் குழந்தைகள்; நீதான் நமது அரண்மனையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு, என் அத்தைக்கும் என் அருமை மனைவிக்கும் உபகாரமாய் இருக்கவேண்டும். உன் வீடு 4-நாழி கைவழியில் இருப்பினும் நீ தினம் ஒருதடவையாவது மாளிகைக்கு வரல்வேண்டும். உன்னால் கூடிய உபகாரத்தைத் தப்பாமல் செய்வாய் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்" என்று அக்கிழவன் கைகள் இரண்டையும் பிடித்துத் தன் கைகளில் இறுகத் தழுவினான்.

அமிர்தேசன் "மஹாராஜ! எனக்கு நீர் சொல்லவும் வேண்டுமோ? எனது கடமையே இதுவல்லவா? உக்ரநரசிம்மமல்லர்காலம்முதல் என் உயிரைக்காப்பாற்றிய குடும்பத்தை என் இரு கண்களைப்போல்பாதுகாப்பேன். என்னப்பனே நீர்ஜயத்தோடு திரும்பிவரவேண்டும். என்கிழக்கண்கள் அந்த ஆனந்தத்தைப்பார்த்துத் திருப்தியடையவேண்டும். நீர் இவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் தலைநகரம்போய்வாரும்" என்றான்.

குதிரையேறித் தன்சேனைக்குமுன் போகும் நரசிம்மனைச் சிறிதுநேரம் சந்தோஷத்தோடு பார்த்துவிட்டு அமிர்தேசன் "ஆஹா! இந்த ஆபத்சமயத்தில் என்னப்பனுடன்போய் என்னரச சக்ரவர்த்திக்காக என் இரத்தத்தை இரணகளத்தில் சிந்துவதற்கு சக்தியற்ற துர்அதிர்ஷ்டசாலியானேனே! சுவாமி கைலாஸநாத மல்லிகார்ச்சுனா! ஸ்ரீகிருஷ்ணா! ஆஹோபிலத்திருக்கடவுளே! என்னப்பனை க்ஷேமமாய்க்காப்பாற்றி வெற்றியுடன் திரும்பும்படி செய்யக்கடவீர்! நான்குகுழந்தைகளையும் இரண்டுபெண்டிரையும் என்வசம் ஒப்புவித்துப்போயிருக்கும் என் ஸ்ரீமான் இட்டகட்டளையை நடத்த எனக்கு பலம்கொடுக்கும்படி கடவுளைப்பிரார்த்திக்கிறேன்" என்று கைகூப்பி மனப்பூர்வமாய் சுவாமியைத் தியானித்தான்.

தியானித்தபின்னர் "ஐயோ! இது என்னவிந்தை! இந்த ஒருநிமிஷத்துக்குள் எனக்கு 10-வயது ஒரேஅடியாய்ச் சென்றுவிட்டதுபோல் மூப்பு அதிகரித்துவிட்டதே!! ஈசா! எல்லாம் எனையாளும் உன் திருவுள்ளம் அன்றோ!!" என்று சொல்லிக்கொண்டே அரண்மனை நோக்கிப்புறப்பட்டான்.

## இரண்டாம் அதிகாரம்.

### தைலப்பன் சிறைப்பட்டது.

மேற்சொல்லிய சமாசாரங்கள் நடந்து 6, 7, மாதங்கள் ஆய்விட்டன. அச்சமயத்துக்குள் குண்டல நாட்டில் உண்டான மாறுதல் பல. சிறைப்பட்ட அரசனை விடுவிக்க நரசிம்மனும் இன்னும் பல பிரபுக்களும் கஷ்டப்பட்டு சண்டைமேல் சண்டை யிட்டுப் பலர் மாண்டனர். 2-மாதம் கழிந்ததும் அரசனுக்கு வெளிப்பட வழியில்லாம லிருந்ததும் தவிர அரசனுடைய

கக்ஷியார் தலை நகரத்தை நெருங்க முடியவில்லை. விஜ்ஜலன் தன் அற்புத சக்தியால் இராஜத் துரோகிகளுக்குத் தலைவனானான். துரோக சிந்தையுள்ள சில பிரபுக்கள் விஜ்ஜலனை அரசனென்று அழைக்க இஷ்டப் படவில்லை. அவனை 'இராஜ்யத்தின் பிரதான புருஷன்' என்று அழைத்தனர். விஜ்ஜலனோ உண்மையாகவே இராஜபோகத்துக்கு உரியவன். ஆனாலும் அப்பட்டத்தைமட்டும் வகிக்க அவன் இன்னும் இஷ்டப்படவில்லை. அவ்வாறு செய்யின் தன்னை ஒத்த பிரபுக்களின் உதவி கிடையாமல் போய்விடுமல்லவா? அவர்கள் உதவியில்லை யெனில் மறுதினமே அரசன் திறத்தாருக்குக் கீழ்ப்படியவேண்டியிருக்கும். முன் யோசனையும், யுக்தியும், துரோக புத்தியும் குடிகொண்ட விஜ்ஜலன், பிரபுக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அதிகாரம் கொடுத்து அவர்கள் எல்லாரும் அந்தஸ்தில் தனக்குச் சரியானவர்களே என்று சொல்லிக் கொண்டான்.

இவற்றையெல்லாம் கேட்டு இராஜகக்ஷியில் இருந்த சில பிரபுக்கள் கூட ஒருவர் ஒருவராய் எதிர்கக்ஷிக்குப்போகத் தொடங்கினர். நரசிம்மன் முதலானவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அரசனைச் சிறை மீட்பது அசாத்யமென்று தோன்றிற்று. "எப்படியாயினும் அரசனைச்சிறைமீட்பதே நம்தொழில்; இல்லையேல் அவ்வேலையிலேயே பிராணனை விடுவோம்." என்று பிரதிக்கினை செய்துகொண்டனர்! நான்கு மாதங்கள் கழிந்து விட்டன. 4-வது மாதக்கடைசியில் சில வேலைக்காரர்களின் சூழ்ச்சியால் "அரசன் கம்மாளன்போல் வேஷம்பூண்டு சிறையினின்றும், தப்பித்துக்கொண்டுவிட்டான்" என்று வதந்தி புறப்பட்டுவிட்டது.

ஆனால் அரசன் எங்குஇருக்கிறான்? எவர் அவனைஇப்பொழுதுஆதரிக்கின்றனர்? என்ற விவரம் தெரியவில்லை. ஆயினும் சக்ரவர்த்தி தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டான் என்பதேஇராஜவிசுவாசிகளுக்கு மிக்க சந்தோஷ சமாசாரமாயிருந்தது. கடைசியில் கருமலைப் பிரதேசத்துக்குப் அப்பால் துங்கபத்ராதீரத்தில் இரகசியமாய் ஒளிந்து இருப்பது தெரியவே, இராஜ சேனை அங்கே பறந்தோடியது. விஜ்ஜலன் இலேசில் விடப்பட்டவனா!! அரசனுக்கு பலம் சேருமுன் அவனைத் தோற்கடித்துக் கைப்பிடியாய்ப் பிடித்துவராவிட்டால் 'தன்பாடு அதோ கதியாகும்' என்று நிச்சயமாய் அவனுக்குத் தெரியும். இரண்டு சேனைகளும் கொண்ட நகரில் சந்தித்தன. 4-நாள் வரையில் அகோர யுத்தம் நடந்தது. இச்சண்டையில் 'ஜயித்தால் சக்ரவர்த்திக்கு பயமில்லை யென்று நரசிம்ம மல்லனுக்கும் மற்றப் பிரபுக்களுக்கும் வியக்தமாய்த் தெரிந்தது.

ஆனால் விஜ்ஜலனோதோற்றுப்போனால் இராஜ்யம், வலிமை, கீர்த்தி— இவை மட்டுமின்றி—தன் உயிரேபோய்விடுமென்று நிச்சயமாய் அறிந்தவனாதலால், தன்னைப்படைசூழ்ந்த பலரையும்போற்றி, மனம் இளைத்தவரைத் தேற்றி, பரிசளிப்பதாகவும், சுதந்திரம் அளிப்பதாகவும், நாடு, நகரம், கிராமம், கொடுப்பதாகவும்வாக்குத்தத்தம் செய்து, விடாமுயற்சியுடன் எதிர்த்தான். இராஜசேனைதோற்றுப்போய்விட்டது. சக்ரவர்த்தி விஜ்ஜலன்கையில் அகப்பட்டுவிட்டான். நரசிம்மனோ அரசன் பக்கத்தில் போர் செய்து தன் உயிர் உள்ளளவும் அரசனை விட்டுப் பிரியாமல், கடைசியில் வீரசுவர்க்கம் புகுந்தான். இராஜசேனை 'பஞ்சு பஞ்சாய்' ப் பறந்துவிட்டது.



விஜ்ஜலன் தலை நகரத்தை யடைந்ததும், அரசனை மறுபடி சிறையில் வைத்து, தன்னுடன் கூடி நின்று சண்டைசெய்து ஜெயம் கொண்ட பிரபுக்கள் அனைவருக்கும் சம்மானம் செய்து, அவர்களின் திறமையைப் பல விதமாய்ப் புகழ்ந்து, எல்லாரையும் சந்தோஷப்படுத்தினான். தானே சக்ரவர்த்தியாவதற்கு சிறையில் இருக்கும் வைரமுடி தைலப்பன் குறுக்கே நிற்கின்றான் என்பது அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆனால் அத்தைலப்பனை எவ்விதத்திலாவது உலகினின்றும் அனுப்பிவிட விஜ்ஜலனுக்கு தைரியமில்லை. இராஜசேனை தோற்றுவிட்டதென்றாலும், இன்னும் குண்டலதேசத்தில் விக்ரமகுலத்தை மனதார நேசித்த இராஜ பக்தர்களுக்குக் குறைவேயில்லை. எந்த சமயத்தில் எந்தசேனை எதிர்த்து வருமோ என்ற பயம் விஜ்ஜலன் நெஞ்சத்தில் குடிகொண்டே இருந்தது.

ஒரு நாள் சபாமண்டபத்தில் பிரபுக்கள் எல்லாரும் கூடியிருக்கும் சமயத்தில் விஜ்ஜலவீரன் "ஐயன்மீர்! வைரமுடி தைலப்ப சக்ரவர்த்தி தன் ஜனங்களையும், தன் சேனைகளையும், கவனியாது, சுய நன்மையையே பாராட்டித் திரிந்தமையால், அவரை நாம் எதிர்க்க வேண்டிவந்தது. எனக்கோ இராஜ்யபாரம் வகிக்கவேண்டுமென்ற எண்ணமே கிடையாது. அது உங்களுக்குத் தெரிந்த விஷயமே! "முடிப்ப முடித்துப் பின் பூசுவ பூசி, உடுப்ப உடுத்துண்ப வுண்ணு, இடித்திடித்துக் கட்டுரை கூறினும் செவிகொளார் கண்விழியார்" என்ற ஆன்றோர் வசனப்படி இருந்தும் பயனின்றி சக்ரவர்த்தி நடாண்ட படியால், தேசம் யாதவருக்கும், சோழர்க்கும், கீழ்ப்படும் என்று எண்ணியே, நாம் இராஜ்யத்தின் நன்மையை மனதில் எண்ணி அதைக்கைக்கொள்ள வேண்டியதாயிற்று. இளவரசன் புவனேகமல்லன் வயது வரும் வரையில் பிரபுக்களாகிய நீங்களே இத்தேசத்தை யாண்டுவர வேண்டும். நானும் பக்கத்துணையாய் உம்முடன் கலந்து தேச நன்மைக்குப் பிரயாசைப் படுகிறேன். நாம் இக்குண்டல தேசத்தைப் பாதுகாப்போம். சுபிக்ஷகாலம் வந்து, சண்ட சச்சரவின்றி நாடு செழிக்குமானால் பொக்கிஷம் நிரம்பும். அதுவரையில் இங்கே தலை நகரில் ஒரு பெரிய சேனை இருக்கவேண்டுவது அவசியம். அதன் பொருட்டு நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு சேனை இங்கே விட்டுப்போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான். இவ்வார்த்தைகளை உண்மை யென்று நம்பினவர் பலர். சந்தேகித்தார் சிலர். வீராதி வீரனென்று பெயர்

பெற்ற சேனைத்தலைவன், தேசத்தின் பிரதான புருஷன் விஜ்ஜலன் வார்த்தையை தட்டிச் சொல்ல யார் தான் துணிவார்கள்!! 'சொக்குப்பொடியால் மயக்குண்டவன் மந்திரவாதி சொல்லியபடி செய்யுமாறு போலவும், ஆட்டம் பழக்கிய புலி ஆட்டக்காரன் சொற்படி ஆடு மாடு போலவும், குண்டலதேசத்துப் பிரபுக்கள் செய்யுமாறு தோன்றாமல் விஜ்ஜலன் சொற்படி நடப்பதாக ஒப்புக்கொள் வேண்டியதாயிற்று.

K. வேங்கிட்டசுப்பிரமணிய ஸர்மா.

---

# விதை எடுத்தலும் விதை அடித்தலும்.

## DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

ஆண் மிருகங்கள் பொலிய லாயக்கில்லாதுபோய் இனத்தைபெருக்காமலிருக்கும்பொருட்டு இச்சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விதை எடுத்தல் என்றால் மிருகங்களின் பீஜங்களையே எடுத்துப்போடுவது. ஆதலால் அதிற் கைதேர்ந்தவர்களல்லாதவர்கள் அதைச்செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விரையடித்தல் என்பது விதையையாவது இந்திரிய நாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவது எடுத்துப்போடாமல் அழித்து பிராணிகளை பொலியச் சக்தியில்லாமல் செய்தலாம். விதையடித்தல் (காயடித்தல்) என்னும் கொடியசெய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அது செய்யும் விதத்தைக்குறித்து விரித்துச்சொல்லவேண்டியதிராது. இத்தேசத்தில் கிராமாந்தரங்களில் செய்துவருவது எப்படி என்றால் விதை கூழாய்போகும்வரை அதை அடித்து நசுக்கி இளக்கிவிடுகிறார்கள் என்றே சொல்லலாம். இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிற வரையில் அந்தப் பிராணியானது பொறுக்கமுடியாத வேதனைபட்டுக்கொண்டேயிருக்கும். மிருகங்களை வசக்கி மனிதனுக்கு வேண்டிய வேலைகளை செய்விக்கவேண்டுமானால் இப்படி யேதாவதொன்றைச்செய்துதான் தீரவேண்டுமென்பதை கவனிக்கவேண்டும். சென்ற சிலவருஷங்களுக்கு முன் சாஸ்திரப்படி விதை எடுக்கத்தெரிந்தவர்கள் ஏதோ சில பெரிய பட்டணங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக்காலத்தில் விதையடிக்க கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்ற விஷயங்களில் பயிற்சி இருப்பதுபோல "விதை எடுப்பதிலும்" தேர்ச்சி உள்ள கால்நடை வைத்தியர் ஒருவரையாவது சர்க்காரில் நேமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் "காயடிக்க" விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு; விதையடிப்



பதைவிட்டு "விதை எடுத்தலினால் உண்டாகும் முக்கியமான நன்மைகளை கீழே சுருக்கமாய் குறித்திருக்கிறது:—

(1) விதையடிக்க அரைமணி செல்லும். விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு 5-நிமிஷத்துக்கு மேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும்போது விதை எடுப்பதினால் 14 நாளில் நன்றாய் வாசியாய்விடும். மற்ற மாடு ஆடானால் விதை எடுத்தவுடனே மந்தையில்பற்றி விட்டுவிடலாம். பின்பு அதைப்பற்றி கவனிக்கவேண்டியதேயில்லை. விதை அடித்தவேதனை தீர்ந்து வாசியாக அநேகவாரம்செல்லும். அநேக சமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்தப்பிராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் பிராணிகள் படும் துயரத்தைப்பார்த்து சற்று முந்தியே விட்டுவிடுவதால் நமது உத்தேசம் சில சமயங்களில் நிறைவேறுகிறதில்லை. அப்போது அது சரியானபடி பொலிய முடியாதுபோனாலும் (கள்ளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந்தொல்லையா யிருந்துவரும்.

(4) இந்த சிகிச்சை சீக்கிரத்தில் முடிந்துபோகிறதினால் இத்தேசத்தில் விதை எடுக்கப்போகும் பிராணிகளுக்கு (மயக்கந்தர) க்ளோரபாரம் என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிறபக்ஷத்தில் கால்நடை வைத்தியர் அந்தப்படிசெய்வார். அப்போது அந்த மிருகங்களுக்கு சற்றும் வருத்தம் தோற்றாது போகும். இரண்டு வயசாகிறவரையில் மிருகங்களுக்கு காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்திலிருந்துவருகிறது. அநேக சமயங்களில் 3 அல்லது 4 வயசுவரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப்போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்றால் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில்புறமும் கனத்து லக்ஷணமில்லாமல் போகிறது. இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்கு போகும் சத்து நாலாபக்கமும் சமமாய்ப்பரவி அது உயர்ந்து வளர்ந்து வயது வரும்போது சாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய மிருகங்களுக்கு காயெடுக்கவேண்டிய வயது கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:—

| | | |
|---|---|---|
| குதிரை கழுதைகளுக்கு | ... | 1 முதல் 2 வயது. |
| மாடு ... | ... | 3 மாதம் முதல் 1 வருஷம். |
| ஆடு, வெள்ளாடு | ... | 1 முதல் 3 மாதம். |

முன்சொல்லியபடி பிரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்தியரையாவது நேமித்திருக்கிறார்கள். அவரைத் தாலுக்காவுக்கு ஒருமாதமாக தனக்கேற்பட்டிருக்கும் தாலுக்காக்கள்தோறும் சுற்றிவரத் திட்டம் செய்திருக்கிறார்கள். அவர் 4 முதல் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு தாலுக்காவுக்கும் வருவார். எந்தகிரமத்தாருக்காவது விதை எடுக்கவேண்டிய கால்நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது. அவர் கால்நடை வைத்தியரை அந்த கிராமத்திற்குப்போக எழுதிவிடுவார்.

எப். வேர்,
ஸிவில் வெடரினரி சூபரின்டாண்டு.

---

# நகர வாசம்.

## VILLAGE & TOWN LIFE.

'கெட்டும் பட்டணம் சேர்,' என்று ஒரு வசனம் வழங்குகிறதல்லவா? அவ்வசனத்தின் பொருள் நகரவாசம் சர்வத்திராளுக்கும் சௌகர்யமானது என்பதேயாகும். நாட்டுப்புறங்களில் மனம் நொந்து வாழ்பவர்களும், தொழிலாளிகளும், ஏராளமான பூஸ்திதியுடையவர்களும், ஜீவனோபாய வழி தேடுபவர்களும், தற்காலம், எக்காலமும்போலவே, நகரங்களைச் சார்கின்றனர். பூர்வீக காலங்களிலுங்கூட, நமது தேச ஐதீகங்களில், ஏழைப்பிராமணர்களும் மற்றையோரும் புரிகளுக்கும், நகர்களுக்கும் செல்வதாகவே நாம் படித்திருக்கிறோம். பழங்கதைகளில்கூட, முக்கிய அம்சங்கள் நகரங்களிலேயே நடிக்கப்பட்டதாக அறிகிறோம். அயோத்தியாபுரி, இந்திரப்ரஸ்தம், ஸ்ரீகாசி, ப்ரயாகை, துவாரகை, முதலிய புண்யநகரங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக செழித்து வளர்ந்து வந்ததாக நமக்கு நிச்சயமாய்த் தெரியும். நள சரித்திரம் விதர்ப்பபுரியில் நடக்கவில்லையா?

மத்யகால சரித்திரத்தில் நமது தேசத்தில் பல ராஜ்யங்களும், ராஜவம்சங்களும் பிராபல்யத்துக்கு வந்தன. சூரியசந்திரகுல ராஜபுத்ரவம்ச க்ஷத்ரிய மன்னர்கள் ஒருசார், வேறு தேசங்களினின்று இந்தியாவில் வந்து புதிதாக ராஜபுத்ரர்களாய் விளங்காநின்ற பல்லவர்கள் ஒருசார், மராஷ்ட்ர கூட்டத்தார்கள் ஒருசார், குப்தர்கள் ஒருசார். இவ்வாறு இந்தியாவில் பற்பல சமஸ்தானங்கள் விளங்கிவந்தன. அக்காலத்தில் பல நகரங்கள் மகோன்னத தசையில் இருந்ததாகத் தெரிகிறது. இந்து



தேச சரித்திர ஆராய்ச்சி செய்பவர்கள், சுமார் 600 கி. பி. இந்தியாவில்
பாடலிபுத்ரம், ஸ்ரீகாஞ்சிபுரம் முதலாகிய நகரங்கள் தற்கால நகர நிர்மா
ணத்திய இம்சைகள் இன்றி, நன்னகரங்களாய்ப் பரிபாலிக்கப்பட்டதாக
வும், நகரங்களில் ஜனசங்கை ஏராளமாய் இருந்ததாகவும், சரித்திர
ரிகார்டுகளிலிருந்து சொல்லுகிறார்கள். இந்தியா முழுவதும் சுற்றிவந்த
பல சீனசந்யாசிகளின் ஏட்டுச்சுருள்களும் போதிய சான்றாயிருக்கின்றன.

நமது நாட்டில் நகரவாசம் புதிது அல்ல என்பதை நாம் முதலில்
அறிந்துகொள்வது அவசியம். பின்னர் நகரவாசம் தற்காலம் எவ்வாறு
உளது என்பதையும், நகரவாசத்தின் இன்பங்களையும் தொல்லைகளையும்
பற்றி ஆராய்வோம்.

முன்னர் கூறிய நகரங்கள் மதசம்பந்தமாகவோ, அல்லது கலைஞான
போதகாசிரியர்கள் இருப்பிடமாயிருக்கிற மகிமையாலோ ஏற்பட்டன.
தற்காலத்திலோ என்றால், நகரங்கள் பற்பல காரணங்களால் இந்தியாவில்
நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. நிர்மாணிக்கப்பட்டதாகக்கூட சொல்ல
இயலாது, வளர்ந்திருக்கின்றன என்று சொல்வதே சரி. ராஜதானியின்
முக்ய உத்யோகஸ்தர்கள் இருப்பிடங்களும், கவர்மெண்டு உத்யோக
ஆபீஸ்கள் நிலையங்களும், பழைய நகரங்களும், ரயில்வே ஜங்ஷன்களும்,
வியாபார சவுகரியமாய் உள்நாட்டிலோ அல்லது கடலோரமோ உள்ள
இடங்களிலும், தற்கால நகரங்கள் உள.

தற்கால நகரவாசம் ஜனங்களால் ரசிக்கப்படுகிறது என்பதற்கு சந்
தேகமே யில்லை. இக்காரணத்தினால், பற்பல செழிப்பாய் விளங்கிய
கிராமங்கள் பாழடைந்துபோயின.

தற்கால கிராமவாசிகள் கிராமவாசத்தை கிஞ்சித்தும் சீர்ப்படுத்த
முயலாமல், நெருக்கமான நகரங்களையே போய்ச் சேர்கிறார்கள். ஐவே
ஜாடைய மிராஸ்தார்கள் தமது செல்வங்களை யெல்லாம் நகரயின்பங்க
ளில் செலவழிக்க முந்துகிறார்கள். கிராமவாசத்தின் அமைதியைக்
கண்டு சகியாமல் ஓய்வொழிவு இல்லாத நகரங்களில் காலஞ் செலவழிப்
பதைப் பெருமையாகப் பாவிப்பவர் பலர். கிராமவாசத்திலேயே வாழு
லைக் கழியாமல் சிற்சில சமயங்களில் நகரவாசனை பெறப் புறப்படுபவர்
சிலர். இவ்வாறாக நமது ஜனங்கள் அல்லாடுகிறார்கள்.

நகரவாசத்தின் இன்பங்கள் என்ன? ஏன் மாணவர்களும், கவி
வாணர்களும், மிராஸ்தார்களும், ரசிகர்களும் நகர்ப்புறம் சேர்கின்றனர்?
நகரங்கள் முற்காலத்தில் ஜனங்களின் பத்திரத்தையும் க்ஷேமத்தையும்,
உத்தேசித்து ஏற்பட்டன. காலக்கிரமத்தில் ஜனசங்கைபதிகமாக, வியா
பாரம் பலத்தது. தொழிலாளிகள் வேலை கிடைக்குமென்னும் நிச்சய
நம்பிக்கையுடன் பட்டணங்களில் குடிபுகுந்தார்கள். ஐஸ்வர்யம் பல

மாகவே, நகரபரிபாலனக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. நந்தேயத்தில் பாடலிபுத்ர நகரத்திலும், மற்றும் மகத ராஜ்யத்திலுள்ள வேறு முக்ய நகரங்களிலும் நகரபரிபாலன சபைகள் ஏற்பட்டு கிரமமாய் நடந்து வந்தது யாவர்க்கும் தெரிந்திருக்கலாம். சமஸ்தானத்தின் நயனமாகிய ராஜதானிப்பட்டணத்தில் ராஜசபையில் விளங்கும் கவிகளும், கலைஞர்களும், பண்டிதர்களும், நாட்டியப்பெண்களும், நாடகஸ்தர்களும், பாடகஸ்தர்களும், விஸ்வகர்ம ஜாதியர்களும் வந்திருப்பது சகஜம். உல்லாசமாய்க் காலத்தைக்கழிக்க அவ்விடம் ராஜபுத்திரர்கள் வருவது கதைகளில் சாதாரணமன்றோ? முற்காலம்போல் இக்காலத்தில், மேற்றிசையோர்களால் நிர்மாணிக்கப்பட்ட பட்டணங்களிலும் இதர பட்டணங்களிலும் கிராமஜனங்கள் வந்துகொண்டே யிருக்கிறார்கள். இவ்வாறு வரும் ஜனங்கள் எவ்வாறு நகரவாசத்தை யனுபவிக்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

நெருக்கமான சந்து பொந்துகளில் குடியிருக்கும் ஜனங்களைப் பார்த்து நமது கிராமவாசி பரிதாபப்படுவார். பெரிய தெருக்களிலோ, மோட்டார் சப்தங்கள், ஜட்காவண்டியினிரைச்சல், டிராம்மணி இவைகளுக்கிடையில் திண்டாடித் தடுமாறுவார். சுவாசிக்க சுத்தமான காற்று இல்லாமல் இருப்பதையும், கரியமலமுதலிய அபானவாயுக்கள் பிராபல்யமாயிருப்பதையும் பார்த்துக் கடிவார். காய்கறிகளும், மண்டிச்சாமான்களும் விலையேறி விற்பதைக்கண்டு பயப்படுவார். எடுத்ததெல்லாம் செலவாகி, செலவாயிருப்பதை நோக்கி, பட்டணம் விட்டோட வழிதேடுவார்.

இஃது இங்ஙனமாக, நகரவாச இன்பங்களைப் பார்த்து ஆனந்திக்கலாம். தத்தம் காரியங்களையே ஜனங்கள் கவனிப்பதால், பிறருக்கு இடையூறு அதிகமாய்ச் செய்ய இயலாது. எல்லா ஜனங்களுடனும் வித்தியாசமில்லாமல் மரியாதையாய் நடக்கக் கற்றுக்கொள்ளலாம். மனவிசாலமேற்படும். பெண்டிர்களைக் குரூரமாக நடத்த வெட்கப்படுவார். உலக விஷயங்கள் நன்றாய்த் தெரியும்.

சலிப்பாயிருந்தால், உல்லாசமாய்க்காலங்கழிக்க உபாயங்கள் உண்டு. பொம்மைப்படத் தியேடர்களில் சற்றுநேரம் சாயாகை உட்கார்ந்தால் பூலோக விநோதங்கள் பார்க்கலாம். நாடெங்கும் புகழ்பெற்ற பாகவத சிரோமணிகளால் நடத்தப்படும் சத்காலக்ஷேபங்களை பிரதி வாரமும் கேட்கலாம். கீர்த்திபெற்ற சங்கீத வித்துவான்களின் திறமையைக் கண்டு களிக்கலாம். சர்க்கஸ்கள் உயர்தர நாடகக்கொட்டைகள் சென்று ஆநந்திக்கலாம். பரிக்ஷைகளில் ஒப்பேறி வித்யார்த்தி யென்னும் பட்டங்கள்பெற்று வயிறுவளர்க்க உபாயந்தேடும் மாணவர்கள் உயர்தரக் கலாசாலைகள் பட்டணங்களில் இருப்பதால் அங்கு வசிக்கப் பிரியப்படுகிறார்கள்.



நகரவாசத்தின் இன்பங்களும் தொல்லைகளும் மேற்கண்டனவும்
பிறவும் உள. ஆனால் நகரவாசத்தின் க்ஷேமத்தை யுத்தேசித்தே, கிராம
வாசம் சீர்பெற்றிருத்தல் அவசியம். நகரங்களில் வசிப்பவர் பிணிகளா
லும் நோய்களாலும் பாதிக்கப்பட்டு மெலிந்து போவதால், கிராமங்களி
னின்று இடை விடாமல் ஜனங்கள் நகரங்களை நிலைநிறுத்த வந்துகொண்
டேயிருக்க வேண்டி யிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் அளவின்றி
வந்து கொண்டிருக்கிறார்கள். கிராம சுகாதாரம், உல்லாசம், பஜனைகள்,
ஜலாதாரம் முதலியவை சீர்பட்டு நடந்தால் கிராம வாசிகளில் பலரும்,
கிராமங்களை முற்படுத்த முயலுவதுமன்றி, தேசத்தின் சாப்பாட்டு மூலா
தாரமான தானியங்கள் பயிரிட்டு வாழ்வதை மேன்மையாக நினைத்து
வாழ்வார்கள். தற்காலம் உழுவதே இகழ்ச்சியாக விளங்குகிறது. வேலை
செய்யாமல் நகர்ப்புறம் திரிகிறதே மகிழ்ச்சியாகப் பலர் எண்ணுகின்ற
னர். கிராமவாசத்தின் நேர்மையும் வசதியும், சிக்கனமும், நகரங்களில்
கஷ்டப் படுபவர்களே யறியக்கூடியது. அதன் அமைதியையும் நேர்மை
யையும் புகழ்ந்து பாடாத கவி கிடையாது. கிராம வாழ்க்கை நசிந்தால்,
நகர வாழ்க்கை நசித்துப்போம். கிராம வாசத்தை சீர்படுத்த முயலு
வதே தேசாபிமானிகளின் முக்கிய கடமையாகும்.

கே. ஆர். இராமகிருஷ்ணய்யர். பி. ஏ, பி. எல்.

---

# சிறுவர் பக்கம்.

## திருடன் ஒரு சீமாட்டியை ஏமாற்றினது.

சோழதேசத்தில் சீமாட்டி ஒருவளிருந்தாள், அவளுக்கு நகை
களின் மீது வெகு பிரியம். யாவரும் தன்னுடைய நகைகளையும் தன்னை
யும் புகழவேண்டு மென்று எங்கேயாவது சென்றால் மிகவுயர்ந்த நகை
களை யணிந்துகொண்டு செல்வாள். அரசனுடைய அரண்மனையில் ஒரு
கச்சேரி நடந்தது. அதற்கு இந்த சீமாட்டியும் தன்னை நன்றாக அலங்
கரித்துக்கொண்டு வந்திருந்தாள். சபையி லிருந்தவர்கள் தன்னையும் தன்
னுடைய நகைகளையும் பார்த்து வியக்கும் பொருட்டு தன்னுடைய நகை
களைக் கழற்றியும் துடைத்துக்கொண்டு மிருக்கையில் அரசியினுடைய
கண் அந்த சீமாட்டி மீது சென்றது. அந்த சீமாட்டி, அரசியும் தன்னு
டைய நகைகளைப் பார்த்து விட்டாளே யென்று, மிகக் கர்வமடைந்து தன்
னுடைய உடம்பை முன்னிலும் அதிகமாக குலுக்கிக்கொண் டிருந்தாள்.
இவற்றையெல்லாம் ஒரு திருடன் பார்த்தான்.

மறு நாட் காலையில் அந்த சீமாட்டி வீட்டில் ஒரு இராஜ சேகவன்
வந்து கூப்பிட்டு "அம்மா! எங்களுடைய அரசி தாங்கள் நேற்று கச்
சேரிக்கு வந்தபோது அணிந்திருந்த வைரக்கம்மல் எங்கு வாங்கியது,

என்ன விலை யென்று கேட்டுக்கொண்டு மாதிரிக்கு ஒரு கம்மலை வாங்கிக்கொண்டு வரச்சொன்னார்கள்" என்று கூறி பணிந்து நின்றான். அச்சீமாட்டி அரசியின் சிநேகத்தைக் கிடைத்தபோதே பெறவேண்டி கம்மலைச் சேவகன் வசம் கொடுத்து விட்டு தான் பின்னால் வந்து எல்லாச் சங்கதிகளையும் சொல்வதாகச் சொல்லியனுப்பினாள். தன்னை முன்னாள் போலவே அலங்கரித்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்ததும் தன்னுடைய கம்மலை திருடன் கொண்டுபோயினானென்று தெரியவந்தது. போலீஸ்காரர்களும் திருடனைக்கண்டு பிடிக்க முயற்சி செய்து வந்தார்கள். சில நாட்கள் கழிந்ததும் அச்சீமாட்டி வீட்டில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து "அம்மா! இன்னும் ஏன் வருத்தப்படுகிறீர்கள். நகை அகப்பட்டு போலீசில் இருக்கின்றது. அது தங்களுடையது தான் என்று நிரூபிக்கும் பொருட்டு அதன் ஜதையைத்தாருங்கள். அல்லது நீங்களே நேரில் வந்தாலும் வாருங்கள்" என்று கூறினான். அதற்கந்த சீமாட்டி "கம்மலைப் பெற்றுப் போங்கள் பின்னாலேயே வந்து விடுகிறேன்" என்று நகையைக் கொடுத்து தன்னை ஆபரணங்களால் அழகு செய்துக்கொண்டு போலீஸ் வந்து சேர்ந்தாள். வந்ததும் தன்னுடைய இரண்டுகம்மல்களையும் திருடனே கொண்டுபோனானென்று தெரியவந்து அச்சீமாட்டி மிக வெட்கமும் வருத்தமுமடைந்தாள்.

## புத்திகூர்மையுள்ள நியாயாதிபதி.

ஒரு வர்த்தகன் தன்னுடைய சரக்குகளை ஒரு கப்பலோட்டிவசம் ஒப்பித்து அதனை தன்னுடைய ஊரில் சேர்த்து விடும்படியாக ஏற்பாடு செய்திருந்தான். அக்கப்பலோட்டி அந்த சரக்கையெல்லாம் விற்றுவிட்டான். சொந்தக்காரன் வந்து கேட்கும்போது அவனிடம் தான் எக்காலத்திலும் கப்பலோட்டியாயிருந்ததில்லை யென்றும், வர்த்தகன் சொல்வது பொய் யென்றும் சாதித்தான். ஆகவே இருவருக்கும் விவாதம் அதிகரித்தது. நியாயஸ்தலத்திற்கும் இவ்வழக்குச் சென்றது. நியாயாதிபதியிடத்திலும் அக்கப்பலோட்டி தான் முன் சொல்லிய வாறே சொன்னான். நியாயாதிபதி "வர்த்தகரே! இந்த வழக்கு நூதனமாகவிருக்கிறது. இப்போது என்னால் தீர்மானஞ்செய்யமுடியவில்லை. ஆகையால் இதை பின்னால் விஜாரிக்கின்றேன்" என்று சொல்லி விசாரணையை நிறுத்திவைத்தான். கட்சிக்காரர்கள் திரும்பியதும் நியாயாதிபதி "ஏ! கப்பலோட்டி! நான் உன்னிடத்தில் பேசவேண்டிய சங்கதியொன்றிருக்கிறது" என்று உரத்துக்கூப்பிட்டார். பொய் பகன்ற கப்பலோட்டி திரும்பிப் பார்த்தான். நியாயாதிபதி கட்சிக் காரர்களை மறுபடியும் கூப்பிட்டு வர்த்தகன் பக்கமாக தீர்ப்புச்செய்ததுமன்றி மோசஞ் செய்ய பிரயத்தனஞ் செய்த கப்பலோட்டியைத் தண்டனை செய்தார்.

தி. எம். மார்க்கசகாயம்.



# உஷ்ணம் பரவுவதெப்படி?

## HOW HEAT IS TRANSFERRED?

உஷ்ணம் ஓர் இடமிருந்து மற்றொரு இடத்துக்குப் பரவுகின்றதென்பது உங்கள் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். எண்ணெய் காய்ச்சக் கரண்டியை அடுப்பில் போட்டிருந்தோமானால், நெருப்பில் இருக்கும் பாகமின்றி, கரண்டியின் காம்பும், சில நிமிஷம் கழித்து உஷ்ணமாகின்றது. உலையில் ஜலத்தை ஏற்றிய சில நிமிஷங்களில் ஜலம் முழுவதும் சூடேறுகின்றது. நெருப்பின் பக்கத்தில் உட்கார்ந்து இருப்பின் உமது கைகால்கள் சுட்டுப்போகின்றன. இங்கே காட்டிய மூன்று காரியங்களிலும் உஷ்ணம் ஒரேமாதிரியாய்ப் பரவுகின்றதா? சற்று நிதானமாய் யோசிப்பின் ஒவ்வொன்றுக்கும் உள்ள வித்தியாசம் புலப்படும்.

முதல் சொன்ன பரிக்ஷையை சற்று கவனிப்போம். கரண்டிக் காம்பு எவ்வளவு சூடாய் இருக்கின்றதென்று தொட்டுப் பாருங்கள். சுமார் 'வெத வெத' வென்றிருக்கின்றதல்லவா? ஒரு அங்குலம் அப்பால் தள்ளித்தொட்டுப்பாருங்கள். அங்கே எப்படியிருக்கின்றது? காம்பைவிட அவ்விடம் சற்று அதிக சூடாய் இருக்கின்றது. அப்படி முன்னை தொட்டுக்கொண்டே போனால் எவ்விடம்வரையில் தொடக் கூடுமென்று பாருங்கள். 4, 5, அங்குலத்துக்கு அப்பால் தொடமுடிகிறதில்லை. அடுப்பில் இருக்கும் பாகம் எவ்வாறு இருக்கின்றது? சிவக்கக் காய்ந்து இருக்கிறதல்லவா? ஆகவே அடுப்பினின்று உஷ்ணம் முறையே கரண்டிக்கு வந்து அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் காம்பு வரையில் பரவுகின்றது. இவ்வாறு பரவுவதால் அடுப்பின் பக்கத்தில் இருக்கும் பாகங்கள் முறையே அப்பால் உள்ள பாகங்களைவிட சூடு அதிகமாய் இருக்கின்றன; அப்பால் போகப்போக சூடுகுறைகின்றது. அப்படியானால் கொஞ்சநேரம் தாமதித்தால் கரண்டியின் காம்பும் சிவக்கக் காய்ந்து விடுமா? அரைமணி நேரம் பார்ப்போம். ஒருக்கால் காம்பு முன்னிலும் அதிக சூடாய் இருக்கலாம். இன்னும் அரைமணி நேரம் பார்ப்போம். முன்போலவே இருக்கின்றதே யொழிய சூடு அதிகமில்லை. ஏன் அப்படி? அரைமணி நேரம் கழிந்தபின் உஷ்ணம் கரண்டியின் வழியாய் வருவதில்லையா? வருமாயின் ஏன் காம்பும் கூட நிமிஷத்துக்கு நிமிஷம் உஷ்ணம் ஏறிக் கடைசியாய் அடுப்பில் இருக்கும் பாகம் போலவே சிவக்கக் காயக்கூடாது?

உமது கேள்விகளுக்கு பதில் சொல்லு முன் உஷ்ணத்தைப் பற்றி நாம் எழுதியுள்ள முதல் பாடத்தை மறுபடி படிக்கவேண்டும். ஒரு சூடான வஸ்துவை ஓர் அறையில் மேஜையின் மேல் வைத்து இருந்தால் என்ன

வாகின்றது? அது குளிர்ந்துகொண்டே வருமென்பீர். என்? வாயு அந்த வஸ்துவை விட சூடு தணிவாய் இருப்பதால் அவ்வஸ்துவினின்றும் வாயுவுக்கு உஷ்ணம் போய்க்கொண் டிருக்கின்றது. இக்காரணத்தைக் கொண்டு காண்டியின் தன்மையையும் சோதனை பண்ணுங்கள். நெருப்பினின்று காண்டி வழியாய்க் காம்பிற்கு உஷ்ணம் வரவர காண்டியின் எல்லா பாகமும் சிறிது சிறிதாய்ச் சூடேறுமல்லவா? சூடேறின போது, சுடும் பாகங்களிலிருந்து சூடு தாழ்ந்துள்ள வாயுவுக்கு உஷ்ணம் போய்க்கொண்டே இருக்குமல்லவா? ஆகையால் நெருப்பினின்று உஷ்ணம் வந்துகொண்டே இருக்க, அவ் வரும்படியிலிருந்து வாயுவுக்குக் கொடுப்பதனால் உஷ்ணம் செலவழிந்து கொண்டும் இருக்கின்றது. வரவில் செலவுபோக மீதி இருக்கின்றதல்லவா—அவ்வுஷ்ணமே காண்டியின் சூட்டை அதிகமாக்குவது. வரவும் செலவும் சரியாய் இருக்கும் தன்மை சீக்கிரம் கிட்டுகின்றது. அந்நிலை வரும் வரையில் ஒவ்வொரு பாகமும் சூடேறிக் கொண்டே இருக்கும். அந்நிலை வந்தவுடன் டெம்பரேசர் நிலைத்து நின்று விடும். அடுப்பின் பக்கத்தில் உள்ள பாகங்களில் வரவு அதிகம்; அங்கே சூடேறுவதும் அதிகம்; சூடு அதிகமாய் உள்ள பாகத்திலிருந்து வாயுவுக்குச் செல்லும் உஷ்ணமும் அதிகம்.

காம்பின் பக்கங்களிலோ வரவும்குறைவு; சூடேறுவதும் குறைவு; செலவும் குறைவு. ஆகையால் அவ்விடங்களில் மீதியும் குறைவே.

ஆர். கே. சுவாமி, பி. ஏ., எல். டி.

---

## தற்போதைய நிலைமையைப்பற்றி லார்டு பெண்ட்லண்டு.

"சென்னை கவர்னரின் வரவழைப்புக்கிணங்கி 29உ காலை 10-மணிக்குச்சென்னை கவர்ன்மெண்ட் ஹவுஸில், யுத்த பண்டுக் கமிட்டி மெம்பர்கள்வந்து கூடினார்கள். அந்த மீட்டிங்கில் லார்டு பெண்ட்லண்டு அக்கிராசனம் வகித்தார். அவர், அந்தக் கமிட்டியார் செய்த நல்ல வேலைகளைப் புகழ்ந்து பேசினார். அதன் பிறகு பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. யுத்தத்திற்காக வசூலாகும் பணத்தில் 100-க்கு 75 வீதம் ஸிம்லாவிலுள்ள ஸெண்ட்ரல் கமிட்டிக்கு அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது. மீதிப்பணத்தை டிஸ்ட்ரிக்ட் ஆபீஸர்களுடன் கலந்து அவர்களுடைய யோசனைப்படி உள்ளூரில் நேரிடும் கஷ்ட நிவர்த்திக்காகச் செலவு செய்ய வேண்டுமென்றும், உள்ளூரிலும் வெளியூரிலும் யுத்தத்தினால் நேரிடக்கூடிய (சென்னையில் ஏற்கெனவே நேரிட்டிருக்கும்) ஜனங்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதில் மீதிப்பணம் சரியாகச் செலவு செய்யப்பட்டு வருகிறதா என்பதை விசாரித்து அறிவிப்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும், அக் கமிட்டியார் கவர்ன் மெண்டுடன்



சேர்ந்து ஒத்துழைப்பார்கள் என்றும், ஜனங்களுக்குக் கஷ்டம் இது வரையிலும் அவ்வளவு அதிகமாக நேரிடவில்லையென்றும், இரண்டொரு ஜில்லாக்களில் நேரிட்டிருக்கின்றனவென்றும், சென்னையில் ஏற்பட்டிருக்கும் இம்பீரியல் பிராஞ்சுப் பண்டும், சென்னை யுத்தபண்டும், திருப்திகரமாய் வேலை செய்திருக்கிறதென்றும், இந்த ராஜதானியிலுள்ள சகல வகுப்பாரும் தாராளமாய்ப் பொருளுதவி செய்திருக்கிறதைப் பார்த்து பொது ஜனங்கள் சந்தோஷப் படுகிறார்களென்றும், வங்காளக் கடலிலும், இந்திய சமுத்திரத்திலும் எம்டன் என்ற ஒருகப்பலைத் தேடுவது வைக்கப்போரில் ஒரு ஊசியைத் தேடுவதுபோலாகுமென்றும் பல க்ரூஸெர்கள் எம்டனைத் தேடிக் கொண்டிருக்கின்றனவென்றும், இனி எம்டனாவது, வேறு ஜெர்மன் கப்பலாவது வருமென்ற பயத்தை ஜனங்கள் ஒழித்து விடலாமென்றும், எம்டன் சென்னைத் துறைமுகத்திற்குச் சமீபத்திலாவது, அல்லது வெகு தூரத்திலாவது இல்லையென்று நம்பத்தக்க ஆதாரங்களின் பேரில் தாம் உறுதியாய்ச் சொல்லக்கூடுமென்றும் இவ்வித ஆபத்து மறுபடியும் நேரிடாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் ஆகையால் ஜனங்கள் இனி பீதி யடைவதற்கு யாதொரு காரணமுமில்லையென்றும், பொய் வதந்திகளைக் கட்டி விட்டுக் கொண்டிருக்கும் துஷ்டர்களின் வார்த்தைகளை நம்பக்கூடாதென்றும் ஜனங்களுக்கு ஜெனால் கமிட்டி மெம்பர்கள் தைரியம் சொல்லிவருவார்கள் என்று தாம் நம்புவதாகவும் கவர்னர் பேசினார்."

சுதேசமித்திரன்.

---

## நல்ல க்ரம சிக்ஷையின் அடையாளங்கள்.

1. பாடசாலையில் சப்தமில்லாமலிருப்பது.
2. கட்டளைகளுக்கு உடனே சந்தோஷத்துடன் கீழ்ப்படிதல்.
3. பாடம் மாற்றுவது, வகுப்பினிடம் மாற்றுவது, இவைகளில் சப்தமில்லாமலிருப்பது; ஆனால் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும்.
4. பாடசாலையின் யோக்கியதை.
5. சிக்ஷை அதிக குறைவாயிருப்பது.

உபாத்தியாயர் தமது வகுப்பில் பாடம் நடத்தும்பொழுது பிள்ளைகள் கவனிக்கிறார்களா வென்று அறியவேண்டும். இதற்கு வகுப்பு சுற்றிலும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அடிக்கடி பிள்ளைகளை கேள்வி கேட்டு விடைபெறவேண்டும். பிள்ளைகள் உட்காரும் இடம் தாராளமாயிருக்கவேண்டும்.

போதிக்கும் விஷயங்களை காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக்கொ

ண்டே வரவேண்டும். ஒரு விஷயத்தைக் குறித்து நீடித்து போதிக்கவே கூடாது. அப்படி செய்தால் பிள்ளைகளுக்கு வெறுப்புண்டாகும். வெறுப்புண்டானதும் கவனம் குறையும். கவனம் குறையவே, கிரமசிக்ஷைக்கு பங்கம் உண்டாகும்.

உபாத்தியாயர் எவ்விஷயத்தை போதித்தபோதிலும் பிள்ளைகளுக்கு நன்முக விளங்கும்படி அதைப் போதிக்கவேண்டும். மேலும் பிள்ளைகள், தாங்களே கிரமப்பட்டு செய்யவேண்டிய காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்து சொல்லவேண்டும்.

அடிக்கடி ட்ரில், இடம் மாற்றல், ஒருவரை யொருவர் கேள்வி கேட்டுக்கொள்வது, யாவரும் சேர்ந்து விடைகொடுப்பது முதலியவைகளை உபாத்தியாயர் கையாடவேண்டும்.

இவ்விதம் செய்துவந்தால் வகுப்பு க்ரமசிக்ஷை நன்முக யிருப்பதுடன், பிள்ளைகளுக்கு கவனம், சுறுசுறுப்பு, உபாத்தியாயரிடத்தில் அன்பும், மரியாதை முதலியவைகளும் விருத்தியடையும் என, சிறந்த லண்டன் நகரத்திலுள்ள உபாத்தியாயர் ஒருபத்திரிகையில் எழுதுகிறார்.

உபாத்தியாயர்.

---

## ஆப்பிரிக்காவைக் கண்டு பிடித்தவர்கள்.

(டேவிட் லிவிங்ஸ்டன் 234-வது பக்கத் தொடர்ச்சி)

சிறிது காலஞ் சென்றபின் லிவிங்ஸ்டன் மிஸ்டர் மொப்பட்டின் குமாரத்தியை மணம் புரிந்து, அங்கேயுள்ள சுதேசிகளுக்கு தம்மாலியன்ற நற்போதனைகளைப்புகட்டிவந்தார். மொப்பட்டும் அவர்மனைவியாரும் அவ்வூர் ஜனங்களின் நடவடிக்கை முதலியவைகளைச் செவ்வனே அறிந்து அவர்களிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். லிவிங்ஸ்டன் சிறிது காலம் மோபோட்ஸா விலிருந்து பின் இங்கு மழை பெய்யாததால் நீர் வரண்டு எங்குபார்த்தாலும் ஜலகஷ்டமதிகரிக்கவே, இவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போனார். இங்கேயும் ஜலகஷ்டம் உண்டானது. இங்குள்ள நதியில் ஜலமில்லை. ஊற்று நீர் கூட அகப்படவில்லை, என்ன செய்வார்! வெயில் அதிகமாக யிருந்தது. தானியம் விளையவில்லை. புல் பூண்டுகள் வாடி உலர்ந்து போயின. மரங்களிலுள்ள இலைகள் உலர்ந்து வாடியிருந்தனவாம். கருமையான எறும்புகள் விருத்தியடைந்து ஜனங்களை இம்சித்து வந்ததாம். லிவிங்ஸ்டனையும் அவர் மனைவியையும் இவைகள் தொந்திரவு செய்து வந்தனவாம். காட்டில் பக்ஷிகளைக் கொன்றுதான் புசிக்க வேண்டியிருந்ததாம். இவ்வித கஷ்டமான இடத்தை விட்டு வேறு வசதியான இடத்திற்குப் போக எண்ணினார். நல்ல வேளையாய் அகஸ்மாத்தாய் இவர் இருந்த இடத்திற்கு சுதேசிகளில் சிலர்வந்தார்கள். இவர்கள் "வடக்குதிசையில் இந்த இடத்தை விட



மேலான இடமிருக்கிறது. அங்கு ஒரு ஏரியும் ஏராளமான ஆகாரமும்
உண்டு. நாம் அவ்விடத்திற்குப் போகலாம்" என்று லிவிங்ஸ்டனிடத்
தில் சொன்னார்கள். மேலும் அவருக்கு அங்குவர இஷ்டமிருந்தால்
தாங்கள் வழியைக் காண்பிப் பதாகவும் சொன்னார்கள். "இதுவரையி
லும் அவ்விடத்திற்கு அந்நிய தேசத்தவர் ஒருவரும் போனதேயில்லை.
ஏனெனில் ஒரு அகலமான காட்டைக் கடந்து போக வேண்டும்" என்
றும் சொன்னார்கள்.

லிவிங்ஸ்டன் இவர்கள் சொன்னவற்றைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து
அவர்களுடன் போக பிரயாணமானார். இவர்கள் முதலில் வெய்யிலால்
மிகவும் கஷ்டப்பட்டார்கள். சிறிது நாட்கள் சென்றபின் பசுந்தரையைக்
கண்டார்கள். லிவிங்ஸ்டன் சிலரை அங்கு ஊற்று தோண்டும்படி சொன்
னார். சிலர் ஊற்றைத் தோண்டவே நல்ல தண்ணீர் தென்பட்டது.
இவர்களெல்லாரும் அத்தண்ணீரை அருந்தினார்கள். புசிப்பதற்காக கையி
லிருந்த ஆகாராதிகள் ஆனவுடன் அங்கு என்ன ஆகாரம் அகப்படு
மென்று தேடிப்பார்த்தார்கள். மானைப்போன்ற ஒருவித மிருகம் தென்
பட்டது; அதைக்கொன்று அதன் மாமிசத்தைப்புசித்தார்கள் இந்த
மிருகம் ஒட்டகத்தைவிட வெகுகாலம் நீர் அருந்தாமல் பிரயாணம் செய்
யும் என்பதைக் கேட்டவுடன் இவர் கொண்ட ஆச்சரியத்திற்களவில்லை.
இவர்கள் சமீபத்திலிருந்த காட்டில் நுழைந்து இந்த ஜாதி மிருகங்களை
வேட்டையாடிக்கொண்டு வந்து தங்கள் ஆகாரத்திற்காக வைத்துக்கொண்
டார்கள் இம்மிருகத்தின் மாமிசம் புசிக்க வெகு ருசிகரமாயிருந்ததாம்.

இங்கிருந்து இவர்கள் உத்தேசித்து வந்த இடத்திற்குப் போக
பிரயாணம் செய்யலானார்கள். சிறிதுகாலம் பல கஷ்டங்களை அனுப
விக்க வேண்டியிருந்தது. கடைசியாக ஒரு கிராமத்திற்கு வந்தார்கள்.
இவருக்கு இப்பிரயாணத்தில் அனேக ஆடுமாடுகளும், நாய்களும் இறந்து
விட்டன. அவைகளுக்குப்பதிலாக அந்தக் க்ராமத்து தலைவனைக் கண்டு
தங்களுக்கு ஆடுமாடுகள் நாய்கள் தேவை என்று சொல்லவே, அத்தலை
வன் நல்ல எண்ணமுடையவனானதால் இவர்கள் கேட்டதையெல்லாம்
கொடுத்து உதவி, தன் ஊரிலேயேயிருந்து தன் கிராமத்து ஜனங்களுக்கு
நற்போதனைகளைப் போதிக்கும்படி லிவிங்ஸ்டனை வேண்டிக்கொண்டான்.
லிவிங்ஸ்டன் அவ்விதமே சிறிதுகாலம் செய்துவந்தார். ஆனால்
அக்கிராமத்து தலைவன் இறந்துவிட்டான். லிவிங்ஸ்டனுக்கும் அவருட
னிருந்த சுதேசிகளுக்கும் உதவி செய்பவர்களுமில்லை. அக்கிராமத்தார்
தங்கள் தலைவன் இறந்ததற்குக் காரணம் லிவிங்ஸ்டன் தான் என்று
சொன்னார்கள். இவர் அவ்வசீதச்சொல்லைக் கேட்க விரும்பாமல் அக்கிரா
மத்தைவிட்டு வேறு சிற்சில இடங்களுக்குச் சென்றபின் இங்லாந்து
க்குத் திரும்பிப்போக எண்ணினார்

சிறிது காலஞ்சென்றபின் லிவிங்ஸ்டன் தமது இங்லாண்டிற்குப் போனார். அங்குள்ளவர்கள் இவரைக்கண்டு மகிழ்ந்து, இவருக்கு நல்வரவு கூறினார்கள். இங்கிலாந்தில் இவருக்கு டாக்டர் பட்டமளிக்கப்பட்டது. இவர் தமது மனைவியுடன் சிறிதுகாலம் இங்கேயிருந்தபின் ஆப்ரிகாவுக்குப் போக பிரயாணமானார்.

இவர் ஆப்ரிக்காவுக்கு இவர் மனைவியுடனும் சில நண்பர்களுடனும், வந்துசேர்ந்ததும் இவர் முன்னிருந்தவிடத்திலேயே சிறிதுகாலமிருந்தார். இவருடையமனைவி இறந்துவிடவே, இவருக்குபெருத்த துக்கமுண்டானது. ஆயினும் இதைச் சகித்துக்கொண்டு, தான் எடுத்தகாரியம் முடிவுபெறும் வரையில் விடாமுயற்சியுடன் தாம் இன்னும் பார்த்திராத நாடுகளைக்காணப் புறப்பட்டார். சிலமுக்கியமான நதிகளின் உற்பத்திஸ்தானங்களைக்கண்டு பிடித்தார். காடுகளுக்கு மத்தியிலிருந்த கடலைப்போன்ற பெரியதாயுள்ள ஏரிகளைக்கண்டு பிடித்தார். ஐரோப்பா கண்டத்தவர்கள் வசிக்கத்தகுந்த இடத்தைத் தேடிகண்டுபிடித்தார். இவ்விதம் சிறிதுகாலம் செய்தபின் தேகசௌக்கியத்திற்காக இங்கிலாந்திற்கு வந்தார். ஆனால் இவர்மனது ஆப்ரிக்காவில் தானிருந்தது. தமது பந்துமித்திரர்களுடன் சிறிதுகாலம் உல்லாசமாய் கழித்தபின் ஆப்ரிக்காவுக்குப்போய் நாகரிகமற்ற ஜாதியார்களிருக்குமிடங்களுக்குச் சென்று அவர்களையெல்லாம் தமது போதனையால் நல்லவழியில் திருப்பி அவர்களுக்கு அறிவையூட்டிவந்தார். அடிக்கடி காடுகளைக்கடந்தும் பற்பல கிராமங்களுக்குச் சென்றும் வந்தார். இப்படி செய்தமையால் இவருக்குசுரம் கண்டது. இவர் மிக்க பலஹீனமடைந்தார். இவர்வேறு இடங்களுக்குப்போகவில்லை. கடைசியாக உஜி ஜி என்றஇடத்தில் தங்கியிருந்தார். இங்கு ஒருமனிதன் இவருக்கு ஆகாரமும், உடுக்க நல்ல உடுப்பும் கொண்டுவந்து கொடுத்தான்.

இவருக்குதேக சௌக்கியமானவுடன் பழையபடி காடு, வனம் முதலியவைகளைச்கடந்து ஆங்காங்குள்ள ஜனங்களைச் சீர்திருத்தமுயன்றுவந்தார். எவ்வளவு நாள் இவ்விதம் கஷ்டப்பட்டுக்கொண்டே யிருக்கமுடியும்? இவரும் மனிதர்தானே. இவர் தேகம்குன்றி வியாதிகண்டது. பலஹீனம் அதிகரித்தது. இவர் இலால வென்ற இடத்தில் தங்கினார். இங்கு இவருக்கு வியாதி அதிகரித்துவிட்டது. தமது மனிதரிடத்தில் "எனக்கு ஒரு குடிசையைக்கட்டுங்கள், நான் அதிலேயே இருந்து இறந்துவிடுகிறேன். எனக்கு குளிர் அதிகரிக்கிறது. நிரம்ப உலர்ந்த வைக்கோலை உள்ளே போடுங்கள்" என்றார். உடனே அவர்கள் அவ்விதமே குடிசையைக்கட்டி அதில் அவரைப்படுக்கவைத்தார்கள். மறுநாள் காலையில் அவர் தமதுபடுக்கைக்கு சமீபத்தில் முழங்காலிட்டு கடவுளை தியானம் செய்பவர்போல் இறந்துகிடந்தாராம். இவரதுவேலைக்காரர்கள் இவரைபத்திரப்படுத்தி ஸேன்ஸிபாருக்குக் கொண்டுபோய் அங்கிருந்து இங்லாண்டுக்கு கொண்டுபோய்



வெள்ட்மின்ஸ்டர் அபேயில் அடக்கம் செய்தார்கள். ஜனங்களைத்திருத்தி நல்வழிக்குக்கொண்டுவரவேண்டுமென்றுபாடுபட்ட லிவிங்ஸ்டன் என்ற பிரயாணி தமது உயிரையே இழந்துவிட்டார்.

பத்திராதிபர்.

---

## இரட்டைக்கண்ணி

(243-வது பக்கத்தொடர்ச்சி)

இரட்டைக்கண்ணி மரத்திலிருந்து கீழே இறங்கினளோ இல்லையோ ஒரு அரசகுமாரன் குதிரைசவாரி செய்துகொண்டு இம்மரத்தின் சமீபத்தில் வந்து கொண்டிருந்தான்.

"சிறிய இரட்டைக்கண்ணியே! துரிதமாக வந்து பீப்பாய்க்குள் போய்விடு. அந்தச்சிறிய வாலிபன் உன்னைக் கண்டால் எங்களுக்கு அவமானமல்லவா" என்று இவளது இருசகோதரிகளும் கூவிச் சொன்னார்கள். உடனே, இவர்கள் மரத்தின் கீழ் வைத்திருந்த பீப்பாயை உருட்டி அதினுள் நுழைந்து மறைந்திருக்கும்படி இரட்டைக்கண்ணியை உள்ளே தள்ளிவிட்டார்கள்.

அரசகுமாரன் மரத்தண்டை வந்தவுடன், அது விநோதமாய் இருப்பதைக்கண்டு இதைப்பார்க்க நின்றான். இதைச் செவ்வனே பார்த்து ஆச்சரியங் கொண்டான்.



"இந்த அழகு பொருந்திய மரம் யாருடையது" என்று அரசகுமாரன் கேட்டான்.

அங்கு நின்றுகொண்டிருந்த இரட்டைக்கண்ணியின் இரு சகோதரி

களும் "அது எங்களுடையது" என்று சொன்னார்கள். அப்படியானால் எனக்கு ஒரு கிளையைமாத்திரம் ஒடித்துக் கொடுத்தால், உங்களுக்கு என்ன தேவையோ அதைக் கொடுக்கிறேன் என்றான் அரசகுமாரன்.

சகோதரிகளில் ஒவ்வொருத்தியும் ஆசைமேலிட்டு அம்மரத்தின் மீது ஏறி ஒரு கிளையை ஒடிக்க முயன்றாள். மரக்கிளையோ இவர்களது கைக்குச் சிக்காமல் தாவிச்சென்றது. இவ்விதம் இவர்கள் பலதடவை முயன்றார்கள். இவர்கள் கைக்கு மரக்கிளை அகப்படவேயில்லை. அது தாவிச்சென்றது. அரசகுமாரன் நகைக்க ஆரம்பித்தான். அதிகமாக அரசகுமாரன் கல்லென்று சிரித்தான். இவ்விதம் அரசகுமாரன் செய்தது இவர்களுக்கு அதிக கோபத்தை மூட்டியது.

இவ்வித வேடிக்கையை பீப்பாய்க்குள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்த இரட்டைக்கண்ணி இரண்டு மூன்று பழங்களை வெளியில் உருட்டிவிட்டாள். இவைகள் அரசகுமாரன் காலண்டை உருண்டு வந்தன. அச்சமயம் அரசகுமாரன் இப்பழங்களைக்கண்டு அதிசயித்து பீப்பாயண்டை போய் பார்த்தான். அதில் இரட்டைக்கண்ணி தனது முன் தாங்கியில் தான் பறித்த பழங்களை வைத்திருப்பதைக் கண்டான்.



"ஓ சிறிய பெண்ணே! இம்மரத்திலிருந்து ஒரு கிளையை எனக்கு ஒடித்துக் கொடுக்க முடியுமா" என்று அரசகுமாரன் கேட்டான்.

"அப்படி என்றால் செய்யமுடியும்; ஏனெனில் அது என்னுடைய மரம்" என்று இரட்டைக்கண்ணி புன்னகையுடன் சொன்னாள்.

உடனே இரட்டைக்கண்ணி மரத்தின் மீது ஏறி வெகு சுலபமாக ஒரு மரக்கிளையை ஒடித்து, கீழே இறங்கி அதை அந்த அரசகுமாரனுக்குக் கொடுத்தாள்.



அரசகுமாரன் மிகவும் மகிழ்ந்து, "அம்மா, உனக்கு இதற்குப் பதிலாக என்ன வேண்டும்" என்று கேட்டான்.

இவளுக்கு இவன் அரசகுமாரன் என்று தெரியவே, "ஓ அரசகுமாரனே! நான் எப்பொழுதும் இவ்விடத்தில் பசி பசியென்று தவிக்கவேண்டியிருக்கிறது. என்னை என் சகோதரிகள் அடிக்கிறார்கள். என்னை அவர்கள் எப்பொழுதும் வேலை செய்யச் சொல்லுகிறார்கள். இப்படி வேலை செய்தும் குடிக்க நீர்கூட அவர்கள் எனக்கு கொடுப்பதில்லை. இவ்வளவு இடுக்கண்கள் எனக்கு உண்டு. எப்பொழுதும் விசனமே என் மனதில் குடிகொண்டிருக்கிறது. ஆகையால் அரசகுமாரனே! தயவு செய்து என்னைத் தங்களுடன் இட்டுக்கொண்டு போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றாள் இரட்டைக்கண்ணி.

அரசகுமாரன் இச்சிறு பெண்மணியின் மீது மனமிரங்கி இவளை தன் குதிரையின் மேல் ஏறி உட்காரும்படி சொல்லவே அவள் உட்கார்ந்தாள். உடனே அரசகுமாரன் வேகமாக குதிரைசவாரி செய்து தன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். உடனே இரட்டைக்கண்ணியை உள்ளே அழைத்துக்கொண்டு போய் தன் தாய் தகப்பனாரிடத்தில் இவள் சரித்திரம் முழுவதையும் விவரமாய்ச் சொன்னான். அவர்களுக்கும் இப்பெண்மணியின் மீது ப்ரியமுண்டானது. தங்கள் அரண்மனையிலேயே அவளை வைத்துக்கொண்டு தங்கள் பெண்ணைப்போல் பாவித்து வளர்த்து வந்தார்கள்.

இவளுக்கு தக்க விவாக வயது வந்தவுடன் இவளை தங்கள் குமாரனுக்கு மணம்புரிவித்தார்கள். பட்டதகஷ்டங்களையெல்லாம் அநுபவித்த இச்சிறு பெண்மணி கடவுள் கிருபையால் நல்ல ஸ்திதிக்கு வந்தாள். இவள் இதைநினைத்து, கடவுளை த்யானம்செய்துவந்தாள். யாவருக்கும் நல்லவளென்று பேரெடுத்தாள்.



(முற்றிற்று.)

———

# ஹாஸ்யத் துணுக்குகள்.

ஒரு மாரி நாளில் ஒருவன் ஒரு குடையை ஒரு சத்திரத்தின் தாழ்வாரத்தில் வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான். நுழையுமுன் அந்தக் குடையில் ஒரு காகிதத்தில் "குறிப்பு" யோபனைவதுபோல் அறையக் கூடிய பலம் பொருந்திய ஒருவனுக்கு இந்தக்குடை சொந்தம்: ஐந்து நிமிஷத்தில் திரும்பிவிடுவான்" என்று எழுதி குடையில் சொருகிவிட்டுச் சென்றான். கொஞ்ச நேரங் கழித்து வெளியே வந்து பார்க்கையில் குடையைக் காணமல் ஒரு துண்டு கடிதம் மட்டுமிருந்தது. அதில் "அறிவிப்பு" ஒரு மணிக்கு 30 மைல் நடக்கக்கூடிய ஒருவனால் குடை கொண்டு போகப் பட்டது. திரும்பிவரவே மாட்டான்." என எழுதியிருந்தது.

*  *  *  *

உபாத்தியாயர்:—"ஏண்டா! நீ இந்தக்காரியம் செய்தாயா? செய்யல்லையா?"

பையன்:—அடிப்பட்டவனாதலால் அழுதுகொண்டே—ஹா ஹா.

உபாத்தியாயர்:—கோபித்து, செய்தேன், செய்யல்லைன்னுசொல்லேண்டா!

பையன்:—"செய்தேன், செய்யல்லை, சார்!"

*  *  *  *

இனிஸ்பெக்டர்:—"பூமி எவ்விதமாயிருக்கிறது?"

பையன்:—புதன், வியாழன், வெள்ளி, சனி, இத்தினங்களில் குடுக்கை போன்றும் மற்றதினங்களில் உருண்டையாயுமிருக்கும்.

இனிஸ்:—(உபாத்தியாரைப்பார்த்து) ஏன் ஐயா? எப்படி?

உபாத்:—நான் உதாரணங் காட்டிக்கூட சொல்லிக்கொடுத்தேனே! அடா!

பையன்:—ஆமாசார்! நான் சொல்றேன்!

எங்கசார் வந்து பூமி இதுபோலிருக்கும்னு தன்னுடைய பொடிக் குடுக்கையைக் காண்பித்து சொல்லிக் கொடுத்தார். சார் வந்து புதன், வியாழம், வெள்ளி, சனிக்கிழமைகளில் குடுக்கை கொண்டுவருவர். மற்றநாட்களில் உருண்டையான ஒரு டப்பி கொண்டுவருவர். நான் சொன்னது சரிதானே!

*  *  *  *

பையன்:—என் அம்மா கதை சொல்றேன் கேக்கிறாயா?

அம்மா:—சொல்லேன்:

பையன்:—கதை சொன்னா அடிக்கமாட்டியே.?

அம்மா:—என்னத்துக்காக அடிக்கறது கதை சொன்னாக்கே?

பையன்:—"ஒரூரில் ஓரம்மா இருந்தாள். ஒரு பிள்ளை அவளுக்குண்டு.



அந்தப்பிள்ளை ஒருநாள் அவனம்மாளுக்குச் சொல்லாதே பட்சணத்தை யெல்லாம் தின்றுவிட்டான்" என்று சொல்லியபின் ஓடிவிட்டான்.

வி. என். ராஜ.

---

# சமாச்சாரக் குறிப்பு

## நமது பத்திரிகை

நமது பத்திரிகையில் இனி உபாத்தியாயர்களுக்கு உபயோகமான போதனாமுறை சம்பந்தமான விஷயங்களும், வியவசாயம், கோஆபரேடிவ் சொஸைட்டியின் நன்மை, முதலியவைகளும் பிரசுரிக்கப்படும். நமது பத்திரிகை இப்பொழுது இருவகுப்பாருக்கும் உபயோகமாயிருந்து வரு கிறதென்பதைக் கேட்க நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். நாம் இன்னும் இப்பத்திரிகையை பற்பல வழிகளில் விருத்திக்குக் கொண்டுவர முயன்று வருகிறோம். இது அவ்விதம் விருத்தியடையுமாறு பலகனவான்கள் இதன் உபயோகத்தையறிந்து இதற்கு கையொப்பஞ்செய்ய முன் வருவார்கள் என்று நம்புகிறோம். அதிக கையொப்பக்காரர்கள் இந்த டிசம்பர்மீ கடைசிக்குள் சேர்ந்தால் நாம் இப்பத்திரிகைக்கு இன்னும் 8 பக்கம் அதிக மாக சேர்க்கவும் அதிக சித்திரப்படங்கள் பிரசுரித்து வரவும் ஏற்பாடு செய்வோம். ஆகையால் இன்னும் இதை விருத்திக்குக் கொண்டுவருவதில் நமக்கு உதவிபுரிய பல கனவான்கள் முன்வருவார்களென்று நம்புகிறோம்.

சென்னை கவர்ன்மெண்டார் ரூ 147,922 புதிய பாடசாலைகளை ஸ்தா பிக்கவும், இப்பொழுதிருக்கும் எலிமெண்டரி பாடசாலைகளில் இன்னும் தேவையான உபாத்தியாயர்களை நியமிக்கவும் உத்திரவு செய்திருக்கிறது யாவருக்கும் சந்தோஷத்தையுண்டாக்கும்.

கோயம்புத்தூர் காலேஜுக்கு ம-ா-ா ஸ்ரீ கே. எஸ். வைத்தியநாத அய்யர் அவர்களை ஆக்டிங் ப்ரின்ஸ்பாலாக அக்காலேஜ் கமிட்டி நியமித் திருப்பதைக்கேட்க சந்தோஷப்படுகிறோம்.

மதுரையிலுள்ள கவர்ன்மெண்டு பெண்பாடசாலையில் பரிசளிப்பு உற்சவம் சமீபத்தில் நடந்தது. அச்சமயம் மிஸ். E. M பவர் சபைத்தலை மையை வகித்தார்கள். பெண்கள் கும்மி, அபிநயப்பாட்டு, நாடகம் முத லியவைகளை வெகு நன்றாக நடித்தார்களாம். பெண்கள் தோட்டவேலையி லும் கதைகளை நாடக ரூபமாக நடித்துக்காட்டுவதிலும் அதிக ஊக்கமும் உற்சாகமுமுள்ளவர்களா யிருக்கின்றார்களாம். மிஸ். E. M பவர் அவர் களுக்கு வந்தன மளிக்கப்பட்டவுடன் சபை கலைந்ததாம்.

பெங்களூரிலுள்ள ஆரியபாலிகா பாடசாலையில் வருஷோற்சவம் நடந்த பொழுது யுவராஜா அவர்கள் சபைத்தலைமையை வகித்து ஒரு

நீண்ட உபந்நியாசம் செய்தார்கள். ஸ்ரீமதி வெங்கடம்மா அவர்கள் ரிபோர்ட்டை வாசித்தார்களாம். இப்பாடசாலை வெகு நன்றாக நடத்தப்பட்டு வருவதைக்கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

மாணவர்கள் தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்காக ஒவ்வொரு பாடசாலையிலும் சங்கம் ஏற்படுத்தி வாரம் ஒரு முறை வியாசம் எழுதி படித்து வருவது நலம். இவ்விதம் சிற்சில பாடசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றதென்பதைக்கேட்க நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

உபாத்தியாயர்கள் தங்கள் பிள்ளைகளை அடிக்கடி தங்களிருக்கும் ஊருக்கு சமீபத்திலுள்ள ஏரி, மலை, நதி, கோயில் முதலியவைகளுக்கு இட்டுக்கொண்டுபோய் ஆங்காங்குள்ள இயற்கை விசேஷங்களைப்பற்றியும், சரித்திர சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் காட்டி சொல்லி வந்தால் அவர்களின் அறிவு விருத்தியடையும். தேகாரோக்யத்திற்கும் இவ்விதம் செய்வது பெருத்த நன்மையைத்தரும்.

பரோடா ராஜ்யத்துக்கு 1912-13ம் வருஷத்தில் 2 கோடி ரூபாய்க்கு மேல் வரும்படி கிடைத்ததாம்.

இதர தேசங்களுக்கு இந்தியாவிலிருந்து அநேக ஆயிரம் பவுண்ட் நிறையுள்ள தலைமயிர் ஏற்றுமதி ஒவ்வொருவருஷமும்செய்யப்படுகிறதாம்.

உலகத்தில் 60,000 பத்திரிகைகள் தினசரியாகவும், வாராந்தரமாகவும் பிரசுரிக்கப்பட்டு வருகிறதாம்.

எம். பி. எம். டி. முதலிய வைத்திய பரிக்ஷைகளுக்குச் சென்று ஏப்ரல்மீ தேறாதவர்களும், அச்சமயத்தில் பரீக்ஷைக்குப் போகாமலிருந்தவர்களும் அடுத்த அக்டோபர்மீ ஆப்பரீக்ஷைகளுக்கு அவர்கள் மறுபடி போகலாமென சென்னை யுனிவர்சிடியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஒரு ஸ்கூலில் மக்குபிள்ளைகளுள்ள வகுப்பில் ஒரு உபாத்தியார் பரிக்ஷை செய்கையில், ஒரு நம்பரை ஒருபையனைக் கூப்பிட்டு எழுதச் சொன்னார். பையன் 72 யை எழுதினான். உபாத்தியார் அதைத் திருப்பி 27 என்று எழுதினார். பிள்ளைகள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. இன்னொரு பையன் 48 என்று சொன்னான். அதை உபாத்தியாயர் மாற்றி 84 என்று எழுதினார். இதற்கும் பிள்ளைகள் தங்கள் புத்தி சாதுர்யத்தைக் காண்பிக்க வில்லை. ஒரு பையன் திடீரென்று எழுந்து 33 என்று சொன்னானாம். இதை மாற்ற வகையின்றி உபாத்தியாயர் சந்தோஷப்பட்டு சென்றனர்.

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள மாதர் சாரதா விலாச சபையின் கூட்டம் அடிக்கடி வெகு நன்றாக நடத்தப்பட்டு வருகின்றதைக் கேட்டு மிகவும் சந்தோஷ மடைகிறோம். இச்சங்கத்தில் மாதர்கள் அடிக்கடி






# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் ஸப்ளை உபயோகிப்பனை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் ஸப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு

## விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றும் அருத்தமாகும்.

மில்க்மெயிட்குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப்
பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது.
மில்க்மெயிட்குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி
லாபமடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினால்எங்களுக்கு
இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம்.
பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும்,
அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லேஸ் அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்,
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்

சேர்ந்து கால க்ஷேபங்கள், உபந்நியாசங்கள் முதலியவற்றை செய்து தங்
கள் அறிவை விருத்திசெய்து கொள்வதுடன் சிநேக விருத்தியையும்
செய்துகொள்ளுகிறார்கள். இச்சபை விருத்தியடைந்து புகழ்பெறுமாறு
ஈசனை பிரார்த்திக்கின்றோம்.

புஷ்ப-குந்த
கூந்தல் தைலம்.

பெண்களின் அன்பு நிறைந்தது.

இக்கூந்தல் தைலமானது வாசனையில் சிறந்ததும், தலைமயிர்களின் வேருக்கு
கெட்டியைக்கொடுத்து யாதொரு தடையுமின்றி தலை மயிர்களை வளரச்செய்வதும்,
நிரைத்திருக்கும் மயிர்களை வெகு சொல்ப உபயோகத்தினால் கறுத்து முன் நிலைமை
க்கு கொண்டு வரக்கூடியதும், மூளைக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ஆனந்தத்தை
கொடுக்கக்கூடியது மாகிய இத்தைலத்தை அநேகர்களால் உபயோகித்து நற்சாக்ஷி
பத்திரங்களடைந்திருக்கின்றது. ஒரு தடவை உபயோகித்தால் தெரியவரும்.

சாம்பில் வேண்டுவோர் நமது ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையாகிய பெட்டியில் முகம் பார்க்கும் கண்ணாடியும், சீமை தந்த சீப்பும்
சேர்த்து பாக்செய்திருக்கின்றது. விலை ரூபாய் 1. தபால் செலவு அணா 4 பிரத்தி
யேகம்.

நமது சென்னை ஏஜண்டு:—

ராமானுஜ தாஸ், நாரன் தாஸ், அண்டு கோ.,
149, சைனாபஜார் ரோட்டு, சென்னை.

Sole Manufacturer. V. K. RANADE. Perfumer & Chemist Bombay, No. 4.

## The Complete Letter Writer.

*(4th Edition Revised and Enlarged.)* by
HARI CHARAN DAS.
Price Re. 1. *(full cloth gilt 320 pages).*

An universal Guide to the Art of letter Writing for all positions of life.
It contains 24 Chapters —Private Correspondence, News Papers, Doctors, School Correspondence Government and Commercial, Collectors Office, Attorneys Vakils and Mukteers, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms address Paper Currency, Abbreviations and Daily wages.
**Matriculation Essay**—by Hari Charan Das. Very useful book for school Boys. Price As. 8.

**ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.**
A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only.
**Child's Easy Conversation**, 2nd. ED. Price As. 10 only.
If you want to speak in English fluently you should buy the above book. It will teahc both you and your children to speak in English within two or three months'

M. L. DAS & CO. BOOK SELLERS & PUBLISHERS.
122, *Baitakhana Road,* CALCUTTA.

# The Tamil Zenana & School Magazine.

# மாதர் மனோரஞ்சினி.

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் "—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol XVI] புத்தகம் 16 | Madras October, 1914. சென்னை : அக்டோபர்மீ 1914வு. | No. 10 இலக்கம். 10 |

## மாண்டிசூரி என்ற மாதின் போதனாமுறை.

## THE MONTESSORI SYSTEM.

### குழந்தைகளின் வீடு.

குழந்தைகள் சாதாரணமாக பள்ளிக்கூடத்திற்குப் போக விரு
ம்புவதில்லை. அவர்களுக்கு பள்ளிக்கூடம் என்ற வார்த்தை அவர்கள்
காதில் விழுந்தால் போதும்! நடு நடுங்குவார்கள். அவர்களுடைய வீடு
கள் சாதாரணமானவைகளா யிருந்தபோதிலும் அவைகளுக்கும், பாடசா
லைக்கும் வித்தியாசம் உண்டு. மேலும் பாடசாலையின் கட்டடத்தின்
தோற்றமே குழந்தைகளின் மனதுக்கு வெறுப்பாக இருக்கும். பாடசாலை
யில் புஸ்தகமும், பிரம்பும் தான் உண்டென்பது சிறு குழந்தைகளுக்கு
பாடசாலையின் மீதுள்ள மதிப்பு

ஆனால் டாக்டர் மாண்டிசூரி தமது பாடசாலைகளை குழந்தைகளுடைய
வீடு என்று சொல்லுகிறார்களே யொழிய பாடசாலை யென்று சொல்லு
வதே கிடையாது. நாமும் அதை ஏன் பிள்ளைக்கூடம் என்று சொல்லக்கூ
டாது? நாம் அடிக்கடி கடவுள் வீட்டை கோயில் என்று சொல்லுகிறோம்.
ஏன் குழந்தைகள் படிக்கும் பாடசாலையை குழந்தைகளின் வீடு என்று
சொல்லக்கூடாது? அப்படி நாம் சொன்னால் குழந்தைகளும் அதைத்தங்
கள் வீட்டைப்போல் பாவிப்பார்களல்லவா? குழந்தைகள் தங்கள் பூர்ண
இஷ்டத்துடனும் சந்தோஷத்துடனும் அங்கே போய் தங்களுக்குச் சரி
யான வயதுள்ள குழந்தைகளுடன் விளையாடுவார்கள். தங்களிஷ்டப்படி
தங்களை சந்தோஷப்படுத்திக் கொள்வார்கள். அவர்களுக்கு அங்கே விளை
யாட நேர்த்தியான விளையாட்டுப் பொருள்களை தாயைப்போன்ற ஒரு
மாது கொடுப்பாள்.

மாண்டிசூரி ஏற்படுத்திய பாடசாலையில் பெஞ்சுகளுமில்லை. சாய்வு மேஜைகளுமில்லை. இவைகள் அவர்களுடைய கண்களுக்குத் தோன்றினால் போதும்! இவைகள் அவர்களைப் பயப்படும்படி செய்கின்றன. அவர்கள் இப்பயத்தால் பாடசாலைக்கு வாராமல் ஒதுங்கி வீட்டிலேயே யிருக்க விரும்புகிறார்கள். ஆனால் ஐரோப்பா கண்டத்திலுள்ள குழந்தைகள் சிறிய கைப்பிடியுள்ள நாற்காலிகளின் மீது உட்கார வழக்கப்பட்டிருப்பதால், அவர்கள் உட்கார அவ்வித நாற்காலிகள் அங்குள்ளபாடசாலைகளிலிருக்கின்றன. ஆனால் இவைகளை அவர்களிஷ்டப்படி இழுத்துவேறு இடத்தில்போட்டுக் கொள்ளலாம். ஆனால் நமது தேசத்தில் அவ்வித பழக்கம் நமது குழந்தைகளுக்குக் கிடையாதாகையால் அவர்கள் தங்கள் இஷ்டப்படி தரையில் எவ்விடத்திலாவது உட்காரலாமே. அவர்களுடையவீடு ஸாமான்கள் அடையப்பட்டும், சிறிய அறைகளாயும், காற்றும் வெளிச்சமு மில்லாததாயு மிருக்கக்கூடாது. இப்பொழுதும்கூட சிற்சில பாடசாலைகளிருக்கின்றன. கிராமங்களில் உயர்ந்த திண்ணையும் நெருக்கமான தாழ்வாரமுமுள்ள வீடுகளில் சில பாடசாலைகளிருக்கின்றன. இவ்வித மிருக்கவேகூடாது.

சாதாரணமாக குழந்தைகளுக்கு விசாலமான மைதானத்தில் விளையாடப் பிரிய மதிகம். சமீபத்திலுள்ள சாக்கடையில் விழாமல் தங்களிஷ்டப்படி நடமாட குழந்தைகளுக்கு மிக்கப்ரியம். நல்ல செங்கல்களால் கட்டியகட்டடங்களில் தங்கியிருக்க அவர்கள் விரும்புவதில்லை. மேலும் அவ்வித கட்டடத்தின் செலவோ அதிகமாகும். அதுவும் அனாவசியமானதே. நமக்கு அவ்வித பாடசாலைகள் ஒவ்வொரு க்ராமத்திலும் இருக்கவேண்டுமென்ற விருப்பமிருந்தால் அதிக பணம் காசில்லாமல் சுலபமாகச் செய்துக்கொள்ளலாம்.

க்ராமத்தார்களிடத்தில் சொல்லிவிட்டால் போதும். அவர்களே ஒரு கொட்டகை போட்டு விடுவார்கள். இதற்கு பனை ஓலை அல்லது தென்னம் ஓலை மூங்கில் முதலியவைகள் போதும். இவைகள் சுலபமாக சொல்பவிலைக்கு கிடைக்கும். ஆனால் இந்த இடம் எவ்வித மிருக்கவேண்டுமென்றால் ஒருக்ராமத்தில் எவ்வளவு பிள்ளைகள் இங்கு வருவார்களோ அத்தொகைக்குச் சரியான விஸ்தீரண முள்ளதாயிருக்க வேண்டியதே. பூமியின் தரையோ 2 அல்லது 3 அங்குல ஆழம்தோண்டி மண்ணை எடுத்து அப்புறப்படுத்தி அதில் நேர்த்தியான மணலைக் கொட்டி சமமாகச் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இதில் கல், கிளிஞ்சல் முதலியவைகள் கலந்திருக்கவே கூடாது.

## WASHING & DRESSING.
## தானே துணி உடுப்புகளைத் தோய்த்துக்கொள்ளுதல்.

மாண்டிசூரி பாடசாலையில் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்தவுடன் முதல் தேகாப்பியாச பயிற்சி என்னவெனில், அவர்களே தங்கள் தங்கள்



உடுப்புகளை அழுக்கில்லாமல் தோய்த்து தரித்துக்கொள்ள பழகவேண்டும். நமது தேசத்திலோ குளிர் அதிகமில்லாமையால் இரண்டுமூன்று வயதுள்ள குழந்தைகளும் இதற்கு மேற்பட்ட வயதுள்ள குழந்தைகளும் துணிகளைக் கட்டிக்கொள்ளாமல் நிர்மாணமாயிருக்கிறார்கள். குளிரில்லாவிடினும் குழந்தைகள் இடுப்பு வரையிலாவது மறைந்திருக்கும்படி துணியைக்கட்டிக் கொண்டிருக்கும்படி செய்வது நல்லதே. க்ராமங்களில் குழந்தைகள் அழுக்காயிருக்கின்றார்கள். அவர்களுக்கு முதல் முதலில் நாம் சுத்தமாயிருப்பதைப்பற்றி போதிக்க வேண்டும். பாடசாலையில் அகலமான தகரதொட்டியிலாவது மரத்தொட்டியிலாவது பானையிலாவது நல்லஜலம்வைத்திருக்கவேண்டும். சிறியகைப்பிடியுள்ள தகர பாத்திரங்களுமிருக்க வேண்டும். வீட்டுக்குள் குழந்தைகள் வருமுன் தாங்களே தகரபாத்திரங்களில் தண்ணீர் மொண்டு முகம், கை கால்களை சுத்திசெய்து கொள்ளும்படி செய்யவேண்டும். சோப்போட்டு தேய்த்துக் கொள்ளும்படி சொல்லவேண்டியது அனாவசியம், அதின் விலையுமதிகம். சிற்சில க்ராமங்களில் கிடைப்பதும் அரிது. ஆனால் சீக்காய் சுலபமாய் சுலல்ப காசுக்கு கிடைக்கு மல்லவா? இதை அறைத்து வைத்துக்கொண்டு தேய்த்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். இதற்கு அழுக்கை நீக்கும் சக்தி அதிகமிருக்கிறது.

குழந்தைகள் சுத்தி செய்து கொண்டவுடன் சிறிய உலர்ந்த முண்டுகளைக்கொண்டு தங்கள் முகம், கை கால்களை நன்றாய்த்துடைத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முண்டு வீட்டில் வாங்கி வைத்திருக்க வேண்டும். குழந்தைகள் துடைத்துக் கொண்டவுடன் தரை ஈரமாக இல்லாமல் உலர்ந்திருந்தால் அம்முண்டுகளை தரையில் போட்டு உலரவைக்கும்படி சொல்லவேண்டும். அப்படி இன்றி ஈரமாயிருந்தால் சுவற்றில் இரண்டு ஆணிகளை அடித்து கயிறு கட்டிவைத்திருக்க வேண்டும். அதில் அம்முண்டுகளை உலரப்போடும்படி செய்யலாம். முண்டுகள் அழுக்காய்விட்டால் அவைகளை சீக்காய் தண்ணீரில் நனைத்து சிறிதுநேரம் வைத்திருந்தபின் தோய்த்து உலரப்போடும்படி சொல்லவேண்டும். சிற்சில சமயங்களில் முண்டுகள் அதிக அழுக்காய்விட்டால் நீலம் கலந்ததண்ணீரில் அம்முண்டுகளை நனைத்து வைத்தாலும் நல்லதே. இப்படி செய்வதால் வெண்மையான முண்டில் அழுக்கு தெரிவது போல் நீலத்தில் தோய்த்த முண்டில் தெரியாது. ஆனால் கூடியவரையிலும் முண்டுகள் அழுக்கில்லாம லிருக்கவேண்டும்.

உடுப்பு தரித்துக் கொள்வதின் முக்யமும் அவசியமும் என்ற விஷயத்தை அவர்களுக்கு போதிக்க வேண்டும். பெற்றோர்களில் அநேகர் தங்கள் குழந்தைகளுக்கு உடுப்புகளை வாங்கி கொடுக்க அசக்தர்களாயிருக்கிறார்கள். சிலர் அலட்சியமாயிருக்கிறார்கள். இன்னும் சிலர் அப்

படி செய்ய விரும்புவதேயில்லை. பாடசாலைகளின் மானேஜர்கள் இவ்விதமுள்ளவர்களுடைய குழந்தைகளுக்கு அதிகச் செலவின்றி சாதாரண துணிகளை வாங்கி (பெண்ணுக்கு ரவிக்கையும், பாவாடையும்) பிள்ளைக்கு நிஜாரும் ஒரு கோட்டும் தைத்துக்கொடுப்பது நலம். இவைகளை குழந்தைகளே அன்னாடம் தோய்த்து தரித்துக் கொள்ளவேண்டும். பெற்றோர்கள் இவ்வித உடுப்புகளுக்கு பணம் கொடுத்தால் பிள்ளைகள் இவைகளை தங்கள் சொந்தவீட்டுக்குக் கொண்டு போகலாம். ஆனால் இப்படி செய்பவர்களுக்கு ஒவ்வொன்றிலும் இரண்டு ஜதையிருந்தால் நல்லது. மேலும் இவைகளை வீட்டுக்குக் கொண்டு போகும் பிள்ளைகள் இவைகளை சுத்தமாய் வைத்துக் கொண்டிருக்கும்படி பெற்றோர்கள் புத்திமதி சொல்லிவரவேண்டும். இவனைக் கவனித்தும் வரவேண்டும். அவ்விதம் குழந்தைகள் வைத்துக்கொள்ளாவிட்டால் பெற்றோர்கள் உத்தரவாதமாயிருக்கவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள்குழந்தைகள் துணிமணிகளைத்தோய்க்கக்கூடாதெனபுத்தியீனத்தினாலோ அல்லது அன்பினாலோசொல்லலாம். வண்ணான் வேலையை குழந்தைகள் ஏன் செய்ய வேண்டும் என்றும் வாதாடலாம். சாதாரணமாக வெளியூர்களில் ப்ராதகாலங்களில் பெரியோரும் சிறியோரும் நதிகளுக்குச் சென்று துணிகளைத் தோய்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்து வீட்டுக்குஇப்பொழுதும் அநேகபிராமணோத்தமர்கள் திரும்பிவருகிறார்களன்றோ? இவர்களும் மற்றவர்களும் ஏன் தங்கள் குழந்தைகளையும் இவ்வித பழக்கத்தை அநுசரித்து வரும்படி செய்யக் கூடாது? குழந்தைகளுக்கு வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ தாய்மார்களும் உபாத்தியாயர்களும் காலையில் ஸ்நாநம்செய்யவும் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து சுத்தியாய் வைத்துக் கொள்ளவும் போதித்து வந்தால், அவர்கள் இதைக் கைப்பற்றிக்கொண்டு வழக்கத்திற்கு கொண்டுவருவார்களல்லவா? இவர்கள் வாழ்நாள் முழுவதும் இவ்வழக்கத்தை அநுசரிப்பார்கள். வண்ணான்தொல்லை அதிகமிராது. குழந்தைகள் யாதொரு வியாதியுமின்றி சுகஜீவிகளாயிருப்பார்கள்.

மேற்கூறிய வண்ணம் குழந்தைகளுக்கு தங்கள் தேகத்தையும் உடுப்பு முதலியவைகளையும் சுத்தியாய் வைத்துக்கொள்ள போதித்தபின், அவர்களே தங்கள் வீட்டிலுள்ள சாமான்கள் ஒழுங்காய் வைக்கப்பட்டிருக்கின்றனவா வென்பதைக் கவனிப்பார்கள். மேலும் அவர்கள் முக்கியமாய் வீட்டில் எவ்விடத்திலும் ஒட்டடை யில்லாமலிருப்பதையும், தரையைச் சுத்திசெய்தும், குப்பை கூளம், முதலியனவைகளிருந்தால் அவைகளை அப்புறப்படுத்தியும் செய்து வரவேண்டும். விளையாடுமிடத்திலும், தோட்டத்திலும் கடுதாசி, உலர்ந்த இலை இவைகளிருந்தால் அவைகளை



எடுத்து வேறு இடத்தில் போட்டு வைக்கவேண்டும். அவர்கள் பலகை, புஸ்தகம், விளையாட்டு சாமான்கள் முதலியவைகளை ஒழுங்காய் தனித்தனியாய் வைத்துக்கொள்ளவேண்டும். "இந்த வஸ்துவுக்கு இதுதான் இடம், அந்த வஸ்துவுக்கு அதுதான் இடம்" என்று தீர்மானம் செய்து அவைகளை அந்தந்த இடத்திலேயே வைத்து வரவேண்டும். "ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒரு இடம், ஒவ்வொன்றும் அதன் இடத்திலிருக்கவேண்டும்" என்பதை அவர்கள் செவ்வனே அறிந்துகொள்ளவேண்டும். இதுதான் இந்தியாவிலுள்ள பிள்ளைகளுக்கு மிகவும் விலையுயர்ந்த பாடம். இவைகளை அவர்களுக்கு குழந்தைப் பருவமுதல் போதித்துவரவேண்டும். பள்ளிக்கூடத்திலும் சரி, வேறு எங்காகிலும் சரி, ஒழுங்காய் நடந்துகொள்ளக் கற்றுக் கொள்ளவேண்டும். பாடசாலையில் உபாத்தியாயராவது, வீட்டில் பெற்றோர்களாவது கட்டளையிட்டால் அதை சிரமேற்கொண்டு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இதுதான் எல்லாவற்றையும்விட மிகவும்முக்யமானது. இதுவே "கடவுளின்முதலாக்ஞை" என்று அவர்கள் அறிந்து நடக்கவேண்டும்

பத்திராதிபர்.

---

# வெகுளாமை.

கோபத்தைக் காப்பவருள் சிறந்தோன் எவன் எனில் தன்னினும் மெலியார்மேல் கோபங்கொள்ளாதவன் என்பர். இவ்வாறு செய்வோர் உண்டோ? செயல் பாலதோ? ஆகா அநேகர் உளர். 'கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய்தந்தை' என்ற வாக்கியத்தை மனதில் வைத்து நடப்போர் ஒவ்வொருவரும் அதை அடக்கி நடக்க முயலுவது சகஜம். நாம் சரித்திரங்களைப் படிக்குங்கால் அநேகரை பெரியோர் என்கிறோம், சிலரை சிறியோர் என்கிறோம்; மற்றும் சிலரை அறிவீனர் என்றும் இன்னும் பலவிதமான அடைமொழிகள் கொடுத்து அழைக்கிறோம். இவர்களில் பெரியோர் என்று சொல்லுபவரின் குணாதிசயங்களை விவரித்தால் வெகுளாமை அவர்களின் முதல் குணமாயிருக்கும்: அவ்வாறின்றி கோபங்கொண்டபோதிலும் தன்னினினும் சிறியோர், கீழ்ப்பட்டவர்கள் பேரில் கோபங்கொள்ளார்; அவ்விதம் செய்யின் பாவமே மேலிடும். அச்செய்கையையை ஒரு ஆயுதபாணி நிராயுதபாணியை எதிர்த்து அடையும் ஜயத்திற்கு ஒப்பிடலாம்.

மேற்கூறியவாறு செய்துள்ளோர் செய்கைகளை சற்று கவனிப்போம். கிறிஸ்து பிறந்தவுடன் சில நூற்றாண்டுகளிலும் பின்பு மத்தியகாலத்தில் சில நூற்றாண்டுகளிலும் இத்தாலி (Italy) தேசம் நாகரீகத்தில் முதன்மை பெற்றிருந்ததாக சரித்திரங்கள் முறையிடுகின்றன: அந்நாட்

டில் உள்ள நகரங்களில் முக்கியமானவைகள் ஜினீவா என்பது ஒன்று.
இக்காலத்தும் கூட இந்நகரம் இத்தாலியின் முக்கிய பட்டணங்களில்
ஒன்றே. அந்நகரில் வாழ்ந்த அபாரேட் என்னும் தத்துவசாஸ்திரி பொறு
மையும் புகழும் வாய்ந்த புண்ணியவான்; குணமும் குலமும் கூடிய கண்
ணியவான். அவன் கோபங்கொண்டதை யாரும் கண்டறியார்.

நிற்க, ஜனங்களில் பொறாமையுற்ற சிலர் அவனிடமிருந்த ஒருவேலை
க்காரியைத் தூண்டி அவள் எஜமானனுக்கு கோபம் உண்டாகும்படி செய்
யின் அவளுக்கு வெகுமதி யளிப்பதாய் வாக்குதத்தம் செய்தார்கள்.
பணந்தானே பந்தங்களனைத்தினையும் பிரித்துவைக்கும் பாரியாகும் என்ப
தற்குத் தக்க பணத்தாசையால் தன் எஜமானனுக்குத் தீங்கு செய்ய
எண்ணி அவன் கோபமுறுமாறு செய்யத் தொடங்கினள். வீடுகளில்
பழகும் வேலைக்காரர்களுக்கு வீட்டில் உள்ளார் எல்லாருடைய குணங்கள்
நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்களும் ஒவ்வொருவருடைய தன்மைக்
குத் தகுந்தபடி நடந்துகொள்வதும் நாம் கண்டிருக்கிறோம்.

அபாரேட் என்பவர் தன் படுக்கையை நன்றாக அலங்காரம் செய்து
ஜோடித்து வைப்பதில் மிகுந்த விருப்பமுற்றவர் என்பதையறிந்த வேலைக்
காரி அவ்வாறு செய்யாமல் ஒருநாள் சும்மாயிருந்துவிட்டாள். எஜமானன்
இதைநோக்கி மறுநாட்காலை அவள் குற்றத்தை எடுத்துரைத்தார். அவ
ளும் தன் வேலையைச் செய்ய மறந்துவிட்டதாகச் சொன்னாளேயொழிய
அன்றையதினமும் முன்னாள் மாதிரியே செய்தாள். மறுநாளும் எஜமா
னன் முகத்தில் கோபக்குறியைக் காணோம். மூன்றாம் நாளும் அவள்
தன் வேலையைச் செய்யாமல் வாளாநின்றாள். தத்துவசாஸ்திரி மறுதி
னம் வேலைக்காரியைக் கூவி.மொழிந்ததாவது "இன்னும்படுக்கை போட
உனக்கு சரிப்படவில்லை போலும்! அதினால் உனக்கு சிரமம் அதிகமாய்
இருப்பதால் நானே அத்தொழிலைக் கற்றுக்கொண்டேன். அதில் எனக்கு
யாதொரு வருத்தமும் தோன்றவில்லை." இவ்வித வார்த்தைகளைக் கேட்
கச் சகிக்காதவளாய் வேலைக்காரி அவர்கால்களில் விழுந்து நமஸ்கரித்து
நடந்த விருத்தாந்தங்களை சவிஸ்தாரமாகச் சொன்னாள்.

மேற்கூறிய விருத்தாந்தத்தினின்றும் தத்துவசாஸ்திரியின் பொறு
மையும் தன்னினும் மெலியாரைப் பக்ஷமாய் நடத்துவதினால் உண்டாகும்
நன்மை நன்கு விளங்குகிறது. இனி அவ்வாறு செய்யத் தவறினதனால்
உண்டாகும் தீமையைக் கவனிப்போம்.

மத்தியகாலத்தில் நம் இங்கிலாந்தை ஆண்டுவந்த கீர்த்திபெற்ற அர
சர்களில் (Henry II) இரண்டாவது ஹென்றி என்பவர் ஒருவர். அவர்
காலத்தில் இப்பொழுது கூறும்படியான பிரான்சு தேசத்தின் பகுதி அவ
ருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அவர் பட்டத்திற்கு வருமுன்



நாட்டில் சண்டை சச்சரவு அதிகமாயிருந்தபடியாலும் அவர் இராஜாங்க
முறை தவறாமல் நடத்தி வந்ததாலும் அவரைச் சரியான அரசர் என்று
யாவரும் கூறியுள்ளார். இவரடியில் இவருடைய தயவினால் பல பல சிறிய
வேலைகளிலிருந்து இராஜ்ஜியத்தில் உன்னத பதவியடைந்தவர் (Becket)
'பெக்கட்' என்பவர் ஒருவர். சிலகாலம் அரசனிடம் முதல் மந்திரியாயிருந்
தார். எவ்விடம் செல்லினும் இராமலக்ஷ்மணர் போல் இருவரும் செல்வ
தேயொழிய ஒருவராய்ச் சென்றதைக் குடிகள் கண்டறியார். இவ்வாறிருக்கு
மளவில் மதக்கோட்பாடுகளில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருந்
தபடியால் அவைகளில் தனக்கு சகாயமாயிருந்து தன் இஷ்டப்படி நடத்து
பவன் பெக்கெட் ஒருவரே என்றெண்ணி அவரை இங்கிலாந்தின் முக்கிய
மதகுருவாக ஏற்படுத்தினர்.

மதகுருவாக வேலையில் அமர்ந்த நாள் முதல் பெக்கட் தன்
பூலோக விசாரங்களை நீக்கியவராய் மோக்ஷபதவியை அடையும் மார்க்
கத்தைத் தேடி கிறிஸ்துவலோக குருவின் (Pope) போப் உத்திரவுப்படி
நடந்து வந்தாரேயொழிய தன்னாட்டரசனும் தன்னை ஆதரித்தோனும்
நண்பனுமான ஹென்றியின் சட்டங்களை அவமதித்து வந்தார். இவ்
வாறு செய்யும் பெக்கெட் கீழ்ப்படியாமையை நோக்கிய அரசன் ஒருநாள்
தன் காவலாளிகள் முன்னிலையில் கோபத்தைக் கீழ்வருமாறு வெளிப்ப
டுத்தினன், என் சோற்றைத் தின்று ஜீவிக்கும் குடிகளில் இத்துஷ்டனைத்
தொலைக்கும் தைரியம் பெற்றோரில்லையா! இவ்வார்த்தைகளைச் செவியிலேற்
றிய காவலாளிகளில் நால்வர் புறப்பட்டு அக்குருவசிக்கும் நகராகிய
(Canterbury) கேன்டர்பரி நண்ணி கோயிலுட் சென்று பெக்கட்டை
மூளை சிதற அடித்துக் கொலை செய்து அகன்றனர்.

இச்செய்கை அரசனுக்கு சந்தோஷத்தைச் செய்ததோ? இல்லை.
ஐரோப்பா முழுமையும் அரசன் செயலை வெறுத்தனர். அரசனோ தன்
கோபத்தை வெளியிட்டபொழுது பெக்கட்டைக்கொல்ல எண்ணினனோ?
இல்லை; ஆனால் அவன் கோபமானது தன்னினும் மெலியோனாகிய மத
குருவின் உயிரைத் தொலைத்தது. அப்பழிக்குப் பாத்திரம் அரசனானான்.
அவன் மதத்தை சீர்திருத்த எண்ணிய எண்ணங்கள் என்னவாயின?
ஒன்றும் முடியவில்லை.

ஆகையால் கவனித்துப் பார்க்கின் வெகுளாமையே மேன்மை என்
றும், அவ்விதமின்றி வெகுண்ட காலத்தும் தன்னினும் வலியோரிடம்
கோபத்தைக் காட்டல் பழிபாவங்களுக்கு ஏதுவான செய்கைகளை அநேக
மாக உண்டாக்காது என்பதும் திண்ணம்.

சி. வெங்கடேசய்யர், பீ. ஏ.

# இராஜபக்தி.

## 10-வது நூற்றுண்டில் நடந்த ஒரு சரித்திரக்கதை.

## தேசாபிமானிகள்.

### 3-ம் அதிகாரம்.

கொண்ட நகரில் நடந்த யுத்தத்தின் முடிவு சீக்கிரம் கருமலை நக
ருக்கு எட்டியது. திருபுரசுந்தரி தன்கணவன் மரணத்தைக் கேட்டவுடன்
மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள். பலவாறு சைத்யோபசாரம் செய்தபின்
ஒருவாறு தெளிந்தாள் என்றாலும் அக்கொடும்துயரம் பொறுக்கமாட்
டாமல் இரண்டு மாதத்துக்குள் தன்கணவனைப்பின்தொடர்வாள் ஆயினள்.

அனுதிக் குழந்தைகள் நான்குபேருக்கும் துணை அத்தையம்மாள்
விமலையார் ஒருவளே. அக்கிழவி இச்சிறுகுழந்தைகளை வைத்துக்கொண்டு
பட்ட கஷ்டம் என்னவென்று சொல்வது? அமிர்தேசன், தான் முன்வாக்க
ளித்தபடி, அடிக்கடி மாளிகையில் வந்து குழந்தைகளை விசாரித்துக்
கொண்டான். ஆகையால் ஆண்பிள்ளைகள் இருவரும் அமிர் தேசனுடைய
இணைபிரியாச் சினேகிதர்கள் ஆனார்கள். அமிர் தேசனும் தனக்குத் தெ
ரிந்த வரையில் வில்வித்தை கத்திச் சண்டை இவற்றைச் சிறுவர்களுக்குக்
கொஞ்சம் கொஞ்சமாய்க் கற்றுக் கொடுத்தான்.

கோண்டநகர் யுத்தம்நடந்த சுமார் ஒரு வருஷத்துக்குள் கருமலை நகர்
நாசமடைந்து விட்டது. தேசமே குழப்பமாய் இருந்தது பற்றி சண்டை
செய்யயோக்கியதை உள்ளவர்கள் தண்டுகளில் சேர்ந்து கொள்ள வெளி
யேறிவிட்டனர். வெட சேனையும். செஞ்சு சேனையும், கலந்துபோய்ப்
பல மாதங்களாயின. புஷ்டியாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிராமணோ
த்தமர்கள் வேறிடம் பார்த்துக்கொள்ளவழி தேடினர். ஊர் பாழடை
யவே, மாளிகையில் இருப்பவர்களை கவனிப்பார்களே கிடையாது.

இவ்வாறு நகரம் தோன்றுவதும் சீக்கிரம் அழிவதும் இத்தேசத்தில்
வெகு சகஜம் என்பதை சரித்ர ஆராய்ச்சி செய்தவர் ஒப்புக்கொள்வார்
கள் என்பதற்கு ஐயமில்லை. இப்பாழடைந்த ஊருக்கு குண்டலதேசத்து
சமாசாரம் வருவதே கஷ்டமாயிற்று. இவ்வாறு பல்நாட்கழியவே ஒரு
நாள் அமிர்தேசன் மாளிகைக்குச் சென்றபோது விமலையார் "அமிர்தேசா!
துர் அதிர்ஷ்டசாலிகளான எங்களுக்குக் கொம்புத்தேனும் பலாப்பழமும்
அபூர்வமாய் விட்டன. இளமானின் இறைச்சி அதினும் அபூர்வம். கூடு
மானால் கொஞ்சம் வேட்டையாடிவா" என, அமிர்தேசன் மலைச்சாரலை
நோக்கிப்புறப்பட்டான். நல்லவேளையாய் 6, 7, மைல் தூரத்துக்குள்ளாக
வே, தான் தேடிப்போன பொருள் கிட்டுவதாய் இருந்தது. அம்புபாயும்
தூரத்துக்கு 2, 3, பங்கு அப்பால் ஒரு ஆலமரத்தடியில் அடர்ந்த புல்



நிறைந்த மைதானத்தில் ஒருமான் சாவதானமாய் மேய்ந்து கொண்டிருந்
தது. சந்தடிசெய்யாமல் வழிவிலகி மானைக் கண்பார்வையில் வைத்துக்
கொண்டு, பாறைவிட்டுப்பாறை மெல்ல மெல்லத் தாவிக் குதித்து, ஒரு
பலாமரத்தின் மறைவில் வந்துசேர்ந்தான். அவனுக்கும் மானுக்கும் அம்பு
பாயும்தூரம் தான் இருக்கும். இருப்பினும் இன்னும் சற்று பக்கத்தில்
போனால் அநுகூலமென்று கண்டான். நடுவில் மூன்று பெரிய பாறை
கள் ஒருகுகைபோல் வளர்ந்துநின்றன. இவன் புறமே அக்குகையில்
நுழைய வழியுமிருந்தது. அந்த இடத்தில் நின்று கொண்டால் சற்றே
னும் மானின் கண்ணில் படாமல் அதனைக்கொல்லக் கூடும் என்று மெல்ல
மெல்லத் தவிழ்ந்து சென்றான். இவனும் அப்பாறையின் பக்கத்தில் சென
றதும் மானும் ஏதோ திடீரென்று மிரண்டு ஒரே பாய்ச்சலாய் ஓடிப்
புதரில் ஒளிந்து கொண்டது.

மான் பறந்தோடிப் போனதற்குக் காரணம் அடுத்த கொடியில் அமிர்
தேசனுக்குப் புலப்பட்டது. மான் எந்தப் பள்ளத்தாக்கில் மேய்ந்து
கொண்டிருந்ததோ அவ்வழியாய் 10, 12. குதிரைவீரர்கள் படுவேக
மாய் ஓடிவருகிறார்கள். அமிர்தேசன் இதற்குமுன் இத்தகைய வீரர்களைக்
கண்டதேயில்லை; இராஜசேனையில் குதிரைவீரர் என்றால், ஈட்டியும், பாளா
வும் வைத்துக்கொண்டு, அழகான பட்டில் வேலைப்பாடு செய்த சரிகை
முகப்பட்டாபோர்த்த குதிரைமேல், வெள்ளிச்சங்கிலி பிணித்த ஜேனத்
தைக் கைக்கொண்டு, ஒருங்கே சிவப்புத்தலைப் பாகையும் மங்கலான
நீலவர்ண அங்கராக்கும் தரித்திருக்கும் குதிரை வீரரைக்கண்ட கண்ணால்
மொட்டை தலையையும் இளைத்த குதிரையையும், காண அவனுக்கு வெகு
ஆச்சரியமாய் இருந்தது. "குடியரசு! குடியரசு!! குடியரசு!!!" என்று
சொல்லிக்கொண்டே குழிபறிக்கும்இந்த விஜ்ஜலனுடைய சோற்றுக்குலிங்
கிய போர் வீரர்களாய்த்தான் இருக்க வேண்டும்" என மனதில் நிச்சயம்
செய்து கொண்டு, அவர்கள் கண்ணில் பட இஷ்டமில்லாதவனாய் அம்மா
னிலும் விரைவாய்த் தான் முன்இருந்த குகையில் குதித்துப் பதுங்கிக்கொ
ண்டான். "இவர்கள்தொலைந்த மேல் நாம் காரியத்தைப்பார்த்துக்கொண்டு
வீடுபோவோம்" என்று அமிர்தேசன் நினைக்கவே, அவன் எண்ணத்துக்கு
விரோதமாக அவர்கள் அவ்வாலமரத்தடியில் வந்ததும் எல்லாரும் குதிரை
விட்டிறங்கினர் அமிர்தேசனுக்கு உண்டான திகில் இவ்வளவென்று சொல்ல
முடியாது. இந்த யமதூதர்கள் கையில் அகப்பட்டால் சின்னாபின்னப்
படுத்துவார்களே, என்று மனம்நொந்தான். இறங்கியவர்கள் குதிரைகளின்
கடி வாளங்களையும் கட்டுகளையும் தளர்த்தி பக்கத்தில் ஓடும் அருவியில்
நீர்தாக்க விட்டு, தாங்களும் வியர்வைதுடைத்து முகம் கழுவித் தண்ணீர்
அருந்திப் பின்வருமாறு பேசுவார் ஆயினர்:—

தலைவன் " என் அருமைப் போர்வீரர்களே! இன்று காலைமுதல்
உங்களுக்கு நேர்ந்த கஷ்டம் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஒரு
நாழிகை இளைப்பாறுவோம். குதிரைகளையும் தட்டிக்கொடுங்கள். சீக்கி
ரத்தில்நாம் ஊரை அடைவோம். அடைந்தபின்நம்காரியம்கைகூடுமோஎன்
னமோதெய்வத்துக்குத்தான்வெளிச்சம்,என்றான். அதற்குள்ஒருவன் 'இப்
பாழும் காட்டில் திக்கே தெரிகிறதில்லை. எத்தனைதூரம் நடந்தாலும் பய
னில்லாமல் திரியவேண்டியிருக்கும் சிலசமயங்களில்! இதோநிற்கின்றானே
சௌடவேலன்; இவன் முன்னால் இப்பிரதேசத்தில் வனபாலகனாக இருந்
தானாம். மேலும் இப்பிராந்தியத்திலேயே பிறந்து வளர்ந்தவன் என்றுகூட
ஒருதடவை அவனே சொல்லக்கேட்டேன். உண்டோ, இல்லையோ அப்
பா?" என்று சௌடவேலனை நோக்கிக்கேட்கவே, சௌடவேலன் "நீ
சொல்வது வாஸ்தவம் தான். என்தகப்பன் எனக்குமுன் இந்த பாகங்களி
லேயே வனபாலனாக இருந்தார். நானும் அவருக்குப் பின் அதேவேலை
யில் அமர்ந்தேன்." என்றான்.

இதைக்கேட்ட அமிர்தேசன் "இவன் யாரடா? இவன்!! கோடா
லிக்காம்பு! இங்குவந்து முளைத்தான்" என்று எண்ணி, சற்றே தலை
யைத்தூக்கிப் பாறைகளின் இடுக்கில் இருந்த துவாரத்தின் வழியாய்ப்
பார்த்தான். உடனே, ஆள் எவனென்று விளங்கிற்று. இதே சௌட
வேலன் முன்னர் நரசிம்மவீரனுடன் அரசன் பால் சேர்ந்து போர் செய்
யச்சென்றவன். இப்பொழுது இராஜத்துரோகியாய் விஜ்ஜலனைச் சேர்ந்
துவிட்டான்.

"சௌடவேலா! நீ இவ்வனாந்தரங்களில் பழகினவனானதினால் இங்கே
உள்ள குகைகளும் மரப்பொந்துகளும் உனக்குத் தெரியுமல்லவா? நினைத்
துப்பார். எவ் எவ்விடம் மனிதன் ஒளிந்துகொள்வதற்கு ஏற்றளவோ
அவற்றையெல்லாம் காட்டுவாயாக; ஏதாவதொன்றில் 'இப்பழம் பெரிச்
சாளி' வைரமுடியன் ஒளிந்து இருப்பான் என்பதற்கு ஐயமில்லை. நம்
கூட்டமே எல்லாரையும்விட அதிர்ஷ்டமான கூட்டமென்று எண்ணு
கிறேன். தைலப்பனைக் கண்டுபிடித்து 1000 பொன் வெகுமதியை
நாமே அடைவோம் எழுங்கள். குதிரைகள் தயாராய் நிற்கின்றன" என்
றான் தலைவன்.

" நரசிம்மனது ஊரான கருமலை நகருக்கு அப்பால் இரண்டு நாழி
வழி தூரத்தில் ஒருகுகை இருக்கின்றது. அதில் நம்போன்ற இரண்
டத்தனை ஜனங்கள் ஒளிந்து கொண்டு போமானாலும், எண்ணெய் கண்
ணில் விட்டுக்கொண்டு தேடினாலும், எவனும் கண்டுபிடிக்க முடியாது"
என்றான் சௌடவேலன்.

"ஆனால் முதலில் அங்கே போவோம்—கருமலை நகரம் வீரநரசிம்



மன் ஊர் அல்லவா? அந்நரசிம்மனே யல்லவா கொண்ட நகர் யுத்தத்தில்
நம்மால் கொல்லப்பட்டவன்." " ஆம்!! ஆம்!! அவரே!! ஆஹா! எத்
தனையோ தாம் தர்ம சத்திரம் போன்ற அவர் வீட்டில் நாங்கள் உண்டு
உறங்கி யிருக்கிறோம். அவரோடு அந்த ஊர் மஹிமையோ போய்விட்ட
தென்கிறார்கள்; "சௌடன் சொன்ன குகையைச் சோதனை செய்து விட்டு
இன்றிரவு கருமலைநகர்மாளிகைக்கு வந்து சேருவோம்" என்றான் தலை
வன். ஒருக்கால் தைலப்பன் அம்மாளிகையில் ஒளிந்து இருந்தாலும் இரு
க்கலாம்—யார்கண்டார்கள்" என்றான்.

"பகல்காலத்தில் அவ்வாறு செய்வான் என்று எண்ண இடமில்லை. இரா
விலோ இப்பிரபுக்களின் வழக்கம் வெளியே நிற்பதில்லை. ஏதாவது ஒரு
இருப்பிடம் தேடிக்கொள்ளவே வேண்டும் இவர்களுக்கு. ஆகையால்
இரவில் வந்து மாளிகையை சோதிக்கவேண்டுமே ஒழிய, இப்பொழுது
அங்கே போவதில் பயனிராது" என்றான் தலைவன். "இத்தகைய பிரபுக்
களின் மாளிகைகளை எத்தனையோ தடவை நான் தேடியிருக்கிறேன். ஒரு
தடவையாவது பிரயோஜனப்படவில்லை. இம்மாளிகைகளில் உள்ளகள்ளக்
கதவும் கீழறையும், பொய்த்தரையும், போக்குவழி தெரியாவழிகளும்,
அப்பப்பா! கழுத்தைமுறித்துக் கொண்டாலும், ஆள்சிக்குவது கஷ்டமாய்
இருக்கிறதே!! இந்தப்பாழும் வீடுகளில் மனிதனும் நுழைவானா?" என்
றான் ஒரு வீரன்.

" நீ சொல்வது உண்மையே! ஆனால் ஒளிந்து இருப்பவனைக்
கண்டுகொள்ள தப்பாத வழியொன்று இருக்கிறது; அவ்வழியால்
அரசன்மட்டும் எந்தமாளிகையில் இருப்பினும் அவனைக் கைப்பிடியாய்ப்
பிடிக்கிறேன் பாருங்கள். அவ்வழியும் சுலபமான வழியே அன்றோ! நெ
ருப்பும், புகையும் எவனையும் வெளிக்கிளப்பும் அல்லவா!! இவ்விடத்துக்கு
சுமார் 20மைல் சுற்றளவுள்ள ஒவ்வொரு மாளிகைக்கும் நெருப்பு வைப்
போம். அதுவும் இரவில் செய்யவேண்டியவேலை,மறக்காதேயுங்கள். சௌட
ப்பா! உனக்கு கருமலை மாளிகை நன்றாய்த் தெரியுமல்லவா?" என்று தலை
வன் கேட்க, " ஆஹா தடையென்ன? கீழேயிருக்கும் மடைப்பள்ளி சா
மான்வீடு, பால்காய்ச்சும் அறைகள் முதலான எல்லாம் நன்றாய்த்தெரியும்.
மேல்மாடிமட்டும் எனக்குத்தெரியாது" என்றான்.

அவசியமேயில்லை. வாசற்படி வரையில் கூட்டிப்போ, அதுவேபோ
தும். பொழுது போகின்றது. குதிரை ஏறுங்கள் வீரர்காள்! நேரே குகை
யைப் போய்ப் பார்க்கவேண்டியது; நாம் தேடிச்செல்லும் மனிதன் அங்
கே ஒளிந்து இராவிட்டால், நாமே அங்கு இரவு வரையில் ஒளிந்து இருப்
போம். இரவில் மாளிகையை அக்னிபகவானுக்கு சமர்ப்பணம் செய்
வோம். அந்தவெளிச்சத்தால் இக்காடுகளைப் பிரகாசம் செய்விப்போம்.

நாம் அப்பொழுது மாளிகையைச்சுற்றி நின்றுகொண்டு ஓடுகிறவர்களைப் பிடித்துக்கொள்ள வேண்டும். தேசாபிமானிகளே எழுங்கள் குதிரைகளின்மேல்".

---

# ஜேம்ஸ் பர்க்யூஸன்

## "JAMES FERGUSON"

மகாசாமர்த்திய தத்துவசாஸ்திரியும் வான சாஸ்திரியுமான ஜேம்ஸ்பர்க்யூஸன் 1710ஹு ஸ்காட்லண்டிக்கு வடக்கிலுள்ள கீத் (Keith) கிராமத்தில் பிறந்தவர். அவரது தாய் தந்தையர் தாழ்ந்த குலத்தில் ஜனித்தவர்களாதலால் நெற்றிவேர்வை நிலத்தில் வீழ்மாறு வேலை செய்து ஒழிந்த வேளைகளில் தம் குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டு குடும்பத்தை ஸம்ரக்ஷித்துவந்தார்கள். ஜேம்ஸுக்கு அவருடைய தகப்பனார் வித்யாப்யாஸம் செய்துவைக்க நினைக்கு முன்னமேயே எளிதில் படிக்கக்கூடிய திறமை வந்துவிட்டது அஃதெப்படியெனில் அவர் தந்தை தமயனுக்குப்பாடம் கற்பிக்கும்பொழுது தானும் கவனத்தோடு கேட்டிருந்து அவர்கள் வெளியே போயிருக்கும்போது புத்தகத்தையெடுத்து அண்ணன் கற்ற பாடத்தையே கற்பது வழக்கம்! அதில் சந்தேகமேற்பட்டால் வீட்டுக்கருகில் வசித்துவந்த ஒரு கிழவியிடம் சென்று அதைத்தீர்த்துக்கொள்வர். தகப்பனார் இதைக்கண்டு களித்துமேலே எழுதக்கற்றுக்கொடுத்து மூன்றுமாதம் இலக்கணப் பள்ளிக்கு அனுப்பிவந்தார். ஜேம்ஸுக்கு ஏற்பட்ட வித்தைமுழுவதும் அவ்வளவே.

அதிபால்யத்திலேயே ஜேம்ஸ் தன்னைத்தானே ஆதரித்துக் கொள்ளும்படி நேரிட்டது. அவர் மிகவும் தென்பற்றவராயிருந்ததால் அயலாரொருவருடைய ஆடுகளைமேய்த்துவர அமர்த்தப்பட்டார். அச்சமயங்களில் பகலில் தான்பார்க்கும் யந்திரங்களின் ப்ரதிகள் செய்வதும், இராக்காலங்களில் நட்சத்ரங்களின் சலனங்களைக் கவனிப்பதும் வழக்கம். இருட்டினதும் ஒரு வயலில்போய் மேலே ஒரு கம்பளியைப்போர்த்துக் கொண்டு கீழேபடுத்துக் கைகொண்டதூரத்தில் சில மணிகளுடைய நூலை தன் கண்ணுக்கும் நட்சத்ரங்களுக்குமிடையே பிடித்து குறிவைத்திருக்கும் நட்சத்ரங்கள் ஒவ்வொன்றாய் மறையும் வரைக்கும் மணிகளை ஒவ்வொன்றாய் நகர்த்திவைத்து, பிறகு ஒரு மெழுகுவர்த்தி வைத்துக் கொண்டு நூலை ஒரு காகிதத்தின்மேல் வைத்து மணிகளிருக்கும் இடத்திற்கு நேராய் அடையாளம் செய்வார். இரவிலடையாளஞ் செய்ததைப் பகலில் வேறுகாகிதத்தில் ப்ரதியெடுப்பார். இதனால் ஒரு நக்ஷத்ரத்துக்



கும் மற்றொன்றுக்குமிடையேயுள்ள தூரம் தோற்றத்திற்கெவ்வளவென்று புலப்படும். இவருடைய வானசோதிகளினாராய்ச்சியால் இவருக்கு அநேகவித்வான்களின் ஸ்நேகமேற்பட்டது. ஒருவரிடமிருந்து தக்க ஆதாரங்களைக் கொண்டு பூமி பந்துபோல் உருண்டையாயிருக்கிறதென்றறிந்துகொண்டு, கவாரசம், ரூல்கழி முதலியவை பெற்று அவைகளினுதவியால் பூமிபோல் படம்வரைந்து, அதில் கண்டங்கள், சமுத்திரங்கள், தேசங்களெல்லாவற்றையு மமைத்தார். அறிவை வ்ருத்தி செய்துகொள்ள இவ்விதம் கஷ்டப்படுமளவில் கையாலுழைத்தே அவருக்கு ஜீவனத்திற்கு மார்க்கம் தேடவேண்டியதாயிற்று. இப்படி அல்லும் பகலும் வேலை செய்ததால் தேகசவுக்கியங்கெட்டு, அதைத்தேர்த்திக்கொள்ள தன்னூருக்குப்போக வேண்டி நேர்ந்தது.

அங்கே பொழுதுபோக்க ஒரு மரக்கடிகாரம் செய்தார். அது சரியான காலம் காட்டிக்கொண்டு தானிருந்தது. அதற்கு மணியடிக்கும் ஸ்தானம் ஒருடைந்தகண்ணாடிக் குப்பியின் கழுத்து. ஒருநாளவர்வீட்டினருகில் ஒருதனவான் குதிரைமேலேறிவர ஜேம்ஸ் அவரை நோக்கி "ஐயா, இப்பொழுது மணியென்ன?" வென்று கேட்டார். அதற்கு தனவான் பதில் சொன்னமாதிரியில் நற்குணமுடையோராகப் பாவித்து கடிகாரத்தைத் திறந்து காட்டும்படி யவரைக் கேட்டுக்கொண்டார். முன்பின் அறியாதிருந்துமவர் பர்க்யூஸன் கையில் கடிகாரத்தைத் திறந்து கொடுத்தது மன்னியில், அதிலிருந்த ஒவ்வொருபாகத்தின் உபயோகத்தைப்பற்றி விபத்தமாய் எடுத்துரைத்தார். அவருக்கு வந்தனமளித்துவிட்டு, ஜேம்ஸ் மரச்சக்கரங்களுடன் திமிங்கிலமுள்ளை வில்லாயுடைய ஒரு கடிகாரம் தயார் செய்து எல்லாவற்றையும் ஒரு மரப்பெட்டியில் வைத்திருந்தார். ஆனால் அது சரியானகாலம் காட்டவில்லை. ஒருநாள் அன்னியனொருவன் அதைப்பார்க்க அவாக்கொண்டு கைதவறிவிட்டுக்காலால் மிதித்துத்தவிடு பொடியாக்கிவிட்டான். இவ்வேலை பிரயோஜனமற்றுப் போகவே, வேறொன்று செய்ய அவருக்கு மனம்வரவில்லை.

தேகசவுக்கியமடைந்ததும் பர்க்யூஸன் ஊரூராய்ச் சென்று கடிகாரங்கள் பழுதுபார்த்து ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கத் தலைப்பட்டார். ஒரு சமயம் ஸர்ஜேம்ஸ்டன்பார் என்பவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே வாசற்படியினுச்சியில் இரண்டு உருண்டையான கற்களிருந்தன. தைலவர்ணத்தால் ஒன்றில் பூகோளப்படமும், மற்றொன்றில் ககோளப் படமும் வரைந்தார். வர்ணங்கொடுத்த கோளத்தின் துருவங்கள் ககோளத்தின் (Sky) துருவங்களைநோக்கி நின்றன. சூரிய வெளிச்சத்தைக் கொண்டு அறியும்படிக்கு இருபத்துநான்கு மணிகளும் காண்பிக்கப்பட்டன. பூமியின் எந்தெந்த பாகங்கள் எச்சமயம் வெளிச்சமடை

கின்றனவோ அந்தந்த பாகங்கள் அதேசமயம் பூகோளப்படத்திலும் வெளிச்சமடையும்படி அமைக்கப்பட்டது.

கொஞ்சநாள்கழித்து பர்க்யூஸன் எடின்பரோவுக்குப் போய் அங்கே சில உயர்குலத்து ஸ்திரீகளின் ஸ்நேகம் சம்பாதித்துக்கொண்டு அவர்களுக்கு சித்திரப்படங்கள் வரைந்து கொடுத்துவந்தார். வியாபாரம் வர வர வலுக்க, தன் கையிலும் பணம் மிஞ்சி தாய்தந்தைபர்க்கும் ஏராளமாய் அனுப்பலானார். இவ்வேலையை அவர் இருபத்தாறுவருஷம் பார்த்து வந்தார்.

எடின்பரோவில் கணிதமேதாவியான மாக்ளாரின் என்பவரிடமிருந்து ஜேம்ஸ் சூரிய மண்டலயந்தரம் செய்யக் கற்றுக்கொண்டார். அவர் செய்தயந்திரத்தில், "சூரியன் தன் அச்சில் சுற்றுவதும், சாய்ந்த அச்சு ஸ்தம்பத்தில் பூமி சமதூரத்தில் சூரியனை வருஷமொருமுறை சுற்றிவருவதும், நாளுக்கு ஒருமுறை பூமி தன்னையே சுற்றிக்கொள்வதும், சந்திரனுடைய சலனம், கலைகளுண்டாவதும், இந்த ஸர்வ சலனங்களிலிருந்து ஆறு ருதுக்களும், இரவு பகல்களின் ஜாஸ்திகம்மி நாழிகையும், அமாவாசை பௌர்ணமி தினங்களும், கிரகணங்கள் உண்டாவதும் அறிந்து கொள்ளக்கூடும்." 1747௵ இவ்வாராய்ச்சிகளைப்பற்றி ஒரு புத்தகமும், இன்னு மநேகமான சாஸ்திரப் புத்தகங்களும் பிரசுரஞ் செய்தார்.

இவரைப்பற்றி அநேக புத்திமான்கள் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். பர்க் யூஸன் ஆழ்ந்த ஆராய்ச்சியுள்ளவர். விடாமுயற்சியுடன் கல்விகற்றறிந்து இறுமாப்படையாமல் தயையுடனிருந்தவர். நன்னடக்கையுள்ளவர். கலகலவென்று அழுதுபோன்ற வார்த்தைகளைப் பேசக் கூடினவர் எப்பொழுதும், வறுமையிலிருந்த நற்குணங்களுடன் கூடவேயிருந்தவர்.

இத்தகைய மகான் கல்வி விருத்திசெய்துகொள்ள பட்ட சிரமத்தாலும், விருத்தாப்யத்தாலும் தேகந்தளர்ந்து, 1776௵ நவம்பர் 16-ம் தேதிஉயிர்துறந்தார். அவர் இறந்த பிறகு அவர் சேர்த்துவைத்திருந்த தனக் குவியலைக் கண்டு அவரையறிந்தவர்களு மதிசயப்பட்டார்கள்.

T. S. ராஜகோபாலன்.

---

# உஷ்ணம் பரவுவதெப்படி?

## HOW HEAT IS TRANSFERRED?

(274-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு உஷ்ணம் வரும்போது கரண்டியின் பாகங்கள் ஏதாவது தம்மிடமிருந்து நிலை பெயர்கின்றனவா? காற்று அடிக்கும்போது ஓரிடமிருந்த காற்று இன்னொரு இடம் போகும்போது அதன் பக்கத்தில்



161413

இருக்கும் குப்பை, கூளம், மண், மணல், இவற்றையும் அடித்துக்கொண்டு
போகிறபடி, கரண்டியின் அணுக்கள் தாமே இடம் பெயர்ந்து வந்து உஷ்
ணத்தையும் அடித்துக்கொண்டு வருகின்றனவா? அவ்வாறு நினைக்கக்
காரணம் இல்லை. உஷ்ணம் பரவும்போது கரண்டியின் அணுக்கள் நிலை
மாறுவது எப்பொழுதும் புலப்படுவதில்லை. ஆனால் உஷ்ணம் மட்டும்
அணுக்களின் வழியாய்ப் பரவுகின்றது, என்று நினைக்கவேண்டியிருக்
கின்றது. இங்ஙனம் இரும்பு, தாமிரம், வெள்ளி, பித்தளை, இவற்றின்
வழியாய் அணுக்கள் இடம் பெயர்வதின்றி, உஷ்ணம் பரவும் விதத்திற்கு
"Conduction of Heat" என்று ஆங்கிலேயர் பெயர் கொடுக்கின்றனர்.
நாம் "அணுநிலை மாறாது உஷ்ணம் பரவுதல்" என்னலாம். 'கன்டக்ஷன்'
என்னும் வார்த்தையையே கூடியமட்டில் இப்பாடத்திலும் இனிவரும்
பாடங்களிலும் உபயோகிப்போம்.

எல்லா வஸ்துக்களிலும் உஷ்ணம் ஒரே விரைவாய்ப் பரவுகின்றதா?
அல்லது வஸ்துக்களுக்குத் தக்கபடி பரவும் வேகம் வித்தியாசப்படுகின்
றதா? ஒரு சிறு பரிக்ஷை செய்யுங்கள். ஒரே மாதிரியான இரும்புக்
கரண்டி முட்டை, பித்தளைக்கரண்டி முட்டை இவற்றைக்கொண்டு
கொதிக்கும் ஜலத்தைக் கிளரி விட்டுக்கொண்டிருங்கள். கைக்கு சூடு
உறைக்க எத்தனை நிமிஷம் ஆகின்றனவென்பதை ஒவ்வொரு வஸ்துவி
லும் நிர்ணயம் செய்யுங்கள். பிறகு ஒரு வெள்ளி உத்தரணியால் அதே
ஜலத்தைக் கிளருங்கள். ஏதாவது வித்தியாசம் தெரிகின்றதா? வெள்ளி
யில் வெகு சீக்கிரம் உஷ்ணம் ஏறுகின்றது. தாமிரத்தில் அதைவிடச்
சற்று தாமதமாய் உஷ்ணம் பரவுகின்றது. பித்தளையில் அதினும் தாம
தம்: இரும்பில் பரவுவது பின்னும் தாமதம்.

இதே விஷயத்தை இன்னுமொரு பரிக்ஷை செய்து வியக்தமாய்க்
காட்டுகிறேன். ஒரே பருமனான இரும்பு, தாமிரம், பித்தளை—இக்கம்பி
களை எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றின் ஒரு நுனியை ஒருங்கே
சேர்த்து சிறு கம்பியால் கட்டுங்கள். மற்றொரு நுனியை B, C, D,
என்ற கட்டைகளின் மேல் வையுங்கள். நடுபாகம் விழாமல் இருக்க
இரண்டு ஒரு ஆணிகளை உபயோகிக்கலாம். AB தாமிரக்கம்பி; AC பித்
தளைக்கம்பி; AD இரும்புக்கம்பி; A என்னும் இடத்திலிருந்து ஒவ்
வொரு கம்பியிலும் கொஞ்சம் தேன் மெழுகைக் கொண்டு சரியான
இடை வெளிகள் விட்டு 4, 5 கோலிகுண்டுகளை ஒட்டவையுங்கள். A என்
னுமிடத்தில் ஒரு விளக்குவைத்துக் காச்சினால் ஒவ்வொரு கம்பியின் வழி
யாயும் உஷ்ணம் ஏறுவதால் குண்டுகள் ஒவ்வொன்றாய்க் கீழே விழும்.
தாமிரக்கம்பியில் அதிக வேகமாயும் பித்தளையில் உள்ள குண்டுகள் சற்று
தாமதமாயும், இரும்பில் உள்ளன வெகு நிதானமாயும் கீழே விழுவதைக்

காணலாம். கடைசியில் இரும்பில் உள்ள குண்டுகள் ஒன்று இரண்டு கீழே விழாமல் கூட அங்ஙனமே நிற்பதைக் காணலாம்.

இம்மாதிரி பல பரிக்ஷைகள் செய்து ஒவ்வொரு வஸ்துவிலும் உஷ்ணம் பரவுகிற விரைவைச் சரியாய்க் கண்டுபிடித்து இருக்கின்றனர் சாஸ்திரபண்டிதர்.

வெள்ளியில் உஷ்ணம் பரவும் விரைவு,—(கண்டக்ஷன் Conduction) 100 பங்கு என்று வைத்துக்கொண்டால்:—

| | | | | |
|---|---|---|---|---|
| வெள்ளி | ... | ... | 100 | பங்கு |
| தாமிரம் | ... | ... | 74 | ,, |
| பித்தளை | ... | ... | 24 | ,, |
| தகரம் (Tin) | ... | ... | 15 | ,, |
| இரும்பு | ... | ... | 12 | ,, |
| ஈயம் (Lead) | ... | ... | 9 | ,, |
| சீமை வெள்ளி (German silver) | ... | | 8 | ,, |
| நிலக்கரி (Coal) | ... | ... | 1/50 | ,, |

மரம், தந்தம், பஞ்சு, கம்பளி, இறகு—இவற்றில் கண்டக்ஷன் மிகக் குறைவு. ஆகையால் அவற்றின் அணுக்களின் வழியே உஷ்ணம் பரவுவதில்லை என்றே சொல்லலாம். இக்காரணத்தினாலேயே இராந்தல் பிடிகளுக்கு ஒரு மரக்குழாய் போட்டு இருக்கின்றனர். அதே காரணம் பற்றி நீங்கள் அடுப்பிலிருந்து சமையல் பானையைக் கீழிறக்க வேண்டுமானால் துணியையோ எருவாமுட்டையையோ கைக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளுகிறீர்கள். காப்பிக்கெட்டில், டீப்பாத்திரம், இவற்றிற்குக் கொம்பினாலும், மரத்தினாலும், பிரம்பினாலும் பிடிகள் போட்டு இருப்பதைப் பலர் கண்டிருக்கலாம்.

ஆர். கே. சுவாமி, பி.ஏ., எல்.டி.

(இன்னும் வரும்)

---

# ஆப்ரிக்காவைக் கண்டு பிடித்தவர்கள்.

## ஹென்றி மார்ட்டன் ஸ்டேன்லி.

(279-வது பக்கத்தொடர்ச்சி.)

லிவிங்ஸ்டன் இறந்துபோகுமுன் இங்க்லாந்திலுள்ள இவரது நண்பர்கள் வெகுகாலமாக இவரது க்ஷேம சமாசாரத்தைக் கேட்காமலிருந்தமையால் மனக்கவலையுற்று இவர் 'எங்கிருக்கிறார், சௌக்கியமாயிருக்கிறாரா' வென்பனவற்றை அறிய ஆவலுடையவர்களாயிருந்தார்கள். ஆனது பற்றி ஹென்றி மார்ட்டன் ஸ்டேன்லி என்பவரை அவரது நண்பர்கள் ஆப்ரிக்காவுக்கு அனுப்பினார்கள்.



இவர் இங்க்லாந்திலுள்ள வேல்ஸில் பிறந்தவர். இவர் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறுபிள்ளையாயிருந்தபொழுதே இவர் வேல்ஸி லுள்ள ஒரு சிறு க்ராமத்தில் வேலைசெய்யும் பாடசாலைக்குப் போய் வேலை செய்தும் தம் பாடங்களைப் படித்தும் வந்தார். இங்கு சிறிது காலமிருந்து படித்தபின் அமெரிக்காவுக்கு ப்ரயாணமானார். இங்கு வந்தபின் சில தினங்களுக்குள் இத்தேசத்து கனவானாகிய மிஸ்டர் ஸ்டேன்லியுடன் ஸ்நேகம் செய்து கொண்டார். ஸ்டேன்லி இவருக்குற்ற நல்ல நண்பராகவே யிருந்தார். இவருக்கு முதலில் ரோலேண்ட்ஸ் எனப் பெயரிருந்தது. மிஸ்டர் ஸ்டேன்லியுடன் பாலிப வயது முதற்கொண்டு ஸ்நேகமாயிருந்து அவர் உதவி பெற்றமையால் அவர் பெயரை தாமும் வகித்துக்கொண்டார்.

இவர் பற்பல விடங்களுக்கெல்லாம் ப்ரயாணம் செய்திருக்கிறார். ஆங்காங்கு இவருக்கு கிடைத்த வேலையைச் சரிவர செய்துவந்திருக்கிறார். இவ்விதம் இவர் இருந்தமையால் அமெரிக்கா தேசத்தில் ஒரு சமாசார பத்ரிகையின் சொந்தக்காரர் அவரிடத்தில் அதிக அன்பும் விசுவாசமுமுடையவராயிருந்தார். இவர் ஸ்டேன்லிக்கு வேண்டிய ஏராளமான திரவியம் கொடுத்து ஆப்ரிக்காவுக்குப்போய் லிவிங்ஸ்டனைக் கண்டுபிடிக்கும்படி சொன்னார்.

அவர் சொல்லியவண்ணம் ஸ்டேன்லி ப்ரயாணம்செய்ய புறப்பட்டு ஸேன்ஸிபார் என்ற யிடத்திற்கு வந்திறங்கி தமக்கு சகாயத்திற்கு வேண்டிய மனிதரைச் சேர்த்துக்கொண்டு லிவிங்ஸ்டனைக் கண்டுபிடிக்க முயன்றார். அவர் உயிருடனிருந்தால் மிகவும் நல்லது. அப்படிக்கின்றி அவர் இறந்திருந்தால் அது விசனகரமானது. ஆயினும் அவர் உயிருடனிருப்பதும் இல்லாததும் தெரியவேண்டுமல்லவா? இதை யறிய தம்முடனுள்ள மனிதருடன் உஜிஜி என்ற விடத்திற்கு வந்தார். இங்குதான் லிவிங்ஸ்டன் அச்சமயத்தில் தங்கியிருந்தார். இருவரும் சந்தித்தார்கள். இருவருக்கும் உண்டான சந்தோஷத்திற் களவில்லை. ஏனெனில் இவரைக் கண்டுபிடிப்பதற்கன்றோ இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுக்கொண்டு ப்ரயாணம் செய்துவந்தார்? லிவிங்ஸ்டன் தமது குடிசையில் வெளுத்த தேகத்துடன் வியாதியாயிருந்தார். உடுக்க நல்ல வஸ்திரமுமில்லாமலிருந்தார். ஸ்டேன்லியைச் சுற்றிலும் அத்தேசத்து ஜனங்கள் கும்பலாய் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். இவருக்கு உண்டான சந்தோஷமோ அபரிமிதம். உடனே "தாங்கள் டாக்டர் லிவிங்ஸ்டன்தானோ" என்று கேட்டார். இவ்விதம் தமது ஜென்மதேசத்துக் கப்பாலுள்ள ஒரு பெரிய கண்டத்திலுள்ள ஒரு காட்டில் தமது தாய்பாஷையில் பேசின பேச்சு இவருக்கு அதிக ஆநந்தத்தை யுண்டாக்கியது. உடனே புன்சிரிப்புடன் தமது டொப்பியை உயர்த்தி மரியாதையாக "ஆம், ஐயா" என்று பதிலுரைத்தாராம். இரு

வரும் கைலாகு கொடுத்தபின் "தங்களைப் பார்க்கும்படி எனக்கு நேரிட்டது கடவுள் கிருபையால்தான். ஆகையால் அவருக்கு வந்தனம் புரிகிறேன்" என்றார் ஸ்டேன்லி. சிலநாள் இருவரும் உல்லாசமாக தாங்கள் செய்த பிரயாணங்களைப்பற்றி பேசினார்கள். லிவிங்ஸ்டன் தமது கதைகளை யெல்லாம் விரிவாகச் சொன்னார்.

ஸ்டேன்லி கொண்டுவந்திருந்த மருந்து, ஆகாரம், உடுப்புகள் முதலியவைகளை லிவிங்ஸ்டனுக்கு கொடுத்துவிட்டு அவர் உத்திரவு பெற்றுக்கொண்டு இவரது ஆச்சரியமான கதையை இவரது நண்பர்களுக்குச் சொல்ல முகமலர்ச்சியுடன் விடை பெற்றுக்கொண்டு திரும்பிச்சென்றார். பரிதாபமான லிவிங்ஸ்டனே இவ்விடத்திலேயே யிருந்து உயிர்துறந்தார்.

சிறிதுகாலஞ் சென்றபின் ஸ்டேன்லி ஆப்ரிக்காவிலுள்ள சிற்சில பாகங்களைக் கண்டுபிடிக்க வந்தார். பெரிய ஏரியாகிய டேங்கனீக்காவைச் சுற்றிப்போனார். காங்கோ என்ற நதி எங்கெங்கு சென்று சமுத்திரத்தில் சேருகிறதையும் கண்டுபிடித்தார். பின்னிட்டு தமது ஜென்மதேசத்துக்குத் திரும்பிச் சென்றார். சிறிதுகாலஞ் சென்றபின் மறுபடியும் ஜென்மதேசத்திலிருந்து ப்ரயாணம் செய்த எமின்பாஷா என்பவரைக் காப்பாற்றி உதவிபுரிய ஆப்ரிக்காவுக்குப் போய் திரும்பிவந்தாராம். இவ்விதம் ஆப்ரிக்காவைக் கண்டுபிடிக்க ஸ்பக், க்ரான்ட் என்ற இரு கனவான்கள் பற்பல அபாயமான சங்கடங்களையெல்லாம் பட்டு அங்குள்ள பெரிய ஏரிகளை யெல்லாம் கண்டுபிடித்தார்கள். ஸர் சேமுயல் பேக்கர் பின்னிட்டு இவ்விடத்திற்கு வந்து பற்பல பாகங்களுக்குப் போய் ஒரு ஏரியைக் கண்டுபிடித்து அதற்கு ஆல்பர்ட் ந்யான்ஸா என்று பெயரிட்டார். இவர் போனவிடங்களுக்கெல்லாம் இவரது மனைவியும் சென்றாளாம். இவர் காலத்தில் அநேகமாய் ஆப்ரிக்கா முழுமையும் யாவருக்கும் நன்றாகத் தெரிந்ததாம். கேப்காலனி ஆப்ரிக்காவில் தெற்கிலிருக்கிறது. இது க்ரேட்ப்ரிட்டனுக்குச் சொந்தம். இங்கிருந்து வடக்கேயுள்ள இடங்களுக்கு பலர் பிரயாணம் செய்துவந்தார்கள்.

போர்ச்சுகல், ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆப்ரிக்காவின் கரையோரத்தில் வசிக்கப்போனார்கள். இவ்விதம் வசிக்கப் போனவர்கள் இக்கரையிலிருந்து மத்தியிலுள்ளவைகளைக் கண்டுபிடிக்கச் சென்றார்கள். ஆயினும் பூராவாக இன்னும் ஒருவருக்கும் தெரியாதாம். ஏனெனில் இக்கண்டம் யூரோப்கண்டத்தைவிட மூன்று மடங்கு பெரியது. அதில் சிற்சில பாகங்களில் மனிதர் ஒரு நாளில் சிறிதுமைல் தூரம்தான் ப்ரயாணம் செய்ய முடியுமாம்.

பத்திராதிபர்.



## நமது பார்ஸி குழந்தைகள்.

இவர்கள் பெர்ஷியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தமையால் இவர்களை பார்ஸி ஜாதியாரென்று சொல்லுகிறோம். இவர்களின் தொகை இப்பொழுது ஏறக்குறைய ஒரு லக்ஷம் பேரிருக்கலாமெனத் தெரிகிறது. இந்தியாவில் எல்லா ஜாதியாரைவிட இப்பொழுது நன்றாகப் படித்தவர்கள் இவர்களே. வியாபாரத்தில் ஊக்கமும் சுறுசுறுப்புமுடையவர்கள்.



பார்ஸி குழந்தைகள்.

குழந்தை பிறந்தவுடன் ஐந்துநாள் குழந்தைக்கு சர்க்கரை சேர்ந்த ஜலத்தை ஒரு துணிவத்தியில் முக்கி கொடுப்பார்களாம். தாய்க்கு கஞ்சி அல்லது இலேசான ஆகாரம் கொடுப்பார்களாம் குழந்தைக்கு 6வயதாகிற வரையிலும் ஒரே ஒரு நீண்ட சொக்காயைத்தரித்து வைப்பார்கள். தலையில் குல்லாயைப்போட்டு வைப்பார்கள். குழந்தைகளுக்கு 5 வருஷமும் 3 மாதமானவுடன் இவர்கள் 72 இழையால் செய்யப்பட்ட ஒரு கயிற்றை இடுப்பில் மூன்று சுற்று சுற்றி நாலுமுடி போடுவார்களாம். அப்பொழுது ஏதோ மந்திரம் ஜெபிப்பார்களாம். இப்படி செய்வது நன்மைக்காகவும், நல்வழிக்காகவுமென்பதே அவர்களது அபிப்பிராயம்.

ஆண்பிள்ளைகள் பற்பல விளையாடல்களை குழந்தைப்பருவத்தில் ஆடுவார்கள். இவர்களை 6 அல்லது 7 வயதானதும் பாடசாலைக்கு அனுப்புவார்கள். இப்பொழுது பெண்களையும் பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறார்கள். முன் பெண் கல்வியே இவர்களிடத்தில் கிடையாது. முதல் முதலில காலஞ்சென்ற ப்ரேம்ஜீ கௌவஸ்ஜி என்ற கனவான் தமதுபெண்

களுக்குகல்விபுகட்டி வர ஆரம்பித்தாராம். சிலர் அக்காலத்தில் வண்ணானு க்குபோடும் உடுப்புகளின் கணக்கை எழுதவும், தங்கள் கணவருக்குவரும் கடிதங்களில் தங்கள் கணவருடைய பேரைப்படிக்கவும் தெரிந்திருந்தால் போதுமென அபிப்பிராயப் பட்டார்களாம். க்ரமேண கற்றறிந்த கனவான்கள் தங்கள் புத்ரிகளுக்கு கல்வி அவசியமென்றும், அதைப் போதித்து வர ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தி பல உபந் நியாசங்கள் செய்தார்களாம். இவ்வித உபந்நியாசங்களின் பயனாக 1849-ம் வருஷத்தில் அக்டோபர்மீ 4வல் பார்ஸி பெண்கள்பாடசாலை கள்ஸ்தாபிக்கப்பட்டதாம். அப்பாடசாலைகளில் 44 பெண்கள் முதல்நாளில் வந்து சேர்ந்தார்களாம். சிலவாலிபர்கள் தருமார்த்தமாக இப்பாடசாலை களிலுள்ள பெண்களுக்கு கல்வி புகட்டிவந்தார்களாம். தனவந்தர்க ளும் தங்களாலான திரவிய சகாயம் செய்யமுன் வந்தார்கள். ஐரோப் பியமாதர்களும், கனவான்களும் இவர்களுக்கு தங்களாலியன்ற உதவி யைப்புரியமுன் வந்தார்கள். இப்படிச்செய்தமையால் பாடசாலைகளில் பெண்களின் தொகை அதிகரித்து பெண்கள் கல்வி அறிவுடையவர்களா னார்கள்.

1891ம்வருஷ ஸென்ஸஸ்கணக்குப்படி பார்ஸிஜாதியாரிலுள்ள ஜனத் தொகையில் பாதிபேர் கல்வி கற்றவர்களெனத் தெரிகிறது. இவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியுமாம். இவ்விதமே எல்லா நற்காரியங்களுக் கும் முதலில் கஷ்டங்களுண்டு, பின்னிட்டு சுகம் உண்டாகும். இச்சாதி யார் இப்பொழுது உன்னதஸ்திதியில் இருக்கிறார்கள். இவர்களது குழ ந்தைகளுள்ள படத்தைப்பாருங்கள். எவ்வளவு திடகாத்திரர்களாயிருக் கின்றனர்! இப்படியல்லவோ இந்தியச்சிறுவர்களுமிருக்கவேண்டும்!

பத்திராதிபர்.

## சுகாதார விஷயம்.

### குழந்தைகளின் நித்திரை காலம்.

நாம் இரவில் சௌக்யமாய் தூங்குகிறோம். சிறுகுழந்தைகள் சாதா ரணமாக இரவில் 7-மணிக்கு நித்திரை செய்யப் படுக்கையில் படுத்துக் கொள்ளவேண்டும். காலையில் 7 மணிக்குத்தான் எழுந்திருக்கவேண் டும். நமது தேசத்தில் சிறுபிள்ளைகள் 8 அல்லது 9-மணிக்குத் தான் நித் திரை செய்ய செல்லுகின்றனர். இது மிகவும் தப்பு என ஒரு கற்றறிந்த இங்கிலீஷ் மாது நம்மிடத்தில் சொல்லிருக்கிறார்கள். இங்கிலாந்தில் இவ் விதம் செய்வதில்லையாம். இவ்விதம் அவர்கள் செய்வதால் பகலில் நித்தி ரையுள்ளவர்களாயும், பலஹீன முள்ளவர்களாயும் தென்படுவதுடன் நாளடைவில் பலக்குறைவையும் புத்திக்குறைவையு மடைகிறார்கள். சுமார் 8 அல்லது 9 வயதாகிறவரையிலும் இராத்திரியில் படிக்கச் சொல்லாமல்



7 மணிபடித்தவுடன் நித்திரை செய்ய அவர்களைத் தூண்டுவது நலமே ஆகையால் பெற்றோர்கள் இவ்விஷயத்தைக் கவனிப்பார்களென்று நம்பு கிறோம்.

### பதார்த்த குணசிந்தாமணி

#### நெய்வகை.

பசுவின் நெய்யானது தாகம், உழலை, பிணி. அதி சுட்கரோகம். வாந்தி பித்தாதிக்கம், வாத விஷமம், விரணம் பிரமேகம், வயிற்றில் எரிவு, பித்த விக்கல், இருமல், வயிற்றுவலி, முதலியவைகளை நீக்கும். காயம் பசு நெய்யால் நேத்திரத்திற்கொளியும், சரீர புஷ்டியும், பொற்சாயமும் உண்டாம். கண்புருவம், நெற்றி, சிரசு இவைகளைப்பற்றிய நோய்கள் விலகுமென்க.

எருமை நெய்யால் அறிவு, கண்ணொளி இவைகள் மந்தமாம், வாத பித்த தோஷம், கரப்பான் இவையுண்டாகும்.

வெள்ளாட்டு நெய்யையுண்ணில் அது சிலேஷ்மதிக்கத்தையும் வாத கோபத்தையும் போக்கும் சரீரத்தைவளர்ப்பது மன்றிக்கண்ணுக்கொளி யை யுண்டாக்கும்.

கலப்பு நெய்யால் தேக புஷ்டியுண்டாகும், தீபனமும் உண்டாகும், பித்த தோஷமும் தேகக்கொதிப்பாலுண்டாகிய பித்தசுரமும் நீங்கும். உடலும் பலமடையும்.

பன்றி நெய்யால் ரத்த மூலக்கிராணியையும், வாதகடுப்பு முதலிய பிணிகளையும் நீக்கும்; ஆனால் இதை உட்கொள்வது கஷ்டமாயிருக்கும்.

நமது வைத்தியர்.

## சிறுவர்க்கான கதைகள்.

### புத்தி புகட்டும் விதங்கள்.

ஒருவருக்கு புத்திபுகட்ட வேண்டுமென்றால் அநேகவிதத்தில் செய் யலாம். அவற்றுள் நீடித்த நன்மையைத் தரத்தக்கது கட்டுக்கதைமூலமாய் புத்திபுகட்டுவதே. இந்தவழியை யனுசரிப்பதில் ஒருவித ஆபத்துமில்லை. பழைய சரித்ரங்களைப் பார்த்தால் பண்டைகாலத்திய வித்வான்களும் அரசன்மார்களுக்கு இந்த வழியையே ப்ரதானமாகக்கொண்டு நன்னடக் கையிலவர்களை ஏவிவந்ததாகத்தெரிகிறது. ஒவ்வொருவர்மனதுக்கும் இப் பொழுது தோன்றக்கூடிய அநேககதைகளை விட்டுவிட்டு, பின்வரும் ஒரு க்கிதேசக்கதையொன்றைக் கவனித்தால் இவ்விதம் புத்தி சொல்லும் முறை எத்தன்மைத்து என்று புலப்படும்.

ஸுல்தான் மாமூத் என்னுமரசர் பல அன்னியவரசர்களோடு யாதொரு காரணமுமின்றிப் போர்புரிந்தும், உள்நாட்டில் கொடுங்கோலரசு செலுத்தியும் வந்துகொண்டிருக்க, அவரது அரசாங்கத்தில் பஞ்சமுண்

டாகி நாடு நகரங்கள் சீர்குலைந்து, செழிப்பற்றுப்போயின. இக்கொடூர நடவடிக்கைகளால் பாரஸீக தேசத்திலுள்ள ஜனங்களில் அநேகரும் நசித்துப்போய்விட்டனர்.

இந்த சுல்தானுக்கு அதிமேதாவியான மந்திரியொருவரிருந்தார். அவர் அநேகவிதங்களில் மன்னனுக்குப் புத்திபுகட்டக்கருதியும் பலன் இல்லாமற் போய்விட்டது. ஒரு சமயம் அவர் தமக்கு பட்சிகளின் பாஷையை அறியக்கூடிய சக்தியிருந்ததாகவும், அவ்வற்புதத் திறமையைதாம் ஒரு மகமதியப் பக்கிரியிடமிருந்து பெற்றதாகவும் சொல்லி, எப்பொழுது இரு பட்சிகள் கூடியிருந்தபோதிலும் அறிந்தவர்போல் அவைகளின் சம்பாஷணை இன்னவென்று வெளியிட்டுச் சொல்லவுமாரம்பித்தார். இப்படியிருக்கவொருநாள் மன்னனும் மந்திரியும் கான விலங்குகளை வேட்டையாடிவிட்டு அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அந்திவேளையாகிவிட்டபடியால் வழியில் ஒருமரத்தின்மேல் இரண்டு ஆந்தைகள் உட்கார்ந்து ஒன்றோடொன்று இரைச்சலிட்டுக்கொண்டிருந்தன. முதுமகன் இவைகளை கண்ணுற்று மந்திரியை யழைத்தும் இவ்விரு பறவைகளும் என்ன பேசிக்கொண்டிருக்கின்றனவென்றுணர நான் மிக்க ஆவல் கொண்டிருக்கிறேன். மந்திரியே, உன்னால் இதை நன்கு கவனித்துச் சொல்லமுடியுமா? வென்று வினவினர். மந்திரியும் அரசனுக்ஞையை சிரமேற்கொண்டு அவனுக்குப்புத்தியூட்ட தகுந்ததருணம் வாய்த்ததென வுண்ணி, அம்மரத்தினடியிற்சென்று சற்றுநேரம் அப்பறவைகள் பேசுங் குறியை ஆழ்ந்தறியவன்போல் நின்றுகொண்டிருந்தார். பிறகு இறைவனிடம்வந்து "ஐயே, நான் அவை பேசுவதை எவ்வாறெடுத்து விளக்குவேன்? அதைச் சொல்லவெனக்குச் சிறிதும் நா எழவில்லையே! நான் என்செய்வேன்? என்மேல் கிருபைகூர்ந்து மன்னித்தருளவேண்டு"மென்று பணிமுறைவேண்டினர். அரசன் மிகச்சினந்து மீண்டும் மந்திரியை நிர்ப்பந்தித்துக்கேட்க, அப்புத்திமான் "கேளும் என்னருமையரசே! அவ்விரு குருவிகளும் ஆண்குருவிகள் ஒன்றுக்கு ஆண்மகவு உண்டு. மற்றொன்று பெண்மகவுடைத்து. இவ்விரண்டு குழந்தைகளுக்கும் விவாகம் நடத்த வேண்டி அவையோர் ஏற்பாடுசெய்துகொண்டிருக்கின்றன. பிள்ளையின் தகப்பன் பெண்ணின் தகப்பனை நோக்கி "உன்புத்திரிக்கு சீதனமாய் ஐம்பது பாழடைந்த கிராமங்கள் கொடுப்பதாயிருந்தால் உன்பெண்ணை என்பிள்ளைக்கு கலியாணம் செய்துகொள்ள யாதொரு தடையுமில்லை" என்றது. அதற்குப் பெண்ணின் தகப்பன் "இதுதானாப்ரமாதம்! ஐம்பதுக்கு ஐந்நூறு வேண்டுமானாலும் தருகிறேன். நமது சக்ரவர்த்தி ஸுல்தான் மாத்திரம் நீடூழிகாலம் வாழ்கவேண்டும்! அவராளுகிறவரையில் பாழடைந்த க்ராமங்களுக்குக் குறைவேது?" என்று மறுமொழி கூறலும்,



இரண்டுக்கும் உடன்படிக்கை நடந்துவிட்டது." என்று சொல்லி முடித்தார். அரசன் செவியிலும் மொழிமோத அவன் மிகுந்த அவமானமடைந்தான் அன்றுமுதல் பாழடைந்துப்போன நாடுகளைப் புதுப்பித்துக் கட்டலானான் என்றால், அன்றுமுதல் தன் குடிகளின் க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கத் தலைப்பட்டான் என்றுகிறதல்லவா? T. S. ராஜகோபாலன்.

## திருப்தியும் அதிருப்தியும்.

ஓர் ஊரில் ஒரு தனவந்தன் ஒரு பெரிய மாளிகையைக் கட்டிவைத்
தான். அம்மாளிகையின் வாயிற்படிக்குமேல் "இந்த வீடு கிடைத்தமட்
டில் போதும் என்னும் மனதுடையவனுக்கு இனாம்" என்று பெரிய எழுத்
துக்களில் எழுதிவைத்திருந்தான். ஒருநாள் ஒரு பிராமணன் அந்த தன
வந்தனை யடைந்து "ஐயா! இந்தவீடு என்னுடையது. இதைத் தாருங்
கள்" என்றான். தனவந்தன் ஆச்சரியப்பட்டு "ஐயா! பெரியவரே!
வயது முதிர்ச்சியினால் தாங்கள் தெரியாமல் பேசுகிறீர்கள் என்று எண்
ணுகிறேன். நான் கட்டிவைத்த இந்தவீடு உம்முடைய தெவ்வாறாகும்?
தயைசெய்து கூறுங்கள்" என்று பதிலுரைத்தான். அதைக்கேட்டதும்
பிராமணன் "ஐயா என்னை ஏமாற்றுவதற்கு உம்மாலாகாது! இந்த வீடு
கிடைத்தமட்டில் போதுமென்னும் மனதுடையவனுக்கு இனாமல்லவா?
நான் அத்தகையவன் என்பதை எவ்வாற்றேனும் ரூபிக்கிறேன். யாவ
ருடைய சிபார்சு வேண்டுமென்றாலும் கொண்டுவருகிறேன்" என்று
அதட்டிக் கூறினன். இதைக் கேட்டதும் தனவான் பெருநகை நகைத்து
"ஐயா பிராமணரே நான் உம்மை வேண்டவில்லை. கிடைத்தமட்டில்
திருப்திகொண்டவர் நீராயின் அந்நியருடைய வீட்டின்மேல் ஆசைவை
த்து இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளமாட்டீர் நீர் போகலாம். வீண்
வாதம் வேண்டாம்" என்று கூறினான். பிராமணன் மிகுந்த வெட்க
மடைந்து தலைகுனிந்து மௌனமாகச் சென்றான்.

## பிடிவாதத்தினாலுண்டாகுங் கேடு.

நவனீதபுரம்என்ற ஊரில் அலங்காரசிங்கன் என்ற வணிகன் ஒரு
வனிருந்தான்: அவனுக்கு நகைகள் மீது வெகுபிரியம். தான்பிரியப்
பட்டவஸ்துவை என்னவிலைகொடுத்தேனும் வாங்குவான். இவன் ஒருநாள்
தன்னுடைய சிநேகிதர்களுடனே ஒரு சத்திரத்தில் பேசிக்கொண்டிருக்
கும்போது அவ்விடத்தில் ஒருபுதியவன் வந்து சேர்ந்தான். அவன்கையி
லிருந்தமோதிரம் எல்லோருடைய கண்களைக்கவர்ந்தது. அலங்காரசிங்கன்
அதனை வாங்கப்பிரியப்பட்டான். உடனே புதியவனையணுகி "ஐயா! அந்த
மோதிரத்தை என்ன விலைக்கு வாங்கினீர்கள்? எனக்கு அதனை விற்
பனை செய்வீரா" என்று கேட்டான். அதைக்கேட்ட புதியவன் "ஐயா!

பிரபு' இது விற்பனைக்கு வந்ததல்ல. நான் விற்கமாட்டேன்" என்றான்.
வணிகன் அந்த மோதிரத்தை எவ்விலைக்கேனும் வாங்க விரும்பி புதிய
வனைத் தனக்கு அந்த மோதிரத்தை விற்குமாறு மிகக் கெஞ்சிக்கேட்
டான். மோதிரக்காரன் "ஐயா! இந்த நகை மிகமேலானதன்று. அதில்
ஒருதோஷமிருக்கிறது. என்னுடைய சிநேகிதர் ஒருவனுடைய ஞாபகச்
சின்னமாக இதனைநான் அணிந்திருக்கிறபடியால் இதனைவிற்கமாட்டேன்"
என்று மறுத்துச் சொன்னான்.

எவ்வளவு சொல்லியும் அந்த வணிகன் கேளாதவனாய் அந்த மோதி
ரத்தைக் காண்பிக்குமாறு மிகவேண்டி அதற்கு ஈடாக ஆயிரம் ரூபாயைக்
கொடுத்து மோதிரத்தைப் பெற்றுசென்றான். அந்தமோதிரத்தைக் கண்ட
நகை வியாபாரிகள் யாவரும் அந்த மோதிரம் மிகச் சிறந்ததென்றும் மிக
விலை உயர்ந்ததென்றும் சொன்னார்கள். அலங்கார சிங்கனுக்கு அதை
வாங்கவேண்டுமென்ற பிரியம் அதிகமாய்விட்டது.

நகைக்குடையவனிடம் உடனே வந்து மோதிரத்தைக் கொடுத்துவி
ட்டு "நான்கொடுத்த ஆயிரம் ரூபாயையும் நீரே எடுத்துக்கொண்டு மோதிர
த்தைக்கொடுங்கள்" என்றான். அந்த புதியவன் சம்மதியாதவனாய் சிறிது
நேரம் மறுத்துவந்தான். மோதிரத்தின் விலை நிமிஷ நிமிஷம் ஏறிக்கொண்
டேவந்தது. கடைசியாக ஆயிரத்தைந்நூறு ரூபாய் கொடுப்பதாக வணிகன்
ஒத்துக்கொண்டான். புதியவன் "ஐயா! மறுபடியும் சொல்கிறேன்,
இந்த மோதிரம் மேலானதல்ல, அதில் தோஷமிருக்கிறது; பின்னால் என்
மேல் வருத்தப்படவேண்டாம். நீங்கள் அவ்வளவு பிரியமாக கேட்கிறபடி
யால் நான் அதனைத்தருகிறேன். பின்னால் என்மேல் குறை கூறவேண்
டாமென்று மறுபடியும் மறுத்துக்கூறினான். வணிகன் ஐயா இங்கு இருப்
பவர்கள் முன்னிலையில் சொல்லுகிறேன், இந்தமோதிரம் தோஷமுள்ள
தென்றே வாங்குகிறேன். நீங்கள் பரிதாபப்படவேண்டாம் என்று சொல்லி
ரூபாயைக்கொடுத்து மோதிரத்தைப்பெற்றுக்கொண்டான். மோதிரத்தை
கொடுக்கும்போதும் அந்த புதியவன் முன்சொல்லியவாறே சொன்னான்.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட அரைமணி நேரத்திற்கெல்லாம்
அந்த மோதிரம் தோஷமுள்ளதென்றும் முன் காண்பித்ததல்ல வென்
றும் தெரியவந்தது. உடனே நியாயஸ்தலத்தில் பிராது செய்தான்.
என்ன செய்தும் என்ன? மோதிரக்காரனைக்கூப்பிட்டு விசாரிக்கும்போது
அவன் நியாயாதிபதியைப் பார்த்து தர்ம துரையவர்களே! நான்மோதிரத்
தை விற்கவந்தவனல்லன். இந்த பிரபு அதனை வற்புறுத்திக்கேட்டதின்பே
ரில்அதைவிற்றேன். நான்என்னசொல்லியும் அவர்கேட்கவில்லை. அந்தமோ
திரம் தோஷமுள்ளதென்று இவர்க்கு எவ்வளவோ முறை சொன்னேன்.
அவர் அது தோஷமுள்ளதென்று அறிந்தே வாங்குகிறேன் என்றுசொ



ல்லி வாங்கினார். என்மேல் பிழையொன்றுமில்லை" என்று சொன்னான்.
அலங்காரசிங்கன் இவைகள் யாவும் உண்மையென ஒப்புக்கொண்
டான். மோதிரக்காரன் பக்கம் தீர்ப்பளிக்கப்பட்டது. மோதிரக்காரன்
தான் செய்த மோசத்தைக் குறித்து அதிக சந்தோஷமடைந்து வீடு
சேர்ந்தான். அலங்காரசிங்கன் பிடிவாதத்தினால் கெட்டோமே என்று
வருத்தமடைந்தான்.

தி. எம். மாக்கசகாயம்.

## ஹாஸ்யத் துணுக்குகள்.

ஒரு பள்ளிக்கூடப்பையன் ஒரு சபைநடுவே ஒரு வியாசம்படிக்க
எழுந்தான். "அப்பா! இந்தப்பெரிய சபைநடுவிலே ஒரு வியாசம்வாசிப்
பதைப்போலக் கஷ்டம் ஒன்றுமில்லை" என்று சொல்ல, சமீபத்திலிருந்த
ஒருவர் "அதைவிடக் கஷ்டம் ஒன்று இருக்கு!"

பையன்: "என்ன அது?

அவர்: "உட்கார்ந்துகொண்டு அதைக்கேட்கணுமே அதான்!"

* * * * *

ஒரு பெருங்கல்யாணசந்தடியில் இடங்கிடைக்காமல் தவித்துக்கொண்
டிருந்த ஒரு தீக்ஷிதர் ஒரு யுக்திசெய்தார். கையில் வைத்திருந்தசொம்பு
நிறைய ஜலம் இருந்தபடியால் அதை மெதுவாய்க்கீழே கொட்டிவிட்டார்.
சுற்றியிருந்தவர்களெல்லாம் அடாடா! ஜலம் கொட்டிவிட்டதே என்று
எழுந்து ஓடினார்கள். தீக்ஷிதரும் "அடாடா? கொட்டிப்போய்விட்டதா!
ஹா" என்று கையில் தயாராய்வைத்திருந்த பழந்துணியைப் போட்டுக்
கொண்டு சுகமாய் உட்கார்ந்து கொண்டார்.

* * * * *

தன்னிடம் பிச்சைகேட்ட ஒரு சிறுவனைநோக்கி ஓர் பிரபு "நீ பணம்
விரும்புவதைவிட நல்லொழுக்கத்தை விரும்பிக் கேட்டுக்கொள்ளவேண்
டும்" என, பையன் "ஆம்! எஜமானே! தங்களிடம் எது நிரம்ப இருக்
கிறதோ அதைத்தானே நான் கேட்கலாம்" என்னவே அப்பிரபு அவமான
மடைந்தார்.

வி. எல். ராஜ்.

## சமாச்சாரக் குறிப்பு.

ஸிலோனுக்கு பர்மா மாணுக்கர்கள்:—பர்மா கவர்ன்மெண்டார் 4-பர்
மா மாணுக்கர்களை விவசாயம் கற்றுவர ஸிலோனுக்கு அனுப்பியிருக்
கிறார்கள். அவர்கள் விவசாயம் படிப்பதன்றி பள்ளிக்கூடத் தோட்டங்
கள் போடுவதை முக்கியமாய்க் கற்றுத் திரும்புவார்கள்.

யுத்தத்தின் ஒரு நாளைய செலவு:—சென்ற ஆகஸ்டுமீ 1உ-முதல் செப்
டம்பர்மீ 20-வரையில் போர்முனையிலிருக்கும் சேனைகளுக்காக பிரிட்டிஷ்
கவர்மெண்டார் செலவு செய்திருக்கும் மொத்தத்தொகை சுமார் 3-கோ
டியே 90 லட்சம் பவுன். அதாவது 58 கோடியே 50 லட்சம் ரூபாய்.

ஆகவேசராசரி ஒருநாளைய செலவு 7-லட்சத்து 8-ஆயிரம் பவுன். அதாவது 1-கோடியே 17-லட்சம் ரூபாய் ஒருவாரத்தில் 82½-லட்சம் பவுன் செலவாகிறது. ஒரு மாதத்தில் 5000-லட்சம் ரூபாய்க்குமேல் செலவாகிறது.

பம்பாயில் உஷ்ணப்பிரதேச நோய் வைத்திய பாடசாலை.—பம்பாயில் உஷ்ணப் பிரதேச நோய் வைத்தியபாடசாலையொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றிருந்த பிரேரனை சம்மந்தமாய் இப்போது பம்பாய் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவில் அந்த ஸ்கூல் பேரலில் ஸ்தாபிக்கப் படப்போகிற புதுச்சோதனைச் சாலையையொட்டி ஸ்தாபிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

மகா சபைகள்:—காங்கிறஸ், சோஷல் கான்ப்ரன்ஸ், கைத்தொழில் சபை முதலியவைகள் இவ்வருஷம் சென்னையிற் கூடும். காங்கிறஸ் சபைக்கு ஸ்ரீ புபேந்திரநாத்பாசு அவர்கள் அக்கிராசனாதிபதியாய்த் தெரிந்து எடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மிஸ்டர் பாலசந்திர கிருஷ்ண கோகலே:—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த மிஸ்டர் பாலசந்திர கிருஷ்ண கோகலே I. C. S. பரீட்சையில் தெரியிருக்கிறார். அவர் பம்பாய் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த எம். ஏ. பட்டதாரி. அவர் போனவருஷம் மார்ச்சுமாதத்தில் I. C. S. க்கு வாஸிப்பதற்காக இங்கிலண்ட் சென்றாரென்று தெரிகிறது. அவர் ஒரு சப்ஜட்ஜியின் குமாரர். பம்பாய் வில்ஸன் காலேஜிலும், புனா பர்கூஸன் காலேஜிலும் வாசித்தவர்.

பரோடா மகாராஜாவுக்கு நமது ராஜ சக்ரவாத்தி பேட்டிகொடுத்தார்:—மாட்சிமை பொருந்திய ஜார்ஜ் சக்கிரவர்த்தி இந்தமாதம் பரோடா மகாராஜாவுக்கு பேட்டிகொடுத்து அவரோடு பேசிக்கொண்டிருந்தாரென்று தெரிகிறது. அச்சமயம் இந்திய தேசமன்னர்களின் பிரதிநிதியாக பரோடா மகாராஜாவைப் பாவித்து இந்த யுத்த சமயத்தில் அத்தேச மன்னர்கள் காட்டியிருக்கும் ராஜபக்தியையும், செய்திருக்கும் பொருளுதவியையும் மிகுதியும் பாராட்டி சக்கரவர்த்தி பேசியிருப்பாரென்று நாம் சொல்லவேண்டியது அனாவசியமாகும்.

பசுமலையில் ஸ்திரீகளின் கூட்டம்:—மதுரைக்குப் பக்கத்தில் பசுமலையென்ற கிறிஸ்துவக் குடியேற்ற ஸ்தலம் ஒன்றிருக்கிறது. அது மதுரை அமெரிக்கா மிஷினெரிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே கல்வி ஸ்தாபனங்கள் பல விருக்கின்றன. அங்கே 14-ந் தேதியன்று ஸ்திரீகளின் மீட்டிங் ஒன்று கூடிற்று. ராமனாதபுரம் டிஸ்டிரிக்டு ஜட்ஜியின் மனைவியரான மிஸ்ஸஸ் W. L. வெங்கட ராமய்யா அக்கிராசனம் வகித்து யுத்த பண்டுக்குத் தாராளமாய்ப் பண உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன் பிறகு மிஸ்ஸஸ் ஸாண்டர்ஸ், கங்கீதம் பாடி வந்தவர்களைச் சந்தோஷப் படுத்தினர்.

313

சமாசாரக் குறிப்பு

கராச்சியில் நடந்த இந்திய மதுவிலக்குக் கான்பரென்ஸ்:—சமீபத்தில் கராச்சியில் இந்திய மதுவிலக்குக் கான்பரென்ஸ் ஒன்று நடந்தது. அந்தக் கான்பரென்ஸில் ஸிந்திப் பள்ளிக்கூடங்களுக்கும் இங்கிலீஷ் ஸ்கூல்களுக்கும் ஏற்படுத்தப்படும் பாடபுஸ்தகங்களில் லாகிரி வஸ்துக்களை விலக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் காட்டும் பாடங்களைச் சேர்க்கும் படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது.

சென்னையில் மழை:—ஜனவரி மாதம் முதல் தேதி முதல் அக்டோபர் மாதம் 25-ந் தேதி வரையிலும் சென்னையில் பெய்த மழையின் அளவு 34-67 அங்குலம், அதே காலத்தில் பெய்யவேண்டிய மழையின் சராசரி அளவு 27-40 அங்குலம்.

ஓர் பெண்மணியின் உதாரத்துவம்:—மைசூரிலே மைசூர் மகாராணியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பெண்கல்லூரியிலே ஓர் உதவி உபாத்தியாயினியாயிருக்கும் ஸ்ரீமதி பகீரதி அம்மாள் என்பவர் தாம் ஓர் மாணவியாயிருந்தபோது தமக்குக் கொடுக்கப்பட்டுவந்த வெகுமதிப் பணத்தில் மாதம் மாதம் ஒருநாளைக்குரிய வெகுமதிப் பணத்தையும் தாம் உபாத்தியாயினியாயினபின் தமது வேதனத்தில் மாதம் மாதம் ஒருநாளைக்குரிய வேதனத்தையும் பாங்கில் போட்டுவைத்தனர். இங்ஙனம் சென்ற 29 வருஷங்களாகச் செய்துவந்தனர். இவ்விருபத்தொன்பது வருஷங்களிலும் இவர் பாங்கியிலிட்ட பணம் இப்போது ஆயிரம் ரூபாவாகிவிட்டது. இதனை மேற்படி பெண்மணி மைசூர் அரசினர் வசம் கொடுத்து அப்பணத்தின் வட்டியிலிருந்து மகாராணி அவர்களின் கல்லூரியில் கீழ்தர இரண்டாம் வகுப்புச் சோதனையில் முதல் மாணவிகளாகச் சித்திபெறும் இரு பிள்ளைகளுக்கு வெகுமதியாய்க் கொடுத்து வரும்படி கேட்டிருக்கின்றனர்.

அகவிலைகிராக்கிக் கமிட்டியின் ரிபோர்ட்:—அகவிலைகிராக்கிக் கமிட்டியின் ரிபோர்ட்டின் மேல் இந்தியா கவர்ன்மெண்டார் நீண்டதோர் தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள். அதனில் அவர்கள் 1905-ம் வருஷம்முதல் சகல உணவுப் பொருள்களின் விலையும் இந்தியாவில் உயர்ந்துபோயிருக்கிறதென்றும், இதற்கு இந்தியாவில் ஏற்பட்ட நிலைமைகள் காரணமில்லையென்றும் நாகரீக மேலிட்டுவரும் வுலகத்திற் சகல பாகங்களின் நிலைமையே காரணமாகுமென்றும், எப்படி இந்தியாவுக்கு போக்குவரத்து வசதிகள் அதிகப்பட்டு விலை வாசிகள் எங்கே பார்த்தாலும் ஏற்றத் தாழ்வில்லாமல் ஒன்றுபோலாய்விட்டனவோ அதே மாதிரி அந்நிய தேசங்களுக்கு சாமான்கள் போய்வரும் வசதிகளும் அதிகப்பட்டுப் போய்விட்டபடியால் இந்திய விலைவாசிகள் உலகத்தின் மற்றப்பாகங்களினுடைய விலைவாசிகளை ஒத்துப்போய்விட்டனவென்றும், இப்போதைக்கு விலைவாசிகள் முந்தி

யிருந்த நிலைமைக்குத் திரும்புவதாய்த் தோற்றவில்லை யென்றும், பிற்காலத்தில் அவைகள் இன்ன விதமாயிருக்குமென்று திட்டமாய்ச் சொல்லமுடியாதென்றும் சொல்லி யிருக்கிறார்கள்.

லேடி காட்டன் காலஞ் சென்றார்:—நம்மிந்தியாவின் ஆப்த நண்பர்களில்ஒருவராகிய ஸர் ஹென்ரி காட்டனுடைய மனைவி லேடி காட்டன் இறந்துபோய் விட்டாரென்று தெரிந்து விசனிக்கிறோம். இந்தமாசம் லண்டனிலிருந்து கிடைத்த இந்தியா பத்திரிகை லேடி காட்டன் போனமாதம் 26-ந்தேதியன்று அவரது லண்டன் வாசஸ்தலத்தில் இறந்துபோனாரென்று சொல்லுகிறது. அந்த அம்மாளும் ஸர் ஹென்றி காட்டனும் (இருவரும்) அசௌக்கியமா யிருந்தார்களென்றும் ஸர் ஹென்றி காட்டன் மட்டும் சுகப்பட்டெழுந்து போன மாதத்தில் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்களாம். இப்போதோ லேடி காட்டன் சுகப்பட்டெழாமல் இறந்துபோய்விட்டாரென்ன சமாசார மெட்டுகிறது. சென்ற 10-மாதங்களாய் அந்த அம்மாள் தேக சுகமின்றி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்ததாய்த் தெரிகிறது. ஸர் ஹென்றிகாட்டன் அஸ்ஸாம் சீப் கமிஷனராயிருந்தபோது 1897-ம் வருஷம் ஜூன்மாதம் 12-ந் தேதியன்று நேர்ந்த ஒரு பூகம்பத்தில் அவரும், லேடி காட்டனும் இறந்துபோவதற்கு மயிரிழை தப்பினார்கள். அதுமுதல் லேடி காட்டன் நல்ல தேகசுக முடையவரா யிருந்தவரில்லை யென்றும், அதிலும் சென்ற 10-மாதக் காலமாய், எழுந்து நடமாடுவதின்றி படுக்கையாயிருந்தாரென்றும் தெரிகிறது. அந்த அம்மாளுக்கு இறந்து போகும்போது 66-வயது. இந்தியா முழுதும் ஸர்ஹென்ரி காட்டனுக்கு நேர்ந்திருக்கும் துக்கத்தில் அனுதாபங் காட்டும்.

கிருஷ்ணா டிஸ்ட்ரிக்ட் கான்பரென்ஸ்:—23-வது வருஷத்திய கிருஷ்ணா டிஸ்ட்ரிக்ட் கான்பரென்ஸ 24-ந் தேதி சனிக்கிழமையன்று எல்லூரில் கூடிற்று. உபசாரணைகமிட்டியின் சேர்மனான ஆனரெபில் மிஸ்டர் எம் ராமச்சந்திரராவ் எம்டன் செய்துவந்த சேஷ்டைகளை எடுத்துச் சொல்லி இந்தியாவுக்குச் சொந்தமாய் கடற்படைகள் அவசியம் இருக்க வேண்டுமென்று பேசிமுடித்தார். பிரசிடெண்டான ஆனரெபில் மிஸ்டர் K. R. V. கிருஷ்ணராவ் பேசி வருகையில். டிஸ்ட்ரிக்ட் சம்பந்தமான பொருளாதார நிலைமையைப் பற்றியும் டிஸ்ட்டிரிக்ட்டின் அபிவிருத்தி, முன்னேற்றம், இவைகள் சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றியும் பேசினார்.

ஓர் அராபி போதகருக்குப் பென்ஷன்:—ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்த ஆக்ராஸெயிண்ட் ஜான்ஸ் காலேஜில் அராபி பாஷைப் போதகராயிருந்துவந்த மோல்விஅலி அமத்கானுக்கு ஐக்கிய மாகாண லெப்டினண்ட் கவர்னர் ஸர்ஜேம்ஸ்மெஸ்டன் மாதம் 20 ரூபாய் பென்ஷன் கொடுக்கப்படுமென்று உத்தரவு செய்திருக்கிறார். பொதுவாய் சர்க்கார்



உத்தியோகத்தில் இல்லாத உபாத்தியாயர்களுக்கு கவர்ன்மெண்ட் பென்ஷன் கொடுக்கப்படமாட்டாது. மோல்விஅலிஆமதுகான் தேசபாஷைப் படிப்பின் அபிவிருத்திக்காக அம்மாகாணத்தில் உழைத்து வந்ததைக்கருதி ஸர் ஜேம்ஸ்மெஸ்டன் அவருக்குப் பென்ஷன் கொடுக்கப்படுமென்று உத்தரவு செய்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. அந்த மாகாண லெப்டினெண்ட் கவர்னர் அவ்வளவு தயாளச் சிந்தை காட்டி அந்த மோல்விக்கு ஸர்க்காரில் பென்ஷன் கொடுக்கப்படுமென்று உத்தரவு செய்திருப்பதை அம்மாகாண வாசிகள் மிகுதியும் பாராட்டுவார்கள்.

பால் கொடுக்கும்போது கவனிக்கவேண்டிய முறை:—தாய்மார் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது எவ்விதமான விசனமும், கவலையும், பயமுமின்றிச் சந்தோஷமும் திருப்தியு முள்ளவர்களாயிருக்க வேண்டும். விசனம், கவலை, பயம் முதலியன விருந்தால் ஊட்டும் பால் தோஷமுடையதாய்க் குழந்தைகளுக்கு அஜீரணம், மந்தம், பேதி, சுரம், வலிப்பு, முதலிய ரோகங்கள் உண்டாகிக் குழந்தைகள் அபாயத்துக்காளாகிவிடுமாம்.

வெந்நீர் ஸ்நானம்:—வெந்நீரில் மிதமிஞ்சி ஸ்நானஞ்செய்துவந்தால் தேகத்துக்குக் கேடுண்டாகுமென்று ஒரு இங்கிலீஷ் வைத்தியர் சொல்லுகிறார். வெந்நீர் ஸ்நானம் மிதமாயிருந்தால் தேகத்துக்கு நலமாயிருக்கும். மிதமிஞ்சினால் தேகத்துக்கு மிகவும் பலவீனமுண்டாகும். புருஷர்களும் ஸ்திரீகளும் தேகங்களைப் படைத்திருக்கும்போதும், இன்னுஞ் சில சமயங்களிலும் வெந்நீரில் ஸ்நானஞ் செய்தால் அதிக நன்மையடையலாம். இதனால் ஹிருதயமும் நரம்புகளும் சுறுசுறுப்படைந்து அவைகள் நன்றாய் வேலை செய்யக்கூடும். ஜப்பானியர் சாஸ்திரீதியாக வெந்நீர்ஸ்நானஞ் செய்து வருகிறார்களாம். அவர்கள் 3 நிமிஷத்துக்குமேல் வெந்நீரில் ஸ்நானஞ் செய்வது கிடையாதாம்.

---

## ஜலதோஷத்தைத் தடுக்க உபாயம்.

இது விஷயமாய் 'வைத்யகலாநிதி'யில் ஒரு வ்யாஸம் காணப்படுகிறது. அதில் இதைப்பற்றி டாக்டர் ரிச்சர்ட் என்பவர் கூறும் உபாயம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த டாக்டர் பின்வருமாறு சொல்லுகிறார்:—எவ்வித ஜல்தோஷத்தையும் ஆரம்பத்திலேயே வேரறுப்பதற்கு நான் கண்டு பிடித்திருக்கிற ஒரு சுலபமான வழி அனைவருக்கும் தகுந்ததாயிருக்குமென்று நம்புகிறேன். சில வருஷங்களுக்கு முன் எனது நண்பர் ஒருவர், ஜலதோஷம் அதிகமாயிருக்கும்போது தன் மொட்டத்தலையையும் முகத்தையும் அடிக்கடி நன்றாய் சூடுண்டாகும்படி தேய்த்து, அவ்விடங்களில் ரத்தம் நன்றாகப் பரவும்படி செய்து வந்ததில், ஜலதோஷ




# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் ஸப்ளை உபயோகிப்பதை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் ஸப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசு மாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர்மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்க வேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றுப் அருத்தமாகும்.

மில்க்மெயிட்குறி கட்டிப்பால் ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது. மில்க்மெயிட்குறி கட்டிப்பால் உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி லாபமடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதிபரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்க விரும்பினால்எங்களுக்கு இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி, டப்பி கொடுத்தனுப்புவோம்.

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும்,
அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லே அண்டு ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்.
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்



# புஷ்ப-கந்து
## கூந்தல் தைலம்.

பெண்களின் அன்பு நிறைந்தது

இக்கூந்தல் தைலமானது வாசனையில் சிறந்ததும், தலைமயிர்களின் வேருக்கு கெட்டியைக்கொடுத்து யாதொரு தடையுமின்றி தலை மயிர்களை வளரச்செய்வதும், நிரைத்திருக்கும் மயிர்களை வெகு சொல்ப உபயோகத்தினால் கறுத்து முன் நிலைமைக்கு கொண்டு வரக்கூடியதும், மூளைக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ஆனந்தத்தை கொடுக்கக்கூடியது மாகிய இத்தைலத்தை அநேகர்களால் உபயோகித்து நற்சாக்ஷி பத்திரங்களடைந்திருக்கின்றது. ஒரு தடவை உபயோகித்தால் தெரியவரும்.

சாம்பில் வேண்டுவோர் நமது ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையாகிய பெட்டியில் முகம் பார்க்கும் கண்ணாடியும், சீமை தந்த சீப்பும் சேர்த்து பாக்செய்திருக்கின்றது. விலை ரூபாய் 1. தபால் சிலவு அணா 4 பிரத்தியேகம்.

நமது சென்னை ஏஜண்டு:—
ராமானுஜ தாஸ், நாராயண் தாஸ், அண்டு கோ.,
149, சைனாபஜார் ரோட்டு, சென்னை.

Sole Manufacturer. V. K. RANADE. Perfumer & Chemist Bombay, No. 4.

மனஸி

த்தைத் தடுத்து வந்ததாகச் சொன்னார். பிறகு, இவ்விஷயத்தை லெண்ணிக்கொண்டே, தும்மலுண்டாகும்போது முகம் வெளுப்பதையும், ஜலதோஷம் பிடித்தவர் ஸ்வபாவமாகவும் தமது இஷ்டத்தின்மேலும் அதிகமாக இவ்விதம் தும்முவதையும் நன்றாக நான் உற்றுநோக்கிவந்த தில், உட்புறங்களில் சைத்யத்தினால் பாதைப்படும் அவயவங்களுக்கு அதிக ரத்தவோட்டத்தையும்; அதன் மூலமாய் முகத்திற்கும் மூக்குக் கும்வேண்டிய சூட்டையு முண்டுபண்ணுவதற்கே இவ்வாறு தும்மலென் னும் இயற்கையான காரியம் ஏற்பட்டிருப்பதாய் அறிந்தேன். அதுமுதல் இந்த முறையை நிலைநிறுத்துவதற்காக, ஜலதோஷத்தினால் முகம் முதலியவை குளிர்ந்தும் வெளுத்துமிருக்கும்போது, அவ்வவயவங்களில் ரத்தம் அதிகமாய் பரவுவதற்கு வேண்டிய அநேக உபாயங்களை பரீக்ஷா பூர்வமாய்ச் செய்துவந்தேன். ஆகையால், நான் இப்பொழுது சொல்வது என்னுடைய மூன்று வருஷத்திய விசேஷானுபவத்தின்மேல் தீர்மானிக்கப் பட்ட விஷயம்.

எவனொருவனுக்கு ஜல தோஷமுண்டாய் மூக்கின் உட்புறம் சிறிது சுருக்கங்கொண்டு இருப்பதாக உணர்ச்சியுண்டாகிறதோ, அவன் உடனே

அடியில் கூறப்படும் விதம் செய்ய வேண்டும். தலை நன்றாக பூமியில் படும்படி நின்றவாறே குனிந்துகொண்டு, முகம் நன்கு சிவக்கும்வரையில் அந்நிலையிலேயே கஷ்டப்பட்டு நிறகவேண்டும். பிறகு, தலையை நிமிர்த்தி மூக்குவழியாகவும், சிறிது வாய்வழியாகவும் இழுத்திழுத்து மூச்சு விடவேண்டியது. நாசியின் த்வாரங்கள் நன்றாகத் திறந்து, மூக்கு வழியாகவே மூச்சுவிடும் நிலைமை ஏற்படும் வரையில், இவ்விதமே அடிக்கடி குனிந்து நிமிரவேண்டும். ஆனால், நன்கு தேஹப்பயிற்சி செய்து, மிகச் சூடான பானங்களை அடிக்கடி உட்கொள்வதாலும் ஜலதோஷம் குணமாவதாக பலர் சொல்லுகிறார்கள். ஆகிலும், அவற்றால் அதிக ஜலதோஷத்தில் நாசியின் த்வாரம் சைத்யத்தினால் சுருங்கி அடைப்பட்டிருப்பது குறைவதில்லை.

ஆகையால், இவ்விஷயம் பொதுவாக வெகு ஸாதாரணமானதென்றே பெரும்பான்மையோருக்குத் தோற்றியபோதிலும், கபஜ்வரம் முதலிய ப்ராணாபாயமான ரோகங்கள் வாராதபடி தடுப்பதற்கு இதுவே வெகு பெரிய விஷயமென்று அனைவரும் க்ரஹிக்கவேண்டும்.

### காதுக்குள் விழும் வஸ்துக்கள்.

காதுக்குள் பூச்சிகள் நுழைந்துவிட்டால் எண்ணெயையாவது ஜலத்தையாவது விடவும். பூச்சி எண்ணெய் அல்லது ஜலத்தில் மூச்சு விடமுடியாமல் இறந்துபோய் மிதந்துவெளியே வந்துவிடும். பிறகு காதை பீச்சாங்குழாயால் அதாவது ஸிரிஞ்சால் சுத்திசெய்துகொள்ள வேண்டியது அநேக ஸமயங்களில் அவசியமாகும். பூச்சியல்லாமல் வேறு எந்த வஸ்து விழுந்துவிட்டாலும் தெரிந்த டாக்டரைத் தவிர வேறு யாரும் ஒன்றும் செய்யக்கூடாது.

**The Complete Letter Writer.**

*(4th Edition Revised and Enlarged.) by*
HARI CHARAN DAS.
Price Re. 1. *(full cloth gilt 320 pages).*

An universal Guide to the Art of letter Writing for all positions of life. It contains 24 Chapters —Private Correspondence, News Papers, Doctors, School Correspondence Government and Commercial, Collectors Office, Attorneys Vakils and Muktears, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms address Paper Currency, Abbreviations and Daily wages.

**Matriculation Essay**—by Hari Charan Das. Very useful book for school Boys. Price As. 8.

**ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.**

A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only.

**Child's Easy Conversation**, 2nd. ED. Price As. 10 only.

If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two or three months'

M. L. DAS & CO. BOOK SELLERS & PUBLISHERS'
122, *Baitakhana Road.* CALCUTTA.

OFFICE OF THE REGISTRAR ... 9 - FEB 1915

**The Tamil Zenana & School Magazine.**

**மாதர் மனோரஞ்சினி.**

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

| VolXVI] | Madras November, 1914. | No. 11. |
|---|---|---|
| புத்தகம் 16 | சென்னை : நவம்பர்மீ 1914ஞூ. | இலக்கம். 11. |

## Dr. மாண்டிசூரி மாதின் போதனாமுறை.

உற்று நோக்குவதாலேயே கற்றுக் கொள்ளுதல்:—இந்த முறையால் ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாகப் பார்த்து அதன் விசேஷங்களைச் செவ்வனே அறிந்து கொள்ளவேண்டியது தான். இவ்விஷயத்தில் இந்தியக் குழந்தைகள் குறைந்தவர்களென்றே சொல்லலாம். இப்படி உற்று நோக்குதலே எவ்வித அறிவுக்கும் மூலாதாரமானது. குழந்தைப் பருவமுதற்கொண்டே இந்த மனோசக்தி (Faculty) யை வெகு ஜாக்கிரதையாக பழக்கிவராததனால்தான் அவர் கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்குவதேயில்லை—உதாரணமாக டிரில் செய்யும் பொழுதும், இயற்கைபாடம் போதிக்கும் சமயத்திலும் சிற்சில பிள்ளைகள் இவ்விஷயத்தில் குறைந்திருப்பதைக் காணலாம்—இந்திய உபாத்தியாயர்களும் இவ்விதக் குறைபாடுகளை அவ்வப்போது கண்டவுடன் திருத்திவருவதுமில்லை. எவராவது அவ்வித பிழைகளை எடுத்துக் காண்பித்தால் அவைகளை அங்கீகரித்து அவைகளைச் சீர்திருத்தவும் முயலுவதைக் காணோம்—இவ்விதம் உபாத்தியாயர்களு மிருக்கின்றார்களே என்று மேலதிகாரிகள் வெறுத்துப் போகாமல் அடிக்கடி இவர்களுக்கு அவ்வித பிழைகளைக் காணும் பொழுதெல்லாம் வற்புறுத்திச் சொல்லிக் கொண்டே வரவேண்டும்.

நிற்க, இம்மனோ சக்திக் குறைவால் குழந்தைகளின் மனது பற்பல வழிகளில் சுழன்று செல்லுகின்றது. இவர்கள் பெரியவர்களான போதிலும் இவர்களுடைய மனது ஒரே நிலையில் தங்கியிருப்பதே கிடையாது. இதைத் தான் ஆங்கிலத்தில் (Concentration of mind) என்று சொல்லுகிறோம். சரியான மார்க்கத்தில் சின்னஞ் சிறு குழந்தைகளை இம்மனோ சக்தியாகிய உற்று நோக்கும் விஷயத்தில் பழக்கவேண்டுமானால் டாக்டர்

மாண்டிசூரிமாதின் வழியே மிக்க சிறந்தது. குழந்தைகளை முதலில் பொத்
தான்களைப் போடச் சொல்லவேண்டும், அவைகளை எடுக்கச் சொல்ல
வேண்டும்; இடுப்பு வேஷ்டியை நன்றாக கட்டிக்கொள்ளவும், அதை அவி
ழ்க்கவும் சொல்லவேண்டும், பலகையை மெதுவாக கீழே சந்தடியின்றி
வைக்கவும், எடுக்கவும் சொல்லவேண்டும். பிள்ளைகள் வரிசை க்ரமமாக
ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்காவது, ட்ரில் செய்யவோ,
அல்லது தோட்டவேலை செய்யவோ, வெளியிற் போகும்பொழுது ஒழுங்
காகப் போகும்படியும் செய்யவேண்டும். அவர்கள் திரும்பி வகுப்புக்கு
வரும்பொழுது ஒழுங்கு தவறாமல் வந்து வகுப்பில் உட்காரவேண்டும்.
சிறு குழந்தைகள் சொன்னதைச் செய்யமுடியாவிட்டால் வேறு குழந்
தைகள் செய்வதைப் பார்த்து செய்யும்படி பழக்கி வரவேண்டும்.

உற்று நோக்கவும், தசைநரம்பு, உணர்ச்சி இவைகளின் அறிவை
விருத்திசெய்யவும், குழந்தைகளைப் பழக்கிவர அநேக கருவிகளை மாண்டி
சூரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சிறு பீடத்தில் சதுரக்கட்டைகள்,
வட்டவடிவமுள்ள கட்டைகள், (Oblongs,) அகலத்திலும் நீளமதிகமான
கட்டைகள், முக்கோண வடிவுள்ள கட்டைகள் முதலியவைகளுக்குரிய
இடங்களில் வைத்திருக்கவேண்டும். இவைகளுக்குச் சரியான குழிகள்
உள்ள பீடத்தில் வைக்கும்படி சொல்லவேண்டும். இப்படி வைப்
பதில் குழந்தைகள் தவறக்கூடும். ஆனால் அவர்கள் உபாத்தியாயர்
உதவியின்றி தாங்களே சதுரக்கட்டைகளை வைக்க முயன்றால் அவர்க
ளுடைய உற்று நோக்கும் சக்தி மெதுவாகவும் நிச்சயமாகவும் விருத்தி
யடையும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கண்பார்வையை விருத்திசெய்ய கனவடிவமுள்ள கட்டைகளை பற்
பல அளவில் செய்துவைத்துக்கொண்டு அவைகளில் ஒரே அளவுள்ள
கனவடிவமுள்ள இரண்டு மூன்று கட்டைகளை எடுக்கச்சொல்லவேண்டும்.
இவைகளைச் சரியாய் எடுக்கத் தெரிந்தபின், அவர்கள் கண்களை சிறு
துண்டால் மூடிக்கொண்டு மேற்கூறிய வண்ணம் கட்டைகளை எடுக்கச்
சொல்லவேண்டும். இவர்கள் சரியான கட்டைகளை எடுத்து வைத்தபின்
அவர்கள் கண்ணை மூடியிருந்த துணியை அவிழ்த்து விட்டவுடன்
அவர்கள் எடுத்த கட்டைகளைப் பார்த்தும் நான் கட்டைகளைச் சரியாய்
எடுத்தேன். அவன் சரியாய் எடுத்தான், நீ சரியாய் எடுக்கவில்லை என்று
சொல்லுவான். இவ்விதம் சரியாய் எடுக்கத் தெரியாதவர்களை மறுபடியும்
தங்கள் கண்பார்வையின் உதவியின்றி கைஸ்பரிசத்தினாலேயே கட்டை
களை அறிந்து எடுக்கச் சொல்லவேண்டும். இப்படிச்செய்வதால் அவர்கள்
கைக்கு வேலைகிடைக்கிறது. மனது கையில் சென்று, கையை உணரும்
படி செய்கிறது.



வர்ணங்களையும் இவ்விதமே அறிந்துகொள்ளும்படி போதிக்கலாம்.
பற்பல வர்ணங்களுள்ள நூல் உருண்டைகளையும், பட்டு நூல் உருண்டை
களையும் பிள்ளைகளிடத்தில் மேற்கூறியபடி கொடுத்து கைஸ்பரிசத்தால்
அறிந்து சொல்லும்படி செய்விக்கலாம். ஒவ்வொரு சமயத்தில் ஒரு வர்ண
உருண்டையை எடுக்கும்படியும் அதன் வர்ணத்தைச் சொல்லும்படி
யும் செய்து வந்தால் போதுமானது, 'இதைப்பார், இது சிவப்பு,' மறு
படியும் இது நீலம்; 'எனக்கு சிவப்பு உருண்டையைக் கொடு', எனக்கு
நீல உருண்டையைக்கொடு என்று சொல்லிப் பழக்கி வரவேண்டும். அவர்
கள் நீலவர்ண உருண்டையைக் கொடுக்கத்தவறினால் உபாத்தியாயர் குழ
ந்தைகளை கோபித்துக் கொள்ளாமல் புன்சிரிப்புடன் அன்று மறுபடியும்
செய்யச் சொல்லாமல் வர்ண நூல் உருண்டைகளை எடுத்து வைத்து விடு
வார்களாம். இவைகளெல்லாம் மாண்டிசூரி மாதின் முறைகள்.

ஆனால் நமது தேசத்துக் குழந்தைகளுக்கு கருவிகளும், சாமான்க
ளும் சாமான்னியமானவைகளே, விலையுமதிகமில்லை. இவைகளைத் தங்கள்
தங்கள் இருப்பிடங்களிலிருந்தே தெரிந்து எடுத்துக்கொள்ளலாம். தென்ன
ஓலையின் குச்சியையும், துடைப்பக்குச்சியையும் உபயோகித்துக் கொள்
ளலாம், இவைகளுக்குச் சிலவு அதிகம் பிடிக்காது. இவைகளை நீளமா
கவும், குட்டையாகவும் செய்து வைத்துக்கொண்டு பிள்ளைகளிடத்தில்
கொடுத்து, நீளமானவைகளையெல்லாம் சேர்த்து வைக்கும்படியும், குட்
டையான வைகளையெல்லாம் சேர்த்து வைக்கும்படியும், பின்னிட்டு
இவைகளைக் கலந்து பிள்ளைகளிடத்தில் மறுபடியும் கொடுத்து குட்டை
யான வைகளையும், பின்னிட்டு நீளமானவைகளையும் சேர்த்து எடுக்கும்
படி சொல்லலாம். ஆல இலை, பாதாம் இலை, அரச இலை, ஆமணக்கு இலை,
மா இலை, பருத்தியிலை, அவரையிலை, இவைகளைத் தகடப்பாவின் மேல் மூடி
யால் அமிழ்த்தி சதுரங்களாகவும், வட்டவடிவமுள்ளதாகவும், செய்யச்
சொல்லலாம். பிள்ளைகள் இவ்விதம் செய்தபின் அவர்களிடத்தில் இவ்
வேலைகளைக் கொடுத்து கத்தரிக்கவும் சொல்லலாம். இவைகளையெல்லாம்
ஒன்றாகச் சேர்த்துவிட்டு அவைகளில் சமமானவும் ஒரே அளவுள்ளவு
மான இரண்டு இலைகளை எடுக்கச் சொல்லவேண்டும்.

நதி, வாய்க்கால் கரையோரங்களிலுள்ள கூழாங்கற்களைப் பொறுக்கி
எடுக்கச்சொல்லலாம். இவ்விதம் குழந்தைகளை இட்டுக்கொண்டு போவ
தால் அவர்களுக்கு நல்ல காற்று சுவாசிக்க கிடைக்கும். தேகபலம் உண்
டாகும், நதி, வாய்க்கால் முதலியவைகளென்றால் இன்னதெனவும் தெரி
யும். இக்கற்களை "House" பிள்ளைக்கூடத்திற்கு கொண்டுவந்தவுடன்
அவைகளில் சிலவற்றை அவர்கள் கண்களைமூடி எடுக்கச் சொல்லி வரி
சைக் கிரமமாக 6-கற்களை வைக்கும்படி சொல்லவேண்டும்.

ஒவ்வொருக்ரமத்தில் மண்ணால் செய்த சமையல் பாத்திரங்களும்,
பொம்மைவனைகளும் சொல்பவிலைக்கு கிடைக்கும். முன்மாதிரியே இவை
களை எடுக்கச் சொல்லி இரண்டு பாத்திரங்களை கையில் வைத்துக்கொண்டு
மணல் போட்டும், தண்ணீர் போட்டும் அளக்கச் சொல்லவும் இவ்விதம்
செய்வதால் பாத்திரங்களின் அளவு பிள்ளைகளுக்குத் தெரியும். ஒரு
பானையில் விளிம்பு வரையிலும் மணலைப் போடச் சொல்லி பின்பு அதை
மற்றொருபாத்திரத்தில் கொட்டச் சொல்லவும். அவ்விதம் கொட்டியபின்
மண்மீதியிருந்தால் அப்பாத்திரம் சிறியதா பெரியதா வென்று கேட்டு
விடைபெறலாம். முதல்பாத்திரம் பெரியதென்பதையும், இரண்டாவது
முதலாவதைவிட சிறியதென்பதையும் கேட்டு விடைபெறலாம். இவ்வித
மாக படி, அரைப்படி, கால்படி, ஆழாக்கு, சேர் முதலியவைகளை தகரத்தா
லாவது மூங்கிலாலாவது செய்து வைத்துக்கொண்டு அளக்கும் அளவை
சுலபமாக போதிக்கலாம். அரிசிக்குப்பதிலாக மணலை உபயோகிப்பது
நலம்.

வர்ணம் போதிக்கவேண்டுமானால் கம்பளி அல்லது பட்டுக்குப்
பதிலாக பற்பல வர்ணமுள்ள கடுதாசிகளை உபயோகித்து போதிக்கலாம்.
இவைகளை சதுரங்களாக கத்திரிக்கச்சொல்லவேண்டும், இந்த சதுரங்கள்
ஒன்றுக்கொன்று சரியாயிருக்கவேண்டும். இவ்விதம் செய்த சதுரங்களை
ஒரு பெட்டியிலாவது அல்லது சிறு கூடையிலாவது போட்டுக்கொண்டு
இதிலிருந்து சிவப்பு வர்ணமுள்ளவும், வெள்ளை நிறமுள்ளவும், கறுப்பு,
நீலம், மஞ்சள், ஊதா, நிறங்கள் உள்ளவுமான சதுரக்கடுதாசிகளை எடுக்
கச் சொல்லவேண்டும். ஒரு பிள்ளை தப்பான சதுரக்கடுதாசியை எடுத்
தால் மற்றொரு பிள்ளையை சரியான கடுதாசியை எடுக்கும்படி சொல்ல
வேண்டும். இவ்விதம் பிள்ளைகளுக்கு எல்லாவர்ணங்களையும் போதித்த
பின் வானவில்லின் வர்ணத்தை ஒரு கண்ணாடியைக்கொண்டு காட்ட
வேண்டும். காட்டியபின் அவைகள் எவ்விதம் வரிசை வரிசையாக தெ
ன்படுகின்றனவோ அந்த மாதிரி சதுரக்கடுதாசிகளையும் வரிசைவரிசை
யாக வைக்கச்சொல்லவேண்டும். இச்சம்பந்தமாக வானவில்லை பிள்ளைகள்
பார்த்திருக்கிறார்களாவென்றும், அப்படி பார்த்திருந்தால் எப்பொழுது
எந்த சந்தர்ப்பத்தில் பார்த்திருக்கிறார்களென்றும் கேட்கலாம்.

ஒரு கல்வி இலாகாவைச்சேர்ந்த அதிகாரி "குழந்தையினுடைய
வேலையே வேலை, உபாத்தியாயரதுவேலையன்று, குழந்தைகளுக்கு வித்
தை உற்று நோக்குவதால் வருகிறதே தவிர உபாத்தியாயருடைய வற்
புறுத்துவதாலல்ல. குழந்தைகள் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளுகிறார்கள்.
உபாத்தியாயர்கள் ஸ்ரமமடைவதேகிடையாது. இதுதான் லாபம், குழந்
தை தானாகவேயோசித்துச் சொல்லுகிறது. உபாத்தியாயர் இயற்கை



சுபாவமுள்ளவராகுகிறார்" எனச்சொல்லுகிறது உண்மையே! பிள்ளைகள்
வர்ணதேர்ச்சியடைந்த பின்பு அவர்களை ஒரே வர்ணத்தின் விதம் வித
மான காய்களை பகுத்தறியும்படி கேட்கலாம், தெரியாவிட்டால் சொல்ல
லாம்.

டாக்டர் மாண்டிசூரி மேற்சொல்லிய வண்ணம் 8 விதமான
வர்ணங்களைப்போதித்து வருவதுடன் ஒவ்வொருவருணத்திலும் 8 வித்
தியாசமான மிருதிவர்ணத்தையும் போதித்து வருகிறார்கள். இப்படி 64
காய்களையும் வைத்து காண்பிக்கிறார்கள். மூன்று வயதுள்ள குழந்தை
கள் இவைகளையெல்லாம் செவ்வனே அறிந்து வர்ணக்கடுதாசியால்
செய்து சதுரங்களையும் வரிசை க்ரமமாகச் சீக்கிரத்தில் எடுத்து வைக்க
சக்தியுடைய வர்களாகுகிறார்களாம். இவ்விதமே நமது தேசத்து குழந்
தைகளுக்கும் போதித்து வருவது கஷ்டம், ஏனெனில் காய்வகையிலோ
பல வித்யாசமான வர்ணங்களிருக்கின்றன. தோட்டங்களில் கணக்கில்லா
பற்பல பச்சைவர்ண இலைகளிருக்கின்றன, காட்டு புஷ்பங்களிலோ அள
வற்ற வர்ண சாயைகளிருக்கின்றன. ஆகையால் நமது பிள்ளைகளை தோட்
டங்களுக்கு இட்டுக்கொண்டு போய் இலை, புஷ்பம் முதலியவைகளை எடு
த்துவரச்சொல்லி, பள்ளிக்கூடத்திற்கு வந்து வர்ண கடுதாசிகளையும்
இவைகளையும் ஒத்துப்பார்க்கச்சொல்லிவருவது தான் நலம். இவ்விதம்
செய்துவந்தால் பிள்ளைகளுக்கு வர்ணங்களும் அவைகளின் சாயைகளும்
மிகவும் நன்றாக விளங்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

---

## ஜப்பான் தேசத்துக் குழந்தைகள்.

குழந்தைகளே! ஜப்பான் தேசத்தைப் பற்றியும் அத்தேசத்து சக்ர
வர்த்தியைப் பற்றியும்முன் எழுதியிருந்தோம். இப்பத்திரிகையில் அத்
தேசத்து குழந்தைகளைப்பற்றி சிற்சில விஷயங்களை எழுதுகிறோம்.

ஜப்பான் பெண்கள் நீண்ட கவுன்போன்ற உடுப்பைத் தரித்துக் கொ
ள்ளுகிறார்கள். இடுப்பில் ஒரு பில்ட்போன்ற பட்டுக் கச்சையைச் சுற்றிக்
கொள்ளுகிறார்கள். கால்களுக்கு மரத்தால்செய்த பாதரட்சையைப் போட்
டுக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் தன்முதுகில் ஒரு குழந்
தையைக் கட்டிக்கொண்டு விளையாடுவாள். காரியம் ஏதாவதிருந்தால்
செய்வாள், தன்முதுகில் குழந்தை யில்லாததுபோல் நினைத்துக்கொண்டு
குதித்து விளையாடுவாள், இங்குமங்கும் ஓடுவாள். இப்படி இவள் குழந்
தையை முதுகில் வைத்துக்கொண்டு செய்வதால் குழந்தைக்குச் சிறிது
கஷ்டமாக யிருக்கும். ஆனால் குழந்தை இதைக் கவனிக்கவே கவனிக்கா
தாம்.

இவர்களுக்குப் புஷ்பங்களின்மேல் அதிகப்பிரியம். அவர்கள்தோட்டங்களில் பலவர்ண புஷ்பச் செடிகளை வளர்த்து வருகிறார்கள்.

குழந்தை பிறந்ததினம் ஒரு உருண்டை வடிவமுள்ள கண்ணாடி பாத்திரத்தில் மீன்களைப்போட்டு தங்கள் வீட்டிற் கெதிரிலுள்ள ஒரு மாக்கொம்பில் கட்டி தொங்கவிடுவார்கள். இப்படி எந்தவீட்டில் செய்கிறார்களோ அந்தவீட்டில் குழந்தை பிறந்ததென்று தெரிந்துகொள்ளலாம்.

ஜப்பானியர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் அதிக அன்புடையவர்கள், அவர்கள் பிறந்த வருஷதினத்தில் எப்பொழுதும் விருந்து செய்விப்பார்கள்.

தாய்தந்தைகள் பெண்களைவிட பிள்ளைகளைத்தான் அதிகமாகக் கவனித்துவருகிறார்கள். நமது தேசத்திலும் இவ்விதம்செய்து வருகிறார்களல்லவா? ஆனால் இங்கிலாந்தில் இவ்விதம் செய்கிறதில்லை. பெண்ணானாலும்சரி, பிள்ளையானாலும்சரி, ஒரேவிதமாய்க் கவனித்து கல்விபுகட்டி வருகிறார்கள்.

பிள்ளைகள் தக்கவயது வந்தபொழுது பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். இங்கு நீங்கள் பெஞ்சில் உட்காருவதுபோல் அங்கு அவர்கள் உட்காருவதில்லை. நமது தெரு பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தரையில் உட்கார்ந்து படிப்பதுபோல்தான் தரையில் உட்கார்ந்து படிப்பார்கள். நீங்கள் பேனாவால் எழுதுகிறீர்களல்லவா? அவர்கள் அப்படிச் செய்யாமல் ப்ரஷ் எடுத்துக்கொண்டு எழுத்துக்களை வர்ணம் கொடுத்து அதாலேயே எழுதுவார்கள்.



பள்ளிக்கூடத்திலிருந்து சாயங்காலம் வீட்டுக்கு வந்தால் பற்பல விளையாட்டுகளை ஆடுவார்கள். அவர்களுக்குக் காற்றாடி விடுவதில் அத்யந்த



ப்ரியம். விதம்விதமானவும் விநோதமானவுமான காத்தாடிகளைச்செய்து விடுவார்கள். ஒருமீனைப்போல் சிலர் செய்துவிடுவார்கள். வேறு சிலர் ஒரு அழகான பட்க்ஷியைப்போல் செய்துவிடுவார்கள். இன்னும் சிலர் வண்ணாத்திப்பூச்சி, தும்பி முதலியவைகளைப்போல் செய்துவிடுவார்கள். இவைகளுக்கு சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் முதலிய வர்ணமிட்டு அழகாகச் செய்வார்கள்.

குழந்தைகளல்லவா நமது தேசத்தில் காற்றாடிகளை விடுவார்கள். ஜப்பானில் கிழவனோ, வாலிபனோ, சிறுபிள்ளையோ காற்றாடிகளை விடலாம்.

சென்னையில் மாஞ்சாவென்று கண்ணாடியைத் தூள்செய்து பிசினுடன் கலந்து நூலில் தடவி விடுவதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? மேலும் ஒருவன் இன்னொருவன் விடும் காற்றாடி பறந்துகொண்டிருக்கும்பொழுது அதைத் தன் காற்றாடியால் அறுக்க முயலுவதையும் பார்த்திருக்கிறீர்களல்லவா? அவர்கள் நூலில் ஒரு கண்ணாடித் துண்டைக் கட்டியாவது அல்லது கண்ணாடித் தூள் சேர்ந்த பிசினுடன் நூலில் கலந்துகாற்றாடி விடுவார்கள். ஒருவன் காற்றாடி ஆகாயத்தில் பறக்கும்பொழுது மற்றொருவன் தன் காற்றாடியால் அதை அறுத்துவிடுவான். அப்பொழுது அவன் சந்தோஷத்துடன் சிரிப்பான்.



மேலும், பிள்ளைகள் பற்பல வர்ணங்களுடைய அழகான பம்பரங்களை வைத்துக்கொண்டு விளையாடுவார்கள். பம்பரங்கள் சுற்றும் பொழுது ஒருவித இனிமையான சத்தம் செய்யும்படி அதில் இயந்திரம் வைத்திருக்கும். இச்சத்தத்தைக் கேட்டுப் பிள்ளைகள் சந்தோஷப்படுவார்கள். அவர்கள் பம்பரம் ஆடும் படத்தைப் பாருங்கள்.

இவர்களுக்கு கால் பந்து (Foot ball) ஆடுவதிலும் அதிக ஆசை.



இவ்விளையாட்டு ஆடுவதில் பிள்ளைகளுக்குப்
பலம் உண்டாகும். இப்பந்தால் பற்பல
விளையாடல்களை ஆடலாமென 'மிஸ்டர்
க்ரே' என்ற கனவான் சென்னைக்கு வந்த
பொழுது சொல்லியும் அவைகளை பாடசா
லைப் பிள்ளைகளுக்குச் சொல்லியும் கொடுத்
தார்கள். இவ்விதவிளையாடல்கள் ஒழுங்காயும்
செவ்வனே யாவரும் விளையாடக் கூடியதா
யும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தியப்
பிள்ளைகள் பற்பல விளையாடல்களை ஆடி தங்
கள் தேகபலத்தை விருத்தி செய்து கொள்
ளும்படி உபாத்தியாயர்களும், பெற்றோர்க
ளும் முயன்றுவருவது நலம்.

ஜப்பான் தேசத்துப் பிள்ளைகளுக்கு வருஷத்தில் விசேஷ கொண்டா
ட்ட நாள் கொடிவிருந்தாம். அதாவது அந்த நாள் ஒவ்வொரு வீட்டி
லும் கடிதாசியால் ஒரு பெரிய மீனும் அதில் ஒரு பையன் வசிப்பது போ
லும் செய்து மேலே கட்டி தொங்கி ஆடும்படி செய்வார்கள். ஷாப்பு
களில் சோல்ஜர் பொம்மைகள் அதிகமாக விலைக்கு அன்று கிடைக்கு
மாம்.

பிள்ளைகளைத் தைரியமாயிருக்க போதித்து வருகிறார்கள். தங்கள்
ஜன்மதேசத்தை விரும்பும்படியும், அதற்காக உயிரைக்கூட கொடுக்க
தயாராயிருக்கவும் பெற்றோர்கள் போதித்து வருகிறார்கள். பிள்ளைகளும்
சாமர்த்திய சாலிகள். நல்லவர்களா யிருக்கவும் ஜாக்கிரதையுள்ள வேலைக்
காரர்களா யிருக்கவும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பெண்களுக்கு விசேஷ சந்தோஷமானநாள் "பொம்மை விருந்து"—
என்றதே. அன்றைய தினம் பெண்கள் தங்களைப்போன்ற சிறுபெண்களை
வரவழைத்து அவர்களுக்கு விருந்து செய்வார்கள். விருந்துக்காக வரும்
ஒவ்வொரு பெண்ணும் ஒரு பொம்மையை எடுத்து வருவாள். இந்த
விருந்து கூட்டத்தில் அப்பொழுது பலவித பொம்மைகளைக் காணலாம்.
பெரிய பொம்மைகளிருக்கும், குழந்தையைப்போன்ற பொம்மைகளி
ருக்கும், நமது தேசத்தில் பெண்கள் பொம்மைக்குக் கலியாணம் செய்வ
தைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அம்மாதிரியே அவர்களும் கலியாணம்
செய்யாவிட்டாலும் வாஸ்தவமாக சமையல்செய்து பொம்மைகளை நாற்கா
லிகளில் உட்காரவைத்து விருந்து உண்பார்கள்.

ஜப்பானில் ப்ரதம கல்வி விசேஷமாக பரவியிருக்கிறதென்னலாம்.



ஜப்பான்சக்ரவர்த்தி பற்பலதேசங்களிலிருந்து கற்றறிந்தவித்வான்களை வர
வழைத்து அங்குள்ள காலேஜிகளில் உபாத்தியாயர்களாக நியமித்தார்கள்.
பற்பல சாஸ்திரங்களை பிள்ளைகள் கற்று இப்பொழுது அத்தேசத்தில் பல
வித்வான்களா யிருக்கின்றார்கள். ஜப்பானியர் இப்பொழுது நடக்கும் யுத்
தத்தில் ஜெர்மெனியர்களைத் தோற்கடித்து ட்ஸிங்டௌ என்ற விடத்தை
ப்பிடித்துக் கைவசமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நமது பிரிட்
டிஷாருடன் சிநேகமா யிருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் தங்கள் வீடுகளையும் உடுப்புகளையும் சுத்தமாய் வைத்
துக்கொள்வார்கள். ஸ்நாநம் செய்வதில் அவர்களுக்கு ப்ரியம். அதுவும்
மிகச் சுடுகிற வெந்நீராயிருந்தால் போதும், அவர்களுக்கு மிகுந்த ஆநந்தம்.

பத்திராதிபர்.

---

# இராஜபக்தி

10-வது நூற்றண்டில் நடந்த ஒரு சரித்திரக்கதை.

## தேசாபிமானிகள்.

### 4-ம் அதிகாரம்.

அமிர்தேசன் தன்னிடம்விட்டு வெளியேவரச் சில நிமிஷங்கள்
ஆயின. சௌடப்பன் வழிகாட்ட, வீரர்கள் புறப்பட்டு ஊர்நோக்கிப்
போயினர். அவர்கள் தலைமறைந்ததும் எழுந்து கைகால்களை உதறிக்
கொண்டு வில்லைத்தளர்த்தி அம்புகளை உறையில் இட்டு தன் குடிசையை
நோக்கிப்புறப்பட்டான். "ஆகவே, நம்மரசன் மறுபடி சிறையிலிருந்து தப்
பிவிட்டார் போலும். கருமலைக்காடுகளில் ஓடி ஒளிந்து திரியும்படியா
ய்விட்டது! ஆஹா என்னப்பன் நரசிம்மன் உயிரோடிருப்பின்!!—
யாருக்கென்ன தெரியும்!! அரசன் ஒருவேளை மாளிகைக்கு வந்தும்
இருக்கலாம், விமலையார் சாமர்த்தியம் யாருக்குவரும். விமலையாரை இப்
பொழுது கட்டாயம் பார்த்துச் சங்கதிசொல்லவேண்டும்—தேசாபிமானி
களாவது தேசாபிமானிகள்! நாமெல்லாம் தேசாபிமானிகள் அல்லவா?
தேசமாம் அபிமானமாம்!! வெட்கம், மானம்கெட்ட மூடர்களுக்கு!!"
என்று, இவ்வாறு மனோ இராஜ்யம் செய்துகொண்டே, வழிநடந்தான்.
உண்மையாகவே விஜ்ஜலன் தன்சேனைவீரர்களை தேசாபிமானிகள் என்று
அழைப்பது வழக்கமாய்விட்டது. அரசன் திறத்தாரை இராஜபிமானிகள்
என்று பெயர் கொடுத்தான். மேலும் தன் பலம் நிலைநிற்கவேண்டு
மென்றால் சேனைகள் தன்னைச்சார்ந்து இருக்கவேண்டுமென்பது நிச்சய
மாய்த் தெரிந்துகொண்டான்; ஆனதால். போர்வீரர்களுக்கு அதிகஇடம்
கொடுத்துவிட்டான். அவர்கள் எல்லோரையும் ஒரே அந்தஸ்தில் வைத்

தான்: கொள்ளையடித்த பொருள்களை எல்லாருக்கும் சரியாய்ப் பங்கிட்
டான். இவ்வாறு தலைதிருகிப்போன சேனைகள், இராஜவிசுவாசிகள் என்று
கேள்விப்பட்டாலே அவர்களைத் துண்டம் துண்டமாக வெட்டவேண்டு
மென்று எண்ணத் தொடங்கினர். நாளடைவில் இரக்கம், நன்றி, விசு
வாசம், இவையில்லாமலே கடும் நெஞ்சர்களாய்விட்டனர். பின்னர் இச்
சேனையே விஜ்ஜலனுக்கு கேடுவிளைத்தது. கட்டுக்கடங்காக் காளையைக்
கட்டிக்கொண்டு போராட யாரால்தான் முடியும்!! இது நிற்க,

அமிர்தேசன் மனதைச் சுட்டுக்கொண்டிருந்த எண்ணம் ஒன்றே
ஒன்று தான். "மாளிகைக்கு இராத்திரி தீயிடப்போகின்றனர்; மாளிகை
யில் உள்ளவரைக் காப்பாற்றவேண்டும்." என்பதே, 'இந்த தேசாபி
மானிகளை' எதிர்க்கச்சிறுசேனை ஒன்றைத் தயார்செய்யப்பொழுது
மில்லைத் தயார்செய்யவும் முடியாது; செய்யினும், எத்தனைபேர் பூர்ண
மனத்துடன் சண்டைசெய்து, உயிரை மாய்த்துக்கொள்ள துணிவார்
என்பது சந்தேகம். இந்த எமபடர்கள் செய்யப்போகும் விபரீதங்கள்
தனக்கு தெய்வச்செயலாய்த் தெரிந்ததே என்று சந்தோஷம் ஒருபுரம்.
அதற்காக அஹோபில நாதனுக்கும் ஸ்ரீசைலவாசிக்கும் தண்டனிட்
டான். மாளிகையில் உள்ள ஜனங்களை எவ்விதம் காப்பாற்றுவது என்பது
மற்றொரு விசாரம், இவ்வெண்ணங்களை திரும்பத் திரும்ப அவன் மன
தைத்தூண்டவே, அவைகளை அவனை வழிமுழுவதும் துரத்துவதாயின.
ஓட்டமாய்த்தன் குடிசைக்கு வந்து வில், வாள், அம்பு இவற்றை ஒரு
மூலையில் எறிந்துவிட்டு, தன் கிழக் குதிரைக்கு ஜேணம் ஏற்றி மாளிகை
யை நோக்கிச்சவாரிசெய்தான். சுமார் 4,5 நாழிகைப் பொழுதுக்குள்
மாளிகை வாசற்படி வந்துசேர்ந்தான். அப்பொழுது 25 நாழிகை இருக்
கலாம். மார்கழிமாதமாகையால் இன்னும் 4 நாழிகைக்குமேல் தாமதம்
செய்ய வழியில்லை. "விமலையாரைக் கிளப்புவதோ எளிதான காரியம் அல்
லவே!" என்று ஏங்கினான். "தெய்வாதீனமாய் விமலையார் வெளிக்கிளம்ப
இஷ்டப்பட்டால்—என் அதிர்ஷ்டம்சொல்லவேண்டுமா!!" என்று இவ்வாறு
பலவாறு விசாரப்பட்டுக்கொண்டே குதிரையை ஒரு மரத்தில் கட்டி
விட்டு, கீழிறங்கி தலைவாயிலில் நுழைந்தான்.

மாளிகையின் கோலத்தைச்சற்று விசாரிப்போம். நரசிம்ம வீர
இக்குப்பின் மாளிகையில் இருந்த வேலைக்காரன் ஒருவனே; அவனே
வீட்டுவேலைகளை யெல்லாம் கவனிக்கவேண்டியவன். வேலைக்காரிகள்
இரண்டுபேர்; ஒருத்தி சமையற்காரி, மற்றவள் வீட்டுக்காரியங்களைப்
பார்ப்பவள். திரிபுரசுந்தரி இறந்தபின் குழந்தைகளைக் கவனிப்பதற்கென்று
தனியாய் ஒரு வேலைக்காரனாவது வேலைக்காரியாவது கிடையாது. குழந்
தைகள் தங்கள் இஷ்டப்படி திரிந்து கொண்டிருந்தனர்.



எதுகுலதிலகன் என்பவன் முதல்வன்; அவனுக்கு 13, 14-வயது
இருக்கலாம். இரண்டாவன் ஹம்ஸப்ரியன்; அவனுக்கு வயது 10
இருக்கலாம். இவர் இருவருக்கும் இளையவர் இருவர் பெண்மணிகள்.
முதல்வள் பெயர் விசாலாக்ஷி; சின்னவள் அலர்மேலுமங்கை. அவர்
களுக்கு வயது சுமார் 9-ம், 7-ம் இருக்கலாம். இக்குழந்தைகளை விசேஷ
மாய் கவனித்துவந்தவர் இருவர். ஒருவன் அமிர்தேசன்; அவனுக்கு
சாவகாசமுண்டான போதெல்லாம் மாளிகையிலேயே இருந்து குழந்தை
களுடன் தன் காலத்தைக் கழிப்பான். மற்றவன், மாதவன் என்னும்
வேலைக்காரன்.

அமிர்தேசன் விசாரம் குடிகொண்ட முகத்துடன், மாளிகையுள்ளே
நுழைந்ததும் எதிரே வந்துகொண்டிருந்த மாதவனைப் பார்த்து "மாதவா,
இப்பொழுதே அவசரமாய் அம்மாளைப் பார்க்கவேண்டுமென்று நான்
வந்து இருப்பதாகச் சொல், ஓடு பார்ப்போம்" என்றான்.

மாதவன் "ஏதப்பா தடபுடல், நீ என்னமோ பலாப்பழமும் இள
மானும் கொண்டு வந்து இருக்கையா சொல்லு! இல்லாவிட்டால் அம்மா
உன்னைப் பார்க்கப்போகிறதில்லை!" என்றான்.

அமிர்தேசன் "மாதவா! உனக்கு என் வேலையின் அவசரம் என்ன
தெரியப்போகிறது? உடனே அங்கம்மாளை உள்ளே அனுப்பி அம்மாளை
வரச்சொல் என்றால்—பலாப்பழம், மான், என்று என்னென்னவோ பித
ற்றுகிறாயே—"

மாதவன் "இதேது? அமிர்தேசனுக்கு இன்று இவ்வளவு கோபம்!
இதோ போகிறேன்." என்று ஓடினான்.

அமிர்தேசன் மேல்மாடியில் முன்னறையில் போய்நிற்க, சில நிமி
ஷத்தில் விமலையார் அவ்விடம் வந்துசேர்ந்தாள். அவளுக்கு வயது-60
இருக்கலாம். தேகமோ வெகுபெருமன். கறுத்தமேனியும், கூரிய மூக்
கும், அகன்ற கண்களும், கம்பீரமான முகமும் அவளது உயர்குலத்தை
யும், திராவிட வம்சத்தையும் விளக்குவதாயின. முகம் கொஞ்சம் கடு
கடுப்பாகவே எப்பொழுதும் இருக்கும். அதற்குக் காரணம், தன் குலத்
துக்கும் இராஜவம்சத்துக்கும் ஏற்பட்ட குணங்களே என்று சொல்ல
லாம்.

ஒரு நாற்காலியில் கைகட்டி உட்கார்ந்துகொண்டு "என்ன தம்பி
சமாசாரம்! சொல் விரைவாய்" என, அமிர்தேசன் தலைவணங்கி வெகு
மரியாதையாய் "அம்மா! தைலப்ப சக்ரவர்த்தி மறுபடி சிறையிலிருந்து
தப்பித்துக்கொண்டுவிட்டார். இது தங்களுக்குச் சொல்லவேண்டிய
முதல் விசேஷம்."

விமலையார் "ஆஹா! ஆஹா!! தப்பித்துக்கொண்டாரா!! அப்படியா!! போகட்டும்—"

அமிர்தேசன் "ஆமாம்: அவர் இந்த மலை நாடுகளிலேயே ஒளிந்து திரிவதாகவும் சமாச்சாரம். அரசன் ஒருவேளை நமது மாளிகையிலே—"

விமலையார் "அரசன் நமது மாளிகையில் இல்லை. இருப்பின், அவர் இருக்கும் சங்கதியை, என் நாக்கை அறுப்பதாய் இருந்தாலும் சரி, உன்னிடம் கூட சொல்லமாட்டேனே! தெரியாதா உனக்கு!! சாளுவ இராஜவம்சத்தில் பிறந்த நானா இராஜத்துரோஹம் செய்வேன்?"

அமிர்தேசன் "அதைப்பற்றி நான் சந்தேகப்படவில்லை அம்மா! இன்னொரு இரகசியம் உங்களிடத்தில் மட்டும் சொல்லவேண்டும்."

விமலையார் "அங்கம்மாள், மாதவா—நீங்கள் இருவரும் வெளியே போங்கள். அறைக்கதவையும் படிக்கதவையும் சாத்திக்கொண்டு கீழிறங்கி நில்லுங்கள்." எனவே, அங்கம்மாள், திடீரென்று கதவைச் சாத்திக்கொண்டு வெளிச்சென்றாள். விமலையாருக்கு உண்டான கோபத்துக்கு அளவில்லை. "இந்தக் காட்டு ஜந்துக்களின் குணமே இவ்வளவுதான்! சொல்லப்பா உன் சமாசாரத்தை" என்றாள் அமிர்தேசனிடம்.

உடனே அமிர்தேசன் ஆதியோடந்தமாகத் தான் கேட்ட சமாசாரத்தையெல்லாம் சொல்லிப் பிறகு "இன்று இராத்திரி மாளிகைக்குத் தீவைப்பது நிச்சயம். நாம் எல்லாரும் மாளிகையை விட்டு வெளியேறுவதுதான் சரியான காரியம் மாளிகையைக் காப்பாற்றவோ வேறுவழியில்லை. இந்த ரணபாதகர்களை எதிர்க்க நினைப்பது சாத்தியமான காரியம் அன்று" என்று சொல்லி முடித்தான்.

விமலையார் "அமிர்தா! என்னை எங்கே போவென்கிறாய்?"

அமிர்தேசன் "இருப்பது என் குடிசைதான்: தங்கள் கால்படவும் யோக்கியதை இல்லாதிருப்பினும் வேறு—" விமலையார் எனக்குத் தெரியும் பிள்ளாய்: நானோ உன் குடிசைக்கு வரப்போகிறதில்லை. சாளுவ இராஜ வம்சத்தில் பிறந்த நானா அற்பவீரர்களுக்கு பயந்து மாளிகையை விட்டு வெளியேறுவேன்? கனவிலும் அப்படி நினையாதே!! வருவது வரட்டும். எப்படியானாலும் இந்தக் கட்டிலை விட்டு இறங்குவதில்லை. நீ சொல்லுகிறபடி அவ்விதக் கொடுமை செய்யக்கூடிய வீரர்கள் இருப்பார்களா என்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கின்றது—சரி இருப்பினும், வெளியே போய் மாதவனை உடனே குதிரைக்கு ஜேணம் போடச்சொல்; ஊருக்குள் போய் சின்னரெட்டியைக்கண்டு நான் எழுதிக் கொடுக்கும் சீட்டை அவனிடம் கொடுக்கும்படி அவனை அனுப்பு; அவனை உடனே நமது மாளிகைக்கு உதவியனுப்பச் சொல்லுகிறேன்" என்றாள்.



அமிர்தேசன் ஆனால் என்தாயே குழந்தைகள் இங்கே இருக்கக்கூடுமோ? அவர்களை வீட்டில் விடுவது எனக்கு சம்மதமில்லை. நான் எஜமானனுக்கு வாக்கு—"

விமலையார் "என்னைவிடக் குழந்தைகளுக்கு ஆபத்து அதிகமென்று உன் எண்ணமா என்ன? நன்றாய் இருக்கின்றது. உன் புத்தி—என்னை அவமதிக்கவும் குழந்தைகளைத் தொந்தரவு செய்யவும் அவ்வீரர்கள் துணிவார்களா!! சமையல் வீட்டில் புகுந்து அன்னம் முதலியவற்றைத் தின்றும், பால், தயிர், நெய், இவற்றைக் குடித்தும், ஏப்பம் விட்டுவிட்டுப் போகட்டும்; யார் வேண்டாமென்கிறார்கள்? 'குறைந்த வயிற்றுக்குக் கொள்ளும் பலாக்கொட்டையும்' என்றபடி நீ கொண்டுவந்து வைத்து இருக்கும் பலாப்பழங்களைத் தின்று தேனைக் குடித்துவிட்டுப் புரளட்டும். என்னைப் போன்ற சீமாட்டிகளைத் தொந்தரவு செய்வது எவருக்கும் அடாத காரியம் என்றாள்."

அமிர்தேசன் "அம்மா! இவர்களுக்கு அடுத்தது என்றும் அடாதது என்றும், யோக்கியமானது, அயோக்கியமானது என்றும் கூட ஆராய்ந்து பார்க்கும் குணம் உண்டா? எப்படி இருப்பினும் குழந்தைகளை வெருட்டித் தொந்தரவு செய்வதற்கு ஆக்ஷேபனை இல்லை. ஆகையால் இன்று ஒரு இரவுமட்டும் அவர்களை என் குடிசைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்." விமலையார் "சரி, அப்படியானால் உன்னிஷ்டப்படி செய். குழந்தைகளை அங்கு அழைத்துச் செல்வதுடன் அங்கம்மாளையும் அழைத்துச் செல். அங்கே விசாலாக்ஷிக்கும், சின்னப்பெண்ணுக்கும் ஒரு தாதியில்லாவிட்டால் சரிப்படாது. உடனே அக்காளை இங்கே வரச்சொல்லிவிட்டு மாதவனைக் குதிரையைத் தயார் செய்யச் சொல். ஓடு உடனே" என்றாள்.

அமிர்தேசனும் வெளியே வந்தான். அவனது மனக்குழப்பம் சொல்லி முடியாது. தெய்வச் செயலாய்க் குழந்தைகளைக் காப்பாற்ற வழி உண்டாயிற்றே என்பதைவிட, விமலையாரை வெளிக்கிளப்ப முடியவில்லையே என்ற விசனமே அவன் மனதைப் புண்படுத்திற்று. ஆனால் விமலையாருடைய பிடிவாதத்துக்கு விரோதமாய் எதிர்த்துச்சொல்ல ஈசனாலும் முடியாதென்பது அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். இனிக்கட்டிலின் மேல் உட்காரவைத்த கல்லுப்பிள்ளையார் மாதிரிதான் விமலையார் இருப்பாளே ஒழிய அவ்வளவிற்றுச் சற்றும் குறைய மாட்டாள் என்பது அவன் மனதிற்கு நிச்சயமாய் விளங்கிற்று.

வெளிப் புறப்பட்டதும் இன்னுமொரு விஷயம் அவன் மனதை பாதித்தது. வீட்டில் உள்ளோர் அனைவருக்கும் இவ்விஷயத்தைச் சொல்வது யுக்தமா, என்று ஆலோசனை செய்துகொண்டே கூடத்துக்கு வந்தான். இவன்

அவ்விஷயத்தைக் குறித்து தொந்தரவு படவேண்டிய அவசியமில்லாமலே அங்கம்மாளே எல்லாரிடத்திலும் தாராளமாய் இந்தவிஷயத்தைக் குறித்து பிரசங்கம்செய்யத்தொடங்கிவிட்டாள். எங்ஙனம் அங்கம்மாளுக்கு விஷயம் தெரிந்ததென்றால் விமலையார் அவளையும் மாதவனையும் மாடியிலிருந்து கீழேபோகச் சொன்னபோது, மாதவன் மட்டும் கீழிறங்கிப் போனானே ஒழிய, அங்கம்மாள் மாடிக் கதவின் கீழேயே நின்று கொண்டாள். விமலையாரிடம் மாதவன் சொன்ன சமாச்சாரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, மாளிகைக்குத் தீயிடும் சமாச்சாரம் தெரிந்தவுடன் மேல் நடக்கும் சம்பாஷணையைக் கேட்கப் பொறுமையில்லாதவளாய் ஓடியும் வந்து, கூடத்தில் மாதவன், சமையற்காரி சுந்தரி, இவர் இருவருக்கும் தேசாபிமானிகள் பிரதாபத்தை, 10 பங்கு அதிக பயங்கரமாக, சொந்த சரக்குகளுடன் சேர்த்து வர்ணிக்கத் தொடங்கிவிட்டாள். ஆகவே, அமிர்தேசன் சிந்தித்துக் கொண்டே அவ்விடம் வருவதற்குள், சமையற்காரி சுந்தரி "ஐயா அமிர்தேசரே, நாங்கள் எல்லாம் இவ்வீட்டோடு எரிந்து போக வேண்டுமோ என்ன? நல்லசமாச்சாரம் கொண்டுவந்தாய் ஐயா!! அம்மா என்ன சொல்லறது?" என்று கேட்டாள்.

அமிர்தேசன் "அம்மாளுக்கு இங்குவிட்டுப் போக இஷ்டமில்லை. மாதவன் உடனேகுதிரையைத் தயார் செய்துகொண்டு ரெட்டிப் பேட்டைக்குப் போக வேண்டும். அவ்விடத்து ரெட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்—நீயும் அங்கம்மாளும் நேராய் அம்மாளிடம் உடனே சொல்லவேண்டும். அம்மையார் சொன்னது" என்றான்.

"ஆனால் அவர்கள் அபிப்பிராயம் என்ன? தான் எங்கே போவாளாம்? நெருப்பு வைக்கவந்தால் எல்லாருக்கும் போக்கிடம் எங்கே? சொல்லையா. என்ன ஊமையாட்டம் நிற்கிறாய்?" என்று கேட்டாள் அங்கம்மாள்.

அமிர்தேசன் "என்ன வானாலும் விமலையார் இவ்விடம் விட்டு நகருவதாக எண்ணமில்லை—"

அங்கம்மாள்—"ஆனால் நானும் விமலையாரிடம் போவதாக எண்ணமில்லை. எனக்காக அவர் வீணில் காத்து இருக்கவேண்டியதுதான்—மாதவா கொஞ்சம் புண்யத்துக்காக உன் குதிரையின்மேல் என்னையும் ஏத்திக்கொண்டு போ. இதோ மூட்டை கட்டிவிட்டேன்" என்றாள்.

மாதவனும் ஜாடையாய்ச் சரியென்று ஒப்பமாய்த் தலையை அசைத்து விட்டுப் பறந்தான் குதிரை லாயத்துக்கு. அங்கம்மாள் மூட்டை கட்டப் போகவே, சமையற்காரி மடப்பள்ளி நோக்கி விரைவாய்ச் சென்றாள்.

கே. வெங்கிட்டசுப்ரமண்ய சர்மா.



# பரோடாவில் கல்வி அபிவிருத்தி.

இந்தியாவில் சுமார் 650 ராஜ்யங்கள் சுதேச அரசர்களின் ஆளுகைக்குள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை மூன்று: மைசூர், திருவாங்கூர், பரோடா. கடைசியாய் நிற்கின்ற பரோடா விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் கடைப்பட்டதே அல்லாது மற்றவிஷயங்களில் முதலில் நிற்கிறது. எண்ணாயிரம் சதுரமைல் விஸ்தீரணமும், இருபத்தொன்று லட்சம் ஜனத்தொகையையுமுடைய இச்சிறியராஜ்யம்பம்பாய் ராஜதானியில் காம்பே வளைகுடாவிற்கு நேர்கிழக்கில் உள்ளது. கொஞ்ச காலத்திற்குள் கல்வியில் பெயர்போன தேசமாதலால் அதை நாம் சோதித்து பார்க்கவேண்டு மென்பது எளிதில் விளங்கும்.

1835-ம்௵வரையில் நமது தேசத்தில் இங்க்லீஷ்படிப்பு சரிவர ஆரம்பிக்கவில்லை. நாட்டுக்கணக்கும் திண்ணை பள்ளிக்கூடமும் சுதேச பாஷைகள் அப்பியசிப்பதுமாக விருந்தது. இங்க்லாந்திற்போல் இத்தேசத்திலும் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தை லார்டு மெகாலே ஏற்படுத்தியபிறகு ஆங்கிலபாஷையும் அவ்வழிகளும் தற்காலத்தில் அளவில்லாமல் காசிமுதல் ஸேதுவரையிலும் கராச்சிமுதல் கல்கத்தா வரையிலும் 1800 மைல் நீளமும், 1800 மைல் அகலமும் முன்னே பின்னே உள்ள ஒரு கண்டம் என்று சொல்லக்கூடிய இந்தியாவில் பரவி குக்கிராமங்களில்கூட சிலர் இங்க்லீஷ்படித்து பாஸ்பண்ணி யிருக்கும் நிலைமைக்கு வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

தற்காலத்தில் நமது யூனிவர்ஸிடிகள் இங்க்லாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் யூனிவர்ஸிடிகளைப்போல அவ்வளவு உன்னத ஸ்திதிக்கு வரவேண்டுமென்று பிரயத்தனம் செய்கின்றன. நமது பள்ளிக்கூடங்களோ ஈடன், ஹாரோ என்ற பட்டணங்களிலுள்ள சீர் ஓங்கிய பள்ளிக்கூடங்களைப்போ லிருக்கவேண்டுமென்று உழைக்கின்றன. ஆனால் இந்தியாவில் எல்லா பாகங்களிலும் கல்வி ஒரே விதமாய் இருக்கவில்லை. உதாரணமாக தக்ஷிணத்திலுள்ள ஹைதராபாத் கல்விவிஷயத்தில் இன்னமும் கர்நாடகமாய்த்தான் இருக்கிறது. பரோடா உன்னதஸ்தானத்தில் இருக்கிறது. ராஜ்ய பரிபாலனம்தான் இதற்கு முக்கிய காரணம்.

பரோடாவில் கல்வி பரவி யிருக்கின்றதென்ற கருத்தே அல்லாது படிப்பில் புலி அனேகர் அவ்விடத்தில் கிளம்பியிருக்கிறார்களென்ற தாற்பரியமல்ல. அந்த விஷயத்தைப் பார்த்தால் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு பரோடா உரை போடக்காணாது. திவான் சேஷய்யா சாஸ்திரி, வி. பி. மாதவராவ், ஹைகோர்ட் ஜட்ஜ் முத்துஸாமி அய்யர், சட்ட நிருபண சபை மெம்பராயிருந்த வி. கிருஷ்ணஸாமி அய்யர், கணக்கில் கியாதிபெற்று இப்போது

கும்பகோணத்திலிருந்து சீமைக்கு போயிருக்கும் எஸ். ராமானுஜ அய்யங்கார் ஆகிய மகிமைப்பெற்ற கல்விமான்கள் தஞ்சை ஜில்லாவிற்கு உரியவர்கள்.

ப்ரைமரி பள்ளிக்கூட விஷயத்திலும் சாதாரண ஜனங்களுக்கு எழுதப்படிக்க தெரிந்து கொள்ளுவதற்கு வேண்டிய சாதனங்களிலும் பரோடாவுக்கு ஈடு இந்தியாவில் எங்குமில்லை யென்பது திண்ணம். 1903-ல் ஒரு கெயிக்வார் என்று சொல்லப்படுகிற பரோடா மஹாராஜா ராஜ்யத்திலுள்ள எல்லாப்பிள்ளைகளும் ப்ரைமரி கிளாஸ் வரைக்கும் சம்பளமில்லாமல் வாசிக்கவேண்டுமென்று உத்திரவு செய்தார். இப்போது அங்கே 1200 பள்ளிக்கூடங்களுக்கு மேல் நன்றாய் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை நான்காவது கிளாஸ் பையன் மாஸம் ஒரு ரூபாயும், கார்புரேஷன் பாடசாலையில் 2 அல்லது 3 அணாவும் கொடுக்கவேண்டியிருக்கிறது. அங்கே இனாமாக வாசிக்கலாம். எவ்வளவு வித்தியாஸம்! மைசூரில் இனாம் படிப்பு கொஞ்சம் கொஞ்சம் ஏற்பட்டுவருகிறது. இன்னும் நன்றாய் ஊன்றவில்லை. இந்தியாவில் மற்று எந்த பாகங்களிலும் இம்மாதிரியான படிப்பு கிடையாதென்று தோன்றுகிறது. ப்ரைமரி படிப்பு இனாமாகசெய்து ஒவ்வொருவரும் கட்டாயம் முதல் நான்கு கிளாஸ் வாசிக்கவேண்டுமென்று ஒரு பில் மிஸ்டர் கோக்லேயால் பெரிய சட்ட சபையில் கொஞ்ச காலத்திற்குமுன் கொண்டுவரப்பட்டது. அது அங்கீகரிக்கப்படாமல் போனது ரொம்பவும் விசனிக்கத்தக்கது. பரோடாவைப் பார்த்தாவது நமது தேசாபிமானிகள் மறுபடியும் பிரயத்தனம் செய்யவேண்டியது அவசியம்.

பரோடாவில் பெண்கல்வியும் வியாபித்திருக்கிறது. பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு போகும்படி கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். அவர்களுக்கு பள்ளிக்கூடங்கள் பிரத்தியேகமாயிருக்கின்றன. சென்னை ராஜதானியில் உள்ள பெண்பள்ளிக்கூடங்களில் எழுதபடிக்க கணக்குப்போட சொல்லித்தருகிறார்கள். அங்கே இவைகளைச் சொல்லிக் கொடுப்பதை தவிர சமைத்தல், பாடுதல், தைத்தல் ஆகிய பெண்களுக்கு இன்றியமையாத வித்தைகளை விசேஷமாய் கவனிக்கிறார்கள். மஹாராணி ரொம்பவும் சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள். வித்தை பெண்களுக்கு அவசியமென்று பிரசங்கங்கள் பல செய்திருக்கிறார்கள். இவற்றைத் தவிர அத்தேசத்து பெண்கள் எப்படி முன்னுக்கு வரலாமென்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். இதுமாத்திரமல்ல. அன்னிய தேசத்திற்குப் போய் படிக்கும் பெண்களுக்கு பண உதவியாலும் மற்ற விதங்களாலும் உதவி செய்கிறார்கள். இம்மஹாராணியை எங்ஙனம் புகழ்வது?

மதசம்பந்தமான படிப்பும் வழங்கிவருகிறது. பையன்களுக்கும்பெண்



பெண்களுக்கும் சுதேசப்பாஷைகளில்எழுதப்பட்டுள்ள தகுந்தபுஸ்தகங்களைக் கொண்டு கற்பிக்கப்படுகிறது. இந்தியாவில் மற்று எங்கும் இவ்வளவு ஒழுங்காய் மதக்கல்வி நடைபெறவில்லை. நமது ராஜதானியில் அனேக பள்ளிக்கூடங்களில் இப்படிப்பே கிடையாது. தசரதருக்கு இராமன் யார் என்ருவது த்ரௌபதிக்கு அர்ச்சுனன் என்ன உறவு என்ருவது நமது பையன்களைக் கேட்டால் பதில் உளரலாயிருக்கும்.

எல்லாவற்றையும்விட புத்தகசாலைதான் பரோடாவில் தூக்கி நிற்கின்றதென்று சொல்லவேண்டும். 275 பப்ளிக் புத்தகசாலைகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள புத்தகங்களின் தொகை 156,000. அவற்றை வாசிப்பவர்கள் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறார்கள். புத்தகங்களை பல ஊர்களுக்கு அனுப்பும் வழக்கம் அங்கே உண்டு. அனுப்பப்பட்ட புஸ்தகங்கள் ஒரு கிராமத்தில் மூன்று மாதமிருக்கும். பிறகு வேறு புத்தகங்கள் வரும். ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் புஸ்தகசாலைக்கு 300 ரூபாய் கிராண்டு ராஜாங்கத்தார் கொடுக்கிறார்கள். ஆனால் அக்கிராமத்தார்கள் தாங்களும் 300 ரூபாய் போடவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. படிப்பு இல்லாத ஸ்திரீகளுக்கு அறிவையுண்டாக்க ஒரு நூதனமார்க்கம் வெகு சீக்கிரத்தில் ஸ்தாபனமாகும். அசையும் படங்கள் மூலமாயும் இயந்திரங்கள் மூலமாயும் சமாச்சாரங்களையும் உலக சம்பவங்களையும் எளிதில் கண்ணால் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்ளும்படியாய் கிருஷி நடந்து வருகிறது.

ராஜாங்கக்கல்வியும் பரோடாவில் மேம்பட்டிருக்கிறது. ஜனங்கள் தங்கள் கடமைகளை மேல் அதிகாரிகளிடம் சரியாய் செய்கிறார்கள். ராஜாங்க ஆளுகையில் ஜனங்களுக்கு தகுந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிஸ்தி, வரி முதலானவைகள் லகுவாயிருக்கின்றன. ராஜாங்க அதிகாரிகளுக்கும் குடிகளுக்கும் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்பட்டு சீர் அடைந்திருக்கிறது.

இப்போது வி. பி. மாதவராவ் திவானாகபோயிருக்கிறார். இவர் கல்வி அபிமானியாதலால் பரோடாவில் இன்னும் வித்தியா சீர்திருத்தங்கள் ஏற்பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை. இக்கல்விமான் திருவாங்கூரிலும் மைசூரிலும் பல சீர்திருத்தங்கள் கல்வி விஷயமாய் செய்திருக்கிறார்.

எம். கோபாலய்யர்.

---

## சங்கவாழ்க்கை.

## SOCIETY.

யாதவ நாட்டின் தலை நகரில் அகண்டு நீண்ட தெருக்களில் மாசிமாதம் பூரணசந்திரன் பிரகாசிக்கும் ஒரு நாளிரவில் அந்நகரில்

கூத்தாட்டம் பார்த்துத் திரும்பிச்செல்லும் ஜனங்களை உற்று நோக்கி, அங்குமிங்கும் உலாவித் திரிந்துகொண்டு மதியை நோக்கித் தன் மதியை மீட்கும் வண்ணம் பார்த்துப் பார்த்துப் பரிதவிக்கும் ஒரு வாலிபன் தன்னந் தனியே பாடிக்கொண்டு நின்றனன். யாவரும் தங்கள் தங்கள் வீடுசென்று நித்திரையில் அமர்ந்த பின்னர், வாலிபன் தான் பகலில் சுற்றித்திரிந்த தெருக்கள் யாவற்றையும் கடந்து, அரசன் அரண்மனை வாயிலின் முன் நின்று கீழ்வருமாறு பிரலாபிக்கலானான்.

"ஆகா! இப்புவியின்கண் இந்நகருக்குச் சமானமான பட்டணங்கள் அநேகம் உள. ஆயினும் இந்நகரின் அகன்று நீண்ட தெருக்களும் ஓங்கி உயர்ந்து, மேகத்தைத் தன்னிடத்தே அணைந்து சந்திர மண்டலத்தையே கவரும் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், பருத்தமதில்களும், விசாலமான சபாமண்டபங்களும், குயில் கூவி விளையாடலும், நானாவித புஷ்பங்களுமுள்ள சோலைகளும், சாலைகளும், நாற்புறமும் பூமியைக் குளிர்ச்சி செய்து, பயிர் செய்ய ஜலம் கொடுக்கும் வாவிகளும், தடாகங்களும் உலகிலுள்ளவை யாவற்றினும் மேம்பட்டதென புகழ்கின்றார்களே! என்ன அநீதை! ஆகா! அவைகள் இச்சமயத்தில் என்ன பயன்படுகின்றன.? மொண்டி முடம், கூன் குருடு எல்லாம் பகலில் தங்கள் வலி பொறுக்க முடியாமல் கூவுகின்றனவே!

ஐயோ! தங்கள் கைகால்கள் வருந்த தேகத்தை நன்றாய் உழைத்து, வரும் கூலியைக்கொண்டு இலக்குமியின் மூத்தாள் வசிக்கும் புண்ணியப் பந்தலில் இறைத்து சுத்த நீரைத் தள்ளிப் பித்த நீரைப்பருகி வீட்டில் பெண்டு பிள்ளைகள் தவிக்கத் தெருவில் நிற்க முடியாமல் தள்ளாடிச் சாலையில் விழுந்து புரளும் மூடக்குடிகாரர்களுக்கு இவைகள் என்ன பயன் படுகின்றன.? ஆந்தைபோல் பகல் தூங்கி இராவிழித்து மிருகங்களில் தந்திரமான நரிபோலவும் பக்ஷிகளில் யுக்தியான காக்கைபோலவும் தங்கள் வயிற்றை வளர்க்க கடவுள் கொடுத்திருக்கும் அவயவங்களை நல்ல வழியில் உபயோகப்படுத்தாமல் மதில்களைக் கன்ன மிட்டுத் தாண்டிச் சென்று திருடும் கள்ளர்கட்கு மாளிகையின் அழகும். அருமையும் எங்ஙனம் விளங்கும்?

சற்று முன் திரையைப்போல், தூவிய திலகம் தரைகாணவண்ணம் திரண்டு சென்ற குடிகள் எங்கே? ஆற்றிரைச்சலினும் பேரிரைச்சலான அவர்கள் கூச்சலெங்கே? ஈசா! இவ்வேழையாகிய என் மனதில் இவ்வித பச்சாதாபம், இருந்தென்ன பயன்.? பணமே உயிரென எண்ணி அவ்வுயிரை வெல்லலாமெனப் பாதுகாத்து சங்கத்தில் அந்நியர் படும் கஷ்டங்களை நோக்கி உதவி புரியாது மானிட ஜென்மம் எடுத்து வாழும் மகான் கட்கல்லோ இத்தயை யிருக்கவேண்டும்? அவர்கள் அல்லோ இவர்களை தங்க



ளுடன் வாழும் சங்கத்தாரென மதிக்கவேண்டும் 'ஆகா' 'வாழ்வாவது
மாயம்' என்பது உண்மையாகத் தோன்றுகின்றதே. 'மண்ணாவது திண்
ணம்' என்பது பொய்த்து விடுமோ? தாயின் பிரிந்த தலைக் குழவிபோல்
பகலில் ஒல மிட்டுக்களைத்துப் போய்ப்படுத் துறங்கும் நகரே! இம்மாதிரி
என்றைக்கும் நின்று விட்டால் என்ன கதி? அப்பொழுது பெரியோன்
யார்? இளையோன் யார்? தனவான் எங்கே? தரித்திரன் எங்கே? சிரிப்போன்
யார்? சிரிப்போன் யார்? பழையகாலங்களில் குடிகளின் அக்கிரமங்களினால்
நகர்கள் பூமிக்குள் அமிழ்ந்துபோயின வென்கிறார்களே! என்றைக்கு இந்
நகர்க்கு அக்காலம் நேரிடுமோ!'

நகர்கள் பூமியுள் அமிழ்ந்து விட்டனவா? அத
இம்மாதிரி எங்கேனும் நகர்கள் பூமியுள் அமிழ்ந்து விட்டனவா? அத
ற்கு காரணம் மேற்கூறிய வண்ணமா என்று சற்று யோசிப்போம். இதற்
கேற்ப ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள ஒரு ஏரியின் அருகில்
நின்ற சிறு அக்கிரஹாரம் பூமியுட்சென்றதாக கதைவழங்குகிறது. அதன்
வரலாறு:—அக்கிராமத்தின் நாற்புறமும் நஞ்சை நிறைந்த குடிகளுக்கு
தேவையான விளையும்நிலங்கள் சூழ்ந்திருந்தன. ஜனங்களும் உல்லாசமாய்
காலத்தைக் கழித்துக் குடித்தும், சூதாடியும் பணத்தைச் செலவிட்ட
போதிலும் அவர்கள் தனவந்தர்களெனவே சொல்லலாம். ஆயினும் சுப
நயம் பாராட்டுவதில் புலிக்குச் சமானமானவர்.

இவ்வாறிருக்கும் நாளில் ஓர் நாள் வயோதிகத்தினால் தேகம் தளர்ந்து
மெள்ள மெள்ள ஊர்ந்து வரும் ஒரு கிழவன் தனக்கு தற்காலத்தில் உதவிபு
ரிய யாவராயினும் உளரோ என்ற எண்ணங்கொண்டவனாய் அவ்வூர் சென்
றனன். ஆங்கு ஓர் குடிசையுட்புகுந்து 'ஐயன்மீர்' பசியினால் அதிகதூரம்
நடந்து வந்ததால் களைத்துப்போயினேன்; கொஞ்சம் ஆகாரம் அளிப்பின்
அநேகவந்தனம் அளிக்கின்றேன்' என்று கூவ, அதற்குபதில் நாஸ்திவாச
கமாக,மற்றும் வேறுவீடுகளை நோக்கிச்சென்றனன். அவ்வூர்வாசிகள் அவ
னைத் தடியனென்றும், சோம் பேறியென்றும், திட்டி யௌவனவயதில் ஆ
ஸ்தி தேடிவைத்திராதது அவன் குற்றமென அவனை இகழ்ந்து கண்ணியமா
புள்ள அவ்வூர் பிரபுக்கள் முன் அவன் நிற்க யோக்கியமற்றவன் என்று
அவனை விரட்டிவிட்டார்கள்.

அச்சங்கத்திலுள்ள யாவராலும் துரத்தப்பட்ட அவ்வயோதிக
னைக் கண்ணுற்ற தயையுள்ள ஒருவன் அவனைத்தன் இல்லத்திற் கழைத்
துச் சென்று வேண்டியவற்றைக் கொடுத்து இளைப்பாறும்படி செய்வித்த
னன். ஊர் ஓசை அடங்கிய நடு இரவில் கிழவன் எழுந்து தன் அன்னதா
தாவை எழுப்பி கீழ்வருமாறு கூறினன்:—"இப்பாதககிராமத்தின்பேரில்
அடிக்கும் புசல் காற்றினால் இவ்வூர் நசித்துப்போம். இவ்வூராரின் கெட்ட
நடத்தையால் அவர்கள் நாசமடைவது திண்ணம். நீயும் உன் பந்துக்களும்

இதைவிட்டகலுங்கள்". இவைகளைக் கூறி அவன் விடைபெற்றுச் சென்ற கொஞ்ச நாட்களுக்கெல்லாம் புசல் காற்றடிக்க ஆரம்பித்தது. உடனே அன்னமிட்ட ஆப்ரிக்கன் குஞ்சு குழந்தையுடன் வேற்றூர் நண்ணினன். மறுநாட்காலை அந்த ஊர் இருந்தவிடம் முழுவதும் ஒரு பெரிய ஏரியாய் விட்டது.

இதனின்றும் நாம் அறியவேண்டியது யாதெனின் ஒவ்வொரு கிராமத்திலே பட்டணத்திலோ ஏராளமான தனமும், தானியமும் இருப்பதில் பயன் ஒன்றுமில்லை. வீடுகள் அதிகம் இருப்பதிலும் பயனில்லை. கதியற்ற ஏழைகட்கும், ஈனர்கட்கும், கூன், குருடு முதலிய அசக்தர்கட்கும் உதவி புரிவது சங்கத்தில்வாழும் தங்கள் கடமை என்று எண்ணும் குடிகளால் வாசஞ் செய்யப்படாத ஊர் இருந்தென், இல்லாமலென்?

'சக்தியற்றோர் வாழும் வண்ணம் சார்ந்துமுனுதவிதரும்.
பக்தரில்லாப்பதியை பாழ்சங்கவாழ்வு மென்பார்?'

இனிச்சங்கவாழ்வென்பது என்ன என்று ஆராய்வோம்.

(இன்னும் வரும்)

சி. வெங்கடேச ஐயர், பி. ஏ.

---

### சாஸ்திரப் பாடம்.

## உஷ்ணம் வஸ்துக்களில் பரவும் விதம்.

## CONDUCTION OF HEAT

(41-வது பாடத் தொடர்ச்சி)

குளிர்காலத்தில் நமது தேகம் அதிகமாய்க் குளிர்ந்து போகாமல் ஸமசீதோஷ்ணமாய் இருப்பதற்கு கம்பளி, பிளானல், பர் (Fur) என்ற பல விதமான ஆடைகளை உபயோகிக்கின்றோம் அல்லவா? அவைகளின் உபயோகம் உங்களுக்கு விளங்குகின்றதா? அவைகள் தாமே உஷ்ணமாய் இருக்கக் கூடிய வஸ்துக்கள் அல்ல நமது தேகத்தில் உள்ள உஷ்ணம் வாயுவில் பரவிப் போகாமல் இருக்கும்படி, அவை காத்துக் கொள்ளுகின்றன. உஷ்ணத்தைத் தம் வழியாய் பரவவொட்டாமல் தடை செய்யும் இவ்வஸ்துக்கள் இன்றி, தாமிரக்கம்பியால் செய்த ஒரு கவசத்தைப் போட்டுக் கொள்வோமானால் என்னவாகும்? தாமிரக்கம்பி தன் வழியாய் உஷ்ணத்தை விரைவில் பரவச் செய்யுமாகையால் தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்து உஷ்ணம் சீக்கிரம் செலவழிந்து போகும். ஆகவே தேகம் விரைவில் குளிர்ந்து விறைத்துப் போம்.

பிளானல், கம்பளி, இவ்வஸ்துக்கள் 'கண்டக்ஷன்' செய்யாமல்—அ



காவது தேகத்தில் உள்ள உஷ்ணத்தைத் தம் வழியாய் வெளிப் போகா மல் தடுப்பது போலவே, வெளியே உள்ள உஷ்ணத்தையும் உள்ளே நுழைய விடாமல், அவை தடுக்கும். அதற்காகவே பனிக்கட்டிகளை உருகவிடா மல் வைத்து இருக்க வேண்டுமானால் அவற்றை பிளானல் துணிகளில் கட்டி, மரத்தூளைப் பெட்டிகளில் நிரப்பி, அத்தூளில் புதைத்து வைக்கின்றார் கள். வீடு பற்றி எரிந்த போதிலும், சில இரும்புப் பெட்டிகளில் உள்ள சா மான்கள் கெட்டுப் போவதில்லை. அப்பெட்டிகளில் உட்புறத்துத் தகடுக ளுக்கும் வெளிப்புறத்துத் தகடுகளுக்கும் 'மத்தியில் கண்டக்ஷன்' மிகக் குறைவாய் இருக்கும் வஸ்துக்களை உபயோகிக்கின்றனர்.

இன்னுமொரு விசேஷமும் நீங்கள் கவனித்து இருக்கலாம். குளிர்கா லத்தில் ஒரு நாளிரவில்' கதவைச் சாத்தித் தாளிடும்போது, மரத்தாலா கிய கதவினும், இரும்பால் செய்த தாள் குளிர்ச்சியாய் இருக்கின்றது. ஏன்? குளிர்காலத்தில் நமது தேகத்தின் டெம்பரேசர் உயர்வு; வாயுவின் டெம்பரேசர் தணிவு. ஆகையால் தேகத்திலிருந்து வாயுவுக்கு உஷ்ணம் செல்லாத வேண்டியதேயல்லவா? கதவு, தாள், இவை இரண்டும் வாயுவுடன் சம்மந்தப் பட்டு இருப்பதால் வாயுவின் டெம்பரேசரையே அடைய வேண்டியது நியாயம் தானே. நாம் தாளைத்தொடும்போது இரும்பு நம் கையில் இருக்கும் உஷ்ணத்தை எடுத்துக் கொண்டு தன்னுள்ளே வெகு விரைவாய்ப் பரப்பத் தொடங்குகின்றது. நம் கையிலிருந்து உஷ்ணம் எப் பொழுது செலவாகின்றதோ அப்பொழுது கைகுளிர்ந்து போகின்றது. மரம் மரக்கதவோ அப்படியில்லை. நாம் தொட்டதும் நம் விரல்களிலிருந்து கொஞ்சம் உஷ்ணத்தை எடுத்துக் கொண்டபோதிலும், அவ்வுஷ்ணத்தை அது தன்னுள் விரைவாய்ப் பரப்புவதில்லை. ஆகவே விரல்களினின்று எடுத்துக் கொண்ட உஷ்ணம், நாம் தொட்ட இடத்திலேயே தங்கி நின்று விடுகின்றது. விரலிலிருந்து அதிக உஷ்ணம் செலவாக வழி ஏற்படுவ தில்லை, ஆகையால் கதவு இரும்புத்தாளை விட சூடாய் இருப்பது போல் தோற்றுகின்றது.

இவ்வாறு ஸ்பரிசத்தினாலேயே (தொட்டுப் பார்த்தே) சுமாராய் கண்டக்ஷன் செய்யும் வஸ்துக்களைத் திறமையான கண்டக்டர்கள் என்றும், குளிர்காலத்தில் அதிக சக்தியற்றவை என்றும், நிர்ணயம் செய்யலாம். குளிராய்த் தோன்றும் வஸ்துக்கள் சிறந்த கண்டக்டர்கள். கொஞ்சமே னும் குளிர்ச்சியாய்த் தோன்றாதவைகளே கண்டக்ஷன் செய்யத் தகுதி யற்றவை.

ஆர். கே. சுவாமி, பி.ஏ., எல்.டி.

# அம்மை குத்துவது.

1. பெரியம்மை வரவொட்டாமல் தடுப்பதற்கு அனுகுணமான ஓர் வழி அம்மை குத்திக் கொள்வதே. பெரியம்மை மிகவும் கொடிய வியாதி என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். அதற்குத் தொத்தும் குணமுண்டு. காற்று மூலமாய் அந்தவியாதி மனிதனுக்கு மனிதன் பரவும் பெரியம்மையானது நம்முடைய நண்பர்களிலும் அன்பர்களிலும் அனேகரை மடியடித்ததுடன் கூட பெரும்பாலும் அவர் வாழ்மனையெல்லாம் பாழ்மனையாக்கி விட்டது. இத்துடன் நில்லாமல் வெகுபேர் அழகைக்குறைத்து அவர்கள் உருமாறும்படி செய்துவிட்டது. ஆகலால் இந்த அபாயகரமான வியாதி சம்பவிக்க வொட்டாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை.

ஒரு வீட்டில் பெரியம்மை கண்டிருந்தால் அந்த வியாதிஸ்தனைக் காற்றுள்ள ஈரமற்ற அறையில் தனிமையாய் வைக்கவேண்டும். கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைப்பதுடன் ஓர் சிகப்புத்துணியை திரையாகப் போட்டுவைக்கவேண்டும். பாத்திர சாமான்கள், மேஜை, நாற்காலி முதலியவற்றை அனாவசியமாய் அந்த அறையில் வைத்திருக்கக்கூடாது. அப்படி வைக்கும் பக்ஷத்தில் வியாதி சம்பந்தமான அணுக்கள் அவைகளில் படிந்திருந்து அவை மூலமாய் பிறகு வியாதி மற்றவர்க்கும் பரவும். வியாதியஸ்தனைவிட்டு அம்மை இறங்கினவுடன் அவன் இருந்த அறையை மருந்துபோட்டு சுத்தம் செய்யவேண்டும். மேற்கூறை, அறைகளிலுள்ள மூலைமுடுக்குகள் எல்லாம் முக்கியமாய் பினைல் (Phenyle) முதலிய மருந்தினால் சுத்திசெய்து பிறகு செவ்வையாய் வெள்ளையடிக்க வேண்டும்.

அம்மை கண்டிருக்கும் நபர்களை அவர்கள் உடம்பிலிருந்து பக்குகள் எல்லாம் நன்றாய் உதிர்ந்தால் ஒழிய, மற்றவர்களுடன் சேராமல் இருக்கும்படி செய்யவேண்டியது. பெரியம்மை கண்டிருக்கும் வியாதியஸ்தனுக்கு அருகிலிருந்து சுசுருஷை செய்கிறவர்கள் தகுந்த காப்பு உடையவர்களாய் இருக்கவேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கும் அந்தவியாதி தொத்தும். காப்புடன் இருத்தலாவது முத்துகிளம்பு முன்னமே அம்மை குத்திக் கொண்டாவது இருக்கவேண்டும். அல்லது மறு அம்மை குத்திக் கொண்டாவது இருக்கவேண்டும். அல்லது பெரியம்மையாவது கண்டிருக்கவேண்டும். நாலாபக்கம் பெரியம்மை பரவியிருக்கும்போது அந்த விஷக்காற்று படவொட்டாமல் தடுப்பதற்கு, நீங்கள், மற்றும் உங்கள் குடும்பத்திலுள்ள சகலரும் சந்தர்ப்பத்தை ஒட்டி அம்மையாவது மறு அம்மையாவது குத்திக்கொள்ள வேண்டும்.

2. மதராஸ் எல்லைக்குள் அம்மை குத்திக்கொள்ள வேண்டியது



கட்டாயமான விஷயம். ஆறுமாதத்திற்கு மேற்பட்ட குழந்தையாயும்
இருந்து, ஒரு மாதத்திற்கு சென்னையிலும் வசித்திருந்து, அதற்கு அம்மை
குத்தாமல் இருந்தால், அந்தக் குழந்தையின் தாய் தகப்பனாவது கார்டிய
னாவது மேற்படி குழந்தையை அம்மை குத்தும் இடத்திற்குத் தானே
நேரில் கொண்டுபோயாவது, அல்லது யார்வசமாவது அனுப்பி வைத்தா
வது அம்மை குத்திக்கொண்டு வரவேண்டியது. அது அவர்கள் கடமை.
ஆதலால் உங்கள்வீடுகளில் அம்மைகுத்தாத குழந்தைகள் இருந்தால்
ஆலசியம் செய்யாமல் உடனே அவைகளை அருகாமையில் இருக்கும்
அம்மை குத்தும் ஆபீசுக்கு கொண்டுபோய் அம்மை குத்திக் கொண்டு
வரவேண்டியது. அப்படி செய்யத் தவறினால் முனிசிபல் ஆக்டுபடி நீங்க
ளும் தண்டனைக்குட் படுவதுடன்கூட உங்கள் பிள்ளைகளையும் நிமிஷந்
தோறும் அபாயத்துக் காளாக்குவீர். அம்மைகுத்த வேண்டிய காலத்தில்
குழந்தை அசௌக்கியமாய் இருந்தால், அம்மைகுத்துகிற உத்தியோகஸ்
தருக்காவது, பரீக்ஷை தேறின உங்கள் வீட்டு டாக்டருக்காவது அந்த
குழந்தையைப் பரிசோதித்து அது அம்மை குத்தப்படுவதற்கு லாயக்கல்
லவென்று ஸர்டிபிகேட் கொடுக்க அதிகாரமுண்டு. அப்படி அவர்கள்
கொடுக்கும் ஸர்டிபிகேட்டில் மூன்று மாதத்திற்கு மேற்படாமல் ஓர் கால
நிர்ணயம் குறிப்பிட்டிருக்க வேண்டும். தேவையிருந்தால் பின்னிட்டு
அதையே புதுப்பித்துக் கொள்ளலாம்.

ஆனதுபற்றி குழந்தைகள் அசௌக்கியமாய் இருக்கையிலும்
அம்மை குத்த லாயக்கில்லாமல் இருக்கும்போதும், அம்மை குத்துவார்
கள் அல்லது அம்மை குத்திக்கொள்ள கட்டாயப் படுத்துவார்கள்
என்ற பயம் வேண்டியதில்லை. குழந்தை சரியான ஸ்திதியில் இருந்தால்
தான் அம்மை குத்தும் உத்தியோகஸ்தர் அம்மைகுத்துவார். அம்மை
குத்தி ஆனபிறகு முத்து சரியாய்க்கிளம்பியிருக்கிறதா என்று தெரிந்து
கொள்ளும் பொருட்டு ஓர் குறித்த தினத்தில் அம்மை குத்தும் இடத்
திற்கு குழந்தையைக் கொண்டு வரும்படி அம்மை குத்தும் உத்தியோ
கஸ்தர் ஆஞ்ஞாபிப்பார். அந்த உத்திரவுபடி நீங்கள் நடக்கவேண்டும்.

அம்மை குத்தினது சரியாய்க் கிளம்பி இருந்தால், அம்மை சரியாய்
கிளம்பி இருக்கிறதென்று அம்மைகுத்தும் உத்தியோகஸ்தர் ஓர் ஸர்டி
பிகேட் அளிப்பார். அந்த சர்டிபிகேட்டை பத்திரப்படுத்தி வைப்பதினால்
குழந்தைகளுக்கு முக்கியமாய் ஆண் பிள்ளைகளுக்குப் பின்னிட்டு உபயோ
கமுண்டு. அம்மை குத்தினது பரிசோதனையில் பயன்படவில்லை என்று
தெரிந்து, அம்மைகுத்தும் உத்தியோகஸ்தர் மறுபடியும் அந்த குழந்தை
க்கு அம்மைகுத்த வேண்டுமென்று சொன்னால் அதன்படி நீங்கள் நடந்து
கொள்ளவேண்டும். அம்மைகுத்தி ஆனபிறகு முன்மாதிரியாகவே மறுபடி

யும் குழந்தையைப் பரிசோதனைக்குக் கொண்டுபோய் காட்டவேண்டும்.
மூன்றுதரம் அம்மைகுத்தியும் பயன்படாமல்போகுமேல், அம்மைகுத்தும்
உத்தியோகஸ்தர் அந்த குழந்தைக்கு அம்மைகுத்துவதால்பிரயோஜனமில்லை
என்றசர்டிபிகேட்ஒன்று கொடுப்பார். ஆனல் இம்மாதிரிநேர்வது அரிது.

3. அம்மை குத்தும் ஆபீசுக்கே போய் முனிசிபல் அம்மை குத்
தும் உத்தியோகஸ்தர் மூலமாயே அம்மை குத்திக் கொள்ள வேண்டு
மென்ற கட்டாயம் ஒன்றும் இல்லை. உங்கள் வீடுகளிலேயே தகுந்த டாக்
டர்களைக் கொண்டு நீங்கள் அம்மை குத்திக் கொள்ளலாம் அப்படி செய்
யும் விஷயத்தில், அம்மை குத்தின 15-நாளைக்குள் பிரசிடெண்ட், ஹெல்த்
ஆபீசர், அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கு
அம்மைபிரயோசனப் படும்படி குத்தப்பட்டது என்ற சர்டிபிகேட் ஒன்று
நீங்கள் வாங்கி அனுப்ப வேண்டியது அவசியம்

முனிஸிபல் அம்மைகுத்தும் உத்தியோகஸ்தர் உங்கள் வீடுகளுக்கு
வந்து குழந்தைகளுக்கு அம்மை குத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தால்
அது விஷயமாய் பிரசிடெண்ட், ஹெல்த் ஆபீசர், அல்லது அவர்களால்
நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தருக்கு மனு செய்து கொள்ளும்
பக்ஷத்தில் அதேவீட்டில் முதல் கேஸுக்கு ரூ 2-ம் பின்னிட்டு ஒவ்வொரு
கேஸுக்கும் 4-அணு வீழ்க்காடு கட்டணம் பெற்றுக்கொண்டு முனிசிபல்
வாக்ஸினேடரை அனுப்பி உங்கள் வீடுகளிலேயே அம்மை குத்தி வரும்
படி அவர் திட்டம் செய்யலாம். ஒரு ஸ்திரீக்கு அம்மை குத்தவேண்டிய
தாயிருந்து அவள் கோஷாவாய் ஜாதி, ஊர் வழக்கப்படி பயிரங்கமாய் வெ
ளியில் வராதவர்களாயிருந்தால் அப்போது பிரசிடெண்டானவர் அம்மை
குத்தும்பெண் உத்தியோகஸ்தரை அந்த வீட்டுக்கு அனுப்பி ஒரு கட்டண
மும் வாங்காமல் அம்மை குத்தி வரும்படி உத்திரவு செய்வார்.

மேற்கண்ட இரண்டு விஷயங்களிலும் அம்மை குத்தும் உத்தியோக
ஸ்தர் பின்னிட்டு பரிசோதனைக்காக உங்கள் வீடுகளிலேயே வந்து பார்த்
துப்போவார். முனிசிபல் வாக்ஸினேடர்த் (அம்மைகுத்தும் உத்தியோகஸ்
தர்) அம்மைகுத்தும் ஆபீசில் அம்மை குத்தினாலும் சரி, அம்மை குத்தி
னதற்காக ஸர்டிபிகேட்டுகள் கொடுத்தாலும்சரி, அதற்காக உங்களிடத்தி
லிருந்து யாதொரு இனமோ லஞ்சமோ ஒன்றும் வாங்கக் கூடாது. அம்
மை குத்தாத ஒரு குழந்தைக்கு தப்பாய் அம்மை குத்தினதாக ஸர்டிபி
கேட் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று பிரசிடெண்ட்அவர்களுக்குத் தெரி
யவந்தால் அவர் உடனே அந்த ஸர்டிபிகேட்டை ரத்து செய்து விடுவார்.

உங்கள்வீடுகளில் உங்கள் ஆகாணையில் அம்மைகுத்தாதகுழந்தைகள்
இருந்தால் பிரசிடெண்டானவர் நோடீஸு மூலமாய்க் குறிப்பிட்டதினத்
தில் காலை 6-மணி முதல் மாலை 6-மணிக்குள்ளாக ஓர் இடத்தில் மேற்



...சாதனைக்கு கொண்டு வரும்படி செய்து அந்த
கண்ட குழந்தைகளை ...சு, பிறப்பிடம், மதராஸில் எத்தனை நாள் வாசம் முதலிய
குழந்தைகள் ...
...களைக் கேட்டு உங்களுடையவாக்கு மூலம் பெறலாம். அப்படி குழந்
...தைகளை கொண்டு காட்டும்படி கொடுத்த நோட்டீஸ் பிரகாரம் நீங்கள் நட
...வாமற் போகும் பக்ஷத்தில், அந்த குழந்தைகள் அம்மை குத்தப்படவில்லை
...என்று பிரசிடெண்ட் அவர்களுக்கு பின்னிட்டு தெரிந்தால் உடனே 72-
...மணி நேரத்திற்குள்ளாக மேற்கண்ட குழந்தைகளை நோட்டீஸ் கண்ட
...தினத்தில் ...இல் ...கிருக்கும் இடத்தில் கொண்டுபோய் அம்மை
குத்தும் படிக்கு மறுநோட்டீஸ் ஒன்று கொடுக்கலாம். ... ...
தவறினாலும், அல்லது முன்னமே அம்மை சரியாய்க் குத்தப்பட்டிருக்கிற
தென்றுவது அல்லது அசௌக்கியத்தினால் அம்மை குத்த லாயக்கில்லை
என்றுவது அல்லது அம்மை குத்தியும் நிஷ் பிரயோசனப் பட்டதென்று
வது ஓர் சர்டிபிகேட் அனுப்பத்தவறினாலும் நீங்கள் தண்டனைக்குள்ளா
வீர்கள். ஒரு தரம் தண்டித்தபிறகும், அந்த குற்றத்தை செய்து கொண்
டே வந்தால், உங்களுக்கு கொடுத்த நோட்டீஸுபடி கடைசியாக நீங்கள்
அப்படி நடந்து கொள்ளுகிற பரியந்தம் உங்களைத் தண்டித்துக்கொண்
டே வருவார்கள்.

டாக்டர். யு. ராமராவ்.

---

## ருதுமதி விவாகங்களை சட்டசம்மதமாக்குவதற்கான மசோதா.

(சுதேசமித்திரன்.)

ருதுமதி விவாகங்களை சட்ட சம்மத மாக்குவதற்கான மசோதாவை
ருதுமதி விவாகங்களை சட்ட சம்மத மாக்குவதற்கான மசோதாவை
சென்னைச் சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் சீனிவாசசாஸ்திரி பிரேரித்த
அம்மசோதா ஹிந்துப் பெண்களுக்கு அவர்கள் ருதுமதியான பிறகு
செய்யப்படும் கலியாணம் சட்ட சம்மதமாகுமா வென்ற சந்தேகத்தை
நிவர்த்திக்கும் பொருட்டும் அம்மாதிரி கலியாணங்கள் சட்டசம்மதமே
யாகுமெனச் சட்ட பூர்வமாய்ச் சாதிக்கும் பொருட்டும் கொண்டுவரப்பட்
டிருக்கிறது. அம்மசோதாவைக் கொண்டு வருவதற்கேற்பட்ட ஹேதுக்
களும், நோக்கங்களும் பின்வருமாறு எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.

தென்னிந்தியாவிலே நம்பூத்திரிகள் நீங்கலாக பிராமணர்களுக்கும்,
பிராமணர்களல்லாத ஹிந்துக்களில் சில வகுப்பாருள்ளும் பெண்களை அவர்
கள் புத்தி அறிந்தவர்களாவதற்கு முன்னே கலியாணஞ்செய்து கொடுப்
பது வழக்கமாயிருந்து வருகிறது. பெண்களை அவர்கள் புத்தியறிந்த
பிறகு கலியாணஞ்செய்து கொடுக்கக் கூடாதென்று சாஸ்திரங்கள் தடுப்ப
தாக அவர்கள் பொதுவாய் நம்புகிறார்கள். சில ஸ்மிருதிகள் அம்மாதிரிக்
கலியாணங்களை அங்கீகரிக்க வில்லை யென்பதுண்மை. அவைகள் அம்மா
திரி கலியாணஞ் செய்து கொள்ளும் வதூவரர்களையும் அவர்களுடைய
கார்டியன்களையும் இழித்துப் பேசுகின்றன.

ஆனல் அந்த ஸ்மிருதிகள் அம்மாதிரிக் கலியாணங்கள் சட்ட
சம்மதமானவையல்ல வென்றுவது, அல்லது அம்மாதிரிக் கலியாணம்
செய்து கொண்டவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் முறைத் தப்பாய்ப்
பிறந்த குழந்தைகளாகுமென்றுவது சொல்லவில்லை. ஆனல் வேறு சில

ஸ்மிருதிகள் (மனு, கௌதமா, யாஞ்ஞயவல்க... ...தாயனு, வசிஷ்டா) பெண்களுக்கு அவர்கள் புத்தி யறிவதற்கு முன் ... ...ணம் செய்துவிட வேண்டுமென்று சொன்னாலும் கூட, அவர்கள் புத்... ...ந்தவர்களாகி 3 வருஷங்களாவதற்குள் அவர்களுக்குக் கலியாணம் ... ...துவிட வேண்டுமென்றும், அந்தக் காலம் கழிந்த பிறகு ஹிந்துப் பெண்கள் தங்களுக்குச் சமதையான புருஷனைத் தாங்களே தேடிக்கொள்ளலா மென்றும் சொல்லுகின்றன.

நாரத ஸ்மிருதி ஒரு பெண்ணின் பெற்றோர்கள் அவள் புத்தி அறிந்தவளான பிறகு அவளைக் கலியாணஞ் செய்து கொடுப்பதில் காலதாமதஞ் செய்யவே கூடாதென்கிறது. ... ...ருதுமதி விவாகமே சரி யெனக் கருதுவதாய்த் தெரிகிறது. இப்படி யெல்லா மிருக்கிறபடியால் ஹிந்துக்களில் பலர் ருதுமதி விவாகம் சாஸ்திரங்களால் விலக்கப்பட்டிருக்கவில்லை யென்றும், சாஸ்திரங்களின் அனுமதியும், சம்மதமும் அவைகளுக்கிருக்கின்றன வென்றும் பொதுவாய்க் கருதுகிறார்கள். அவர்கள் இத்திருத்தம் செய்யப்பட்டுப் போமானால் பொதுவாய் ஹிந்து ஸ்திரீகளின் நிலைமை மூற்படு மென்றும் நம்புகிறார்கள்.

ஆனால் இவ்விஷயத்தைப்பற்றிய சட்டமோ அத்திருத்தம் செய்யப் படுவதற்கு ஒரு பெரிய தடையாயிருந்துவருகிறது. காலஞ்சென்றுவிட்ட மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யரைப் போன்ற சட்ட நிபுணர்கள் ருதுமதி விவாகம் சட்ட சம்மத மாகுமெனக் கருதுகிறார்கள். காலஞ்சென்ற ஸர் T. முத்துசாமி அய்யரைப் போன்றவர்களோ வேறு விதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையினாலே ஹிந்துக்களில் நடந்த ஒரு கலியாணம், கலியாண காலத்தில் கலியாணப் பெண் ருதுமதியாயிருந்தாள் என்ற காரணம்பற்றி செல்லாததாகுமெனக் கருதப்படமாட்டாதென்று கவர்ன்மெண்ட் சட்ட பூர்வமாக சாதிக்கப் படுதல் விரும்பத்தக்கதாகும்.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா அம்மாதிரி செய்கிறதே யொழிய வேறொன்றும் செய்யவில்லை. இப்போதைய வழக்கத்தைத் தடுப்பதாய் அதற்கெண்ணமில்லை. இஷ்டமுள்ளவர்கள் ருதுமதியான பெண்ணை மணம்புரியலாம். இப்போதைய வழக்கத்தை யனுசரித்து நடப்பவர்களின் சுயேச்சையைக் குறைப்பதாகவும் இம்மசோதாவுக் கெண்ணமில்லை.

---

## சிறுவர்க்கான பக்கம்

### அளவுக்கு மிஞ்சுதல் ஆபத்திற் கிடம்.

சிலர் நவாபைக் காணவேண்டியிருந்தது. அவர்களுடைய முக்கிய மனிதன் மற்றவரை நோக்கி "உங்களுக்கு நவாபிடம் எவ்வாறு நடக்க வேண்டியது என்று தெரியாது. நான் செய்கிறபடியே நீங்களெல்லாம் செய்யுங்கள்" என்று கண்டிப்பாக உத்தரவிட்டான். பிறகு அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தட்டுப்பழங்களையும் சந்தனக்கிண்ண மொன்றையும் ஏந்திக்கொண்டு சென்றார்கள். நவாப் அரண்மனை யடைந்ததும் முக்ய மனிதன் மறுபடியும் மற்றவர்களுக்குத் தான் செய்வதுபோலவே செய்யும்படிக் கட்டளையிட்டான். எல்லாரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். யாவரும் நவாபுக்கு அருகில் வந்ததும் முக்ய



... ...விழும்போது தன்னு
மனிதன் கால் தடுக்கி கீழே விழுந்துவிட்டான். மற்றவர்கள் இவ்வாறுதான்
டைய தாடி சந்தனக் கிண்ணத்தில் பட்டது. மேலும் தம்முடைய எஜ
நவாபைப் பார்க்கும் முறைபோலிருக்கிறது. சொன்னாரல்லவா? என்று
மான் தான் செய்வதுபோலவே செய்யச் நினைத்துக்கொண்டு கை
எண்ணி, "தம்முடைய தாடிகளையும் சந்தனத்தில் முகத்தைப் பார்த்
யிலிருந்த பழங்களை வீசி யெறிந்து எஜமானுடைய மிகக் கோபங்
தார்கள்." நவாப் யாவரும் தன்னை அவமதித்தாரென்று 'என்று
...காண்டார். இதனால் 'அளவுக்கு மிஞ்சுதல் ஆபத்துக்கிடம்'
விள...கிறது.

---

## ...தூஷகனுடைய சமர்த்து.

மாளவதேசத்து ...அரண்மனையில் வினோதப்பிரியன் என்ற விதூஷ
கன் ஒருவனிருந்தான். அவ... அரசனையடைந்து எனக்கு இராணுவத்
தில் ஒரு உத்தியோகம்வேண்டும் ... ...மன்றாடினான். அரசன்
அவ்வாறே அவனை இராணுவத்தில் ஒரு வீரனாக வமர்த்தி நான் கூப்பி
டுகின்ற சமயத்தில் வராவிட்டாலும் உன்னுடைய உடைவாளை யிழந்து
விட்டாலும் உன்னைத் தூக்கிடுவேன் என்று சொல்லியனுப்பினான். வினோ
தப்பிரியன் இராணுவவீரனாகியதைப்பற்றி அரண்மனையில் ஒரு சம்பிரம
விருந்து நடந்தது. வினோதப்பிரியன் தனக்குக்கிடைத்தப் பதவியை நினை
த்து, நினைத்து தன்னைத்தான் அறியாதவனாய் மிதமிஞ்சிச்சாப்பிட்டு அய
ர்ந்து தூங்கிவிட்டான். அரசனுடைய உத்தரவுபடி சிலவேலைக்காரர்கள்
வினோதப்பிரியனுடைய உடைவாளை எடுத்து ஒளித்துவிட்டு அரசன் அவ
னைக்கூப்பிடும்படி கட்டளையிட்டதாக தெரிவித்தார்கள். வினோதப்பிரி
யன் எழுந்து திடுக்கிட்டு ஒன்றுஞ்செய்ய அறியாதவனாய் தன்னுடைய
தொழிலுக்குடைய மரத்தால் செய்த உடைவாளை அணிந்து அரசன் முன்
னடைந்தான்.

அவன் வந்து சேர்ந்ததும் அரசன் தன்னெதிரில் நின்றிருந்த வேலைக்
காரனை வைத்து விதூஷகனாகியவீரனை நோக்கி "ஏ! வினோதப்பிரியா!
உன்னுடைய கூர்மையான வாளினால் இப்பாதகனை என் கண்முன்பாக
வெட்டுவாய்" என்று கட்டளையிட்டான். விதூஷகன் கொஞ்சமேனும்
தைரியத்தை விடாதவனாய் வாளை யெடுப்பவன்போலவே பாசாங்கு செ
ய்து "சுவாமி! இந்தவேலைக்காரன் மீது அதிக தப்பில்லையாயின் என்
னுடைய வாள் மரமாக மாறட்டும்" என்று கூறி வாளையிழுத்தான். மா
வாளைக் கண்டவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு நகைத்தார்கள். பின்பு
விதூஷகன அரசனைநோக்கி "அரசே! எனக்கு இராணுவ உத்தியோகம்
வேண்டாம். ஆனால் உடைவாள் வேண்டும். நான்பழையபடியே விதூஷகனா
கவேயிருக்கிறேன்" என்று வேண்டிக்கொண்டான். அவன் இஷ்டப்படியே
அரசன் அவனை இராணுவத்தினின்றும் விடுதலை செய்துவிட்டான்.

டி. எம். மார்க்கசகாயம்.

---

## ஹஸ்யத் துணுக்கு.

## FUN & LAUGHTER

"அடே இத்தனை பேரிலே ஒருத்தன் மட்டி" என்று ஒரு பையன் தன்
னுடன் விளையாடிக்கொண்டிருந்த 10 பையன்களுடன் சொல்ல,

ஒருவன், அவன் காதண்டை சென்று "ஏய்! மெதுவாப் என்கிட்ட சொல்லு. நான் ஒருவர் கிட்டேயும்சொல்லல்லே"
பையன்:—"நீதாண்டா!"

வாத்:—உன்னையார் சிருஷ்டித்தார்?
ஜான்:—எங்கம்மா!
ராமு:—இல்லே சார்! கடவுள்.
வாத்:—ஜான்! அந்த சிறுவனுக்குத் தெரிந்தது கூட உனக்குத்தெரி, வில்லேயே!
ஜான்:—ஐயா! அவன் இப்பதான் பிறந்தான். ஆறுவருஷந்தான் ஆனது. நான்பிறந்து பதினறுவருஷமாறதே! அக... மறந்துபோச...

வாத்தியார்:—"ஏய்! ஒருகுதிரையை ஆறு அடிநீளமுள்ள கயிற்றால் கட்டியிருந்தது. அது பத்தடிக் கப்பாலிருந்த புல்லை எவ்வாறு தின்னும்?"
பையன்:—தின்னமுடியாது சார்!
இன்னொருவன்:—சார்! கயிறுதான் ஒருமுனையிலே கட்டப்படல்லேயே! அதனால் கயிறையும் இழுத்துக்கொண்டு போய்ப் புல்லைத்தின்னும்.

ஒரு தாயார் தன் ஐந்து வயதுக் குழந்தையைப் பார்த்து "நான் என்னிக்காவது கையையும் மூஞ்சியையும் அந்தமாதிரி அழுக்குப் பண்ணிக்கிண்டிருக்கிறதைப்பார்த்திருக்கையா?" என, குழந்தை "அம்மா! நீ எம்மாதிரி அஞ்சு வயசுக் குழந்தையாயிருந்ததைப் பார்த்திருந்தானுநீ சமத்தாயிருந்ததைப் பார்க்க!"

வி. என். ராஜ்.

## விசேஷக் குறிப்புகள்
## NEWS & NOTES

மிஸ்டர் பிரோஸேசா மாணிக்ஜி காகா என்ற தனவான் தாம் இறந்து போகுமுன் 6 லக்ஷம் ரூபாயை ஏழை பார்ஸிகுழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்காக உயில் எழுதிவைத்தாராம்.

எம்டன் என்றஜர்மன்க்ரூஸரை சிட்னி என்றகுரூஸர் பிடித்துவிட்டது யாவருக்கும் அதிக சந்தோஷத்தை யுண்டாக்கியது. ஜர்மனியர்கள் தோல்வியடைந்தே வருகிறார்கள். ஆஸ்ட்ரியர்களும் தோல் வியடைந்து வருகிறார்கள். நமது இராஜசக்ரவர்த்தி போர் முகத்திற்குச் சென்று இந்திய துருப்புக்களையும் இங்லீஷ் துருப்புக்களையும் பார்வையிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிச்சென்றார். நமது சக்ரவர்த்தி இந்திய துருப்புகளிடத்தில் வைத்திருக்கும் பெருமையும் அபிமானமும் அதிக மெண்கலாம்.

"சென்னை ஆஸ்பிட்டல் ஷிப்" சென்னையை விட்டு போர்முகத்திற்குச் சென்றிருக்கிறது. இதில் மெடிகல் காலேஜியில் படிக்கும் மாணவர்களில் சிலரும், டாக்டர்களும் சென்றிருக்கிறார்கள். மாதர் மனோரஞ்சினியின் பத்திராதிபருடைய மாமாவின் குமாரரும் சென்றிருக்கிறதைக்கேட்க யாவரும் சந்தோஷப் படுவார்கள். இவர்கள் மெடிகல் காலேஜியில் எம். பி.ஸி. எம். பரிக்ஷைக்குப் படிக்கும் மாணவர்கள். இவர்களுடன் கனம் டாக்டர் டி. எம். நாயர் அவர்களும் சென்றிருக்கிறார்கள். இவர்களுக்கு சமையல்செய்ய இரண்டு பிராமண பரிசாரகர்களுஞ்சென்றிருக்கிறார்கள். யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் இவர்கள் க்ஷேமமாய் தங்கள் ஜன்மதேசத்திற்குத் திரும்பி வரும்படி கடவுள்கிருபைசெய்வாராக.




# சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.




நல்ல தேகக்கட்டுள்ள ஒரு மனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீன முள்ளவர்களைப் பிடிக்கிறது. அவ்வித முள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவது கஷ்டம்.

## SCOTT'S Emulsion.

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத் தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும் சதைகளைப் புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்டபின் இதன் அனுபவம் தெரியும்.

கையினல் தொடாமலே செய்யப்படுகிறது

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஸ்காட் அண்டு பௌன்' கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன், இங்கிலாந்து.

திருவாங்கூரிலுள்ள கோட்டார் ஹைஸ்கூல் எட்மாஸ்டர் மிஸ்டர் பத்மநாப ஐய்யர் பி. ஏ. விவாகமான பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்ற விஷயத்தைப் பற்றி கோட்டாரில் ஒரு சிறந்த உபந்நியாசம் செய்ததைக் கேட்க மிகவும் சந்தோஷமடைகிறோம். இதை தடுக்க கவர்ன்மெண்டார் முயல்வது நலமென்கிறார். இப்படி விவாகமானவர்களை திடீரென்று பாடசாலைகளிலிருந்து நீக்குவது சரியல்லவென்றும் ஆனால் முதல் வருஷத்தில் ஒருவகுப்பிலுள்ள விவாகமான பிள்ளைகளையும் மற்றொரு வருஷத்தில் இன்னொரு வகுப்பிலுள்ளவர்களையும் நீக்குவது உசிதமென்று திருவாங்கூர் டைம்ஸ் பத்திரிகை எழுதுகிறது.

பெல்ஜியத்திலுள்ள ஜனங்களுக்கு உதவிசெய்ய பம்பாய் ரூ. 37,500 அளித்திருப்பதைக் கேட்க சந்தோஷப் படுகிறோம்.

புதுக்கோட்டை ராஜா அவர்களது அப்தபூர்த்தி நடந்த காலையில் இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கு தமது பிரஜைகள் எவ்விதமாய் உதவி புரியலாமென்பதை விவரித்துச் சொன்னார். தமது நாட்டிலுள்ள ஜனங்களை வரவழைத்து இவ்விதம் யுத்தவிஷயமாக சிறப்பாகச் சொன்னது விசேஷிக்கத்தக்கது.

மைசூரிலுள்ள சீப் கோர்ட்டுக்கு மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹம்ஸ உசேன் என்ற மகமதிய கனவானை நியமித்திருப்பது யாவருக்கும் மகிழ்ச்சியையுண்டாக்கியிருக்கிறது.

எச். எச். ரஞ்சிட் சிங் பிரான்சிலுள்ள சேனையுடன் சேர்ந்து யுத்தம் புரிய சென்றிருக்கிறார் இவர் நவநகருக்கு ராஜா. இவர் மிகவும் தைரியமும் விவேகமும் உள்ளவர்.

இண்டர் மீடியட் பரிக்ஷைக்கு இனி பி. ஏ. பரிக்ஷைக்கு ஒரு பாகத்தைமாத்திரம் எடுத்துக்கொண்டு ஒவ்வொருதடவையிலும் போகலாமென்றிருப்பதுபோல் செனடில் ஓர் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி செய்தது பிள்ளைகளின் மேலிருந்த பாரம் குறைந்ததென்போம்.

சாதாரணமாக இங்கிலீஷ்மாதர்கள் பற்பல விஷயங்களைக்குறித்து பிரசங்கம்செய்வதைக் கேட்டிருக்கிறோம். சமீபத்தில் பிரசிடென்ஸி காலேஜியில் மாரியம்மாள் என்ற இந்தியபெண்மணி ஒரு உபந்நியாஸம்செய்தார்கள். அச்சமயத்தில் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐய்யரவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். இப்பெண்மணி இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் இந்திய துருப்புகள் செய்து வரும் வீரச்செய்கைகளைப்பற்றி சொல்லி நம்மாலியன்ற உதவியை க்ரேட்ப்ரிடனுக்குச் செய்யவேண்டுமென்பதே தமது கோரிக்கையென்றும் சொல்லி முடித்தார்கள். சபாநாயகர் இந்தம்மாள் சொன்னவற்றையெல்லாம் அங்கீகரித்தும் அவைகளைப் புகழ்ந்தும் பேசினார்கள்.

---

## குடும்ப சம்ரக்ஷணை.

அமெரிக்காவில் உள்ள பிலடேல்பியாவில் பாடசாலைகளில் படிக்கும் பெண்களுக்கு குடும்பசம்ரக்ஷணையும் முக்யமாக குழந்தைகளைக் காப்பாற்றும் முறையும் செவ்வனே போதிக்கப்பட்டு வருகின்றனவாம். இவ்விதப் படிப்பை 11,000 பெண்கள் கற்று வருகிறார்களாம். சிறு குழந்தைகளை பெண்கள் சம்ரக்ஷித்தும் பாதுகாத்தும் வரவேண்டுமாம். இவ்விதம் செய்துவருவதால் குழந்தைகளின் மரணம் அதிகப் படாமலிருக்குமென எண்ணப்படுகிறது.







# எந்த காரணம் கொண்டு

பழயகால சௌகரிய ஒழுங்கு இல்லாத வழிகளுடன் உள்ளதற்கு பதில் நவீனமான பால் வெப்ளை உபயோகிப்பதை யோசிக்கவேண்டும் என்றால், நவீனமான பால் வெப்ளை:—

வியாதி கிருமிகள் சற்றும் இல்லாத மிகச் சிரேஷ்டமான பசும்பால் மேலும் வீட்டில் தற்சமயம் உபயோகிக்கவேண்டியதற்கு எப்பொழுதும் தயாராய் இருக்கிறது. முற்றும் ஊட்டம் தருவதும் ஒவ்வொரு துளியும் பலம் கொடுப்பதும், ஆனபால்.

உருசியில் தித்திப்பானதும், எல்லா காரியங்களுக்கும் தகுதியானதும் ஆனபால்.

## பழயகால வழிகளுக்கு விரோதமானது அது.

அசுத்தமான நிலைமையில் வைத்து கேவலமான மேய்ச்சல் கொண்டு வளர்க்கப்பட்ட பசுமாட்டின் பாலும், மிகக் குறைவான பலம்தான் இளப்பமான நீர் மயமான பாலும், அதிக இலாபம் உண்டாக்கவேண்டிய ஏராளமாய் ஜலம் சேர்க்கப்பட்ட பால் என்றும் அருந்தமாகும்.

**மில்க்மெயிட்குறி கட்டிப்பால்** ஒரு தடவை உபயோகித்துப் பார்க்க ஒரு பொழுதும் கைவிடக் கூடாததான நவீனமான பால் தருகிறது.

**மில்க்மெயிட்குறி கட்டிப்பால்** உங்கள் தேகத்தை நன்மைப் படுத்தி லாபயடையச்செய்யும். அது மிகச் சிரேஷ்டமானதும் அதி பரிசுத்தமானதும் ஆன முழுபால். நீங்கள் அதை பரீக்ஷிக்கவிரும்பினால் எங்களுக்கு இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்ப, உங்களுக்கு ஒருமாதிரி டப்பி, கொடுத்தனுப்புவோம்.

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், அதுதான் மிகவும் உத்தமமானது.

நெஸ்ட்லே அண்ட் ஆங்கிலோ-சுவிஸ் கண்டென்ஸ்ட்
மில்க் கம்பெனி.
தபால் பெட்டி. 180. மதராஸ்.

# புஷ்ப-குந்த
## கூந்தல் தைலம்.

பெண்களின் அன்பு நிறைந்தது.

இக்கூந்தல் தைலமானது வாசனையில் சிறந்ததும், தலைமயிர்களின் வேருக்கு கெட்டியைக்கொடுத்து யாதொரு தடையுமின்றி தலை மயிர்களை வளரச்செய்வதும், நரைத்திருக்கும் மயிர்களை வெகு சொல்ப உபயோகத்தினால் கறுத்து முன் நிலைமைக்கு கொண்டு வரக்கூடியதும், மூளைக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ஆனந்தத்தை கொடுக்கக்கூடியது மாகிய இத்தைலத்தை அநேகர்களால் உபயோகித்து நற்சாக்ஷிபத்திரங்களடைந்திருக்கின்றது. ஒரு தடவை உபயோகித்தால் தெரியவரும்.

சாம்பில் வேண்டுவோர் நமது ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையாகிய பெட்டியில் முகம் பார்க்கும் கண்ணாடியும், சீமை தந்த சீப்பும் சேர்த்து பாக்செய்திருக்கின்றது. விலை ரூபாய் 1. தபால் செலவு அணா 4 பிரத்தியேகம்.

நமது சென்னை ஏஜண்டு:—

ராமானுஜ தாஸ், நாராயன் தாஸ், அண்டு கோ.,
149, சைனாபஜார் ரோட்டு, சென்னை.

---

## The Complete Letter Writer.

Sole Manufacturer. V. K. RANADE. Perfumer & Chemist Bombay, No. 4.

*(4th Edition Revised and Enlarged.) by*
HARI CHARAN DAS.
Price Re. 1. (*full cloth gilt 320 pages*).

An universal Guide to the Art of letter Writing for all positions of life.

It contains 24 Chapters —Private Correspondence. News Papers. Doctors. School Correspondence Government and Commercial, Collectors Office. Attorneys Vakils and Mukteers, Steamers Police. Municipality, Incometax, Railways, Tramways Medical Department, Postal Department. Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping. Miscellaneous forms Miscellaneous Application forms. Forms address Paper Currency. Abbreviations and Daily wages.

**Matriculation Essay**—by Hari Charan Das. Very useful book for school Boys. Price As. 8.

**ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.**

A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only.

**Child's Easy Conversation.** 2nd. ED. Price As. 10 only.

If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two or three months.

M. L. DAS & CO. BOOK SELLERS & PUBLISHERS.


OFFICE OF THE ... 22 MAR 1915 ... MADRAS.


# The Tamil Zenana & School Magazine.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுதும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

VolXVI] | Madras December, 1914. | No. 12
புத்தகம் 16. | சென்னை: டிசம்பர்மீ 1914ளு. | இலக்கம். 12


## ருதுமதிவிவாக மசோதா.

சென்னை சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் ருதுமதிவிவாகம் சாஸ்திர சம்மதமே யென்றும் அவைகளை செய்துமுடிப்பதற்கு சட்டம் இடந்தருமென்றும், ஆனாலும் அதினால் ஏற்படும் சந்தேகத்தை நீக்க ஓர் சட்டம் அவசியமென்று இம்மசோதா கொண்டுவந்திருக்கிறார். தென்னிந்தியாவில் நம்பூத்ரிமார்களைத்தவிர மற்ற பிராமணர்களும், வைசியவர் போன்ற மற்ற ஹிந்துக்களும் ருதுவாவதற்கு முன்பே பெண்களின் விவாகத்தை முடிக்கும் வழக்கத்தை பின்பற்றி வருகிறார்கள். பெரும்பாலாருடைய உட்கருத்து ருதுமதிவிவாகம் சாஸ்திரசம்மதம் பெற்றதல்லவென்பதே எனத்தோன்றுகிறது. பராசர, எம, சம்வர்த்த ஸ்மிருதிகள் ருதுமதிவிவாகத்தை கண்டிக்கின்றன. பெற்றோரையும், வதூவரர்களையும் பாவத்திற்கும், தெய்வத்தின் கோபத்திற்கும் ஆளாக்குகின்றன. என்றாலும் செய்தவிவாகங்கள் ரத்தாய் விடுமென்றாவது, சட்டவிரோதமென்றாவது துணிபுகொண்டு எழுதவில்லை. மநு, போதாயனர், வசிஷ்டர் பெண்களுக்கு ருதுவாவதற்குமுன் விவாகம் முடிப்பது சிலாக்கியமென்று வற்புறுத்தினாலும், ருதுவானபின் மூன்று வருஷத்திற்குள் பெண்களை விவாகம் முடிக்கலாமென இடந்தருகின்றனர். நாரத ஸ்மிருதியோ ருதுவானபின் விவாகத்தை நீடித்த நாள் தாமதிக்கக்கூடாதென்றே கூறுகிறது. கிருஹ சூத்ரங்கள் ருதுமதிவிவாகத்தை தாங்கிப்பேசுவதாக தெரிகிறது. ஏனெனில் விவாகமான நாலாவது நாள் (சேஷ ஓம தினம்) உச்சரிக்கப்படும் மந்திரங்கள் நிஷேகமுகூர்த்த மந்திரங்களே யொழிய வேறல்ல.

ஆகையால் ருதுமதி விவாகங்கள் ஆதிகாலத்திய வழக்கமென ஏ
படுகிறது. சாஸ்திரசம்மதமும் பெற்றிருக்கின்றன. இம்மாதிரி விவாகங்
கள் நடைபெறுமானால் பெண்கல்வி விசேஷமாய் விருத்தியடையும், இள
ங்கைம் பெண்களின் தொகை குறையும், பெண்கள் சம்மதத்திற்கிணங்
கிய நாயகர்கள் கிடைப்பார்கள். சுதந்தரங்கள் அதிகயாவதோடு தேச
திடனும் பெறுவார்கள்.

ஆனால் சட்டம் சம்மந்தப்பட்டவரையில் சில கஷ்டங்களிருக்கின்றன.
காலஞ்சென்ற ஜட்ஜ் கிருஷ்ணசாமி அய்யர் 1906-ம் வருஷத்தில் ருதுமதி
விவாகம் சட்டவிரோதமன்றென்று ஒரு கோர்ட்டாரும் தீர்மானம்செய்ய
மாட்டார்களென்று சொன்னார். சர். டி. முத்துசாமி அய்யர் "வெங்கட
சார்லு ரங்காசார்லு என்றகேசில் தகப்பனார் சம்மதமின்றி தாயார் சம்
மதியின் பேரில் நடந்தவிவாகம் நியாயமாவென்று யோசிக்கையில் பின்வரு
மாறு எழுதுகிறார். ஹிந்து சட்டம், வழக்கத்தின் பிரகாரம் பெண் ருது
வாவதற்குமுன் விவாகம் செய்யப்படவேண்டும். கலியாண சடங்குகள்
மைனர் அல்லது குழந்தைக்குத் தான் ஏற்பட்டிருக்கின்றன. அக்காலத்
தில் பெற்றோர்வரனைத்தேடவேண்டுமே யொழியதானே தேடிக்கொள்ள
முடியாது."

ஸர் சங்கரன் நாயர் ஓர் துண்டுப்பத்திரிகையில் இந்த சந்தேகத்தை
நிவர்த்திசெய்ய ஓர் சட்டம் வேண்டுமென்று தெரிவிக்கிறார். மற்ற ஹிந்து
ஹைகோர்டு ஜட்ஜ்களும் தம் சொந்த அபிப்பிராயத்தை இவ்வாறே தெரி
வித்திருக்கின்றனர். ஆகையால் ஓர் நியாயமான சந்தேகம் இருக்கிற
தென்று ஏற்படுகிறது. இந்த மசோதாவால் சந்தேகத்தை தீர்த்து ருது
மதி விவாகம் செய்யவிரும்புவோர் அச்சமின்றி செய்யலாமென்பதே
இதன் நோக்கம். இதனால் எவரையாவது ருதுமதி விவாகம் செய்யவேண்டு
மென்று பல வந்தப்படுத்துவது இதன் நோக்கமல்ல. இம்மாதிரி நோக்கங்
களையும் காரணங்களையும் கொண்டு மிஸ்டர் சாஸ்திரியார்மசோதாகொண்டு
வந்திருக்கிறார்.

இதை ஆக்ஷேபிப்பவர்கள் இருசாரார். சிலர் ருதுமதி விவாகம்கூடா
தென்ற கக்ஷியை சேர்ந்தவர்கள். இதில் பண்டிதரையும், பாமர ஜனங்களை
யும் சேர்க்கலாம். இவர்கள் சாஸ்திர ஆதாரத்தையும் நீடித்தவழக்கத்தை
யும் அஸ்திவாரமாகக்கொள்ளுகிறார்கள். ஆங்கிலப்படிப்பு பெற்ற சிலரும்
வேறு பல காரணங்களைக்கொண்டு ஆக்ஷேபிக்கின்றார்கள். ருதுமதி
விவாகம் ஏற்பட்டால் ஐரோப்பியதேசங்களைப்போல கலியாணம் ஆகாமல்
பலர் நின்று விடுவார்களென்கிறார்கள். ஒழுக்கந்தவறுவார்களென்றும்
வாதிக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் மற்றமஹாணங்களிலும், இங்கே மற்ற
ஜாதியாரிடத்திலும் இவ்வழக்கம் பெரும்பான்மையாய் இருப்பதினால் இம்



மாதிரி கேடுகள் சம்பவித்திருப்பதாக நாம் சொல்லமுடியாது. அவர்களுக்கு
நல்லதாயிருப்பது நமக்கும் நன்மையைத்தரும். ஆனால் பெற்றோர் மேல்
பெண்களை நன்னெறியில் பாதுகாக்கும் பாரம் அதிகமாய் ஏற்படும், அதை
அவர்கள் பெண்களுக்கு கல்வியினால் ஏற்படும் சக்தியாலேயும், தம்முடைய
மேல் பார்வையாலும் சரிவரநடத்துவார்களென்று நம்பலாம். மேலும்
கற்பிற்கு காவல் மருந்தென்பது மௌடிகம். இன்னொரு ஆக்ஷேபமென்
ன வென்றால் ஹிந்துமதமும், குடும்பமும் கெட்டுவிடுமென்றும் பெண்கள்
தாம் இச்சித்தவர்களை மணம் செய்துகொள்வார்களென்றும் வருணாசிர
மதருமத்தை கை நழுவ விடுவார்களென்றும் வாதிக்கிறார்கள். பிராமண
ரல்லாத மற்ற ஜாதிகளில் வருணாசிரம சீர்குலைவு இதனால் ஏற்படவில்லை.
மற்றபடி பெண்களுக்கு மனதுக்கிசைந்த நாயகனும், அறிவு விருத்தியும்,
அதற்கேற்ற சுதந்தரமும் ஏற்பட்டால், நன்மைதானென்று எந்த தேசாபி
மானி இந்த 20-ம் நூற்றாண்டில் சொல்ல முன்வருவான்? மேலும் தற்
காலம் பெண்களுக்கு சுதந்தரமில்லையா? ஓர் விவாகத்தை வீட்டில் அவர்க
ளுடைய சம்மதமின்றி நடத்த இயலுமா? இப்பொழுதும் அவர்கள் ஆண்
கையின் கீழ் தான் இருக்கிறோம். அவ்வாணை படித்த விவேகமுள்ள
ஆணுகையோடு பரஸ்பர உணர்ச்சியும் நேசமும் கொண்டதாயிருந்தால் நல
மல்லவா வென்பதே எம்முடைய கேள்வி.

சிலர் சொல்லுகிறார்கள். "தேகதிடனை உத்தேசித்து இம்மாதிரி
விவாகங்கள் சிலாக்கியமென்றால், தற்கால விவாகங்களிலேயே நிஷேத
முகூர்த்தத்தை மூன்று நாலுவருஷம் தள்ளிவைக்கலாமே." இது
முடியாதகாரியம். பெண்ணின் புருஷனும், மாமியாரும் மருமகளை தம்
வீட்டிற்கு சீக்கிரம் வந்து தம் பாதுகாப்பின் கீழிருக்கவேண்டுமென்
றும், வீட்டின் வேலைகளை செய்யவேண்டுமென்றும், குடும்பத்தில் பழக
வேண்டுமென்றும் மேற்படிப்பு கூடாதென்றும் பெற்றோரின் சம்ரக்ஷணை
திருப்திகரமில்லை யென்றும் சாக்கு போக்கு சொல்லி நிஷேத முகூர்த்
தத்தை துரிதப்படுத்துவதை நாம் அநுபவத்தில் கண்டிருக்கிறோம்.
மேலும் கலியாணமான பெண் மனது சீக்கிரம் பரிபக்குவமடைகிறது.
இக்காலத்தில் வதூவரர்களை நீடித்தவருஷங்கள் பிரித்து வைப்பது சாத்திய
மல்ல. ஆகையால் பெண்ணின் படிப்பிற்கும், தேகதிடத்திற்கும் சரியான
புருஷன் கிடைப்பதற்கும், ஆண்பெண்வயது விசேஷதார தம்மிய மில்லா
மலிருப்பதற்கும், பெண்கள் தமக்கு அவசியமான சுதந்தரங்கள் பெறு
வதற்கும் ருதுமதிவிவாகம் சிலாக்கியமானது. தமது பெண்கள்—ஆங்கில
ஸ்திரீ சுதந்தரவாதிகள் போல—ராஜமேடை ஏறுவார்களென்று நினை
க்க இடமில்லை. ஹிந்து ஸ்திரீகளிடத்தில் சுபாவத்தில் அச்சம், பயிர்ப்பு,
நாணம், ஆகிய குணங்கள் குடி கொண்டிருக்கின்றன. தம்முடைய சாமா

த்தியத்தை காட்டும் இடம் எதென்பதை ஸ்திரீகள் உணர்வார்கள். சீதை
தமயந்தி, சாவித்ரி, கார்கி, போன்ற உதாரணங்களை பின்பற்றுவார்களென்
பது திண்ணம்.

ஆனால் வேறு சிலர் ருதுமதி விவாகம் சிறந்ததென்றாலும் இந்த
சட்டம் அவசியந்தானாவென்று வாதிக்கிறார்கள். ஸ்மிருதிகளில் ருதுமதி
விவாகத்திற்கு ஆதாரங்கள் ஏற்கனவே இருக்கின்றன. அப்படி இம்மாதிரி
விவாகங்களை கண்டிக்கும் ஸ்மிருதிகளும் பெற்றோரின் கடமையைப் பற்
றிக் கூறி மத சம்பந்தமான தண்டனைகளை (பாவமும் சிசுவதை செய்த
தோஷமும் ஆகும்) விதித்தனவே யொழிய விவாகம் ரத்தென்று சொல்ல
வில்லை. ஆகையால் சட்ட விஷயத்தில் சந்தேகமில்லை யென்றும், முடிந்த
விவாகத்தை பலாத்காரம் அல்லது பித்தலாட்டம் இல்லாமலிருந்தால்
(Factum Valid) உறுதி செய்வார்களென்றும் சொல்கிறார்கள். இந்தக்
கொள்கை என்னவென்றால் நமது சாஸ்திரங்களில் சில விஷயங்களை
செய்யத் தான் வேண்டுமென்று விதி ஏற்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்
களை செய்தால் சிலாக்கியம் என்று மட்டுமே சொல்லுகின்றன. பிற்கூறிய
விஷயங்களில் Factum valid கொள்கை அநுசரிக்கப் படலாம். இந்த
வாதத்தில் விசேஷ உண்மையிருக்கிறது. சர். டி. முத்துசாமி அய்யர்
நாம் எடுத்துக் காட்டின கேசில் வேறு விஷயத்தில் இந்தக் கொள்கையை
அநுசரித்திருக்கிறார். ருதுமதி விவாக கேஸ்வந்தால் இம்மாதிரி
கொள்கை மறுபடி அநுசரிக்க மாட்டார்களா வென்பதே இவர்கள் கக்ஷி.
ஆனால் ஹிந்து சட்டத்தைவிட ஹிந்து வழக்கம் பிரதானமானது. நீடித்த
காலமாய் நம்மில் ருதுவாவதற்கு முன் விவாகம் நடந்தேறுவதால், கோர்ட்
டார் இவ்வழக்கத்தை பின்பற்றுவார்களே யொழிய, ஹிந்து சட்டத்தை
(இருகக்ஷியும் வாதிக்க இடந்தரும் போது) பின்பற்ற மாட்டார்கள்.

நம்மில் விவாகங்கள் மதம் ஆசாரம் இவைகளைப் பற்றினதாகவே
இருக்கின்றன. அதன் ஒழுக்கத்தைத் தவறி நடந்தால் மததண்
டனையும், ஜாதி பிரஷ்டமு முண்டே யொழிய சட்ட விரோதமில்லை
யென்றே பலர் நினைக்கிறார்கள். காலா காலத்தில் தானே சரிபட்
டுப் போய்விடும். ருதுமதி விவாகத்திற்கு சட்டம் வேண்டுமென்றால்
நாளை பிராமணர்களில் உட்பிரிவுகளில் விவாகம் முடிக்க சட்டம் வே
ண்டுமென்று சொல்ல வேண்டி வரும். உதாரணமாக ஸ்மார்த்த பிரா
மணர்களில் வடமாள் பிரஹசரணம் அஷ்ட சஹஸ்திரம் போன்ற பிரி
வுகளில் அங்கங்கே விவாகம் தற்போது நடந்து வருகின்றன. ஆனால்
நெடுநாள் இந்த வழக்கமில்லை. ஆகையால் சட்ட விரோதம்., புதுசட்டம்
வேண்டுமென்று நாளை ஒரு மசோதாகிளம்பும். இப்படி ஒவ்வொன்றிற்கும்
மசோதா வந்தால் இதற்கு முடிவென்ன? இவைகளை மதத்திற்கும் ஆசா



ரத்திற்குமே ஏன் விடக்கூடாது என்று இப்படி பலவாறு வாதிக்கின்
றனர்.

நமது சாஸ்திரங்களில் மதம், ஆசாரம், சட்டம் இவைகள் தனித்தனி
யே பாகுபாடு அடைந்து சரியான பிரிவு கிடையாது. நம்மில் ராஜாங்கம்
முதல், சுகாதாரம் வரையில் எதுவும் மதத்தையே பின்பற்றினதாயிருக்
கின்றன. நம்மில் மத சம்பந்த மில்லாமல் ஒருகாரியமும், ஒழுக்கமும், சட்
டமும், கிடையாது. ஆகையால் தற்காலத்திய அபிப்பிராயங்களையும், மேற்
றிசை எண்ணங்களையும் நமது சாஸ்திரங்களில் உட்புகுத்தி பாகுபாடு
உண்டாக்கி மத தண்டனைவேறு ராஜாங்க தண்டனைவேறு என்று கூறு
வது அசம்பாவிதமாகும்.

பிரிட்டிஷ், ராஜாங்கத்தார் நமது மதவிஷயங்களில் பிரவேசிக்கக்
கூடாது. ஆகையால் சட்டசபைகள் இம்மாதிரி சட்டங்கள் செய்யக்
கூடாது என்று வாதிக்கிறார்கள். கலியாண விஷயங்களிலும், குடித்தல்,
ஆசாரம் போன்ற விஷயங்களில் பரோடா, மைசூர் போன்ற ஸமஸ்தானங்
கள் சட்டங்கள் செய்திருக்கின்றன. மேலும் கட்டாய சட்டம் ஒன்று
மில்லை. விரும்புவோர் அநுசரிக்கலாம். இம்மாதிரி விஷயங்களில் விவே
கம், நியாயம், இவைகளுக்கு ஒத்ததாயிருக்கிறதாவென்று கவர்மெண்
டார் பார்க்கவேண்டுமே யொழிய கையைக் கட்டிக்கொண்டு சும்மா யிரு
க்கமுடியாது. நம்முடைய பிரதிநிதி மசோதாகொண்டுவருகிறார். நம
முடைய பிரதி நிதிகளே ஆமோதிக்கிறார்கள். கவர்மெண்டார் நடுநிலை
யில் இருக்கிறார்கள். லார்டு மார்லியின் சீர்திருத்தத்திற்குப்பிறகு நமது
சட்டசபைகள் இம்மாதிரி பொது விஷங்களை ஆலோசிக்க தகுந்த சபை
யல்ல வென்று வாதிப்பது பொருந்தாது. பிராமணர்கள் சிறுவகுப்பு
தானே அவர்களுக்காக எதற்கு தனிசட்டம் ஓர் பெரிய சட்டசபையில்
ஏற்படுத்த வேண்டுமென்று சிலர் வாதிக்கிறார்கள். நல்ல தொழில்களிலும்
கவர்மெண்டு உத்தியோகத்திலும், காலேஜ்களிலும், சர்வகலாசாலைகளிலும்
இவர்களே பிரதான மாயிருப்பதால் இவர்களை சிறுவகுப்பாரென்று தள்ள
முடியாது. மேலும் இவர்கள் விவேகிகளென்று மற்ற ஜாதியாரும் இவர்
களை பின் பற்றுகிறார்கள். ஆகையால் இவர்களுக்காக சட்டம் செய்வது
பொருந்தும்.

ருதுமதி விவாகம் சிறந்ததென்று எடுத்துக் காட்டினோம். அதனால்
விசேஷநன்மைகளிருப்பதை விவரித்தோம். அதின் ஆக்ஷேபங்களை விவ
கரித்து அவை யுக்திக்கும், அநுபோகத்திற்கும் யுரியானவையல்ல வெ
ன்று முடித்தோம். இது சாஸ்திர சம்மதமுள்ளதென்றும் ஆனால் சட்ட
விஷயத்தில் ஜட்ஜிகளின் அபிப்பிராயபேதத்தால், நியாயமான சந்தேக
மிருக்கிறதென்றும் ஆகையால் சட்டம்அனுவசியமென்றும் வாதித்தோம்,

மேலும் எதிர்ஜாமீனாகிய வாதகக்ஷணை போன்ற கொடிய வழக்கங்கள் ஒழி
யுமென்றும் உறுதியாய் நம்பலாம். விவாகங்கள் பணத்தைப் பற்றினதா
யிராமல் நேசத்தைப்பற்றின தாயிருக்கும். விவாகம் செய்து கொடுப்ப
வருக்கும் சுகமுண்டு. வாங்கிக் கொள்வாருக்கும் நன்மை யுண்டு. தேச
த்திற்கும் க்ஷேமமுண்டு. படிப்பு விருத்தியடையும். நல்ல திடகாத்திர
மும், அறிவுமுள்ள குழந்தைகள் உண்டாகும். நன்றாய் வளர்த்தப் படு
வார்கள். சீதா, தமயந்தி, சாவித்திரி இம்மாது சிரோன்மணிகளின் வழி
யைப்பின்பற்றி இந்தியாவிற்கு கீர்த்தியையும், சுகிர்தத்தையும் உண்டா
க்கி உன்னத பத பதவியை அடையச் செய்வார்களென்பது எமது துணிபு.
திருச்செங்கோடு.
K. V. சுப்பிரமணிய அய்யர். B. A.

---

## உஷ்ணம் வஸ்துக்களில் பரவும் விதம்.

### சாஸ்திரப் பாடம்.

போன பாடத்தில் உபயோகப்படுத்திய கம்பி ஒன்றை எடுத்துக்கொ
ள்ளுங்கள். A என்ற நுனியை கையில் பிடித்துக்கொண்டு, B என்ற
நுனியைவிளக்கொளியில்காய்ச்சினால் சீக்கிரம்A சுட்டுப்போவதால்கையில்
பிடித்துக் கொள்ளமுடிவதில்லை. ஆகையால் உஷ்ணம் Bஎன்னும் இடத்
திலிருந்து அணுக்களின் வழியாய் A வரையிலும் மேல்நோக்கிப் போ
கின்றதல்லவா?

B என்ற நுனியைப் பிடித்துக் கொண்டு அதை விளக்குக்குக் கீழே
வைத்துக்கொண்டு A என்ற நுனியைக் காய்ச்சுவோம். உஷ்ணம் A
என்ற இடத்திலிருந்து கீழ்முகமாய் B வரையிலும் அணுக்களின் வழியே
போகின்றது.

இவ்விரண்டு பரிக்ஷைகளாலும், கம்பியின் வழியாய் மேலிருந்து
கீழும், கீழிருந்து மேலும் வித்தியாசமில்லாமல் உஷ்ணம் பரவுகின்ற
தென்பது தெளிவாய் விளங்குகின்றதல்லவா ?

டெஸ்டு டியூப் (Test tube) என்கிற ரசாயன பரிக்ஷைக்கு உபயோ
கிக்கும் கண்ணாடிக் குழாய் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதை
ஜலத்தால் நிரப்புவோம். நிரம்பின குழாயை அடிப்புறத்தில் விளக்கில்
காய்ச்சுங்கள். எத்தனை நிமிஷத்தில் ஜலத்தின் மேல்பாகம் உஷ்ணமாகின்
றது ? அந்தப்பொழுதைகவனமாய் எழுதிவைத்து கொள்ளுங்கள். மறு
படி சுடும்ஜலத்தைக் கீழே கொட்டிவிட்டு குளிர்ந்தஜலத்தை நிரப்பிக்கொ
ண்டு டெஸ்டு டியூப் பின் மேல்பாகத்தை உஷ்ணமாக்குங்கள். இப்பொ
ழுது எத்தனை நிமிஷத்தில் அடிப்பாகம் சூடாகின்றது ? $\frac{1}{2}$-மணி நேரம்
பார்த்தாலும் அடிப்பாகம் சூடேறுவதில்லை. மேல்பாகத்திலோ ஜலம்



பொங்கிக் கொதிக்கின்றது!!! ஜலத்தின் வழியாய்க் கீழிருந்து மேல்வ
ரையில் எவ்வளவு சுளுவாய் உஷ்ணம் பரவிற்றோ அவ்வளவு விரைவாய்
மேலிருந்து கீழே உஷ்ணம் பரவுவதில்லை. ஜலத்தின் வழியாய் உஷ்ணம்
'கன்டக்ஷன்' ஆவதாய் இருந்தால் மேலிருந்துகீழும் கீழிருந்து மேலும்
வித்தியாசம் இல்லாமல் உஷ்ணம் பரவவேண்டுமல்லவா ? ஆகவே ஜலத்
தின் வழியாய் கன்டக்ஷன் நடப்பதில்லை என்பது தெரிகின்றது. (மறு
படி இவ்விஷயத்தை அடுத்த பாடத்தில் தொடர்வோம்.)

ஜலத்துக்கு பதிலாய் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், இவ
ற்றை உபயோகப்படுத்துங்கள். அவற்றைக் கண்டக்டர்கள் என்று
சொல்லக்கூடுமா? கூடாது. பாதரசம் தவிர மற்ற திரவ்ய பொருள்களின்
வழியாய் உஷ்ணம் கன்டக்ஷன் ஆவதில்லை.

இனி வாயு பதார்த்தங்களைப் பரிக்ஷை செய்வோம். பழுக்கக் காய்ச்
சின ஒரு இரும்பு குண்டை உமது கையில் வைத்துக் கொள்ள முடியுமா?
முடியாது; இரும்பு குண்டு கையின்மேல் பட்டால் கைவெந்து போகும்.
அப்படியிருப்பினும் வித்தை செய்வோர் சிலர், அங்ஙனம் உஷ்ணமான
பதார்த்தத்தைத் தமது கையில் ஏற்றிக்கொள்வதைப் பார்த்து இருக்கின்
றீர்களா ? அவர்கள் கையில் விபூதியையாவது, சீமைச்சுண்ணாம்புப்
பொடியையாவது (இன்னும் ஏதாவது பொடியானாலும் சரியே), பரப்பிக்
கொண்டு அப்பொடியின்மேல் அவ்வுஷ்ணமான வஸ்துவைஏற்றிக்கொண்டு
நிற்கின்றனர். அவர்கை சுட்டுப்போகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன
வெனில், சுண்ணாம்புத் தூளும், விபூதியும் (இன்னும் இவை போன்ற
மற்றப்பொடிகளும்) அடர்த்தியான வஸ்துக்கள் அல்ல; அவற்றின் இடை
இடையே வாயுவின் அணுக்கள் நிரம்பியிருக்கின்றன; அவ்வாயுவின்
அணுக்களே உஷ்ணம் பரவாமைக்கு முக்கிய காரணம். வஸ்துக்களை
கன்டக்ஷன் செய்ய சக்தியற்றவை, என்பதும் ஒருகாரணமே. மரத்தூள்க
ளின் வழியாயும், பிளானல், கம்பளி, இவற்றின் வழியாயும், உஷ்ணம் விரை
வாக நடப்பதில்லையென்று முன் பாடத்தில் சொன்னோமே; அவ்வாறு
அவை கன்டக்ஷன் செய்யாமைக்குக் காரணம் அவ்வஸ்துக்களின் குணம்
மட்டுமின்றி, அவை அடர்ந்த வஸ்துக்கள் இல்லாமையால் அவ்வணுக்
களுக்கு இடையில் உள்ள வாயுவும் உஷ்ணத்தை வெளிப்போகாமலும்
உட்புகாமலும் தடுக்கின்றன.

உமது கையில் கொஞ்சம் மரத்தூளைப் பரப்பிக் கொண்டாவது, பிளா
னல் துணியை இரண்டு மூன்றாய் மடித்து வைத்துக் கொண்டாவது, ஒரு
சிறு கிண்ணத்தில் கொதிக்கும் ஜலத்தை ஊற்றி அக்கிண்ணத்தைக் கையி
ல் ஏந்திக்கொள்ளலாம். வெறுங் கையால் தொடவும் முடியாது.

வெயிற் காலத்தில் நடுமத்தியானத்தில் எப்பொழுதாவது ஆற்றைக் கடந்து போய் இருக்கின்றீர்களா? காவேரி, பவானி, அமராவதி முதலான ஆறுகளில் மணல் ஏராளமாய் இருப்பதால் மத்தியான வேளைகளில் அவ்வழியே நடக்கின்றவர்களுடைய கால் பொரிந்து போகும். நடுப்பகலில் ஆற்றைக்கடந்து செல்வோர், கொஞ்சதூரம் ஓடிப்போய் உஷ்ணம் பொறுக்க முடியாமல் போனதும், தங்களுடைய மேல் துணிகளைச் சுருட்டிக் கீழே வைத்து அதன் மேல் நிற்பதுண்டு. கால் ஆறினவுடன் மறுபடி கொஞ்சதூரம் ஓடிப்போய் மறுபடி துணிமேல் நின்று கொண்டு காலை ஆற்றிக்கொள்வார்கள். சிலர் மற்றும் ஒரு சிறு யுக்தி செய்கிறார்கள். சூடு பொறுக்க முடியாமல் போனவுடனே மேல் மணலை அப்புறமும் இப்புறமும் தள்ளிவிட்டு சற்றே குழிசெய்து அக்குழியில் நிற்பார்கள். அங்கே அவ்வளவு சூடு கிடையவே கிடையாது. ஏன்? மணலின்மேல் பாகம் சூரிய வெப்பத்தினால் நேரே உஷ்ணமடைகின்றது. மணல் துணுக்குகளுக்கு இடையில் உள்ள வாயு அணுக்களுக்கு அளவுண்டோ!! அவ்வாயுவின் அணுக்கள் மணலின் மேற்புறத்தில் இருக்கும் அபரிமிதமான உஷ்ணத்தை அடிப்பாகங்களுக்குப் போகும்படி இலேசில் விடுவதில்லை; ஆகவே அடிப்பாகங்கள் மேற்புறம்போல சூடேறுவதில்லை. காலால் உஷ்ணமான மணலைத் தள்ளிவிடவே, அடியில் உள்ள மணலின் மேல் கஷ்டமின்றி காலை வைத்துக் கொண்டு நிற்கக் கூடும். இவ்விதமாய் நாட்டுப் புறத்து ஜனங்கள் எத்தனையோ பேர் தினமும், செருப்பு, ஜோடுகள் இன்றி மணல் நிலங்களைக் கடந்து போய்த் தமது வேலைகளைச் செய்கின்றனர். வாயு உஷ்ணத்தை விரைவில் கண்டக்ஷன் செய்வதானால் என்ன விபரீதம் நிகழும் பாருங்கள்!!

ஆர். கே. சுவாமி, பீ. ஏ. எல். டி.

---

# இராஜ பக்தி.

## மாளிகை விட்டு வெளிப் புறப்பட்டது.

எல்லாரும் விமலையாரை மாளிகையிலேயே விட்டு விட்டு ஓடிப்போவார்கள் என்பது அமிர்தேசனுக்கு வியக்தமாய்த் தெரிந்தது. ஆனால் இந்த ஆபத்சமயத்தில் அவன் என்ன செய்யக்கூடும்? மேலும் ஒவ்வொருவருக்கும் 'தன் உயிர் வெல்லம்போல் இருக்க' இக்கிழவி பேச்சை யார்தான் கேட்பார்கள்? "ஆதலால் தேவன் திருஉள்ளம் எப்படியோ அப்படி நடக்கட்டும். மனிதனுக்கு என்னசக்தி இருக்கின்றது! என்னை நெல்லிக் கனிபோல், காட்டியுள்ளார். நான் குழந்தைகளை மட்டும் இன்று மாளிகையில் விடப்போகிறதில்லை." என்று புலம்பிக்கொண்டே அமிர்



தேசன் வீட்டின் பின்புறம் இருந்த தோட்டத்தில் புகுந்தான். அங்கே குழந்தைகள் நால்வரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அமிர்தேசனைக் கண்டவுடன் இரண்டு ஆண்பிள்ளைகளும் ஓரேஓட்டமாய் ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டனர். அவர்களைச் சற்று அப்பால் அழைத்துப்போய் "எது குல திலகனே, நீ இப்பொழுதுதான் உன் மனஉறுதியைக் காட்டவேண்டும். இவ்வீட்டிலிருந்து இப்பொழுதே நாம் எல்லோரும் வெளியேற வேண்டும். உடனே மாடியேறி உங்கள் அறையில் உள்ள சாமான்களை மூட்டை கட்டுங்கள். எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெகு சீக்கிரமாய் என் குடிசைக்குப் பறந்து ஓடுவோம். பொழுதுபோக்க சாவகாசமில்லை. புறப்படு உடனே" என்றான். எது குல திலகன் "என்னத்திற்கப்பா இத்தனை அவசரம்? என்ன தலை போகின்றது? காரணம் தெரியாமல் நான் ஒன்றும் செய்ய முடியாது. காரணத்தைச் சொல் முதலில்" என்று கடுகடுப்போடு சொன்னான்.

அமிர்தேசன் அமைதியாய் "காரணமா! சொல்லுகிறேன் கேள் அப்பா: இன்று ராத்திரி இராஜத்துரோகிகளான விஜ்ஜலன் சிப்பாய்கள் இம் மாளிகைக்குத் தீமூட்டப் போகிறார்கள்—"

எதுகுலன் "ஆஹா! என்ன சொன்னாய்? தீமூட்டுவதா? என் மாளிகைக்கா!! என் மாளிகையில் நுழைய எவனுக்கு உரிமை யிருக்கின்றது? எவன் இதன் பக்கத்தில் வரத்துணிவானோ பார்த்துக் கொள்ளுகிறேன்."

அமிர்தேசன் "அவர்கள் அவ்விதம் செய்யத் துணிவார்கள் சந்தேகமில்லை: மேலும் செய்யவும் போகிறார்கள்: நிச்சயம்."

எதுகுலன், "ஆனால் நான் அவர்களுடன் சண்டை போடுகிறேன். என் அமிர்தேசா நாம் சண்டை போடக்கூடாதா, நீ சொல்லு பார்ப்போம். எனக்கு நன்றாய் வில்வளைத்து அம்புவிடத் தெரியும். ஹம்ஸனும் ஏதோ கொஞ்சம் முன் நிற்பான், ஆக்ஷேபணையில்லை. மேலும் நீ இருக்கிறாய் —கிழப்புலி".

அமிர்தேசன் "ஏதடா அத்தைப் பாட்டிகுணம் போனிடத்திலும் இருக்கின்றதே!" என்று மனதில் எண்ணிக்கொண்டு "எதுகுலதிலகனே, நீ யோசனை செய்யாமல் பேசுகிறாய். இரண்டு மூன்று மனிதர்கள் சேர்ந்து ஒரு தலத்தையே எதிர்ப்பது சாத்தியமா? மேலும் அவர்கள் குதிரை வீரர். நீ சிறுபிள்ளை? இளம் கன்று பயம் அறியாது";முன்பின் ஆலோசனை பண்ணாது பேசுகிறாய். சாத்தியமானால் அமிர்தேசனை முதலில் எதிர்நின்று ஒரு கை பார்க்காமல் விடுவானோ? இது சாத்தியமில்லாத காரியம்; வீணில் எதிர்க்க எத்தனம் செய்வது அவிவேகம். உன் சகோதரி

களுக்காவது சற்று பொறுமையாய் யோசனை செய். அவர்களும் உன்
னுடன் இவ்வீட்டில் இருந்து தீயினால் எரிந்து போவதோ—இல்லையேல்
—அப்பாவிகளால் கொல்லப்படுவதோ, உன் மனதுக்கு சம்மதம் ஆகு
மா? சிறுவனே, நீ சொல்வது தப்பு; நான் சொல்லுகிறபடி நீ நடக்கத்
தான் வேண்டும். அதுவும் உடனே செய்தல் வேண்டும். பொழுதுபோ
கின்றது. வா, உள்ளே போவோம். பிரயோஜன முள்ள சாமான்களைக்
கட்டி எடுத்துக்கொண்டு, அதோ உன் குதிரை வெளியே நிற்கின்றது,
அதன்மேல் மூட்டைகளை ஏற்றுங்கள்!! என்றான்.

"அண்ணா! அமிர்தேசன் குடிசை எவ்வளவு அழகாய் இருக்கின்றது!
அங்கே போறது பொகு நன்றாய் இருக்கும் போலாம் அண்ணா" என்றான்
ஹம்ஸப் பிரியன்,

தம்பி சொன்னதினாலேயே எதுகுலதிலகன் கேட்கப்பட்டவனா!
கடைசியில் பலவாறு விவரித்து அச்சிறுவனை வழிக்குக் கொண்டுவருவது
மிகப் பிரயாசமாயிற்று. ஆடையாபரணங்களைக் கட்டி ஒரே மூட்டையாய்க்
குதிரையின்மீது ஏற்றினார்கள். அப்பொழுது "அப்பா, எதுகுலதிலகா
உன் அத்தைப் பாட்டி பெண் குழந்தைகளுக்கு உதவியாக அங்கம்மாளை
யும் அழைத்துப் போகும்படி சொன்னாள். ஆனால் அவள் வருவது சந்
தேகம்போல் இருக்கின்றதே" என்றான் அமிர்தேசன்.

ஹம்ஸப் பிரியன் "அண்ணா அங்கம்மாள் வந்து என்ன செய்யப்
போகிறாள் நமது தங்கை மார்களுக்கு? எப்போதும் குறட்டை விட்டுத்
தூங்குவாள்!! அம்மட்டுந்தான்; அவள் வேண்டாம் அமிர்தேசா. விசா
லாக்ஷியே தனக்கு வேண்டியதையும் அலமேலுக்கு வேண்டியதையும் செ
ய்து கொள்வாள். இன்னும் அங்கம்மாள் என்னத்திற்கு?" என்றான்.
அமிர்தேசன் "குடிசையிலும் அதிகம் இடம் இல்லை. அவள் வராமல்
இருப்பது நல்லதுதான். சரி: மூட்டைகளை நன்றாய்க் கீழேவிழாமல்
கயிற்றால் கட்டுங்கள் நான் போய் பெண்கள் இருவரையும் அழைத்து
வருகிறேன்." என்று புறப்பட்டான்.

எதுகுலன் "நில்! நில்!! அமிர்தேசா!!!
என் அத்தைப் பாட்டிக்கு என்ன வழி?"

அமிர்தேசன் "அவள் வீட்டை விட்டுப் புறப்படமாட்டேன் என்
கின்றாள். வீட்டிலேயே இருந்து கொண்டு தக்கபடி சிப்பாய்களுக்கு
பதில் சொல்லப் போகிறாளாம்." எதுகுலதிலகன் "உன் யுக்தி
நன்றாய் இல்லையே, அமிர்தேச! என் அத்தைப் பாட்டி, "தொண்டு
கிழம்" வீட்டில் இருந்துகொண்டுவரும் வீரர்களை எதிர்ப்பதாகச் சொ
ன்னால் புருஷனான நான் வீட்டை விட்டு ஓடுவதா? அழகு! அழ



கு!! நல்ல வேலையப்பா இது!! நானும் மாளிகையிலேயே தான் என்
அத்தைப் பாட்டியுடன் இருப்பேன். நீ என்னவோ செய்துகொள்"
என்றான். அமிர்தேசன் "நீயோ வீரன். உனக்குச் சொல்ல என்னால்
முடியாது. உன்னிஷ்டப்படிசெய். உன் சகோதரிகளை இவ்விடம் விட்டுச்
செல்வது கொடுமையான செயல் என்று என் மனதில் பட்டு இருக்கின்ற
து. அவர்களையும், இதோ நிற்கும் உன் தம்பி ஹம்ஸப்பிரியனையும் அழை
த்துக் கொண்டு நான் என் குடிசைக்குப் போகவேண்டியதுதான். வேறு
மார்க்கம் இல்லை. இருள் மூண்டுகொண்டால் அவர்களை க்ஷேமமாய் இக்
காலத்தில் குடிசை கொண்டுபோய்ச் சேர்ப்பது உன்னைப்போன்ற கிழவ
னுக்குச் சாத்தியமா? உன் உதவியிருந்தால் கொஞ்சம் அநுகூலம் என்
று நினைத்தேன். என் குடிசையோ அதிக தூரமில்லை. அவர்களை அங்கே
கொண்டுபோய்ச் சேர்த்தபின், இஷ்டமிருந்தால் நீ மட்டும் திரும்பிவா.
இரண்டு மூன்று நாழிகையில் ஓடிவந்து விடலாம். சிறுபிள்ளையான உன
க்கு அது ஒரு இலக்ஷ்யமில்லை." என்றான்.

அதுதான் நேரான வழியென்று எதுகுலனுக்கும் தோன்றிற்று.
குதிரையின்மேல் மூட்டை ஏற்றுவதற்குள் அமிர்தேசன், பெண்கள்
இருவரையும் அழைத்துவந்தான். அன்று இராத்திரி அமிர்தேசன் குடி
சைக்குப் போவதாகத் தெரிந்தவுடன், அவ்விருவரும் ஆனந்தக் கூத்தாடி
னார்கள். ஐயோ! பாவம்!! சிறு குழந்தைகள்! அவர்களுக்கு என்ன தெரி
யும் அமிர்தேசன் மனதில் இருந்த துக்கம்!! குட்டிக்கும் நாய்க்கும் குடிப்
போகக் கொண்டாட்டம் உண்டல்லவா பழமொழி!!

"சரி; எல்லாம் ஏற்பாடாயிற்று; எதுகுலா நீ இப்பொழுது உன்
சகோதரிகளைக் குதிரைமேல் ஏற்றிக்கொண்டு அவர்கள் பக்கத்தில் செல்
லவேண்டியது. ஹம்ஸன் முன்புறத்தில் குதிரையை மெதுவாய் நடத்திக்
கொண்டுபோக வேண்டும். ஓடைகளுக்கும், பள்ளங்களுக்கும் பக்கத்தில்
வரும்போது, குழந்தைகளை ஜாக்கிரதையாய் இறக்கிவிட்டுக் கையைப்
பிடித்துக் கூட்டிக்கொண்டு போகவேண்டும். என்ன? செய்கிறாயா அவ்
விதம்? இதோ சாவி!" என்று எதுகுலனிடம் திறவு கோலைக் கொடுத்து
விட்டு அவனை மெதுவாய் ஒருபுறம் அழைத்துப்போய் "ஹம்ஸப்பி
ரியனுக்கும் உன் சகோதரிகளுக்கும் சொல்லக்கூடாத இன்னுமொரு
இரகசியம்; நமது ஊரைச் சுற்றி எங்கே பார்த்தாலும் இராஜத்துரோஹி
கள் சுற்றித் திரிகிறார்கள். ஏனெனில் நமது இராஜாதி ராஜன் வைர
முடி தைலப்ப சக்ரவர்த்தி சிறையினின்றும் தப்பித்துக்கொண்டார்.
அவர் இப்பிராந்தியங்களில் ஒளித்து இருப்பதாக வதந்தி. அவரைப் பிடித்
துத் தருகின்றவனுக்கு விஜ்ஜலன் 1000 பொன் இனாம் கொடுக்கப் போகிறா

ளும். அதைபோல் விஜ்ஜலசேனைக் கலைவர்களும், வீரர்களும், இச்சமயத்தில் ஒவ்வொரு வீட்டில் நுழைவார்களோ என்னவோ தெரியாது! ஆகையால் குடிசையை விட்டு மாத்திரம் வெளிக்கிளம்பாதே. உன் தம்பியையும் சகோதரிகளையும் தனியேவிட்டு வாராதே. நான் திரும்பிவரும் வரை யில் அவர்களைக் காத்துக்கொண்டு இரு. இருட்டாய் விட்டதும் கத வைச்சாத்தித்தாளிட்டுக்கொள். விளக்கேற்றச் சக்கு முக்கி உள்ளே பெறை யில் வைத்து இருக்கிறேன். யாராவது குடிசையில் நுழைந்து தொந்தரவு செய்வார்கள் என்று தோன்றினால் என் வில்லும் அம்பராத்தூணியும் கூட த்தில் மாட்டியிருக்கின்றது. அதனால் கூடிய மட்டும் தடுத்துப்பார். நானும் இதோ உள்ளே ஒருமுறைபோய் உன் அத்தைப் பாட்டியைக்கண்டு விட்டு வருகிறேன். எப்படி இருப்பினும் நான் வரும் வரையில் தயவுசெய்து அவ்விடத்திலேயே இரு என் பேச்சைத் தட்டாதே. நான் வந்தபின் மேல் நடக்கவேண்டிய காரியங்களை யோசிப்போம்" என்று சொல்லி உள்ளே ஓடினான்.

எதுகுலனும் அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டு, சாயங்காலம் விரைவாய்க் குறைந்துகொண்டு இருக்கவே, குழந்தைகளுடன் புறப்பட் டான். அவர்கள் தெருவாயிலைத்தாண்டுவதற்கும், மாதவன் குதிரைமேலே றித் தன்பின் அங்கம்மாளை உட்காரவைத்துக்கொண்டு வருவதற்கும், சரி யாய் இருந்தது. இருதிறத்தாரும் பேசவில்லை. அவர் அவர் விசாரம் அவ ரவருக்குச் சரியாய் இருந்ததுபோலும். பூதவாகனத்தைப் போல் ஒருமூட் டையை ஏற்றிக்கொண்டு மாதவன் பின் உட்கார்ந்து செல்லும் அங்கம் மாளைப்பார்த்து, விசாலாக்ஷி "இது என்ன, அங்கம்மா கூட எங்கேயோ புறப்பட்டாப்போல் இருக்கே. நாம் நாளைதினம் ஊருக்கு வாததுக்குள், அவள் திரும்பி வந்துடுவளா?" என்று கேட்டாள். எதுகுலன் வாய்திறக்க வில்லை. ஹம்ஸப்பிரியன் "என்னவோ தெரியாது; ஒரு இராத்திரிக்கு வேண்டிய துணிகள் என்னவோ சரியாய்த் தான் சுருட்டிக்கொண்டு ஒடு கிறாள்" என்றான்.

---

## புஷ்பச் செடிகள் பயிரிடுதல்.

இந்தியாவில் வித விதமான புஷ்பங்கள் கிடைப்பதில் குறைவில்லை. வருஷம் முழுவதும் எந்தக்கால மானாலும் சில புஷ்பங்கள் உண்டாய்க் கொண்டேயிருக்கின்றன. அவை வாசனைக்கும், பார்வைக்கும் பேர் போனவை. பூர்வ காலத்தில் அவைகள் தேவதார்ச்சனையின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட நந்தவனங்களில் பயிர் செய்யப்பட்டு வந்தன. இப்போதுங்



கூட கோவில்களைச் சுற்றி ஸ்தாபிக்கப்பட்ட நந்தவனங்களில் உண்டாகும் புஷ்பங்கள் தேவதார்ச்சனைக்கு உபயோகப்படுகின்றன. சொந்தத்திலும் கூட சில தர்மவான்கள் நந்தவனங்கள் வைத்து புஷ்பங்கள் உண்டுபண்ணி கோவில்களில் பூஜையின் பொருட்டுக்கொடுத்து வருகிறார்கள். ஆனா லும் புஷ்பங்களின் பிரயோஜனம் வேறொரு முக்கியமான வழியிலு மிருக்கின்றது. புஷ்பச்செடிகளுக்கு சரியான எருப்போட்டு சாஸ்திர விதி யின் படி அவைகளைப் பயிருட்டு வந்தால், அவைகள் வாசனையிலும், தோற்றத்திலும் அபிவிருத்தி அடைந்து ஜனங்களுக்கு அலங்காரமாயும், வாசனைத் திரவியங்களாயும் உபயோகப்படும்.

ஐரோப்பிய தேசங்களில் பயிர் செய்யப்படும் புஷ்பங்கள் தேவதார் ச்சனைக்கு உபயோகப்படுவதில்லை. ஐரோப்பா கிறிஸ்தவ மதத்தைத் தழுவுகிற தேசமாகையால் அங்கு கோவில்களென்றும், தேவதார்ச்சனை யென்றும் ஏற்பாடு கிடையாது. ஆகையால் அங்கு உண்டாகும் புஷ்பங்க ளனைத்தும் ஜனங்களின் சந்தோஷத்துக்காகவே உபயோகப்படுகின்றன. பிரான்ஸ் முதலான சில தேசங்களில் கிராமத்து ஜனங்கள் புஷ்பம் வளர்ப் பதையே தொழிலாக ஏற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். அந்தப் புஷ்பங் களிலிருந்து பலவிதமான வாசனைத் திரவியங்கள் இரக்கி உள்ளூர் ஜனங் களுக்கு விற்பதுமல்லாமல், அன்னிய தேசங்களுக்கும் அனுப்புகிறார்கள். உலகத்து தேசங்களில் என்ன வஸ்து செய்யப்பட்டாலும் அது விசேஷ மாய் இந்தியாவுக்கு வந்தே விற்பனையாக வேண்டியிருக்கின்றது. பிரான் ஸிலும் ஜெர்மனியிலும் உண்டாகும் வாசனைத்திராவகங்கள் இந்தியாவி லுள்ள கடைகளில் விசேஷமாய் விற்கப்படுகின்றன.

நமது தேசத்தில் மற்றத் தொழில்கள் அன்னியர் போட்டியால் அழி ந்துபோனதுபோல, புஷ்பங்களிலிருந்து இறக்கப்படும் வாசனைப்பொருள் களும் செய்வோராவது வாங்குவோராவது இல்லாமல் அழிந்துகொண்டி ருக்கின்றன. பழைய காலத்தைப்போல் அத்தர், பன்னீர், முதலிய வாச னைத் திரவியங்கள் இப்போது இந்தியஜனங்களால் உபயோகப்படுத்தப்படு வதில்லை. செல்வம் படைத்து நாகரீகம் உள்ள ஜனங்கள் சொந்த தேச த்து வாசனை பொருள்களை உபயோகப் படுத்தாமல் அன்னிய தேசங்களி லிருந்து வரும் வாசனை ஜலங்களை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த விஷயத்தில் நமது ஜனங்களின்விருப்பம் மேல்நாட்டாரைப்பார்த்து மாறிக் கொண்டு வருகின்றது. மாறிக்கொண்டுவரும் விருப்பங்களுக்குத் தக்கபடி வியாபாரப்பொருள்களை அவைகளுக்குத் தக்கபடி புதுவிதமாய்ச் செய்ய நம் தொழிலாளிகளுக்குத் தெரிவதில்லை. ஜனங்களின் ருசிகளும், விருப் பங்களும் மாறிக்கொண்டுதான் வரும். அவைகளுக்குத் தக்கபடி தான் தொழிலாளிகள் வியாபாரம் செய்யவேண்டும்.

வங்காளத்தில் சில இடங்களில் வாசனைத் திராவகங்கள் புதியதாய்ச் செய்யப்பட்டு லாபம் அடையப்படுகின்றது. நம் தேசத்தில் ரோஜா, மல்லிகை, ஸம்பங்கி முதலிய அநேக வாசனை புஷ்பங்கள் எதேஷ்டமாய் உண்டாகின்றபடியால் அவைகளைக் கவலையுடன் பயிர்செய்து ஜனங்களின் விருப்பங்களுக்கு ஏற்றபடி வாசனைத் திராவகங்கள் இறக்கி விற்பதில் என்ன தடையிருக்கின்றது? அன்னிய ஜனங்கள் இந்தியாவுக்கு வரும்போது நம் ஷாப்புகளில் அன்னிய வாசனைப்பொருள்களையே பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். தற்காலம் இந்தியத் தொழில்களில் நிலைமையானது எந்த விதத்தில்தான் அன்யருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணவில்லை.

சுதேசமித்திரன்.

---

# அம்மை குத்துவது.

(340வது-பக்கத்தின் தொடர்ச்சி.)

4. அம்மைகுத்தி ஆறுவருஷம் ஆனபிறகு அதற்கு பெரியம்மை வரவொட்டாமல் தடுக்கும் குணம் போய்விடுகிறது. ஆகையால் 6 வருஷத்திற் கொருமுறை மறு அம்மை குத்திக்கொள்ள வேண்டும். அடிக்கடி அம்மை குத்திக் கொள்வதினால் யாதொரு கெடுதியும் இல்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் யாவரும் முதல் நியமனத்தின்போது மறு அம்மை குத்திக்கொள்ள வேண்டியது அவசியம். அதேமாதிரியாக வியாபார ஸ்தலங்களிலும் கைத்தொழிற் சாலைகளிலும் வேலைசெய்யப் போகிறவர்கள் முதல் நியமனத்தின் போது மறு அம்மை குத்திக்கொள்ளவேண்டும். வியாபார ஸ்தலங்கள் கைத்தொழிற் சாலைகள் இவைகளைச் சேர்ந்த முதலாளிகளும் மானேஜர்களும் தங்கள் வேலைக்காரர்கள் வேலையை ஒத்துக்கொள்ளுமுன் மறு அம்மை குத்திக் கொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டும்.

பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் 12 வயது ஆனவுடனே மறு அம்மை குத்திக்கொள்ள வேண்டும். மறு அம்மை குத்தும் விஷயத்தில் கார்பொரேஷனார் வெகு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். முனிஸிபல் அம்மை குத்தும் உத்தியோகஸ்தர்கள் உங்கள் வீடுகளுக்கே வந்து யாதொரு கட்டணமுமின்றி மறு அம்மை குத்துவார்கள். தினக்கூலியாக ஜீவிக்கும் ஏழை ஜனங்கள் மறு அம்மை குத்திக்கொண்டால் ஒரு நாள் இரண்டு நாள் ஜுரம் வரும்போது வேலை செய்ய முடியாமல் வீட்டில் தங்கவேண்டியிருப்பதால் அவர்கள் பசியாலலையாமல் இருக்கும்பொருட்டு கார்போரேஷனார் அவர்களுக்கு ¼ அணா இனாம் கொடுக்கிறார்கள். பெரியம்மை மும்முரமாயிருக்கும் போது, கார்போரேஷனார் அதற்கென்று



வாக்ஸினேடர்கள் சிலரை நியமித்து அவர்களை அம்மை கண்டிருக்கும் ஜாகாக்களை யெல்லாம் பரிசோதித்து அம்மை தொத்த விடாமல் தடுப்பதற்கு மறு அம்மை குத்தும்படி ஏற்பாடுசெய்வார். அந்த வாக்ஸினேடர்களுக்கு நீங்கள் உதவியாயிருந்து அவர்கள் வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் பார்க்கவேண்டியது.

பெரியம்மை கண்டிருக்கும்போது அம்மையாவது மறு அம்மையாவது குத்துவது பிசகு என்பது சிலர் அபிப்பிராயம். அம்மையை வரவொட்டாமல் தடுப்பதை விட்டு அம்மை அதனால் காணும் என்றும், அப்படி செய்வது தேக ஆரோக்கியத்திற்கு விரோதம் என்றும் எண்ணுகிறார்கள். இது தப்பு அபிப்பிராயம். அப்படி நினைப்பது வைத்திய சாஸ்திர விரோதம். மனுஷிய கோடிகளுடைய க்ஷேமத்தின் பொருட்டு அநேகம் அற்புதமான விஷயங்கள் இந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் அம்மை குத்துவது ஒன்று. வைத்திய சாஸ்திரத்தை அலக்ஷியம் செய்து அதில் கண்டிருக்கும் சிகிச்சைகளை விட்டுவிடக் கூடாது. பெரியம்மை வரவொட்டாமல் தடுப்பதற்கோ, வந்தாலும் லேசாய் போகும்படி செய்வதற்கோ வைத்திய சாஸ்திர சம்பந்தமான சிகிச்சை அம்மைகுத்திக் கொள்வதே. ஆதலால் அம்மை குத்திக் கொள்வதிலாவது மறு அம்மைகுத்திக் கொள்ளும் விஷயத்திலாவது காலஹரணம் செய்யக்கூடாது.

5. அம்மை குத்திக் கொள்வதென்றால் இந்த மனித தேகத்தில் அம்மைப் பாலை ஏற்றுக்கொள்ளும்படி செய்வது. அம்மை குத்தப்பட்ட ஓர் கன்றுக் குட்டியினின்று அம்மைப்பால் எடுக்கப்படும். சென்னையில் உபயோகப்படுகிற அம்மைப்பால் கிண்டி "கிங்கு இன்ஸ்டிட்யூட்" ஆபீஸிலிருந்து வருகிறது. அது சாஸ்திர யுக்தமாயும் சுகாதார விஷயங்களை அனுசரித்தும் தயார் செய்யப் படுகிறது. இங்கு ஸப்ளை செய்யப்படும் அம்மைப்பால் மிகவும் சுத்தமானதும் சத்துள்ளதாயும் இருக்கும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. பால் கெட்டது அல்லது வெகுநாளானது என்ற பயம் வேண்டாம். அப்போர்க்கொத்த பாலை ஹெல்த் ஆபீசர் உபயோகிக்க விடமாட்டார். விஷநோய்களைத்தடுக்கவும் பொதுஜன சுகத்தை கொடுக்கவும் ஹெல்த் டிபார்டுமெண்டார் செய்யும் யத்தனங்களை நீங்கள் உதவியாயிருந்து ஈடேற்ற வேண்டும். அப்படி நீங்கள் செய்வது உங்கள் சுகத்தின் பொருட்டே.

டாக்டர். யு. ராமராவ்.

# பைச நகரத்துச் சாய்ந்த கோபுரம்.

இப்போது(Italy)இடலி தேசத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிற பைசா என்னும் நகரத்தில் மிகவும் ஆச்சரியகரமான ஒரு சாய்ந்தகோபுரம் இருக்கிறது. அது ஒரு ஜர்மனி சிற்பசாஸ்திரவித்வானால் ஏறக்குறைய 1150-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. அதன் பக்கத்தில் மகா பிரசித்திபெற்ற ஒரு தேவாலயம் உண்டு; அந்த ஆலயத்து மணிகட்டுவதற்காகவே அந்தக் கோபுரம் கட்டப்பட்டதாம். அது முழுதும் வெண்கல்லினால் செய்யப்பட்டு அடியில் பருத்து நுனியில் சிறுத்திருக்கிறது; திவ்யமாய் அலங்கரிக்கப்பட்ட கம்பங்கள் அமைந்து சக்கரவடிவான எட்டு நிலைகள் உள்ளதாயிருக்கின்றது. உச்சியில் சமமாகத் தளம்போட்டிருக்கிறது; அங்கிருந்து பார்த்தால் சுற்றுப்பக்கத்தில் வெகுதூரத்துக்கு வெகுதூரம் தெரியும். அடியிலிருந்து உச்சிவரையில் கோபுரம் 188- அடி உயரம்.

கோபுரம் நேராயிராமல் சாய்ந்துநிற்கிறபடியால் அது எந்தவிதமாய் அப்படி நிற்கிறதென்று சிலர் சந்தேகிக்கிறார்கள். உச்சியிலிருந்து ஏதாவது ஒரு பொருளை நேராகக் கீழேவிட்டால் அது அடிவாரத்துக்குப் பதினைந்து அடிதூரத்தில் விழுகிறது. எந்த வஸ்துவாகட்டும் அதன் பளுத்தாங்குமிடத்திலிருந்து நேராகக் கீழே வரையப்படும் கோடு அதன் அடிவாரத்துக்குள் விழுந்தால் தான் அது நிலையில் நிற்கும்; இல்லாவிட்டால் விழுந்துபோம் என்பது சித்தாந்தம். அதன்படியே அநேகர் அந்தக் கோபுரத்தின் மையத்தினின்றும் கீழே ஒரு நேர்க்கோடு விழுவதாய் நினைத்துக்கொண்டால் அது அதன் அடிவாரத்துக்குள்ளேதான விழும்; அதனாலேதான் அந்தக் கோபுரம் நிலைநிற்கிறதென்று சொல்லுகிறார்கள். சிலர் அப்படிச் சொல்லுவதற்கு ஆதாரமொன்றுமில்லை; அது கட்டிய உறுதிப்பாட்டினால் ஸ்திரமாயிருக்கிறதென்கிறார்கள்.

பூகம்பத்தினால் கோபுரம் சாய்ந்துபோயிற்றென்று சிலர் நினைக்கிறார்கள்; இன்னும் சிலர் கட்டும்போதே அந்த உத்தேசத்தோடு கட்டப்பட்டதென்கிறார்கள்; இப்படி நினைக்கிறதே அநேக சில்பசாஸ்திரிகளுக்கு யுக்தமாகத் தோன்றுகிறது. இந்தக் கோபுரத்தையே ஒரு சாதனமாகக் கொண்டு (Galileo) கலிலியோ என்னும் வானசாஸ்திரி பூமியின்கவர்ச்சியைப்பற்றின அநேக நியாயங்களைக் கண்டுபிடித்தார்.

ஜனவிநோதினி.

---



ஒரு ஊரில் இருவர் சகோதரரிருந்தனர். அவர்களுக்கு ஒரு ஏகபோகநி
ராமுமுண்டு, அண்ணன் கிராம வியவகாரங்களையும் தம்பி வீட்டுவியவகா
ரங்களையும் கவனித்து வந்தார்கள். ஒருநாள் தம்பி "அண்ணா! நாம் இ
ண்டு பேரும் மாற்றிக்கொள்வோம்" என அண்ணன், "அப்பா உன்னால்
முடியாது" என்றான்.

தம்பி கோபித்துப் பிடிவாதம் பிடிக்கவே அண்ணனும் "சரி, ஒரு
வாரம் என்னோடு கூடவே இருந்து வேலை கற்றுக்கொள்" என்றான்.
இவ்விதமாக ஒரு வாரம் சென்றது. ஒருநாள் ஒரு குடித்தனக்காரன் வீட்
டில் அவன்தாயார் இறந்து விட்டபடியால் அண்ணனுந் தம்பியும் துக்கம்
விசாரிக்கச் சென்றார்கள். போய் அண்ணன் "என்னப்பா பண்றது. எல்
லாம் ஈனையாருமீசன் செயல். உன்தாயார் ஊருக்கெல்லாம் தாயாராய்
விளங்கினாள் ஏதோ போராதகாலம்" என்று சொல்லி துக்கம் விசாரித்
தான். சிலநாட்கள் கழித்து வேறொருவன் வீட்டில் அவன் சமுசாரம்
இறந்துவிட தம்பி மட்டும் துக்கம் விசாரிக்கச் சென்று "என்னசெய்றது!
நமது கஷ்டகாலம்! உன்மனைவி ஊருக்கெல்லாம் மனைவியாய்விளங்கினாள்'
என்பதற்குள் துக்கத்தையும் பாராமல் அவன் விளக்கமாற்றை யெடு
த்து வந்தவனை நையப்புடைத்தனுப்பினான்.

---

இனிஸ்பெக்டர்: ஒருவன் இருதாரங்களைக் கலியாணம் செய்து கொ
ள்ளக் கூடாது என்பதற்கு பைபிளிலிருந்து ஒரு வசனஞ் சொல்.
பையன் (சற்றுயோசித்து) ஒரு மனிதனும் இரண்டு எஜமான்களி
டம் வேலைசெய்தலரிது.

வி. என். ராஜ்.

---

## உண்மை விளம்பு.

ஒரு தேசத்தில் ஒரு குடியானவன் தன்னுடைய நிலங்களை உழுது
பயிரிட்டு அதனால் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு ஜீவித்துவந்தான்.
அவன் கனவிலும் பொய்யுரையாமல் உண்மையையே பேசுவான். இவனு
டைய வயலுக் கருகில் ஒரு பிரபு வசித்து வந்தான். ஒரு நாள் அப்பிரபுவி
னுடைய கால்நடை ஜெந்துக்கள் அக்குடியானவனுடைய வயலில் மேய்
ந்து பயிர்ச்சேதமுண்டாக்கின. அக்குடியானவன் மிகவருத்தப்பட்டு அப்
பிரபுவினிடத்தில் இந்த அநியாயத்தைத் தெரிவித்தான். அப்பிரபு அக்
குடியானவனை நோக்கி "ஐயா! உமக்கு எவ்வளவு நஷ்டமாகும். உண்மை
யைச் சொல்லுங்கள். நான் அவ்வளவும் கொடுக்கிறேன்" என்று சொன்
னான். குடியானவன் "பிரபு! சென்றவருஷம் அந்த நிலத்தில் ஐம்பதுரூபாய்
தேறிற்று. தங்கள் பிரியப்படி செய்யுங்கள்" என்று வணக்கமாகக் கூறி
னான். அதைக் கேட்ட பிரபு ரூபாய் ஐம்பதும் கொடுத்தனுப்பினான். இ

நடந்து சிலமாதங்கட்கெல்லாம் சேதமடைந்தது போலிருந்த பயிர் மறுபடியும் துளிர்விட்டு பருவகாலத்தில் நூறு ரூபாய் மதிப்பிடக்கூடிய பயனளித்தது. அந்தக் குடியானவன் தான் பிரபுவினிடத்திற் பெற்ற ரூபாய் ஐம்பதும் அதற்குரிய வட்டி ரூபாய் மூன்றும் சேர்த்து பிரபுவினிடத்திற்குக் கொண்டுபோய் "ஐயா தங்களிடத்தில் நான் ஐம்பது ரூபாய் அநியாயமாய் பெற்றுக்கொண்டேன். முன்னம் சேதப்பட்ட பயிர்களால் இப்போது எனக்கு நூறு ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆகையால் இந்த ஐம்பது ரூபாயை வட்டியுடன் பெற்றுக்கொள்ளுமாறு மிகவும் வேண்டுகிறேன்" என்றான். அந்த பிரபு மிகுந்த சந்தோஷமடைந்து அந்த ஐம்பது ரூபாயை அவனுக்கே பரிசளித்து நூறு ரூபாய் கொண்ட பணப்பையையும்கொடுத்து, ஐயா, "இதனைக்கொண்டுபோய் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வாருங்கள் உம்முடைய பிள்ளை வயதடைந்ததும் இந்தப் பையின் சரித்திரத்தைக்கூறி அவனையும் உண்மையையேபேசும்படி செய்யுங்கள்" என்று சொல்லியனுப்பினான்.

---

## காணாமற் போன பருந்து

ஒரு தையற்காரன் பருந்து ஒன்றை வளர்த்து வந்தான். அதற்கு "உன்னை நிச்சயமாய்க் கொல்வேன்" என்ற வாக்கியத்தைக் கற்பித்து வைத்தான். அப்பருந்து அதனைத் தெளிவாக பயமுறுத்தும்படியான குரலுடன் சொல்லிவந்தது. ஒருநாள் அப்பருந்து தையற்காரனுடைய கூட்டிலிருந்து விடுதலையடைந்து அடுத்த கிராமத்தில் ஒரு பாழடைந்த வீட்டின் பரணையொன்றில் ஒளித்துக்கொண்டது. அவ்விடத்திலிருந்துகொண்டு "உன்னை நிச்சயமாய்க் கொல்வேன்" என்ற வாக்கியத்தை அடிக்கடி சொல்லும். அதனைக் கேட்ட யாவரும் நடுநடுங்கி விடுவார்கள். அவ்வீட்டில் பேயோ முனியோ இருக்கின்றது என்று எங்கும் பரவிவிட்டது. அந்த வீட்டுக்குரியவன் அந்த வீட்டை இடித்து சரிப்படுத்துமாறு சில ஆட்களை ஏற்படுத்தினான். அவர்கள் இடிக்கும் சமயத்தில் அந்த பருந்து முன் சொல்லியதுபோலக் கூப்பிட்டது. அவர்கள் பயந்து வேலையை விட்டு விட்டுச் சென்றார்கள். அந்த வீட்டுக்காரன் மிகுந்த பயமடைந்து "இந்த வீட்டில் வாசமாயிருக்கும் பேயை ஓட்டுபவருக்கு நூறுரூபாய் இனாம்" என்று அறிக்கை செய்துவைத்திருந்தான். இதனைக் கேட்ட தையற்காரன் தன்னுடைய பருந்து நூறு ரூபாயுடன் கிடைக்கிறதேயென்று சந்தோஷப்பட்டு அந்தவீட்டிலுள்ள பேயை ஓட்டுவதாக ஒப்புக்கொண்டான். கையில் ஒரு பையை எடுத்துக்கொண்டு அந்தப் பய் இருந்த பரணையின்மீது ஏறிச்சென்றான். அந்தபருந்து முன்சொல்லியது போல மறுபடியும் கூச்சலிட்டது. உடனே தையற்காரன் "வெளியே வந்தால் உன்னை நிச்சயமாய்க் கொல்வேன்" என்று அதட்டிக் கூறினான். தன்னுடைய எஜமானுடைய குரலைக் கேட்டதும் பருந்து பேசாமல் அடங்கி விட்டது. உடனே பருந்தைப் பிடித்து ஒரு பையில் போட்டுக்கொண்டு வீட்டுக்காரனிடம் ரூபாயைக் கேட்டான். வீட்டுக்காரன் பேய் போய்விட்டதா என்று கேட்க, தையற்காரன் பையை தட்டி இதோ பேய் என்றான். பையிலிருந்து "உன்னை நிச்சயமாய்க் கொல்வேன்" என்னும் சப்தம் வந்தது. வீட்டுக்காரன் தான்சொல்லியபடி ரூபாய் நூறும் கொடுத்தனுப்பினான். தையற்காரன் அந்த பருந்தை மிகச்சாக்கிரதையாக காப்பாற்றிவந்தான்.

T. M. மார்க்கசகாயம்.

---



## சமாச்சாரக் குறிப்புகள்.

திருவல்லிக்கேணி ஸமஸ்கிருத வித்யாலயம்.—இவ்வித்தியாலயத்தின் பரிசளிப்பு தினக்கொண்டாட்டத்தின் நடவடிக்கைகள்யாவருக்கும் தெரிந்திருக்குமென்று நம்புகிறோம். அப்பொழுது பிரஸிடெண்டு மாதுஸ்ரீ கல்யாணி அம்மாள் (மிஸ்டர் ஜஸ்டிஸ் T. V. சேஷகிரி அய்யரின் மனைவியார்) செய்த உபந்நியாசத்தை பிரசுரிக்கிறோம்.

பிரஸிடெண்டின் பேச்சு.—இந்தியாவின் பலபாகங்களிலும் இப்பொழுது பெண்கல்வி அபிவிருத்தியாகிவருகிறது. பெண்கள் படித்தால் கெட்டுப்போவார்கள் என்றமூட எண்ணத்தை விட்டு, பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு கல்வி புகட்டிவருகிறார்களென்றாலும் படிப்பினால் பெண்கள் கெட்டுப்போவார்கள் என்கிற எண்ணம் இன்னும் சிலரைவிட்டு நீங்கவில்லை.

பெண்கள் படித்து உத்தியோகம் செய்யப் போகிறார்களா என்று சிலர் வாதிக்கிறார்கள். "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே புசியுமாம்" என்பது போல அறிவை விருத்தி செய்வதற்கும், மனத்தூய்மை உண்டாவதற்கும், கற்கும்கல்வி, உத்தியோகத்திற்கும் உபயோகப்படுகிறது. ஸ்திரீகள் கல்விகற்று உபாத்திமைத்தொழில், வைத்யத்தொழில் முதலியவைகள் செய்வது நம் ஸ்திரீகளுக்குப் பெரிய உபகாரமாக இருக்கிறது. இப்பொழுது இந்த ஸ்கூலில் ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மாள் உபாத்தியாயினியாக இருப்பதால் சிறுபெண்கள் தவிர பெரியவர்களும் வந்து இங்கே கல்விகற்கச் சாதகமாக இருக்கிறது.

நமது புராணங்களிலும் நமது புராதனஸ்திரீகள் கல்விகற்காத மூடர்களாக இருந்தார்களென்று சொல்லவில்லை. காத்தியாயினி மைத்ரேயி முதலிய ஸ்திரீகளெல்லாம் ஸகல சாஸ்திரங்களிலும் விற்பன்னர்களாக இருந்த

தாகத் தெரிகிறது. மேலும், சமயம் வந்தகாலத்தில் யுத்தம் செய்யவும், ரதஸாரத்யம் செய்யவும் கற்றிருந்தார்கள். மத்தியில் மூடத்தனத்தால் ஸ்திரீகளுக்குக் கல்வி கூடாதென்றும், அவர்களுக்குச் சிறிதும் சுவதந்திரம் கொடுக்கக்கூடாதென்றும் ஸ்திரீகளை ஆடுமாடுகளைப்போல் நடத்திவந்தார்கள். ஆனால் இப்பொழுது ஸ்திரீகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் அவர்களுக்கும் சிறிது சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்றும் அறிவாளிகள் பலர் மனதிலும் தோன்றி, அவ்விதம் நடத்திக்கொண்டு வருவது நாம் செய்த பாக்யமே. "குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல, நெஞ்சத்து நல்லம்யா மென்னும் நடுவுநிலைமையாற் கல்வி அழகே அழகு" என்பதுபோல், ஒரு ஸ்திரீ எவ்வளவு ரூபவதியாக இருந்தாலும் கல்வி யறிவில்லாவிட்டால் புத்திமான்களால் அவள் அழகுள்ளவளாகக் கருதப்படமாட்டாள். மேலும், ஸ்திரீகள் படித்திருந்தாலன்றி அவர்கள் குடும்பக் கணக்கு வழக்குகளைப் பார்க்கவும், குழந்தைகளைச் சரிவரப் பராமரிக்கவும் புருஷர்களுக்கு அனுகூலமாக இருக்கவும் முடியாது. ஓர் குடும்பத்தில் புருஷன் படித்தவனாகவும் ஸ்திரீ ஸுத்த நிரக்ஷரகுக்ஷியாகவும் இருந்தால் இவ்விருவருக்கும் ஒற்றுமையின்றி ஸதா மனம் வருந்திக்கொண்டிருப்பார்கள்.

ஆகையால் ஸ்திரீகளுக்குக் கல்வி மிகவும் அவசியம். தற்காலம் கல்வி அபிவிருத்தி ஆகிக்கொண்டுவந்தாலும், தமிழ், ஆங்கிலம் முதலியவை அபிவிருத்தியாகி வருவதுபோல், நமது புராதன பாஷையாகிய, ஸம்ஸ்கிருதம் இன்னும்நன்றாக விருத்தியாகவில்லை. ஹிந்துக்களாகிய நடந்த நமதுபூர்வ பாஷையாகிய ஸம்ஸ்கிருதம்படிப்பதால், நல்ல பதிவிரதைகளின் சரித்திரங்களைப்படிக்கவும் அவர்கள் வழியை அனுஸரிக்கவும், ஈசுவரபக்தி உண்டாகவும் பெரியோரிடத்தில் வணக்கம் முதலிய நற்குணங்களுண்டாகவும் ஞானமுண்டாகவும் பகவானை தோத்திரம் செய்வதற்கும், ஸம்ஸ்கிருத பாஷையே காரணமாக இருப்பதால் ஒவ்வொரு ஸ்திரீயும் ஸம்ஸ்கிருதம் அவசியம் படிக்கவேண்டும். ஆனால் தற்கால நாகரிகத்திற்கிணங்க ஆங்கில ஸ்திரீகளுடன் பழகுவதற்கும், ஆங்கிலம் கற்ற கணவன்மார்களுக்கு அனுகூலமாக இருப்பதற்கும் நம் சிறுமிகளுக்கு ஆங்கிலபாஷையும் அவச்யம் தெரியவேண்டும். இதுவரையில் சம்ஸ்கிருதத்திற்கென்று தனியாகப் பாடசாலை ஏற்படவில்லை.

இப்பொழுது இச்சென்னையில் ஒரு வருஷமாக ஸ்ரீமதி கமலாம்பாள் அம்மாளால் சம்ஸ்கிருதத்திற்கு தனியாக பாடசாலை ஏற்படுத்தப்பட்டு, அநேக சிறுமிகளும் சில பெரியவர்களும் வந்து படிப்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இதில் கமலாம்பாள் அம்மாள் மிகவும் சிரத்தையும், முயற்சியும் எடுத்துக்கொண்டு உழைப்



பது நிரம்பவும் மெச்சத்தகுந்தது. கமலாம்பாள் அம்மாளைப்போல் இன்
னும் சில ஸ்த்ரீகள் ஏற்பட்டு இன்னும் பல இடங்களில் பாடசாலை ஏற்ப
டுத்திச் சிறுமிகளுக்கும், பெரியவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பார்
களானால் நமது தேசத்துக்கே ஓர் பெரிய உபகாரமாக இருக்கும். இந்த
ஸம்ஸ்கிருத பாடசாலை மேன்மேலும் விருத்தி யடைந்து இச்சென்னை
வாஸிகளுக்குப் பெரிய உபகார மாக இருக்கும்படி கடவுள் அருள்புரியப்
பிரார்த்திப் போமாக.

இந்திய தீக்குச்சிகள்.—இந்தியாவில் தீக்குச்சிகள்செய்யப்படும் தொ
ழில் அபிவிருத்தி யடைந்துவருகிறதென்று வியாபார இலாகா அதிகாரிகள்
குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்டலேயிலும், ஐக்கிய மாகாணங்களிலும்
செய்யப்பட்டு வரும் தீக்குச்சிகள், அன்னிய தேசங்களிலிருந்து இந்தி
யாவில் இறக்குமதியாகும் தீக்குச்சிகளுக்கு எந்த விதத்திலும் கீழானவை
கள் ஆகமாட்டாவென்று சொல்லப்படுகிறது. தீக்குச்சிகள் செய்யப்படுவ
தற்கு வேண்டிய மரங்கள் அடங்கிய காடுகள் இந்தியாவில் இருக்கின்றன
வா என்ற பிரச்னைகளும் அவைகள் சம்பந்தமான வேறுசில பிரச்னைகளும்
இன்னும் பரீட்சித்தறிந்து முடிக்க வேண்டிய காரியங்களாயிருக்கின்றன.
மைசூர் சமஸ்தானத்தில் தீக்குச்சிகள் செய்யப்படுவதற்கு அனுகூலமான
காடுகள் இருக்கின்றன வென்றும் அங்கிருக்கும் மரங்களால் சில தீக்குச்
சிகள் செய்யப்பட்டதில் அவைகள் நிரம்ப சிலாக்கியமாயிருக்கின்றன வெ
ன்றும், மைசூரில் தீக்குச்சித் தொழிற்சாலை யொன்று ஏற்பட்டு நடத்தி
வரலாமென்றும், திருவாங்கூரிலும் அவ்வித சாலையொன்று ஏற்படுத்த
லாமென்றும் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

சுகாதார விஷயங்களைப்பற்றி கிராமவாசிகளுக்குப் பிரசங்கங்கள்.—செ
ன்னை மாகாண சுகாதாரக் கமிஷனர் சுகாதார விஷயங்களைக் குறித்து கிரா
மவாசிகளைக் கூட்டி வைத்துப் பிரசங்கங்கள் செய்யலாமென்றும், அந்தப்
பிரசங்கங்கள், இன்ன விஷயங்களைப்பற்றி யிருக்கலாமென்றும், இன்ன
மாதிரி செய்யப்படலாமென்றும், கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்
ய, கவர்ன்மெண்டார் அம்மாதிரி பிரசங்கங்கள் செய்யப்படுவதற்கு வேண்
டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி சுகாதார கமிஷனருக்கும் வித்தியாதிகா
ரிக்கும் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அப்பிரசங்கங்கள் மனிதர்கள் தாகத்
உட்கொள்ளும் ஆகாரம், அவர்கள் சுவாசிக்கும் காற்று, அவர்கள் தாகத்
துக்குச்சாப்பிடும் ஜலம் இவைகளைப் பற்றியும் மனிதர்களுக்குச் சாதார
ணமாய் உண்டாகிற வயிற்றளைச்சல், க்ஷய ரோகம். நரம்புச் சிலந்தி, வாந்
திபேதி, பிளேக், முதலிய வியாதிகளைப்பற்றியும் மற்ற சுகாதார விஷயங்
களைப்பற்றியும் செய்யப்படும். கிராமாந்தர வாசிகள் அப்பிரசங்கங்களால்
விசேஷப் பயனை யடைவார்களென்று நாம் எதிர்பார்க்கலாம்.

## லார்டு ஹார்டிஞ்சிக்கு நேரிட்ட பெரும் துக்கம்.

நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்டு ஹார்டிஞ்சின் குமாரர் லெப்டினண்ட் ஆனரெபில் E. C. ஹார்டிஞ்சு, இறந்துபோய் விட்டாரென்று அறிய துக்கப்படுகிறோம். லெப்டினண்டு ஹார்டிஞ்சு 2-மாதங்களுக்கு முன்பு ரணகளத்தில் சண்டைசெய்கையில் இரண்டு புஜங்களிலும் காயம் பட்டதாகவும், வேறு இடங்களில்கூடக் காயம்பட்டதாகவும், ஆஸ்பிடலில் சிகிச்சைபெறுவதாகவும் சொல்லப்பட்டது. பிறகு சக்ரவர்த்தியும், மந்திரிகளும் அவர் குணப்பட்டு வருகிறாரென்று லார்டு ஹார்டிஞ்சுக்கு செய்தியனுப்பி தேறுதல் சொன்னார்கள். இந்திய ஜனங்களுக்கும் அப்படி வந்த செய்தியால் ஒருவாறு திருப்தியுண்டாயிருந்தது. இப்போது லெப்டினெண்டு ஹார்டிஞ்சு இறந்துவிட்டாரென்றுவந்த செய்தியால் லார்டு ஹார்டிஞ்சுக்குப் பெருந்துக்கம் நேரிட்டிருப்பதோடுகூட இந்திய ஜனங்களும் துக்கப்படுவார்கள் லார்டு ஹார்டிஞ்சுக்கு ஒரே பிள்ளையென்று நினைக்கிறோம். இந்த ஒரு பிள்ளையும் தம் அரசரின் கீர்த்திக்காகவும், தேசத்தின் க்ஷேமத்துக்காகவும் சண்டைசெய்து உயிர் துறந்தாராலும், அவர் சிறு பிராயத்திலேயே மாண்டுபோனது அவருடைய பிதாவுக்கு ஆராத்துயரமாயிருக்கும்.

---

1914-15 வருஷத்துக்கு பர்மாவில் நெற்பயிர் மாசூல் —1914-15-ம் வருஷத்துக்கு பர்மாவில் நெற்பயிர் மாசூல் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நெற்பயிர் சாகுபடி காலத்தில் மத்தியில் [illegible] வுகடந்து மழை பெய்ய, 3,85,000 ஏகர் நிலம் வெள்ளப் பாழாய்ப் போனதே அதற்குக் காரணம். அந்த நிலங்களில் சில மறுபடியும் நடப்பட்டனவானாலும், மாசூல் அறுவடையாகும்படி பயிர்கள் முற்றிப் பழுக்கவில்லை யெனப்படுகிறது. ஆகையால் வருஷா வருஷம்போல இந்த வருஷம் பர்மாவிலிருந்து அரிசி யேற்றுமதியாக மாட்டாது.

புதிய ஜல மராமத்து வேலைகள் H. E. லார்டு பெண்ட்லண்டால் திறந்து வைக்கப்பட்டது —சென்றமாதத்தில் சென்னைகவர்னர் H.E. லேடி பெண்ட்லண்டுடன் கீழ்பாகத்திற்குச் சென்று அங்கு புதிதாய் கட்டி முடித்திருக்கும் ஜலமராமத்து வேலைகளைத் திறந்து வைத்தார். பலர் வந்திருந்தார்கள். கார்பொரேஷன் ஆக்டிங் பிரஸிடெண்டான மிஸ்டர் லாயிட்டு மேற்கண்ட ஜலமராமத்து வேலைகளில் உற்பத்தி வரலாற்றைப்பற்றி நீண்டதோர் உபந்நியாசம்செய்தார். கடைசியாக கவர்னர் அந்தமராமத்து வேலைகளைக்கண்டு ஆனந்தங் கொண்டு சில வார்த்தைகளைப் பேசினார்.

டாக்டர் மில்லரின் உருவப்படம் லேடி பெண்ட்லண்டால் திறந்து வைக்கப்பட்டது.—ஸெனெட் ஹாலில் பலபேர்களின் மத்தியில் டாக்



டர் மில்லரின் உருவப்படம் லேடி பெண்ட்லண்டால் திறந்து வைக்கப்பட்டது. அச்சமயம் H. E. லார்டு பெண்ட்லண்டு அக்கிராசனம் வகித்தார். டாக்டர் மில்லருடைய உருவப்படத்திற்கு அவருடைய நண்பர்களும் அவருடைய க்ஷேமத்தைக் கோருகிற வர்களும் பணஉதவி செய்தார்கள். அப்பொழுது கவுன்ஸில் மெம்பர் ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்சாமி அய்யர், ஆனரெபில் ஸர்ஜான் வாலிஸ், ஆனரெபில் மிஸ்டர் J. H. ஸ்டோன், முதலில் பலர் வந்திருந் தார்கள். ராவ் சாஹெப் T. ராமகிருஷ்ண பிள்ளை, டாக்டர் மில்லர் சென்னையில் உழைத்த உழைப்பைப் பற்றியும், அவருக்குத் தம் பழைய மாணவர்களின் மீதுள்ள அன்பு, நேசம் முதலியவைகளைப் பற்றியும், நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தார். அதன் பிறகு H. E. கவர்னர், டாக்டர் மில்லரைப்பற்றி பின்வருமாறு பேசினார்:—சென்னை ராஜதானியைச் சேர்ந்த ஜில்லாக்களில் எங்கும், டாக்டர் மில்லரிடம் படித்த மாணவர்கள் இருந்து வருகிறார்கள் அவர்களில் சிலர் சென்னை சட்டசபை மெம்பர்களாயும் சிலர் நீதி ஸ்தலங்களில் ஜட்ஜுகளாயும் கலெக்டர்களாயும் வேறு பலர் பல இலாக்காகளில் சேர்ந்து கீர்த்தி பெற்றவர்களாயும் விளங்கி வருகிறார்கள்.

அதன்பிறகு கவர்னர், டாக்டர் மில்லரின் உருவப்படத்தைத் திறந்துவைக்கும்படி லேடி பெண்ட்லண்டைக் கேட்டுக்கொண்டார். லேடி பெண்ட்லண்டின் பெற்றோர்கள். டாக்டர் மில்லரின் பழைய நண்பர்கள் என் [illegible] கவர் வெளியிட்டார் அந்த உருவப்படம் டாக்டர் மில்லரின் உருவத்தை ஒரு மயிரிழையும்பிசகாமல் ஒத்திருப்பதைக்கண்டு சந்தோஷங் கொண்டார்கள். ஆனரெபில் ரெவரெண்டு J. பிட்டன் டிரிக்கு கவர்னர் தம்பதிகளுக்கு வந்தனஞ்சொல்ல சபை கலைந்தது.

கவர்ன்மெண்ட் மியூஸியம். செத்த பிராணிகள் பறவைகள், ஊர்வன மச்சங்கள், பலவகை ஆயுதங்கள், பூர்வகாலத்து நாகரிகச் சின்னங்கள். பழைய காலத்து நாணயங்கள், முதலியவைகள் வைக்கப்பட்டிருக்கும் சிங்காரத் தோட்டத்திற்கு மியூஸியம் என்று பெயர். ஜனங்கள் இவ்வித மியூஸியத்திற்குச் சென்று அவைகளைக்கண்டு களித்து ஒருவரோடொருவர் சந்தோஷத்துடனும் ஆச்சரியத்துடனும் பேசிக்கொள்ளுவார்கள். சென்னை மியூஸியத்தின் சூப்பரின்டெண்டான டாக்டர் ஹெண்டர்ஸன், தம் மியூஸியத்தை ஜனங்கள் வந்துபார்த்து சந்தோஷத்தோடு போவதுடன் மட்டும் திருப்தியடையாமல் இன்னும் பல சீர்திருத்தங்களைச் செய்ய பிரயாசமெடுத்துக்கொண்டார். ஒரு விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லி யிருக்கும் நூல்களை வாசித்து அறிந்து கொள்ளுவதைப் போல் மியூஸியத்தைப் பார்க்க வருகிறவர்களுக்கு அப்பொருள்களின் விருத்தாந்

161413



END

தத்தை விவரமாய் விளக்கும் கருவியாக, மியூஸியத்தை ஆக்கிவிட வேண்டுமென்கிறார். அவர் சனிக்கிழமைதோறும் மாலையில் மியூஸியத்தில் உபந்நியாசங்களைச் செய்து வந்தார். அவரும் அவருடைய அஸிஸ்டண்டுகளும், ஸ்கூல்பிள்ளைகளை மியூஸியத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு விசேஷமான விஷயங்களைப்பற்றித்தெளிவாய்ச்சொல்லியும்இருக்கிறார்கள்.

இவ்வளவு செய்ததும் போதாதென்று கண்டு, அவர் மியூஸியத்தில் செயற்கை விளக்குகளைப் போடவேண்டுமென்றும், மியூஸியத்தில் செய்யப்படும் உபந்நியாசங்கள் நிரம்பப்பயனை அடையும்படியாய் மின்சார லாந்தர்களை சப்ளை செய்யவேண்டுமென்றும் மியூஸியத்திலிருக்கும் பல பாகங்களைப் பார்க்கவருகிறவர்களை அழைத்துச்சென்று மியூஸியம் முழுவதையும் அவர்களுக்குக் காண்பிப்பதற்கு சில வழிகாட்டிகளை (Guides) நியமிக்கவேண்டுமென்றும், அவர்கள் செய்யவேண்டிய காரியங்கள் இன்னவை என்பதைப்பற்றித் தானே நன்றாக அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அவர்களைச் சரியானபடி தயார்செய்யச் சித்தமென்றும் பார்க்க வருகிறவர்களைக் கூட்டிச் சென்று அவர்களுக்கு மியூஸியத்திலுள்ள சகல விஷயங்களையும் வழிகாட்டிகள் அறியும்படிச் செய்வோம் என்றும், மியூஸியத்தைப்பார்க்க வரும் கனதனவான்கள், மேதாவிகள், சாஸ்திர ஆராய்ச்சிச் செய்கிறவர்கள் முதலியவர்களை கூட்டிச் சென்று மியூஸியத்தைக் காட்டும் பொறுப்பு தம்மால் வகிக்கப்படுமென்றும், ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்களுக்கு வேண்டிய வசதிகள் மியூஸியத்தில் செய்யப்படவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

கவர்ன்மெண்டார், அவர் செய்துவந்த நல்ல வேலையைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டதுமன்றி, அவருடைய மேற்கண்ட சிபார்சுகளையும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆகையால் இனி சென்னை மியூஸியம் நிரம்ப பிரபலமாக விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

---

நமது தேஹத்திற்கு எது அநுகூலமோ அப்படிப்பட்ட ஆஹாரத்தையே புசித்துக் கொண்டுவந்தால் நாமும், நம்மைச் சேர்ந்தவர்களனைவரும் சுகமாயிருக்கலாம். மருந்தைத் தேடுவானேன்? வைத்யர் வீட்டுக்கு ஓடுவானேன்?.

உடம்புக்கு ஒத்த உணவிற்குவேண்டிய பண்டங்கள் நயமாயிருக்கிறதென்பது மிகவும் நமக்குச் சந்தோஷமான உபகாரம்தான். அதைக்கூட வாங்கச் சக்தியில்லாமல் அநேகர் மிகவும் சொல்பமாய் ஆகாரம் ஏற்றுக்கொண்டு ஜீவித்து வருகிறார்கள். அப்படிச் செய்வது சரீரத்திற்கு மிகவும் கெடுதி. முக்கியமாய் அவர்கள் செய்யவேண்டுவது ஒன்று. அவர்கள் கொஞ்சநஞ்சம் கிடைத்ததை வீண்செலவு செலவழித்துக் குடித்துச் சரீரத்தையும் மனத்தையும் பலவீனப் படுத்திக்கொள்ளாமல் உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தருகிற வஸ்துகளையே வாங்கிப் புசித்துக் கொண்டு வர வேண்டும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
அகம்